# தமிழ் தந்த புலவர்மணி

தொகுப்பாசிரியர்

பெரியதம்பிப்பிள்ளை விஜயரெத்தினம்

கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடு 1998

894.8118
2130.

# தமிழ் தந்த புலவர்மணி

தொகுப்பாசிரியர்

பெரியதம்பிப்பிள்ளை விஜயரெத்தினம் B.A. Dip. in. Ed.

துணைத் தலைவர்,

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடு 1998

நூலின் பெயர்:- "தமிழ் தந்த புலவர்மணி"

தொகுப்பாசிரியர்:- பெ. விஜயரெத்தினம்

முதற்பதிப்பு:- வைகாசி 1998

உரிமை:- தொகுப்பாசிரியருக்கு

கணனித் தொழில்நுட்பம்,
அச்சுப்பதிப்பு: வின்னேஸ் (பிறைவேற்)

விலை :- ரூபா 150/-



## சமர்ப்பணம்

ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபரும்,
புலவர்மணியின் ஒரு சாலை மாணாக்கருமாகிய
அமரர். வையிரமுத்து பரசுராம பிள்ளை
அவர்களின் பொன்னடிகளில்
இந்நூலைச் சிரம் தாழ்த்திச் சமர்ப்பிக்கின்றேன்.

தொகுப்பாசிரியர்.

## பாயிரம்

மண்டூரி லுறை முருகன் திருவருளால்
வந்தவெனக் குரியவொரு காலந்தேர்ந்து
மயலறுத்தே உயர்ந்த தமிழ் இலக்கணமும்
இலக்கியமும் உரை நடையும் ஒளிரவைத்தோன்

பண்டிதருட் பாவலனாய்ப் பல கலையும்
திருவருளும் உள நிறைவும் பயின்றுதமிழ்ப்
பண்பாட்டிற் **புலவர்மணி பெரியதம்பிப்**
பிள்ளை எனப் பலர் புகழு மொருவனாகிக்
கொண்டாடும் தகைமையினோன் மட்டுநகர்த்
தமிழ் விளக்காய் ஈழமெங்கும் ஒளிரும்சோதி
தமிழ் மணமும் சிவ மணமும் கமழ் மண்டூர்த்
தவப் புதல்வன் கீதை வெண்பா நிதியமீந் தோன்

பண்தோயும் செந்தமிழ்வேல் முருகனுக்குப்
பதிகமென அருள் குழைந்த கவிபடைத்தான்
பதித்ததனை வெளியிடற்கு யானிழைத்த
தவப்பேற்றை ஒரு நாவாற் பகரலாமோ!

'கூடல்'
மட்டக்களப்பு.

**கலாநிதி வித்துவான் வீ. சீ. கந்தையா.** B.O.L
1-9-1965



**புலவர்மணி, பண்டிதமணி, இலக்கிய கலாநிதி**
**ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்**

## வாழ்த்துச் செய்தி
## மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிசன் தலைவர்
## ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தாஜி மகராஜ்

# புலவர்மணி இலக்கிய கலாநிதி ஏ. பெரியதம்பிப்பிள்ளை ஒரு பன்முகநோக்கு.

"பண்டூரும் முகிற்குலங்கள் எமதிறைவர்
மருகர்திருப் பதியீதென்ன
விண்டூர மழைபொழியும் சிறப்பதனால்
வளம் மலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூரிலுறைமுருகன் மலரடிக்கோர்
திருப்பதிகம் மரபிற் சொற்றான்
கண்டூரு மினிய மொழிப் பெரியதம்பிப்
பிள்ளை யெனும் கலைவல்லோனே"

—சுவாமி விபுலானந்தர்—

புலவர்மணி இலக்கிய கலாநிதி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட மண்டூர்ப்பதிகத்திற்காக சுவாமி விபுலனந்தர் வழங்கிய பாயிரத்தில் பெரியதம்பிப்பிள்ளை'யெனும் கலை வல்லோனைப் பற்றிய வெளிப்பாடு இது.

காவியப்பாடசாலைகளிலும் குருகுலவழி நடத்தலிலும் உருவாகி மரபுவழியாக வள்ந்து விளங்கிப் புகழ் பெற்றவர் புலவர்மணி. மட்டக்களப்பு கலை இலக்கியப் பண்பாட்டு வளர்ச்சியில் சுவாமி விபுலானந்தர் வழிநின்று அவரின் நேரடி இலக்கியப் பரம்பரை எனப் பாராட்டும் அளவிற்கு வாழ்வும் புகழும் பெற்றவர். இவரின் இலக்கியப் பெறுமானம் மிக்க நூல்கள் முன்பு வெளிவந்து சிறப்புப் பெற்றன.

இந்நூற்றொகுதியினுடாக புலவர்மணி அவர்களின் ஆக்கங்களும் அவரைப்பற்றிய கற்றோரின் ஆக்கங்களும் தொகுத்து வெளியிடப்படுகின்றது.

இந்நூற்றொகுதியினூடாக நாம் புலவர்மணியைப் பற்றிய ஓர் அகண்ட பார்வையையும் அவரின் பன்முகப்பட்ட புலமையையும் உணரக் கூடியதாக உள்ளது.

புலவர்மணி பிறந்த நூற்றாண்டு நிகழும் இக்காலகட்டத்தில் இந்நூல் மிகவும் பயனுள்ளதும் காத்திரமானதுமான வெளியீடாகத் தோன்றுகின்றது.

புலவர்மணி அவர்களுடன் சமகாலத்தில் பழகிய அறிஞர்களதும், அவரை நன்கு ஆராய்ந்து அறிந்த பெரியோர்களதும் இக்கட்டுரைகள் புலவர்மணி அவர்களைச் சித்தரிக்கும் நல்ல தகவல் ஏடு.

இதனைத் தேடித்தொகுத்து வெளியிடும் அன்னாரின் புதல்வர் திரு. பெ. விஜயரெத்தினம் அவர்களை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இறைபணியில்

**(சுவாமி ஜீவனானந்தா)**

## புலவர் மணியை நினைவு கூருதல்

– பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி –

**புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையின் சமூக, இலக்கிய வாழ்க்கைபற்றிய சிந்திப்பின் பொழுது எழும் தவிர்க்க முடியா விடயங்கள் சில பற்றிய ஒரு குறிப்பு.**

புலவர்மணி ஏகாம்பரம்பிள்ளை பெரியதம்பிப்பிள்ளை பிறந்து ஒரு நூற்றாண்டு (1899) அண்மிக்கும் இவ்வேளையிற் புலவர்மணி பற்றிய நூல்களும் அவரது ஆக்கங்களும் வெளிவருவது பொருத்தமான ஒரு நன்முயற்சியேயாகும்.

நமது நாட்டின் தமிழ்ப் புலமையாளர் பற்றிய தரவுகள் அவர்களின் வாழ்க்கைவரலாற்றை ஓர் ஒற்றைப்பரிமாணத்தில் (பிறந்தார், வாழ்ந்தார், இன்னின்னவற்றைச் செய்தார், மறைந்தார் என்ற முறையிலே) எடுத்துரைக்கும் ஒரு போக்கு, இலக்கிய வரலாற்றாய்வுகள் வளர்ந்திருக்கும் இக்காலத்திலும் தொடர்ந்து காணப்படுகின்றதே என்பது மனவருத்தத்துக்குரிய விடயமாகும்.

நாம் ஆராயும் தமிழ்ப்புலமையாளர்கள் ஆக்கவிற்பன்னர்களை, அவர்தம் ஆக்கப்பின்புலத்திலும் ஈழத்தின் தமிழிலக்கிய வரலாற்றுப் பின் புலத்திலும் பார்க்க வேண்டுவது அவசியமாகும். அப்படிப்பார்க்கும் பொழுது புலவர்மணியின் புலமைவாழ்க்கையின் அசாதாரணத்தன்மை நமது கவனத்தை ஈர்க்கின்றது.

பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் மட்டக்களப்பு இலக்கிய பாரம்பரியத்தின் ஒரு முக்கிய பிரதிநிதியாவர்.

அவர் "கண்டுபிடிக்கப்பட்டதிலும்" அவரின் இளவயதுக் கல்விப் பயிற்சியிலும் யாழ்ப்பாண இலக்கிய மரபுக்கு முக்கிய இடம் உண்டு. அவர் யாழ்ப்பாணப் புலமைப் பாரம்பரியத்தின் ஒரு பெறுபேறாகவே தனது

ஆசிரியத்தொழிலைத் தொடங்குகின்றார். ஆனால் அக்கால யாழ்ப்பாணத்தின் ஒரு முக்கிய சமூக இயல்பு (சாதிவேறுபாடு பாராட்டுதல்) அவரை யாழ்ப்பாணத்துச் சூழலிலிருந்து "தொலைப்படுத்தி" அவரைக் கிறித்துவத்துக்கும், தமிழகத்திக்கும் கொண்டு செல்கிறது.

யாழ்ப்பாணத்தின் பாரம்பரியத் தமிழ்க்கல்விமுறை வழியாகவந்தவர், யாழ்ப்பணத்தின் சமூகநோக்குக் காரணமாக அதிலிருந்து அந்நியப்படுகிறார்.

ஆனால் பின்னர் விபுலானந்தரின் "தலையீடு" காரணமாக அவர் இலங்கைக்குத் திரும்பி. மட்டக்களப்புக்குச் செல்கிறார்.

இதன் பின்னர் இவர் வாழ்க்கை மட்டக்களப்புச் சூழலிலேயே செல்கிறது.

ஆனால் இந்த வாழ்க்கையை அவர் மேற்கொண்டிருந்த பொழுது. தனியே தமிழ்ப்புலமையாளராக இருந்துவிடவில்லை. அவர் பல்வேறு சமூகச் செயற்பாடுகளில் இறங்கித் தேசியமட்டத்தில் முக்கியத்துவம் பெற்ற ஒருவராக மேற்கிளம்பினார்.

" இவர் பல தேசிய ஆலோசனைச் சபைகளில் உறுப்பினராக இருந்து சேவையாற்றியுள்ளார். அரசகருமமொழிகள் ஆலோசனைச் சபை, இந்து சமயவிருத்தி ஆலோசனைச் சபை, இலங்கை வானொலிக்கல்வி ஆலோசனைச் சபை, பாடநூல் ஆலோசனைச் சபை, இலங்கை கலைக் கழகம், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் என்பன இவற்றுற் சிலவாகும்"

என்று தினகரன் கட்டுரை ஒன்று (23.4.97) பதிவு செய்கின்றது. அவரது வாழ்க்கையின் பின்கூற்றில் அவருக்கு யாழ்ப்பாணத் தமிழ்ப் புலமை மதிப்பும் கௌரவமுமளித்தது.

இவை மாத்திரமல்லாமல் 1978 இல் சமாதானநீதவான் பட்டமும் பெற்றிருந்தார் என்று கூறப்படுகின்றது.

புலவர்மணி அவர்கட்கு அரசியல் ஈடுபாடு இருந்தது என்பது தெரிந்ததே.

இந்த ஆளுமைப் பரிமாணத்தை நோக்கும் பொழுது இவர் பாரம்பரிய தமிழ்ப் புலமையாளரின் வாழ்க்கை முறையிலிருந்து வேறுபட்டவர் என்பதும் புலனாகின்றது.

இத்தகைய பொது வாழ்க்கை ஆளுமையைக் கொண்ட ஒருவர் "பகவத்கீதை, வெண்பா (கருமயோகம், பக்தியோகம், ஞானயோகம்) புலவர்மணி கவிதைகள், உள்ளதும், நல்லதும் (வாழ்க்கை வரலாறு) பாலைக்கலி, மண்டூர்ப்பதிகம், நாமகள் இலம்பகம்" ஆகிய ஆக்கங்களைத் தந்திருக்கின்றார் என்பதையும் அறிகின்றோம்.

இத்தகவல்களை நோக்கும் பொழுது முதலில் இவரை மட்டக்களப்புப் புலமைப் பாரம்பரியத்தின் பின்புலத்தில், அதன் கவித்துவம், கவித்துவ பின்புலத்தின் பாரம்பரியத்தில் வைத்து நோக்கல் அவசியம் என்பது புலனாகின்றது.

இப்பணி இன்னும் செய்யப்படவில்லை என்பது கண் கூடு (இலக்கிய வரலாற்றினைப் புலமையாளர்கள் வரலாற்றுக் கோவைகளாக பார்ப்பதால் ஏற்படும் தவிர்க்கமுடியாப் பிரச்சனைனகளில் இதுவும் ஒன்று)

மட்டக்களப்பின் புலமைப்பாரம்பரியம் பற்றிய நுண்ணிய ஆய்வு அவசியமாகும்.

மட்டக்களப்பின் கவித்துவ வரலாறு என்பது நாட்டார் நிலைப் பாடல்களுக்கு அப்பாலேயும் உள்ளது என்பது அண்மைக் காலத்தில் வித்துவான் சா.இ. கமலநாதனின் ஏட்டுப் பதிப்பு முயற்சிகளால் தெரியவருகின்றது. பாரத அம்மானை, இதாள் அம்மானை போன்ற ஆக்கங்கள் செந்நெறி இலக்கிய அமிசங்களைக் கொண்ட ஆனால் வடமொழிப் பாரம்பரியத்தின் பாற்பட்டனவாய் விளங்குவதைக் காணலாம்.

இந்த ஏட்டுப் பாரம்பரியமும், நாட்டார் கவிதைப்பாரம்பரியமும் இணைகின்றபொழுது, செழுமையான கவிதா ஓட்டமுடைய ஒரு செய்யுள் மரபு மேற்கிளம்புகின்றது. இத்தக்கவிதை மரபின் பிரதான வெளிப்பாடு பிரதேசக் கோயில்கள் வழிபாடுகள் பற்றிய தன்னிலைப்பாடல்களாகும்

மண்டூர்ப்பதிகம், விபுலானந்தர் மீட்சிபத்து இம்மரபில் வருவனவே. புலவர்மணி இந்தப்பாரம்பரியத்தினூடாக வந்து இதனை மீறி முற்றிலும் எழுத்து நிலைப்பட்டதான புலமை வெளிப்பாட்டுக்குச் செல்கிறார். அந்தநிலையிலேதான் சீவகசிந்தாமணி நாமகள் இலம்பக நாடக நூல், பாலைக்கலிக் கட்டுரைகள் ஆகியன வெளிவருகின்றன. இவற்றிற் புலவர் மணிக்கிருந்த செந்நெறி இக்கிய ஊடாட்டம், தகைமை நன்கு புலனாகின்றது.

இந்த முயற்சியின் சிகரமாக அமைவது "பகவத் கீதை வெண்பா" –இது மூன்று பாகங்களைக் கொண்டது– (பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம்) இந்த நூலின் முதற் பகுதியாகிய கருமயோகத்தின் வெளியீடு யாழ்ப்பாணத்து இலக்கிய மரபின் முற்று முழுதான போற்றுகையுடன் நடைபெற்றது.

பின்னர் (விபுலானந்த) அடிகளார் சிவபதமடைந்து நான்கு ஆண்டுகள் கழிந்ததும், மட்டக்களப்பிலே பெரும்பாக வித்தியாதரிசியாக இருந்தவரும் புலவர்மணியின் நண்பருமாகிய மல்லாகம். அ. சரவணமுத்து அவர்களின் நன் முயற்சியால், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் ஆதரவுடன் சைவப்பெரியார் சு. நடேசபிள்ளை அவர்களின் தலைமையில் வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரர் வித்தியாலய மண்டபத்தில் கீதை வெண்பாவின் முதற்பகுதியாகிய கருமயோகம் வெளியிடப்பெற்றது. அரங்கேற்றுவிழாவில் நூலாசிரியரைப் பாராட்டி பேசியவர்களுள் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களையும், பண்டிதர் வ.மு. இரத்தினேஸ்வர ஐயர் அவர்களையும் குறிப்பிட வேண்டும். பகவத்கீதை ஞானயோகம் ஆராய்ச்சி முன்னுரை, பக்கம் XXII சுன்னாகம் 1976.

இது யாழ்ப்பாரம்பரியத்தின் முற்றுமுழுதான புலமை அங்கீகாரத்துடன் வெளியிடப்பட்டதெனினும், இந்நூலின் உட்கிடக்கை சைவ சித்தாந்தம் அன்று வேதாந்தம் ஆகும்.

சுவாமி விபுலானந்தரைப் போன்றே இவரும் வேதாந்தச் சார்புடையவராகின்றார்.

பகவத்கீதை வெண்பா முதலில் பத்திரிகையில் வெளியிட்டப் பெற்றபோது (1944) சுவாமி விபுலானந்தர் இவ்வாக்கத்தில் ஆர்வம் காட்டினார் என்பதினை, மேற்காட்டிய ஆராய்ச்சி முன்னுரையை எழுதியுள்ள திரு. இராமச்சந்திரா அக்கட்டுரையிலே குறிப்பிட்டுள்ளார்.

இது ஒரு சுவாரசியமான வரலாற்று தகவல் ஆகும். அதாவது யாழ்ப்பாணத் தொடர்புடைய இரண்டு மட்டக்களப்பு அறிஞர்களும் சைவசித்தாந்த வழிச் செல்லாது வேதாந்தமார்க்கத்தை மேற் கொள்வது மிக முக்கியமான ஒரு விடயமாகும்.

இதற்கான கருத்துநிலை நிலைப்பாடுகள் யாவை என்பது முக்கியமாகும்.

இந்த இடத்திலேதான் மட்டக்களப்பின் சமூகபண்பாட்டு பாரம்பரியம் தன்னையுமறியாமல் இவ்வாசிரியர்களினூடே தலைதூக்குவதை அவதானிக்கலாம்.

சைவசித்தாந்தம் அதிகாரப்படிமுறைகளை வற்புறுத்த (சரியை, கிரியை, யோகம், ஞானம் அவற்றுக்குரிய முத்திகள்) வேதாந்தம் சீவாத்மாக்களிடையே ஒரு சமத்துவத்தையே காண்கிறது.

மட்டக்களப்பின் சமூகஇயல்புகள் சில இங்கு முக்கியமாகின்றன. அவற்றுட்சில வருமாறு

1- ஆகம வழிபாட்டு முறைமை மேன்மை பெறாநிலை.

2- (சாதி) குடிமரபோடு வழிபாடுகள் இணைந்திருக்கின்றமை.

3- முஸ்லிம், தமிழ் குடியிருப்புக்கள் ஒன்றுக்குப்பக்கத்தில் மற்றது இருத்தல்.

புலவர் மணியின் மட்டக்களப்பு வேர்களை அழுத்தி இனம்காணும் அதேவேளையில் அவரது செந்நெறி இலக்கியப்புலமையின் சிறப்பையும் குறிப்பிடுதல் அவசியமாகும். பாலைக்கலி பற்றிய அவர் கட்டுரைத் தொகுதி (1991) இதற்குச்சான்றாகும். வரன்முறையான தமிழ்க்கல்வியாளர்க்குக் கலி எக்காலத்திலும் கற்றறிந்தோர் ஏத்துங்கலியாகும். அதனுள்ளும்

பாலைக்கலியை சிறப்பித்துக் கூறுதல் மரபு. புலவர்மணியிடத்து அந்தச் செந்நெறி இலக்கிய உள்ளம் இருந்தது.

புலவர் மணி ஈழத்துத் தமிழிலக்கியப் பாரம்பரியத்தில் முக்கிய இடம் வகிக்கின்ற ஒருவராகின்றார். விபுலானந்தருக்குப்பின் வடக்கு–கிழக்கு இணைப்பின் செந்நெறி இலக்கிய வெளிப்பாடாக விளங்குபவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையாவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும், கிழக்குப் பல்கலைக்கழகமும் அவரைக் கௌரவித்துள்ளமை இந்த உண்மையின் குறியீடு ஆகும்.

**15.02.98**

**கார்த்திகேசு சிவத்தம்பி**
**தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்**
**யாழ். பல்கலைக்கழகம்.**
**வருகைப்பேராசிரியர்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**

## அணிந்துரை

**சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சின் ஆலோசகர் அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜமீல் அவர்கள் வழங்கியது.**

கலாநிதி புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் பிறந்த நூற்றாண்டு விழாச் சமயத்தில், அவரது கட்டுரைகள் சிலவற்றையும் அவரைப்பற்றிய பிறரது ஆக்கங்கள் பலவற்றையும் உள்ளடக்கிய இந்நூல் வெளிவருதல் மிகச்சிறப்புடையதாகும்.

தமிழ் கூறும் நல்லுலகின் பாரம்பரியத்தைத் தொடர்பறாது பேணிப்பாதுகாத்து, வருங்காலச் சந்ததியினருக்கும் வளமானதாக வழங்கிவிட்டுச்சென்ற கிழக்கிலங்கையின் புலவர்மணி அவர்களின் சமூக ஈடுபாடு வியந்து பாரட்டுதற்குரியது. அவரது நூலான "உள்ளதும் நல்லதும்" இதனை உறுதிப்படுத்துகின்றது.

மண்டூரில் பிறந்து, கிழக்கிலும், வடக்கிலும், தென்னிந்தியாவிலும் அறிவைத்தேடி. மட்டக்களப்பில் சேவையாற்றி, குருக்கள் மடத்தில் காலூன்றிய புலவர்மணி அவர்கள் வாழ்ந்த காலம் இந்நாட்டின் இன, மத, மொழிப்பேதங்கள் தலைதூக்காது எல்லா மக்களும் அன்பாகவும், பண்பாகவும் வாழ்ந்த சமுதாய அமைப்பைக் கொண்டிருந்தது. அதிலும் குறிப்பாக மட்டக்களப்பில் இருந்து பொத்துவில் ஈறாக முஸ்லிம் கிராமங்களும் தமிழ்க்கிராமங்களும் அடுத்தடுத்து அமைந்து சமூக இணக்கப்பாட்டுடன் வாழ்ந்திருந்தனர். இன்நிலையில் தளம்பல் ஏற்படுவதைத உணர்ந்து மருதமுனையில் 1966ல் நடைபெற்ற விழாவொன்றில் புலவர்மணி பின்வருமாறு பாடினார்.

"இருதயத்தின் ஈரிதழ்போல்
இந்து முஸ்லிம் யாம்
ஒருவயிற்றுப் பிள்ளைகள்போல்
உள்ளோம்–அரசியலில்
பேராசை கொண்டோர்
பிரித்து நமை வேறாக்கி
ஆராயார் செய்வார் அழிவு"

பெரியதம்பிப்பிள்ளை கல்விகற்ற காலத்து பகைப்புலத்தைப் பார்க்கும் பொழுது அவரது தமிழ் ஆர்வம் விந்தையானது. ஆங்கில மொழியில் கற்று, அதனையே பேசி, ஆங்கிலேயர் உடையனிந்து, அரசு உத்தியோகம் பார்ப்பது சமுதாய அந்தஸ்து என்றிருந்த காலம் அது. பஸ்களில் கூட காற்சட்டை போட்ட ஐயாமாருக்கென முன் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த காலம். அவ்வாறானதொரு காலகட்டத்தில் தமிழைத் துறைபோகக் கற்று தேசிய உடையணிந்து, தமிழுக்குத் தொண்டு செய்த ஒரு அறிஞனாகவே இவரை நாம் கண்டு வியக்கிறோம்.

சமூகவாதி, சமயப்பிரசங்கி, இலக்கியச் சொற்பொழிவாளர், எழுத்தாளர், கவிஞர் எனப் பல்வேறு துறைகளிலும் பிரகாசித்த புலவர்மனியின் மண்டூர் பதிகம் முதல் பாலைக்கலி, விபுலானந்தர் மீட்சிப்பத்து ஊடாக பகவத் கீதை வெண்பாவரை அவரது புலமையைக் காண்கிறோம். அதற்காக எத்தனையோ பட்டங்கள் அவருக்கு வழங்கப்பட்டாலும் "புலவர்மனி" என்பதுவே நிலைத்துவிட்டது. அவரே கூறுகிறார். எத்தனை பட்டங்கள் என்மீது சுமத்தப்பட்ட போதிலும் புலவர்மனி என்னும் பட்டமே எனக்குத் தாங்குவதற்கு இலேசாக இருக்கிறது. உள்ளூர் சுமையாதலால் இதை இலேசாகத் தாங்குகின்றேன்." புலவர்மனி மக்கள் மத்தியில் வாழ்கின்றார்.

புலவர்மனி அவர்களின் அகன்ற, விரிந்த நோக்குக்கான உதாரணமாக 1976இல் நடைபெற்ற சம்பவம் ஒன்றினைச் சுட்டிக்காட்டலாம். அவ்வருடம் நடைபெற்ற விழாவொன்றில் மருதமுனையைச் சேர்ந்த அல்ஹாஜ் ஆ.மு. ஷரீபுத்தீன் வெண்பாவில் பாடினார். அதனைக் கேட்டு அகமகிழ்ந்த புலவர்மனி அவர்கள்

" வெண்பாவில் என்னை நீவென்றாய்
ஷரீபுத்தீன் நண்பா
என் நாமம் உனக்களித்தேன்"

எனக் கூறியதற்கேற்ப அன்றிலிருந்து ஷரீபுத்தீன் புலவர்மனியாகி இன்றுவரை அப்பெயர் நிலைத்து விட்டது.

இத்தகைய அதிஉயர் மனிதர் ஒருவரைப்பற்றிய இந்நூல் வெளிவருதல் உவப்புக்குரியதொரு செயலாகும். இத்துறையில் புலவர்மணி நினைவுப்பணி மன்றமும் அவரது மகனும் எனது நீண்டகால நெருங்கிய நண்பருமான பெ. விஜயரத்தினம், அவர்களும் மேற்கொள்ளும் முயற்சிகள் மென்மேலும் சிறப்படைய வாழ்த்துகிறேன்.

**எஸ். எச். எம். ஜெமீல்,**
**ஆலோசகர்,**
**சமய, பண்பாட்டலுவல்கள் அமைச்சு,**

# வாழ்த்துரை

## கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலாசூரி இ. சிவகுருநாதன் அவர்கள் வழங்கியது

சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர், புன்னாலைக் கட்டுவன் வித்துவசிரோன்மணி கணேசையர் முதலியவர்களிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்று, விபுலானந்த அடிகளாரின் தொடர்பினால் தனது அறிவை விசாலமாக்கி, இலங்கை மணித்திரு நாட்டில் சிறந்த தமிழ் அறிஞர்களில் ஒருவராக விளங்கியவர் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள். 8. 01. 99 துடன் அவர் பிறந்து நூறு ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன.

நான் மாணவனாய் இருந்த காலத்தில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில், 1951ம் ஆண்டில் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் நடாத்திய நான்காவது தமிழ் விழாவில் புலவர்மணி அவர்கள் "கம்பன் நாட்டிய தமிழ் நாகரிகம்" என்னும் தலைப்பில் உரையாற்றினார். அன்று முதல் அவருடைய தமிழ் புலமையை அறிந்திருந்தேன்.

பின்னர், நான் தினகரன் பத்திரிகையின் ஆசிரியராய் இருந்தபோது, அவரோடு பழகவும், அவரது ஆக்கங்களைத் தினகரன் பத்திரிகையில் வெளியிடவும் வாய்ப்பு ஏற்பட்டமையையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தோடு புலவர்மணி அவர்களுக்கு நெருங்கிய ஈடுபாடு இருந்தது, என்பதைச் சங்கத்தின் பதிவு ஏடுகள் மூலம் அறிய முடிகின்றது. 1980ம் ஆண்டில அவருடைய திருவுருவப்படத்தை, உயர்நீதிமன்ற நீதியரசர் கலாநிதி H.W. தம்பையா அவர்கள் தமிழ்ச் சங்கத்தில், திரைநீக்கம் செய்து வைத்தார்.

புலவர்மணியின் நூற்றாண்டு விழா, முதல் பிரசுரமாக, "தமிழ் தந்த புலவர்மணி" என்னும் தொகுப்பு நூலை, கொழும்புத் தமிழ் சங்கம் வெளியிடுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர்களில் ஒருவரான, புலவர்மணியின் மகன் பெ. விஜயரெத்தினம் அவர்கள் இந்நூலைத்

தொகுத்து வெளியிடுகின்றார். அவருடைய இந்த முயற்சியை நாம் பாராட்ட வேண்டும்.

நூலுருப் பெறாத புலவர்மணியின் ஆக்கங்களை, வெளியிட, மட்டக்களப்பு புலவர்மணி நினைவுப் பணிமன்றம் முயற்சி செய்ய வேண்டும். புலவர்மணி அவர்களின் நூற்றாண்டுவிழா சிறப்பாக அமைய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**7, 57ம் ஒழுங்கை,**
**கொழும்பு-06**
**2-4-98**

**தலைவர்**
**கொழும்புத் தமிழ்ச் சங்கம்**

## மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் புலவர்மனி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றத்தின் தலைவருமாகிய திரு.சி. சண்முகம் அவர்கள் வழங்கிய அறிமுக உரை

"திறமான புலமை எனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்"

என்று பாடினான் மகாகவி பாரதி அவன் பாடலுக்கு இலக்கணமாக வாழ்ந்து தமது திறமான புலமையினால் வெளிநாட்டறிஞர்களைக் கவர்ந்து, இந்த இலங்கைத் திரு நாட்டுக்குப் புகழ் சேர்த்தவர்களுள் கிழக்கிலங்கையைச் சேர்ந்த சுவாமி விபுலானந்தரும் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றிய புலவர்மனி பெரியதம்பிப்பிள்ளையும் குறிப்பிடத்தக்கவர்கள்.

சுவாமி விபுலானந்தர் தமது ஆய்வாற்றலினால் வெளிநாட்டவரைக் கவர்ந்தார் என்றால் புலவர்மனி பெரியதம்பிப்பிள்ளை தமது கவித்துவத்தினால் அவர்களைக் கவர்ந்தார். ஆய்வும், கவித்துவமும் இருவேறு துறைகளானாலும் இத்துறைகளில் அவர்களது சாதனைகள் ஒத்ததாக அமைகின்றன.

இலங்கைக் கவிதைப்பரப்பில் புலவர்மனிக்குத் தனியான தோர் இடமுண்டு. இத்துறையில் அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர் என்பதற்கு அவரது ஆக்கங்களே சான்று பகருகின்றன.

நூற்றுக்கணக்கான கவிதைகளை அவர் யாத்தார்.

அவற்றுள் ஒரு சில "புலவர்மணி கவிதைகள் " என்ற நூலில் காணப்படுகின்றன. ஏனையவை காற்றோடுகலந்து மறைந்தன. அருமையான இலக்கியக் கட்டுரைகள் பலவற்றை அவர் எழுதினார் அவற்றுள் ஒரு சில "பாலைக்கலி" என்ற நூலில் இடம் பெற்றன வாழ்க்கைத் தத்துவத்தை உள்ளடக்கிய " பகவத் கீதையின் மூன்று

யோகங்களையும் அவர் தமிழ்வடிவில் தந்தார். அது மூல நூலை விஞ்சும் அளவு தனிச்சிறப்புடன் அமைந்தது.

அவருடைய செய்யுள்களின் கவிதைச் செழுமை ஒரு புறம் இருக்க, அவற்றின் உட்பொருள், நாட்டுக்குத் தேவையான நல்ல பல கருத்துக்களைக் கொண்டிருந்தது. தேசிய ஒற்றுமை, இன ஒற்றுமை, குல ஒற்றுமை என்பனவே அவரது கவிதைகளில் எப்போதும் தொனித்தது. இது அவருடைய சத்திய வேட்கையையும் சமாதான நோக்கையும் கோடிட்டுக் காட்டுகின்றது.

" சிங்களமும் செந்தமிழும் சேர்ந்து சமமேயிலங்கை
எங்கும் அரச மொழியென்னவே –துங்கமுடன்
ஆட்சிபுரிய வழியாக்குவதேயெல்லாரும்
மாட்சிமையுடன் வாழும் வழி–என்றும்
இருதயத்தின் ஈரிதழ்போல் இந்து முஸ்லிம்யாம்
ஒரு வயிற்றுப் பிள்ளைகள்போல் உள்ளோம்–அரசியலில்
பேராசை கொண்டோர், பிரித்து நமைவேறாக்கி
ஆராயார் செய்வார் அழிவு–என்றும்

அவர் பாடும்போது அவருடைய தீர்க்க தரிசனத்தை எண்ணி வியப்புறாமல் இருக்கமுடியவில்லை.

சொந்த சகோதரங்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காது, தன்சுகம், தன்குடும்பத்தின் சுகம் – இவையே பெரிதென்று செயற்படும் சுயநலப் பிண்டமான தமிழர்களைப் பார்த்து அவர் இவ்வாறு கூறுகிறார்.

" நல்லாய் இலண்டன் நகர்வரையும் சென்றொருவன்
பல்கலைகள் நன்கு பயின்றாலும்–சொல்லுங்கால்
தன்னூர் நிலையறிந்து தானொழுகானாகிவிடின்
என்ன பயனாகுமிவர்க்கு.

இப்பாடல்கள் சுமார் 30 அல்லது 40 வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்டவை, ஆனாலும் இவை அன்றைய நிலையை விட இன்றைய நிலையில் இன்னும் சிறப்பாகப் பொருந்திவருகின்றது அல்லவா? ஆம்

அதுதான் உண்மைக் கவிஞனின் சிறப்பு

உள்ளுணர்வும் ஆத்மீகமும் தூரப்பார்வையும் ஒரு கவிஞனை வழிநடாத்துகின்றன. புலவர்மணி இதற்கு ஒரு உதாரண புருஷனாகிறார். மட்டக்களப்பில் புலவர்மனி அமரரான ஒரு சில தினங்களுக்குள் புலவர்மணி நினைவுப்பணி மன்றம் உருவானது. மட்டக்களப்பில் வேறு எவருக்கும் இவ்வாறு ஒரு மன்றம் உருவானதில்லை.

இம்மன்றத்தின் ஆரம்பகாலத் தலைவர்களாக திரு அ.கி. பத்மநாதன் (அரசாங்க அதிபர்) ம. சிவநேசராசா மகாவித்துவான் F.X.C. நடராசா இரா நாகலிங்கம் (அன்புமணி) K. கார்த்திகேசு முதலியோர் பணியாற்றியுள்ளனர். இவர்கள் காலத்தில் புலவர்மணியின் பல நூல்கள் அச்சேறின.

புலவர்மணி கவிதைகள், உள்ளதும் நல்லதும், பாலைக்கலி, போன்ற நூல்கள் இவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

இவை தவிர ஆண்டு தோறும் நடைபெறும் புலவர்மணி நினைவுவிழா தொடர்பாக, சிறப்பு மலர்களும் சிறப்புக்கட்டுரைகளும், வானொலிப் பேச்சுக்களும் வெளிவருகின்றன. புலவர்மனியின் பெயரால், இம்மன்றம், கிழக்குப் பல்கலைக்கழகத்திலும், யாழ். பல்கலைக்கழகத்திலும் தமிழ், இலக்கியம் ஆகியவற்றில் இரு புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு (ஆண்டுதோறும்) ஏற்பாடு செய்துள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக கடல்கடந்து வாழும் தமிழர்களும் அவரை நினைவு கூர்ந்து கட்டுரைகள், நூல்கள் முதலியவற்றை வெளியிடுகின்றனர். அந்த வகையில் கிழக்கிலங்கையின் புகழ்பூத்த தமிழறிஞர் இலக்கியமணி க.தா. செல்வராசகோபால், புலவர்மனி நினைவுப்பணி மன்றத்தின் தூண்டுதலின் பேரில் "புலவர் மணிக்கோவை" என்னும் அருமையான நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்நூலில் அவர் இம்மன்றத்தைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"இது மட்டக்களப்பு புலவர்மணி நினைவு மன்றத்தார் அவரை நினைவு கொள்ளும் 1991ம் ஆண்டில் நடக்கும் விழாவின் வெளியீடாக வெளிவருவதையிட்டு மனமகிழ்கின்றேன். அதற்காக என்னை ஊக்குவித்த அன்பு மணி, இரா நாகலிங்கம் (மன்றத்தலைவரும்) என்னுடன் கலாசாலை

மாணவராகிய திரு.த. செல்வநாயகம் மற்றும் இந்து இளைஞர் மன்றச் செயலாளராகச் சைவப்பணி செய்து வரும் முன்னாள் கல்வி அதிகாரி திரு.எம். சிவநேசராசா ஆகியோருக்கும் அன்புகலந்த நன்றிகள்."

இவ்வாறெல்லாம் புலவர்மணியின் புகழ் பேசப்பட்டாலும் அவருடைய இலக்கிய ஆளுமையை முழுமையாக இன்னமும் நாம் தரிசிக்கவில்லை. அவர் ஒரு இலக்கியக்கடல். அக்கடலின் கரையில் நின்று கொண்டு அக்கடல் அலைகள் எழுப்பும் ஓசையில் மயங்கிநிற்கிறோம். கடலின் ஆழத்துள் சென்று அந்த அனுபவத்தை நாம் இன்னும் பெறவில்லை.

அதற்குப்பல வழிகள் உண்டு. என் கருத்தில் பட்ட ஒரு சில எண்ணங்களை இங்கே கூறிவைக்கிறேன்.

(i) அவருடைய கவிதைகள் ஆன்மீகம்–சமயம், சமூகம், கல்வி, கலாசாரம், என வகுக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும் ஆய்வு நோக்குடன் ஆராயப்பட வேண்டும் (கிழக்குப் பல்கலைக்கழகம் இதைச் செய்யலாம்.)

(ii) அவருடைய பகவத்கீதை மூன்று யோகங்களும், தனித்தனியாக ஏற்கனவே வெளிவந்த பகவத்கீதை மொழிபெயர்ப்பு நூல்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்படவேண்டும்

(iii) இவருடைய தனிக் கட்டுரைகள் நூலாகத் தொகுக்கப்பட்டு பல்கலைக்கழக மாணவர்களின், ஆய்வுப் பொருளாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

(iv) அவருடைய சமூகப்பணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு ஆய்வு செய்யப்பட வேண்டும். பல்வேறு நிறுவனங்களில் உறுப்பினராக இருந்து இவர் ஆற்றிய பங்களிப்புகள் இதில் அடங்கும், இவற்றின் விபரம் புலவர்மணியின் "உள்ளதும் நல்லதும்" நூலில் பெறலாம்.

(v) புலவர்மணியின் "உள்ளதும் நல்லதும்" நூலைத்துருவி யாராய்ந்தால், இதுபோன்ற இன்னும் எத்தனையோ பணிகள் காத்துக்கிடப்பதை உணர்ந்து கொள்ளலாம்.

அந்தவகையில் மட்டக்களப்பு புலவர்மணி நினைவுப்பணிமன்றம் மேலும் சில பணிகள் செய்ய உத்தேசித்திருக்கிறது. அவற்றின் விபரம்

காலக் கிரமத்தில் வெளிவரும். புலவர்மனி நூற்றாண்டு 8.1.1998ல் ஆரம்பமாகிறது (பிறப்பு 8.1.1899). 8.1.98 முதல் 7.1.99 வரையிலான ஒரு ஆண்டு முழுவதும் புலவர்மணியின் நினைவை நிலைநிறுத்தும் வகையிலும், அவரது இலக்கிய ஆக்கங்களின் பயன்பாடு விரிவடையும் வகையிலும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

அந்த வகையில் புலவர்மணி பற்றிய இந்த நூல் அவரது நூற்றாண்டின் முதற்பணியாகவும், முன்னோடிப் பணியாகவும் அமைகிறது. நூல் வெளியீட்டாளர்கள் பாராட்டுக்குரியவர்கள். இந்நூலில் இடம் பெறும் 48 ஆக்கங்களில் சுமார் 32 ஆக்கங்கள் புலவர்மனியின் பன்முகப்பட்ட இலக்கிய ஆளுமையை எடுத்துக் காட்டுகின்றன. இவற்றை எழுதியவர்கள், புகழ் பெற்ற தமிழறிஞர்கள், புலமைபெற்ற கல்விமான்கள். இவர்கள் பல்வேறு துறையைச் சேர்ந்தவர்கள்– பத்திரிகை அதிபர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், கல்விப்பணிப்பாளர்கள், வித்துவான்கள், முஸ்லிம் பெருமக்கள் போன்ற பல்வேறு மட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் தருவது புலவர்மணி ஆளுமையின் ஒரு வெட்டு முகத்தோற்றம். இவர்களது தரிசனம் சத்தியமானது. ஒரே பார்வையில் இவற்றைக் கிடைக்கச் செய்த வெளியீட்டாளர்களை நன்றியுடன் நினைவு கூர்வோம்.

இவர்களது ஒவ்வொரு கட்டுரையும், நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, புலவர்மணியின் விஸ்வரூபதரிசனத்துக்கான அடி எடுத்துக் கொடுக்கிறது. ஆர்வலர்கள் இந்த அடிச்சுவடுகளைப் பின் பற்றித் தத்தமது ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

புலவர்மனியைப் பற்றிச் சொல்வதற்கு ஏராளமான விடயங்கள் இருக்கின்றன – அவருடைய கவிதா விலாசம், சத்தியவேட்கை, தார்மீகக்கோபம், சிறுமை கண்டு பொங்கும் இயல்பு, எளிமையிலும் வலிமை, வறுமையிலும் செம்மை – இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். இந்தச் சிறிய அறிமுக உரையில் அவை எல்லாவற்றையும் அடக்கிவிட முடியாது. அது எனது இயலாமை.

ஆனாலும் ஒன்று சொல்லுவேன்.

புலவர்மணியைத் தக்கபடி கௌரவிப்பதும், அவர்விட்டுச் சென்ற

அறிவுச் செல்வங்களிலிருந்து தக்கபயனைப் பெறுவதும் நமது கடமையாகும். சில நிமிடங்களை நாம் எப்போதும் நினைவில் வைத்திருக்கவேண்டும்.

யாழ். பல்கலைக்கழகம் உருவானவுடன் அதன் முதற்பணிகளில் ஒன்றாயமைந்தது தமிழறிஞர்களின் கௌரவிப்புத்தான். அப்போது புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் ஒருசாலை மாணாக்கரான பண்டிதமணி கணபதிப்பிள்ளைக்கு இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டது.

அப்போது புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையும் அதே அடிப்படையில் "கலாநிதி" பட்டத்துக்கு உரித்துடையர் என்ற கோரிக்கை மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கத்தால் விடுக்கப்பட்டது. அதையொட்டி பத்திரிகைகள் முன்பக்கச் செய்திகளை வெளியிட்டு இக்கோரிக்கைக்கு வலுவூட்டின. ஆனாலும் இக்கோரிக்கை அப்போது நிறைவேறவில்லை.

அதன் பின்னர் பல வருடங்கள் கழிந்தன. கிழக்குப்பல்கலைக் கழகம் உருவானது. அப்பல்கலைக் கழகம் உருவாகியும் பல வருடங்கள் கழிந்தன. எப்படியோ கடந்த ஆண்டு புலவர்மணிக்கும் கிழக்குப்பல்கலைக் கழகத்தினால் இலக்கிய கலாநிதி பட்டம் வழங்கப்பட்டது. இதற்கான பல்வேறு முயற்சிகளில் புலவர்மனி நினைவுப்பணி மன்றத்தின் பங்களிப்பும் அடங்கும்.

இவ்வாறே, சிலவருடங்களுக்குமுன் புலவர்மணிக்கு நினைவு முத்திரை வெளியிடப்பட்டது. இதிலும் புலவர்மணி மன்றத்தின் முழுமையான பங்களிப்பு இருந்தது. அந்த முத்திரை வெளியீட்டு விழா மட்டக்களப்பிலும் நடைபெற்றது.

இவ்வாறே புலவர்மனியின் நினைவு விழா ஆண்டு தோறும் நடைப்பெற்றுவருகிறது. புலவர்மனியின் நூற்றாண்டு வருடமான இவ்வாண்டில் இது போன்ற பல்வேறு பணிகள் நிறைவேறவேண்டும். இப்பணிகளில் தமிழன்பர்கள் வெறும் பார்வையாளராக மட்டும் இல்லாது, பங்களிப்பாளராகவும் மாறவேண்டும்.

**இவ்வண்ணம்**
**சி. சண்முகம்**
**மட்டக்களப்பு 5. 3. 98**

# தொகுப்பாசிரியர் உரை

**செ**ந்தமிழ் வளம் கொழிக்கும் இலங்கைமணித் திருநாட்டில், தமிழ்மொழிக்கு அயாராது உழைத்தவர்கள், மரபு முறையாக தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றறிருந்த சான்றோர்கள். அவர்களைப் பற்றித் தமிழ் அறிஞர்கள் எழுதிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈழத்துப்பூதன் தேவனார் முதல், கணேசையர் வரை, இலங்கையில் மரபுமுறையான தமிழ்ப் பாரம்பரியக்கல்வி இருந்ததை நாம் அறிவோம்.

மரபுமுறையாக தமிழைக் கற்றவர்கள் செந்தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுகளை நாம் பாராட்ட வேண்டும். அவர்களை இனம் கண்டு, கௌரவிக்க வேண்டும். போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கில ஆட்சிக் காலத்தில் தமிழ் மொழியைப் பாதுகாத்தவர்கள் வரன்முறையாகத் தமிழைக் கற்றவர்கள். அவர்கள் ஊதியத்தைப் பெரிதாகக் கருதாமல், நல்மாணாக்கர் களுக்கு கல்வி ஊட்டி வந்தமையினால், இன்றும் பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களை உணர முடிகின்றது.

நல்லாசிரியரிடம் பாடம் கேட்ட நல்லை ஆறுமுக நாவலர், சுன்னாகம் குமாரசாமிப்புலவர், சி.வை. தாமோதரம்பிள்ளை முதலிய பெரியார்கள் தமிழ் மரபு பிறழாது பழைய இலக்கியங்களின் பெருமையை உணர்த்தியமையை தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும்.

புன்னாலைக் கட்டுவன் வித்துவசிரோமணி கணேசையர் அவர்களிடம் தொல்காப்பியம் கற்றவர்கள், நம் மத்தியில் பலர் உளர்.

இசையும், நாடகமும் மரபு பிறழாத வகையில் விளக்கம் தந்தவர், யாழ்நூல், மதங்கசூளாமணி, நடராச வடிவம். முதலிய நூல்களின் ஆசிரியரான அருட்திரு. விபுலானந்த அடிகள், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாசாபிவிருத்திச் சங்கத்தினர், பண்டித வகுப்புகளை நடாத்தி, பட்டம் அளித்து செந்தமிழ் மரபை இலங்கைமணித் திருநாட்டில் பாதுகாத்து வருகின்றனர்.

இச்செந்தமிழ் மரபில் வந்தவர்களில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையும், இலக்கிய கலாநிதி புலவர்மணி, பண்டிதமணி, ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களும் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில்

ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றனர்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழா தொடர்பாக, முதலாவது பிரசுரமாக "தமிழ் தந்த புலவர்மணி" என்ற தொகுப்புநூல், கொழும்புத் தமிழ் சங்கத்தால் வெளியிடப்படுகின்றது. இந்நூலை வெளியிட அனுமதி வழங்கிய கொழும்பு தமிழ்ச் சங்க நிருவாகிகளுக்கு, எனது உளங்கனிந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றறேன்.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கி, மதிப்பளித்த மட்டக்களப்பு இராமகிருஷ்ண சங்கத் தலைவர் ஸ்ரீமத். சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜ், அவர்களுக்கு, எனது நன்றியைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

புலவர்மணியின் சமூக இலக்கிய வாழ்க்கை பற்றிய சில தவிர்க்கமுடியாத குறிப்புகளை வழங்கி, இந்நூலை வெளியிடுவதற்குத் தேவையான ஆலோசனைகளைக் கூறி என்னை நெறிப்படுத்தியவர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள். அவர்களுக்கும் நன்றி கூறும் கடமைப்பாடுடையேன்.

சமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் ஆலோசகர் அல்ஹாஜ். S.H.M. ஜெமீல் அவர்கள் இந்நூலை ஆர அமரப் படித்து, அருமையான தொரு அணிந்துரையை வழங்கி உள்ளார். அவர் எங்கள் அன்புக்குப் பாத்திரமானவர். அவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

புலவர்மணி நினைவுப் பணிமன்றத் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபருமாகிய திரு. சி. சண்முகம் அவர்கள், புலவர்மணியின் பன்முகப்பட்ட ஆற்றல்கள் பற்றிய ஒரு முகவுரையை வழங்கியுள்ளார். அது புலவர்மணிமீது அவருக்குள்ள பக்தியின் வெளிப்பாடு எனலாம். அவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலாசூரி திரு. இ. சிவகுருநாதன் அவர்கள், இந்நூலுக்கு அருமையானதொரு வாழ்த்துரையை வழங்கிதோடு மட்டுமல்லாமல், கொழும்பு தமிழ்ச் சங்கத்தால் இந்நூலை வெளியிடவும் அனுமதி வழங்கிய அவருடைய பெரும் தன்மையை நான் பெரிதும் மதித்துப் பாராட்டுகின்றேன். அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

இந்நூலில் 48 விடயங்கள் அடங்கி உள்ளன. இவை, வீரகேசரி, தினகரன் வார இதழ், தமிழ் மாருதம், தினத்தந்தி, முனைப்பு கணேசையர் நினைவுமலர், கல்முனை விளைவுவிழாக் காட்சிமலர் (1943), ஈழகேசரி, முதலிய பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றில் வெளிவந்தவை.

இவற்றைவிட, புலவர்மணி இயற்றிய நூல்களுக்கு அறிஞர் பெருமக்கள் வழங்கிய முன்னுரைகள், அணிந்துரைகள், மதிப்புரைகள் முதலியனவும் இடம்பெற்றுள்ளன. இவற்றை எழுதி வெளியிட்ட அனைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரித்தாகுக.

வித்துவான். க. செபரெத்தினம் அவர்களின் "வாழையடி வாழை", என்ற நூலில் இருந்தும் கனடாவில் வசிக்கும் ஈழத்துப்பூராடனார் எழுதிய புலவர்மணிக் கோவையில் இருந்தும் சில பகுதிகள் இந்நூலிற் சேர்க்கப்பட்டுள்ளன. இதற்கான அனுமதியை அவர்கள் வழங்கியமைக்கு நன்றி கூறுகின்றேன்.

இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ள கட்டுரைகளையும், கவிதைகளையும், பல சிரமங்களுக்கு மத்தியில் தேடிப் பெற வேண்டியிருந்தது. இவற்றை கொழும்பு தமிழ்ச் சங்க நூலகம், கொழும்பு தேசிய நூலகம், தேசிய சுவடிகள் திணைக்களம் முதலிய நிறுவனங்களில் இருந்து பெற முடிந்தது.

"தமிழ் தந்த புலவர்மணி" என்னும் நூலை வெளியிட உற்சாகம் ஊட்டியவர் தேசியகல்வி நிறுவகத்தைச் சேர்ந்த உதவி செயல்திட்ட அதிகாரி திரு. ஏ. சிவராசா அவர்கள். அவருக்கு எங்கள் மனங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்து சமய கலாசார திணைக்களத்தைச் சேர்ந்த திரு. ம. சண்முகநாதன் அவர்கள், தனது பல்வேறு உத்தியோகக் கடமைகளுக்கு மத்தியில், இந்நூலின் அச்சுப்பிரதிகளை ஒப்புநோக்கி, சரிபிழை பார்த்து, அவ்வப்போது வேண்டிய ஆலோசனைகளையும் வழங்கினார். பத்திரிகைத் துறையில் நல்ல அனுபவம் உள்ளவர். அவருக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் முன்னாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர் திரு. சண்முகரெத்தினம் அவர்கள் இந்நூலை வெளியிடுவதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கியமைக்கு நான் அவருக்கு நன்றி கூறுகின்றேன்.

என்னை இப்பணியில் ஊக்குவித்த நண்பர்கள், உறவினர்கள், எனது துணைவியார் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

இந்த நூலை அழகாகவும் அச்சுப்பிழை இன்றியும், அச்சிட்டு வெளியிட்ட அச்சகத்தாருக்கும் என் நன்றிகள் பல.

**பெரியதம்பிப்பிள்ளை விஜயரெத்தினம்**

**44/7, சொலமன் அவனியு,**
**பாமன்கடை வீதி,**
**கொழும்பு-06.**
**16.4.98**

## பதிப்புரை

தமிழுக்கும் சைவத்திற்கும் பணியாற்றிய பல பெரியார்கள் யாழ்ப்பாணத்திலும் கிழக்கிலங்கையிலும் உள்ளர். இவர்களுள் நல்லை நகர் ஆறுமுக நாவலர் பணியினையும், கிழக்கிலங்கையில் பிறந்த விபுலானந்த அடிகளாரின் பணியினையும் பலர் அறிவர்.

எத்தனையோ பெரியார்கள் அவ்வப்போது தமிழ்த் தொண்டாற்றி மறைந்துள்ளனர். தமிழ் உலகமோ இவர்களை நன்கு அறிந்த நிலையில் இல்லை.

விபுலானந்த அடிகளார் நாவலர் பெருமானின் பணிகளையே மக்கள் சிறப்பாக அறிவர். மற்றையப் பெரியார்களின் பங்களிப்பை நாம் சிறிது என்று ஒதுக்கிவிட முடியாது.

ஐரோப்பியர் வருகைக்குப்பிற்பட்ட காலத்தில் இவர்களைப் பற்றிய திட்டவட்டமான குறிப்புகள் எம்மிடம் உண்டு. கரோல் விஸ்வநாத பிள்ளை, சி.வை. தாமோதரம்பிள்ளை, நா. கதிரவேற்பிள்ளை, சின்னத்தம்பிப் புலவர் போன்றவர்கள் இவர்களுட் சிலர்.

இவர்களைப் போன்று தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக கிழக்கிலங்கையில் தொண்டாற்றிய திரு. த. கனகசுந்தரம்பிள்ளை, வித்துவான் சரவண முத்தன், வித்துவான் பூபாலபிள்ளை, விபுலானந்த அடிகள், பொன் வைத்திலிங்க தேசிகர், குமாரசாமி ஐயர், புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, வித்துவான் F.X.C. நடராசா, பண்டிதர் வித்துவான் V.C. கந்தையா முதலியோரின் தமிழ்ப் பணி நினைவு கூரப்படுவதோடு அவர்களுடைய வரலாறு பூரணமாய் எழுதப்படவேண்டும்.

புலவர்மணி ஏ. பெரிய தம்பிப்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பான முறையில் கொண்டாடுவதற்குரிய ஏற்பாடுகளை மட்டக்களப்பு புலவர்மணி நினைவுப் பணி மன்றமும் கொழும்புத்தமிழ்ச் சங்கமும் செய்து வருவது பாராட்டப்பட வேண்டிய விடயம்.

ஈழமணித் திருநாட்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களில் நூற்றாண்டு விழா கொண்டாடத் தகுதியுடைய அறிஞர்கள் வரிசையில் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையும், புலவர்மணி, இலக்கிய கலாநிதி ஏ. பெரியதம்பிப்பிள்ளையும் முக்கியமானவர்கள் என்பதை நாம் அறிவோம்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டித் "தமிழ் தந்த புலவர்மணி" என்ற தொகுப்பு நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடாகப் பிரசுரிக்கப்படுகிறது. புலவர்மணியின் புதல்வர்களில் ஒருவராகிய திரு. பெ. விஜயரெத்தினம் அவர்கள் அதைத்தொகுத்துள்ளார். இந்த நூல் எங்கள் முதலாவது வெளியீடாக அமைந்துள்ளது.

மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்பில் புலவர்மணியைப் பற்றிப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால் இன்நூல் ஒருபுதிய பாணியில் அமைந்துள்ளது. பாரதியின் மகத்தான கருத்துக்களைப் பின்பற்றியவர் புலவர்மணி. ஜனநாயகத்தை, ஆன்மீகப் பெறுமானங்களையும், தனிமனித கௌரவத்தையும் தன் வாழ்நாள் முழுவதும் மதித்து வாழ்ந்து காட்டிய ஒரு பேரறிஞர்.

இலக்கிய வரலாற்றில் இலங்கைமணித் திருநாட்டின் விரல் விட்டு எண்ணக்கூடிய முக்கிய தமிழ் அறிஞர்களில் ஒருவராகி விட்டார் புலவர்மணி அவர்கள். இதனால் புலவர்மணி அவர்களின் திறமைகளை அறிந்த கற்றறிந்தோர் அவரது படைப்புக்களை புகழ் மாலையாக தொகுத்து அவ்வப்போது வெளிக் கொணர்ந்தனர். இந்த முயற்சியில் மட்டக்களப்பு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணிமன்றத்தின் பணிகள் பாரட்டுக்குரியவை. இந்த நினைவுப்பணிமன்றம் முன்னாள் இந்து சமய பிரதேச கலாசார அமைச்சர் கௌரவ செல்லையா இராசத்துரை அவர்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது.

புலவர்மணி அவர்களைப் பற்றி பேராசிரியர்கள், கல்விமான்கள், புலவர்கள் பலர் எழுதிய விடயங்கள் பலவற்றை எடுத்து அவருடைய புதல்வர் திரு. பெ. விஜயரெத்தினம் அவர்கள் தொகுத்த நூலை, அவருடைய வேண்டுகோளின்படி, அடியேன் பிரசுரிக்க முன்வந்துள்ளேன். இந்நூல் புலவர்மணி அவர்களைப்பற்றிய ஒரு வெட்டு முகத்தோற்றமாகும். இத்தொகுதியுள் அடக்கப்படாத விடயங்கள் இருப்பின் அவற்றையும் வெளியிட்டு வைக்க மட்டக்களப்பு புலவர்மணி நினைவுப்பணி மன்றத்திற்கும் அவரின் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும். புலவர்மணி அவர்களின் பணிகளை சான்றோனுக்குச் செய்யும் பணி என்ற நோக்குடன் அவற்றை வடிவமைத்து அச்சேற்றியதையிட்டு பெரு மகிழ்ச்சிஅடைகின்றேன்.

அ. சிவராஜா
30, நிஹால் சில்வா மாவத்தை,
கிருலப்பனை, கொழும்பு -06

பொருளடக்கம் பக்கம்


1. தமிழ் தந்த புலவர்மணி 1 – 2
2. விளைவுவிழாக் காட்சி கிளிக் கண்ணிகள் 3 – 4
3. வட இலங்கையின் துருவமீன், கிழக்கிலங்கையின் விடிவெள்ளி 5
4. புலவர் பெரியதம்பிப்பிள்ளை. 6 – 8
5. புலவர்மணி அவர்களைப்பற்றி விபுலாநந்த அடிகளார் பாடுகிறார் 9
6. புலவர்மணிக்கு கவிதைச் செல்வம் இயற்கைச் சொத்து 10 –12
7. பண்டிதமணியும், புலவர்மணியும் 13 – 23
8. நிறைமொழிமாந்தர் வரிசையில் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை 24 – 30
9. புலவர்மணியின் எண்ணங்கள் என்றென்றும் வாழும் 31 – 42
10. புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை கடல் கடந்த நாட்டில் கன்னித்தமிழ்க் காவலர் 43 – 46
11. தமிழ் வளர்த்த நல்லாசான்கள் 47 – 60
12. நாட்டுப் பற்றும், தேசிய உணர்வும் மிக்க, கவிஞர் பெரியதம்பிப்பிள்ளை 61 – 64
13. தமிழிற் பகவற்கீதை 65 – 66
14. அடிகளாரும் புலவர்மணியும் 67 – 71
15. வெண்பாவில் புலவர்மணி 72 – 80
16. புலவர் பெரியதம்பிப்பிள்ளை 81 – 87
17. அறிவொளி பரப்பிய புலவர்மணி 88 – 90
18. முத்திரை பதித்து, முத்திரை பெறுகிறார் 91 – 98
19. புலவர்மணி இயற்றிய நூல்கள். 99 – 104
20. உள்ளதும் நல்லதும். 105 – 132
21. காளமேகமும் கல்லடி வேலனும் 133 – 139
22. பகவற்கீதை 141 –160
23. தமிழர் முஸ்லிம் ஐக்கியம் 161 –164
24. புலவர்மணிக் கோவை ஆக்கியோன் உரை 165 –168
25. நாவலர் காவிய பாடசாலையும் புலவர்மணியும் 169 –177
26. சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் 178 – 182

27. புலவர் பெரியதம்பிப்பிள்ளை 183 – 190
28. வித்துவ சிரோமணிப்பட்டம் 191 – 194
29. நாவலர் கல்வி வழியில் பண்டிதமணியும், புலவர்மணியும் 195 – 204
30. தமிழ்க் கடல் கி:வா.ஜெகன்நாதன் 205 – 211
31. வாழையடி வாழை 212 – 233
32. புலவர்மணியின் 96வது நினைவு விழா 234 – 272
33. மட்டுநகர் தந்த புலவர்மணி 273 – 275
34. வரவேற்பு உபசாரப்பா 276 – 278
35. ஒளிவீசும் மணி விளக்கு 279 – 280
36. தனிச் சிறப்புப் பெரியதம்பிப்பிள்ளை 281 – 282
37. புலவர்மணி பெரியதம்பி 283 – 284
38 தமிழ் உலகின் சுடர் அணைந்தது 285 – 292
39. புலவர்மணி சிறந்த சிந்தனையாளர் 293 – 296
40. இரங்கச் செய்யுள்கள் 297 – 306
41. பேராசிரியர் கா.கைலாசநாத குருக்கள் அவர்கள்
யாழ். பல்கலைக் கழகத்தின் முதலாவது
பட்டமளிப்பு விழாவில் நிகழ்த்திய அறிமுக உரை 307 – 309
42. கிழக்குப் பல்கலைக் கழகத்தின் நான்காவது பட்டமளிப்பு
விழாவில் பேராசிரியர், சி. மௌனகுரு அவர்கள் நிகழ்த்திய
அறிமுக உரை 310 – 312
43. புலவர்மணியின் நூல்களுக்கு வழங்கிய ஆராய்ச்சி முன்னுரை,
அணிந்துரைகள், ஆசியுரைகள், முன்னுரைகள், மதிப்புரைகள் I 313 – 328
44. ஆரிய திராவிட பஷாபிவிருத்திச் சங்க ஆண்டு விழா 329 – 330
45. அணிந்துரை, ஆசியுரை, முன்னுரை, மதிப்புரை II 331 – 354
46. புலவர் மணியின் பாடல்கள் 335 – 361
47. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளைக்கு இலக்கிய கலா நிதிப்பட்டம் 362 – 368
48. மட்டுநகர் தந்தமணி 369 – 370

# தமிழ் தந்த புலவர்மணி

– திரு. இராஜா அரியரத்தினம் –

"ஒருவன் நேற்று இருந்தான். அவனே இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை மிகுதியும் உள்ளது இந்த உலகம்.

பொய்யாமொழிப் புலவராகிய வள்ளுவரின் இக்கூற்றை மெய்ப்பித்து விட்டார் கிழக்கு இலங்கையின் மணி விளக்காகத் திகழ்ந்து தமிழ் கூறும் நல்லுலகு எங்கணும் ஒளிபரப்பிய புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை அவர்கள்.

"சிந்தாமணி"யில் 'உள்ளதும் நல்லதும்' என்ற கட்டுரைத் தொடரைப் புலவர்மணி அவர்கள் எழுத ஆரம்பித்தபோது அவரது பேனா முனையிலிருந்து வெளிவந்த வாசகம் ஒன்று இங்கு குறிப்பிடத்தக்கது.

'உள்ளதைச் சொன்னால் உடம்பெல்லாம் புண்ணா? என்று உலக வழக்கிலே கேட்பார்கள். எனது எழுதுகோல் எவர் ஒரு வரின் உடம்பையோ உள்ளத்தையோ புண்படுத்தாது. நல்லதை எழுது கின்றேன். நல்ல நோக்கத்துடன் எழுதுகின்றேன். நல்ல பாணியில் எழுதுகின்றேன். நிதானமாக எழுதுகின்றேன்.'

இது எழுத்தாளர்களுக்குப் புலவர்மணி அவர்கள் கூறியுள்ள அறிவுரை ஆகும். அவர்களே இதனைத் தமக்கு முதற் பிரமாணமாக எடுத்துக் கொண்டார்கள்.

'உள்ளதும் நல்லதும்' என்ற கட்டுரைத் தொடரைப் படித்து வருபவர்கள் புலவர்மணி அவர்களின் ஆழ்ந்த தமிழ் அறிவையும், பளிங்கு போன்ற தெளிந்த சிந்தனையையும், சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளும் முறையில் தமிழ் மொழியை இலாவகமாகக் கையாளும் திறனையும் அறிந்திருப்பார்கள்.

மண்டூர்ப் பகுதியில் பிறந்து, நாவலர் மரபு வழிவந்த சுன்னாகம் குமாரசாமிப் புலவர் அவர்களிடம் தமிழை முறையாகப் பயின்று

இலக்கண இலக்கியங்களில் ஆழ்ந்த அறிவைப் பெற்றிருந்தார்கள் புலவர்மணி அவர்கள்.

பிறந்த பொன்னாட்டை விட்டுத் தென் தமிழ்நாடு சென்று தமது அறிவைப் பெருக்கிய காலத்தில் அவர் புரட்சிகரமான சில காரியங்களை மிகச் சிறப்பாக நிறைவேற்றி வைத்தார்கள்.

மதுரையில் சோமசுந்தர பாரதியாரின் சேர்க்கையால் காந்தியடிகளின் இயக்கத்திற் சேரும் வாய்ப்பு புலவர்மணி அவர்களுக்குக் கிடைத்தது. மதுரையில் நடைபெற்ற சம்பவங்கள் அவர்களுக்குத் தேசிய உணர்ச்சியை ஊட்டின.

இதன் பயனாக அவர்கள் இயற்றிய முதலாவது தேசிய கீதம், இன்றும் சுவை தட்டிக் கொண்டே இருக்கின்றது.

"இலங்கை மணித் திரு நாடெங்கள் நாடே – இந்த
இனிய உணர்ச்சி பெற்றால் இன்ப வீடே"

என்ற பாடலைத்தான் இங்கு நினைவூட்டுகின்றோம்.

மட்டக்களப்பில் ஸ்ரீராமகிருஷ்ண சங்கம் ஏற்படுத்திய விழிப்புணர்ச்சியும், முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளாரின் தொடர்பும் புலவர் மணியின் வாழ்க்கையில் புதிய எழுச்சிகளுக்கு வித்துகளாக அமைந்தன.

விபுலாநந்த அடிகளாரின் அனுசரணையில் புலவர்மணி பெற்றதாகிய புது உயிர்ப்பு, தமிழ் மொழியை வளம் செய்ய அவர்களுக்குத் துணை புரிந்தது.

புலவர்மணியின் சங்க நூற் புலமையும், ஆங்கில அறிவும், பிறநாட்டு நல்லறிஞர்களின் தொடர்பும் அவர்களுக்குப் பரந்த ஓர் உலகில் சஞ்சரிக்க உதவி வந்தன. இதனால் அவரிடம் குறுகிய மனப்பான்மை ஒருபோதும் முகிழ்த்ததேயில்லை.

செம்மை சான்ற இந்தப் பண்பு உலகிடை நிலவுமாயின் சண்டை சச்சரவுகளுக்கு இடமேயிராது. இந்தப் பண்பை நாம் வளர்த்து வருவதே தமிழ் தந்த புலவர்மணியின் நினைவை நிலைநாட்ட நாம் செய்யும் பணி என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

–நன்றி சிந்தாமணி 5–11–78

கல்முனையில் 1943ல் நடைபெற்ற
விளைவு விழாக் காட்சியின் போது பாடப்பட்ட

# கிளிக் கண்ணிகள்

**பண்டிதர் ஏ. பெரியதம்பி அவர்களால் இயற்றப்பட்டது**

1. காட்சிகண் காட்சியடி – கண்கொளாக் காட்சியடி
மாட்சிசேர் கல்முனையில் – கிளியே – வந்துநீ காண்பாயடி.

2. செந்நெல்விளைகாட்சி – தேசம் பொலிமாட்சி
பொன்விளைந்தாற் போலே – கிளியே– பொங்கும் வயல்களைப்பார்.

3. பச்சை மரகதமோ – பார் செம்பவளமதோ
உச்சித நீலமதோ – கிளியே – ஓங்கும் கதிர்மணிகள்.

4. அன்னைதனைப் புதல்வர் – அன்பாய் வணங்குதல்போல்
பொன்னிற நெற்கதிர்கள் – கிளியே – பூமியைக் கும்பிடல்பார்.

5. கொல்லும் புலி கரடி – கோப மதயானை
செல்லும் வழிகளெல்லாம் – கிளியே– செந்நெல் விளையுதடி.

6. காயும் விஷநுளம்புக் –காடுகள் நாடாகிக்
காயும் கனி கிழங்கும் –கிளியே– கற்பகச் சோலையடி.

7. வள்ளிக்கிழங்குவகை – வாபார் சேம்புக் கிழங்கு
அள்ளு நிலக்கடலை – கிளியே – ஆறுதுயர்க்கடலை.

8. காலையும் நண்பகல் போற் – காயும் வெம் பாலை மணல்
சாலவும் நெல்கதலி– கிளியே – தண்ணென்றிலங்குதுபார்

9. சோளன் குரக்கன் எள்ளு – துவரை பயறுழுந்து
நாளும் பசிதணிக்கும் – கிளியே – நல்மரவள்ளிகள் பார்.

10. பாலைப் பொழிந்துழவர் - பண்ணை வளர்த்தாரோ
பால்முத்துப் போற் கதிர்கள்-கிளியே-பாங்காய் அசைவது பார்.

11. தேனைச் சொரிந் துழவர் -செந்நெல் வளர்த்தாரோ
ஆணிப்பொன் போல் விளைந்து - கிளியே ஆடுதுபார்கதிர்கள்.

12. காலைப் பொழுதினிலே-சூரியன் காலுகையில்
பாலைப் பழம் போலே - கிளியே- பம்பும் கதிர்களைப்பார்.

13. மாலைப் பொழுதினிலே -மாமதி தோன்றையிலே
பாலைப் பொழிந்ததுபோல் - கிளியே - பண்ணை பரக்குதுபார்.

14. சுந்தரப் பச்சை செம்மை -தூய வெண் பொன்னிறத்தா
இந்திர விற்போன்று- கிளியே- இலங்கும் வயல்களைப்பார்

15. மன்னவர் கோலுயர - வாழ்குடி தானுயர
மன்னுக மேழிவளம்-கிளியே-வாழ்க-தொழில்களெல்லாம்

16. வாழ்க விளைவு விழா- வாழ்க பொருட்காட்சி
வாழ்க அசீஸ் துரையும்- கிளியே- மங்களம் பொங்குகவே.



பாவலர் ஈழப் பண்டிதர்க் கெல்லாம்
பண்டித மணியாய் ஒளிவிடும் ஐயா
நாவலர் மாணவ பரம்பரை வந்து
நற்றமிழ் சைவக் கடலினை முகந்தோய்
மேவுசித் தாந்த வரையினை யகழ்ந்து
விலையிலா மணிகள் பலவினைத் தந்தோய்
காவியச் சாறு பிழிந்தனை சுவைத்தோம்
கலாநிதிப்பட்டம் பெற்றதெம் பேறே.

"முல்லைமணி"

**வடக்கிலங்கையின் துருவமீன்**
**பண்டிதமணி, இலக்கியகலாநிதி**
**சி. கணபதிப்பிள்ளை**

கிழக்கிலங்கை பெற்றெடுத்த கீதைத் தமிழன்
எழுச்சிப் புலவர்மணி. ஏந்தல் - விழிப்புமிக்கோன்
எங்கள் பெரியதம்பி; ஈழத்தின் மாட்சிமைக்கு
நன்கலமாய் வாய்த்த நயம்.

- இ. முருகையன்



**கிழக்கிலங்கையின் விடிவெள்ளி**
**புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை**

# புலவர் பெரியதம்பிப்பிள்ளை

**வித்துவான் பண்டிதர் வி. சீ. கந்தையா பி.ஓ.எல்.**

மட்டக்களப்புத் தமிழகம் தந்த மாபெரும் தமிழ்மணியும், தனது வாழ்நாள் முழுவதும் தான் கொண்டிருந்த தமிழ்ப் புகழால் "பண்டிதர்" என்ற பொதுப் பேரைத் தனக்கே ஆக்கிக் கொண்டவரும், புலவர் மணிகள் பலரும் போற்றும் புலவர் மணியுமான பெரியதம்பிப்பிள்ளை இந்நாடு செய்த தவப்பயனால் தோன்றிய ஒரு பேரறிஞர். ஈடிணையற்ற தமிழ்ப்பெரும் புலவர் வெண்பாவிற் புகழேந்தி போன்றவர்; விருத்த மெனும் ஒண்பாவிற் கம்பனை நிகர்த்தவர்; கண்டனம் யாத்தலில் காளமேகத்தை ஒத்தவர்; சொல்லின் செல்வர்; பொருள்வளம் கனிந்த சொற் பொழிவுகளை ஆற்றுவதில் தனக்குத் தானே நிகராக மிளிர்ந்த தமிழ்ப்பேரறிஞர். தான் பிறந்த நாட்டிற்குத் தன்னாலே புகழ் தேடித்தந்த பேராசான். அண்மையில் நேர்ந்த அன்னாரது பேரிழப்பினை மட்டக் களப்பு மண் மகளாற் பொறுத்துக் கொள்ளவே முடியாதுபோயிற்று. அவளின் நெடுமூச்சாகிய நெருப்புக் காற்றே, கொடும் புயலாக மாறி வீசிற்றென்று இளம் கவிஞர்கள் பாடி அழுது புலம்பியிருப்பதையும் அறிவோம்.

எவனொருவனது பிரிவு, அகல்வு, அல்லது, இழப்பு என்பது சமுதாயத்தில் எதிரொலிக்கின்றதோ அல்லது சமூகங்களில் எதிர்த் தாக்கமாகப் பிரதிபலிக்கின்றதோ அவனே பெருமக்களின் வரிசையிற் சேர்க்கப்படத்தக்கவனாவான். இவ்வுண்மை ஆன்றோர் கண்ட முடிபு. அண்மைக்காலத்தில் நாம் அறிந்த அவ்வாறான ஒரு கண்கண்ட தமிழ்ப்பெருமகன் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை எனலாம்.

மட்டக்களப்பிலே உள்ள முருகன், கோவில் கொண்டிருக்கும் பதிகளுள் ஒன்றான மண்டூர்தான் புலவர்மணியவர்கள் பிறந்த மண்ணக முமாகும். மண்டூர் முருகன் வளர்த்த தமிழ்க் குழந்தை அவர். "முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் செவ்வேள்" வளர்த்த பெரியதம்பி.


இப்பெரியார் தென்தமிழ்நாடு, யாழ்ப்பாணம், திருக் கோணமலை, கண்டி ஆகிய பெரும் பகுதிகளில் வாழ்ந்தபோது பெற்றுக்கொண்ட பேரறிஞர்களது கூட்டம், பெரிய சங்கங்களின் தொடர்பு, பேருரை நிகழ்ச்சிகள் என்பவற்றை நாம் எண்ணும் போது இவர்காலத்து வாழ்ந்த ஏனைய தமிழர்களுக்குக் கிடையாத பல அரிய பெரும் பேறுகளை வாய்க்கப்பெற்றிருந்தவர் புலவர்மணி என்பதை நாம் அறிந்து பெருமைப்பட முடியும்.

பகவத்கீதை மொழிபெயர்ப்பும் பல மொழிகளிலும் வெளி வந்துள்ளது. தமிழில் பலர் மொழிபெயர்த்துள்ளனர். பகவத்கீதை வெண்பா என்ற பெயரிலே வேறு மொழி பெயர்ப்புக்கூட உண்டு. எனினும் புகழேந்தியாரையும் மிஞ்சிய புகழாளரான பெரியதம்பியாரின் கனிவான இனிய வெண்பா நடையிலமைந்த மொழிபெயர்ப்பின் சிறப்பை, ஒப்புநோக்கத்தால் அறிஞர் என்று இன்புறுகிறார்கள். தமது எழுத்து வல்லமையாலும், கவிதைப் புலமையாலும் கட்டுரை, (பேச்சு)ச் சிறப் பாலும், வெளியீட்டுப் பெருமையாலும், தமது இலக்கியப் பணிகளாலும், அறிஞர் பலரின் பாராட்டாலும், தமது சிறந்த ஆசிரியத் தொழிலாலும், எல்லா மக்கள் மனத்தகத்தும் நல்லிடம் பெற்று மட்டக்களப்பின் ஏகப் பிரதிநிதியானவர் புலவர்மணியார். இவ்வாறான பெரும் பேறிஞரைக் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி உரிய நிலையில் கௌரவிக்கவேண்டும் என்று அறிஞர் உலகு அதற்குரிய சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் வேளையில் காலன் கைப்பட்டது நாம் செய்த தவக்குறைவேயாகும். பொதுமக்களும், அறிஞரும் உண்மையில் நினைந்து வருந்தக்கூடிய ஒன்று இது. தான் முன்கூட்டியே வான்புகும் நிலையை உணர்ந்தோ என்னவோ. புலவர்மணி என்ற பட்டம் ஒன்றே தனக்குப்போதிய பாரத்தை (சிறப்பை, பெருமையை) தந்துள்ளது என மகிழ்ந்து அடக்கத்தோடு புலவர்மணி கூறிவைத்தார்.

இத்தகைய புலவர்மணியவர்களின் அடக்கம், அமைதி, பணிவு ஆகிய அரும் குணங்கள் கல்வி கற்றதோடு மாணவர் குலத்துக்குக் கற்பிக்கவும் விரும்பி அரிய பயிற்சிகளை மேற்கொண்டு முன்னேற்றப் பாதையில் நடைபோட்டுக்கொண்டிருக்கும் ஆசிரியர் குலத்துக்கு முன்

மாதிரியாக நிச்சயம் அமைதல் வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். கலாசாலைச் சிறப்புமலர் ஒன்றினை வெளியீடு செய்து அதனை இத்தமிழ்ப் பெருமகனாருக்குச் சமர்ப்பணம் செய்துவைக்க முன்வந்த மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர், விரிவுரையாளர், பயிற்சி ஆசிரியர்கள் ஆகியோரது நல்லுள்ளச் சிறப்பை நான் மனமாரப் பாராட்டுகின்றேன்.

–மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை வெளியீடு



## புலவர்மணி அவர்களைப்பற்றி விபுலானந்த அடிகளார் பாடுகிறார்

"பண்டூரு முகிற்குலங்கள் எமதிறைவர்
மருகர் திருப்பதியீதென்ன
விண்டூர மழைபொழியும் சிறப்பதனால்
வளம் மலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூரில் உறைமுருகன் மலரடிக்கோர்
திருப்பதிகம் மரபிற் சொற்றான்
கண்டூரு மினியமொழிப் பெரியதம்பிப்
பிள்ளைஎனும் கவிவல்லோனே"

-மண்டூர்ப்பதிகம் - சிறப்புப்பாயிரம்.

# புலவர்மணிக்குக் கவிதைச்செல்வம் இயற்கைச் சொத்து

## இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

மட்டுவிலில் எங்கள் வீட்டுக்கு அயல்வீடு தம்பிமுத்துப் பிள்ளை என்பவரின் வீடு. அவர் ஆங்கிலத்தில் ஐந்தாம் வகுப்பிற் சித்தி யெய்தியவர். மேலே படிக்கவோ, ஏதும் முயற்சி செய்யவோ முடியாமல் அவரைக் குன்மநோய் பற்றிக் கொண்டது. ஒருமுறை கதிர்காமத்துக்கு மட்டக்களப்பு வழியாக நடந்து யாத்திரை செய்தார்.

மண்டூரில் சிலநாள் தங்கி, வெகு ஆசாரசீலராய் திரு முருகனை அவர் வழிபாடு செய்தது அங்குள்ளவர்களை வசீகரித்தது. வண்ணக்கர் தம் வீட்டுக்கு அவரை அழைத்து விருந்து செய்தார். வண்ணக்கர் – கோயில் மனேஜர். அப்பொழுது வண்ணக்கராய் இருந்தவர் புலவர் மணியின் தந்தையார்.

புலவர்மணி கதிர்காம யாத்திரிகரான தம்பிமுத்துப்பிள்ளையோடு பழகினார்.

தம்பிமுத்துப்பிள்ளை புலவர்மணிக்கு யாழ்ப்பாணத்துக்கு வந்து தமிழ் படிக்க வேண்டுமென்கின்ற இச்சையை உற்பத்தி செய்தார். இதே தம்பிமுத்துப்பிள்ளைதான் எனக்கும் நாவலர் பாடசாலையைக் காண்பித்து அங்கே சேர்ந்து படிப்பது நல்ல தென்ற இச்சையை உற்பத்தி செய்தவர்.

இருவருக்கும் பூர்வகர்ம ஒருமைப்பாடு உண்டு போலும்! இருவர் பாலும் வித்தை – விருப்பு என்கின்ற வித்தை – ஒரு தம்பிமுத்துப்பிள்ளை வித்தி முளை கொள்ளச் செய்தார்.

1918ஆம் ஆண்டு, கார்த்திகை மாதம் நாவலர் 'காவிய' பாடசாலையில் நான் சேர்ந்தேன். சேர்த்தவர் திரு. வே. நடராஜா.



இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

அடுத்த மாதம் திரு. தம்பிமுத்துப் பிள்ளையின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார் திரு. பெரியதம்பிப்பிள்ளை. என்னைச் சேர்த்த அந்த நடராஜாவே பெரியதம்பிப்பிள்ளையையும் நாவலர் காவிய பாடசாலையில் சேர்த்தார்.

## அந்த நடராஜா யார்?

உரை ஆசிரியர் ம.க.வேற்பிள்ளை அவர்களின் இளைய புதல்வர் நடராஜா. உரையாசிரியர்; நாவலருக்கும், மருகர் வித்துவ சிரோமணிக்கும் மாணவர். ஆகவே நாவலர் காவிய பாடசாலையில் நடராஜாவுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. நாவலர் பாடசாலை மானேஜருமான ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்கள் உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளையிடம் படித்தவர்.

## பூர்வ தவப்பயன்

காவிய பாடசாலையில் சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசாமிப் புலவர் அவர்களிடம் படிக்க வாய்த்தது பூர்வ தவப் பயனேயாம். புலவர் அவர்களிடம் அவர்கள் காட்டும் கருவி நூல்களை முறையாகக் கற்பவர்கள் ஆறுமாசத்தில் எந்த நூல்களையும் தாமாகவே கற்கும் ஆற்றல் படைத்தவர்கள் ஆவார்கள். எங்கள் இருவருக்கும் புலவர் அவர்கள் கண்கண்ட தெய்வம்.

புலவர் அவர்கள் அளித்த அத்திபாரக் கல்வி புலவர் மணிக்குச் சுவாமி விபுலானந்தர் அவர்களைப் பற்றிப் படர்வதற்கு வாய்ப்பாய் இருந்தது. எனக்கு சமய தத்துவ ஞானியும் அகக்கண் வெளித் தவருமான உப அதிபர் திரு. பொ. கைலாசபதி அவர்களின் தண்ணிழலைச் சற்றாயினும் அணுகுதற்கு உதவியாய் இருந்தது.

புலவர்மணிக்கு உப அதிபர் அவர்களைப் பற்றிச் சொல்வதற்கு யான் முயன்றதுண்டு. காலமும் இடமுமாகிய முதற்பொருள் அமையவில்லை. திருமுருகன் திருவுள்ளத்தை யார் அறிவர்?

புலவர்மணி ஒரு மரத்தில் இரு கனிகள் என்று தம்மையும், என்னையும் ஒருங்கு சேர்த்து வர்ணிப்பதும் உண்டு.

ஒரு மரம் என்று குறிப்பிடுவது சுன்னாகம் புலவர் பெருமான் ஆகலாம். அப்பொழுது தம்பிமுத்துப் பிள்ளையையும் நடராஜா வையும் நினைப்பதுண்டு. இந்நினைப்புப் புலவர்மணி பாலும் ஊறியிருப்பதை சிந்தாமணியில் புலவர்மணி எழுதிய சுய சரித்திரத்திலும் காணலாம்.

புலவர்மணிக்குக் கவிதைச் செல்வம் இயற்கைச் சொத்து. புலவர்களாகிய தேவர்கள் புலவர்மணியைக் கற்பக நிழலில் அமரச்செய்து கவிதைச் சுவையாகிய திவ்ய அமிர்தத்தை நுகர்ந்து ஆசி வழங்குவார்களாக.

நன்றி: சிந்தாமணி

# பண்டிதமணியும், புலவர்மணியும்

பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள்
கல்வியியற்புலம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை மணித் திருநாட்டில், வடகோடியில், தென்மராட்சிப் பகுதியில், மட்டுவில் கிராமத்தில் அவதரித்த சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களும், கிழக்குக் கோடியில் படுவான்கரையென வர்ணிக்கப்படும் பிரதேசத்தில், மண்டூரில் அவதரித்த ஏகாம்பரபிள்ளை பெரியதம்பிப்பிள்ளை அவர்களும் நம் நாட்டில் பண்டிதமணி, புலவர்மணி என்று முறையே அழைக்கப் படுகின்றவர்கள்.

இவர்களது வாழ்க்கை வரலாறு இந்நாட்டு வரலாற்றின் ஒரு காலகட்டத்தில் இலக்கிய வரலாறு எனக் கொள்ளுதல் முறையாகும்.

நமது அறிஞர்கள் இருவரும் தமிழ் இயல், தமிழ் கூறும் இரு மாகாணங்களையும் இணைத்த தமிழ்ச் சுடர்கள். இவ்விணைப்பு, தத்துவ அடிப்படையிலும், அரசியல் அடிப்படை யிலும் நித்தியமாக நிலைத்து நிற்பதன் மூலமே, தமிழ் ஈழம் வாழ முடியும்.

மட்டுவில் ஒரு சிறிய கிராமம். தென்மராட்சி, பெரியார் கணபதிப்பிள்ளை பிறந்த காலத்தில் ஆங்கில நியமக் கல்வியைப் போற்றி வளர்க்காது மரபுவழிக் கல்வியையும் முறைசாராத் தமிழ்ப் புலமையையும் வளர்த்து வந்த பகுதியாகும். பண்டிதமணி அவர்களின் தந்தையார் சின்னத்தம்பி அவர்கள் தர்மகுணசீலராக விளங்கி, புராணங்கள் சொல்லி, உரை வாசித்து, தாம்பெற்ற அறிவுச் செல்வத்தை மக்களுக்கு வாரி வழங்கியவர். மட்டுவில் உரையாசிரியர் வேற்பிள்ளையிடம் கற்றவர். அவரது துணைவியார்

வள்ளியம்மை எட்டு ஆண்டுகளாகக் குழந்தைப் பேறில்லாதிருந்து அவர்களது குல தெய்வமான தனங்கிளப்பு காரைத்தூ விநாயகரை வழிபட்டு, சிதம்பரம் நடராசப் பெருமானைத் தரிசித்துப் பெற்றெடுத்த குழந்தையே கணபதிப்பிள்ளை அண்ணல்.

மண்டூர், இந்திரனுடைய மருமகனாகிய முருகன் உறையும் திருப்பதி. நல்ல நீர்வளமும், பயன் நல்கும் நிலவளமும் கொண்டு விளங்குவது. மட்டுவிலைப்போன்று மரபு வழிக் கல்வியையும் முறைசாராக் கல்வியையும் போற்றிவளர்த்தது மண்டூர்க் கிராமம். பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் தந்தையார் பெரியபுராணம், திருச்செந்தூர்ப் புராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம், ஆகிய நூல்களையும் கற்றறிந்தவர். அவர் முப்பத்தைந்து வருடங்களாக மண்டூர் முருகன் கோயில் வண்ணக்கராய்ப் பணி புரிந்து, மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். அவர் துணைவியார் சின்னத்தங்கம். இவர்களின் மூத்த புதல்வன் பெரியதம்பிப்பிள்ளை.

திருக்குமாரர்கள் இருவரும் 1899ஆம் ஆண்டில் பிறந்தவர்கள். புலவர்மணியவர்கள், 1978ஆம் ஆண்டிலும் பண்டிதமணி அவர்கள்,1986ஆம் ஆண்டிலும் சிவபதம் எய்தினார்கள்.

1917ஆம் ஆண்டு தொடக்கம், புலவர்மணி இறைவனடி எய்துமட்டும், இணைபிரியாத உள்ளார்ந்த நட்புடையவர்களாக இவர்கள் வாழ்ந்தார்கள்.

புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் வித்துவான் சந்திரசேகர உபாத்தியாயர். அவர் மண்டூர்க் கிராமத்திலேயே தங்கி, பெரியதம்பிப்பிள்ளைக்கும், இன்னும் சிலருக்கும் தமிழ் சொல்லிக் கொடுத்தார்கள். இது தொடரமுடியவில்லை. எனவே பெரியதம்பிப்பிள்ளை கல்முனை மெதடிஸ்த பாடசாலையில் ஆங்கிலம் கற்கச் சேர்க்கப்பட்டார்.

பண்டிதமணியவர்கள் மட்டுவிலில் சந்திர மௌலீச வித்தியாசாலையில் ஆரம்ப வகுப்பில் சேர்க்கப்பட்டார்.

இருவரும் இக் கல்லூரிகளில் கல்வியைத் தொடரவில்லை.

இக்காலத்தில் தம்பிமுத்துப்பிள்ளை எனும் தமிழ்அறிஞர், மட்டுவிலில் வாழ்ந்தார். அவர் புத்தகங்கள் விற்பதைத் தொழிலாகக் கொண்டவர். அதன்வழி தமிழினையும் கற்றறிந்தவர். மண்டூர் முருகனில் பக்தி கொண்டவர். எனவே மண்டூர் செல்லும் போது அங்குள்ள தமிழ் அறிஞர்களோடு கூடிக்குலாவுவது வழக்கம். இவர்களுள் ஒருவர் ஏகாம்பர பிள்ளையாவார். இவரது மகனான பெரியதம்பிப்பிள்ளையின் தமிழ் ஆர்வத்தைக் கண்ட அவர், அவரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்தார்.

இந்நிகழ்ச்சிக்கு, சில மாதங்களுக்கு முன்னர் இதே தம்பிமுத்துப்பிள்ளை அவர்கள், நல்லூர் முருகன் திருவிழாக் காலத்தில் புத்தகம் விற்கும் நோக்கத்தோடு சென்றிருந்த பொழுது, கணபதிப்பிள்ளை அவர்களும், அவரோடு சென் றிருந்தார். சென்றிருந்த சமயம், நாவலர் காவிய பாடசாலைத் திண்ணையில், உறங்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இக்கலைக் கோயிலில் கற்க வேண்டுமென்ற உணர்வு ஏற்பட்டது. நாவலர் பெருமானின் பாதம் படிந்த அப்பள்ளிக்கூடத்தில் தான் கற்கவேண்டுமென்ற ஆசை மேலும் வீறிட்டு எழுந்தது. இதனைச் செய்து தருமாறு காரைத்தூ விநாயகரிடம் தவம் இருந்தார்.

தம்பிமுத்தண்ணர் என்று அன்போடு அழைக்கப்பட்ட தம்பிமுத்துப்பிள்ளை அவர்களது வேண்டுகோளுக் கிணங்கி, இவர்கள் முன் வழிநின்ற உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளை அவர்களது இளைய புதல்வரான திரு. வே. நடராசா அவர்களின் ஊக்கத்தினால், கணபதிப்பிள்ளை அவர்கள் காவிய பாட சாலையில் சேர்க்கப்பட்டார்கள். கணபதிப்பிள்ளை அவர்களின் வாழ்க்கையில் புது யுகம் பிறந்தது.

இறைவன் நியதிக்கிணங்க பெரியதம்பிப்பிள்ளை அவர்களும், தம்பிமுத்துப்பிள்ளை அவர்களின் விடா முயற்சியாலும், நடராசா அவர்களின் விடாமுயற்சியாலும் காவிய பாடசாலையில் 1917ஆம் ஆண்டில் அனுமதி பெற்றனர்.

இலங்கைத் தமிழர் வரலாற்றில், இலக்கிய வரலாற்றில், இவ்விரு துருவங்களும் ஒன்றிணைந்தது தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசங்களின் ஆத்மீக இணைப்பாக விளங்கிற்று.

காவிய வகுப்பில், சமகாலத்தில் நடாத்தப்படும் பரீட்சைகள் இல்லாது விட்டாலும், சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களைத் தலைவராகக் கொண்டு விளங்கிய செந்தமிழ்ப் பரிபாலன சங்கம், சில தேர்வுகளை நடாத்திவந்தது. இச் சங்கம் பல பேரறிஞர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு விளங்கியது. சேர் பொன்னம்பலம் அருணாசலத்தோடு, இச் சங்கத்தை வளர்க்க இணைந்து செயற்பட்டவர் சேர் அம்பலவாணர் கனகசபை அவர்கள். அருணாசலம் அவர்களும், கனகசபை அவர்களும் தூய சிந்தனை கொண்ட அரசியல் நெறியாளர்கள், இலங்கைப் பல்கலைக்கழகக் கல்விக்குத் தத்துவம் அளித்தவர்கள். இவர்களின் கல்வித் தொண்டு குறிப்பாகக் கனகசபை அவர்களின் கல்வித் தொண்டு செவ்வனே மதிப்பீடு செய்யப்படவில்லை.

செந்தமிழ்ப் பரிபாலன சங்கம் ஒருநாள் பரீட்சை யொன்றை நடத்தியது. பரீட்சை மண்டபத்தில் பல பேரறிஞர்கள் குழுமியிருந்தார்கள். கல்வி நெறியாளர், அரசியல் அறத்தினர் கனகசபை அவர்களும், விபுலாநந்த அடிகளும் இங்கு சமூகமளித்திருந்தார்கள். பரீட்சை ஆரம்பமாகி, முடிந்துவிட்டது. இதைப்பற்றி பெரிய தம்பிப்பிள்ளை அவர்கள்.

'பரீட்சை தொடங்கிவிட்டது. முழுதும் வாய்ப்பாடமாகவே மறுமொழி சொல்ல வேண்டும். எழுத்துப் பரீட்சையில்லை. மூன்று நான்கு மணி நேரம் நடந்து முடிந்தது பரீட்சை. புள்ளி அடிப்படையிற்கண்ட பரீட்சை முடிவில் சி. கணபதிப்பிள்ளை திறமை அடிப்படையில் முதலாமிடம் பெற்றார். எனக்கு இரண்டாமிடம் கிடைத்தது.' எனக் கூறியுள்ளார்கள்.

இவ்விரட்டையர்களும், காவிய பாடசாலையிற் கற்றுக் கொண்டிருக்கும்போது, இவர்களுக்கிடையே விளங்கிய

ஒத்துணர்வினைக் காட்டுமுகமாக, பண்டிதமணியவர்களின் கூற்று நோக்கற்பாலது.

'ஆங்கில மோகம் தலைக்கு மீறித் தாண்டவமாடிய அக் காலத்திலே - தகுதியுள்ளவர்கள் தமிழைப் புறஞ்செய்த அந்தக் காலத்திலே படிப்பு வாசனையின்றியிருந்த என்னையும் அவர்கள் அந்தக் காவிய வகுப்பில் சேர்க்க நேர்ந்தது. மட்டக்களப் பிலிருந்தும் ஒருவர் வந்து சேர்ந்தார். அவருக்கு ஆங்கில அறிவும் உண்டு. கவிதை புனையும் ஆற்றல் இயற்கையில் அவர்பால் இருந்தது. அங்கே தகுதிவாய்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் அவர். ஆங்கிலத்தை மேலும் விருத்தி செய்து புருஷ இலட்சணமான உத்தியோகமொன்றைப் பெற்றுக்கொள்ள விரும்பாமல், தமிழ் படிப்பதற்கென்று அவர் அங்கிருந்து இங்கு வந்தது எங்களுக்குப் பெரிய ஆச்சரியமாயிருந்தது: அவர்தாம் ஏ. பெரியதம்பிப்பிள்ளை; புலவர்மணி' என்பதே பண்டிதமணி யவர்களின் கூற்றாகும்.

காவிய பாடசாலையில் அறிஞர்களுக்கு அறிஞராக விளங்கிய குமாரசுவாமிப் புலவர் அவர்களே முதன்மை ஆசிரியராக விளங்கினார்கள்.

இப் பெரியாரின் நிழலில், அடிச்சுவட்டில் வளர்ந்து உயர்ந்தவர்கள் இரு மணிகளும். கிரேக்க தத்துவஞானி சோக்கிரதீசர் அவர்களது உள்ளமும், அவரது மாணாக்கரான சிந்தனையாளர் பிளேட்டோ அவர்களின் உள்ளமும் ஒன்றித்ததின் மூலமே, அவர்களது இணக்கத்தின் மூலமே தத்துவ ஆசிரி யர்களது பரம்பரை உலகில் உருவாகிற்று.

அதேபோன்று, குமாரசுவாமிப் பெரியாரின் உள்ளமும் கண பதிப்பிள்ளை, பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் ஒன்றிணைந்த உள்ளங்களும் ஒன்றித்தன.

புலவரவர்களின் உருவாக்கங்களான இருவரும் தங்களது பேராசானுக்குச் சூட்டும் புகழ்மாலையிலும், அஞ்சலியிலுமிருந்து

நாம் இதனை அவதானிக்கலாம்.

அவர் இறைவனடி எய்தியதும், பண்டித மணியவர்கள், மனம் குழைந்து, ஆக்கிய கவிதை இதுவாகும்;

"செந்தமிழும் ஆரியமுந் தேர்ந்து வீறித்
தேயமெலாம் சென்றிலங்கும் சீர்த்தி ஒன்றே
இந்தநில மிசையிருப்ப இணையி லாத
எண்ணில்பல கவிதழைத்த இனியவாயும்
அந்தமிலாக் கலைகள்பல எழுதி வைத்த
அம்பயநேர் திருக்கரமும் அந்தோ! அந்தோ!
இந்தனத்திற் செந்தழலில் உருகி வீய
யாமிதனைப் பார்த்திருத்தல் என்னே! என்னே!

புலவர்மணி அவர்கள்,

"வண்மைத் தமிழ்க்கு வரம்பு வடமொழியின்
உண்மைத் தெளிவுக்குரையாணி– கண்மணியென்
சுன்னைக் குமார சுவாமிப் புலவனடி
சென்னிக்கியான்செய் சிறப்பு."

இரு மாணவர்களுக்கும் தமது குருவினோடு இருந்த உறவினையிட்டு, புலவர் அவர்களின் மகன், க. அம்பலவாண பிள்ளையவர்கள்,

'இங்கும் அநேக மாணவர்கள், யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும், வெளியூர்களிலுமிருந்து வந்து கல்வி பயின்றனர்... அவருட் சிலர் இருபாலை மு. வேதாரணிய தேசிகர், உடுவில் வ.மு. இரத்தினேசுவர ஐயர், மட்டுவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, மட்டக்களப்பு ஏ.பெரியதம்பிப்பிள்ளை என்போர். இவர்களில் ஈற்றில் காட்டப்பட்ட இருவரும் மேற்படி வித்தியாசாலையிலன்றி தந்தையார் வாதநோயாற் பீடிக்கப்பட்ட காலத்து இல்லத்திலும் வந்து தொடர்ச்சியாகக் கற்றவர்கள்.

தகப்பனாரின் அன்புக்கும் உரியவராக விருந்தவர்கள்.' என்று கூறியதிலிருந்து தெளிவாக விளங்குகின்றது.

1951ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில், தமிழ்விழா சிறப்பாக எடுக்கப்பட்டது. இவ் விழாவினை யொட்டி எழுதப்பட்ட தினகரன் பத்திரிகையின் உள்ளக்கிடக்கையில், பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்கள் பண்டிதமணி எனக் குறிப்பிடப்பட்டார்கள். இதற்கு அநுசரணையாக, கல்கி திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பண்டிதமணியைப் பலவாறு புகழ்ந்து எழுதினார்கள். பண்டித மணி எனும் பெயர் பாரதத் தமிழகத்தாலும், ஈழத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது.

மட்டக்களப்புத் தமிழ்க்கலை மன்றம் பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் கவிதா சக்தியையும், கற்பனை வளத்தையும் போற்றும் பொருட்டு 1951ஆம் ஆண்டிலேயே புலவர்மணி எனும் பட்டத்தினை வழங்கி அவரைக் கௌரவித்தது.

1978ஆம் ஆண்டு மே மாதம் 31ம் நாள் மரபுவழித் தமிழ்க் கல்வி அறிஞனான பிரபல்யம் வாய்ந்த பண்டிதமணி கணபதிப் பிள்ளை அவர்களுக்கு இலங்கைப் பல்கலைக்கழகத்தால் இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

இதனைப் பாராட்டுமுகமாகப் புலவர்மணி, பண்டிதமணி அவர்களுக்குப் பாராட்டும் நல்வாழ்த்தும் அனுப்பியிருந்தார்கள். அது முழுமையாகத் தரப்பட வேண்டியது.

'இலக்கிய கலாநிதி பண்டிதமணியும், நானும் ஒரே மரத்தின் இரண்டு கிளையில் ஒருமிக்கப்பழுத்த இரண்டு பழங்கள்.

அவர் சற்றே இளையவர். அக்கிரபூசை பெறுவதற்கு உரியவர்.

என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ.

பண்டிதமணிக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தமையால் இலங்கைப் பல்கலைக்கழகம் தன்னையே

கௌரவித்துக்கொண்டது.

பல்கலைக்கழகத்துக்கு எனது மனம் நிறைந்த பாராட்டு உரியதாகும். பாராட்டுவிழா இனிது நிறைவுறுக.

கலாநிதிப்பட்டம் பண்டிதமணியை அடைந்ததால் அது தனக்கே ஒரு மதிப்பைப் பெற்றுள்ளது.

இனிப்பண்டிதமணி எனும் காரணப்பெயர், அன்பனுக்கு இயற்பெராக, கலாநிதி பண்டிதமணி என வழங்குவோம்.

பண்டிதமணியின் திருவருளால் நீதி வாழ்க. தனது உடைமையையும், தம்மையும் திருவருளுக்கே அர்ப்பணம் செய்து வாழ்க' என வாழ்த்தினார்கள்.

அன்பும், உயர்ந்த மதிப்பும், கேண்மையும் கொண்ட பாராட்டு, நல்வாழ்த்துரையாக இது விளங்குகின்றது.

சமரச, சமத்துவ, சன்மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்ட பகவத்கீதையானது புலவர்மணியினது உள்ளத்தைக் கொள்ளைகொண்ட நூலாகும். கீதையின் சுலோகங்களை ஒவ்வொரு வெண்பாவாகப் பாட வேண்டுமென்னும் எண்ணம் உண்டாயிற்று. அவர் பகவத்கீதையை வெண்பாவாகப் பாடுவதற்கு முதல் நூலாகப் பாரதியாரின் பகவத்கீதையையே கைக்கொண்டார். இவ்வெண்பாக்கள் வீரகேசரியில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்பட்டன.

புலவர்மணியினது பகவத்கீதை வெண்பாக்கள், யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் இருபத்தெட்டாம் ஆண்டு விழாவிலே அரங்கேற்றப்பட்டது. அப்போது பண்டிதமணி அவர்கள்,

கீதை கவிசெய்து கீர்த்தி மிகப்பெற்றான்
ஏபெரிய தம்பி எனதன்பன் – ஓதக்கேள்
பாட்டுக் கொருபுலவன் பாரதியென்றார் ஒருவர்
பாட்டுக் கிவ்ன்எனப்பன் யான்.

எனப்பாடி, சாற்றுகவி அளித்தார்கள். இது 1952ஆம் ஆண்டில், இவ்விழாவில் பெரிய தம்பிப்பிள்ளை அவர்களுக்குப் பண்டிதமணி எனும் பட்டம் வழங்கப்பட்டது.

புலவர்மணி, பண்டிதமணிக்கு அளித்த பாராட்டுரையில் என் பின்னவன் என்ற சொல்லினை, தம்பி என்ற கருத்திலும், பண்டிதமணி பெற்ற கௌரவம் தனக்கும் உரியது என்றும், அவரைத் தனது அன்பன் என்று கூறுவதையும் காண்கின்றோம்.

பண்டிதமணி அவர்கள் புலவர்மணியினது கீதை வெண்பாவைத் தெளிவாகவும், சுருக்கமாகவும் ஆய்வு செய்தது ஒருபுறம். அதற்கு மேலாக அவரை எனதன்பன் எனக்கூறி, கவிதை ஆக்குவதில் பாரதியை விடவும் சமர்த்தன் எனும் கருத்தையும் முன்வைக்கின்றார்.

இரு அறிஞர்களினதும், வரலாற்றினை எடுத்துப் பார்க்கும் பொழுது இறைவன் நியதியால் இவர்கள் இரட்டையர்கள் ஆனார்கள் எனத் தோன்றுகின்றது.

1978ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழக, யாழ்ப்பாண நியமத் தலைவராக விளங்கிய பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்ளை, வேந்தருக்கு அறிமுகம் செய்யும் பொழுது, 'இந்த நாட்டிலே தமிழர் சமயத்தினையும், பண்பாட்டினையும் பாதுகாக்க அரும்பாடுபட்ட ஆறுமுகநாவலர் தனக்கென ஒரு மரபினையும், அம்மரபினைப் பேணும் நல் அறிஞர் வரிசையினையும் உருவாக்கி விட்டார். அந்த வரிசையில் உருவந்தவர் அறிஞர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆவர். யாழ்ப்பாணக் கலாசாரத் தூதுவ ராகவும், கல்வியின் தூதுவராகவும் விளங்கும் பண்டிதமணி அவர்கள் ஆறுமுகநாவலர் எவ்வாறு தனக்கென ஒரு அறிஞர் குழாம் வரிசையை உண்டாக்கினாரோ, அதேபோல, இன்று இந்நாட்டில் பண்டிதமணி, அறிஞர் குழாம் ஒன்றை உருவாக்கியுள்ளார்' என்று அறிமுகம் செய்து வைத்தார்கள்.

1980ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளைக்கு 'இலக்கிய வித்தகர்' என்னும் விருதை வழங்கிக் கௌரவித்தது. இந்து நாகரீகத்துறைத் தலைவர், பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தரவர்களுக்கு அவரை அறிமுகஞ் செய்து வைத்த பொழுது,

'ஈழநாட்டின் கிழக்குப் பகுதியில் வளமிக்க மட்டக்களப்பு என்னும் பெயருடன் இணைந்து அடிக்கடி பேசப்படும் சிறப்பு வாய்ந்தது பெரியதம்பிப்பிள்ளை என்னும் பெயர். இவர் ஈழநாடு பெற்றெடுத்த தமிழர்களுள் ஒருவர்; தமக்கென உரித்தான மரபையுடையவர். .............................. மட்டக்களப்பில் மட்டுமன்றித் தமிழ்ப்பேசும் ஈழம் முழுவதிலும் இவர்பெயர் பரவி இருப்பது அனைவரும் அறிந்ததே. ..........

இலக்கியப் புலமையும், இலக்கிய இரசனையும் இவற்றின் சிறப்புக்கு அடிப்படையாக வேண்டப்படும் தமிழ்ப்பற்று, சமயப்பற்று ஆகியன ஓங்கப் பெற்று, இலக்கியத்துறையில் அரியதொரு பாரம்பரியத்தைப் பேணிப் புலவர்மணியாகத் திகழ்ந்து நிற்கும் ஏகாம்பரபிள்ளை பெரியதம்பிப்பிள்ளை' என அறிமுகம் செய்து வைத்தார்கள்.

பண்டிதமணி அவர்கள் நாவலர் பெருமான் வழிநின்று, சைவசமய மறுமலர்ச்சியில் ஊன்றித் திளைத்து, சிறந்த சாஸ்திரங்களில் மெய்யுணர்வும் பெருங்காப்பியங்களின் தெளிவும் கொண்டு விளங்குபவர்; உரைநடை வித்தகர்.

புலவர்மணி அவர்கள், குமாரசுவாமிப் புலவரால் ஆட்கொள்ளப்பட்டுப் பின்னர் விபுலாநந்த அடிகளின் அநுசரணையில், இராமகிருஷ்ண சங்கத் தத்துவத்தை ஏற்று சமய சமரச வழி நின்று 'பக்திச்' சுவையும் சமத்துவ உணர்வும், சமபல நிறைவும், கற்போர் உள்ளத்தைக் கவரும் வண்ணமும், உணர்ச்சியோட்டமானது உயிர்த்துடிப்போடிருக்கத்தக்கதாயும் கவிதை இயற்றும் ஆற்றல் கொண்டவர்; இலக்கியவித்தகர்.

இருவரும் உரைநடையிலும், கவிதை ஆக்கத்திலும் சளைத்தவர்கள் அல்லர்.

திருநெல்வேலி சைவ ஆசிரிய கல்லூரியில் வாழ்க்கை முழுவதும் தொண்டு செய்தவர் ஆசான் பண்டிதமணியவர்கள். இடைநிலைக் கல்லூரிகளிலும், உயர்நிலைக் கல்லூரிகளிலும், மட்டக்களப்பு அர்ச். அகஸ்தீன் கல்லூரியிலும் பணியாற்றியவர் புலவர்மணியவர்கள்.

பண்டிதமணி இலங்கை வளத்தில் வளம் கண்டவர். புலவர்மணி இலங்கைமணித் திருநாடு கண்டவர்.

யாழ்ப்பாண இளைஞர் வாலிப சங்கத்திலும், இலங்கை சமசமாசக் கட்சியிலும் ஊற்றெடுத்த பண்டிதமணியின் அரசியல் நோக்கு அரசியல் ஆன்மீகமாக வடிவெடுத்தது. சமதர்ம சமய சமரசத்தில் உற்றெடுத்த புலவர்மணியின் அரசியல் நோக்கு ஐக்கிய இலங்கை நோக்காக உருவெடுத்தது.

சிந்னையாளர், தர்க்கவியலாளர், இளைஞர் உள்ளத்தைப் பக்குவப்படுத்தும் பணி ஆகியவற்றின் சின்னமான சோக்கிரதீசர் வழி நின்று செயற்பட்டவர் பண்டிதமணி.

ஆங்கிலக்கவிவாணர் உவில்லியம் வேர்ட்ஸ்வோது வழி நின்று, தனது' சமயத்தை அடிப்படையாகக் கொண்டு கவிதை மூலம் வேதாந்த நெறி பரப்பியவர் புலவர்மணி.

தர்க்கத்தில் எழுந்த உணர்ச்சி பண்டிதமணியினது; உணர்ச்சியில் எழுந்த தர்க்கம் புலவர்மணியினது.

வடக்குக் கிழக்கு ஆக இலங்கை மக்கள் அல்லலுற்றுத் துன்பக்கேணியில் வாழ்கின்றபொழுது இவர்கள் நமக்கு விட்டுச் சென்ற ஆத்மீக ஒற்றுமை வழிகாட்டட்டும்.

நன்றி: பண்டிதமணி நினைவுமலர்

# நிறைமொழி மாந்தர் வரிசையில் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை சமயத்தையும் தேசியத்தையும் ஏற்றிப் போற்றிய கவியரசர்

– கி. லக்ஷ்மண ஐயர் முன்னாள் வித்தியாதிபதி –

புலவர் மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை 02-11-1978இல் அமரரானார். அன்னாரின் நினைவுதினம் இவ்வாரம் நாட்டின் பல இடங்களிலும் கொண்டாடப்படுகிறது. இந்த சமயத்தில் அவருடைய சிறப்பியல்புகளை நினைவுகூர்தல் பொருத்தமுடையதாகும்.

– சிந்தாமணி 15.1.1981

**வெண்பாவிற் புகழேந்தி' என்ற கூற்றை யாவரும் அறிவர். வெண்பா பாடுவதிற் புகழ்பெற்றவர் புகழேந்தி என்ற புலவர். அந்தக் கூற்றையே மாற்றி 'வெண்பாவிற் பெரியதம்பி' என வழங்கும்படி செய்த பெருமைக்குரியவர் புலவர்மணி. இங்ஙனம் செய்ததன் மூலம் அவர் நம் நாட்டுக்கே பெருமை தேடித் தந்துள்ளார்.**

**புலவர்மணியின் கவித் திறனைப் பாராட்ட விரும்பிய பண்டிதமணி கணபதிப்பிள்ளை,**

"பாட்டுக்கொரு புலவன் பாரதியென்றா ரொருவர்
பாட்டுக்கிவனென்பன் யான்"

**எனப் பாடி வியந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.**

**'புலவர்மணி கவிதைகள்' என்ற நூலுக்கு அணிந்துரை எழுதிய பண்டிதமணி ஒரு கவலையைத் தெரிவித்திருக்கின்றார்.**

'இப்புத்தகம் சில மாசங்களுக்கு முன் வெளிவந்திருக்கு மாயின், அதன் அருமை அறிந்து மதிக்க வேண்டியவர்கள் புலவர்மணிக்குப் பெருமதிப்பு நல்க வாய்ப்பாயமைந்திருக்கும். புலமையுலகு புலவர் மணியைக் கவியரசு என்று முடிசூடிக் கொண்டாடியிருக்கும்' என்பதே அவர் தெரிவித்துள்ள கவலை.

### இரண்டு சீரிய பண்புகள்

வெண்பாவிற் பெரியதம்பி, பாட்டுக்கு இவன் கவியரசு என இன்னும் பலவாறு பாராட்டப்பட்ட புலவர்மணியிடம் இரண்டு சீரிய பண்புகள் மிகத் துலக்கமாகக் காணப்பட்டன.

ஒன்று இனிமை; மற்றது எளிமை.

அவரோடு பழகும் வாய்ப்பைப் பெற்றவர்கள் இந்த இரு பண்புகளும் அவரில் நிறைந்திருந்தமையை நன்கு உணர்ந்திருப்பர்.

புலவர்மணி ஆற்றிய தமிழ்ப்பணிகள் அனைத்தையும் இரண்டு துறையினவாகப் பிரிக்கலாம்.

ஒன்று சமயம், மற்றது தேசியம். அவற்றை இன்னொரு வகையிலும் இரண்டாகப் பிரிக்கலாம்.

ஒன்று கவிதை; மற்றது உரைநடை.

கவிதைக்குப் 'பகவத் கீதைவெண்பா' 'புலவர்மணி கவிதைகள்' ஆகியவற்றையும் உரைநடைக்குச் சிந்தாமணியில் 'உள்ளதும் நல்லதும்' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரைகளையும் சான்றுகளாகக் கொள்ளலாம்.

### பகவத்கீதை வெண்பா

சமயமும் கவிதையும் இணைந்ததன் விளைவாக ஏற்பட்டதே புலவர்மணி இயற்றிய பகவத் கீதை வெண்பா எனப்படும் அரிய நூல். அவர் இயற்றியவற்றுள் மிகமுக்கியமானதும் இதுவேயாகும். இது மூன்று பாகங்களாக வெளிவந்தது. இலங்கை அரசின் பரிசைப் பெற்றது; 'வெண்பாவிற் பெரியதம்பி' என்ற புகழையும் கொணர்ந்தது.

பகவத்கீதை இந்திய தத்துவஞானம் அனைத்துக்கும் மூலாதாரமாகக் கொள்ளப்படுவது.

இந்திய தத்துவ ஞானமனைத்துக்கும் அடிப்படையாக மூன்று நூல்களைக் கொள்வது வழக்கம். இவை மூன்றையும் சேர்த்துப் 'பிரஸ்தானத் திரயம்' என வழங்குவது மரபு. இந்த மூன்றினுள் ஒன்றாகும் பெருமையையுடையது பகவத் கீதை. உபநிடதமும், பிரம்மசூத்திரமுமே ஏனைய இரண்டுமாகும்.

உபநிடதம் பிரம்மசூத்திரம் ஆகிய இரண்டும் தாம் பேசும் பரம் பொருளாகிய பிரம்மத்தை ஒரு தத்துவ ஆராய்ச்சிக்கு மட்டுமேயுரிய பொருளாகக் கொள்ள, கீதை மட்டுமே அதனைப் பக்திக்கும் வழிபாட்டுக்குமுரிய பொருளாக்கி அதன் மூலம் தத்துவ ஞானத்தையும், சமய வாழ்வையும் இணைத்த தனிப்பெருஞ் சிறப்பையுடையது.

கொழும்பில் புதிய எழுச்சி

கந்த புராணத்தைப் படித்துப் பயன் சொல்வதும், மக்கள் பெருங்கூட்டமாகக் கூடியிருந்து கேட்பதும் ஒரு காலத்திலே யாழ்ப்பாணத்தில் பெரு வழக்காயிருந்தது. காலத்தின் போக்குக் காரணமாக அது அருகிவிட்டது.

இன்று கொழும்புவாழ் இந்துக்களிடையே புது எழுச்சி யொன்று வளர்ந்து வருவது காணப்படுகின்றது.

பகவத் கீதையை முறையாகப் படித்து வியாக்கியானம் செய்யும் கூட்டங்கள் வருடா வருடம் அதிகரித்து வருவதே இந்தப் புதிய எழுச்சியாகும்.

கிறிஸ்தவர்களுக்குப் பரிசுத்த பைபிள் போலவும், இஸ்லா மியருக்குத் திருக்குர் ஆன் போலவும் இந்துக்களுக்கு அமையத் தக்கது யாதென வினவின் பகவத் கீதையே என இந்து அறிஞர் பலர் கூறுவர்.

இத்தகைய சிறப்புகள் பல பொருந்திய பகவத் கீதையிலே

இடம்பெற்றுள்ள யோகம், பக்தியோகம் எனப்படும்.

கரும பந்தமே நமது துன்பமனைத்துக்கும் காரணமாகும். கர்ம பந்தத்தைத் தவிர்க்கும் வழியே கர்மயோகமாகும்.

ஆன்மா பொய்ச் சார்பாகிய பாசத்தை விடுத்து, இறைவனே தனக்கு உறுதுணையான மெய்ச்சார்பென்று அறிதலே ஞானயோகமாகும்.

மெய்ச் சார்பாகிய இறைவனை இடையறாது பற்றுதல் பக்தியோகம் எனப்படும்.

புலவர்மணி மூன்று யோகங்களையும் மூன்று பாகங்களாகப் பாடியுள்ளார்.

வெண்பாக்களுக்குப் பொழிப்புரைகளையும், தேவையான விளக்கங்களையும், பொருத்தமான மேற்கோள்களையும் புலவர்மணி தாமே கொடுத்திருப்பது இந்த நூல்களின் பயனைப் பன்மடங்காக்குகின்றது. எத்தனை வெண்பாக்கள் வேண்டுமாயினும் அத்தனை வெண்பாக்களையும் அநாயாசமாக இயற்றக் கூடிய புலவர்மணியின் அசாதாரண ஆற்றலை அவர் இயற்றிய வெண்பாக்கள் மூலம் காண்கின்றோம்.

ஆன்மாவின் தன்மைகள்.

வெண்பாக்களைப் புலவர்மணி அநாயாசமாக இயற்றும் ஆற்றலும், அவற்றில் இயல்பாகவே அமையும் ஓட்டம், எளிமை, இனிமை ஆகியவற்றுக்கும் உதாரணமாக இங்கு இரண்டு வெண்பாக்களைத் தருகின்றோம்.

பகவத்கீதையில் கண்ணன் ஆன்மாவின் தன்மைகளை வருணித்தமை பிரசித்தமானது. அவற்றையே புலவர்மணி இங்கு தம் வெண்பா மூலம் கூறுகின்றார்.

ஆயுதங்கள் போழ்தலிலை அங்கி சுடுதலிலை
தோயம் நனைத்தலிலை தொல்லுரை ஆயுங்கால்
வாயு வுலர்த்தலிலை மைந்த சடப் பொருள்கட்
காய வன்மைக் கெல்லையுள தால்.

ஆயுதத்தால் அக்கினியால் அப்புவால் வாயுவினால்
ஏயும் விகாரமுணா திவ்வுயிர்தான் - நேயகேள்
என்றுமுள தெங்குமுள தென்று நிலைபெற்றழித
லின்றியசை வற்றபொரு ளீது

அவ்வெண்பாக்கள், அவற்றுக்குரிய பொழிப்புரைகள், விளக்கங்கள், மேற்கோள்கள் ஆகியவற்றின் மூலம் துவைதம், அத்துவைதம், விசிட்டாத்துவைதம் போன்ற தத்துவத் துறைகளிலும், ஏனைய சமய சாஸ்திரங்களிலும் புலவர் மணிக்குள்ள பரந்த ஞானமும், இவையனைத்துக்கும் மேலாக அவரிடத்து இயல்பாகவே அமைந்திருந்த ஒருவகை உள்ளுணர்வும் புலனாகின்றன.

பகவத்கீதை வெண்பாக்கள் பற்றி எழுந்த கருத்துகள் சிலவற்றை இதுவரை குறிப்பிட்டோம். இனி, அவருடைய ஏனைய கவிதைகளின் சிறப்புகள் சிலவற்றை நோக்குவோம்.

எல்லாம் நல்ல கவிதைகளே

புலவர்மணியுடைய எல்லாக் கவிதைகளுமே ஓட்டம், எளிமை, இனிமை, உயர்ந்த கருத்து ஆகிய சிறப்புகள், பலவும் பொருந்தியிருப்பதால், உதாரணமாக எதை எடுக்கலாம் என்பதில் இடர்ப்பட வேண்டியிருக்கிறது. எதைப் பார்த்தாலும் 'இதை உதாரணமாகக் காட்டலாமே' என்று தோன்றுகின்றது. 'இலங்கை முழுவதற்கும் உணவளிப்போம்' என்ற தலைப்பில்:

"நாமினிப்பஞ்சமொரு நாளுமஞ்சோம்
நாழி யரிசிக்குப் போய்ப் பிறரைக் கெஞ்சோம்

என்று தொடங்கிய புலவர்மணி,

"தேசிய ஒற்றுமையாம் பயிர்வளர்ப்போம்
தீய வகுப்புவாதக் களை பறிப்போம்"

என முடிக்கின்றார்.

மட்டக்களப்பு மகனான புலவர்மணி 'யாழ்ப்பாண நன்னாடு'

என்ற தமது கவிதையில் யாழ்ப்பாணத்தை ஆறுமுகநாவலர் வாழுமிடமெனக் குறிப்பிட்டு நாவலருக்குக் கொடுத்துள்ள அடைமொழிகள் குறிப்பிடத்தக்கன.

"பரமனடித் தொண்டுபுரிந் தேத்துதிரு வருளார்
மலையெனநின் றுயர்ந் தோங்கு நன்மன முடையார்
மானமழிந் தெய்தவரு வருமான மடையார்"

நாவலர் அவர்களைப் பற்றிப் புலவர்மணியின் மதிப்பீட்டுக்கு இது ஓர் உதாரணம்.

நாட்டுப்பற்று, இனங்கள், மொழிகள், மதங்கள் ஆகிய வற்றுக்கிடையே பரஸ்பர மதிப்பு, இன ஐக்கியம் ஆகிய இலட்சி யங்களே புலவர்மணியின் பாடல்கள் பலவற்றிலும் இழை யோடுவதைக் காணலாம்.

இலங்கை மணித் திருநாடு

தமிழ் நாட்டையும் தமிழ்மொழியையும் சிறப்பித்துப் பாடிய பாரதி, 'மன்னு மிமயமலை எங்கள் மலையே' என்றும் 'செப்பு மொழி பதினெட்டுடையாள் எனிற்சிந்தனை ஒன்றுடையாள்' என்றும் பாடிப் பாரத தேசம் முழுவதும் ஒன்று என வற்புறுத்துவதையும் பாரத தேசம் முழுவதற்கும் சொந்தம் கொண்டாடுவதையும் காண்கின்றோம்.

புலவர்மணியும் தான் பிறந்த இடமாகிய மட்டக்களப்பைப் பற்றிப் பாடியுள்ளார். தான் இயற்றிய பகவத்கீதை வெண்பாவில் இரண்டாம் பாகத்தைத் தன்னைப்பெற்று வளர்த்து ஆளாக்கிய மட்டக்களப்பன்னைக்கே சமர்ப்பணம் செய்துள்ளார்.
ஆயினும்,

"இலங்கை மணித்திருநாடெங்கள் நாடே – இந்த
இனிய உணர்ச்சி பெற்றால் இன்ப வீடே
மாவலி கங்கை எங்கள் வளநதியே – அருள்
மன்னு சிவனொளிபாதம் எங்கள் மலையே"

எனத் தொடங்கி 'இலங்கை மணித்திருநாடு' என்ற

தலைப்பில் அவர் பாடிய பாடல்களே அவரைப் பிரபலப் படுத்தியவை. இங்கேதான் பெரும் புலவர்களின் பரந்த உள்ளம் புலனாகின்றது.

புலவர்மணியின் ஆத்ம பலம்

புல்வர்மணிக்கு ஓர் ஆத்மபலம் இருந்தது. அவர்களுடைய வாக்குக்கு ஓர் அபூர்வ சக்தி இருந்தது. இவற்றுக்கு 'மீட்சிப் பத்து' ஓர் உதாரணம்.

சுவாமி விபுலானந்தரைப் புலவர்மணி தமது குருவாக மதித்து வந்தவர். 1944இல் சுவாமி விபலானந்தர் கடுமையான சன்னி நோயினால் பீடிக்கப்பட்டு உயிர் பிழைப்பது அரிது என்ற நிலை ஏற்பட்டது. சுவாமிகள் காலனோடு போராடிக் கொண்டிருப்பதைக் கேள்வியுற்ற புலவர்மணி எப்படியாவது அவர் உயிர் பிழைத்து வழக்கம் போல மீண்டும் நடமாட வேண்டுமென மனந்துடித்தார்.

விபுலானந்த அடிகள் உயிர்மீள வேண்டுமென்ற தனது துடிப்பை விபுலானந்தர் மீட்சிப் பத்து என்ற தலைப்பில் மிக உருக்கமான பத்துப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தி அப் பாடல்கள் பத்தையும் ஒரு குயில் மூலம் தெரிவிப்பது போலப் பாவனை பண்ணி அவற்றைச் சுவாமி விபுலானந்தர் நோயுற்றிருந்த இடத்துக்கு அனுப்பிய போது சுவாமியவர்கள் குணமடையத் தொடங்கியதைப் பலரும் அறிவர். தமிழ்க் கவிதை உலகில் இந்த 'மீட்சிப்பத்து' மிக அற்புதமானது.

புலவர்மணி எண்பது ஆண்டுவரை வாழ்ந்த ஆரோக்கியமான வாழ்வு, அவருடைய சிந்தனைகள் சென்ற திசை, சொற்கள் பலித்த விதம், கடைசியில் நோய்நொடி எதுவுமின்றி மிகச் சுகமாக அவர் மறைந்த முறை ஆகிய அனைத்தையும் கூர்ந்து நோக்கும்போது அவர் திருக்குறளில் வள்ளுவர் கூறும் 'நிறைமொழி மாந்தர்' வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் என்ற எண்ணமே ஏற்படுகின்றது.

# புலவர்மணியின் எண்ணங்கள் என்றென்றும் வாழும்

– திரு. எஸ். டி. சிவநாயகம் –

**சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு நாள்:**

மட்டக்களப்பு ஆனைப்பந்தி மகளிர் கல்லூரி மண்டபத்துள் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. பிரதான மண்டபத்துக்கு வெளியேயுள்ள நடைபாதைத் திண்ணையிலும் ரஸிகர்கள் முண்டியடித்துக் கொண்டு நின்றார்கள்.

உள்ளே அழகான, ஆழமான, கம்பராமாயணப் பிரசங்கம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒலிபெருக்கி அதிகம் வழக்கத்துக்கு வராத காலம் அது. ஒலிபெருக்கி இல்லாமலே பேச்சாளரின் குரல் கணீரென்று ஒலித்துத் தெருவில் செல்வோரையும் உள்ளே ஈர்த்துக்கொண்டிருந்தது.

தசரத இராமன் மிதிலை மாநகரின் வீதியிலே உலா வருகின்றான். அவனுடைய திருக்கோலத்தின் அழகையும், ஆண்மையையும், எழிலையும், எடுப்பையும் அரம்பையர் அன்ன அழகுடைய மகளிர் கண்டு களிக்கிறார்கள். அதிலும் ஒரு வேடிக்கை.

இராமனின் தோளைப் பார்த்தவர்கள் தோளையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவனுடைய தாமரைப் பாதத்தைப் பார்த்தவர்கள் பாதத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட நெடிய கைகளைப் பார்த்தவர்கள் அவற்றையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு உறுப்பைப் பார்த்தவர்கள் அந்த உறுப்பின் லாவண்யத்தில் மயங்கி அங்கிருந்து பார்வையை மீட்க முடியாதவர்களாக தொடர்ந்தும் அந்த உறுப்பையே பார்த்து ரஸித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இறைவனுடைய முழு வடிவத்தையும் காண முடியாமல் பல்வேறு சமயவாதிகளும் தத்தம் சமயமே மேலானது; சிறந்தது என்று எண்ணிக்கொண்டு அதில் லயித்து, வாதிட்டு, போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? அது போன்ற ஒரு வேடிக்கை நிலையில்தான் மிதிலை மகளிர் மயங்கிக் கிடக்கின்றார்கள்.

தோள் கண்டார் தோளே கண்டார்
    தொடுகழல் கமலம் அன்ன
தாள் கண்டார் தாளே கண்டார்
    தடக்கை கண் டாரு மஃதே
வாள் கொண்ட கண்ணார் யாரே
    வடிவினை முடியக் கண்டார்?
ஊழ் கொண்ட சமயத் தன்னான்
    பகைகண் உணர ஒத்தார்.

என்று கம்பன் வர்ணிக்கும் இந்த அருமையான கட்டத்தை உள்ளே பேசிக்கொண்டிருக்கிற பேச்சாளர் அலங்காரமான வார்த்தை ஜாலங்களுடன், ஈடிணையற்ற இலக்கிய நயத்துடன் எடுத்தியம்பிக் கொண்டிருந்தார்.

அங்கு கூடி நின்ற மக்களும் இராமனைக் கண்ட மிதிலைப் பெண்கள் போல பேச்சாளரின் உதட்டசைவையும், முக பாவத்தையும், அங்க லட்சணங்களையும் வைத்தகண் வைத்தபடி, திறந்த வாய் திறந்தபடி பார்த்துக் கொண்டும், அவர் வாசாலகத்தைக் கேட்டுக் கொண்டும் மெய் மறந்து நின்றார்கள்.

## பண்டிதர்தான்

பின்னால் நின்ற நான் முன்னால் நின்ற ஒருவரைத் தட்டி 'யார் பேசுகிறார்?' என்று கேட்டேன். அவர் ஒரு கணம் என் பக்கம் திரும்பி 'பண்டிதர்' என்று மட்டும் சொல்லிவிட்டு, மீண்டும் பேச்சைத் தொடர்ந்து கேட்க ஆரம்பித்தார்.

'பண்டிதரா?' எனக்கு விஷயம் புரியவில்லை.

இன்னொருவரைத் தோளில் மெதுவாகச் சுரண்டி, மிகத் தாழ்வான குரலில், 'ஐயா, அங்கே பேசிக்கொண்டிருப்பவர் யார்?' என்று வினவினேன். அவரும் பேசுபவருடைய பெயரைக் குறிப்பிடவில்லை. "பண்டிதர்தான் பேசுகிறார்" என்றார். இப்படிக் கூறிவிட்டு பழையபடி பேச்சைக் கேட்க ஆரம்பித்து விட்டார்.

இது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. 'பண்டிதர்' என்ற அந்த ஒற்றைச் சொல்லால் குறிப்பிடப்படும் அந்த இனிய பேச்சாளர் யார்?

## ஒரு பட்டம்

யாழ்ப்பாணத்திலே "நாவலர்" என்றால் அது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைக் குறிப்பதுபோல, மதுரையிலே "நாவலர்" என்றால் அது பசுமலை நாவலர் சோமசுந்தர பாரதியாரைக் குறிப்பது போல,சுமார் முப்பத்தைந்து நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் 'பண்டிதர்' என்றால் அது பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளையையே தனியாகச் சுட்டிக் குறிக்கும் ஒரு பதமாக, ஒரு பட்டமாக, அமைந் திருந்தது.

திரு. பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு முன்பே, மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதர் பரீட்சையில் முதன்மையாகத் தேறிப் பண்டிதர்ப்பட்டம் பெற்றவர், பின்னால் சுவாமி விபுலானந்தர் என்று போற்றப்பட்ட, பண்டிதர் மயில்வாகனனார் ஆவார். எனினும் அவரை மக்கள் பண்டிதர் மயில்வாகனனார் என்று கூறினார்களே தவிரப் பெயர் சேர்க்காமல் தனியாகப் பண்டிதர் என்று அழைத்ததில்லை. திரு. பெரியதம்பிப்பிள்ளை அவர்களை மட்டுமே பெயர் சேர்க்காமல் வெறுமனே 'பண்டிதர்' என்று அன்போடு அழைத்து வந்தார்கள்.

## மாணவர்

மட்டக்களப்பு மண்டூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் ஆரம்பக் கல்வியை மண்டூரிலும், ஆங்கிலக் கல்வியைக் கல்முனை லீஸ் உயர்தரப்பாடசாலையிலும் பெற்றார். ஆங்கிலக் கல்வி அவரைப் பெரிதும் கவரவில்லை. தமிழ்க்கல்வியைத் துறைதோயக் கற்க வேண்டும் என்ற வாஞ்சையும், நாட்டமுமே அவரை மேற்கொண்டன, அதனால் அவர் தமிழ் உயர்தரக்

கல்வியைப் பெற யாழ்ப்பாணம் சென்றார்.

அங்கு நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையைச் சேர்ந்த காவியப் பாடசாலையில் ஒரு மாணவராகச் சேர்ந்து கொண்டார். இந்தப்பாடசாலை ஆறுமுக நாவலரது பெரிய தந்தையாரின் மகனாகிய தமிழ்ப் பேரறிஞர் திரு. த. கயிலாய பிள்ளையின் நிர்வாகத்தில் நடந்தது. அந்தப் பாடசாலையில், மாணவன் பெரியதம்பிக்கு புகழ் பெற்ற சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் ஆசிரியரானார்.

திரு. பெரியதம்பிப்பிள்ளை தமது குரு ஸ்தானத்தில் வைத்து இரு பெரியார்களை ஏற்றிப் போற்றியிருக்கிறார். அவர்களில் ஒருவர் இந்த அ. குமாரசுவாமிப் புலவர். மற்றவர் அருட்திரு விபுலானந்த அடிகளார்.

**கண்மணி குருமணி**

குமாரசுவாமிப் புலவரைத் தன் 'கண்மணி' அதாவது இலக்கண இலக்கியப் பார்வையை அளித்த 'குருமணி' என்ற மதிப்பளித்து, அன்னாருடைய திருவடிகளைத் தன் தலைமீது சூட்டிக்கொள்கிறார் திரு. பெரியதம்பி. அவர் பாடிய –

**வண்மைத் தமிழ்க்கு வரம்பு, வடமொழியின்**
**உண்மைத் தெளிவுக் குரை யாணி – கண்மணியென்**
**சுன்னைக் குமார சுவாமிப் புலவனடி**
**சென்னிக்கு யான்செய் சிறப்பு**

என்ற வெண்பா தமது நல்லாசிரியரிடம் அவருக்கிருந்த ஈடுபாட்டையும், பக்தியையும், மதிப்பையும் புலப்படுத்துகின்றது.

பிற்காலத்தில், திரு. பெரியதம்பிப்பிள்ளை, மட்டக்களப்பிலே 'பண்டிதர்' என்ற சிறப்புப் பெயரோடு உலவி வந்த காலத்தில், அவரிடம் தமிழ் கற்ற மாணாக்கர் ஒருவர் அவரைப் புகழ்ந்து பாடினார். சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரிடம் ஒரு மாணக்கராக அமர்ந்து படிக்கக் கிடைத்தமை பெரும் பாக்கியம் என்று குறிப்பிட்டிருக்கிறார் இந்த மாணவர்.

ஆனாக் குமார சுவாமிப் புலவரிடம்
மாணாக்கன் ஆம்பாக்யம் பெற்றான் யார்? – தேனாக
எண்டிசையும் மட்டுநகர் ஏற்றும் பெரியதமிழ்ப்
பண்டிதனாம் என்றே பகர்.

இந்த அழகான வெண்பாவில் பண்டிதர் பெரிய தம்பிப்பிள்ளை அவர்களைத் தனது குருவாகக் கொண்ட மாணாக்கர் அவரை ஏற்றிப் பாடியிருக்கும் பாங்கு எண்ணி ரஸிக்கத்தக்கதாகும்.

## கல்கண்டு

'தேனாக எண்டிசையும் மட்டுநகர் ஏற்றும் பெரியதம்பிப் பண்டிதனாம்' என்ற கூற்றில், தேன் நாடு என வர்ணிக்கப்படும் மட்டக்களப்பிலேயே, பண்டிதர் பெரியதம்பி அந்தக் காலத்தில் எட்டுத்திக்குகளிலும் தேனாக ஏற்றிப்போற்றப்பட்டார் என்று விதந்து கூறப்படுகிறது.

இதற்குக் காரணம், அவர் ஆற்றிய சொற்பொழிவுகளின் சுவைதான். அவர் பேச்சு அனைவருக்கும் தேனாக இனித்தது. கம்ப ராமாயணம், பெரிய புராணம், மகாபாரதம், திருக்குறள், திருவாசகம், நளசரிதம் ஆகிய இலக்கியங்களையும் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை நூல்களையும் வைத்துப் பேசுவதில் பண்டிதர் பெரும் விற்பன்னராக விளங்கினார். அவருடைய பேச்சு வன்மையே அவருக்குப் 'பண்டிதர், என்ற பட்டத்தைத் தேடிக்கொடுத்தது.

மாணவர் காலத்திலேயே திரு.பெரியதம்பி அவர்களுக்கு கவிதை எழுதுவது கைவரப் பெற்ற கலையாக விளங்கியது. கவிதைக் கலையில் வல்லோன் என்று சுவாமி விபுலானந் தராலேயே பாராட்டப்படும் அளவுக்கு அவரிடம் கவிதையாற்றல் பொதிந்து கிடந்தது.

## மண்டூர்ப் பதிகம்

இளம் வயதிலேயே இவர் ஆக்கிய முதல் நூல் மண்டூர்ப்பதிகம் என்பதாகும். இது மண்டூரில் கோயில் கொண்டருளியிருக்கும் திருமுருகன்மீது பாடப்பட்ட ஒரு சிறந்த பதிகம்.

இந்தப் பதிகத்துக்கு சுவாமி விபுலானந்தர் அளித்த சிறப்புரைக் கவிதையில் 'கற்கண்டு போன்ற இனிய தமிழ் மொழியைப் பிரயோகிக்கும் பெரியதம்பிப்பிள்ளை ஒரு கவி வல்லோன்' என்று பாராட்டியிருக்கின்றார்.

சொற்பொழிவுப் பண்டிதராகவும், ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும் விளங்கிய திரு. பெரியதம்பி, பிற்காலத்தில் தலை சிறந்த ஒரு கவிஞனாக மலர்ந்து புலவர்மணியாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கப் போகின்றார் என்பதை பெரியதம்பிப்பிள்ளையெனும் கவிவல்லோன்' என்ற சொற்றொடரில் அன்றே பொதிந்து விட்டார் அருட் திரு. அடிகளார்.

**பாட்டு இதுதான்:-**

பண்டூரு முகிற்குலங்கள் எம திறைவர்
மருகர் திருப் பதியீ தென்ன
விண்டூர மழைபொழியுஞ் சிறப்பதனால்
வளம் மலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூரில் உறைமுருகன் மலரடிக் கோர்
திருப்பதிகம் மரபிற் சொற்றான்
கண்டூரு மினிய மொழிப் பெரிய தம்பிப்
பிள்ளையெனும் கவி வல்லோனே.

'கண்டூரு மினிய மொழிப் பெரிய தம்பிப் பிள்ளையெனும் கவி வல்லோனே' என்பதுவே விபுலானந்த அடிகளாரின் இந்த விருத்தப்பாவின் கடைசியடியாகும். இந்த அடி ஒரு தீர்க்கதரிசனம் கூறும் அடியாக அமைந்துவிட்டது.

## புலவர் மணி

பண்டிதர் என்ற சிறப்புப் பெயரோடு தமது நடுவயதுக்கும் மேலாக விளங்கி வந்த திரு. பெரியதம்பி, பின்னர் புலவர்மணி என்ற புகழுக்குரியவரானார். பிற்காலத்தில் பேச்சையும் மிஞ்சியதாக அவர் கவிதைச் சிறப்பு அமையலாயிற்று.

திரு. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் 3000க்கும் மேற்பட்ட தனிக் கவிதைகளை ஆக்கியிருக்கிறார். சிறு சிறு பிரபந்தங்களாகப் பல பிரபந்தங்களைப் படைத்திருக்கிறார். இலங்கைக்கு அமைந்த ஒரு சிறந்த தேசிய கீதம் என்று சொலும்படியான,

மகாவலி கங்கை எங்கள் வள நதியே – அருள்
மன்னு சிவனொளிபாத மெங்கள் மலையே
பூவலம் சேர் கதிரை எங்கள் தலமே – இதைப்
போற்றிப் புகழ்ந்தால் வரும் பெரு நலமே.

என்ற பாட்டு அவர் பாடிய தேசபக்திப் பாட்டாகும். பல கண்ணிகளைக் கொண்ட இப்பாடல் பல்லாயிரக்கணக்கில் அச்சிடப்பட்டுப் பாடசாலை மாணவர் அனைவரும் தவறாது படிக்கும் பாடலாக்கப்பட வேண்டும். இந்தப் பாட்டிலே கதிர்காமத்தை 'எங்கள் தலம்' என்று அவர் வாஞ்சையோடு உரிமை கொண்டாடுவதையும் அத்தலத்தைப் போற்றிப் புகழ்ந்தால் நமக்குப் பெருநலம் ஏற்படும் என்று கூறுவதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

## பகவத் கீதை

தனிப்பாடல்களிலும், பிரபந்தங்களிலும் தமது கவிதா சக்தியைப் பிரயோகித்து வந்த திரு. பெரியதம்பிப்பிள்ளை 1952ஆம் ஆண்டில் ஒரு பெரிய சாதனையை நிலைநாட்டினார். ஏழாண்டு காலமாக அவர் அக்கறையோடு யாத்து வந்த 'பகவத் கீதை வெண்பா' என்ற பெரும் நூலைப் பேரறிஞர் குழுவின் முன்னர் அரங்கேற்றினார். இந்த அரங்கேற்றம் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்ட அரங்கில் இடம் பெற்றது. இந்த அரங்கேற்றத்தின் மூலம் 'வெண்பாவிற் புகழேந்தி' என்றிருந்த பழம் வழக்கினை ஈழத்தைப் பொறுத்தவரை மாற்றியமைத்து 'வெண்பாவிற் பெரியதம்பி' என்று சொல்லும் அளவிற்குப் பெயரும் புகழும் பெற்றார் திரு. பெரியதம்பிப்பிள்ளை.

பகவத்கீதை வெண்பாவை யாத்தமைக்காக மட்டக்களப்பு தமிழ் இலக்கிய மன்றம் திரு. பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு ஒரு

வரவேற்பும் பாராட்டும் நடத்தியது. அந்தக் கூட்டத்திலேதான் பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளை புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளையானார்.

## கவிராஜகேசரி

பண்டிதர் பெரிய தம்பிப்பிள்ளையின் கவிதைச் சிறப்பை மிகவும் விதந்து பாராட்டிப் பேசிய கவிராஜ கேசரி பண்டிதர் ஆ. சபாபதி அவர்கள், பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு அந்தக் கூட்டத்தில் வைத்துப் 'புலவர்மணி' என்ற பட்டத்தைச் சூட்டினார். இந்தப்பட்டமே திரு. பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு கடைசி வரை நின்று ஒளி சேர்த்தது.

'என்வாழ்க்கையில் எனக்கு எத்தனையோ கௌரவப் பட்டங்கள் சூட்டப்பட்டிருக்கின்றன. எந்தப்பட்டத்தையும் நான் பெரிதாக மதிக்கவில்லை. கவிராஜ கேசரி சபாபதிப் பண்டிதர் சூட்டிய பட்டத்தையே நான் பெரிதாக மதித்து என் பெயரோடு சேர்த்துக் கொண்டிருக்கிறேன். காரணம், கவிராஜகேசரி கவிதையின் சிறப்பும், தரமும், எடையும், ஏற்றமும், உயிரும், உன்னதமும் அறிந்தவர். அவரே ஒரு பெரும் வரகவி' என்றும் புலவர்மணியே தம் வாய்விட்டுக் கூறியிருக்கிறார்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை பட்டை தீட்டப்பட்ட ஒரு வைரக்கல் போலப் பல துறைகளில் பிரகாசித்தவர் ஆவர். அவருடைய திறமைகளைப் பின்வருமாறு நிரைப்படுத்தலாம்.

1. **சிறந்த சமயப் பிரசங்கி**
2. **மாணவர் விரும்பும் நல்லாசிரியர்**
3. **ஆசிரியர்க்கு ஆசிரியரான விரிவுரையாளர்**
4. **மக்கள் போற்றும் இலக்கியச் சொற்பொழிவாளர்**
5. **சமய சமூக சீர்திருத்தவாதி**
6. **கவிஞர், புலவர், நாடகாசிரியர்**
7. **எழுத்தாளர்.**

## கிறிஸ்தவம்

சிறந்த சமயப்பிரசங்கி என்று சொல்லும் போது அவர் இந்து சமயப் பிரசங்கியாக மட்டும் அன்றி கிறிஸ்தவ சமயப் பிரசங்கியாகவும் சிறிது காலம் பணி புரிந்திருக்கிறார், என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்தில் கல்வி பயின்ற காலையில் அங்கு நிலவிய தீண்டாமை என்னும் தீய பழக்கம் இளைஞராயிருந்த திரு. பெரியதம்பியைப் பெரிதும் புண்படுத்தியது. அங்கு தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த பலர் இவருக்கு நண்பராக விருந்தார்கள்.

அவர்களில் பள்ளர் குலத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பார் ஒருவர். இந்த ஆறுமுகம் நல்ல ஒழுக்க சீலர். சைவ சமய ஞானமும், சமய ஈடுபாடும் உடையவர், அப்படிப்பட்ட ஆறுமுகம் கூட அங்குள்ள ஆலயங்களில் சென்று வழிபட முடியவில்லையே என்று மனம் வருந்தினார் திரு. பெரியதம்பி.

இந்த மனத் தாக்கம் அவரைக் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுமாறு தூண்டியது. ஆண்டவன் சந்நிதியில் ஏற்றத்தாழ்வு காட்டாத மதம் கிறிஸ்தவ மதம் என்று அவருக்கு ஏற்பட்ட நம்பிக்கையே அவரைக் கிறிஸ்தவர் ஆக்கியது.

## பசுமலையில்

சிறிது காலம் சிறந்த கிறிஸ்தவராக ஒழுகினார். யாழ்ப்பாணத்திலிருந்து மதுரை சென்று பசுமலை வேத சாத்திர உயர்தரக் கல்லூரியில் கிறிஸ்தவ மதத் தத்துவங்களைப் பயின்று சிறந்த சமயப் பிரசாரகரானார். உள்ளே கிறிஸ்தவ மத சம்பிரதாயங்களில் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்று போர்க் கொடி உயர்த்தினார்.

கிறிஸ்தவ மத கீதங்களை ஆங்கில மெட்டில் பாடி இனிய தமிழ்ப்பதங்களைச் சித்திரவதை செய்தது இவருக்குப் பிடிக்கவில்லை. இந்திய இசை முறைப்படி பாட வேண்டும் என்ற கிளர்ச்சியைத் தோற்றுவித்து வெற்றியும் கண்டார். எனினும் நிர்வாகத்துக்கும் இவருக்குமிடையே பிளவு தோன்றிற்று. இந்த சந்தர்ப்பத்தில் சுவாமி

விபுலானந்தரை மதுரையில் மங்கம்மா சத்திரத்தில் வைத்துச் சந்திக்கும் ஒரு சந்தர்ப்பத்தைத் திருவருள் கூட்டி வைத்தது. கல்விப் பணிபுரிய திரு. பெரியதம்பி மீண்டும் இலங்கை வந்து விட வேண்டும் என்று விபுலானந்தர் கேட்டுக் கொண்டதற்கிணங்க இலங்கை திரும்பினார். கிழக்கு மாகாணத்தில் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளை அமைக்க விபுலானந்தருடன் சேர்ந்து பாடுபட்டார்.

### சமர்ப்பணம்

இந்தச் சம்பவத்தை தமது பகவத் கீதை வெண்பா முதலாம் பாகத்துச் சமர்ப்பணச் செய்யுள்களிலே குறிப்பிட்டிருக்கின்றார் புலவர்மணி. சுன்னாகம் குமாரசுவாமிப் புலவருக்கு அடுத்து சுவாமி விபுலானந்தரைப் புலவர்மணி எப்படி ஏற்றுகின்றார் என்பதற்கு இந்த ஒரு வெண்பா எடுத்துக் காட்டாகும்.

**சங்கத் தமிழ் மதுரைச் சத்தி ரத்தில் வைத்தெம்மை**
**அங்குவச மாக்கி அருள் செய்தே – தங்கியெம்**
**புத்தி புகுந்த விபு லானந்தர் பொன்னடிக்கண்**
**வைத்திந்நூல் நெஞ்சே வணங்கு.**

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் சிறந்த தமிழ் ஆசிரியராக விளங்கியதும், ஆசிரியப்மணிகளைப் பயிற்றுவித்த மட்டக்களப்பு செண்ட் அகுஸ்தீனார் கலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராகவும், விரிவுரையாளராகவும் பணியாற்றியதும் நாடறிந்த விஷயமாகும். இவரிடம் கல்வி பயின்றவர்கள் பல நூற்றுக் கணக்கானோர் நாட்டின் பல பாகங்களிலும் நல்லாசிரியர்களாகக் கடமையாற்றி வருகிறார்கள்.

### பல பதவிகள்

இலங்கை கலைக்கழகம், மட்டக்களப்பு சுத்தானந்தர் கழகம், இலங்கை வானொலி கல்விப் பகுதி ஆலோசனைச் சபை, கிழக்கிலங்கைச் சமாதான விசாரணைக் குழு, யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்துப் பரீட்சைக் குழு, இலங்கை இந்து மாமன்றம், கிழக்கு மாகாணக் கூட்டுறவுப் பேரவை போன்ற

அமைப்புகளில் எல்லாம் பற்பல பதவிகளையும் வகித்து நாட்டுக்கு நற்பணியாற்றிய புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை மறைவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு இலங்கை அரசாங்கத்தால் சமாதான நீதவான் என்ற சிறப்புப் பட்டமும் சூட்டப் பெற்றார்.

சொற்பொழிவுகளினாலும், விரிவுரைகளினாலும், கவிதைப் படைப்பாலும் தமிழ் வளர்த்த புலவர்மணி சிறந்த வசன நடை எழுத்தாளர் என்பது பலருக்குத் தெரியாமல் இருந்தது. தெளிந்த வசன நடையிலே அவர் தீட்டிய இலக்கியக் கட்டுரைகள், இராமாயணக் கட்டுரைகள் பல, பல்வேறு சஞ்சிகைகளிலும் அவ்வப்போது வெளிவந்ததுண்டு. ஆயினும், அவரது வசனச் சிறப்பை அப்போதெல்லாம் மக்கள் அவ்வளவாகக் கவனிக்க வில்லை.

## சுயசரிதை

அவருடைய வாழ்வின் இறுதிக் கட்டத்தில் அவர் தமது சுயசரிதை போன்று 'உள்ளதும் நல்லதும்' என்ற தலைப்பில் 'சிந்தாமணி' வார இதழில் தொடர் கட்டுரை எழுதிய போதுதான் அவருடைய வசன ஆற்றல் புலனாயிற்று. பண்டிதர்கள் என்றால் யாருக்கும் புரியாத கருகிய தமிழ்நடை எழுதுபவர்கள் என்ற எண்ணமே பொதுவாக நிலவி வந்தது. அந்த எண்ணத்தை முறியடித்துச் சிறந்த ஒரு பத்திரிகை எழுத்தாளனைப் போல சரளமான தமிழ் நடையில், ஆற்றோட்டமாகத் தமிழ் எழுது வதற்குத் தம்மால் முடியும் என்பதை நிதர்சனமாக நிரூபித்து விட்டார் புலவர்மணி அவர்கள்.

அவருடைய 'உள்ளதும் நல்லதும்' கட்டுரைகள் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் கிடைத்த பெருநிதியம் என்று போற்றப்படத் தக்கவையாகும். இந்த கட்டுரைகள் நூல் வடிவில் வந்து அழியாத ஓர் இடத்தைப் பெற வேண்டியவை.

1899ஆம் ஆண்டு தை மாதம் 08ஆம் திகதி மண்டூரில் சாதாரண ஒரு குடும்பத்தில் பிறந்த திரு. பெரியதம்பிப்பிள்ளை தமிழ் கற்று, தமிழ் கற்பித்து, தமிழ் பாடி, தமிழ் எழுதி நாடே போற்றும் நல்லறிஞனாக, பண்டிதனாக, பேச்சாளனாக, எழுத்தாளனாக வாழ்ந்து, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை என்ற பெரும் புகழுடன் 1978ஆம்

ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

## ஒளிவிளக்கு

அன்னாருடைய பூத உடல் மறைந்துவிட்ட போதிலும், ஈழத்தில் தமிழ் வளர்த்த பெரியார் வரிசையிலே புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளையின் திருநாமம் என்றும் பொன்றாத, ஒரு ஒளி விளக்காக நின்று சுடர் விட்டுப்பிரகாசிக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

த்மிழ்மொழியை வளர்ப்பதற்காகப் புலவர்மணியவர்கள் தமது 80வது வயதில் கூட எந்தவித கஷ்டத்தையும் பொருட்படுத்தியதில்லை. ஊதியத்தைப் பொருட்டாகக் கொண்டதில்லை. பல மைல் தூரம் பஸ் ஏறிச் சென்று தமிழ் வகுப்பு நடத்திய கதையை எல்லாம் அவர் தமது சரிதையிலே சுவை படச் சொல்லியிருக்கின்றார்.

புலவர் மணி அவர்கள் பிரிந்தபோது கவிஞர் மு. சடாட்சரம் எழுதிய ஒரு உருக்கமான பாடல் புலவர்மணியின் எண்ணம் தமிழ் உள்ளங்களில் என்றும் வாழும் என்பதை அறுதியிட்டுக் கூறுகின்றது.

தள்ளாத வயதினிலும் பள்ளத்தில் வீழ்ந்து
ததிங் கிணதோம் போடுகின்ற "பஸ்" ஏறிச் சென்று
தெள்ளமுத உரை செய்து தேன் வார்ப்பாய் நெஞ்சில்
தேடுகின்றோம் உன்போன்றார் என்று வருவாரோ?
வள்ளல் தமிழ் வாரிதியே! கிழக்கினொளி விளக்கே!
வாடுகிறோம் உன்பிரிவால் வளர் தமிழைக் காக்க
எள்ளளவும் சோராமல் இயங்கியதை எண்ணி
ஏங்குகிறோம் உன் இனிய எண்ணங்கள் வாழும்.

**நன்றி :- சிந்தாமணி வார இதழ்**

## புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை

# கடல்கடந்த நாட்டில் கன்னித்தமிழ்க் காவலர்

- டாக்டர் ச. சாம்பசிவனார் -
காமராசர் பல்கலைக்கழகம் மதுரை

### முன்னுரை

ஈழம் தந்த இன்றமிழ்க் காவலர்களில். 'புலவர்மணி' எனப் போற்றப்படும் ஏ. பெரியதம்பிப்பிள்ளையும் ஒருவர்!

இலங்கையில், மட்டக்களப்பில், 'மண்டூர்' என்னும் சிற்றூரில், சைவவேளாளர் மரபில், சோமநாதர் ஏகாம்பரபிள்ளை என்பாரின் அருமைத் திருமகனாராக 8.1.1899 இல் தோன்றியவர். இளமையில், விபுலானந்த அடிகளார், வித்வசிரோமணி கணேசையர். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் ஆகியோர்பால் தமிழை முறையாகக் கற்றவர்!

### பல்வகைப் பணிகள்

பெரியதம்பிபபிள்ளை, நாவலர் ச. சோமசுந்தரபாதியாருடன் நெருங்கித் தொடர்பு கொண்டதன் பயனாய் இந்தியச் சுதந்திரப் போராட்டத்திலும் ஈடுபட்ட சிறப்பினர்.

"இலங்கை மணித்திருநாடு எங்கள் நாடே! இந்த
இனிய உணர்ச்சி பெற்றால் இன்ப வீடே!"

என்பன போன்ற நாட்டுப்பற்று மிகுந்த பாடல்கள் பல பாடியவர்! நாவலர் பாரதியாரோடு மட்டுமன்றிப் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார். மதுரைத் தமிழ்ச்சங்க ஆசிரியர் திரு நாராயணையங்கார், செயலர் டி.சி. சீனிவாச ஐயங்கார் முதலானோரோடும் நெருங்கிய நட்புடையர்!

1927ஆம் ஆண்டின் போது, அண்ணல் காந்தியடிகட்கு "வரவேற்பிதழ்' படித்துக் கொடுத்தார் என்பதும் இவண் குறிக்கத்தக்கதாகும்! 1947 இல், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை, மட்டக்களப்பு வந்தபோது, அவ்வூர் மக்கள் சார்பில் 'வரவேற்புப் பாமாலை' பாடிக்கொடுத்தவரும் இவரே! அவ்வாறே 1966இல், 'கலைமகள்' ஆசிரியர் கி.வ. சகந்நாதன் அவர்களின் அறுபதாவதாண்டு மணிவிழாவை, மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நிகழ்த்தியகாலை, அன்னாருக்கு வரவேற்பிதழ் படித்துக் கொடுத்தவர்!

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் விழாக்கள், கோயம்புத்தூரிலும், யாழ்ப்பாணத்திலும் நிகழ்ந்தபோது, சிறப்புரையாற்றியவருமாவர்! இக்கழகம் வெளியிட்ட கலைக்களஞ்சியத்தில், விபுலானந்த அடிகளாரைப்பற்றி இவரெழுதிய கட்டுரை இடம் பெற்றுள்ளது!

1951ஆம் ஆண்டு, யாழ்ப்பாணத்தில் நடந்த. 'உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டி'ல் கலந்துகொண்டு. 'கம்பன் நாட்டிய தமிழ் நாகரிகம்' என்ற பொருள் குறித்துச் 'சொல்லின் செல்வர்' ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமையில் உரையாற்றிப் பலரது பாராட்டும் பெற்றவர்!

இலங்கை அரசால். தேசிய ஆலோசனைச் சபைகள்' பலவற்றில் உறுப்பினராக அமர்த்தப்பட்டார். அவற்றுட் சில வருமாறு: இந்து சமய ஆலோசனைச் சபை, இலங்கைக் கலைக்கழகம், இலங்கை வானொலி கல்வி ஆலோசனைச் சபை, தமிழ்ப்பாட நூல் ஆலோசனைச் சபை, அரச மொழிகள் ஆலோசனைச் சபை, யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாசாவிருத்திச் சங்கத் தேர்வாளர்!

இவர் பல்வேறு இதழ்களில் கட்டுரைகள் எழுதியதோடன்றி அரிய நூல்கள் பலவும் ஆக்கியுள்ளார். அத்தகைய நூல்களாவன: விபுலானந்த மீட்சிப்பத்து. புலவர்மணி கவிதைத் தொகுப்பு, உள்ளதும் நல்லதும், நாமகள் இலம்பகம் (நாடக நூல்), திருக்கோயில் பதிகங்கள்!

**பகவத்கீதை வெண்பா**

எல்லாவற்றிற்குமேலாகப் 'பகவத்கீதை'யை வெண்பாவிற் பாடிய

சிறப்பும் இவருக்குண்டு!

பகவத்கீதையில் உள்ள 'கர்மயோகம். பக்தியோகம். ஞானயோகம்' என்ற மூன்று பகுதிகளையும் வெண்பா யாப்பில் மொழிபெயர்த்துப் பாடியுள்ளார்.

இவற்றுள், முதற் பகுதியாக 'கர்மயோகம்' வெளியானபோது, இலங்கை அஞ்சல் தந்தி ஒலிபரப்பு அமைச்சராக விளங்கிய திரு. சு. நடேசபிள்ளை என்பார், கவிஞர் பெரியதம்பிப்பிள்ளையின் அருஞ் செயலைக் குறித்துப் புகழ்மாலை சூட்டிப் பாராட்டியுள்ளார். அதன் ஒருபகுதி வருமாறு:

பகவத் கீதையை தமிழ்ச் செய்யுள் வடிவில் மொழிபெயர்ப்பதற்கு அந்நூலின் செப்பலோசையோடு இயைந்த வெண்பா யாப்பு மிகவும் பொருத்தமானது. இலங்கையில் ஒரு சிறந்த தமிழ்க் கவிஞராக விளங்கும் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பகவத்கீதையின் ஒரு பகுதியை வெண்பா யாப்பில் மொழிபெயர்த்துப் பகவத்கீதை வெண்பா' என்ற பெயருடன் அதனை இப்பொழுது வெளியிடுகிறார்கள். அவர்களின் மொழிபெயர்ப்பு. மூலசுலோகங்களின் பொருளைச் சிதைக்காமல் அமைத்துக்காட்டுகிறது. அவர்கள் இயற்றியுள்ள வெண்பாக்கள், யாப்பமைதியுடையனவாய். ஓசைநயம் பெற்றனவாய், எளிதிற் பொருள் விளங்கக் கூடியனவாய்ப் பல வகையாலும் பாராட்டத் தக்கவையாயிருக்கின்றன. பகவத்கீதையில் ஆன்மாவின் அழியாத தன்மையைக் கூறும் சுலோகங்கள் மிகப்பிரசித்தம் பெற்றவை. அவற்றைப் புலவர் மொழிபெயர்த்து அமைத்திருக்கும் வெண்பாக்கள்,' அவர்களது நூலின் சிறப்பைத் தெற்றெனக் காட்டத்தக்கனவாகும். அவற்றுள் இரண்டை ஈண்டுக் குறிப்பிட விரும்புகின்றேன்!

"ஆத லழிவதற்றே ஆன்மா. அனாதியாய்
ஏதும் விகாரமில தென்றுணர்ந்த – மூதறிவோன்
எவ்வண்ணங் கொல்வா னெவனை எவனைத்தான்
எவ்வண்ணங் கொல்விப்பா னிங்கு!"

ஆயுதத்தால் அக்கினியால் அப்புவால் வாயுவினால்
ஏயும் விகாரமுணா திவ்வுயிர்தான் – நேயகேள்
என்றுமுள தெங்குமுள தென்று நிலைபெற்றழித
லின்றியசை வற்றபொரு ளீது"

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் ஒவ்வொரு வெண்பாவின் பொருளை விளக்கும் வகையில் ஓர் அரிய விரிவுரையும் சேர்த்துள்ளார்கள்.... நூலாசிரியரின் தெளிந்த உரைநடைத் திறனும் இவ்விரிவுரையினின்று நன்கு புலனாகும்!"

இதனால். புலவர்மணியின் புலமைத் திறத்தை ஒருவாறு உணரலாம்!

## பட்டமும் விருதும்

இத்தகு அருந்தொண்டுகளால் இவரடைந்த பட்டங்களும் பலவாம். 1952இல். மட்டக்களப்பில். 'புலவர்மணி' எனும் பட்டமும், யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாசாவிருத்திச் சங்க வெள்ளி விழாவின்போது, கவியோகி சுத்தானந்த பாரதியார் தலைமையில், 'பண்டிதமணி'ப் பட்டமும், 1978இல். இலங்கை அரசு அளித்த 'சமாதான நீதிபதி'ப் பட்டமும், 1980இல், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 'இலக்கிய வித்தகர்' என்ற விருதும் எனப் பல்வேறு பட்டங்களைப் பெற்றவர் எனின் இவரது தொண்டின் உயர்வு புலனாகும்!

இலங்கை அரசு, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளைக்கு நன்றி காட்டு முகமாக, 1994ஆம் ஆண்டில் அவரது திருவுருவம் தாங்கிய அஞ்சல் தலை ஒன்றும் வெளியிட்டுப்பெருமை சேர்த்தது!

## முடிவுரை

இத்தகு பேரறிஞரின் அருமைத் திருமகனார் திரு பெ. விசயரெத்தினம் என்பார், இப்போது, கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர்களுள் ஒருவராயிருந்து தமிழ்த் தொண்டாற்றி வருவது போற்றத்தகுவது!

**புலவர்மணியின் புகழ் ஓங்குக!**

# தமிழ் வளர்த்த நல்ஆசான்கள்

## ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பண்டிதமணியும் புலவர்மணியும்

– திரு. கு. சோமசுந்தரம் எம். ஏ. –

வாழ்க்கையினின்று மலர்வதுதான் இலக்கியம். அவ்வாறு மலர்ச்சி பெற்ற இலக்கியம் பின்னர் வாழ்க்கையை வளம்படுத்த உதவுகின்றது. இவ்வாறு பெறப்பட்ட கல்வித் தத்துவங்களும் தமிழ் மக்களின் வாழ்க்கையைச் செந்நெறிப் படுத்துவனவாக அமைந்துள்ளன. இலக்கியம், கல்வி, வாழ்க்கை என்பன ஒன்றோடொன்று தொடர்புற்று வளர்ந்து வந்த மரபுப் பாங்கினைச் சங்க காலந் தொடக்கம் தற்காலம் வரை தமிழ் மக்களிடையே காணக்கூடியதாக உள்ளது.

கல்வியானது மனிதப்பண்புகள் நிறைந்த சான்றோர்களை உருவாக்க வேண்டும் என்று கொள்வது தமிழ்க் கல்வி மரபு. 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' அறிவினை அளிப்பது கல்வி. கல்வியின் நோக்கம் மெய்ப்பொருள் காண்பதற்கு மனிதனை இட்டுச் செல்லல்.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்"
"நன்றும் தீதும் பிறர்தர வாரா"
"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"
"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"
"கல்வி யழகே அழகு"

போன்ற அனைத்துலகுமே வியக்கக் கூடிய அற்புத முடிவுகளை அறிஞர்கள் எடுத்ததற்கு அஞ்ஞான்று பண்டைத் தமிழகத்தில் நிலை கொண்டிருந்த முதிர்ந்த கல்விப் பாரம்பரியமே ஆதாரமாக இருந்தது.

தமிழ்க் கல்வியை அளித்து வந்த 'ஆன்றவிந்தடங்கிய' அறிஞர் ஆயம் அறிவோடு அறம் பரப்பியவர்கள் அவற்றுடன் உணர்வுக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் உரம் ஊட்டியவர்கள். மக்களின் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி அவர்களை உட்புற அழிவு சிதைவுகளிலிருந்து பாதுகாத்த நல்லாசான்கள். உலகியல் சார்ந்த கல்வியையும் அளித்து மக்களின் வெளிப்புறச் சீரமைப்புக்கு வழிவகுத்தவர்கள். சுருங்கக் கூறின், மக்கள் வையத்தில் வாழ்வாங்கு வாழவும், வளமாக வாழவும் தேவையான கல்வியை அவர்களுக்கு வழங்கியவர்கள் இவ்வறிஞர் பரம்பரையினர்.

### ஈழத்தமிழரின் இலக்கிய வழி:

தமிழ் வழங்கும் ஈழ மண்டலம், தமிழ்நாட்டுடன் ஏறத்தாழ கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்தே பண்பாட்டுத் தொடர்பினை ஏற்படுத்தியிருந்தமை பற்றி அண்மைக்கால ஆய்வுகள் புலப் படுத்தியுள்ளன. இந்த வகையில் தமிழ்க் கல்வி மரபு, ஈழத் தமிழர்களிடமும் தொன்று தொட்டுத் தொடர்ச்சியாக வளர்ந்து வருகிறது எனலாம். 'அரச கேசரியிலிருந்து நமது கண் முன்னிருந்த கணேசையர் பரியந்தம் ஓரிலக்கிய வழி தொடர்ந்து வந்திருக்கிறதென்பது ஊகிக்கத் தக்கது. இந்த வழி இடையிடையே செடிகொடிகளில் மறைந்து தொடர்பு புலப்படாது போனாலும், வழியொன்று எவ்வாறோ தொடர்புற்று வந்திருக்கிற தென்பதற்குச் சான்றுகள் உண்டு'.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை காட்டிய ஈழத்துத் தமிழ் இலக்கிய வழி இதுவாகும். அரசகேசரி எனும் புலவர் யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலத்தவர். தமிழ் மன்னர்கள் காலம் ஏறத்தாழ கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து கி.பி. 1619இல் போர்த்துக்கீச அரசு யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றும் வரையிலான காலப்பகுதியாகும். தமிழ் அரச வம்சத்தைச் சேர்ந்த அரசகேசரி, யாழ்ப்பாண அரசின் இறுதிக் காலத்திலேயே இரகுவம்சம் எனும் நூலை இயற்றினார் எனக் கருதப்படுகிறது.

கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை ஒரு நீண்ட புலமைமிக்க இலக்கிய வழி ஈழத் தமிழ் நாட்டில் இருந்திருக்கிறது என்று கொள்ள வேண்டும். ஈழத்துப் பூதந்தேவனார் பற்றிய குறிப்பு சங்கப்புலவர் வரிசையில் உள்ளது. அரசகேசரியிலிருந்து தொடங்கும் முறையான இலக்கிய வழி இதன் தொடர்ச்சியேயாகும். அரச கேசரியைத் தொடர்ந்து, போர்த்துக்கேயர் காலம் முடிய, அதன் பின் ஒல்லாந்தர் ஆட்சி செய்த காலம்வரை ஈழத் தமிழ் இலக்கிய வழி புலப்பாடில்லாததாயினும் ஆங்காங்கே புலவர்கள் தலை மறைவில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். நல்லூர் சின்னத்தம்பிப் புலவர், அவர் காலத்திலே வாழ்ந்த சுன்னாகம் வரத பண்டிதர், மாதகல் மயில்வாகனப் புலவர், ஆகியோர் புலவர் பரம்பரையைத் தொடர வைத்தவர்கள். நூல்கள் பலவற்றை இயற்றியுள்ளனர். இத்தகையோர் நீண்ட தொரு புலமைப் பரம்பரை யொன்றிலேயே தோன்றியிருக்க முடியுமென்பது பண்டிதமணியின் முடிவு ஆகும். இன்னும் பலர் கிராமங்கள் தோறும் இலக்கிய வழியையும், கல்வி வழியையும் தொடரவைத்துள்ளனர். ஆனால் அவர்களைப் பற்றி எதுவுமே தெரியாத நிலையில் உள்ளோம்.

### அந்நியர் ஆட்சிக்காலம்:

ஈழத்துத் தமிழ் இலக்கிய வழியும் கல்வி வழியும் இவ்வாறு 'தலைமறைவாக' இக்காலகட்டத்தில் நடந்து வந்ததற்குத் தமிழ் மன்னர்கள் தமிழ்க் குடிமக்களை ஆண்டுவந்த காலம் மறைந்து, அந்நிய ஏகாதிபத்தியப் போர்த்துக்கேய, ஒல்லாந்த அரசுகள் அடக்கு முறை ஆட்சியில் இருந்தமையே காரணமாகும். அந்நிய அரசுகள் புறமதங்களைப் பரப்புவதிலும், நம்நாட்டுச் சூழலுக்கு முற்றிலும் புறம்பான கல்வி முறையினையும், கலாசாரத்தினையும் புகுத்துவதிலும் கண்ணாக இருந்தமையினால் இந்நிலை ஏற்பட்டது. இக்காலப்பகுதியில் ஒருவித அச்ச உணர்வுடனேயே சைவத் தமிழ் இலக்கிய, கல்விப் பாரம்பரியம் தொடர்ந் திருக்கவேண்டும்.

போர்த்துக்கேயரே முதன்முதலாக இலங்கையில் பாட சாலைகளை அமைத்து முறைசார்ந்த கல்வி முறைமையினைப் புகுத்தியவர்கள்

ஆகின்றனர். இதற்கு முன்னைய காலங்களில் குருசீட முறையில், கோயில்களிலும், ஆச்சிரமங்களிலும், ஆசானின் இல்லங்களிலும்,கல்வி போதிக்கப்பட்டு வந்தது. போர்த்துக்கேயர் காலத்திலிருந்து ஈழத்தமிழர் மத்தியில் இரண்டுவகைக் கல்வி முறைகளைக் காணக் கூடியதாக உள்ளது. ஒன்று, ஈழத்து இலக்கிய வழியோடு இணைந்து தொடர்ந்து வந்த ஈழத் தமிழ்க் கல்வி வழி, மற்றையது ஐரோப்பியர்கள் வருகையால் தோற்றுவிக்கப்பட்ட மேலைத்தேயக் கல்வி வழி. இந்த இரண்டாவது கல்வி வழியின் பேறாக ஐரோப்பியக் கல்வி முறை, உலகியல் சார்ந்த பண்பாடு, கலாசாரம் என்பன படிப்படியாக நம் மக்கள் மத்தியில் படியத் தொடங்கின. மக்களிடையே மதிப்பும் செல்வாக்கும் பெற்றுத் திகழ்ந்தன.

## இலக்கியப் பரம்பரை:

இரண்டாவது கல்விப் பாரம்பரியம் 'உயர் குழாம்' என்னும் சமூக குழுவினரை உருவாக்கியது. அரசறிய வீற்றிருக்கும் வாழ்வை அளித்தது. இவர்களே சமூகத்தில் 'கற்றவர்கள்' எனப்பட்டனர் நாலுந் தெரிந்தவர்கள் என்றும், நாகரிகம் படைத்தவர்கள் என்றும் ஏற்றிப் போற்றப்பட்டனர். கல்வி, அதி உயர்ந்த பணப் பெறுமதியைப் பெற்றது. ஆங்கிலேயர் காலத்தில் இக் கல்வி வழி அதியற்புத வளர்ச்சி கண்டது. ஏகாதிபத்திய அரசின் ஆசியும் பல்வேறு உதவிகளும் இக்கல்விக்கே கிடைத்தன. அதேவேளை தமிழ்க்கல்விப் பாரம்பரியம், உதவுவாரும் ஊக்கிவிப்பாரும் இன்றி மங்கிமறையும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

இரண்டாவது கல்வி வழியின் நோக்கம், 'உண்டிருந்து எப்படியோ வயிறு வாழ்வது தான் உடம்பு எடுத்த நோக்கம்' என்பதற்கு உற்றதுணையாக இருந்தது. அது உலகியலை பெரும்பாலும் சார்ந்தது. முதற்கல்வி வழியான தமிழ் மரபுக் கல்வியின் முதன்மை நோக்கம், 'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்' என்பதற்கு உறுதுணையாக இருந்தது. அது ஆத்மீகம் சார்ந்தது. "வாழ்க்கைக்கு உறுதுணையாய் வருவது தூய நற்கல்வி" என்ற திருமூலர் திருவாக்கில் "வாழ்க்கை என்பது எப்படியும் வாழலாம் என்ற

வாழ்க்கையல்ல, இப்படித்தான் வாழவேண்டும் என்ற வாழ்க்கையையே என்பதும் நோக்கற் பாலது.

முத்துக்குமார கவிராயர், இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் ஆறுமுக நாவலர், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், முருகேச பண்டிதர், நீர்வேலி சிவசங்கர பண்டிதர், கோப்பாய் சபாபதி நாவலர், காசிவாசி செந்திநாதையர், புலோலி நா. கதிரைவேற்பிள்ளை, வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை, சாவகச்சேரி பொன்னம்பலபிள்ளை, மட்டுவில் க. வேற்பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், மகாலிங்கசிவம், வித்துவான் சுப்பையாபிள்ளை ஆகியோர் ஒல்லாந்தர் கால முடிவிலும் ஆங்கிலேயர் காலத்திலும் யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பாரம்பரியக் கல்வி வழியைத் தொடர வைத்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

### பண்டிதமணியும் புலவர் மணியும்

மேற்கூறிய நீண்ட ஈழத்துத் தமிழிலக்கிய, தமிழ்க் கல்வி வழியில், இந்நூற்றாண்டில் வாழ்ந்து, அதனைப் பேணிப் பாதுகாத்து வந்தவர்களுள் மிகச் சிறந்தவர்களாகப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையையும், புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளையையும் குறிப்பிடவேண்டும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தாபித்த காவிய பாடசாலையில் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரிடம் ஒருமித்துத் தமிழ் மரபுக் கல்வியைக் கற்றுத் தேர்ந்தவர்கள், இவர்கள்.

'சி. கணபதிப்பிள்ளையும் நானும் ஒரே மரத்தின் இரண்டு கிளைகளில் ஒருமிக்கப் பழுத்த இரண்டு பழங்கள்' என்று புலவர்மணி அவர்கள், தாங்கள் இருவரைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளமை பொருள் பொதிந்தது.

"பொய்யும் வழுவுந்" தோன்றிய இக்காலகட்டத்தில் ஒரு சிலர் "களவு நிலை" யில் இருந்தனர். "களவு நிலை என்றால் பிரபஞ்ச பந்தங்களை விடவும் முடியாமல், கண்ட உண்மையைத் தொடராமல் இருக்கவும் முடியாமல் அன்பு அங்குமிங்கும் பிரிநிலைப்பட்டு நிற்கும் நிலை" என்று பண்டிதமணி விளக்கந் தந்துள்ளார். ஆங்கிலக் கல்வி,

அதனால் கிடைக்கும் உலகியல் சார்ந்த அநுகூலங்கள் ஒரு புறம் சைவத் தமிழ்க் கல்வி, அதனைப் பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கு அளிக்க வேண்டும் என்ற உள்ளுணர்வு உந்தல்கள் மறுபுறம்; இரண்டிற்குமிடையில் ஊசலாட்டம். ஆயினும் ஈற்றில் பொய் கெட்டு மெய்யானார்கள். "களவு நிலை" கைவிட்டுக் "கற்பு நிலை"யைக் கைக்கொண்டனர். தமிழுக்கு மறுமலர்ச்சி செய்யக் கிளர்ந்தெழுந்தனர். தம்முன்னோர்கள் போலத் தலைமறைவாக இருந்தல்ல. அடங்காது கிளர்ந்தெழுந்தோர் வரிசையில் ஆறுமுகநாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை, கனகசபைப் பிள்ளை, சுவாமி விபுலானந்தர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

நாவலர் சைவத் தமிழ் மறுமலர்ச்சிப் பணிகளில் வெளிப்படையாகவே ஈடுபட்டுத் தனியொரு மனித இயக்கமாகவே செயற்பட்டார். நாவலருக்குப் பின் அவரது ஞான பரம்பரை தொடர்ந்தது. வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை, நாவலரின் தமையனார் புதல்வர் த. கைலாசபிள்ளை, சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர் ஆகியோர் நாவலர் பணியைத் தொடர்ந்து ஆற்றினர். இந்த நூற்றாண்டில் பண்டிதமணி இப்பரம்பரையைத் துவங்க வைத்தார்.

## புலவர்மணி

புலவர்மணி அவர்கள் கிழக்குமாகாணம், மட்டக்களப்பு மாவட்டம் மண்டூர்க் கிராமத்தில் 1899ஆம் ஆண்டில் பிறந்தவர். அதே ஆண்டிலேயே பண்டிதமணி யாழ்ப்பாண மாவட்டம் மட்டுவில் கிராமத்தில் பிறந்தார்.

புலவர்மணியின் முதல் தமிழாசிரியர், யாழ்ப்பாணம் புலோலியைச் சேர்ந்த சந்திரசேகர உபாத்தியாயர் ஆவர். இவர், மட்டக்களப்பில் தமது இனத்துள் கலந்து கொண்டவர் என்றும், புத்தகம் பாராமலே பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆற்றல்மிக்க முதுபெரும் புலவர் என்றும் புலவர்மணி குறிப்பிட்டுள்ளார். சூடாமணி நிகண்டு, திருச்செந்தூர்ப் புராணம், கந்தபுராணம், பாரதம் போன்ற நூல்களை புலவர்மணி கற்றுத் தேர்ந்தார்.

பதினான்காம் வயதில் புலவர்மணியின் கல்வி வாழ்க்கையில் திருப்பம் ஒன்று ஏற்பட்டு கல்முனைக்குச் சென்று ஆங்கிலக்கல்வி கற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆங்கிலக் கல்வியால் கிடைக்கும் அநுகூலங்களை எண்ணிப்பார்க்கிறார். தமிழ்க் கல்விக்கு இடைநிறுத்தம் ஏற்படுகிறது. ஏற்கனவே குறிப்பிட்ட "களவு நிலை"க்குப் புலவர்மணி உள்ளாக்கப்படுகின்றார். ஆங்கில மோகம் ஒருபுறம். தமிழ்க் கல்விப்பற்று உணர்வு மறுபுறம். இதயம் ஊசலாடுகிறது.

## இலக்கிய வழித் திருப்பம்

1917ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் ஒருநாள் மண்டூர் முருகனின் திருவிழாவிற்கு மட்டுவிலில் இருந்து தம்பிமுத்துப் பிள்ளை எனும் தமிழ்ப்பற்று மிக்கவர் வருகை தந்தார். அவர் தமிழ் நூல்களை விற்பனை செய்பவர். அத்தோடு தமிழில் புலமை பெற்றுத் திகழ்ந்தார். புலவர் மணியின் வீட்டிலேயே தங்கி இருந்தார். புலவர்மணியின் தமிழ் ஆர்வத்தை உணர்ந்தார். மட்டுவில் மகாலிங்கம்சிவம் மூலம் யாழ்ப்பாணத்தில் தமிழ் படிக்க வசதி செய்துதருவதாக கூறிச் சென்றவர் சில நாட்களுள் செயற்படுத்தியும் விட்டார்.

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் அங்கமாகிய காவிய பாடசாலையில் தமிழ்க் கல்வியை மரபு வழியில் பயிலச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். நாவலர் நிதியிலிருந்து கல்வி நன்கொடையும் கிடைத்தது. சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் நல்லாசானாக வாய்த்தார். இதே வகுப்பில் ஏற்கனவே பதினொரு மாணவர்கள் இருந்தார்கள். அவர்களுள் ஒருவர்தான் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையாவர்.

இறைவன் சித்தப்படியும், தமிழர் தவத்தின் பேறாகவும் சி. கணபதிப்பிள்ளையும், ஏ. பெரியதம்பிப்பிள்ளையும் நாவலர் சந்நிதியில் ஒன்றிணைந்தார்கள். இந்நூற்றாண்டில், ஈழத்துத் தமிழ் இலக்கிய' வழியையும் அதனோடிணைந்த தமிழ்க் கல்வி வழியையும் தொடர வைப்பதற்குக் கால் கோள் இடப்பட்டது. இலங்கைத தமிழர் வரலாற்றில்

முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்ச்சி, தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களின் ஆத்மீக, தமிழ்க் கல்வி, பண்பாட்டு இணைப்பாக விளங்கியது.

அன்றைய நிலையை பண்டிதமணி பின்வருமாறு படம்பிடித்துக் காட்டுகிறார்:

"ஆங்கில மோகம் தலைக்கு மீறித் தாண்டவமாடிய அக்காலத்திலே தகுதியுள்ளவர்கள் தமிழைப் புறஞ்செய்த அந்தக் காலத்திலே, படிப்பு வாசனையின்றியிருந்த என்னை அவர்கள் அந்தக் காவிய வகுப்பில் சேர்க்க நேர்ந்தது. மட்டக் களப்பிலிருந்தும் ஒருவர் வந்து சேர்ந்தார். அவருக்கு ஆங்கில அறிவும் உண்டு. கவிதை புனையும் ஆற்றல் இயற்கையில் அவர்பால் இருந்தது. அங்கே தகுதிவாய்ந்த ஒரு குடும் பத்தைச் சேர்ந்தவர் அவர். ஆங்கிலத்தை மேலும் விருத்தி செய்து புருஷ இலட்சணமான உத்தியோகம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள விரும்பாமல் தமிழ் படிப்பதற்கென்று அவர் அங்கிருந்து இங்கு வந்தது எங்களுக்கு பெரிய ஆச்சரியமாயிருந்தது. அவர்தாம் ஏ. பெரியதம்பிப்பிள்ளை, புலவர்மணி"

## பொய்கெட்டு மெய்யானார்.

இவ்விரண்டு தமிழ் மணிகளுக்கும் குருமணியாக விளங் கியவர் குமாரசுவாமிப் புலவர். இம்மூன்று தமிழ் உள்ளங்களும் ஒன்று கலந்தன. தமிழ்க் கல்வி மரபில் குருவைத் தெய்வமாகக் கொண்டு வணக்கமும், மதிப்பும் செலுத்தும் பண்பு வளர்ந் திருந்தது. எக்காலத்திலும் எந்நிலையிலும், போற்ற மறந்த தில்லை:

ஆங்கில மோகத்திற்கும், தமிழ் உணர்வுக்கும் இடையில், பெரியதம்பிப்பிள்ளையில் ஆடிய ஊசல் முனை தமிழ் உணர்வுக்கு நேர் வந்து ஆடாமல் அசையாமல் நின்றது. பொய்கெட்டு மெய்யானார். முன்னைய "களவுநிலை", "கற்பு நிலை" ஆயிற்று. தமிழ் இலக்கிய வழியையும் தொடரவைக்கப் புறப்பட்டார்.

"தமிழ்" என்பது வெறும் கருத்துப்பரிமாற்றம் செய்யும் மொழி மாத்திரமன்று. "தமிழ்" என்னும்போது பரந்த, விரிந்த, ஆழ்ந்த, நுண்ணிய விடயங்கள் பலவற்றை உள்ளடக்குகின்றது. தமிழின் கருத்தை விசாரித்து அறிந்து தெளிந்தவர்களே தமிழ் செய்ய வேண்டும் என்று பண்டிதமணி கூறுவார். இவ்வாறு தமிழ் செய்தவர்களையே தமிழ் இலக்கிய வழியிலும், கல்வி வழியிலும் வெளிப்படுத்தியுள்ளார் பண்டிதமணி.

புலவர்மணியும், பண்டிதமணியும் தமிழின் கருத்தை நன்கு உணர்ந்தே தமிழ் செய்தவர்கள். தமிழ் காத்தவர்கள். புலவர்மணி, நாவலர் காவிய பாடசாலையில் தமிழ்க் கல்வி கற்ற காலத்தில், பண்டிதர் மயில்வாகனனாரின் வீட்டுக்கும் அடிக்கடி சென்று தமக்குத் தெரியாதவற்றை அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். பண்டிதர் மயில்வாகனனார் பின்னர் சுவாமி விபுலானந்தர் ஆனவர். விஞ்ஞானத்திலும் பட்டம் பெற்ற இவர் அஞ்ஞான்று யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவும், பின்னர் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராகவும் இருந்தவர்.

"புலவரையாவிடம் கற்று அறிவை ஆழமாக்கிக் கொண்டேன், பண்டித மயில்வாகனனாரின் சேர்க்கையால் மனம் விசால மாயிற்று" என்று புலவர்மணி குறிப்பிடுவது நோக்கற்பாலது.

## புதுமைப் புலவர்கள்

பண்டிதமணி, தமிழை நன்குணர்ந்தது போன்று நாவலரையும் நன்குணர்ந்தவர். அதனாலேயே நாவலரின் ஞான பரம்பரையில் வந்தவராகக் கொள்ளப்படுகின்றார். நாவலர் காவிய பாடசாலையில் கற்ற காலத்தில் திருநெல்வேலியில் அமைந்த "ஈரப்பலாச் சங்கம்" பண்டிதமணிக்குப் புதியனவற்றையும் அளித்தது. திருவாளர்கள் நடராசா, கைலாசபதி, சிவப்பிரகாசம் ஆகியோர் இச்சங்கத்தில் இருந்தனர். ஆங்கிலமும், விஞ்ஞானமும், தத்துவசாத்திரமும் கற்பவர்கள் இவர்கள். பழமையில் பற்றுவைக்கும் பண்பையும் புதுமையில் கருத்தைச் செலுத்தும் பாங்கினையும் பண்டிதமணி பெற்றிருந்தார்.

பண்டிதர்கள் என்றால் ஒருவகைத் தனிப்போக்கை யுடையவர்கள், மக்களோடு உடன்போக்கு அற்றவர்கள் என்ற அபிப்பிராயத்தை மாற்றியமைத்தவர்கள் பண்டிதமணியும், புலவர்மணியும் என்றால் அக்கூற்று ஏற்றுக்கொள்ளக் கூடியதே. இவர்களின் பேச்சிலோ, எழுத்திலோ கடின நடையினைக் காண முடியாது. கற்றாரும் கல்லாதாரும் விளங்கிக் கொள்ளும்படி, எளிய, அழகிய புதுமையான முறையில் பேசினார்கள், எழுதினார்கள். தமிழர் சமுதாயத்தின் பண்டைய மரபுகளை ஆராய்ந்தார்கள். இவற்றை இக்கால ஆய்வு முறைகளில் விளக்கமும் விமரிசனமும் தர முயற்சித்தார்கள். இதற்கு மேனாட்டு இலக்கியத்திலும் ஆக்க இலக்கியத்திலும் ஈடுபாடும் ஆங்கிலம் கற்று இத்துறைகளில் ஈடுபாடு கொண்டிருந்தோருடன் தொடர்புகளும் கொண்டிருந்தமையே காரணம். மரபுவழி வந்த நல்ல கருத்துக்களை, வளர்ச்சி பெற்று வருகின்ற சமகாலச் சமுதாயத்தின் தேவைகள், பண்புகள், நோக்கங்கள் என்பன வற்றிற்கு ஏற்ப உருவாக்கி இணைக்கும் முயற்சிகளில் இவர்கள் இருவரும் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் நமக்களித்த நூல்கள் இதற்குச் சான்று பகருகின்றன.

### நம் முன்னோரளித்த முதுசம்

பண்பாட்டு மரபுகள், பாரம்பரியங்கள் என்பன நமது இனவரலாற்று ஆரம்ப காலத்திலிருந்து உருவாகி ஒவ்வொரு தலைமுறையிலும் மேலும் சேர்க்கப்பட்டு அல்லது வேண்டாதவை தாமாகவே கழிய இடம் கொடுக்கப்பட்டு அவை அளவிலும் தரத்திலும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. குறிப்பிட்ட இனத்தின் நாகரிக வளர்ச்சியை மதிப்பீடு செய்ய இவை உதவுகின்றன. புகழ்மிக்க விஞ்ஞான மேதை நியூட்டன் இது தொடர்பாகத் தந்த கருத்துப் பின்வருமாறு:

"எனது முன்னோரைக் காட்டிலும் என்னால் அதிக தொலைவு காண முடிந்தமைக்குக் காரணம் அவர்களின் தோள்களின் மீது நின்று நான் பார்த்ததே." இது நம்மால் சிந்திக்கப்பட வேண்டிய, பொருள் நிறைந்த கூற்று ஆகும். முன்னோர்களின் தோள்கள் என்பது நம்முன்னோர்கள் நமக்கு தேடித்தந்த அருஞ்செல்வங்களையும், பண்பாட்டு மரபுகளையுமே குறிக்கின்றன. புதியன காண்டலுக்கும்

எதிர்கால வளர்ச்சிக்கும் இவை இன்றியமையாதன. நமது பண்பாட்டு மரபுகளை, வரலாறுகளை நாம் பின்னோக்கிப் பார்ப்பது, ஆராய்வது, பற்றுவைப்பது என்பது பிற்போக்கு ஆகாது.

தமிழ் கல்வி முறைமையும், வழி வழி வந்த எமது பண்பாட்டையும், சமூக இயலையும் அறிந்து கொள்ள உதவியது. எமது வாழ்க்கையை நெறிப்படுத்தும் மனித மேம்பாட்டுக் கல்வியாக அமைந்தது.

## இரு மணிகள் வகுத்த வழி

இந்த நூற்றாண்டில், ஈழத்துத் தமிழ் இலக்கியக் கல்வி வழியில் வந்த பண்டிதமணியும், புலவர்மணியும் இருபதாம் நூற்றாண்டுக்குரிய "யுக தர்மத்தை"யும் கருத்திற் கொள்ள மறுக்கவில்லை. "தொன்மையவாம் எவையும் நன்றாகா: இன்று தோன்றிய நூலெதுவும் தீதாகா". என்றும் பண்டிதமணி குறிப்பிட்டுள்ளதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம். பண்டிதமணி நாவலர் பெருமான் வழிநின்று,

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே"

என்றவாறு, பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்தார். புலவர்மணி. நாவலர் கோட்டத்தில் குமாரசுவாமிப் புலவரால் ஆட்கொள்ளப்பட்டார். ஆயினும் பின்னர், சுவாமி விபுலானந்தரின் அருள் நோக்கிற்குள்ளாகி இராமகிருஷ்ண சங்கத் தத்துவத்தை ஏற்று சமய சமரச சமூக சமத்துவ சன்மார்க்க நெறியைக் கைக் கொண்டவர் ஆனார்.

இலக்கிய உணர்வு, இலக்கிய ரசனை மேலோங்க ஆரம்ப காலத்தில் திகழ்ந்த பண்டிதமணி, பிற்காலத்தில் சைவ சித்தாந்தத்தில் ஊறித் திளைத்து, உள்பொருள் காணும் முயற்சியில் ஈடுபட்டார். இலக்கியத்துடனே ஒன்றித்திருந்த காலத்திலும் நீதி நெறி, அறம் ஆகியவற்றை இலக்கியத்துடன் இணைத்தே விமர்சித்து வந்தார். தமிழ் மரபு, கல்வியினைத் தொன்று தொட்டு ஆத்மீக உணர்வோடு இணைத்தே வளர்த்து வந்தது் என்ற உண்மையை உணர்ந்தவர்.

தமிழர்களின் ஆத்மீக உணர்வுகளே சைவ சித்தாந்தம். ஆகவேதான், பண்டிதமணி முதிர்ச்சி பெற்ற காலத்தில் சைவசித்தாந்தம், தமிழிலக்கியம் ஆகியவற்றினை இணைத்து நோக்குபவராக விளங்கினார். தாம் விரும்பி, எழுதி வெளியிட்ட கந்தபுராணம் தட்ஷகாண்டம் உரை நூல் இதற்குச் சான்றாகும்.

புலவர்மணி பிறப்பினாலேயே கவிதைகள் இயற்றும் ஆற்றல் கைவரப் பெற்றவர். "வெண்பாவில் பெரியதம்பி" என்று பண்டிதமணியால் அழைக்கப்பட்டவர். சிறந்த இலக்கிய இரசிகர். யாழ்ப்பாணம் எப்படிக் கந்தபுராண கலாசாரத்தைக் கட்டி வளர்த்து வருகிறதோ, அவ்வாறு மட்டக்களப்பு கலாசாரம் பாரதமேதான் என்று புலவர்மணி கூறுவர். திரௌபதி வழிபாட்டின் வாயிலாக வில்லிபுத்தூரார் பாரதம் இந்நாட்டில் நிலை கொண்டுள்ளது என்பர். பாரதத்தில் வரும் பல நிகழ்ச்சிகள் நாட்டுக் கூத்து வடிவம் பெற்று ஊர்கள் தோறும் ஆடப்பட்டு வருவதும் இதற்குக் காரணம். இந்தவகையில் "பகவத் கீதை" புலவர்மணியை ஆட்கொண்டதில் வியப்பில்லை. கீதையின் சுலோகங்கள் வெண்பாக்களாகத் தமிழில் உருவெடுத்தன. புலவர்மணியின் "பகவத் கீதை" வெண்பா நூல் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் 1951ஆம் ஆண்டு தமிழறிஞர் சு. நடேச பிள்ளையின் தலைமையில் அரங்கேற்றப்பட்டமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். சுவாமி விபுலானந்தர் வழி நின்று இந்து சமயத்தை அடிநாதமாகக் கொண்டு, கவிதைகள் வாயிலாக வேதாந்த தத்துவ நெறி வளர்த்தவர், பரப்பியவர் அந்நெறியில் ஒழுகியவர் புலவர்மணி அவர்கள்.

வேதாந்தத்தின் தெளிவாம் சைவசித்தாந்த நெறியை நாவலர் வழிநின்று, சைவத்தை அடிநாதமாகக் கொண்டு பெரும் பாலும் உரைநடை வாயிலாக வளர்த்தவர். பரப்பிய அந்நெறியில் ஒழுகியவர் பண்டிதமணி அவர்கள். "உண்மை ஒன்று; வழிகள் பல" என்ற அடிப்படையில் இருவருக்கும் பேதம் இல்லை.

மகாபாரதத்தில் அறத்தை நிலைநாட்டும் முயற்சியில் கிருஷ்ணன் தூது வெற்றி காணவில்லை. கந்தபுராணத்தில் வீரவாகு தேவர் தூதுக்கும் அதேகதிதான். இவை வெறும் சம்பிரதாயங்களாகவே அமைந்தன. எனினும் ஈற்றில் அறம் வென்றது; மறம் தோற்றது. உண்மை ஒன்றுதான்.

பண்டிதமணி தாம் ஆராய்ந்து தெளிந்து சரியென்று கண்டவற்றைப் பகிரங்கம் பண்ணுதற்குத் திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலை சிறந்த களமாக விளங்கியது. ஒரு விளக்கில் இருந்து பல விளக்குகள் ஏற்றப்படுமாப்போல இக்கலாசாலையில் கற்ற ஆசிரிய மாணவர்கள் நாட்டின் நாற்புறங்களிலும் எடுத்துச் சென்று பரப்பினர். முப்பதாண்டுகள் இவ்வாய்ப்பினைப் பெற்றவர். புலவர் மணியவர்கள், பல இடை நிலைப் பாடசாலைகளிலும் உயர் கல்லூரிகளிலும் மட்டக்களப்பு புனித அகஸ்தீன் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலும் தமிழ்ப்பணியாற்றி நல்ல சிறந்த மாணவர்களை உருவாக்கியவர்கள்.

## பழமையில் புதுமை கண்டவர்

இவ்விரண்டு மணிகளும் தமிழ்க் கல்வி கற்றுக் கிணற்றுத் தவளைகள் ஆகவில்லை. மாறாக, இந்நூற்றாண்டிற்கே உரித்தான ஜனரஞ்சக போக்கிற்குள்ளும் சிக்கவில்லை. தமிழின் கருத்தை அறிந்து தமிழ் செய்தவர்கள் இவர்கள். பழைமையை விட்டுவிலகாது புதுமை கண்டவர்கள். புதுமை என்ற பெயரில் புதுப் புது வடிவங்களில் பெருகி வருபவைகள் எங்கே தமிழ்வளர்ச்சிக்கு வழி செய்யாது போனாலும், இருக்கிற அறிவையாவது பழுது பண்ணாமல் விட்டு வைக்குமோ என்று ஏங்கி, அபாயச் சங்கொலி எழுப்பியவர்கள். தமிழுக்கு நல்லன செய்தல் முடியாதாயினும் அல்லவை செய்தலையாவது தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றனர். இதற்காகத்தான் பண்டிதமணி கண்டனக்காரர் என்ற பட்டத்திற்குள்ளாக நேர்ந்தது. குறுகியமனப் போக்கு அவரிடம் அறவே இல்லை. "ஈழமண்டலம் தாய் நாடாகிய தமிழ் நாட்டின் ஒருசிறு துளி. தமிழ் நாட்டின் இலக்கிய வளம் மகா சமுத்திரம்" என்று கூறுவதிலிருந்து

பண்டிதமணியின் விசால மனம் தெளிவாகத் தெரிகிறது. ஆனால், ஈழத்து இலக்கிய வழித் தோன்றல்களின் தமிழ் அறிவையும், தமிழ்ப்பணியையும் குறைத்து மதிப்பிட்ட தமிழ் நாட்டார் சிலருக்குத் தக்க பதில்கொடுத்து உண்மையை நிலைநாட்டத் தவறியதில்லை.

பண்டிதமணிக்கு 1978ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகம் இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. புலவர்மணி இதனை மனங்கனியப் பாராட்டி இருந்தார். பண்டிதமணி சற்றே இளையவர். அக்கிரபூசை பெறுவதற்கு உரியவர், என உவகை கொண்டார். "என் பின்னவன் பெற்ற செல்வம் அடியேன் பெற்றதன்றோ" என்று மகிழ்ந்தார். தமிழ் மரபு வழிவந்த ஆச்சிரமக் கல்வியின் அருமையையும் பயனையும் இங்கு காண்கிறோம்.

ஈழத்துத் தமிழ் இலக்கியக் கல்வி வழியில், இருபதாம் நூற்றாண்டில் வந்த பண்டிதமணியும் புலவர்மணியும் நமக்கு நல்ல வழி காட்டும் கலங்கரைவிளக்கமாக அமைந்துள்ளனர். இவர்களின் ஞானபரம்பரை மாணவர்களால் தொடரப்பட வேண்டும்.

நன்றி:- வீரகேசரி 10.02.89

******

# நாட்டுப் பற்றும் தேசிய உணர்வும் மிக்க கவிஞர் பெரியதம்பிப்பிள்ளை

அன்புமணி

முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் இம்மண்ணில் தோன்றி, தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழிசை ஆகிய முத்துறைகளிலும் வியத்தகு சாதனைகள் புரிந்தபோது தமிழகமே அவர் திறமையை இனம் கண்டு வியந்து போற்றி தகுந்த பதவிகளை அளித்துக் கௌரவித்தது. அவர் இயற்றிய யாழ்நூலை யானை மேல் ஏற்றி ஊர்வலம் நடத்தி அரங்கேற்றம் செய்தது.

அவருடைய தமிழ்ப்பணி ஈழத்தின் பால் திரும்பிய போது, காந்தம் இரும்பைக் கவர்வதுபோல், இலக்கிய தாகம் கொண்ட பலரை அவர் ஈர்த்தார். அவர்களுள் சிலர் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றும் அன்பர்களானார்கள். அத்தகைய அன்பர்களுள் முதன்மை வகிப்பவர் புலவர் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்.

வாழையடி வாழையென வந்த திருக்கூட்டத்தில் அவர் முன்னோடி மட்டுமல்ல, குருவைத் தெய்வமாகப் போற்றும் உத்தம சீடரும் ஆவார். அத்தகையவர்மேல் சுவாமி விபுலானந்தரும் தனிப்பட்ட அன்பு வைத்திருந்தார். புலவர்மணி இயற்றிய "மண்டூர்ப்பதிகம்" எனும் நூலுக்கு சுவாமி விபுலானந்தர் வழங்கிய பாயிரச் செய்யுள் பின்வருமாறு அமைகிறது.

"பண்டுரு முகிற்குலங்கள் எமதிறைவர்
மருகர் திருப்பதி யீதென்ன
விண்டூர மழை பொழியும் சிறப்பதனால்
வளம் மலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூரில் உறைமுருகன் மலரடிக்கோன்
திருப்பதிகம் மரபிற் சொற்றான்
கண்டுரு மினிய மொழிப் பெரியதம்பிப்
பிள்ளை என்னும் கவி வல்லோனே

இப்பாடலில் "கண்டுர மினிய மொழிப் பெரியதம்பி" என சுவாமி விபுலானந்தர் புலவர்மணியைக் குறிப்பிடுகிறார்.

விபுலாநந்த அடிகள் எதுகை மோனைக்காக மட்டும் சொற்களைப் பெய்வதில்லை. கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தே சொற்களைத் தமது செய்யுட்களில் இழைப்பார் என்பது தமிழறிஞர் கண்ட உண்மை.

புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை *1899*ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி மண்டூர் என்னும் புகழ்பெற்ற முருகன் தலத்தில் பிறந்தார். இவரது தந்தையார் கோயில் வண்ணக் கராயிருந்த ஏகாம்பரபிள்ளை. தாயார் மற்றொரு வண்ணக்கரான சிதம்பரபிள்ளை என்பவரின் புதல்வி சின்னத்தங்கம் என்பவர். இக்குடும்பம் இயல்பாகவே சமயப்பற்றுள்ளதென்பது சொல்லாமலே விளங்கும். இந்தக் காரணத் தினால் இளமையில் கல்முனையில் கல்வி கற்கச் செல்லவேண்டியிருந்த பெரியதம்பி வீட்டோடு இருந்து தமிழ் கற்க வேண்டியிருந்தது. இளமையிலேயே சூடாமணி, நிகண்டு, திருச்செந்தூர்ப் புராணம், மகாபாரதம், கந்தபுராணம், பெரியபுராணம், முதலிய நூல்களைப் புலவர்மணி கற்றார்.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து அல்லவா? இளமையில் அவர் கற்ற புராண, இதிகாசங்கள், பழந்தமிழ் இலக்கியங்கள் மேல் அவரைப்பற்றுக் கொள்ளச் செய்ததுடன், அவரையும் ஈடிணையற்ற புலவர்மணி ஆக்கிவிட்டன. வெண்பாவுக்கோர் புலவர்மணி எனப் பிற்காலத்தில் தமிழறிஞரால் அவர் போற் றப்பட்டார். கல்வியிற் பெரியன் கம்பன் என்பது போல் கவிதையிற் பெரியன் பெரியதம்பி என மதிக்கப்பட்டார்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளையும், புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளையும் ஒரு சாலை மாணாக்கர் மட்டுமல்ல, பல வருடங்கள் ஒன்றாக வாழ்ந்து ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்ட இரட்டையர்களும் ஆவர்.

விபுலாநந்த அடிகளின் தலையாய படைப்புகள் மூன்று. அவை யாழ் நூல், மதங்கசூளாமணி, நடராஜ வடிவம் என்பன.

அதைப்போலவே புலவர் மணியின் தலையாய படைப்புக்களும் மூன்று. அவை பகவத்கீதை வெண்பா கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்பன. இம் மூன்று நூல்களும் வெவ்வேறு கால கட்டத்தில் வெளிவந்தாலும் கருத்தாழத்திலும் கவித்திறனிலும், தத்துவ நோக்கிலும் ஒத்த இயல்புடையனவாகவும் அந்தர்முக ஆத்மீகப் பார்வையுடை யனவாகவும் உயர்ந்து நிற்பது கண்கூடு.

புலவர்மணியின் குருவான விபுலாநந்த அடிகளாலேயே மிகவும் போற்றப்பட்ட "பகவத் கீதை வெண்பா" என்ற இந்நூல் அவர் முயற்சியாலேயே அரங்கேற்றம் பெற்றது என்பதும், இந்நூலின் சிறப்பை உயர்த்துவதாகும். பகவத் கீதையை ஆழ்ந்து படித்த பலர், தமது உள்ளத்தில் ஏற்படும் தெளிவினால் மிகவும் நெகிழ்ச்சியுற்று, தமது உள்ளத்துணர்வுகளை நூலாக வடிப்பது மரபாக வந்துள்ளது. புலவர்மணிக்கும் அத்தகைய அனுபவம் ஏற்பட்டுள்ளது.

"இருபத்தெட்டு நாள் வரை மனைவியார் ஆஸ்பத்திரியில் நான் ஞானசெல்வம் வீட்டில், அங்கே எனது மன அமைதிக்கு வாய்ப்பான புத்தகம் ஏதும் இருக்குமோவென ஞானசெல்வத்தின் மேசையில் பார்த்தேன். தெய்வக் குறிப்பால் ஒன்று கிடைத்தது. அது பகவத்கீதை. பாரதியாரின் மொழி பெயர்ப்பு, ஞான செல்வத்தின் வீட்டிற் கிடைத்தது மெய்ஞானச் செல்வமாகிய அந்நூல், இருளிலும் துன்பச் சூழலிலும் எனக்கோர் இன்ப ஒளியாய் அமைந்து விட்டது" என்று அதனை அவரே கூறுகிறார்.

புலவர்மணியின் சுயசரிதை எனக் கொள்ளத்தக்க "உள்ளதும் நல்லதும்" என்னும் நூலில், அவர் தனது வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களில், சிலவற்றைக் குறிப்பிட் டுள்ளார். அதில் பேனாவின் வலிமையைக் குறிப்பிட்டு, எழுத்தில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய நிதானத்தை வலியுறுத்தி உள்ளார்.

புலவர்மணி தமது வாழ்வில் பல சோதனைகளைக் கண்டவர். பல சாதனைகளைப் புரிந்தவர். இவைகளில் பலவற்றைத் தமது 'உள்ளதும் நல்லதும்' என்ற நூலில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிவரை புலவர்மணி சாதிவேற்றுமை கடந்த சமத்துவம், சமய வேற்றுமை கடந்த சமரசம் ஆகிய இரு கொள்கைகளையும் உறுதியாகக் கடைப்பிடித்து வந்தார். உயர்மட்ட அதிகாரிகள் பலருடன் எவ்வாறு அவர் நட்புரிமை பூண்டிருந்தாரோ, அதே போல், அடிமட்ட நிலையில் உள்ள பலருடனும் அவர் நெருங்கிப் பழகினார். பட்டம், பதவி, பணம் என்பவற்றை விட பண்பு, ஒழுக்கம், பரிசுத்தம் என்பவையே அவரை அதிகம் ஈர்த்தன. அவருடைய தனித்துவப் பண்புகளில் இதுவும் ஒன்று. புலவர்மணி அவர்கள் ஏராளமான கவிதைகளை யாத்திருந்த போதும், 'புலவர்மணி கவிதைகள்' என்னும் ஒரேயொரு தொகுதியே நூலுருவில் வெளிவந்துள்ளது. இவரது கவிதைகளில் நாட்டுப்பற்றும் தேசிய உணர்வும் மேலோங்கி நிற்பதைக் காணலாம்.

"இலங்கை மணித்திரு நாடெங்கள் நாடே இந்த
இனிய உணர்ச்சி பெற்றால் இன்பவீடே"

என்ற அவருடைய பாடல் தேசிய கீதமாகக் கொள்ளத்தக்க அளவு கருத்தாழமும் கவிநயமும், இசை அமைதியும் கொண்டுள்ளதென்பது அறிஞர் பெருமக்களுடைய கருத்தாகும்.

இவ்வாறே, இலங்கை சுதந்திரம் அடைந்த பின் முதன் முதல் உருவாக்கப்பட்ட கல்லோயா நீர்த்தேக்கம் அங்குரார்ப்பண வைபவம் தொடர்பாக அவர் இயற்றிய "வாழி கல்ஓயா கங்கை" என்னும் பதிகம், சிலப்பதிகாரத்தில் வரும் "நடந்தாய் வாழி காவேரி..." என்னும் கானல் வரிப் பாடல்களை நினைவூட்டுவதாகும்.

வாழ்நாள் முழுவதும் தமிழ்ப்பணி புரிந்த மகா கவிஞர் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, தமது 80வது வயதில் 2.11.78 அன்று அவர் வாழ்ந்த ஊரான குருக்கள் மடத்தில் அமரத்துவம் அடைந்தார்.

நன்றி: வீரகேசரி மார்கழி 1990

ஈழநாட்டுப் புலவர்களுள் ஒருவராய் விளங்கும் பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் 'செஞ்சொல்லும் செம்பொருளும் சேர்ந்து மிகமிளிர யாத்த பகவற்கீதை வெண்பாவினை அரங்கேற்றுவாராயினர். (ஈழகேசரி 30–1௨–1951)

# தமிழ்ப் பகவற்கீதை

## – மா. பீதாம்பரன் –

"பரனே அருள் பரமார்த்தம்" ஆகிய பகவற்கீதையினை "வேத முடிவென்றே வியனுலகெலாந் துதிக்கும்." இது 'கண்ணன் கடைந்தளித்த கற்பரிய ஞானமெனுந் தண்ணமுது' உலகம் போற்றும் உயர் திரு நூலாய் விளங்கும் இக்கீதை பல மொழிகளிலும்" பெயர்க்கப்பட்டுள்ளது. இக்கீதையினைத் தமிழ்மொழியில் எழுதினோரும் பலராவர். சில செய்யுளாலானவை; பல உரைநடையாலானவை. இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன் இருந்த ஸ்ரீபட்டனார் என்னும் பெரியாரினால் இக்கீதை விருத்தம் என்னும் வெண்பாவினால் இயற்றப்பட்டுள்ளது. இதற்குப் பெயர் 'பரமார்த்ததரிசனம்' என்பது. ஏறக்குறைய 600 ஆண்டுகட்கு முன்னர் விளங்கிய சொரூபானந்த சுவாமிகளாலே, தொகுக்கப்பட்ட சிவப்பிரகாசம் என்னும் இந்துசமய இலக்கியக் களஞ்சியத்தில் இப்பரமார்த்ததரிசனச் செய்யுட்கள் பலவுள. ஆதலின் பரமார்த்ததரிசனம் என்னும் தமிழ்ப் பகவற்கீதை விருத்தம் அறுநூற்றின் மிக்க ஆண்டுகட்கு முற்பட்டதாகும். இதற்குப் பழைய உரை ஒன்றுண்டு. ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் இயற்றிய விருத்தி உரையும் ஒன்றுண்டு. இதனை அரிய வசனத்தில் எழுதி வெளியிட்டருளினார் வடிவேலுச் செட்டியாரவர்கள். ஸ்ரீபட்டனார் காலத்தின் பின், வேதாந்த தேசிகர் காலத்தில் விளங்கிய வாதிகேசரி ஸ்ரீ அழகிய மணவாள ஐயர் வெண்பாவினால் அருளிச் செய்தார்கள். இதனை 'மணவாள மாமுனிவன் சொன்னான் "தொகையாரும் வெண்பாச்சுரந்து". இது 723 வெண்பாக்களைக் கொண்டது. சுதேசமித்திரனில் வெளியாகும் 'தேர்த்தட்டு வார்த்தை' ஆசிரியர் மேற்கோளாக எடுத்தாள்வன இவ்வெண்பாக்களேயாம். இஃது இராமானுசர் உரையினைத் தழுவி எழுதப்பட்டுள்ளது.

இவர் காலத்தின் பின்னர் பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளிற் புலவராய் விளங்கிய திருநயம் முத்துப் புலவர் பி.ஏ. அவர்கள் 'ஸ்ரீ

பகவத்கீதை வெண்பா' என்னும் அழகிய நூலை இயற்றி வெளியிட்டார்கள். இது சங்கராச்சாரியரின் கருத்துக்கமைய எழுதப்பட்டுள்ளது.

ஆரியமும் செந்தமிழும் ஆங்கிலமும் கைவரப்பெற்ற இவ்வாசிரியர் இயற்றிய வெண்பா படிக்குந்தோறும் இன்பம் பயப்பது. முதனூற் சுலோகம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே ஒவ்வொரு வெண்பா அமைந்துள்ளது. இதனால் முதனூலை ஒட்டிப் படிப்பவர்க்கும் ஆங்கில மொழிபெயர்ப்புகளை ஒட்டிப் படிப்பவர்களுக்கும் இவ்வரிய வெண்பா நூல் பெரும் பயன் அளிக்கும். பகவற்கீதையினைக் கும்மிப்பாடலாக மொழி பெயர்த்தவர் முதுபெரும்புலவர், அகலிகை வெண்பா ஆசிரியர் வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் அவர்களாவர். இன்னும் இதனை அரிய செய்யுளில் யாத்தவர் பாரி வெண்பா ஆசிரியர், பேராசிரியர் இராகவையங்கார் அவர்களாவர்.

கண்ணன் பாட்டின் உயர்வு நோக்கியே பலப்பல மொழிகளிலும் பலப்பல புலவர்கள் செய்யுள் நடையிலும் உரை நடையிலும் மொழிபெயர்ப்பாராயினர். இதன் சிறப்பினை நோக்கியே யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தாரும், ஈழநாட்டுப் புலவர்களுள் ஒருவராய் விளங்கும் பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் 'செஞ்சொல்லும் செம்பொருளும் சேர்ந்து மிகமிளிர' யாத்த பகவத்கீதை வெண்பாவினை அரங்கேற்றுவாராயினர். ஆரிய திராவிட பாஷைகளின் வளர்ச்சியிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கும் இச் சங்க அமைச்சர் அவர்கள் அரங்கேற்றிய அரிய நூலினை வெளிவரச் செய்வாரென்பதைத் தமிழ் உலகம் எதிர்பார்கின்றது. அரங்கேற்றிய ஞான்று சிறப்புப்பாயிரம் அளித்த பண்டிதர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்,

"...பாட்டுக் கொருபுலவன் பாரதியென் றாரொருவர்
பாட்டுக் கிவனென்பன் யான்"
**என்று களித்தார்.**

ஓரிடம் போலெங்கும் உள்ள பரம்பொருள்
ஒப்பவட மொழி ஒன்றிலன்றிப்
பாரிடை யேபல பாஷையில் உண்டு
பரமானந்தம் என்னும் பரம்பொருளே.

நன்றி: ஈழகேசரி 30.12.1951

# அடிகளாரும் புலவர்மணியும்

பரதன் கந்தசாமி (B. Com.)
கார்மேல் பாத்திமாக் கல்லூரி. கல்முனை.

**பா**ல் பெருகத் தேன் பெருகும் மீன் பாடும் மாண்பு நிலம் மட்டக்களப்பு. அம்மண் மட்டிலாக் களிப்புடன் ஈன்றெடுத்த மாமேதைகளில் மகுடமானவர், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார். மற்றவருள் சிறந்தவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையவர்கள்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டு நூற்றாண்டுகள் கடந்தும் அறிவொளி பரப்பிக் கொண்டிருக்கும் அடிகளாரின் பிறப்பிடம் காரைதீவெனும் அழகிய கிராமம். "யாதுமூரே யாவரும் கேளிர்" எனும் உலக ளாவிய உயரிய தவத்தினை மூச்சாகக் கொண்டவர் அடிகள். உத்தியோகங்களையும் உயர் பதவிகளையும், துச்சமென நினைத்து இராமகிருஷ்ண சங்கத்தோடு தம்மை இணைத்துக்கொண்டு பூரண துறவியாகி "பணி செய்து கிடப்பதே என் கடன்" எனக் கருதி கல்விப்பணி, சமூகப்பணி, சமயப்பணி, இலக்கியப்பணி, பொதுப்பணி எனப் பல்வேறு பணிகளுக்கே தன்னை அர்ப்பணித்ததை தமிழ் கூறும் நல்லுலகம் என்றுமே மறக்காது.

மக்கள் சேவையே மகேசன் சேவையாகக் கருதி தலை சிறந்த கல்விமான்களை உருவாக்கவும், உயர் கல்லூரிகளை நிறுவவும், நல்லதோர் மாணவர் சமுதாயத்தையும் உருவாக்க அன்னார் பல்வேறு துறைகளில் முன்னின்று உழைத்தபோது தன்னையும் பிணைத்துக்கொள்ள முனைந்தவர்களில் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை எனும் பெருந்தகையாளரும் ஒருவராகும்.

ஈழமணி நாட்டின் இலக்கியக்களத்தை அகழத்துணியும் எவர்க்கும், இவ் வைர மணியாகிய புலவர்மணி புலப்படத் தவறமாட்டார். சீரிய செம்மை சான்ற உயர்ந்த உள்ளம் படைத்த புலவர்மணி மணியன்னார். ஒரு சிறந்த சிந்தனையாளர். இனிமையும் தெளிவும் கொண்ட மேடைப் பேச்சாளர். செழிப்புமிகு இலக்கியச் சீர்திருத்த நெறியாளர். பண்டிதமணி, சித்தாந்த ஞானபானு, மதுரகவி, கவியரசு, பன்மொழிச்சைவ மாமணி எனப் பல்வேறு பட்டங்கள் அவ்வப்போது கற்றோர் வழங்கிக் கௌரவித்தபோதும், புலவர்மணி என்ற பட்டத்தை மட்டும், தன்னோடு பொருத்திக் கொண்ட பெருமைக்குரியவர். 'வெண்பாவிற் புகழேந்தி என்பதனைமறந்து வெண்பாவிற் பெரியதம்பி' எனக் கவியுலகம் போற்றிய பேரறிவாளன்.

கருவிலே திருவுடைய புலவர்மணி பெரியதம்பியின் பிறப்பிடம் பழம் பெருமைமிக்க மண்டூர். இல்லற வசிப்பிடம் பெற்ற சிறப்பிடம், குருக்கள் மடம். அடிகளாரின் அன்புக்குரிய புலவர்மணி நன்றி மறவாதவோர் நேர்மைப் பண்பாளன்.

அடிகளாருக்கு ஆரம்பக் கல்வியூட்டிய குஞ்சுத்தம்பியின் குருபக்திபற்றி,

"அம்புவியிற் செந்தமிழும் ஆங்கிலமும் எனக்குணர்த்தி அறிவு தீட்டி
வம்புசெறி வெண்கலச வல்லியருள் கூட்டிவைத்த வள்ளல் குஞ்சித்
தம்பியெனும் பெயருடையோன் தண்டமிழின் கரைகண்ட தகைமையோன்றன்
செம்பதும மலர் பாதத்தை சிரத்திருத்தி எஞ்ஞான்றும் சிந்திப்பேனே.
எனப்பாடினார்.

புலவர்மணியவர்களும், தமக்கு ஆரம்பக் கல்வியளித்த சந்திரசேகரனாரை நெஞ்சில் நிறுத்தி,

"அன்னை நிகரான் பின் ஆசான் எனவந்தே
என்னைத் தமிழ்த்தாய் இணையடியில் – மன்னுவித்த
சந்திர சேகரனார் தாட்கமல நாட்போதெம்
சிந்தை மலர்க தினம்."
என நன்றிப் பெருக்கால் அடிகளாரின் வழியொன்றிப் பாடினார்.

அடிகளார் துறவற நெறிநின்று ஆயிரம் நட்சத்திரங்கள் கூடினும் ஆகிவிடா அலங்கார நிலவாக 'யாழ்நூல், விஞ்ஞான தீபம், மதங்கசூளாமணி, பூதநூல், வேதிநூல் இன்னோரன்ன பல இலக்கியங்களை அள்ளி வழங்கினார். இல்லற நெறி நின்ற இலக்கிய சொல்லேர் உழவன் புலவர் மணி.

"ஈட்டி எட்டினமட்டும் பாயும் ஏவுகணை இவ்வுலகில்
எட்டாத தூரமெல்லாம் ஏகியே பட்டுருவிப்
யாயும் எழுது கோல் பாவிப்போம் நாமதனை
நேசக் கரம் பிடித்து நின்று""

என்று கவிஞர், குழந்தை, எழுத்தாளர் சமுதாயத்தைக் கூவி அழைக்கிறார். வெண்பாகவி பாடுவதில் தனக்கென் ஒரு தனியிடத்தைப் பிடித்திருந்த புலவர்மணி சமூகத்தில் புரையோடிப்போன பல்வேறு பிரச்சனைகளை மிகவும் அழகாகப் பாடி இருப்பது அன்னாரின் உயர்வான நோக்கத்தையும், ஒரு பண்பட்ட சமுதாயத்தை உருவாக்க உழைத்த தன்மையையும் காட்டுவதாக உள்ளது. அதுமட்டுமல்ல, அவர் ஒரு தீர்க்கதரிசியானவரும்கூட என்பது அவர் பாடல்களில் துல்லிய மாகத் தெரிகிறது.

"இருதயத்தின் ஈரிதழ்போல் இந்து முஸ்லீம் யாம்
ஒருவயிற்றுப் பிள்ளைகள் போலுள்ளோம் – அரசியலில்
பேராசை கொண்டோர் பிரித்து நமை வேறாக்கி
ஆராயார் செய்வார் அழிவு"

என்ற பாடல் இன்றைய சமகாலத்திற்கு சமாதானத்தின் ஒற்றுமைக் குரலாய் ஒலிப்பதைக் காணலாம்.

அடிகளாரின் மகாகாவியமான யாழ்நூலையும், மதங்க சூளாமணியையும், இதர நூல்களையும் படித்துச் சுவைத்த புலவர்மணி, மகா பாரதத்திலே கண்ணபிரான் அர்ச்சுனனுக்கு உபதேசித்த பகவத்கீதை சுலோகங்களை அழகு தமிழில் வெண்பாக்களாக்கி கரும யோகம், பக்தியோகம், ஞானயோகம், எனப்பகுத்து 'பகவத்கீதை வெண்பா' எனும் இலக்கிய நூலை ஆக்கினார். அந்நூலை,

"சங்கத் தமிழ் மதுரைச் சத்திரத்தில் வைத்தென்னை
அங்குவசமாக்கி அருள் செய்தே – தங்கியெம்
புத்தி புகுந்த விபுலானந்தர் பொன்னடிக்கண்
வைத்திந்நூல் நெஞ்சே வணங்கு"

என அடிகளாருக்கு சமர்ப்பணம் செய்தார். இந்நூல் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றதும் குறிப்பிடக்கூடிய வொன்றாகும்.

புலவர்மணியவர்கள் பாடிய மண்டூர் பதிகத்துக்கு அடிகளார் பாடிக் கொடுத்த சிறப்புப் பாயிரத்தில்,

"பண்டூரும் முகிற் குலங்கள் எமதிறைவர் மருகர் திருப்பதி ஈதென
விண்டூர மழை பொழியும் சிறப்பதனால் வளம்மலிந்து மிகந்து தோன்றும்
மண்டூரிலுறை முருகன் மலரடிக்கோர் திருப்பதிகம் மரபிற் சொன்னாள்
கண்டூரு மினிய மொழிப் பெரியதம்பியெனும் கலை வல்லோனே"

எனப் பாடி இருப்பதும், அடிகளாருக்கும், புலவர்மணிக்கும் இருந்த ஈடுபாட்டைக் காட்டுவதாகவுள்ளது.

"புகுந்த நல்துறையி லெல்லாம் புகழேந்திக் கொள்ளும்
தகுதியை பெற்றதனனார் தக்க நல் புகழைச் சேர்க்க
மிகுநலம் பெற்ற மேதை விபுலானந்தர் நட்பு பெற்றோன்
வெகுவான பாக்கள் யாவும் வெளிவர வேண்டும்"

எனப் பாராட்டப்பட்ட புலவர்மணிக்கு ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தேழாம் ஆண்டு நவம்பர் மாதம் இருபத்தேழாம் திகதி அகிம்சாமூர்த்தி அண்ணல் காந்தி இலங்கைக்கு விஜயம் செய்த போது அவரை அடிகளோடு கூடி வரவேற்கும் வாய்ப்பும் அடிகளின் வேண்டுதலில் வாழ்த்துப்பா பாடி வழங்கும் பாக்கியமும் கிடைத்தது.

சுவாமி விபுலானந்த அடிகளார் ஒரு சைவசமயத் துறவியாக இருந்த போதிலும், சமரச நோக்கமும் சமயப் பொறையும், அறிவியல் விழிப்பும் பெற்றிருந்தார் என ஆன்றோர் கூறுகின்றனர். அதனாற்தான் போலும் அவர் இயற்றிய துதிப் பாடல்கள் எல்லாம் சமகாலத்தவரால் வரவேற்கப்படுகின்றன.

"வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரேதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது"

போன்ற பாடல்கள் இதற்குத் தக்க சான்றாகும்.

மொழிஞானம், கலைஞானம், விஞ்ஞானம், மெய்ஞானம் முதலிய பல்வேறு துறைகளில் எல்லாம் தமக்கென்று ஒரு வழி அமைத்து அவ்வழி நின்று உயர்நிலை அடைந்திட்ட அடிகளாரும், அவரின் அடியொற்றி வாழ முற்பட்ட புலவர்மணியும் காட்டிச் சென்றுள்ள முன்மாதிரியானது உண்மையில், முற்போக்கான சிந்தனையுள்ள ஒவ்வொருவராலும் பின்பற்றக் கூடிய, பின்பற்ற வேண்டிய ஒன்றாகும்.

"அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியோரை
பேணித் தமராகக் கொளல்"

எனும் பொய்யாமொழிப் புலவன் வள்ளுவனார் கூற்றுப்படி அடிகளாருக்கு நூற்றாண்டு விழாவெடுக்கும் இக்காலகட்டத்தில், அன்னாரின் அளப்பரிய சேவைகளை நினைவுகூரும் வேளையில் அவர் ஆற்றுப்படுத்திய அமரர் புலவர்மணி அவர்களையும் தமராக நோக்குவது பெருமைக்குரியது என்பதைத் தமிழ்கூறும் உலகம் என்றும் மறுக்காது.

நன்றி: அணையாவிளக்கு

# வெண்பாவில் புலவர்மணி

– ஜனாப் எஸ்.ஏ.ஆர்.எம். செய்யத் ஹஸன் மௌலானா –

'வெண்பாவில் புலவர்மணி' என்னுஞ் சிறப்புப் பெயர் ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களைக் குறிப்பதாகும். 1951ம் ஆண்டு மட்டக்களப்புத் தமிழ்க் கலைமன்றம் ஆ. சபாபதி அவர்கள் மூலம் புலவர்மணிப்பட்டம் வழங்கியது. கருவிலே திருவுடைய அன்னார் இலக்கிய இலக்கணங் கற்றதனால் தமது புலமையைத் தூய்மை செய்து கொண்டார். கவிதாசக்தியை வளர்த்துக் கொண்டார் 'எல்லாப் புலவர்க்கும் வெண்பாப்புலி' என்னும் வெண்பாத் தொடர் மூலம் வெண்பாப் பாடுவது சிரமம் என்று கருதப்படுகிறது. காரணம் மற்றப் பாக்களில் அதற்குரிய தளை யல்லாத வேறு தளைகளும் வரலாம். ஆனால் வெண்பாவிலோ இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் அல்லாத வேறு தளை எதுவும் வரக்கூடாது. தளைதட்டாமல் வெண்பாப் பாடவேண்டும். புலவர்மணி அவர்கள் வெண்பாவில் கனிச்சீர் சிறுபான்மை வரலாம் என்னும் விதிக்கேற்பவும் பாடியுள்ளார்கள். (பார்க்க புலவர்மணி கவிதைகள் 83ம் பக்.)

தமிழ் இலக்கிய உலகில் வெண்பாவில் இலக்கியம் படைத்துச் சிறப்புப் பெற்றவர்கள் இருவர். ஒருவர், புகழேந்திப் புலவர். மற்றவர் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள். இருவரின் ஆக்கத்திற்கும் முதல் நூல் மகாபாரதம். புகழேந்திப் புலவர் வடமொழி மகாபாரதத்தில் வரும் ஆரணிய பருவத்தின் 'நளோபாக்கியானம்' என்பது நளவெண்பா பாடுவதற்கும், புலவர்மணி அவர்கள் பாரதப் போர்க்களத்தில் ஸ்ரீகிருஷ்ணனுக்கும் அர்ச்சுனனுக்கும் அமர்க்களத்தில் நடந்த பேச்சு பகவத்கீதை வெண்பாவாகப் பாடுவதற்கும் காரணமாயிற்று.

கதைத் தொடர்ச்சியறாமல் வெண்பாவில் காவியம் பாடுவது மிகவுஞ் சிரமமாகும். புகழேந்திப் புலவர் நேரிசை வெண்பாவில் அத்தகைய காவியம் பாடியதன் காரணமாக 'வெண்பாவில் புகழேந்தி' என்னுஞ் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார்.

"வெண்பாவில் புகழேந்தி பரணிக்கோர்
ஜயங்கொண்டான் விருத்தம் என்னும்
ஒண்பாவிற் குயர்கம்பன் கோவை உலா
அந்ாதிக்கொட்டக் கூத்தன்"

எனத்தொடரும் பாடல் மூலம் புகழேந்தியாரின் சிறப்புப் பெயரும் வாழ்கின்றது.

'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' 'பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்' என்னும் கருத்து வேரூன்றியிருந்த தமிழகத்தில் வெண்பா முக்கியத்துவம் பெற்ற காரணத்தை ஒளவையார் மூலமாகவே அறிகின்றோம். கல்வி கற்கும் மக்கள் வெண்பாவைக் கற்று அறிவு பெற்றுக்கொள்ளவேண்டும். ஏனெனில் அன்றைய சமூகத்தில் வாழ்ந்த ஒளவைப் பிராட்டியார்,

"வெண்பா இருகாலில் கல்லானை
வெள்ளோலை கண்பார்க்க கையால்
எழுதானை – பெண்பாவி பெற்றாளே
பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
எற்றோ மற்றெற்றோமற் றெற்று

என்ற பாட்டில் இரண்டுமுறை ஒரு வெண்பாவைச் சொன்னால் சராசரி அறிவுடை ஒருவன் அதைப் பாடம் பண்ணிவிடலாம் என்ற கருத்தும் அமைந்திருக்கிறது. இதனையே பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் 'நல்வழி, வாக்குண்டாம், திருக்குறள், எந்த அமைப்பில் பொருத்தமுற அமைக்கப் பட்டனவோ அந்த அமைப்பில் கீதா மாத்திரையை அமைப்பதே பொருத்தம். ஒவ்வொரு மாத்திரையும் ஒவ்வொருவர் இருதயத்திலும் நாவிலும் தவழ்ந்து கொண்டிருக்க வேண்டும். உற்றுழி உதவுங்கோல் உதவக்கூடிய இடத்தில் இருக்க வேண்டும். அதுபோல் உற்றுழி உதவும் கீதாமாத்திரை அதற்குரிய யாப்பில் அமைய வேண்டும். இதனைப் பிறப்பிலேயே செய்யுள் செய்யும் ஆற்றல் படைத்தவரான புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களுடைய மனசில் உணர வைத்தது தெய்வம்' என்று கூறுகிறார்.

பாரதியார் மொழி பெயர்த்த பகவத் கீதையை நேரிசை வெண்பாவிலும் கலிவெண்பாவிலும் பாடியதால் 'வெண்பாவில் பெரியதம்பி' என்று முதல் முதலில் பட்டஞ் சூட்டியவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களாகும். இப்போது 'வெண்பாவில் புலவர்மணி' என்னுஞ் சிறப்புப் பெயர் தமிழ் இலக்கிய உலகில் பிரபல்யம் பெற்றுவிட்டது.

"கீதை கவிசெய்து கீர்த்தி மிகப்பெற்றான்
ஏ பெரியதம்பி எனதன்பன் – ஓதக்கேள்
பாட்டுக்கொரு புலவன் பாரதியென்றாரோருவர்
பாட்டுக்கிவனென்பன் யான்"

எனப் பாடுகின்றார் பண்டிதமணி சி. க. அவர்கள்.

பகவத்கீதை சொல்லும் சுலோகங்களின் கருத்து உள்ளத் திலே கனிந்து வெண்பாவாக ஆக்கப்பட்டுள்ளது. கவிச் சக்கரவர்த்தி கம்ப நாடனைப் போன்று தொகுத்துச் சொல்லிப்பின் விரித்துக் கூறும் திறனை புலவர்மணி அவர்களின் பொருட் சுருக்கம் என்னும் வெண்பாவின் மூலம் பின்னால் கூறுகின்ற சிறப்பு அன்னாரின் புலமையுள்ளத்தைக் காட்டுகின்றது.

கடமைதனை விட்டுக் கலங்கிநின்ற பார்த்தன்
திடமடையக் கண்ணபிரான் தேற்றி – உடலுயிர்கள்
இத்தகைய ஞானமிது யோகமிது என்றுபதே
சித்த பொருள் கீதைத் தெளிவு"

என்பது முதலாம் அத்தியாயப் பொருட் சுருக்கப் பாடலாகும். இவ்வாறு அத்தியாயங்கள் தோறும் பாடியுள்ளார்கள்.

மட்டக்களப்புத் தமிழகத்தில் வழக்கில் உள்ள அசைச் சொல்லை தாம்படைத்த கீதை வெண்பாவில் ஆண்டிருக்கும் அழகு மட்டக்ளப்புக்குப் பெருமையீட்டித் தருவதாகும். தெரிந்து கொள், காண்பாய் என்னும் பொருளில் வரும் "காண்டி" என்னும் முன்னிலை ஏவல் வினைமுற்று என்னும் சொல்லை புலவர்மணி 'காண்டிகா' எனப்பாடி மண்வளச் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்து 'கா' என்னும் அசை நிலை வரும் வண்ணஞ் செய்து மட்டக் களப்புத் தமிழகத்தின்

மண்வாசனையை மணம் பெறச் செய்துள்ளார்.

பாரதியார் பகவத்கீதை முப்பதாவது சுலோகம் 'காண்டீவம் கையிலிருந்து நழுவுகிறது. உடம்பில் எரிச்சல் உண்டாகிறது. என்னால் நிற்கமுடியவில்லை, என் மனம் சுழலுகிறது! என்பதாகும். இதனைப் புலவர்மணி அவர்கள்,

"காண்டீவம் கைந்நழுவும் காய்ந்தென் உடம்பெரியும்
காண்டிகா கால்கள் சழலுமே – நீண்டிங்கு
நிற்க முடியவிலை நில்லா தொருநிலையிற்
சுற்றும் மனமுஞ் சுழன்று"

**எனப் பாடுவதன் மூலம் வெண்பாவில் புலவர்மணியாகின்றார். 'கா' என்பது அசைச்சொல் என நன்னூல் இலக்கணம் கூறுகின்றது. மட்டக்களப்பு நாட்டுப் பாடல்களிலும் 'கா' என்னும் அசைச்சொல் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு வெண்பாக்கள் தோறும் உள்ள சிறப்புக்களை விரித்துக் கொண்டே போகலாம்.**

இந்நூல், பாக்களுள் முதன்மை வாய்ந்ததான வெண் பாவால் ஆக்கப்பெற்றது. இடையிடையே கலிவெண்பாவும் உண்டு. அஃது இயற்கையாகப் பேசுவது போலெழும் செப்பலோசையுடையது. சங்ககாலப் புலவர்கள் மிகுதியாகக் கையாண்ட நீர்மையது. திட்ப நுட்பம் மிக்கது. தம் நுண்மாணுழை புல நலனால் வெண்பாவில் யாத்துதவினர். 'சாத்திரக் கருத்துக்கள் செய்யுள் வடிவம் பெறும்போது தெளிவு பிரதான அம்சம். அது அநாயாசமாகவே சொற்கள் எழுந்து குதிகொண்டு நடக்கின்ற செந்நாப்படைத் செம்புலச் செல்வர்களுக்கே அமைவது. இதனைப் புலவர்மணியின் வெண்பாக்களில் நன்கு காணலாம் என்பர் அன்னாரின் வித்தையிற் தோழர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்.

புலவர்மணி அவர்களின் வெண்பாப் புலமைக்குக் காரணம் கவிதையைப் பற்றி அன்னார் ஏற்படுத்திக் கொண்ட பிரமாணங்களாகும். 'வெள்ளம்போல் பாய்ந்து சென்றாலும் செய்யுள் வரம்புக்கு உட்பட்டே செல்கிறது. அது 'மாத்திரை முதலா அடி நிலைகாறும்' குறித்த நோக்கம் அமையப் படுவதாதலின் வரம்பு கடவாத ஒழுக்கம்

அதற்குரியதாயிற்று. வரம்புக்குட்பட்ட நடையினால் அது வளம் பெற்று வாழ்கிறது.

"மக்கள் நடைக்கு வரம்புண்டது போல்
மக்கள் கவிக்கும் வரம்புண்டு – மக்கள்
வரம்பு கடந்தால் மதியார் கவியும்
வரம்பு கடந்தால் வழு"

புலவர்மணி அவர்கள் செய்யுள் பற்றிக் கொண்டுள்ள இத் தகைய கருத்துக்களே அன்னாரின் கவிதா சக்தியும் கவித்துவப் புலமையும் இமாலயமாகக் காரணமாகும்.

'செய்யுள் அமைப்பு உடலமைப்புப் போன்றது. அதன் கண்ணுறுப்பமைதி உள்ளது. இந்த உறுப்பமைதி ஒரு வரம்புக்கு உட்பட்டது. இதனால் உடம்பு நன்றாகச் செய்யப்பட்டது. உறுப்பமைந்த உடல் உடலுக்குகேற்ற உயிர். உயிரோடு கூடிய உடம்புக்கேற்ற அழகு. இதற்கேற்ற குணம், குணத்திற்கேற்ற நடை இவைகளால் உடல் கவர்ச்சியும் பயனும் தருகிறது. இதுபோலவே உறுப்பமைந்த செய்யுள். செய்யுளாகிய உடம்புக்கு உயிர் போன்ற பொருள். பொருளைக் கவரும் அணியென்பன நல்லியற் கவிஞர் நாவில் வந்தமைவதால் இனிய செய்யுள் பிறக்கின்றது' என்பர் புலவர்மணி அவர்கள். வெண்பாக்களின் மூலம் மக்களின் நெஞ்சக்கழனியை உழுது, பண்படுத்தி நற்பயிராம் வித்துக்களை விதைத்து நல்வாழ்வாம் பயிரைக்கண்டு மகிழ்கின்ற புலமையின் குறிக்கோளை ஏ. பெரியதம்பிப்பிள்ளையிடம் காண்கின்றோம்.

'கண்ணபரமாத்மாவுக்கு அர்ஜுனன் எப்படியோ அப்படித் தான் சுவாமி விபுலானந்தருக்கு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை' என்பர் எஸ்.டி. சிவநாயகம் அவர்கள். காரணம் நண்பராக, உறவினராக மட்டுமல்லாமல் குருவாகவும் விளங்கினார்கள். வெண்பாவில் புலவர்மணியாக முதன் முதல் மதிப்பைக்கொடுத்த வரும் சுவாமி விபுலானந்தர் என்றே கூறவேண்டும். ஏனெனில் 1944ம் ஆண்டு கீதை வெண்பா வீரகேசரியில் வெளிவந்து வாசகர்கள் எல்லோரினதும் வரவேற்பைப் பெற்றபோது வெண்பாப் புலவர் அவர்களுக்கு மதிப்புக்

கொடுக்கும் வண்ணம் விபலானந்த அடிகள் புலவர்மணி அவர்களை அழைத்து ஸ்ரீராமகிருஷ்ண மண்டபத்தில் வைத்து வெண்பாக்களை விரித்துரைக்கச் செய்து பெருமை பெற்றார். 'அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்'என்று அடிகளாரைப் பணிகின்றார் புலவர் மணி.

அதன்பின் 1951ம் ஆண்டு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் திரு சு. நடேசபிள்ளை தலைமையில் பகவத்கீதைவெண்பா அரங்கேற்றப்பட்டது. அரங்கேற்று விழாவில் பண்டிதர் வ. மு. இரத்தினேசுவர ஐயர் அவர்கள்,

"செஞ்சொல்லும் செம்பொருளும் சேர்ந்து
மிளிர்வடைய மிஞ்சுமிசை வீறு கொள
வெண்பாவால் – தஞ்சமென
நற்பகவத் கீதை நவின்றிட்டான் ஆரமிர்தாய்ச்
சொற் பெரியதம்பியெனச் சொல்:

என்னும் நேரிசை வெண்பாவினால் முதற் புகழாரஞ் சூட்டினார்கள்.

வெண்பாவில் காவியம் பாடுவது சிரமம் என்பதை விட மிகச்சிரமம் சாஸ்திரக் கருத்துக்களை வெண்பாவாகப் பாடுவதாகும். ஏனெனில், பகவத்கீதை பிரஸ்தானதிரயம் என்று கூறப்படுவனவற்றுள் ஒன்றாகும். பிரம்ம சூத்திரம், உபநிஷதம், பகவத்கீதை இம்மூன்றையும் பிரஸ்தானத்திரயம் என்பர். மேற்கூறிய சாஸ்திரக் கருத்துக்ளுக்கு மாறுபடாமல் வெண்பாப் பாடுவதென்றால் கண்ணபிரான் வாக்குக் கூறும் 'ஆயிரம் கவிஞர் களுள் ஒருவனே உண்மையிற் புலவனாகின்றான். பல்லாயிரம் யோகியருள் ஒருவனே ஞானியாகின்றான். என்னும் கருத்துக்கு இலக்கணமாயமைந்த, வெண்பாவில் புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை அவர்களாலேயே முடியும் என்று கூறினால் உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை.

தனிப்பாக்கள் மூலமாகவும் ஏ. பெரியதம்பிப்பிள்ளையவர்கள் வெண்பாவில் புலவர்மணியாகத் திகழ்கின்றார்கள். ஆழம், அமைதி, அடக்கம் நிறைந்த அன்னாரின் வெண்பாக்கள் அழகும் இனிமையும், தெளிவும் செம்மையும் நிறைந்து காணப்படுவன. அட்டாளைச்

சேனைக் கடற்கரையில் அந்தி மாலை வேளையில் சிவப்பு நிறச் சாரியணிந்த பெண், எருமைக்கூட்டம், காடும் கடலும் எல்லாம் செவ்வானத்தின் ஒளியால் சிவப்பு நிறத்தால் காட்சியளித்தன, என்று சொல்ல உடனே நல்லையாவையும் முத்தையாவையும் இணைத்த கவியோவியம் பின்வரும் வெண்பாவாகப் பிறந்தது.

"நீலக் கடல்சிவப்ப நீண்ட மேல்வான் சிவப்பப்
பாலுற்ற கார் வண்ணன் பால் வண்ணன் – மேல் சிவப்பக்
கான்சிவப்ப மேதிக் கணஞ் சிவப்ப வீசிற்றே
தேன் மொழியாள் சேலைச் சிவப்பு"

என்னுங் கவிதை புகழேந்தியாரின்

"நீள் நிறத்தாற் சோலை நிறம் பெயர.
நீடியதன் தாள் நிறத்தால்
பொய்கைத் தலஞ் சிவப்ப"

என்னும் காட்சித் திறன் மிகுந்த வெண்பாவை நினைவூட்டுகிறது.

அறுபது அடிகளைக்கொண்ட கலிவெண்பாவில் அறுபது வயதெய்திய கி.வா.ஜகந்நாதன் அவர்களுக்கு *30.08.1966*ம் ஆண்டு மட்டக்களப்பு நகரமண்டபத்தில் வைத்து புலவர்மணி அவர்கள் மணிவிழா வாழ்த்துமடல் பாடிய காட்சியும், அன்னார் அதனை வழங்கிய மாட்சியும் மாநாட்டிற்குச் சிகரம் வைத்தாற் போன்றிருந்தது. அன்னாரின் தனிப்பாடல்களுள் கீரீடம் போன்று விளங்கி உவமை நயங்களும் கவித்துவமும் மிகுந்த அப்பாடலின் ஈற்று வெண்பாவில்,

"சதாபிஷேகங் கண்ட சான்றோனென நீம்
சதா மங்கலந் தழைத்து வாழ்க – சதா நிதமு
மல்லல் வளஞ்சுரக்கும் மட்டுநன்னாட்டு வயல்
நெல்லினும் பல்லாண்டு நிறைந்து"

என்று வாழ்த்துகின்ற அழகு எல்லோரையும் கவர்ந்தது. கலைமகள் ஆசிரியர் அவர்களும் தமிழகத்தில் இத்தகைய வெண்பா வாழ்த்து தனக்குக் கிடைக்கவில்லை என அன்னார் கூறியதன்

மூலமும் வெண்பாவில் புலவர்மணியாகின்றார் ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்.

நெல்லின் மேல் வைத்துப் பொருள்கொள்ளக் கூடிய தாகவும் அஸீஸ் துரையின் மேல் வைத்துப் பொருள் கொள்ளக் கூடியதாகவும் சிலேடையாக அமைத்து 'நெல்லும் அஸீஸ் துரைக்கு நேர்' என முடியும் வெண்பா 'புவியினுக் கணியாய்' எனத் தொடங்கும் கம்ப நாடனின் சிலேடை விருத்தப்பாவை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றது.

எழுத்து சொல் இலக்கணம் வெண்பாவில் பாடிய நேமிநாத ஆசிரியரைப் போன்று புலவர்மணி அவர்கள் இளங்கவிஞர்களுக்கு மாத்திரை ஓசை முதலான யாப்பிலக்கண விளக்கத்தை பின்வரும் வெண்பாவில் பாடியுள்ளார்.

"மாத்திரையில் நின்றும் வளருமிசை யவ்விசையால்
நாத்திருந்தும் செய்யுள் நடக்குமே சாற்றின்
ஒரு மாத்திரை தப்பின் ஓசை கெடும் பாட்டும்
உருமாற்றம் பெற்றொழியும்"

இந்நாட்டு முஸ்லிம்களும் தமிழர்களும் இதயத்தின் ஈரிதழ் போல் ஒருதாய் மக்கள் போல் வாழ்கின்றார்கள் என்னும் வெண்பா புலவரின் இன ஐக்கியத்தை எடுத்துக் காட்டுகின்றது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்னுரைக்கு மதிப்புக் கொடுத்து

"அகில உலகிற்கும் ஆன்மிக வாழ்வும்
இகவாழ்வும் நல்கும் இனிய – புகலாகும்
நம்பிநபி நாயகனார் நன்மொழிகளம் மொழிகள்
நம்பினார் சேர்வார் நலம்"

எனப் பாடுகின்றார். புலவர்மணி கவிதைகள் மூலம் அன்னாரின் சமகாலத்திலும், பின்னரும் தனிப்பாடல்களை வெண்பாவில் – இவரைப்போன்று தமிழுலகில் எவரும் பாடவில்லை என்பதனாலும் ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் வெண்பாவில் புலவர்மணியாகின்றார்.

குருக்கள் மடத்தில் சுரந்த பாட்டாறு தமிழ் இலக்கியப் பாத்தியில் பாய்ந்த காலம் தமிழர்க்குப் பொற்காலம், ஏனெனில், வெண்பா யாப்பினுள் அட்டிய நீர்ப்பாசனத்தால் பூவனத்தில் ஒரு பொன் வசந்தம் பகவத் கீதை வெண்பா.

காய்ச்சீர்களால் நடக்கும் வெண்பாக்களின் கம்பீரம் யாப்பு நட்டு வாங்கத்திற்குத் தவறாமல் சந்தச் சலங்கையின் ஓசை போன்று அடிகள் தோறும் ஒலிக்கும் செப்பலோசை இழுத்த இழுப்பிற்கு எதுகை மோனைகளை ஏவல் கேட்கச் செய்யும் எஜமானத்தன்மை. ஆராய்ந்து தேர்ந்த வார்த்தை மணிகளின் அலங்கார அணிவகுப்பு, கனிந்த மொழிப் புலமையால் கனியும் நயரசம், பகவத் கீதையின் இதயம் பொங்கியெழும் அன்புணர்வுவரை அழகுக் கோலங்கள். இவையெல்லாம் ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு தமிழ்ப் புலவர்கள் மத்தியில் வெண்பாவில் புலவர்மணியாகத் 'தங்க' ஆசனம் தந்து விடுகின்றன.

நன்றி: முனைப்பு 7

# புலவர் பெரியதம்பிப்பிள்ளை

– கலாநிதி. எஸ். சிவலிங்கராஜா –

புலவர் மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை மட்டக்களப்பைச் சேர்ந்த மண்டூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். புலவர் மணி மண்டூர் வண்ணக்கர் சோ. ஏகாம்பரபிள்ளை அவர்களுக்கும் சின்னத்தங்கம் அம்மையாருக்கும் மகனாய் 1899ஆம் ஆண்டு சனவரி 8ஆம் நாள் பிறந்தார்.

பத்து வயதிலேயே சூடாமணி நிகண்டு, கந்தபுராணம், பாரதம், திருச்செந்தூர்ப் புராணம் முதலியவற்றைப் புலோலி சந்திரசேகர ஆசிரியரிடம் பாடங்கேட்டவர்.

ஆறுமுகநாவலரின் காவிய பாடசாலையில் கல்வி நன்கொடை பெற்றுச், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம் கற்றவர். விபுலாநந்தரின் தொடர்பால் தம் அறிவை மேலும் வளப்படுத்திக் கொண்டவர்.

திருகோணமலை இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு அர்ச். சிசிலியா மகளிர் பாடசாலை, மட்டக்களப்பு அர்ச் அகஸ்தினார் ஆசிரியர் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றினார். அதன்பின் சிலகாலம் உபதபாலதிபராகவும் பணியாற்றியபின் மட்டக்களப்பு அரசினர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார். பல பட்டங்களையும் பல மாணவர்களையும் பெற்ற புலவர்மணியவர்களின் நூல்கள் இப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவர் 1978இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளைக்குத் தனித்துவமானதோர் இடமுண்டு. மட்டுநகர் தந்த தமிழறிஞர்களுள் சுவாமி விபுலாநந்தருக்குப் பின் விதந்து போற்றப்பட வேண்டியவர் புலவர்மணியவர்கள். புலவர்மணியின் தமிழ்த் தொண்டில் மட்டக்களப்பின் மண் வளமும் யாழ்ப்பாணத்தின் பாரம்பரியக் கல்வி மரபும் பளிச்சிடுவதை அவதானிக்கலாம். பல்வேறு பட்டங்களையும் புகழ் மாலை களையும் அவ்வப்போது பெற்ற பெரியதம்பிப் பிள்ளையவர்கள் புலவர்மணி என்ற பெயராலேயே

கவரப்பட்டார். ஆதலால் அப்பெயரே அவருடன் ஒட்டி நின்று நிலைக்கும் பெயருமாயிற்று.

19 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் நிலவிய மரபுவழிக்கல்வியின் பிரதிநிதிகளாய் நாம் இருவரைத் தரிசிக்கலாம். ஒருவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை; மற்றவர் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை. இவ்விரு 'பிள்ளை'களும் இலங்கையின் இரு தமிழ் 'மணி'களாய் மதிக்கப்பட்டனர். புலவர்மணி 1978இல் அமரரானார். இவ்விரு 'மணி'களும் ஒரு சாலை மாணாக்கர். ஒருவரை ஒருவர் உண்மையாய் அறிந்தவர்கள் அளந்தவர்கள். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையைப் பற்றிப் புலவர்மணி பல இடங்களிற் குறிப்பிட்டுள்ளார். அண்மையிற் புலவர்மணி எழுதிய 'உள்ளதும் நல்லதும்' என்னும் கட்டுரைகள் ஏறத்தாழ அவரின் வாழ்க்கை வரலாறுதான். அதிற்பல இடங்களில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். மரபுவழிக் கல்வியின் 'பழுத்த பழமாய்' வாழ்ந்த பண்டிதமணியைப் பின்பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'பரீட்சை தொடங்கி விட்டது. முழுதும் வாய்ப்பாடமாகவே மறுமொழி சொல்லவேண்டும். எழுத்துப் பரீட்சையேயில்லை. மூன்று நான்கு மணிநேரம் நடந்து முடிந்தது பரீட்சை. புள்ளி அடிப்படையிற் கண்ட பரீட்சை முடிவில் சி. கணபதிப்பிள்ளை திறமைச் சித்தியில் முதலாமிடம் பெற்றார். எனக்கு இரண்டாமிடம் கிடைத்தது. சி. கணபதிப்பிள்ளையும் நானும் ஒரே மரத்தின் இரண்டு கிளைகளில் ஒருமிக்கப் பழுத்த இரண்டு பழங்கள். அவர் சற்றே மூத்தவர். எங்களுள் அக்கிர பூசை (முன்னீடு) பெறுவதற்கு உரியவர் அவரே' என்று குறிப்பிட்டுச் சொல்லுவதிலிருந்து புலவர் மணியின் 'ஆழ்ந்தகன்ற புலமை'யை நாம் நன்கு அறிந்து கொள்ளலாம்.

புலவர்மணியவர்கள் தமிழை மரபு ரீதியில் வரன்முறையாகக் கற்றவர். யாழ்ப்பாணம் புலோலியூர் சந்திரசேகர உபாத்தியாயரிடம் தொடங்கிய இவரது தமிழ்க் கல்வி, வண்ணார்பண்ணைக் காவிய பாடசாலையிற் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம் முற்றிப் பழுத்துக்

கனியாகியது. மட்டக்களப்புப் பகுதியில் யாழ்ப்பா ணத்தின் கல்வி உரத்தைக் கனிவாக வளர்த்தவர் புலவர்மணியவர்கள் எனலாம்.

ஆழ்ந்த தமிழ்ப் புலமையின் வெளிப்பாடுகளில் ஒன்றான 'குருபக்தி'யைப் புலவர்மணியிடம் நிரம்பக் காணலாம். 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என்ற ஆன்றோர் வாக்குக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் புலவர்மணி. தமது பகவத்கீதை வெண்பாவில் தமது குருவணக்கத்தை மிகச் சிறப்பாகச் செலுத்தியுள்ளார். 19ஆம் நூற்றாண்டின் பழம்பெட்டி எனத் தம்மை அறிமுகஞ் செய்யும் புலவர்மணி தமது ஆசிரியர்களை அப்பழைமைப் பாணியிலேயே நினைவு கூருகிறார். சந்திரசேகர உபாத்தியாயர், குமாரசுவாமிப் புலவர், விபுலானந்தர் ஆகியோரை அவர் வணங்கியே பகவத்கீதை வெண்பாவைப் பாடுகிறார்.

வண்மைத் தமிழ்க்கு வரம்பு வடமொழியின்
உண்மைத்தெளிவுக் குரையாணி – கண்மணியென்
சுன்னைக் குமார சுவாமிப் புலவனடி
சென்னிக் கியான்செய் சிறப்பு.

புலவர்மணியின் புலமையை அளந்தறிய இக்குரு வணக்கத்தைப் 'பதச்சோறாகக்' கொள்ளலாம்.

பல்வேறு யாப்பு வடிவங்களையும் கையாண்டு செய்யுள் செய்யும் ஆற்றல் வாய்ந்தவர் புலவர்மணி. இது காவிய பாடசாலை வழங்கிய நன்கொடையெனலாம். பலவகையான யாப்பு வடிவங்களிலும் பரிச்சயம் இருந்தபோதும் வெண்பாயாப்பில் புலவர்மணிக்கு ஆழ்ந்த ஈடுபாடு உண்டு. விபுலானந்தருக்கு யாழ்நூல் பெருமை தேடித் தந்தது போலப், புலவர்மணிக்குப் பகவத்கீதை வெண்பா பெருமை தேடித் தந்தது. புலவர்மணியின் ஆக்கங்களுள் காலங்கடந்தும் நின்று நிலைக்கப்போவது பகவத்கீதை வெண்பா எனலாம். புலவர்மணி பகவத்கீதையை வெண்பாவாகப் பாடுவதற்கு மூலபாடமாகப் பாரதியாரின் பகவத் கீதையையே கையாண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. வடமொழி, ஆங்கிலம் இவற்றிலும் புலவர்மணி கணிசமான புலமையைப் பெற்றிருந்தபோதும் மிக அடக்கமாகத் தமது

மொழிபெயர்ப்புப் பற்றி முகவுரையில் குறிப்பிட்டமை அவரது சத்திய நேர்மையையே சுட்டுகிறது எனலாம். பகவத்கீதை வெண்பா பிறந்த கதையைப் பகவத்கீதை வெண்பா முதலாம் பாகத்தில் (கருமயோகம்) விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

புலவர்மணியவர்களிடம் தமிழ்ப்புலமை சிறந்து காணப் பட்டமைக்கு அவரது பிறந்த ஊரும் ஒரு காரணம். கவிதை புனைய ஏற்ற இயற்கைச் சூழலும் பண்பாட்டுப் பாரம்பரியப் பின்னணியும் மட்டுநகரின் கொடைகள். தம்நாட்டையும் புலவர்மணி நன்கு நேசித்தவர். தமது பிரதேசத்தைப் பற்றி ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

...என்னைப் பெற்ற தாய்நாட்டிலே, இயலிசை நாடக
அமைதிகள் இயல்பாகவே அமைந்துள்ள இனிய
நாட்டிலே, நிலவளம்போல் மனவளமும் வாய்ந்த
மக்கள் வாழ்கின்ற மட்டக்களப்பு மாநாட்டிலே...

உண்மையான ஒரு புலவனுக்கு இருக்க வேண்டிய தாய்நாட்டுப் பற்றுப் புலவர்மணியிடம் நிரம்பக் காணப்பட்டது. இப்பற்றே இவர் தமது பன்முகப்பட்ட கல்விப்பணியைத் தம்நாட்டிற்கு வழங்க மூலகாரணமாக அமைந்தது. புலவர்மணியினுடைய கவிதை நூல்கள் பல வெளிவந்துள்ளன. அவர் இயற்றிய தனிப்பாடல்கள் பல மிகப் பிரசித்தம் வாய்ந்தவை. புலவர்மணியின் தேசிய நிலைப்பாட்டிற்கு ஆதாரமாக அமைந்த 'இலங்கை மணித் திருநாடெங்கள் நாடே' என்ற பாடல் நாடறிந்த பாடலாகும். புலவர்மணி பகவத்கீதை வெண்பா (கருமயோகம், பக்தி யோகம், ஞானயோகம்) சீவக சிந்தாமணி (பாலசரிதை நாடகம்) விபுலானந்தர் மீட்சிப்பத்து, மண்டூர்ப்பதிகம், கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீசுரர் பதிகம் சிற்றாண்டிப் பதிகம், மாமாங்கப்பதிகம், சர்வ சமய சமரசப் பதிகம், இலங்கைப் புகையிரதப் பெரு விபத்து (1923) முதலிய நூல்களை எழுதியுள்ளார். இவை அவ்வப்போது அச்சு வாகனம் வந்தவை. அண்மையில் புலவர்மணி கவிதைகள் என்ற பெயரில் இவை தொகுப்பாக வெளிவந்துள்ளன.

புலவர்மணியின் செய்யுள்கள் 18ஆம் 19ஆம் நூற்றாண்டின்

தன்மையனவாய்ப் பெருமளவு அமைந்தபோதும், குறிப்பிடத்தக்க சமகாலச் சமூக சிந்தனை யுடையனவாகவும் காணப்படுகின்றன. இலங்கை முழுவதற்கும் உணவளிப்போம். கூட்டுறவு, பொருட் காட்சி போன்ற பாடல்களை வகைமாதிரிக்குக் காட்டலாம்.

புலவர்மணியின் பாடல்கள் பல சிலேடைநயம் பொதிந்தவை. 'நெல்லும் அசீஸ்துரைக்கு நேர் நேர் என்று முடியும் சிலேடை வெண்பா காளமேகப்புலவரை நினைவூட்டுவதாய் அமைந் துள்ளது. 'சட்டம்' என்ற தலைப்பில் புலவர் மணியின் கவிதைத் தொகுப்பில் ஒரு பாடல் இடம் பெறுகிறது, அப்பாடல்

சட்டமென்பது வேசரி யேயதைத்
தழுவி நிற்பது வேசரியேயிட்ட

என்று தொடங்கிச் . சிறப்பான சிலேடைப் பொருளைத் தருகின்றமையை அவதானிக்கலாம். நாயக்கர் காலப் புலவர்களைப் போலச் சந்தர்ப்பங்களுக்குத் தக்க வகையில் சிறப்பாகவும் நையாண்டியாகவும் பல பாடல்களைப் புலவர்மணி பாடியுள்ளார். புலவர்மணியின் கவிதைகள் பிறந்த கதையை அவருடனிருந்தோர் சொல்லக் கேட்பது இன்பமளிப்பதாகும்.

புலவர்மணியின் உரைநடையும் தனித்தன்மை வாய்ந்தது. பழந்தமிழ் இலக்கிய 'உரம்' அவர் உரைநடைக்கு உதவியாக அமைந்திருக்கலாம். 'எளிய பதம் எளிய நடை' என்ற வகையிலேயே இவரது கட்டுரைநடை செல்லும். இவரின் உரைநடை சிற்சில இடங்களில் பண்டிதமணியின் உரைநடைக்கு ஒப்பான தாகவும் அமைந்திருக்கிறது. புலவர்மணியின் உரைநடை ஒரே சீரானதாகவன்றிக் காலதேச வர்த்தமானங்களுக்குத் தக வளைந்தும், நெகிழ்ந்தும், ஏறியும், இறங்கியும் செல்லும் தன்மையுடையது. அவரின். நடையின் தனிச்சிறப்பே அதுதான், 'உணர்வு'க்குப் புலவர்மணி முக்கியத்துவம் கொடுத்தார் என்று கொள்ளலாம்.

*1913*ஆம் ஆண்டு எனக்கு வயது பதினாலு. ஆங்கிலத்தில் ஓரெழுத்தும் தெரியாது. முதலாம் வருட வகுப்பில் சேர்ந்து கொண்ட என்னை அவ்வகுப்பிலுள்ள சிறுவர் சிறுமியர் அண்ணாந்து

பார்க்கிறார்கள். பெரிய உருப்படி கன்னக் கொண்டை சால்வைப் போர்வை சட்டையில்லை கிளு கிளுத்துச் சிரிக்கிறார்கள். இதென்ன கருநாடகமென்று."

புலவர்மணியின் உரைநடைக்கு இதை ஒரு வகை மாதிரியாகக் கொள்ளலாம். பல்வேறு தலைப்புக்களிலும் இவர் எழுதும் போது விடயத்திற்குத் தக்கதாக உரைநடை முறையினையும் மாற்றியமை சிறப்பாகக் குறிப்பிடக் கூடியது.

புலவர்மணியவர்களின் உரைநடைச் சிறப்பினை இவரது மேடைப்பேச்சுக்களிலே சிறப்பாகக் காணலாம். "மட்டக்களப்புப் பகுதியில் புலவர்மணி ஏறாத மேடையுமில்லை, பேசாத பேச்சு மில்லை" என்று கூறுவார்கள். இலக்கிய இரசனை சொட்டச் சொட்டப் புலவர்மணி பேசும்பொழுது வள்ளுவரின் "கேட்பார்ப் பிணிப்பக் கேளாரும் வேட்ப" என்ற குறளுக்கு இலக்கணத்தைக் கண்டு கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் காவிய பாடசாலையிலும், சந்திரசேகர ஆசிரயரிடமும் பெற்ற பயிற்சி உரையாசிரியர் என்ற வகையில் உதவியது போலவே "நயம்பட உரைக்கும்" ஆற்றலையும் வழங்கியது எனலாம். இச்சிறப்புக்கு உறுதுணையாக இவர் ஆசிரியராகப் பணிபுரிந்தமையும் குறிப்பாக ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியராய் வாழ்ந்தமையும் அமைந்தன எனலாம். கற்பிக்கவும் கற்கவும் கற்பித்த பேராசானல்லவா அவர். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை வாழ்வு புலவர்மணிக்குப் பட்டை தீட்டியது' எனலாம். இதனாற்றான்போலும் எஸ். டி. சிவநாயகம் புலவர்மணி ஒரு வைரமணி' எனக் குறிப்பிட்டார். அவரின் கூற்று நூற்றுக்கு நூறு பொருத்தமானதே.

புலவர்மணி பல்வேறு பணிகளிலும் ஈடுபட்டிருந்தபோதிலும் அவரின் ஆளுமை புலப்பட ஆசிரியப்பணி வாய்ப்பாக இருந்தது. புலவர்மணியைப்பற்றி அவரது 'உள்ளதும் நல்லதும்' என்ற நூலின் முன்னுரையில் எஸ். டி. சிவநாயகம் குறிப்பிடுவது ஆழ்ந்து நோக்கத் தக்கது. அனைவரும் அறிய வேண்டியது.

அவர் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளர், சிறந்த கவிஞர், சிறந்த வசனகர்த்தா, சிறந்த மொழி பெயர்ப்பாளர், சிறந்த நல்லாசிரியர், சிறந்த அரசியல் ஆய்வாளர், சிறந்த சிந்தனை யாளர், சிறந்த பக்தர், சிறந்த நண்பர், சிறந்த சீர்திருத்தவாதி, சிறந்த புரட்சியாளர், சிறந்த பத்திரிகையாளர்....

இவ்வாறு அடுக்கிக்கொண்டே போகலாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு வகையிலும் சிறப்புற்று வாழ்ந்த புலவர் மணி இலக்கியமும் சமூகமும் ஒன்றே என்ற உணர்வோடு இவ்விரு பணியையும் ஒன்றாகக் கருதியே வாழ்ந்து வந்தவர். மட்டக்களப்பு மண்ணின் தனித்துவம் பேணிய அதே வேளையில் புலவர்மணி பிரதேசம் கடந்த கேண்மையுடனும் நட்புடனும் பண்புடனும் வாழ்ந்தார். இதனால் இவரின் புகழும், நாடு பரந்த, நாடுகள் கடந்த புகழாயிற்று.

ஈழத்து இலக்கிய வரலாற்றினை எழுதப் புகுவோர் மட்டக்களப்பையும் புலவர்மணியையும் மறத்தல் கூடாது என்பதற்காகவே புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம் குன்றா உழைப்பையும் குறையா ஊக்கத்தையும் கொண்டு செயற்படுகின்றது எனலாம். புலவர்மணி இந்தந் தலைமுறையின் தலைமக்களில் ஒருவர் என்பது யாவரும் அறிந்ததே.

**நன்றி: 'தமிழியற் கட்டுரைகள்' என்ற நூலிலிருந்து**

# அறிவொளி பரப்பிய புலவர்மணி

**- வித்துவான் க. செபரத்தினம்-**

புலவர்மணி அவர்கள், வாழ்வாங்கு வாழ்ந்தவர். அவரின் வாழ்க்கை பல்லாற்றானும் வளம் பெற்று விளங்கியது.

விபுலாநந்தர் மீட்சிப்பத்திலே, அடிகளாரை, 'கருவிற் திருவுள கலைஞன்' எனப் பாராட்டியுள்ள புலவர்மணி அவர்களும் 'கருவிற்திருவுள கலைஞன்' ஆகவே விளங்கினார்.

"கவிதை புனையும் ஆற்றல் இயற்கையில் அவர்பால் அமைந்திருந்தது" எனும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களதும் "என்பாட்டு கலைமகள் கடாட்சம்" எனும் புலவர்மணி அவர்களதும் கூற்றுகள் நோக்குதற்குரியவை.

தாய் வயிற்றிலிருக்கும் போதே, கல்லாமற் பாதியறிவு கைவரப்பெற்ற புலவர்மணியின் வாழ்வானது. அறிஞர் பெருமக்களின் பேருதவியால் மேலும் வளம்பெற்று மலர்ச்சி யடைந்து உயர்ச்சி பெற்றதைப் பார்க்கிறோம்.

நடமாடும் பல்கலைக்கழகமெனப் போற்றப்பட்ட சுன்னை குமாரசுவாமிப்புலவர், நடமாடும் பல்கலைக்கழக நூல் நிலையமெனப் பாராட்டப்பட்ட அறிஞர் கைலாசபிள்ளை, மகாவித்துவான் என்னும் பட்டத்துக்குச் சிறப்புச் செய்த கணேசையர், பேரறிஞர் விபுலாநந்தர் - ஆகியோர் புலவர்மணி அவர்களின் நல்லாசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். இப்பெருமக்கள், புலவர்மணி அவர்களின் வாழ்வை வளப்படுத்தியதில் குறிப்பிடத்தக்க பணி ஆற்றியுள்ளார்கள்.

தமது ஞானாசிரியரான விபுலாநந்தரின் ஞாபகசக்தியைப் பற்றி, "நான் பத்துவரி பாடமாக்கும் முன்பு மயில்வாகனனார் ஐம்பது வரிகள் பாடமாக்கி விடுவார். மயில்வாகனனாரின் ஞாபகசக்தியின் முன்பு, நமது ஞாபகசக்தி வெறும் சூனியமே. பண்டிதருக்கு இணையான ஞாபகசக்தி உள்ள ஒருவரை நான் கண்டதே இல்லை. அவரது ஞாபகசக்தி அபாரமானது, ஒப்புயர்வற்றது. ஒரு விபுலாநந்தரைப் பெற ஈழநாடு

நூறாண்டு தவமிருக்க வேண்டும்" என்று புலவர்மணி குறிப்பிட்டுள்ள போதிலும், புலவர்மணி அவர்களது ஞாபகசக்தியை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது. அவருடன் படித்தவர்கள், அவருடன் தொடர்பு கொண்டவர்கள் அனைவரும் அவரது அபார ஞாபகசக்தியைப் போற்றவே செய்வர். அவரது வாழ்வு வளம்பெற்று விளங்கியமைக்கு இந்த அபார ஞாபகசக்தியும் ஒரு காரணமாம்.

புலவர்மணி ஆரம்ப காலத்திலே ஆங்கில மொழிமூலம் கல்விகற்று ஏழாம் வகுப்பு சித்தி அடைந்தவர். வகுப்பிலே தமிழில் பேசினால் தண்டம் செலுத்த வேண்டிய அக்காலத்தில் ஏழாம் வகுப்பு சித்தியடைந்தமை குறிப்பிடக்கூடிய செயலாகும். விபுலாந்த அடிகளாரது ஆசிரியரான குஞ்சுத்தம்பி, அறிஞர் ஆர்.என். சேதுகாவலர், பெரியார் பொன்னையா ஆகியோரிடம் பாடங்கேட்டுப் பெற்றுக் கொண்ட ஆங்கில அறிவானது புலவர்மணி அவர்களின் வாழ்வை வளப்படுத்திட பெரிதும் உதவிற்று.

அறிஞர் தம்ம ஜோதிதேரர், முன்னாள் மகாதேசாதிபதி வில்லியம் கோபல்லாவ, பேராசிரியர் எதிரிவீர – சரச்சந்திர, இசை நடனமேதை தேவசூரியசேன முதலிய பௌத்தசமயப் பெரியார்களின் நட்பினைப்பெற்று, அவரது வாழ்வை வளப்படுத்துவதில் அவரது ஆங்கில மொழி அறிவு உதவியதைக் காண்கிறோம். புலவர்மணி அவர்களிடம் சாதி, சமய, மொழி, இன பேதங்கள் எள்ளளவும் இருக்கவில்லை. அவர் வேதாந்தி. "ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பது அவர் தம் வாழ்க்கை நெறி. "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்பது அவர்களைப் பிடித்த கொள்கை. மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு முதலிய இடங்களிலும் தமிழ் நாட்டிலும் அவர் வாழ்ந்தவர் அவர் வளர்ந்தவர்.எல்லா இடங்களும் அவர் சொந்த இடங்களாகவே இருந்தன. சைவர்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர் பௌத்தர்கள் அனைவருமே அவரின் உறவினர்கள். இவ்வுயரிய உயர்ப்பண்பு புலவர்மணி அவர்களின் வாழ்வை வளப்படுத்தித் தூய்மை செய்துள்ளது.

புலவர்மணி அவர்களின் வளம் பெற்ற வாழ்வே அவரை ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும் கண்டு அறிவொளி பரப்பச்

செய்தது. அரச கரும மொழித் திணைக்கள சொல்லாக்கக் குழு உறுப்பினராகவும், வானொலி கல்வி ஒலிபரப்பு ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், இந்துசமய விவகார ஆலோசனைச் சபை உறுப்பினராகவும், கலைக்கழக உறப்பினராகவும், சாகித்திய மண்டல உறுப்பினராகவும், ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்க பரீட்சகராகவும் புலவர்மணி அவர்கள் பணியாற்றிட அவர்களது வளம் நிறைந்த வாழ்வே காரணமாய் அமைந்தது.

புலவர்மணி அவர்களின் வளம் நிறைந்த வாழ்வின் எச்சங்களாக, மண்டூர்ப்பதிகம், சீவக சிந்தாமணி பாலசரிதை நாடகம், கிறிஸ்தவ மத துயிலுணர்ச்சி, குருபரதரிசன திருவேட்கை, கொக்கட்டிச்சோலை தான் தோன்றீசுவரர் பதிகம், சிற்றாண்டிப்பதிகம், மாமாங்கப்பதிகம், சர்வசமய சமரசப் பதிகம், விபுலாநந்தர் மீட்சிப்பத்து, பாலைக்கலி, உள்ளதும் நல்லதும், பகவத்கீதை வெண்பா முதலியவற்றையும், நூற்றுக்கணக்கான தனிச் செய்யுள்களையும் குறித்துக் காட்டுவதோடு, அவர் தம் மாணாக்கர் பரம்பரையினையும் உளப்படுத்திக் காட்டலாம். எச்சங்களின் மூலம் புலவர்மணி என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

புலவர்மணி அவர்களின் வளம் நிறைந்த வாழ்க்கையின் உயிர்த்துடிப்பினை விளக்கிடும் செய்யுள்கள் இரண்டினைத் தந்து இக்கட்டுரையினை நிறைவு செய்வோம்.

"சிங்களர் தமிழர் முஸ்லிம் ஆகிய
செல்வநன் மக்களொன்றாய்
மங்கள அன்னை மணிக்கொடி தாங்கி
வாழ்த்தி வணங்கிடுவோம்"

(புலவர்மணி கவிதைகள் பக். 9)

"சிங்களமும் செந்தமிழும் சேர்ந்துசம மேயிலங்கை
எங்கும் அரசமொழி யென்னவே – துங்கமுடன்
ஆட்சி புரியவழி ஆக்குவதே எல்லாரும்
மாட்சியுடன் வாழும் வழி"

(புலவர்மணி கவிதைகள் பக். 35)

**நன்றி: வீரகேசரி 2-11-1995**

# முத்திரை பதித்து முத்திரை பெறுகிறார்

(கொழும்பு பிரதம தபால் நிலையத்தில் 22 – 05 – 1994ல் நடைபெற்ற தபால் முத்திரை வெளியீட்டு வைபவத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. செ. குணரெத்தினம் அவர்கள் ஆற்றிய உரை.)

**18**-11-79ம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை கிழக்கிலங்கையின் தமிழ் இலக்கியவரலாற்றில் ஒரு முக்கியமான தினம். முத்தமிழ் முனிவராகிய வித்தகர் விபுலாநந்தருக்கு அரசாங்கம் ஒரு ரூபாய் 25 சதம் பெறுமதியான தபால் முத்திரை ஒன்றை வெளியிட்டு அவரைக் கௌரவித்தமையை நாம் அறிவோம்.

இவ்வைபவம் நடைபெற்று பதினைந்து ஆண்டுகளுக்குப் பின், மட்டக்களப்புத் தமிழகத்தைச் சேர்ந்த பெரும்புலவராகிய, பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்குத் தேசிய வீரர் தினமாகிய இன்று, 22.5.94 அஞ்சல் திணைக்களத்தின் முத்திரை வெளியீட்டுப் பணியகம் ஒரு ரூபாய் பெறுமதியான தபால் முத்திரை ஒன்றை வெளியிட்டு அவரைக் கௌரவிக்கின்ற இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அன்னாரைப்பற்றி உரையாற்றக் கிடைத்தமையைப் பெரும் பாக்கியமெனக் கருதுகின்றேன்.

தேசிய விரர் தினமாகிய இன்று நான்கு பெரியார்களுக்கு, ஒரு ரூபாய் பெறுமதியான நான்கு முத்திரைகளை, முத்திரை வெளியீட்டுப் பணியகம் வெளியிட்டுக் கௌரவித்துள்ளது.

அவர்களில் இருவர் புகழ்பெற்ற அரசியல் வாதிகள், மற்ற இருவரும் பெரும்புலவர்கள். இப்புலவர்களில் ஒருவர்தான் ஏ.பெரியதம்பிப்பிள்ளையவர்கள்.

இவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1899ம் ஆண்டு மண்டூரில் பிறந்தவர். கல்முனை லீஸ் ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலத்தையும், நாவலர் காவிய பாடசாலையில் தமிழையும் கற்றவர். குமாரசுவாமிப்புலவர், வித்துவ சிரோண்மணி கணேசையர், முதலிய அறிஞர்களிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாகக் கற்றவர். மரபுமுறையான தமிழ்க் கல்வியைப் பெற்றவர். இயற்கையாகவே

கவிபாடும் ஆற்றல் உள்ளவர். பல நூற்றுக் கணக்கான பாடல்களை இயற்றியவர்.

பல நூல்களின் ஆசிரியர் பகவத்கீதை வெண்பா, உள்ளதும் நல்லதும், பாலைக்கலி, நாமகள் இலம்பகம், புலவர்மணி கவிதைகள், மீட்சிப்பத்து, என்னும் நூல்கள் அவற்றுள் சிறந்தவை. இவருடைய பாடல்கள் பல பாடப்புத்தகங்களில் இடம் பெற்றுள்ளன. பாடநூல் பிரசுரசபை, ஆரிய திராவிட பாசா அபிவிருத்திச் சங்கம், இலங்கைக் கலைக்கழகம், இந்து சமயவிருத்தி ஆலோசனைச் சபை, அரச கருமமொழிகள் ஆலோசனைச் சபை, இலங்கை சாகித்திய மண்டலம், இலங்கை வானொலி கல்வி ஆலோசனைச் சபை முதலியவற்றில் உறுப்பினராய் இருந்து நிறைவான பணிசெய்தவர்.

சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தோடு நெருங்கிய தொடர்பு உடையவர். இக்கழகம் வெளியிட்ட கலைக்களஞ்சியத் தொகுதிக்கு விபுலானந்த அடிகளாரைப் பற்றிக் கட்டுரை எழுதினார்.

இக்கழகம் கோயம்புத்தூரில் நடத்திய மூன்றாவது தமிழ் விழாவிற்கு உரையாற்றுமாறு அழைக்கப்பட்டார்.

1951ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வராக் கல்லூரியில், இக்கழகத்தால் நடத்தப்பட்ட, நான்காவது தமிழ் விழாவில், "கம்பன் நாட்டிய தமிழ் நாகரிகம்" என்னும் விடயம் பற்றி உரையாற்றினார். இவ்விழாவில் பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை, டாக்டர் மு. வரதராசன் கல்கி ஆசிரியர் இரா. கிருஷ்ணமூர்த்தி, பேராசிரியர் அ. சீனிவாச ராகவன், இராசேஸ்வரி அம்மாள், சிலம்புச் செல்வர் சிவஞான கிராமணியார், பேராசிரியர் மீனாட்சி சுந்தரனார், பிரபல விஞ்ஞானி கே.எஸ் கிருஷ்ணன், பேராசிரியர் சிறீனிவாச சாத்திரியார், தமிழ்நாட்டுக் கல்வி அமைச்சர் வெங்கடாசலம், அறிஞர் சு.நடேசபிள்ளை, தனிநாயக அடிகளார், பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை, வித்துவான் க. வேந்தனார், ஜனாப். எஸ். எம். கமால்தீன் போன்ற அறிஞர்களும் உரையாற்றினார்கள்.

கிழக்கு இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்டூரிற் பிறந்த ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பட்டை தீட்டப் பட்ட

ஒரு வைபிரமணி. விபுலாநந்த அடிகளாரைத் தமது குருநாதராகக் கொண்ட பெரிதம்பிப்பிள்ளை தமிழ் ஆங்கில இலக்கியங்களை அவரிடம் தெளிவுறக் கற்றார். சிறந்த மேடைப் பேச்சாளர், ஒரு சிறந்த கவிஞர், சிறந்த வசனகர்த்தா, சிறந்த மொழிபெயர்ப்பாளர், சிறந்த நல்லாசிரியர் சிறந்த அரசியல் ஆய்வாளர், சிறந்த சிந்தனையாளர், சிறந்த இலக்கிய ஆராய்ச்சியாளர், சிறந்த பண்பாளர், சிறந்த பக்தர், சிறந்த நண்பர், சிறந்த சீர்திருத்தவாதி, சிறந்த புரட்சியாளர், சிறந்த பத்திரிகையாளர், அவர் புகழ் இந்தியா, பர்மா, முதலிய நாடுகள் எல்லாம் பரவியிருந்தது.

சுவாமி விபுலாநந்தரின் தலைமாணாக்கரான அவர் தமது குருநாதர் வழிநின்று, அவர் வேதப்பொருளாகிய கீதையை மூலப்பொருள் சிதையாமல் வெண்பாக்களாகப் பாடியவர். அவர் படைத்த முதற்பாகமாகிய 'கருமயோகம்' 1963ல் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. அவரது இன்னொரு படைப்பான 'உள்ளதும் நல்லதும்' என்னும் வாழ்க்கைத்துறை நூல் 1991ல் சாகித்திய மண்டலச் சிறப்புப் பரிசும் விருதும் பெற்றது. 1991ல் வெளிவந்த 'பாலைக்கலி' என்னும் அவரது நூல், சங்க இலக்கியமாகிய கலித்தொகையின் பாலைக்கலி முதற் 16 செய்யுள்களின் உரைநடை விளக்கவிருந்தாய் அமைந்தது.

பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் தேசிய ஒற்றுமை, இன ஒற்றமை போற்றும் 'இலங்கை மணித்திருநாடு' 'வாழிகல்லோயா நங்கை' கவி ஓவியங்கள் மக்கள் உள்ளங் கவர்ந்து பிரசித்தி பெற்றவை. அவர் நமது சமகாலப் புலவர்களுட் புலவர்மணியாய்த் திகழ்ந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருள் சூழ்ந்து கிடந்த இந்து ஆலயங்கள் பல ஒளிபெற்று வாழக் காரணராய் இருந்தவர். அவர் ஒரு சமாதான நீதிபதியாகவும் அரசால் நியமிக்கப்பட்டார்.

பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் வித்தகத்தை மதித்துப் பாராட்டிய யாழ். பல்கலைக்கழகம் 'இலக்கிய வித்தகர்' என்னும் தேகவியோகக் கௌரவத்தை அளித்தது மாத்திரமன்றி, ஆண்டு தோறும் அன்னார் ஞாபகார்த்தமாகத் தமிழ் மொழிக்கு ஒரு தேசீயப் பரிசிலும் வழங்கி வருகின்றது.

பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் புகழ் நாட்டும் பணிக்கென உதயமான நினைவுப்பணி மன்றம் பதினைந்து ஆண்டுகளாக அரும்பணி ஆற்றிவருகின்றது. அது இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற் பதிவு செய்யப்பட்டு அரசின் அங்கீகாரம் பெற்றுள்ளது.

அமரரான பெரியதம்பிப்பிள்ளை மட்டக்களப்பு அன்னைக்குச் சிறப்பாகவும், இலங்கைமணித் திருநாட்டுக்குப் பொதுவான அருந்தவப் புதல்வராவார். அவரது தகைமை பெரிது.

அன்னாரின் நினைவாக தேசியவீரர் தினமாகிய இன்று ஸ்ரீலங்கா அரசு ஒரு ஞாபகார்த்த முத்திரை வெளியிடுகின்றது.

இவர் சாதி, இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பாற்பட்டவர். இந்நாட்டின் உத்தம புதல்வர்களில் ஒருவர். எல்லா மக்களாலும் நேசிக்கப்பட்ட ஒரு பெரியார். அன்னாரைப்பற்றி இச்சிறப்பான வைபவத்தில் பேசுவதற்கு எனக்கு இடம் அளித்த முத்திரை வெளியீட்டுப் பணியக அதிகாரிகளுக்கும், அன்னாரின் உறவினர்களுக்கும் என் உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை நிறைவு செய்கின்றேன்.

**நன்றி. வணக்கம்.**




22-05-1994இல் கொழும்பு பிரதம தபாலகத்தில் நடைபெற்ற தேசிய வீரர் தினத்தில் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களை கௌரவித்து வெளியிட்ட தபால் முத்திரை




22-05-1994இல் கொழும்பு பிரதம தபாலகத்தில் முத்திரை வெளியீட்டுப் பணியில் தேசிய வீரர்களை கௌரவித்து வெளியிட்ட முதல்நாள் உறை




25-05-1994இல் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை நினைவு முத்திரை வெளியீட்டு அறிமுக வைபவம் - மட்டக்களப்பு.

## இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் முத்திரை வெளியீட்டுப் பணியகம் தேசிய வீரர்களுக்கு முத்திரை வெளியிட்டபோது பிரசுரிக்கப்பட்டது

அஞ்சல் திணைக்களம்,
திறான்ஸ்வேக்ஸ் ஹவுஸ்,
கொழும்பு 1.

இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் முத்திரைப் பணியகம் பின்வரும் தேசிய வீரர்களைக் கௌரவிக்குமுகமாக ரூபா 1.00 இனப் பெறுமதியில் நான்கு ஞாபகார்த்த முத்திரைகளை 1994, மே 22ஆந் திகதி வெளியிடும்.

### சங்கைக்குரிய மஹாகவிந்திர மிகிரிபெனே தம்மரட்டன மஹாதேரர்

மிகிரிபெனே தென்னிலங்கையிலுள்ள காலிப் பிரதேசத்தில் தல்பே பகுதியிலுள்ள ஒரு கிராமமாகும் இக்கிராமத்தின்.....

### மறைந்த சனாதிபதி மேதகு ரணசிங்க பிரேமதாச

இலங்கையில் இரண்டாம் நிறைவேற்று சனாதிபதியாக விளங்கிய காலஞ்சென்ற மேதகு ரணசிங்க பிரேமதாச அவர்கள் 1924 யூன் 23ம் திகதி பிறந்தார் ..........

### கலாநிதி கொல்வின் ஆர்.த. சில்வா

கலாநிதி கொல்வின் ஆர்.த.சில்வா 1907ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 16ம் திகதி பிறந்தார். ஆரம்பக் கல்வியை பாணந்துறை புனித ஜோன் கல்லூரியில்.................

### புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களில் ஒருவரும் சிறந்த புலவருமாவர். இவர்

சோமநாதர் ஏகாம்பரபிள்ளை அவர்களுக்கும் சின்னத்தங்கம் அவர்களுக்கும் மூத்த மகனாக 1899ம் ஆண்டு தை மாதம் 8ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்டூரில் பிறந்தார்.

இவர் பல புகழ்பெற்ற அறிஞர்களின் கீழ் தமிழைக் கற்றறிந்து, தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றதோடல்லாது, தமிழ் உரைநடையிலும், செய்யுள் ஆக்கத்திலும் வல்லவராக விளங்கினார்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் ஒரு சிறந்த கல்விமான். நல்லாசிரியன். சமய சமூக சீர்த்திருத்தவாதி. இவர் இயல்பாகவே கவிபாடும் ஆற்றல் உடையவராகத் திகழ்ந்தார். இவரால் இயற்றப்பட்ட சில செய்யுள்கள் தமிழ் பாடவிதானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவரது படைப்பான 'பகவத்கீதை வெண்பா' சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றதுடன் மிகவும் சிறந்த நூலாகக் கருதப்படுகிறது.

1951ஆம் ஆண்டில் மட்டக்களப்பு தமிழ் கலை மன்றம், இவரது செய்யுளாக்கத் திறனையும், இவருக்கு தமிழ் மொழி யிலிருந்த ஆழ்ந்த அறிவினையும் கௌரவிக்குமுகமாக 'புலவர்மணி' என்னும் பட்டத்தை வழங்கியது. அடுத்த ஆண்டில் யாழ்ப்பாணம் ஆரிய திராவிடபாஷாபி விருத்திச் சங்கம் 'பண்டிதமணி' என்னும் பட்டத்தையும், இவர் இறந்தபின் 1980ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 'இலக்கிய வித்தகர்' என்னும் பட்டத்தையும் வழங்கி இவரைக் கௌரவித்தன.

இவர் பல தேசிய ஆலோசனைச் சபைகளில் உறுப்பினராக விருந்து சேவையாற்றியுள்ளார். அரசகருமமொழிகள் திணைக்கள ஆலோசனைச் சபை, இந்துசமய அபிவிருத்திச்சபை, இலங்கை வானொலி கல்வி ஆலோசனைச் சபை ஆகியன அவைகளிலடங்கும்.

இலங்கையின் உத்தம புத்திரர்களிளொருவராகிய இவர், இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பாற்பட்டு தொண்டாற்றி 1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி சிவபதம் அடைந்தார்.

# புலவர்மணி இயற்றிய நூல்கள்

– வித்துவான் ந. நாகலிங்கம் (பிரசித்த நொத்தாரிசு) –

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் ஈழநாட்டில் வாழ்ந்த தமிழறிஞர்களில் ஒருவர். இவர் இயல்பாகவே கவிதை இயற்றும் ஆற்றல் உள்ளவர். உரைநடையிலும், செய்யுள் நடையிலும் வல்லவர். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், வித்துவ சிரோன்மணி கணேசையர் முதலிய நல்லாசிரியர்களிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றவர். விபுலாநந்த அடிகளாரின் தொடர்பினால் தனது அறிவை ஆழமாக்கிக் கொண்டவர்.

இவ்வளவு தகைமைகளையும் கொண்ட புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் உரைநடையிலும், செய்யுள் நடையிலும் பல நூல்களை எழுதியுள்ளார்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் முதன்முதல் இயற்றிய நூல் "மண்டூர்ப் பதிகம்" ஆகும். இதை அவர் தமது பாலியப் பருவத்தில் இயற்றினார். இந்நூல் மண்டூர் முருகன் மீது பாடப்பட்டதாகும். இது பத்துப் பதிகங்களைக் கொண்டது.

புலவர்மணி இயற்றிய முதலாவது தோத்திர நூலாகவும் இது விளங்குகின்றது. விபுலாநந்த அடிகளாரின் சிறப்புப் பாயிரத்தோடு இந்நூல் வெளிவந்தது.

அடிகளாரின்மண்டூர்ப்பதிகத்திற்கு வழங்கிய சிறப்புப்பாயிரம் கீழே தரப்படுகிறது.

"பண்டூரும் முகிற்குலங்கள் எமதிறைவர் மருகர் திருப்பதியீதென்ன
விண்டூர மழை பொழியும் சிறப்பதனால் வளம் மலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூரி லுறைமுருகன் மலரடிக்கோர் திருப்பதிகம் மரபிற் சொற்றான்
கண்டூரு மினியமொழிப் பெரியதம்பிப்பிள்ளையெனும் கலைவல்லோனே"

புலவர்மணி இயற்றிய செய்யுள் நூல்களுள் முடிமணியாய்த் திகழ்வது 'பகவத் கீதை வெண்பா' ஆகும். இவர் பகவத்கீதையை வெண்பாவாகப் பாடினார். 'பகவத்கீதை வெண்பா' என்ற தலைப்பில் மூன்று நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவை கருமயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்பனவாகும். இவரது பகவத்கீதை வெண்பாவின் முதலாம் பாகமான கர்மயோகம் 1962ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டது. இதேயாண்டு இந்நூலுக்கு 'சாஹித்திய மண்டலப் பரிசு' வழங்கப்பட்டது.

புலவர் மணி அவர்களின் பகவத் கீதை வெண்பாக்கள் 1944ஆம் ஆண்டு வீரகேசரியில் வாரந்தோறும் வெளிவந்தன. இதனைக் கண்ட விபுலானந்த அடிகள் இராமகிருஷ்ண மடத்திற்கு புலவர்மணி அவர்களை அழைத்து, சான்றோர்கள் முன்னிலையில் நூலை அரங்கேற்றம் செய்து வைத்தார். விபுலாநந்த அடிகளார் சிவபத மடைந்து, நான்காண்டுகளுக்குப் பிறகு 1951ம் ஆண்டு யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரர் வித்தியாலய மண்டபத்தில் அறிஞர் சு. நடேசபிள்ளை அவர்களின் தலைமையில் 'பகவத்கீதை வெண்பா' அரங்கேற்றப்பட்டது.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பல பாடல்களை இயற்றியுள்ளார். இவராற் பாடப்பட்ட பாடல்களைத் திரட்டி. 'புலவர்மணி கவிதைகள்' என்ற நூலை புலவர்மணி நினைவுப் பணிமன்றத்தினர் 1980ம் ஆண்டு வெளியிட்டனர். இந்நூலுக்கு இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஒரு சிறப்பான அணிந்துரை வழங்கியுள்ளார். இக்கவிதைத் தொகுதியில் உள்ள பாடல்களில் 'இலங்கை மணித் திரு நாடு' என்ற பாடல் விபுலாநந்த அடிகளாரின் 'வெள்ளைநிற மல்லிகையோ' என்ற பாடலுக்கு இணையானது. இவ்விரு பாடல்களையும் பற்றி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"கற்றோரும் மற்றோரும் இனிப்பவை
சாவா மூவாப் பாடல்கள் அவை"

புலவர்மணி விபுலாநந்த அடிகள்மீது பாடிய 'மீட்சிப்பத்து' பாடல்கள் புலவர்மணியின் புலமை உணர்ச்சியின் பிழிவு' என்று பண்டிதமணி கூறுகின்றார்.

புலவர்மணியின் 'வாழிகல்லோயா நங்கை' என்னும் பாடல்கள் 'சிலப்பதிகார கானல்வரிப் பாடல்களை ஒத்தவை' என்று பண்டிதமணி கூறுகின்றார்.

'திங்கள் மாலை வெண்குடையான்' என்ற சிலப்பதிகார கானல் வரிப்பாடலுக்கு சமமானது' என்று சோமசுந்தரப் புலவரின் ஆத்மீக குரல் கூறியது.

இவற்றைவிட புலவர்மணி அவர்கள் பல பதிகங்களை எழுதி வெளியிட்டுள்ளார். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரர் பதிகம், சித்தாண்டிப் பதிகம், மாமாங்கப்பதிகம், காளிகாமடு கற்பகவிநாயர் ஊஞ்சல் என்பன குறிப்பிடத்தக்கவை.

'புலவர்மணி செய்யுள் நடையில் வல்லவர்' என்பதை 'பகவத்கீதை வெண்பா' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட மூன்று நூல்களும், மண்டூர்ப் பதிகம், தான்தோன்றீச்சரர் பதிகம், சித்தாண்டிப் பதிகம், மாமாங்கப் பதிகம், காளிகாமடு கற்பக விநாயகர் ஊஞ்சல், புலவர்மணி கவிதைகள் என்ற நூல் போன்றவை மூலம் அறியலாம்.

'புலவர்மணி வசனநடையிலும் வல்லவர்' என்பதற்கு அவர் பகவத்கீதை வெண்பாக்களுக்கு அளித்துள்ள விளக்கம் சான்றாக அமைகின்றது. புலவர்மணியவர்கள் 'உள்ளதும் நல்லதும்' என்ற தலைப்பில் தமது வாழ்க்கை வரலாற்றை 'சிந்தாமணி' வார இதழில் எழுதினார். இவற்றை எல்லாம் தொகுத்து 'உள்ளதும் நல்லதும்' என்ற தலைப்பில் மட்டக்களப்புப் புலவர் மணி நினைவுப் பணிமன்றத்தினர் நூலாக வெளியிட்டுள்ளனர். இந்நூல் 258

பக்கங்களைக் கொண்டது. புலவர்மணி அவர்களின் வாழ்க்கையை உள்ளடக்கிய ஒரு சுயசரிதை நூலாக இது விளங்குகின்றது. கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக இந்நாட்டில் ஏற்பட்ட அரசியல், சமய, சமூக, கலாசார நிகழ்வுகளை இந்நூல் எடுத்துக் கூறுகின்றது.

புலவர்மணி தமிழை முறையாகப் பயின்றவர். தமிழ் இலக்கண இலக்கியங்களில் நல்ல புலமை உடையவர். எனினும் ஒரு பத்திரிகை ஆசிரியரைப் போல் மிகவும் எளிய நடையில் இந்நூலை எழுதியுள்ளார். 'உள்ளதும் நல்லதும்' என்ற புலவர் மணியின் நூல் தமிழ் மக்களின் பெருநிதியமாக விளங்குகின்றது. 1990ஆம் ஆண்டு 'சாஹித்திய மண்டலப்பரிசு' இந்நூலுக்கு வழங்கப்பட்டது.

புலவர்மணி வசனநடையில் இயற்றிய இன்னொரு நூல் 'பாலைக்கலி' ஆகும். இந்நூல் 1991ஆம் ஆண்டு மட்டக்களப்புப் புலவர்மணி நினைவுப் பணிமன்றத்தினால் அச்சிட்டு, வெளியிடப் பட்டது. இது புலவர்மணியின் சங்கநூற் புலமையை எடுத்துக் காட்டுகின்றது. சங்க இலக்கிய வரிசையில் இடம்பெற்ற எட்டுத் தொகை நூல்களில் கலித்தொகையும் ஒன்று. இது பண்டைத் தமிழ்மக்களின் வாழ்க்கை முறைகளையும் நாகரீக நுண்ணுணர்வு களையும் எடுத்துக்கூறும் நூல். 'கற்றறிந்தார் ஏற்றும் கலி' என்ற அடைமொழி இதன் சிறப்பை எடுத்து விளக்குகின்றது.

கலித்தொகை கடவுள் வாழ்த்து உட்பட 150 கலிப் பாக்களைக் கொண்டது. 'பாலைக்கலி' 35 பாக்களையும், குறிஞ்சி 29 பாக்களையும், மருதம் 35 பாக்களையும், முல்லை 17 பாக்களையும், நெய்தல் 33 பாக்களையும் உடையது.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பாலைக் கலியிலுள்ள பாக்களை உரைநடையில் வடித்துத் தந்துள்ளார். 16 கட்டுரைகளை உள்ளடக்கிய இந்நூலுக்கு 'பாலைக்கலி' என்று பெயர் சூட்டி, 1991ம் ஆண்டு நவம்பர் மாதம் மட்டக்களப்புப் புலவர்மணி நினைவுப்பணி

மன்றத்தினர் வெளியிட்டுள்ளனர். எல்லீசர் திருக்குறளிலுள்ள எல்லா அதிகாரங்களுக்கும் உரை செய்யவில்லை. 13 அதிகாரங்களில் உள்ள முக்கிய குறள்களுக்கே உரை செய்துள்ளார். புலவர்மணி அவர்கள் பாலைக்கலியிலுள்ள எல்லாப் பாக்களுக்கும் உரை செய்யவில்லை. எனினும் இவருடைய 'பாலைக்கலி' என்னும் நூல் வெளி வந்தமைக்கு தினகரன் பத்திரிகை ஸ்தாபனத்தாருக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் கட்டுரை எழுதுவதிலும், கவிதை புனைவதிலும் வல்லவர். அதே போன்று நாடகம் எழுதுவதிலும் வல்லவராக விளங்கினார் என்பது நம்மில் அநேகருக்குத் தெரியாமலிருக்கலாம். புலவர்மணி ஒரு சிறந்த நாடகாசிரயராகவும் விளங்கினார். 'சீவக சிந்தாமணி' என்கின்ற சமண காப்பியத்தை 'திருத்தக்கதேவர்' என்னும் சமணப்புலவர் இயற்றினார். சீவகசிந்தாமணி 13 இலம்பகங்களைக் கொண்டது. நாமகள் இலம்பகம் இதன் முதலாவது இலம்பகமாகத் திகழ்கின்றது. இதைப் புலவர்மணி நாடகமாக எழுதி உள்ளார். இந்த நாடகம் 'விவேகானந்தன்' பத்திரிகையில் 1928 ஆண்டு வெளிவந்தது. இது படிப்பதற்கும், நடிப்பதற்கும் ஏற்ற முறையில் எழுதப்பட்டுள்ளது. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய 'மனோன்மணியம்' என்னும் நாடகத்தின் சாயலை இதிற் காணலாம். இந்நூல் அச்சேறினால், தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஒரு சிறந்த நாடக நூலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

புலவர்மணியின் ஆக்கங்கள் பல வெளிவராமல் இருக்கின்றன. 'ஈழநாட்டுத் தமிழறிஞர்கள்' என்ற தலைப்பில் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் இலங்கை வானொலியில் ஏழு உரைகளை நிகழ்த்தியுள்ளார். இவை தினகரன் வார இதழில் 1954ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், வித்துவான் சரவணமுத்து, வித்துவான் பூபாலப்பிள்ளை, வைத்தியலிங்க தேசியர்,

திருமலை த. கனகசுந்தரம்பிள்ளை, விபுலாநந்த அடிகள், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் முதலிய தமிழறிஞர்களைப் பற்றிய தகவல்களை இக்கட்டுரைகளில் இருந்து அறிய முடியும். இத்தமிழறிஞர்களின் வரலாற்றை உள்ளடக்கிய ஓர் ஆக்கத்தினை நமக்கு விட்டுச் சென்றுள்ளார். இக் கட்டுரைகள் நூல் வடிவம் பெறுமாயின், நம் மத்தியில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களின் வரலாற்றை நமது இளைய தலைமுறையினர் அறிவதற்கு உதவியாக அமையும்.

புலவர்மணி இயற்றிய இன்னொரு வாழ்க்கை வரலாற்று நூல் 'குணங்குடி மஸ்தான் சாஹிபு பாடல்கள்' என்ற நூலாகும். இது இன்னும் அச்சிட்டு வெளியிடப்படவில்லை. இது 21 பக்கங்களைக் கொண்டது. இக்கட்டுரை 'இஸ்லாமியச் சொற்பொழிவுகள்' என்ற நூலில் இடம் பெற்றுள்ளது.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பல கட்டுரைகளைப் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் எழுதி உள்ளார். வானொலியில் பல பேச்சுக்களை நிகழ்த்தியுள்ளார். இவற்றை எல்லாந் திரட்டி, நூலாக்க வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும்.

- நன்றி: தினகரன்

## உள்ளதும் நல்லதும்

# கோபல்லாவ, தேவசூரியசேன, சரத்சந்திரா ஆகியோருடன் ஏற்பட்ட பழக்கமும் நட்பும்

இலங்கைக் கலைக்கழகம் 1951ஆம் ஆண்டில் முதல் முதல் நிறுவப்பட்டபோது அதன் முதலாவது தலைவராக பொலீஸ் மா அதிபர் சேர். றிச்சேட் அலுவிகாரா தெரிவு செய்யப்பட்டார். அதன் உபகுழுக்களுள் ஒன்றான நாட்டுப் பாடல் நாட்டுக் கூத்துக் குழுவில் நான் ஓர் அங்கத்தவராக நியமனம் பெற்றேன். குறித்த குழுவுக்கு எனது பேரைச் சிபார்சு செய்தவர் அல்ஹாஜ் ஏ.எம்.ஏ அசீஸ் எனப் பின்னர் அறிந்து கொண்டேன். தருணமறிந்து தகுதியாகச் செயற்படும் தீர்க்க புத்திவாய்ந்தவர் அசீஸ்.

நாட்டுப்பாடல், நாட்டுக்கூத்துக் குழுவின் தலைவர் திரு. உவில்லியம் கோபல்லாவ அவர்கள். அப்போது அன்னார் கொழும்பு முனிசிப்பல் கொமிஷனராகப் பதவி வகித்திருந்தார். பின்னர் மாட்சிமை தங்கிய மகாதேசாதிபதியாகவும், அதன் பின்னர் மகா மேன்மை தங்கிய இலங்கை ஜனாதிபதியாகவும் அதி உன்னத பதவிகளை வகித்த அன்னார் தலைமை தாங்கிய ஒரு உபகுழுவில் நானும் ஒரு அங்கத்தவனாய் இருந்து சேவை செய்யக் கிடைத்தமை ஒரு பெரும் பேறெனவே கருதுகின்றேன். என்னுடன் வட்டுக்கோட்டை மக்கள் கவிமணி மு. இராமலிங்கம் அவர்களும் அங்கம் வகித்தமை குறிப்பிடுதற்கு உரியதாகும்.

எங்கள் குழுவின் செயலாளர் திரு. டீ.ஜீ. தயாரத்தின அவர்கள். அன்னார் அப்போது கிராம முன்னேற்றப் பகுதி அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். பின்னர் மந்திரி சபையின் காரியதரிசியாக உயர்பதவி தாங்கி ஓய்வு பெற்று, பின்னர் பல்கலைக் கழகத் தனிநபர் ஆணைக்குழுவின் அங்கத்தவராக அதிகௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமனம் பெற்றமை

பாராட்டுதற்கு உரியதாகும்.

குழுக் கூட்டங்கள் யாவும் தலைவரின் இல்லத்திலேயே நடைபெற்றுவந்தன. தலைவரின் இனிய குணமும், அடக்கமும், அமைதியும், நற்பண்புமாகிய மனித இயல்புகளே அன்னாரை இலங்கையின் முதல் மனிதராக உயர்த்திவைத்தன என்று துணிந்து கூறுவேன். கூட்டங்கள் நடக்கும்போது சிற்றுண்டி, தேநீர் ஆகியவற்றைத் தமது கைகளாலேயே பரிமாறி உபசரித்த அந்தப்பெருமானாரின் பேரன்பினை எம்மால் மறக்கலாகுமா? இது நமக்கு முன்மாதிரியல்லவா?

நம்மால் நினைக்கவும் முடியாத குண நலன்களை அணிகலனாகப் பூண்டு கொண்டமையால் அல்லவா அந்தப் பெருந்தகையார் நமது நாட்டுப் பண்பாட்டுக்கு ஒவ்வாத ஆடம்பர உத்தியோக உடைகளைக் களைந்தெறிந்துவிட்டுச் சாதாரண மனித உடையிலே காட்சியளித்தார்?

அன்றியும் 1963ஆம் ஆண்டு அன்னார் மாட்சிமை தங்கிய மகாதேசாதிபதியாய் இருந்தபோது, களனியா வித்தியாலங்காரப் பல்கலைக் கழகத்தில் வைத்து, எனது பகவத்கீதை வெண்பா கருமயோகப் பதிப்புக்கு ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் முதற்பரிசாக ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை எனக்கு வழங்கிய சந்தர்ப்பத்தில், பழைய நினைவைக் கொண்டு, 'சுகமாயிருக்கிறீர்களா?' என்று விசாரித்த அன்னாரின் மனிதப் பண்பை என்னால் எவ்வாறு மறக்கமுடியும்? 'பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்'; இது கலித்தொகை.

இந்தக்காலப் பகுதியில் நான் பழகிய இரண்டு நண்பர்களைப் பற்றி இங்கே குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இருவரும் நமது தேசிய கலாசாரப் பண்பின் இரண்டு வடிவங்கள் போல் என்முன் காட்சியளிக்கின்றனர். ஒருவர் தேவசூரியசேன; மற்றவர் கலாநிதி சரத்சந்திர.

தேவசூரியசேனவின் தந்தையார் பிரபலம் பெற்ற அரசியல் ஞானி; சிறுபான்மை வகுப்பினரின் பிரச்சினைகளை நன்கு உணர்ந்தவர். சிறுபான்மையினரின் உரிமைகளுக்காக அந்தரங்க சுத்தியுடன் உழைத்தவர்; சட்ட நிரூபண சபையின் உப தலைவராயிருந்தவர். சேர். ஜேம்ஸ் பீரிஸ் என்பது அன்னாரின் பெயராகும்.

சேர். ஜேம்ஸ் பீரிஸ் என்னும் பெயரை இங்கே நினைவு கூரும்போது வரலாற்றுப் பெருமைவாய்ந்த ஒரு சம்பவமும் நினைவுக்கு வருகின்றது. சட்ட நிரூபண சபைக் கூட்டங்களுக்கு உபதலைவரே தலைமை தாங்குவது சம்பிரதாயம். சட்ட நிரூபண சபையிலே பெரும்பான்மை வகுப்பினருக்குப் பதினேழு பிரதிநிதிகளும், சிறுபான்மை வகுப்பினருக்குப் பதினெட்டுப் பிரதிநிதிகளும் இருந்தார்கள்.

சிறுபான்மையினரால் மறக்க முடியாத டொனமூர் அரசியல் திட்டம் சபையில் விவாதத்துக்கு வருகிறது. வாக்கெடுப்பின்போது வாக்குகள் சமனாகப் பிரிந்தால் தமது வாக்குரிமையை "வேண்டாம்" எனும் கட்சிக்கு வழங்கி டொனமூர்த் திட்டத்தை நிராகரித்துவிடுவதென்னும் ஒரு தார்மீக வாக்குறுதி பற்றி சேர். ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் மீது சிறுபான்மை வகுப்புப் பிரதிநிதிகள் கொண்டிருந்த நம்பிக்கை பலனளிக்கவில்லை. எதிர்பார்த்தபடி வாக்குகள் சமனாகப் பிரியவில்லை. அரசாங்கத் தரப்புக்கு ஒன்று கூடிவிட்டது. ஒரு தமிழ்ப்பிரதிநிதி இந்தச் சந்தர்ப்பத்தில் இழைத்த இமயமலை போன்ற பெரிய தவறுதல் இந்த நம்பிக்கையைச் சிதறடித்துவிட்டது. சேர். ஜேம்ஸ் பீரிஸ் போன்ற தலைவர்கள் நம்மிடையே பிறக்கவேண்டும்.

இந்த விசாலமான நோக்கம் படைத்த ஒரு தந்தையின் மைந்தன் என்னும் உரிமைக்குத் தகுதி வாய்ந்தவர் தேவசூரியசேன. இவரது இயற்பெயர் வேறு. தாம் பிறந்த நாட்டின் மொழி, கலாசாரப் பண்பு, பாரம்பரியம் என்பவைகளைக் கருத்திற்கொண்டே தமது பெயரை இவ்வாறு மாற்றிக் கொண்டார். இதுவும் ஒரு முன்மாதிரியே.

தேவசூரியசேன ஓர் இசை நடனப் பிரியர். மேல்நாட்டு இசைக் கலையில் ஒருமேதை. நாட்டுப் பாடல், நாட்டுக்கூத்து ஆகிய தேசீயக் கலைகளில் அதிக ஆர்வம் கொண்டவர். அவற்றின் முன்னேற்றத்துக்குத் தம்மை அர்ப்பணம் செய்தவர். இனிய பண்பாளர்.

இற்றைக்கு இருபது ஆண்டுகளின் முன்பு அன்னார் என்னோடு தொடர்புகொண்டு கலாநிதி சரத்சந்திரா அவர்களுடன் மட்டக்களப்புக்கு வருகை தந்தார். அறிமுகம் குறியாத விருந்தினராய் முதல் முதல் மட்டக்களப்புக்கு வருகைதந்த இப்பெரியார் இருவரையும் மட்டுநகர்

எல்லையிலே வரவேற்று அழைத்துவந்து அகநகருட் புகலானேன். அப்போது தேவசூரியசேன அதிசய மேலீட்டால் இதென்ன அழகான பட்டினம்? இதன் இயற்கை அழகுபோல நான் எங்கும் கண்டதில்லை.

நீரரணும், மதிலரணும் சூழ்ந்து இயற்கை வனப்பின் மத்தியிலே உதய சூரியனை வரவேற்கின்ற மட்டுநகர் மங்கையின் அழியாத அழகினையும், அவளின் பாதுகாப்பையும் நான் எவ்வாறு வருணிப்பேன்? என்று கூறுகையில்; கலைகலாசாரப் பண்பின் பிறப்பிடமும், புகலிடமும் போல் காட்சியளிக்கின்ற மட்டுநகருக்கு வந்தமை குறித்து நான் பெருமையடைகின்றேன் எனக் கலாநிதி சரத்சந்திரா அவர்கள் தேவசூரியசேனவின் சொல்லை வழிமொழிந்ததுபோல் சொல்லிக்கொண்டிருக்க; நாங்கள் மூவரும் தேவசூரியசேனவின் மே பிளவர் கார் மூலம் அகநகரை வலம் வந்து வாடி வீட்டில் சிறிதுநேரம் தங்கினோம்.

கலாநிதி சரத்சந்திரா இலங்கைப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர். சமஸ்கிருதம், பாளி, சிங்களம் ஆகிய பல மொழிப் பீடத்தின் தலைவர். பல நாடகங்கள் இயற்றிய எழுத்தாளருமாவர்.

இரு நண்பர்களும் குருக்கள் மடத்தில் என்னுடன் ஒருவார காலம் தங்கியிருந்தனர். பழைமை வாழ்கின்ற கிராமங் களுக்கெல்லாம் அவர்களை அழைத்துச் சென்றேன். பிரபல அண்ணாவி மாரையும், சிறந்த நடிகர்களையும் சந்திக்கச் செய்தேன். மட்டக்களப்பு நாட்டின் பழைமையை ரசித்து அவர்கள் புதுமகிழ்ச்சி கொண்டார்கள்.

பலரக நாட்டுப்பாடல்களை ஒலிப்பதிவு செய்ததுடன் நாட்டுக் கூத்துகள் சிலவற்றின் பகுதிகளையும் நடிக்கச் செய்து ஒலிப்பதிவு செய்துகொண்டார்கள். செட்டிபாளையம் இ.கணபதிப்பிள்ளைப் புலவர் முதலிய பழந்தமிழ்ப் புலவர் சிலரின் நட்பும் இவர்களுக்குக் கிடைக்கலாயிற்று. நள்ளிரவில் மீன்பாடும் இன்னிசை விருந்தாகிய புது அனுபவத்தையும் அடைந்து கொழும்பு திரும்பினர்.

இரண்டொரு மாதம் சென்றபின்நான் கொழும்புக்குப் போயிருந்தபோது சூரியசேன அவர்கள் என்னை அல்விஸ் பிளேசில் உள்ள தமது பத்தாம் இலக்க வீட்டிக்கு அழைத்துச் சென்று தமது மனைவியாரை அறிமுகஞ்

செய்து வைத்து விருந்துபசாரம் செய்து வழியனுப்பிய இனிய நிகழ்ச்சி இன்னும் என் நினைவில் இருக்கின்றது.

தேவசூரியசேனவின் வாசத்தலத்தில் நாடக அரங்கொன்றும் அமைந்துள்ளமை எனது உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. கலாநிதி சரத்சந்திரா அவர்கள் எழுதியிருக்கும் ஒரு நூலில் மட்டக்களப்பு நாட்டுப்பாடல், நாட்டுக்கூத்து இவற்றின் செய்திகள் காணப்படுவதாக அறிகிறேன். கலைப் பண்பினால் இணைந்து வாழ்வோம்.

– "உள்ளதும் நல்லதும்"
ஏ.பெரியதம்பிப்பிள்ளை –

# வாதிட்டு நீதியை நிலைநாட்ட பயந்து நடுங்கினர் பலர்

**அப்படிப்பட்டவருடனும் பல சபைகளில் இலவசப் பணியாற்றினேன்.**

இலங்கைக் கலைக் கழக உறுப்பினராகச் சில ஆண்டுகள் சேவை செய்த பின்னர் 1958இல் அரச கரும மொழித் திணைக்களத்தின் ஆலோசனைச் சபையில் கலைச் சொற் குழு உறுப்பினராகப் பணிபுரியும் வாய்ப்பு வந்து சேர்ந்தது. கொழும்பு "றேஸ் கோஸ்" நீட் அவென்யு வீதியிலே றோயல் கல்லூரிக்கும், இலங்கைப் பல்கலைக் கழகத்துக்கும் இடையில் உள்ள ஒரு கட்டிடத்தில் இந்தத் திணைக்களம் அமைந்திருந்தது.

கலாநிதி விஜயசேகரா அவர்கள் திணைக்களத்தின் மா அதிபராயிருந்தார். திரு.எம்.ஜே. பெரேராவும், நண்பர் அ.வி. மயில்வாகனமும் துணை அதிபர்களாயிருந்தனர். வித்தியாரத்தினம் சோ. நடராசா. வித்துவான் எவ்.எக்ஸ்.சீ. நடராசா, திரு மு. கணபதிப்பிள்ளை, திரு.சரவணமுத்து முதலிய நண்பர்கள் மொழிபெயர்ப்புத் துறை அத்தியட்சகர்களாய்ப் பணி புரிந்தனர். பண்டிதர் கா.பொ. இரத்தினம் ஆராய்ச்சித்துறை அதிபராகப் பணி புரிந்தார். இப்போது அன்னார் ஊர்காவற்றுறை எம்.பி. ஆகப் பதவி வகிப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலோசனைச் சபையில் நான் சேவை செய்த காலத்தில் பழைய நண்பினைப் புதுக்கும் வாய்ப்பும், புதிய அறிஞர்களின் நட்பைப் பெறும் சந்தர்ப்பமும் கிடைக்கலாயின. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பதில் வித்தியாதிபதி க.ச. அருள்நந்தி, கொக்குவில் கலாநிதி பொன்னையா என்போர் இங்கே நினைவுக்கு வருகின்றனர். பொன்னையா அதிதீவிர மதி படைத்தவர்; அதிகம் படித்தவர்; ஒருவரையும் விட்டு வைக்க மாட்டார். அவருடைய ஆலோசனையே மேலோங்கி நிற்கும். என்றாலும் அவரை வழிக்குக் கொண்டுவந்துவிடுவோம்.

துணை அதிபர் எம்.ஜே.பெரேரா வினாவுள்ளவர்; கீழைத்தேச

மொழிகள் சிலவற்றில் நல்ல தேர்ச்சி பெற்றவர். கல்வி அமைச்சில் அன்னார் செயலாளராயிருந்தபோது எங்கள் பழைய நட்பு அதிகம் பயன் செய்தது. எவ்.எக்ஸ்.சீ. பின்னர் உதவி ஆராய்ச்சி அதிபராக பதவி வகித்து இளைப்பாறி இன்று பொதுப்பணி புரிந்து வருகிறார்.

இந்த ஆலோசனைச் சபையில் நாங்கள் செய்த சேவை மகிழ்ச்சிக்குரியது.; நிலையுள்ளது; நின்று பயன்தருவது; தேசிய நோக்கம் படைத்தது; அரசாங்க நிருவாகத்தைப் புனர் நிர்மாணம் செய்வது, இது ஊதியம் பெறாத சேவை.

அடுத்து இலங்கை வானொலி கல்வி ஒலிபரப்பு ஆலோசனைச் சபையில் சில ஆண்டுகள் சேவை செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. உத்தியோக உயர்வை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அங்கத்தவர் சிலரால் சில சந்தர்ப்பங்களில் எனக்கு வசதிக் குறைவுகள் ஏற்பட்டதும் உண்டு. சில சமயங்களில் நானே முன்னின்று விவாதங்களை நடத்திய நிலைகளும் எனக்கு ஏற்பட்டுள்ளன. விவாதங்களில் நான் ஈட்டிய வெற்றிகளை இரகசியமாகப் பாராட்டுவார்கள். உதாரணத்துக்கு ஒன்று சொல்கின்றேன்.

நான் மட்டுநகர் அரசினர் கல்லூரியில் ஆசிரியனாய் இருந்த காலம். கல்விமா அதிபரின் பேரில் ஒரு பிரேரணை விவாதத்துக்கு வருகிறது. உதவி வித்தியாதிபதி திரு. வீரசிங்க அவர்கள் மா அதிபரின் பிரதிநிதியாக வந்திருக்கிறார். வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் முற்பகல் பத்து மணி தொடக்கம் பதினொரு மணிவரை இலங்கையில் உள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் வானொலி மூலம் புத்த சமயத்தைப் போதிக்க வேண்டும் என்பது பிரேரணை.

பிரேரணை விவாதத்துக்கு வந்ததும் இந்து மதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்தவ மதம் இவைகளைப் போதிக்க நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதா? என வினாவினேன். இல்லை எனப் பதில் வந்தது. மற்ற மத போதனைகளுக்கும் நேரம் ஒதுக்கிப் பிரேரணையைத் திருத்திச் சமர்ப்பிக்க வேண்டும். இப்போது சபைமுன் இருக்கும் பிரேரணையை நான் எதிர்க்கிறேன் என கூறிக்கொண்டு காரணங்களை விவரித்தேன். எனது விவாதத்தின் பின்னர் பிரேரணை கால வரையறையின்றிப் பின் போடப்பட்டது.

கூட்டம் முடிந்த பின்பு எனது உடன் உறுப்பினர்கள் சிலர் இரகசியமாக, நாங்கள் அரசாங்க உத்தியோகத்தர், ஒன்றும் எதிராகப் பேசும் நிலையில் இல்லை. இப்படியான சந்தர்ப்பங்களில் நிலைமைகளைச் சமாளித்துக் கொள்வதற்காகத்தானே உங்களை வைத்திருக்கிறோம் எனத் தட்டிக் கொடுத்தார்கள். நானும் ஒரு அரசாங்க ஊழியன்தானே.

பின்னர் திருமதி இ. நவரத்தினம் அவர்கள் உதவி வித்தியாதிபதியாய் இருந்த காலத்தில் தமிழ்மலர் நூற்குழுவின் ஆலோசனைச் சபை உறுப்பினராகச் சில வருடம் பணி புரியலானேன். ஆலோசனைச் சபைக் கூட்டங்கள் சில காலம் பலாலி ஆசிரிய கலாசாலையிலும் நடைபெற்றன.

விமான மூலம் போய்வர வித்தியா பகுதியினர் வசதி செய்து தந்தமையால் சுறுசுறுப்பாக வேலை செய்யும் வாய்ப்பு உண்டாயிற்று. ஒவ்வொரு முறையும் பகல் பதினொரு மணி தொடக்கம் இரண்டு இரண்டரை மணி வரையும் கையெழுத்துப் பிரதிகளைப் பார்வையிட்டு வேண்டிய ஆலோசனைகளைச் சொல்வோம். வித்துவான் க. வேந்தனார் முதலிய அன்பர்கள் செய்து வைக்கும் ஒழுங்குகள் எங்கள் வேலைகளை இலகுவாக மேற்கொள்வதற்கு மிகவும் உதவியாயிருந்தன.

ஆலோசனைச் சபைத் தலைவர் திரு. மு. ஞானப்பிரகாசம் பீ.ஏ., பி.எஸ்.ஸி. அவர்களின் அன்பும், பண்பும், அறிவும் எம்மால் என்றும் நினைவு கூரத்தக்கன. பரமேசுவரக் கல்லூரி அதிபராயிருந்த அப்பெரியார் சைவ சித்தாந்த சாத்திர உணர்ச்சியிலும் ஒப்புயர்வற்று விளங்கினார். எனக்கு இனிய நண்பருமாவர்.

சபைக்கூட்டங்களில் எனது மனத்தைப் பெரிதும் கவர்ந்த ஓர் அன்பரைப் பற்றி இங்கே குறிப்பிடுவதில் அகம் மிக மகிழ்கின்றேன். அவர்தான் சபையின் செயலாளர் திரு. அ. அருளையா. கணித மேதையும் வான சாத்திர நிபுணருமாக விளங்கிய காரை நகர்ப் பேராசிரியர் திரு. அலன் ஏப்ரகாம் அவர்களின் புதல்வராகிய அருளையா மாவட்ட வித்தியாதரிசியுமாவர். மட்டக்களப்பில் அவர் வித்தியாதரிசியாயிருந்த பழைமைகெழுமிய நட்புரிமையும் உடையவர்.

நான் கூட்டங்களுக்குப் போகும் நாளெல்லாம் விமான நிலையத்துக்கு வந்து என்னை அழைத்துச் சென்று சுண்டிக்குழியில் உள்ள தமது இல்லத்தில் உண்டியும் உறையுளும் அளித்து உபசரித்து வழியனுப்பி வைக்கும் அன்னாரின் அன்பு பதிலுபகாரம் கருதாத மெய்யன்பாகும். இது 1965ஆம் ஆண்டு வரை நிகழ்ந்தது.

வாசகர்களுக்கு ஒன்று சொல்கின்றேன். கலைக்கழகம் முதலாக இந்தச் சேவைகளெல்லாம் தியாக சேவையே. இலவசப் பிரயாணம் மாத்திரமே அன்றிப் படிச்செலவாக யாதேனும் வழங்கப்படுவதில்லை. இதே நேரத்தில் வேறு ஆலோசனைச் சபைகளில் அங்கத்தவர்களுக்கு ஒரு கூட்டத்துக்கு ரூபா இரு நூற்றைம்பது வரை வழங்கப்பட்டு வந்ததையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

இனி இந்த. ஆலோசனைச் சபைச் சேவையின் இறுதிக் கட்டத்துக்கு வருகின்றேன். 1970ஆம் ஆண்டு இந்து சமய விவகார ஆலோசனைச் சபைக்கு நியமனம் பெற்று 1978 முற்பகுதி வரை அங்கத்தவராயிருந்தேன். இதுதான் ஒரு ஆலோசனைச் சபையில் நான் சேவை செய்த நீண்ட காலமாகும்.

ஆலோசனைச் சபை அங்கத்தவர்களுக்கு முதலாம் வகுப்புப் பிரயாணச் சீட்டு வழங்குவது வழக்கம். இந்த ஆலோசனைச் சபையின் முதலாவது கூட்டம் கௌரவ கலாசார அமைச்சர் திரு-ஆர்.எஸ். குலதிலக அவர்களின் தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்திலிருந்து வந்த சில அங்கத்தவர்கள் தங்களுக்குப் படிச் செலவு வழங்க வேண்டுமென அமைச்சரிடம் ஒரு கோரிக்கையை விடுத்தனர்.

நான் அமைச்சருக்கு ஆலோசனை கூறினேன். இது ஒரு சமயத் தொண்டு. இந்த ஆலோசனைச் சபை உழைக்கும் சபையல்ல. முதலாம் வகுப்புப் புகையிரதப் பயணச்சீட்டை இரண்டாம் வகுப்பாகக் குறைத்து வருகிற வித்தியாசத்தைப் படிச் செலவாக வழங்கலாம். இந்த ஆலோசனையை அமைச்சரும் சபையினரும் ஏற்றுக் கொண்டனர். பத்து ரூபா படிச் செலவு அனுமதிக்கப் பெற்றது. பின்னர் அது பதினைந்து ரூபாவாகக் கூடிற்று.

வெள்ளவத்தை ஸ்ரீ ராமகிருஷ்ண சங்க கலாசாரக் கட்டிட நிலையத்திலே சுதந்திரமாக இயங்கிவந்த ஆலோசனைச் சபை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் கலாசார அதிபர் காரியாலயத்துக்கு மாற்றப்பெற்றது. இதனால் உண்டாகிய வசதிக் குறைவுகள் காரணமாக திரு. என். நவரத்தினம் உயர் நீதி மன்றப் பதிவாளர் சபைக் காரியதரிசிப் பதவியை ஏற்க மறுத்து விட்டார். நவரத்தினம் ஒரு கரும வீரர்.

பின்னர் கணக்காய்வாளர் திரு.மு. சிவராசா அவர்கள் காரியதரிசிப் பதவியை ஏற்கலானார். ஓய்வுபெற்ற நீதியரசர் உயர்திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்களின் தொடர்ச்சியான தலைமையின் கீழ் புதிய அமைப்புப் பெற்று ஆலோசனைச் சபை சிறந்த சேவை செய்து வருகின்றது.

தலைவரின் விடா முயற்சியால் திரு. சீ. ரங்கநாதன் கியூ. சீ. போன்ற சட்ட நிபுணர்களின் தன்னலமற்ற சேவை கொண்டு நாங்கள் உருவாக்கிய இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் (நிதி, நிருவாகம்) நடைமுறைக்கு வரும் நன்னாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

அன்றியும் நமது சைவக் குருமார் வஸ் பிரயாணத்தின்போது கம்பிகளிற் பிடித்துத் தொங்குகின்ற ஆசாரமில்லாத அவல நிலை நீங்குவதற்கேற்ற சீருடை ஒன்றினை ஆலோசனைச் சபை ஆக்கித் தருமெனவும் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

இந்து சமயத்துக்கு மாத்திரமல்ல; சட்ட நூல்துறைக்கும், தமிழ்ச் சமூகத்துக்கும் ஒரு மங்கல நல்லணியாக விளங்குகின்ற தலைவர் உயர்திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு நானும் ஒரு அன்பனான தொடர்பு குறித்து அகம் மிக மகிழ்கின்றேன். அன்பினால் ஆக்கமுண்டு.

– "உள்ளதும் நல்லதும்"
ஏ.பெரியதம்பிப்பிள்ளை –

# சிறுபான்மையினர் உரிமைகள் பறிபோனது ஏன்?

அகில இலங்கை இந்துமா மன்றம் 1955ஆம் ஆண்டு மாசி மாதம் ஆறாந்தேதி நிறுவப்பெற்றது. இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வந்து கூடிய பல நூற்றுக்கணக்கான மக்களிடையே பெயர் வைப்பதில் அபிப்பிராய பேத முண்டாமிற்று. சைவ மாமன்றம் எனப் பெயரிட வேண்டுமென வாதாடினர் ஒரு சாரார். இந்துமா மன்றம் எனப் பெயரிடுவதே பொருத்தமாகுமென வாதாடினர் மறுசாரார்.

இந்துமா மன்றம் எனப்பெயரிட வேண்டுமென வாதாடிய கோஷ்டியின் தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் உயர்திரு. பொன். ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள். நான் ஸ்ரீஸ்கந்தராசா கோஷ்டியில் சேர்ந்துகொண்டு உரையாற்றுகையில், 'இந்து என்னும் சொல் சைவம் முதலிய எல்லாப் பிரிவுகளையும் அடக்கும். சைவம் என்னும் சொல் அவ்வாறு அடக்காது. இந்து சாதனம், இந்துக் கல்லூரி, இந்து வித்தியா விருத்திச் சபை, இந்து அற நிலையம் போன்ற அடிப்பட்ட வழக்குடைய சொற்களையும் நாம் நோக்கிப் பார்க்க வேண்டும். பெயர் பொருத்தமாக அமையவேண்டும்.

நமது நோக்கம் விசாலமானது. நாம் எல்லார்க்கும் இடம் கொடுக்க வேண்டும். இந்துமா மன்றம் எனப் பெயரிடுவதே பொருத்தமானது. நல்லது என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம். சபை இப்பெயரையே ஏகமனதாக ஏற்றுக்கொண்டு நமது இந்தத் தாபனத்துக்கு அகில இலங்கை இந்துமா மன்றம் எனப்பெயரிட வேண்டுமென அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன்' எனக் கூறி முடித்தேன். இந்து என்ற பெயரே சபையில் அங்கீகாரம் பெறலாயிற்று.

எங்கு போனாலும் பிரச்சனைகள் அதிகமாக என் தலையில் வந்து விழுவதே வழக்கம். புத்த ஜயந்திக் கொண்டாட்டம் நடைபெறப் போகிறது.

உலகப் புகழ்பெற்ற தத்துவசாத்திர மேதை டாக்டர் ராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராக இலங்கைக்கு வருகின்றார்.

இந்துமா மன்றத்தின் உப தலைவர்களுள் ஒருவராக நான் பதவி வகித்த காலமென நினைக்கின்றேன். மன்றத்துக்கு ஒரு பிரேரணை வருகிறது. இலங்கையிலுள்ள இந்து சமய சங்கங்களெல்லாம் புத்த ஜயந்தியைக் கொண்டாட வேண்டுமென இம்மன்றம் தீர்மானிக்கிறது. இதுதான் பிரேரணை.

விவாதத்தின்போது புத்த ஜயந்தியைக் கொண்டாட வேண்டுமென மன்றத்தைக் கேட்டுக்கொண்டது யார்? புத்த தாபனங்களா? அல்லது அரசாங்கமா? என வினாவினேன். அரசாங்கமே எனத் தலைவர் பதிலளித்தார். தாபனங்கள் கேட்டால் நாம் கொண்டாடலாம். அது அன்புப் பணிப்பு. அரசாங்கம் கேட்டால் அது அதிகாரப் பிணிப்பு. பௌத்த மதத்தின்மீது நான் வைத்திருக்கும் எல்லா மதிப்புகளுடனும் சொல்கின்றேன், பிரேரணைக்கு எனது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றேன் எனக் கூறினேன்.

எனது நண்பர் சிலர் அரசாங்கத்தில் உயர் பதவி வகிப்பவர்கள்; பதவி உயர்வை எதிர்பார்த்திருப்பவர்கள்; சைவப்பழங்கள்; என்னை எதிர்மறுத்து, சைவத்துக்கும் பௌத்தத்துக்கும் என்ன வேற்றுமையிருக்கிறது? இரண்டும் சரிசமம்தானே. நாம் புத்தஜயந்தி கொண்டாடுவதில் ஒன்றும் பாதகமில்லை என்று வாதாடினர்.

நான் நினைத்தது ஒன்று, இவர்கள் சொல்வது வேறொன்று. சமயக் கொள்கை பற்றி இங்கே பேச வேண்டியதில்லை. ஒரு சமயத்தை இன்னொரு சமயம் கௌரவிப்பது மிக அவசியம். அதைச் சுதந்திரமாகச் செய்யவேண்டும். அராசாங்க அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டுச் செய்வதையே நான் எதிர்க்கிறேன்.

இந்த நிலையில் எனது விவாதத்தைத் தளர்த்திக்கொள்ள நான் இணங்கவில்லை. பின்னர் ஒரு சமரச முடிவுக்கு வந்தோம். விரும்பிய சங்கங்கள் கொண்டாடலாம் என்னும் திருத்தத்துடன் பிரேரணை நிறைவேறியது. சிறுபான்மையினரின் உரிமைகள் சிறிது சிறிதாகப் பறிபோனது நம்மவர்களின் இந்தப் புத்தியினாலேதான்.

இனி, ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்துக்கு வருவோம். செந்தமிழ் இலக்கியக் குழுவில் நான் 1967இல் ஒரு அங்கத்தவரானேன். புலவர் சிவங்கருணாலய பாண்டியனாரும் அதில் அங்கத்துவம் வகித்தார். கலாநிதி பண்டிதர் போராசிரியர் ஆ. சதாசிவம் அவர்கள் செந்தமிழ்க் குழுவின் தலைவராவார்.

ஆண்டுதோறும் தமிழ்ச் சாகித்திய விழாக்களை நடத்தியும், கலைப் பூங்கா என்னும் செந்தமிழ்ச் சஞ்சிகை ஒன்றை வெளியிட்டும் கலாநிதி சதாசிவம் அவர்கள் செய்த சேவை பாராட்டுதற்கு உரியதாகும். செந்தமிழ் இலக்கியக் குழுவின் முதலாவது நோக்கம் தமிழ் மரபினைப் பேணிக் காப்பதேயாகும்.

மரபென்பது ஆக்கத்திலிருந்து பிறப்பது. முன்னோர் செய்துவைத்த ஆக்கம் அவர் தம் பின்னோர்க்கு மரபாகிறது. பின்னோர் செய்து வைக்கும் ஆக்கம் அவர்தம் பின்னோர்க்கு மரபாகிறது. இதனை விளக்கிக் கலைப்பூங்காவில் மரபும் ஆக்கமும் என்னும் தலையங்கத்தில் நீண்டதோர் செய்யுள் எழுதியிருப்பதும் இங்கே நினைவுக்கு வருகிறது.

சுவைபல துளும்பப் பல புதுப்புது ஆக்கங்களைப் படைத்து உதவிய கனக செந்திநாதன் அவர்களுக்குச் செந்தமிழ் இலக்கியக் குழுவின் சார்பில் இரசிகமணி என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்துப் பொன்னாடை போர்த்திய மங்கல நிகழ்சசி மட்டக்களப்பு விழாவில் நடைபெற்றதையும் இங்கே நினைவு கூருகின்றேன். இந்தத் தமிழ்ப் பணியில் எனக்குப் பிரதான பங்கு கிடைத்தமை குறித்து மகிழ்கின்றேன். இரசிகமணி போய்விட்டார். அவர்தம் இனிய படைப்புகளை நாம் ரசிக்கின்றோம்.

முன்பு குறிப்பிட மறந்துபோன மூன்று செய்திகளை இனம்பற்றி இங்கே சேர்க்க விரும்புகின்றேன். தமிழ் மலர் ஆலோசனைச் சபை பலாலியிற் செயற்பட்டுக் கொண்டிருந்த சமயம் நடந்தது ஒன்று. பலாலி ஆசிரிய கலாசாலையின் தமிழ் விரிவுரையாளர் பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை அவர்களது நினைவு இங்கே வருகிறது. பண்டிதர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர். கவர்ச்சிகரமான பேச்சாளர். இன்சுவை எழுத்தாளர். இலக்கியச்சோலை என்னும் அன்னாரின் கட்டுரைத் தொகை

நூல் அவர்தம் பண்பட்ட உள்ளத்தைத் தெள்ளிதிற் காட்டும் வகையில் அழகாக அமைந்துள்ளது. இரசிகமணி கனக செந்திநாதனுக்கு இவர் அன்பர். எனக்கு இருவரும் நண்பர்.

ஒருமுறை நான் பலாலிக்குப் போன சமயம் பார்த்து ஆசிரிய கலாசாலையினர் பண்டிதருக்கு ஒரு பாராட்டு விழா நடத்தும் ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். இந்த இரசிகருக்கு இவ்விழாவிலே 'செந்தமிழ் மணி' என்னும் சிறப்புப் பட்டம் சூட்டிக்கௌரவிக்கும் உரிமையையும், தகுதினையும் எனக்களித்து மதிப்புச்செய்த கலாசாலை அதிபர், உப அதிபர், விரிவுரை யாளர்கள், பயிற்சி ஆசிரியர்கள் அனைவரையும் இங்கே நினைவு கூருகின்றேன்.

மற்றது, அல்வாயூர்க் கவிஞர் மு. செல்லையா அவர்களை இலங்கை வானொலி நிலையத்தில் வைத்துக் கௌரவிக்கும் பேறு பெற்றமை. அன்பர் செல்லையா அவர்கள் இந்த நூற்றாண்டின் சிறந்த தமிழ்க்கவிஞர்களுள் ஒருவர். தைப்பொங்கல், சித்திரைத் திருநாள், தீபாவளி ஆகிய மங்கல நன்னாள்களிலே வானொலிக் கவியரங்குகளில் சந்தித்து அன்னாரின் நண்பினைப் பெறலானேன்.

இயல்பான கவிநடை அவரைத் தேடிவந்தது போல் இருக்கும் அவரது கவியமைப்பு. அதற்கேற்ற சாரீரம். சொற்கள் இசையோடு சேர்ந்து வருவது தான் பாட்டு. அதை இசையோடு பாடுவதுதான் இன்பம் என்று சொல்லிக்கொண்டு தமது பாடல்களை இசையோடுதான் அவர் பாடுவார்.

ஒருமுறை வானொலிக் கவிதைப் போட்டியில் இந்தக் கவிஞருக்குப் பதக்கம் பரிசாகக் கிடைத்தது. வானொலி நிலையத்தினர் மட்டக்களப்பிலிருந்து என்னைக் கொழும்புக்கு அழைத்துக் கலையரங்கு ஒன்றை அமைத்து அறிஞர் பலரின் முன்னிலையில் கவிஞருக்கு என்னைக் கொண்டு பதக்கம் அணிவித்துக் கௌரவித்தமையை நினைக்குந்தோறும் எனக்கு மகிழ்ச்சி மிகுகின்றது. மற்றவரை மதிப்பதுதான் நமக்கு மதிப்பு.

"உண்ணும் உணவில் உயிரில் எமதிரண்டு
கண்ணில் இனிய கவிப்புலவீர் – பண்ணமையும்
இன்பக் கவியால் இளஞ்சந் ததிவாழ
அன்புப் பணிபுரிவோம் யாம்"

"பாடுவதெல்லாம் பாட்டோ
மக்கள்தம் பாட்டை நாளும்
நாடியே யுணர்ந் துயர்த்தும்
நலமின்றேல்: சமூகந் தன்னைச்
சாடியே கிண்டல் செய்து
தாழ்த்துவோன் கவிஞ னாமோ?
வாடியே உழலும் மக்கள்
வருத்தம் நீங்கிடவே பாடீர்"

என்னும் எனது இரு பாடல்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நமது இளங் கவிஞர்களுக்கு அல்வாயூர்க் கவிஞரின் நினைவாகச் சமர்ப்பிக்கின்றேன். கவியுயர என வாழ்த்துகின்றேன்.

மட்டக்களப்பின் முதுபேரறிஞர் சைவ சித்தாந்த சாகரம் கா. அருணாசல தேசிகமணி அவர்களை இங்கே நினைவுகூர்வதில் எனது உள்ளம் தளிர்க்கின்றது. 1962ஆம் ஆண்டில் எனக்குத் தங்கப்பதக்கம் சூட்டிக் கௌரவித்த மட்டக்களப்புத் தமிழ்க் கலா மன்றம், 1964ஆம் ஆண்டில் என்னைக் கொண்டு தேசிகமணிக்கும் தங்கப் பதக்கம் அணிவித்துப் பெருமதிப்பளித்த தகுதியான செயலை இங்கே கூறிக்கொளவதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

சைவ சமய சிந்தாமணி என்னும் நூலை எழுதி வெளியிட்டுப் பெரும் புகழ் படைத்த தேசிகமணியைக் கௌரவித்த கலாமன்றம் இதனால் தன்னையே கௌரவித்துக் கொண்டது. பிரபல எழுத்தாளர் செழியன்

பேரின்பநாயகம் முதலிய இளைஞர்களால் நடத்தப்படும் இத்தாபனம் பல பேரறிஞர்களின் மதிப்பைப் பெற்றது. மன்றத்துக்கு எனது பாராட்டும் நல்வாழ்த்தும் உரியனவாகுக.

– "உள்ளதும் நல்லதும்"
ஏ.பெரியதம்பிப்பிள்ளை –



பிரதம மந்திரி கௌரவ திரு. டட்லி சேனாநாயக்கா அவர்களுக்குக் குருக்கள் மடத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது எடுக்கப்பட்ட படம்.

# கல்முனை கண்ட விளைவு விழா
# அசீஸ், காரியப்பர் ஆற்றிய பணி

இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில் கல்முனையில் 1941இல் அவசரகாலக் கச்சேரி ஒன்று நிறுவப்பெற்றது. இது கல் ஓயா (பட்டிப்பளை ஆறு) அபிவிருத்தித் திட்டத்தின் முன்னோடியாக அமைந்தது. முதலாவது அரசாங்க உதவி அதிபராக அல்ஹாஜ் ஏ.எம்.ஏ. அசீஸ் அவர்கள் நியமனம் பெற்றார்கள்.

திரு. வ. நல்லையா அவர்கள் என்னிடம் வந்து கல்முனை உதவி அரசாங்க அதிபர் நல்ல தமிழறிஞர் ஒருவருடன் தொடர்புகொள்ள விரும்புகிறார். நான் உங்கள் பெயரைத்தான் சொல்லியிருக்கிறேன். விரைவில் இருவரும் உங்களைச் சந்திக்க வருவோம் என்று எனக்குச் சொன்னார்.

இரண்டு மூன்று நாள் கழித்து இருவரும் குருக்கள் மடத்துக்கு என்னைப் பார்க்க வந்தார்கள், அன்று தொடக்கம் கல்முனையிலிருந்து மட்டக்களப்புக்குப் போகும்போதெல்லாம் அசீஸ் பெரும்பாலும் என்னைச் சந்தித்துக் கொள்வார். சில ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழும் கேட்டுக் குறித்துக்கொள்வார்.

கூட்டங்களிலே தமிழிற் பேசும்போது என்னைத் தமது பக்கத்தில் வைத்துக் கொண்டே பேசுவார். பேச்சுக்களின் இடையே தகுதியான தமிழ்ச் சொற்கள் சிலவற்றை என்னிடம் கேட்டு அறிந்து கொண்டு அவற்றை அமைத்துப் பேசுவார். அவர் கல்முனையில் இருக்கும் காலமெல்லாம் இவ்வண்ணம் நடந்து வந்தது. தமிழும் இனிமையும் போல எங்கள் நட்பும் நிலைபெறலாயிற்று.

அசீஸ் கல்முனையில் இருந்த காலப் பகுதியில் விவசாயிகள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சி உண்டாயிற்று. அவர்களுக்கு எதிர்காலம் பற்றி ஒரு புது நம்பிக்கை பிறந்தது. விவசாயிகளே நாட்டின் முதுகெலும்பு என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

உலகுக்கு உழவன் உயிர் என்னும் உண்மையினை அதிகாரிகளும் உணர்ந்து கொண்டார்கள். கிழக்குத் திசையின் தானியக் களஞ்சியம் என்னும் பழைய பெயரை நமது நாடு மீண்டும் பெற உழைப்போம் என வீறு கொண்டு எழுந்தார்கள் நம் விவசாயிகள்.

விவசாயிகள் எழுச்சியைக் கண்டு மகிழ்ச்சியடைந்த அசீஸ் அவர்கள் கல்முனையில் ஒரு விளைவு விழாக்காண விழைவுகொண்டார். 1942 இல் விளைவு விழாச் சபையொன்று நிறுவப்பெற்றது. அதன் தலைவராக அசீஸ் அவர்களும், காரியதரிசியாக ஜனாப் முதலியார் எம். எஸ். காரியப்பரும் பணி புரிந்தார்கள்.

முதலியார் காரியப்பர் ஒரு கருமவீரர் அழகாக ஆங்கிலம் பேசுவார். இந்தியாவில் எம்.எஸ். என்றால் எம்.எஸ். சுப்பு லட்சுமியைக் குறிப்பதுபோல் மட்டக்களப்பில் எம்.எஸ் என்றால் முதலியார் காரியப்பரையே குறிக்கும். அவ்வளவு பிரபலமானவர் அவர். கரைவாகுப்பகுதி வன்னிமை முதலியாராகவும், கூட்டுறவு இயக்கப் பிரமுகராகவும் நாடாளுமன்றப் பிரதிநிதியாகவும் இலங்கை முழுவதும் புகழ் பரப்பியவர் முதலியார் காரியப்பர்.

விழாவின் சார்பில் ஒரு நினைவு மலரும் வெளியிடப் பெற்றது. ஆங்கிலச்செய்திகளையும், கட்டுரைகளையும் தமிழாக்கம் செய்வதில் விழாச் சபைக்கு உதவிய அன்பர்கள் சிலரின் பெயர் இப்போது நினைவில் இல்லை. செல்வி கிறேஸ் தில்லையம்பலம் நினைவில் இருக்கிறார். மாட்சிமை தங்கிய தேசாதிபதி அவர்களின் கட்டுரையை நான் தமிழாக்கம் செய்து கொடுத்தேன்.

மலருக்கு விவசாய மாதிரிப் பாடல் ஒன்றும். கிருஷிக ஆத்திசூடியும், ஒரு வாழ்த்துப் பாடலும் பாடிக் கொடுத்தேன். அகில இலங்கை ரீதியில் பாட்டுப் போட்டிகள் இரண்டை நடத்தவும் பிற பரிசில்களும் பாராட்டுப் பத்திரங்களும் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மாதிரிப் பாடலின் உள்ளுறைச் செய்யுளை இங்கே தருகின்றேன்.

"உழவால் உயரும் உலகம், உழவும்
உழைப்பால் உயரும், உழைப்பும் – தொழிலுணர்ச்சி
பெற்றால் உயருமெனும் பேருண்மை நம்மிளைஞர்
கற்றால் வருமின்பம் காண்""

வாழ்த்துப் பாடலில் ஒரு சிறு பகுதியையும் இங்கே காண்க.

கொல்லும் புலிகரடி கோப மதயானை
செல்லும் வழிகளெல்லாம் – கிளியே
செந்நெல் விளையுதடி"

காயும் விஷநுளம்புக் காடுகள் நாடாகிக்
காயும் கனிகிழங்கும் – கிளியே
கற்பகச் சோலையடி"

"வாழ்க விளைவுவிழா வாழ்க பொருட்காட்சி
வாழ்க அசீஸ்துரையும் – கிளியே
மங்களம் பொங்குகவே."

அசீஸ்துரை இங்கிருந்து மாற்றம் பெற்றுச் செல்லும்போது பக்கத்திலே தமிழறிஞர் ஒருவர் இருக்கவேண்டிய அவசியமில்லாமற் போயிற்று. அவர் பெரிய தமிழறிஞராகி விட்டார். 'குல வித்தை கல்லாமற் பாதி' அல்லவா? அவர் தமிழிலே பிறந்து, தமிழிலே வளர்ந்து, தமிழிலே நிறைந்த ஒரு யாழ்ப்பாணத்தவர்.வைதீசுவர வித்தியாலயத்திலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் படித்தவர்.

கொழும்பிலிருந்தாலும் யாழ்ப்பாணப் பற்று அவருடன் ஒட்டிக்கொண்டேயிருந்தது. அது பிறவிக்குணம். இதனாலல்லவா அன்னார் கொழும்பு ஏழிலுள்ள வாண்ஸ் பிளேஸ் எண்பத்தோராம் இலக்க 'மெடோ சுவீற்' என்னும் தமது இல்லத்துத் தலைவாசலில் பூவுலக கற்பகம் எனப்

போற்றப்படுகின்ற பனைமரம் ஒன்றை அன்பாக வைத்து வளர்த்து வந்தார். அன்னாரின் நினைவு போல் அது இன்னும் நின்று நிலவுகின்றது.

அன்னாருக்கு நான் கூறிய பிரியாவிடைச் செய்யுள் ஒன்றினை நினைவின் பொருட்டு இங்கே தருகின்றேன். இச்செய்யுளில் அவர் நீடு வாழ்கின்றார்.

**'புலத்துயர்ந்து வண்மைப் புகழ்க்கதிர்கள் வீசி**
**நிலத்ததிகா ரஞ்செய்து நின்று - பலத்தினிறை**
**நல்ல களம்பொலிந்து நாடு புரத்தலால்**
**நெல்லும் அசீஸ்துரைக்கு நேர்'**

இது நெல்லுக்கும் அசீசுக்கும் சிலேடை. புலத்து உயர்ந்து - வயலில் வளர்ந்து உயர்ந்து; வண்மைப் புகழ்க் கதிர்கள் வீசி - வாரி வழங்குகின்ற புகழினையுடைய தானியக் கதிர்களைப் பரப்பி; நிலத்து அதிகாரஞ் செய்து நின்று - நிலத்திலிட்ட ஒரு நெல் பல நெல்லுகளாக அதிகரித்து நின்று; பலத்தில் நிறை நல்ல களம் பொலிந்து - பயனில் நிறைவு பெற்ற நல்ல நெற்களத்திலே பொலிகளாகக் குவிந்து; நாடு புரத்தலால் - உணவூட்டியும் பணமீட்டியும் நாட்டைப் பாதுகாப்பதால்; நெல்லும் அசீஸ் துரைக்கு நேர் - நெல்லும் அசீஸ் துரைக்கு நிகராகும் என நெல்லின் மேல் வைத்துப் பொருள் கொள்க.

புலத்து உயர்ந்து - அறிவில் உயர்ந்து; வண்மைப் புகழ்க் கதிர்கள் வீசி - கொடையால் வருகின்ற புகழாகிய ஒளியைப் பரப்பி; நிலத்து அதிகாரஞ் செய்து நின்று - நாட்டில் நிருவாக அதிகாரம் செய்து நின்று; நல்ல களம் பொலிந்து - கற்றோர் அவைக் களத்திற் பொலிவுபெற்று; நாடு புரத்தலால் - நாட்டைப் பாதுகாப்பதால்; நெல்லும் அசீஸ் துரைக்கு நேர் - நெல்லும் அசீஸ் துரைக்கு நிகராகும் என அஸீஸ் துரையின் மேல் வைத்துப் பொருள் கொள்க.

மட்டக்களப்பிலே நெல் விளைவைப் பெருக்குவதையே பிரதான நோக்கமாகக் கொண்டு பல வழிகளிலும் சேவை செய்த அருமையும்

பெருமையும் கருதி அசீஸ் அவர்களுக்கு நெல்லை உவமையாக்கிப் பிரியாவிடை கூறிய பொருத்தம் வாசகர்கள் அறிந்து மகிழ்வதற்குரியது.

முதலியார் காரியப்பர் இப்பிரியாவிடைச் செய்யுளை நான் பாடக் கேட்டதும் தம்மையே மறந்துபோனார். இப்படிப் பாடியது அபூர்வம் அபூர்வம். பழைய புலவர்களுக்குத்தான் இது முடியும். இப்போதுள்ளவர்களால் பெரும்பாலும் இது இயலாத காரியம். இந்தப் பாட்டின் மூலமாக உங்கள் இருவரின் நட்பும் நிலைத்து நிற்கும் என அல்ஹாஜ் அசீஸ் அவர்களிடம் கூறியது எங்களால் மறத்தற்குரியதன்று. நாங்கள் இருவரும் மறக்கவுமில்லை.

அசீஸ் அவர்கள் மிக்க நன்றியறிதலுடன் எனது பாட்டை ஏற்றுக்கொண்டு எனக்கு நல்வாழ்த்தும் கூறி பிரியாவிடை பெற்றுக்கொண்டார்.

அன்னாரின் வாழ்க்கைத் துணைவியார் உம்முகுல்தூம் அம்மையார் எல்லா நல்லியல்புகளும் ஒருங்கே அமைந்த ஒரு உயர் குடும்பப் பெண்ணாவார். செல்வச் செருக்கினை வென்ற அம்மாதர் திலகம் எளிமையும் இனிமையுமே வடிவானவர். ஏழைகளின் புகலிடம்.

எனது மனைவி மக்கள் கொழும்பிலே ஒருவார காலம் அம்மையாரின் விருந்தாளிகளாக 'மெடோ சுவீற்' என்னும் இல்லத்தில் தங்கிமிருந்தபோது அவர் செய்த இனிய உபசாரங்களையும், அவரின் மக்கள் காட்டிய அன்பையும் இறக்கும்போதும் நாங்கள் மறப்பதற்கில்லை. இது ஒரு முன்மாதிரியான குடும்பம்.

அசீஸ் அவர்கள் தமது வாழ்க்கைத் துணைவியாரைத் தமது வழித்துணையென்றும். என் உம்முகுல்தூம் என்றும் அழைப்பதிலிருந்து அவர்கள் இருவரும் ஒருவராய் வாழ்ந்தமை எளிதில் விளங்குகின்றது. இருவரும் ஒருவர்பின் ஒருவராய் மறைந்தமை நாட்டுக்குப் பேரிழப்பாகும். இருவரின் பிரிவும் அவர்களின் ஒருமை வாழ்வுக்குச் சான்றாகின்றன.

பிறர் வாழப் பிறந்தவர் அசீஸ். கல்முனை டாக்டர் ஜீ.கே. வேலுப்பிள்ளை. பொலீஸ் இன்ஸ்பெக்டர் எம்.எஸ். ரஹீம், களுதாவளை

வீரபத்திரன் கந்தசாமி, எனது மகன் விஜயரத்தினம் (சிவலிங்கம்) என்போர் அசீஸ் அவர்களின் நேர்மையினாலும் சீர்மையினாலும் ஆக்கம் பெற்று வாழ்வதை இங்கே நன்றியுடன் குறிப்பிடுகின்றேன். ஏ.எம்.ஏ.அசீஸ் என்னும் நாமம் என்றும் நின்று வாழ்க. நீடுவாழ் அசீஸ் பெருமகனை இங்கே நினைவு கூருகின்றேன்.

– "உள்ளதும் நல்லதும்"
ஏ. பெரியதம்பிப்பிள்ளை –

# தேசிய இனங்களை ஒன்றிணைத்த அன்புப்பாலம் அன்பர் பூபதிதாசர்

எனது மனைவியாருக்குக் கடுமையான நோய் வந்ததும், கொழும்புப் பெரியாசுப்பத்திரிக்கு அவரை எடுத்துச் சென்றதும், சிகிச்சையின்றி நோய் குணமடைந்ததும், நான் ஞானசெல்வம் வீட்டில் இருந்ததும் எல்லாம் யார் செய்த விளையாட்டு? அவனுக்கு விளையாட்டு; நமக்கு வினை.

"நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்லவல்ல; பொல்லாக் குணம் போக்க." அருச்சுனன் அடைந்த துயரம் ஞான நூலாகிய பகவத்கீதையை உலகுக்கு அருளியது. எனது மனைவியாருக்கு வந்த நோய் பகவத்கீதை வெண்பாவை என் மூலமாக உலகுக்கு அளித்தது.

மனைவியார்க்கு நோய் வராதிருந்தால் நாங்கள் கொழும்புக்குப் போவதுமில்லை மனைவியார் பெரியாசுப்பத்திரியிற் புகுவதுமில்லை; நான் ஞானசெல்வம் வீட்டில் இருப்பதுமில்லை; அந்த இடத்தில் பகவத்கீதையைக் காண்பதுமில்லை; படிப்பது மில்லை; பகவத்கீதை வெண்பாவை நான் இயற்றுவதுமில்லை. இத்தனைக்கும் காரணமாயிருந்த மனைவியாரின் நோய்க்கு நான் நன்றி கூறுகின்றேன்.

"நானறியேன்; என்னை வழிநடத்தும் எம்பெருமான்
தானறிவான்; அந்நாள் சமர்க்களத்தே – ஞான நெறிக்
கீதையினைப் பார்த்தனன்பாற் கேட்க உரைத்தமறை
ஏதுமறியேன் பாடும் ஈது"

பக்தியோகப் பதிப்பின் முகவுரையில் இப்பாடலைக் காணலாகும். நானறியேன், அவனறிவான்.

. பகவத்கீதை வெண்பா கருமயோகப் பகுதி 'வீரகேசரி' ஞாயிறு இதழில் வெளிவந்துகொண்டிருந்தபோது பல பெரியோரின் அன்பு எனக்குக் கிடைக்கலாயிற்று. அவர்களுள் அன்பர் பூபதி தாசரைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன்.

இப்பெரியாரின் இயற்பெயரை நான் கேட்டு வைத்துக் கொள்ளவில்லை. இவர் ஒரு தென்னிந்திய முஸ்லிம்; பெரிய தனவந்தரின் பிள்ளை; அங்கே சினிமாத் தணிக்கைச் சபையில் அங்கம் வகித்தவர்; எல்லாம் உண்டாகத் துறந்தவர்.

தூய வெள்ளை உடை; நீண்ட தாடி; உறுதியான தேகக்கட்டு; கவர்ச்சியான பார்வை; என்றும் மலர்ந்த முகம் அமைந்த அன்னாரின் இனிய தோற்றத்தை ஒருக்காற் கண்டவர் அதை மறக்கவேமாட்டார். அருட்கடல் ஞானபூபதி என்னும் இஸ்லாமியப் பெரியார் மீது அளவற்ற அன்பு பூண்டவர் ஆதலின், அன்பர் பூபதிதாசன் என்பது இவருக்குப் பெயராயிற்று.

கௌரவ டி.எஸ் சேனநாயக்கா போன்ற பிரபல அரசியல் வாதிகளாலும் அரசாங்க நிருவாகத் தலைவர்களாலும் இவர் பெருமதிப்புப் பெற்றவர். என்னை முன் பின் அறியாதிருந்தும், வீரகேசரி ஞாயிறு இதழில் பகவத்கீதை வெண்பாக்களைப் படித்ததும், அன்னாரின் அன்புப் பெருக்கு மட்டக்களப்பு வரையும் பரவிவிட்டது.

என்னைக் கொழும்புக்கு வருமாறு அழைத்து, குறித்த நாள் அதிகாலையிலேயே கோட்டைப் புகையிரத நிலையத்திற் காத்திருந்து, மாலை மரியாதைகளுடன் வரவேற்றுத் தமது தவப்பள்ளிக்கு இட்டுச் சென்று, ஒரு துறவி செய்த உபசாரத்துக்கு நான் எத்தனை தரம் பிறந்து நன்றி செலுத்தினாலும் அது ஈடாகுமா?

அன்னாரின் அன்பு கலந்த விருந்துபசாரத்தை என்னென்பேன்?

பக்கத்தில் இருந்துகொண்டு தாம் மென்று பார்த்து இது நல்லாயிருக்கிறது, இது நல்லாயிருக்கிறது உண்ணுங்கள், உண்ணுங்கள் என்று தமது உண்கலத்தில் உள்ளதில் நல்லதை எனது உண்கலத்தில் எடுத்தெடுத்து வைக்கின்ற அன்பினும் புனிதமானது இவ்வுலகில் எங்கேனும் உளதாமோ?

எதை உண்ணும்போதும் அமிர்தம் என்றே சொல்லிக் கொண்டு உண்கின்ற அன்பர் பூபதிதாசரின் அகத் தூய்மை எங்கே? நாம் எங்கே? அன்புக்கு மதுரையில் அங்கொரு ஆங்கிலேயர் பாப்புலி. கொழும்பில் இங்கே ஒரு இஸ்லாமிய அன்பர் பூபதிதாசர்.

1943ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்புக்குப் போகும் போதெல்லாம் அன்பர் பூபதிதாசருடன் தங்குவது வழக்கமாய் விட்டது. இது அன்னாரின் அன்பாணை. பெரியோரின் அன்பிலே பழகுவது எவ்வளவு இனிமை.

ஒருமுறை அன்பரின் ஆச்சிரமத்திலே தங்கியிருக்கையில் இஸ்லாமிய இளைஞர் ஒருவரை அன்னார் அழைத்துவந்து, இவர் மனமுடைந்து போயிருக்கிறார். ஏதாவது சொல்லுங்கள் என்று என்னைக் கேட்டுக் கொண்டார்.

நான் அவ்விளைஞரை விசாரித்ததில் பின்வரும் செய்திகளை அறிந்து கொண்டேன். இந்த இளைஞர் தென்னிந்தியாவிலே திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்; அவர் பெயர் முகையதீன் பீர்சாகிப்; வியாபாரத் தொழில் செய்பவர்; பங்காளிகள் செய்த மோசடியால் வியாபாரம் முறிந்து போயிற்று; கை முதலுமில்லை; சீவியம் கடனிலே தான் போய்க்கொண்டிருக்கிறது. இதுதான் இளைஞரின் நிலை.

இவைகளை அறிந்துகொண்டு இரண்டு பாடல்களை அவ்விளைஞருக்குச் சொன்னேன். 'உலகிலே இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். இவை நிலையில்லாதன. அல்லாவின் அருளொன்றே நிலையானது. அது துணை செய்யும். மனம் வருந்த வேண்டாம். அதுவும் ஆண்பிள்ளையாகப் பிறந்த நீ இவ்வாறு வருந்துதல் அழகன்று'

அப்பொருளமைந்த முதற் பாடலை இதோ தருகின்றேன்.

"ஒன்பது வாயில் உடற்கோட்டைக்
குள்வாழ் உயிருக்கிங்கே
இன்பமும் துன்பமும் எல்லாம்
இயைவ தியற்கை கண்டாய்,
மன்பதைக் கல்லாவின் இன்னரு
ளுண்டு; மனம் பதையேல்
அன்ப முகையதீன் பீர்சாகிப்
நெல்வேலி ஆண் பிள்ளையே"

ஆண்டவனின் அருள் மாத்திரமல்ல, நல்லோரின் அன்பும் இருக்கிறது. செய்கின்ற முயற்சியினாலே பொருள் வரும். தருமம் செய்யலாம். புகழும் தேடலாம். இருண்ட மனமுடைய வஞ்சகர்களின் தீய செயல்கள் ஒரு நட்டமும் செய்யமாட்டா. நீ மனம் மயங்கி வருந்தாதே. இது உனக்கு நான் சொல்லும் வாசகம் என்னும் பொருளமைந்த அடுத்த பாடலை இதோ பாருங்கள்:

"அருளுண்டு; நல்லோரின் அன்புண்டு;
செய்திடும் ஆள் வினையால்
பொருளுண்டு அறமுண்டு; பூணும்
புகழுண்டு; பூமி தனில்
இருளுண்ட நெஞ்சத்து வஞ்சகர்
தீவினை என்செய்யுங் காண்?
மருளுண்டு நீதளரேல்; இது
யான் சொல்லும் வாசகமே."

இரண்டு பாடல்களையும் எழுதி எனது கையொப்பமிட்டு அன்பர் பூபதிதாசரிடம் சமர்ப்பித்தேன். அன்னார் குறித்த இளைஞர்வசம் ஒப்படைத்தார். நான் மட்டக்களப்பிற்குத் திரும்பினேன். அடுத்த முறை நான் கொழும்புக்குப் போனபோது அன்பர் பூபதிதாசர் கூறிய சொற்கள் எனக்கு மிகவும் மகிழ்ச்சியளித்தன.

பீர்சாகிப் ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து,உங்கள் பாடல்கள் இரண்டையும் கண்ணாடிபோட்டு அதில் உரிய இடத்திலே திரைநீக்கம் செய்து வைத்து, ஒரு சிறிய வியாபாரத்தைத் தொடங்கினார். அது நல்ல பலனளித்தது. இன்று பெரிய வியாபாரி ஆகிவிட்டார். உங்களை ஓயாமல் விசாரித்துக்கொண்டிருக்கிறார். உங்களைக் காண்பதற்கு உடனடியாக இப்போது இங்கே வருவார்." என்று அன்பர் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே முகைதின் பீர்சாகிப் எல்லா உபசார உபகாரங்களோடும் அங்கே வந்துவிட்டார்.

சுகநலம் விசாரித்துக் கலந்துரையாடி மகிழ்ந்து மேலும் நல் வாழ்த்துக் கூறி அன்னாரை அனுப்பி வைத்தேன். நாலு பேரும் நல்லாயிருந்தால்தான் உலகம் நல்லாயிருக்கும். இது அன்பர் பூபதிதாசர் செய்ததுமல்ல; நான் செய்ததுமல்ல; என் பாட்டுச் செய்தது. என்பாட்டுக் கலைமகள் கடாட்சம்.

அன்பர் பூபதிதாசர் இஸ்லாமியர் மத்தியில் மாத்திரமன்றி இந்துக்கள் மத்தியிலும் சமமான மதிப்பைப் பெற்று வாழ்ந்த ஒரு பெரியாராவர். அவர் இஸ்லாம் கோட்பாடுகளிற் காலூன்றி நின்றுகொண்டே ஏனைய மதங்களையும் சமமாக மதித்த அன்புப் பெருக்கே இதற்குக் காரணமாகும்.

வணக்கத்துக்குரிய தம்மஜோதி தேரோ அவர்களுடன் அன்பர் நல்ல நட்புப் பூண்டிருந்தார். ஒரு முறை என்னையும் அன்னாரிடம் அழைத்துச் சென்று நண்புசெய்து வைத்ததும், அன்னார் என்னுடன் அளவளாவி உபசரித்து பௌத்த தர்மம் பற்றிய இரண்டு தமிழ் நூல்களை எனக்கு அன்பளிப்புச் செய்ததும் என் மனநினைவில் இருக்கின்றன.

தம்மபதம் என்னும் நூல் தம்மஜோதி, அன்பர் பூபதிதாசர் இருவர் பெயரையும் நினைவூட்டிக்கொண்டு அன்னாரின் கையெழுத்துடன் இன்றும் என் கைவசம் உள்ளது.; பூபதிதாசர் இந்நாட்டிலுள்ள தேசிய இனங்கள் மூன்றையும் இணைக்கின்ற அன்புப் பாலமாக வாழ்ந்து வந்தார்.

இந்த இணைப்புப் பாலத்தை உடைக்கும் வன்செயலில் ஈடுபடுவோர் மூன்று இனங்களுள்ளும் இருக்கிறார்கள். சம உரிமையை மறுக்கும் இவர்கள் தமது மார்க்கங்கள் சொல்லும் அன்பு நெறியை ஒருகால் திரும்பிப் பாராரோ? அன்பர் பூபதிதாசர் மறைந்து விட்டார். அவரின் அன்பு இருக்கிறது.

– "உள்ளதும் நல்லதும்"
ஏ.பெரியதம்பிப்பிள்ளை –



புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை வீதியின் பெயர்பலகையை மட்டக்களப்பு மாநாகர சபை ஆணையாளர் தீரு. ரீ. அருணகிரிநாதன் அவர்கள் திரை நீக்கம் செய்து வைக்கிறார்.

# காளமேகமும் கல்லடி வேலனும்

# புலவர்மணி – பண்டிதமணி ஒரு மரத்தின் இரு கிளைகள்

ஆசிரியமணி ஆ. பஞ்சாட்சரம்
(காரியதரிசி – பண்டிதமணி நூல் வெளியீட்டு சபை)

காளமேகப்புலவர் மீது இரட்டையர்களுக்கு அலாதியான விருப்பம் இருந்தது. அதனால் காளமேகப்புலவரது இல்லத்தை நோக்கி விரைகின்றார்கள். குருடருடைய தோளிலே முடவர். வீடு எதிர்ப் பட்டது. காளமேகத்தின் வீடு அமங்கலமாக இருந்தது. காளமேகம் இறந்ததையும் அவரது பூதவுடல் அப்பொழுது தான் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட செய்தியையும் அங்கு உள்ளவர்கள் எடுத்துச்சொல்ல, மயானத்தை நோக்கி விரைந்தார்கள் இரட்டையர்கள். காள மேகப்புலவரின் பூதவுடல் எரிந்து கொண்டிருப்பதைக் கண்டார் முடவர்.

"ஆசு கவியால் அகில உலகெல்லாம்
வீசு புகழ்க் காளமேகமே – பூசுரர்"

என்று கதறி அழுதார். குருடர் விடுவாரா? அவரும் முட வரைத் தொடர்ந்து,

"விண்கொண்ட செந்தழலாய் வேகுதே ஐயையோ
மண்டின்ற பாணமென்ற வாய்"

என்று வெண்பாவின் இறுதி ஈரடிகளையும் பாடிப்பூர்த்தி செய்தார்.

'காளமேகம் ஆசுகவி அவரது வாயிலிருந்து பாட்டு வழுக்கிக் கீழே விழும்' என்பார் பண்டிதமணி அவர்கள். மண்டின்ற பாணமென்று பாடிய வாயும் எரிகிறதே என்பதுதான் இரட்டையர்களில் குருடரான

புலவருக்கு ஏற்பட்ட கவலை.

நல்ல கவிஞர் ஏடு, எழுத்தாணியைத் தேடி அலைவ தில்லை. பண்டிதமணி அவர்கள் குறிப்பிட்டதுபோல, நல்ல கவிஞரது வாயிலிருந்து கவிதை வழுக்கிக் கீழே விழும். அப்படி யானதொரு கவிஞர் பரம்பரையை நினைவு கூரத்தக்க வகையில் - எடுத்துக் காட்டாக விளங்கியவர்களே மட்டக்களப்பு புலவர்மணி ஏகாம்பரபிள்ளை பெரியதம்பிப்பிள்ளை அவர்கள். மட்டக்களப்புத் தமிழ்க்கலை மன்றம் அன்னவருக்குப் 'புலவர்மணி' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தமை தகும்! தகும்!

"நாவலர் காவிய பாடசாலையில் நாங்கள் பன்னிரண்டு மாணாக்கர். ஒரு குறிப்பிட்ட நாளில் யாழ்ப்பாணம் செந்தமிழ்ப் பரிபாலன சங்கத்தின் செயற்குழு நாவலர் பாடசாலையிற் கூடியது. பரீட்சை தொடங்கி விட்டது. முழுதும் வாய்ப்பாடமாகவே மறுமொழி சொல்லவேண்டும். எழுத்துப் பரீட்சையேயில்லை. மூன்று நான்கு மணி நேரம் நடந்து முடிந்தது பரீட்சை. புள்ளி அடிப்படையிற் கண்ட பரீட்சை முடிவில் சி. கணபதிப் பிள்ளை திறமைச் சித்தியில் முதலாம் இடம் பெற்றார். எனக்கு இரண்டாமிடம் கிடைத்தது. சி.க. சீவகசிந்தாமணியை முதற் பரிசாகப் பெற்றார். சிலப்பதிகாரம் இரண்டாம் பரிசு. சி.கணபதிப் பிள்ளையும் நானும் ஒரே மரத்தில் இரண்டு கிளைகளில் ஒரு மிக்கப்பழுத்த இரண்டு பழங்கள்" என்கின்றார் புலவர்மணி அவர்கள். (உள்ளதும் நல்லதும்)

பண்டிதமணியவர்களும் புலவர்மணி அவர்களும் ஒரே காலத்தில் ஈழத்திருமணிகளாய் நமது நாட்டில் வடக்கிலும் கிழக்கிலும் பிரகாசித்தார்கள். அவ்வாறு பிரகாசம் பெறுவதற்குத் திருவருளே காரணம் ஆகலாம். நாவலர் காவிய பாடசாலையில் அப்பொழுது குருமூர்த்தியாய் அமர்ந்து கல்விப் பயிரைச் செழித்தோங்கச் செய்தவர் சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள்.

தமது குருநாதரான அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களை ஒரு 'சங்கப்பலகை' என்று நன்றியுணர்ச்சியுடன் குறிப்பிடுவார் பண்டிதமணி அவர்கள்.

புலவர்மணி அவர்கள் குருவணக்கஞ் செலுத்துகின்றார்.

"வண்மைத் தமிழ்க்கு வரம்பு வடமொழியின்
உண்மைத் தெளிவுக் குரையாணி– கண்மணியேன்
சுன்னைக் குமாரசுவாமிப் புலவனடி
சென்னிக் கியான் செய் சிறப்பு"

சுன்னைக் குமாரசுவாமிப் புலவரவர்களது மேதாவிலாசம் இருந்தவாறு!

பண்டிதமணி அவர்களுக்குக் காலத்துக்குக் காலம் கிடைத்த கௌரவப் பட்டங்களோ அநேகம். பண்டிதமணி என்ற கௌரவப்பட்டம் யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரியில் இடம்பெற்ற தமிழ் விழாவை யடுத்துத் 'தினகரனால்' 1951இல் சூட்டப்பட்டது. பண்டிதமணி என்ற பட்டம் நிலைத்து விட்டது.

பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்குக் கிடைத்த பட்டங் களும் பலப்பல. புலவர்மணி என்ற கௌரவப்பட்டம்தான் நிலைத்தது. புலவர் மணி அவர்களே பின்வருமாறு கூறுகின்றார்.

"எத்தனை பட்டங்கள் என்மீது சுமத்தப்பட்ட போதிலும் புலவர்மணி என்னும் பட்டமே எனக்குத் தாங்குவதற்கு இலேசா யிருக்கின்றது.... புலவர்மணி மக்கள் மத்தியில் வாழ்கின்றது."

புலவர்மணி என்னுங் கௌரவப்பட்டமும் 1951ஆம் ஆண்டிலேதான் ஏ.பெ. அவர்களுக்குக் கிடைத்தது. பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பண்டிதமணியானதும் ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் புலவர்மணியானதும் 1951ஆம் ஆண்டு என்பதை எண்ணும் பொழுது, ஒரு சாலை மாணாக்கர்களும் நண்பர்களுமான சி.க. அவர்களும் ஏ.பெ. அவர்களும் பெரும் பாக்கியசாலிகள் என்பதை உய்த்துணர முடிகிறது. இவர்கள் இருவரதும் வரலாறுகளில் 1951ஆம் ஆண்டு முக்கியத்துவம் அடைகின்றது. பெரியதம்பிப்பிள்ளை அவர்களது தந்தையார் ஏகாம்பரபிள்ளையும் தாயார் சின்னத்தங்கமும் வண்ணக்கர் பரம்பரையில்

வந்தவர்கள். ஆலயநிதி நிர்வாகத் தலைவராகவும் தருமகர்த்தாவாகவும் உள்ளவர்களை வண்ணக்கர் என்று அழைப்பது மட்டக்களப்பு மரபு. இதிலிருந்து பெரியதம்பிப்பிள்ளை அவர்களது பெற்றோர்களும் அவர்கள் முன்னோர்களும் ஆலய சேவையில் மிகவும் ஈடுபாடு கொண்டு உழைத்தமை புலனாகின்றது.

குடும்பத்தில் முதலாவது ஆண்பிள்ளையாகப் பிறந்ததனால் பெற்றோர்கள் "பெரியதம்பிப்பிள்ளை" என்று பெயருஞ் சூட்டினர். தில்லைமண்டூர் திருமுருகன் ஆலய நிர்வாகத் தலைவராக இருந்தவர் ஏகாம்பரம்பிள்ளை. அப்பொழுது அங்கு இடம்பெற்ற திருச்செந்தூர்ப் புராண அரங்கேற்றத்திலும் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பங்கு கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணம் நாவலர் காவிய பாடசாலையிற் சேர்ந்து கல்வி பயில்வதற்கு வழிகாட்டியாயமைந்தவர் மட்டுவில் திரு. தம்பி முத்துப்பிள்ளை அவர்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் கிறிஸ்தவ சமயக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட ஏ.பெ. அவர்கள் பசுமலையில் உள்ள வேதசாத்திர சாலையிற் பயிற்சிபெற 1923இல் அங்கு செல்லலானார். அங்கு சுவாமி விபுலானந்த அடிகளாரைக் காணும் வாய்ப்பைப் பெற்றார். மதுரை மங்கம்மாள் சத்திரத்தில் இச் சந்திப்பு ஏற்பட்டது. "இரும்பைக் காந்தம் இழுத்தது. அவர் (விபுலானந்த அடிகளார்) என்னை இறுகத் தழுவிக்கொண்டார்" என்கின்றார் ஏ.பெ. அவர்கள்.

சமணத்தில் புகுந்து கொண்ட நாவுக்கரசரை தமக்கை யாரான திலகவதியார் எவ்வாறு தடுத்து ஆட்கொண்டாரோ அவ்வாறு பெரியதம்பிப்பிள்ளை அவர்களை கிறிஸ்தவத்தில் புகுந்து நிலை நிற்காமல் தடுத்து ஆட்கொண்ட பெருமை சுவாமி விபுலானந்த அடிகளாருக்கே உரியது.

பகவத்கீதை வெண்பாவின் முதற்பாகமான கர்மயோகத்தை விபுலானந்த அடிகளாருக்குச் சமர்ப்பணஞ் செய்து பாடிய பாடல் மேற்கண்ட சம்பவத்தை நினைவு கூரவைக்கின்றது.

"சங்கத் தமிழ் மதுரைச் சத்திரத்தில் வைத்தெம்மை அங்குவசமாக்கியருள் செய்தே - தங்கியெம்புத்தி புகுந்த விபுலானந்தர் -

பொன்னடிக்கண் வைத்திந்நூல் நெஞ்சே வணங்கு"

கீதை வெண்பா அணிந்துரையில் பண்டிதமணி அவர்கள் புலவர்மணியின் கவிதா சாமர்த்தியத்தைப் பின்வருமாறு எடுத்து இயம்புகின்றார்.

"கீதை கவிசெய்து கீர்த்தி மிகப்பெற்றான் ஏபெரியதம்பி எனதன்பன் – ஓதக்கேள் பாட்டுக்கொரு புலவன் பாரதியென்றாரொருவர் பாட்டுக் கிவனென்பன் யான்"

புலவர்மணி கவிதைகள் தொகுக்கப்பட்டு நூல் வடிவில், புலவர்மணி நினைவுப் பணிமன்றம் வெளியீடு செய்தது. அவ்வெளியீட்டின் அணிந்துரையில்,

"சிலப்பதிகாரத்துக் கானல் வரிப்பாடல் ஞாபகத்துக்கு வந்தது. அந்தக் கணமே "கானல் வரிப்பாடலுக்குச் சற்றும் எடை குறையாதவை புலவர்மணியின் பாடல்கள் என்றொரு குரல் வந்தது. அந்தக் குரல் திரு. சோமசுந்தரப்புலவர் அவர்களின் ஆத்மீகக் குரல் ஆகலாம். அக்குரலுக்கு வணக்கஞ் செய்துவிட்டு அப்பால் தலையங்கங்களை மாத்திரம் படித்துக்கொண்டு சென்றபோது விபுலானந்தர் மீட்சிப் பத்து "இமாலயம் போல்" நிமிர்ந்து நின்றது." என்று சுவை படக்கூறியுள்ளார் பண்டிதமணி அவர்கள். புலவர்மணி அவர்கள் இயற்றிய மண்டூர்ப்பதிகத்துக்குச் சுவாமி விபுலானந்த அடிகளார் வழங்கிய சிறப்புப்பாயிரம் ஒவ்வொருவரும் மனனஞ் செய்ய வேண்டியதொரு பாடல்.

பண்டூரு முகிற்குலங்கள் எம திறைவர்
  மருகர் திருப் பதியீ தென்ன
விண்டூர மழைபொழியுஞ் சிறப்பதனால்
  வளம் மலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூரில் உறைமுருகன் மலரடிக் கோர்
  திருப்பதிகம் மரபிற் சொற்றான்
கண்டூரு மினிய மொழிப் பெரிய தம்பிப்
  பிள்ளையெனும் கவி வல்லோனே

இவ்வாறு கவிதையுலகிற் பெரும் பாராட்டுதல்களை யெல்லாம் தமதாக்கிக் கொண்டவர் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள். ஆசிரியர்க்கு ஆசிரியராய் விளங்கிய புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள், சிறந்த மேடைப் பேச்சாளருமாவார். நல்லூர் கந்தசுவாமி கோயில் தெற்கு வீதியில் நாவலர் மணிமண்டபத்தில் நாவலர் பெருமானின் உருவச் சிலையை நிறுவிப் பெருவிழா எடுத்தனர் நாவலர் சபையினர். அப்பெருவிழாவில் தொடக்க உரையைப் பண்டிதமணி அவர்கள் நிகழ்த்தினார். அவ்விழாவில் புலவர்மணி அவர்கள் ஆற்றிய சிறப்புரை பொன்னே போற் போற்றிப் பேணும் தகையது.

பண்டிதமணி அவர்களது கந்தபுராணம் தக்ஷகாண்ட உரைநூலைப் பேராதனைப் பல்கலைக்கழகம் வெளியீடு செய்தது. குறித்த நூலின் சிறப்பு விழாவினை வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்தில் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை எடுத்தது. நீதியரசர் வீரவாகு சிவசுப்பிரமணியம் தலைமையில் இவ்விழாவில் பங்குபற்றிய புலவர்மணி அவர்கள் ஆற்றிய பேருரை வெகு பிரசித்தமானது.

இலங்கைப் பல்கலைக்கழகம் பண்டிதமணி அவர்களுக்கு 'இலக்கிய கலாநிதி' என்ற கௌரவ விருதினை வழங்கியமையும் இலங்கை அரசு புலவர்மணி அவர்களைக் கௌரவிக்குமுகமாகத் தேசிய வீரர் தினமான 22.05.1994இல் முத்திரையினை வெளியிட்டு வைத்தமையும் இலங்கை வரலாற்றில் முக்கிய சம்பவங்களாகும்.

ஆசுகவி கல்லடிவேலுப்பிள்ளை, வித்துவசிரோமணி சி. கணேசையர், குருகவி பண்டிதர் வே. மஹாலிங்கசிவம், பண்டிதர் செ. பூபாலபிள்ளை பண்டிதர் வீ.சி. கந்தையா, மஹாவித்துவான் எவ்.எக்ஸ். சி. நடராசா உட்பட பல பெரியார்களுடன் தொடர்புகொண்டிருந்த புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பலராலும் பல சந்தர்ப்பங்களிலும் பலவித நல்ல பாராட்டுக்களைப் பெற்றமையை இந்த நாடே நன்கு அறியும்.

புலவருலகில் சக்கரவர்த்தியெனத் திகழ்ந்தவரான புலவர்மணி

ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் கண்மூடிவிட்டார் என்ற செய்தியை வானொலியில் இரவு நேரம் கேட்டார் பண்டிதமணி அவர்கள். இச் செய்தி கேட்ட பண்டிதமணி அவர்கள் அன்றிரவு கண்மூடவேயில்லை. பாடியும் விட்டார்.


'புலவர்(ர்)மணி போய்விட்டார் போய்விட்டார் என்றென்றலறியதால் ஆகாசவாணி – சில நொடிகள் ஏங்கியிருந்தனன் முன் எண்ணந் திரையெறியத் தூங்கல் துறந்ததென் கண்'

மரண அறிவித்தல் பற்றி ஒரு விளக்கமும் தருகின்றார் பண்டிதமணி அவர்கள்.

'மரண அறிவித்தல் என்றதும் வானொலியைத் தணிக்கை செய்வது வழக்கம். நேற்றிரவு (2.11.1978) அவ்வாறு செய்யக்கைந் நீட்டிய போது புலவர்மணி என்ற குரல் எழுந்தது. நீட்டிய கை அப்படியே ஸ்தம்பித்தது.' என்பதுதான் அந்த விளக்கம். நண்பரது பிரிவாற்றாமையினால் பண்டிதமணி அவர்கள் மேலும் பாடுகின்றார்.

"கந்தசட்டி நன்னாள் கருணைத் திருமுருகன்
பந்தமறுத் தாண்டருளும் பக்குவநாள் – செந்தமிழில்
வல்ல புலவ வருக வருக எனச்
சொல்லுந் தமிழ் முருகன் தூது"

நன்றி – தினத்தந்தி 19–2–1992


EASTERN UNIVERSITY, SRI LANKA

This is to certify that

PULAVARMANI A. PERIYATHAMBIPILLAI

was posthumously admitted to the Degree

of

DOCTOR OF LETTERS

(Honoris Causa)

at the

CONVOCATION

held in Batticaloa on 23rd April 1997

Witness our hands this twenty third day of April one thousand nine hundred and ninety seven

Vice-Chancellor

Registrar

23–04 1997இல் கிழக்குப் பல்கலைக்கழகம் அதன் நான்காவது பட்டமளிப்பு விழாவில் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு இலக்கிய கலாநிதி என்ற பட்டம் வழங்கியது. பட்டமளிப்பின் போது வழங்கிய சான்றிதழ்.

# பகவத் கீதை

– நவாலியூர் சோ. நடராசன் –

பகவத் கீதை இந்திய இலக்கியப் பரப்பிலே உயர்ந்த இடம் வகிப்பதற்குப் பல காரணங்களுண்டு. இந்நூல் தரும சேத்திரமாகிய குருசேத்திரத்திலே பாரதப் போர் தொடங்கும் நெருக்கடியான சமயத்தில், அருச்சுனனுக்கும் பகவானுக்கும் நடந்த உரையாடலாக அமைந்துள்ளது. தருமத்தை அழியவிடாது காப்பாற்றுவதும், கொடுமையைக் கொன்று நாட்டை மீட்பதும் அருச்சுனன் கடமையாயிருந்தன. அருச்சுனன் அரசர்களிலே சிறந்த வீரன். தன்னுடைய கடமையைச் செய்ய ஆயத்தமாய், போர்க்கோலம் பூண்டு கண்ணபிரானைச் சாரதியாகக் கொண்டு போர்க்களத்தில் அவன் வந்து நிற்கிறான். அந்த நேரத்திலே அவனுக்கு ஒரு சிறுமை மனத்திலே தோன்றிற்று; தருமம் எது, அதருமம் எது என்ற சந்தேகம். அதுவரை, சண்டை செய்வதே தருமம் என்று நினைத்துக்கொண்டு காண்டீவத்தையும் தாங்கிவந்த மனிதப் பிரதிநிதியான அருச்சுனனுக்கு தருமத்தைப் பற்றிய ஒரு மயக்கம் இக்கட்டான சமயத்தில் உண்டானது. மூன்று உலகிலும் இணையற்ற வீரன் எனப் புகழ்வாங்கிய அம்மனிதனுக்கு மனத்திலே அப்போது உண்டானது கோழைத்தனமன்று; போரின் கொடுமைகளை நினைத்தபோது, பிள்ளையுள்ளம் படைத்த அக்கருணாமூர்த்திக்கு ஒரு நெகிழ்ச்சியுண்டானதாம். தருமம் அழிந்தாலும் அழியட்டும். அதருமம் வேண்டுமானால் ஓங்கட்டும். இந்த அதருமத்தின் பிரதிநிதிகளான சுற்றமித்திரரை ஏன் கொலை செய்வேண்டும், என்ற எண்ணம் பிறந்ததாம். "இது உண்மையான கருணையா? அல்லது போலியா?" என்று அருச்சுனன் பகவானைக் கேட்கிறான். கடவுளை நண்பனாகப்பெற்ற மனிதனுக்கு என்னகுறை! அருச்சுனன் கூறுகிறான்:

கார்ப்பண்ய தோ ஷோப ஹதஸ்வபாவ:
பிருச்சாமி த்வாம் தர்ம சம்மூட சேதா:
யச்ரேய: ஸ்யாத் நிச்சிதம் ப்ரூஹி தன்மே
சிஷ்யஸ் தே ஹம் சாதி மாம் த்வாம் ப்ரபன்னம்

"என் மனமானது சிறுமை நிறைந்த ஒரு அனுதாபத்தினால் நிரம்பியிருக்கிறது; எனது கடமை எது என்பது எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை. எது நல்லதோ அதை எனக்கு நிச்சயமாகக் கூறுவாய்; நான் உன் மாணாக்கன்; உன்னைச் சரண் அடைந்தேன்; எனக்கு உபதேசஞ் செய்தருள்வாய்" – இதுவே அருச்சுனனுடைய மனோநிலை.

எது கடமை, எது அதருமம் என்பதை அறிந்து கொள்வது இந்த உலகத்திலே சில சமயங்களில் மிகக் கஷ்டமான காரியமாகிறது. அந்நேரங்களிலே ஞானிகளுடைய அருளுபதேசத்தை மனம் அவாவி நிற்கிறது. இறைவனுடைய ஒரு குறிப்பை எதிர்பார்க்கிறது. "எனக்கு ஒன்றும் தெரியவில்லை; எனது புலன்களையெல்லாம் சுட்டெரிக்கும் இந்தப் பெரிய துக்கத்தை நீக்குவதற்கு வழியில்லையா? இந்தப் பூமியையும் இணையற்ற செல்வத்தையும் போக போக்கியங்களையும் பெற்றாலும், எனது துக்கத்தைப் போக்குவதற்கு வழியறியேன். தேவலோகத்தின் தனியரசை எனக்குக் கொடுத்தாலும் அதனால் ஒரு பயனுமில்லை" என்று ("வேண்டேன், புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும்" என மாணிக்கவாசககர் கூறியதுபோல) சொல்லிவிட்டு, "நான் யுத்தஞ் செய்ய மாட்டேன்" எனத் தேர்த்தட்டிலே காண்டீவத்தை வீசிவிட்டுப் பேசாதிருந்தானாம்.

ஏவமுக்த்வா ஹிருஷீ கேஷம் குடாகேஷ: பரந்தப:
நயோத்ஸ்யே இதி கோவிந்த முக்த்வா தூஷ்ணீம் பபூவ:

நான் யுத்தஞ் செய்மாட்டேன் என்று கோவிந்தனுக்குக் கூறிவிட்டு மௌனமாயிருந்த அருச்சுனனுக்கு அவனுடைய சுயதர்மத்தையும், அதைச் செய்யும் முறையயும் கூறிப் பகவான் அவனுடைய உள்ளத்து உறுதியின்மையைப் போக்கினார். "யுத்தஞ் செய்வது உன் தருமம்; அதுவே கருமமாகும். கருமத்தைச் செய்யவேண்டும்; ஆனால் செய்ததுபோல நினைத்துக்கொள்ளும் மனோபாவம் மனத்திலிருக்கக்

கூடாது; அதற்கு வழி கரும பலத்தை– அதாவது வினை செய்வதால் ஏற்படக்கூடிய பலாபலனிலே ஆசை வைப்பதை– கைவிட்டு விட வேண்டும்" என்று கீதை உபதேசஞ் செய்கிறது. விடுவது கருமத்தையன்று; கரும பலத்தையே தியாகம் செய்யவேண்டும், இவ்வாறு உபதேசஞ் செய்து பகவான் அருச்சுனனுடைய மோகத்தைக் களைந்தார். உடனே அவன் எழுந்து தன் கடமையைச் செய்தான் என்ற செய்தியை அடி அத்திவாரமாக வைத்துக் கொண்டு பிரமவித்தையான இந்தக் கீதோபநிடதம் அனுபூதிமான்களுக்கும் உலக விவகாரங்களில் ஈடுபட்டவர்க்கும் பயனுள்ள பல இரகசியங்களைக் காதோடு காதாகக் கூறுகிறது. ஆனால் இது பக்குவர்க்குப் பயபத்தியோடு போதிக்கும் சாத்திரமாயும் அமைந்துள்ளது.

வடமொழியிலே இந்நூல் எளிய நடையில் அழகிய சொற்களால், சிறந்த இலக்கிய அமிசங்கள், பொருந்த நாடக பாணியில் எழுதப்பட்டுள்ளது.

கீதை எந்தக் காலத்துக்கும் பொருத்தமான பல உயர்ந்த உண்மைகளைக் கொண்டிருக்கிறதென்பது யாவருமறிந்த விஷயம். அவற்றில் இரண்டொரு விடயங்களை இங்கே குறிப்பிடலாம். ஆண்டவனே மனிதனுக்கு உபதேசஞ் செய்ய முற்பட்டதாகக் கீதையின் பீடிகை அமைந்தமை கவனிக்கத்தக்கது. உள்ளும் புறமும் எங்கும் வியாபித்துள்ள இறைவனுடைய பேச்சு. சிந்தனைப் போக்கில் ஈடுபட்ட அர்ச்சுனனுக்குத் தெளிவாய்க் கேட்கிறது. யுத்த களத்திலே பெரிய போர் செய்வதற்குச் சிறிது நேரத்துக்கு முன், அர்ச்சுனன் சிந்தனையிலே ஆழ்கிறான். அவனுடைய அந்தராத்மாவே அவனுக்குப் பல விடயங்களைப் புலப்படுத்தியிருக்கலாம். பார்த்தனுடைய உள்ளத்திலேதானே பார்த்தசாரதி சாரத்தியம் நடத்துகிறான். அதனால் இந்தப் பெருஞ் செயல்வீரனான அருச்சுனனுடைய அனுபவசித்தமான சிந்தனைவிரிவே கீதையெனவும் காணலாம்.

இந்து சமயத்தின் சமரச மனோபாவம் கீதையெங்கும் செறிந்திருக்கிறது. அதன் சாரலிலே தங்கநேர்ந்துவிட்டால், மற்ற மதங்களின்பாலுள்ள நேசபாவமென்ற மந்த மாருதம் வீசிக் கொண்டேயிருக்கும்.

"எவரொருவர் உண்மையான சிரத்தையோடு எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும், அவரவருடைய அசையாத சிரத்தையை நானே அவரில் நின்று தூண்டிவிடுகிறேன். எந்தக் கடவுளை வழிபடுவதில் அவர் சிரத்தையோடு ஈடுபட்டாலும், அதற்குரிய பலனை நானே அவருக்கு வழங்குகிறேன்." (VII.21.21)

"சிரத்தையோடு வேறு தெய்வங்களை எவர் வழிபடுகிறார்களோ, அவர்கள் விதிக்கு மாறாகவேனும் என்னையே வழிபடுகின்றனர்." (IX.22)

கடவுளைப் பற்றி மக்கள் கொண்டுள்ள கோட்பாடுகள் எவ்வாறிருந்தாலும், அவையெல்லாம் தெய்வத்தன்மையுடையனவென்பதும், கும்பிடும் கடவுள் பற்றிய கோட்பாடும் மூர்த்தமும் முக்கியமல்ல, பக்தன் உள்ளத்திலுண்டாகும் ஆர்வமே முக்கியமென்பதும் இவற்றிலிருந்து தெளிவாகிறது. இங்கே பிரமவித்தையை உள்ளீடாகக் கொண்ட கர்மயோக சாத்திரம் போதிக்கப்படுகிறது. மனிதனுள்ளத்திலேயுண்டாகும் மூலாதாரமான அபிலாஷைகளோடு இறைவனைப் பற்றிய அறிவும், தருமத்தைப் பற்றிய கோட்பாடுகளும் இணைந்து ஒன்றுபடுத்தப்பட்டுள்ளன. அதாவது சமயத்துக்கும் வாழ்வுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பதை கீதாசிரியர், தனிமனிதருடைய வாழ்விலும், ஒரு பெருஞ் சமூகத்தின் வாழ்விலுமுண்டான நெருக்கடியானதொரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விளக்குகிறார். நெருக்கடியுண்டாகும் சந்தர்ப்பங்களிலேதான் சமய உணர்வு, ஒழுக்கம் என்பன பரீட்சிக்கப்படுகின்றன. தரும சங்கடமான நிலைமையிலேதான் மனிதனுக்கு ஆராய்ச்சி தீவிரமடைகிறது; தான் பயின்ற பயிற்சிகளும், பண்பாட்டின் செம்மையும் பயன்படுகின்றன. மனிதன் எங்கும் ஒருவன்தான்; அவனுடைய பிரச்சினை ஒன்றுதான்; அவன் அதைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளும் வழிவகைகளிலேதான் அவனுடைய சிறப்புத் தங்கியுள்ளது. அதனால் விடயம் எல்லாக் காலத்துக்கும் எல்லாத் தேசத்துக்கும் எல்லா மதத்துக்கும் பொதுவானதாகிறது.

இந்நூல் பிரம வித்தையும் யோகசாத்திரமுமாய் அமைந்ததென்றோம். பிரம வித்தையென்பது பரம்பொருளைப் பற்றிய அறிவு.

அது பராவித்தை. உள்ளது எது? உலகமா? அதற்கு மேலுமொன்றுண்டா? வேறு வேறியற்கையும், வேறு வேறியல்புமுள்ள தோற்றத்தைக் காட்டவல்லதொன்று இவற்றுக்குப் பின்னால் மறைந்து நிற்கிறதா? கணக்கில்லாத சாத்தியக் கூறுகளையுடைய இந்த லீலையைத் தூண்டிச் செயற்படுத்துவது எது? இதற்கு அடிப்படையில் எதாவது நோக்கமுண்டா? பொருளுண்டா? இவ்வாறு மெய்ப்பொருளை விளக்கத்துணை செய்வதே பிரமவித்தை. ஞானத்தை அடைவதற்கு விசாரம் வேண்டும்; விசாரமுண்டானால் விசாரணை வேண்டும்.

யோக சாத்திரமென்பது காரிய பூர்வமானதொரு வாழ்க்கைத் திட்டம்; வாழ்வாங்கு வாழ்வதற்கு ஒரு வாழ்வுக் கிரமம். தத்துவஞானம் வாழ்க்கைக்கு அவசியமில்லையென்பர் சிலர். ஏனெனில் அது மாறாத மெய்ப்பொருளின் தன்மையைப் பற்றி ஆராய்கின்றது; எனவே இது வெட்டிப் பேச்சு; கவவைக்குதவாதது; வாழ்வு நிலையில்லாத உலக விருத்தியையே இலட்சியமாகக் கொண்டது என்பர் சிலர். மாற்றியமைக்க வேண்டிய உலகத்துச் சமூக அமைப்பை, மாற்றியமைக்காமல் அதைப்பற்றி விளக்கிக்கொண்டிருக்கிறார்கள், தத்துவஞானிகளாயுள்ளோர் என்பர் மார்க்ஸ். கீதாசிரியர் தத்துவ விளக்கத்தோடு காரிய பூர்வமான தினசரி வாழ்வுக்கேற்றதொரு வாழ்க்கைக் கிரமத்தையும் அருளுகிறார். அதுவே யோகசாத்திரம். இந்த உலகம்; பார்த்து மகிழ்வதற்கு ஏற்பட்டதன்று; அஃது இருந்து வாழ்க்கை நடத்துவதற்கு உண்டானது.

ஒவ்வொரு சமய நூலுக்கும் இரண்டு தன்மைகளுண்டு. ஒன்று தற்காலிகமானது; மற்றது நிரந்தரமானது. அதாவது ஒன்று நூல் தோன்றிய நாட்டு மக்களினதும் காலத்தினதும் எண்ணங்களைப் பிரதிபலிப்பது; மற்றது, எல்லாக் காலத்துக்கும் தேசத்துக்கும் பொருத்தமான அமரத்தன்மை வாய்ந்த சிரஞ்சீவியான எண்ணங்களையும் கருத்துக்களையும் பிரதிபலிப்பது. விவேகபூர்வமான சொல்லும், உளநூற் பாங்கான பேச்சுவழக்கும் காலத்தையொட்டிப் பிறந்தவை. நிரந்தரமான உண்மைகள் மனிதருடைய அறிவுக்கு அப்பாற்பட்ட அருட்காட்சியாற் கண்டு அனுபவித்து, வாழ்விலே நடைமுறையில் எக்காலத்தும் கொண்டு வரக்கூடியவை. இத்தகைய

பெருநூல்களின் சிரஞ்சீவித்தன்மை, அவை காலத்துக்குக் காலம் மகான்களைத் தோன்றச் செய்யும் சக்தியிலேயே தங்கியிருக்கின்றது. அவ்வாறு தோன்றும் மகான்கள் அந்நூல்களிற் கண்ட உண்மைகளுக்குத் தம் வாழ்க்கை அனுபவத்திலிருந்து உறுதி பகரக் கூடியவர்களாயும், தம்மனுபவத்திலிருந்து விளக்கங்களைக் கொடுக்கக் கூடியவர்களாயுமிருப்பர். பாடியகாரர் தம்மனுபவத்திலிருந்தே விளக்கங் கொடுப்பர். புதிய வடிவிலே, அதாவது தமது காலத்துக்கேற்றதும், அதன் தேவைகளுக்கு அவசியமானதுமான உருவத்திலே, புராதனமான சமய உண்மைகளைப் பேசுவர்; விளக்குவர். நூற்றாண்டு நூற்றாண்டாகக் கேள்வியாகவும், வாய்மொழியாகவும் வந்து கொண்டிருந்த பெரிய சமயக் கொள்கைகள் அவற்றை விளக்கிய பாடியக்காரரின் காலத்துச் சாயலையும், விளக்கும் ஆசிரியரின் தன்மையையும் தம்மகத்துக்கொண்டனவாயிருக்கும். நமது காலம் வேறுபட்டது. எனவே வேறு வேறியற்கையும், வேறு வேறுகொள்கையும் உடைய மனித சமுதாயத்தை ஒன்றுபடுத்தவதே நமது நோக்கமாயிருக்க வேண்டும். கீதை இதற்கு மிகவாய்ப்பானதொரு நூல்; ஏனெனில் அது தோற்றத்தளவில் முரண்பாடுடையனவாய்க் காணப்படும் வெவ்வேறு தரிசனங்களின் உருவ அமைப்பை ஒற்றுமைப்படுத்த முயல்கிறது. அத்துடன் முன்னைப் பழமைக்குப் பழமையாயும் புதுமைக்குப் புதுமையாயும் உள்ளதும், சாசுவதமானதும், மன்பதைக்குப் பொதுச் சொத்தாயுள்ளதுமான சமயத்தின் அடிப்படைக் கருத்துக்களை வலியுறுத்துகிறது. மனித சமுதாயத்தின் பிரச்சினைகளுக்கு முடிவில்லை. வளர்ச்சிப்படியிலே அவை சாண் ஏற முழம் சறுக்கும் வரலாற்றுப் போக்குடையவை. இருந்தாலும் வளர்ச்சி நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. பழைய பிரச்சினைகளான சாதிப்பிரச்சினை, சமயப் பிரச்சினை. சமூகப் பிரச்சினை என்பனவெல்லாம் புதிய கோலத்திலே, நாகரிகமான உடையில் இன்றுந் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

எனவே பிரச்சினைகளைத் தீர்க்கும் பழைய வழிகளைப் புதிய பரிபாஷையில் நாம் கூறவேண்டியது அவசியமாகிறது. எக்காலத்துக்கும் பொருத்தமான பேருண்மைகளை நமது இக்காலப் பரிபாஷையிலே

கூறுவதாற்றான் உயர்ந்த சமயநூல்களை உயிருள்ளனவாகவும் மன்பதைக்குப் பயனுள்ளனவாகவுஞ் செய்யலாம்.

விளக்கம் கொடுப்போர் நூலின் கருத்துக்களையே பெயர்த்துக் கொடுக்கலாம். ஆனால் அதிற் பரவியுள்ள உயிர்த்தன்மையைப் பெயர்த்துக் கொடுக்கமுடியாது. அந்தக் கருத்துக்கள் பிறந்த மனோநிலையை அப்படியே படம்பிடித்துக் காட்ட முடியாது. முதன் முதலாக நூலை எழுதிய ஆசிரியரின் ஆனந்த நிலையையும் ஞானக்காட்சியின் செழுமையையும் கேட்போர் மனத்திலே பூரணமாக உண்டாக்க முடியாது.

நல்லது தீயதைப் பகுத்தறிதல் மக்களுக்கே உரிய உயிர்க்குணம். இந்த உலகம் அறக்களம். மனிதனுடைய உள்ளமென்ற யுத்த பூமியிலே தினமும் நன்மைக்கும் தீமைக்கும் போர் நிகழ்கின்றது. மறுமைக்கு வழி அறம். சங்கடங்களைத் தீர்ப்பதற்கு அறமே வழி. இந்த உலகமென்ற தரும சேத்திரம் மகான்களின் நாற்றுக்களம். இங்கே சுடர் விடும் புண்ணிய ஒளியை அவியவிடக்கூடாது. இது கர்மபூமி; இங்கே நாம் கருமத்தைச் செய்வேண்டும்.

கீதையின் நோக்கம் போதனையன்று; தரும சாதனையே. வாழ்விலே பிரிக்க முடியாததொன்றைச் சிந்தனையிற் பிரிப்பதா? வாழ்வுக்கடமைகளைச் செய்விப்பதிலே சமயத்துக்குரிய பங்கு அதிகம். அறமென்பது லௌகீக சுகம், ஆன்ம விடுதலை என்ற இரண்டுக்கும் வழிகாட்டுவது. மனிதனுடைய ஆன்ம வாழ்வை மாத்திரம் கீதை பொருளாகக் கொள்ளவில்லை. உலக வாழ்வோடு சம்பந்தப்பட்ட கடமைகளும் தொடர்புகளும் வெறும் போலிகளல்ல; அக்கடமைகளைச் செய்து தொடர்புகளை வைத்துக்கொண்டே அவற்றின் மூலம் விடுதலை பெற வேண்டும். யோகர் சுவாமிகள் கூறியதோர் உவமை ஞாபகம் வருகிறது. "பாகல் படர்ந்து காய்த்தற்குப் போட்ட பந்தல்" போன்றது இந்த உலகம். அதைப் பயன்படுத்திச் சுயதருமத்தை மலரச் செய்யவேண்டும்; ஒருவன் விடுதலை பெறுவதற்கு உலகவாழ்வு ஒரு சந்தர்ப்பம். அதைப் பயன்படுத்தி நாம் இந்த மண்ணைப் பொன்னாக மாற்றவேண்டும்.

தருமகோப்தா, அறத்தின் காவலனான ஈசன், தானாகவே வந்து காட்சிதந்த போர்க்களம் தரும சேத்திரம்தான். வாழ்வு ஒரு பெரிய யுத்தம்; வளர்ச்சியென்பது இரண்டு தருமங்களின் மோதுதல். இதனால் வளர்ச்சி மேலோங்கி உலக நோக்கம் நிறைவேறுகிறது. இந்த உலகம் தீமையும் பாவமும் பகுத்தறிவின்மையும் நிறைந்தது. அவற்றைத் தருமத்தினாலும் கருமத்தினாலும் நீக்கிவிடவேண்டும்.

உலகம் திருந்துவதானால் முதலிலே தனி மனிதன் திருந்த வேண்டும். அவன் சுயராச்சியத்தைப்பெறவேண்டும். அவனிடத்து அந்தரியாமியாய் நிற்கும் இறைவனின் சாந்நித்தியத்தை, வாக்கால் விளக்குகிறது கீதை. அருச்சுனன் தனது கடமையைச் செய்யத் தவறும்போது அவனுள்ளத்திலேயுள்ள மனச் சாட்சி, அந்தரங்கமான அறப்பண்பு, தருமத்தைக் கூறுகிறது. அவனுடைய அசுர சுபாவம் தடை செய்வதை அவன் உணர்கிறான். விசுவாசத்தின் மத்தியில் விளங்கும் இறைவனே அவனுடைய ஆன்மாவின் அந்தரங்கத்திலும் உறைகிறான். அருச்சுனனுடைய உயிர்க்குயிரான பொருளே பார்த்தசாரதி. காதலர் இருவர்க்கிடையில் தரகுபேச மூன்றாமாள் வேண்டாமே! எம் விடயத்தில் இறைவனோடு பேசுவதற்கு மிக அணுக்கமானவர் நாமே; வேறெவருமில்லை. ஆனால் அவரை அடைய ஆர்வமும் தூய்மையும் வேண்டும்.

விறகிற் றீயினன் பாலிற் படுநெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் னிற்குமே

அருச்சுனன் தன்னிறைவன்முன் தனியனாய் அடுப்பாரும் கொடுப்பாருமின்றிப் பாசாங்கின்றித் தானே தானாய் நிற்கிறான். இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் அல்லவா இறைவன்.

அருச்சுனனுடைய துக்கம் ஒரு யோகமெனப்படுகிறது. அது விஷாதயோகம். ஆன்ம அனுபவம் பெற முயல்வோர் சில சமயம் ஒன்றும் அறியாது மயங்குவதுண்டு. அது ஆன்ம விசாரத்தில் முதற்படி. மூலாதாரமான பிரச்சினைகளைப் பற்றி அக்கறை

கொள்ளாமலே நாம் வாழ்வென்னும் ஆற்றில் நீந்துகிறோம். ஆபத்து வேளைவரும்போது, நெருக்கடி தோன்றும்போது, நாம் எதிர்பார்த்த நன்மைகளெல்லாம் தீமைகளாக மாறிவிடும்போது, நமது பேராசைகளெல்லாம் உடைந்து சிதறி மண்ணோடு மண்ணாய்க் காலடியிற் கிடக்கும்போது, துக்கத்தினாலும் பச்சாத்தாபத்தினாலும் மனமுடைந்தவராய் "தெய்வமே! இப்படியாய்விட்டதே, கடவுளுக்குக் கூடக் கண்ணில்லையா" என்று அலறும்போது, ஆன்ம விசாரம் உண்டாகிறது. தெய்வமென்பதோர் சித்தம் பிறக்கிறது.

அருச்சுனன் அத்தகையதொரு நெருக்கடியை அடைந்தவனாய் யுத்தகளத்தில் நிற்கிறான். இதுவெறும் வெற்றி தோல்வியன்று; ஆன்மவிசாரம். சமூகத்திலே தான் செய்யவேண்டிய சம்பிரதாயமான கடமைகளைப் பற்றி எண்ணுகிறான். அப்போது உலகத்தின் நீதி பேசுகிறது; கீதை அந்த நீதியையே பேசுகிறது. இது இந்தியாவின் பண்பாட்டு வளர்ச்சியில், தத்துவஞான நிலையில், ஏற்பட்டதோர் உன்னதமான புரட்சியாகும்.

யுத்தகளத்திலே நின்றுகொண்டு யாராவது தத்துவ விசாரணை செய்வார்களா? பேரிகை கொட்டிச் சங்குகளை ஊதி எல்லாரும் யுத்தத்துக்கு ஆயத்தமாய் விட்டார்கள். அந்த நேரத்தில் வேறு எதைப் பேசலாம்? எனவே கீதையின் முக்கிய நோக்கம் அருச்சுனனுக்குக் கடமையை விளக்குவதே. கடமை இஃது என்று சொல்லலாம்; ஆனால் அதை விளக்கப் புகுந்தால் ஆதியோடந்தமான விடயங்கள் தலைகாட்டும். எல்லாவற்றையும் சொல்லிக்கொண்டிருப்பதற்குச் சந்தர்ப்பமும் இல்லை; அவகாசமுமில்லை. ஆனபடியால் சந்தர்ப்பத்துக்கேற்றதையே பகவான் சுருக்கமாகக் கூறுகிறார்.

வாழ்வின் முடிந்த பயன் ஞானமே. ஆனால் அதை அடையப் பக்தியும் நெறிதான்; கருமமும் நெறிதான். இங்கே இந்த யுத்தகளத்திலே கருமத்தைச் செய்ய மறுத்துத் தருமம் எதுவென்று தெரியாது மயங்கியிருக்கும் அருச்சுனனுக்குக் கருமத்தையும் தருமத்தையும்

கடவுள் அறிவுறுத்துகிறார். அருச்சுனனுடைய உயர்ந்த பண்பட்ட உள்ளம், தாழ்ந்த விலங்கு மனத்துக்கு அறிவுறுத்துகிறது. பண்பட்ட உயர்ந்த உள்ளந்தான் இதய கமலம்; அம்மலர்மிசை ஏகுபவன் ஈசன்.

ஈசன் அருச்சுனனுக்குக் "கருமத்தைச் செய்" என்றான். அதாவது "உனக்குச் சுயதருமமாயுள்ள கருமத்தைச் செய்யாமல் இப்படி இராதே" என்றான். இது கீதையின் போதனையிலே சிறந்தது. மத்தியதானத்தை வகிப்பது. இதைக் 'கர்ம யோகம்' என்கிறது கீதை.

கருமம் என்பது இங்கே "முன்னோர்களால், முன்னரே செய்யப்பட்டு வந்த" (பூர்வ: பூர்வதரம் கிருதம்) பழக்கவழக்கங்களும் மரபுகளுமாகும். இவற்றையே வருணாச்சிரம தருமங்களெனச் சுருக்கமாகக் குறிக்கலாம். கருமம் என்ற சொல் வேதத்திலே சொல்லப்பட்ட கரும காண்டத்தையும் குறிக்கும். அவை யாகாதிக்கிரியைகள். கருமத்துக்குச் சரியை கிரியை என்ற கருத்தும் கீதையிலே வழங்கப்படுகிறது (X 11, 10). ஆனால் கீதையில் வழங்கும் கருமம் சமூகக் கடமையான வருண தருமத்தையே முக்கியமாகக் குறிக்கிறது. அருச்சுனனுடைய கடமை போர்புரிந்து தருமத்தைக் காத்தல் என்ற பின்னணியில் இது விளக்கம் பெறும். யோகம் என்றால் இங்கே சேர்க்கை என்று பொருள்படும். அது புணர்ப்பு. எனவே கருமயோகம், சமூகக்கடமையில் ஒன்றி நிற்றல் என்ற பொருளைக் கொடுக்கும்.

தன்னிச்சையாக ஒருவன் மேற்கொள்ளும் கருமங்கள் சாதாரணமாகப் பலன் கருதியே செய்யப்படுகின்றன. அருச்சுனன் தனக்குரிய இராச்சியத்தைப்பெறும் நோக்கமாகவே போர்க்களத்துக்குக் கடவுளையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறான். மற்றொரு வகையிற் கூறுவதானால், கடவுள் சாட்சியாகத் தன் கடமையைச் செய்ய முன் வந்துள்ளான். அதாவது முன்னரேயே தன் மனதிற் சங்கற்பஞ் செய்துகொண்டதொரு பலனை நோக்கமாகக் கொண்டு கருமத்திலே ஈடுபடவந்துள்ளான். வேதத்திலே கருமகாண்டத்திற் பேசப்பட்ட கருமம் இதுதான். "தனம், தானியம், பசு, பௌத்திரலாபம்" இவற்றைப் பெறுவதற்குக் கருமத்தைச் செய்தல், யுத்தகளத்திலே நின்றபோது அருச்சுனனுக்கு ஒரு யோசனை வந்தது, இந்தப்பலனை,

ராச்சியத்தைப்பெற்றுவிட்டால். அதனால் என்ன லாபம்? நசிகேதனுக்கு காலன் (காலகாலனன்று) வழங்கியது இந்தப் பலன் தான்.[1] அதை அவன் எடுத்த மாத்திரத்திலேயே வேண்டாமென்று தள்ளிவிட்டான். அருச்சுனன் அதை ஆராயும் கட்டத்தில் நிற்கிறான். யாகத்திலே பலன்கருதித் தட்சிணையாகக் கொடுக்கப்பட்டு யமாலயமடைந்த நசிகேதன்தான் பலன் வேண்டாம் என்று வாதாடுகிறான்.

பலனினால் என்ன லாபம் என்று அருச்சுனன் எண்ணத்துவங்கியதே உலகத்துச் சிந்தனை வளர்ச்சியின் மகத்தானதொரு கட்டத்தில் எம்மையெல்லாம் கொண்டுபோய் நிறுத்திவிடுகிறது. இதைக் கடவுள் அறிந்துகொண்டார். அவர் புன்முறுவல் பூத்தார். "தம்முவாச பிரஹ சன்னிவ" – புன்முறுவலோடு கூறுகிறார். "துக்கங்கொள்ள வேண்டாத இடத்திலே துக்கங்கொள்கிறாய். அறிவாளிபோலவும் பேசுகிறாய்" – "பிரஞ்ஞாவாதான் சபாஷசே". அருச்சுனனுடைய அறிவின் தீட்சணியத்தையுங் கண்டு கொண்டார். இதனால் என்ன லாபம் என்று அருச்சுனன் தானாகவே ஒரு பெரிய தத்துவத்தை வெளிப்படுத்த, அதை உணர்ந்த இறைவன் நீ அறிவாளிதான்; ஆனால் அறிவில்லாதவன் போலவும் பேசுகிறாய் என்று அருச்சுனன் ஆரம்பித்த பலன் கருதாத தொண்டின் திறத்தை விளக்க முற்படுகிறார். பேருண்மைகள் இப்படித்தான் தோன்றுகின்றன. மின்னற் கீறுபோல ஒரு கணம் அந்தகாரத்தை எல்லாம் அகற்றிவிடுகின்றன. அந்த மின்னற் கீற்றை நிரந்தரமாக்க வேண்டாமா? பகவான் அந்தத் தொண்டைச் செய்கிறார்.

பகவான் சொன்னார். இந்தத் தரும காரியத்தை நிறைவேற்றுவதனால் என்ன பலன் விளையுமென்பதை நீ கணக்குப்போட வேண்டாம். நல்லதைச் செய்பவன் கெடுதி

---

1. காலன் நசிகேதனுக்குக் கூறுகிறன்: "உனக்கு ராச்சியங்களைத் தருகிறேன்; செல்வம் தருகிறேன்; அழகிய பெண்களைத் தருகிறேன்; நாட்டியகாரரைத் தருகிறேன். எல்லாவற்றையும் பெறு; மரணம் பற்றிய மர்மத்தை அறியவிரும்பாதே" நசிகேதன் சொல்லுகிறான்: "இவற்றையெலலாம் நீயே வைத்துக்கொள்; காலனாகிய உன்முன்னால் இவை எம் மாத்திரம்?" (அழிந்துவிடும் என்றபடி).

அடையமாட்டான். கருமம் செய்வது என்பது பலன் கருதியன்று; அதைச் செவ்வனே செய்து விட்டேன் என்ற ஆன்மதிருத்தியை அடைவதற்கே. கணக்குப் போட்டுப் பலனை எண்ணுவோர் கயவர். (கிருபணா பல ஹேதவ:) பலன்பெறுவேன் என்ற எண்ணத்தை மனத்திலிருந்து பூரணமாகத் துறந்துவிடவேண்டும்.

"கருமத்தைச் செய்யவே உனக்கு அதிகாரமுண்டு; பலனை எதிர்பார்க்க உனக்கு அதிகாரமில்லை. ஆனபடியால் பலனை நோக்கமாக வைத்துக்கொண்டு கருமத்தைச் செய்யாதே. பலன் வேண்டாமென்பதற்காகக் கருமத்தைச் செய்யாமலும் விடாதே" (II - 47). இங்கே அதிகாரம் என்பது உரிமை - அதாவது தகுதி உடைமை. கருமத்தைச் செய்வதற்கே நீ தகுதியுடையவன்; பலனைப் பெறுதற்கன்று, என்பது பொருள்.

பலனிலே கண்ணுங் கருத்துமின்றிக் கருமத்திலே மாத்திரம் கண்ணுங்கருத்துமுடையவனாயிருக்க வேண்டும். அப்படியிருந்தால் விருப்பு வெறுப்போ, பயக்குரோதமோ இல்லாமலே சாந்த நிலையோடு கடமையைச் செய்யலாம். விருப்பும் வெறுப்பும் நமது மனத்தைக் களங்கப்படுத்தினால், சரி எது, பிழை எது என்பது சில சமயம் தெரியாமலிருக்கும். சரியைத் தான் செய்ய முற்பட்டாலும் விரைவிலே பயன் கிடைக்கவேண்டுமென்ற காரணத்தால் நேர்மை தவற வேண்டிய சந்தர்ப்பமுண்டாகலாம். எனவே பலன் கருதாததொண்டிலே சமத்துவ புத்தியும் நடுவுநிலைமையும் உண்டு. போகமென்பதற்குச் சமத்துவமென்ற பொருளுமுண்டு. "சமத்வம் யோக உச்யதே" கருமயோகமென்பது கருமத்தைச் சமத்துவத்தோடு செய்யும் தன்மையெனவுங் கொள்ளலாம். சமூகத்திலே ஒருவனாயிருந்து கொண்டு தனது கடமைகளைப் பயன்கருதாது செய்தலே கீதையின் முக்கிய போதனையெனக் கொள்ளலாம்.

இந்தக்கருத்தின் வளர்ச்சியை மேலுஞ் சிறிது ஆராயலாம். வேதகாலத்திலும் பிராமண காலத்திலும் பலன் கருதியே கருமங்கள் செய்யப்பட்டன. யாகாதி கிரியைகள் இம்மை மறுமையின்பங்களையே நோக்கமாகக் கொண்டிருந்தன. அதன்பின்னர் எழுந்த உபநிடதங்கள்

கிரியைகளைக் கைவிட்டு அகநாட்டமுடையனவாய்த் தியான வாழ்வைப் பெரிதாக மதித்தன. வேதம் கருமத்தைச் செய்யவேண்டுமெனக் கூற, உபநிடதம் கரும சந்நியாசத்தைப் போதித்தது. எனவே கருமஞ் செய்தல், கருமத்தை விடுதல் என்ற இரண்டு கொள்கைகளும் வாழ்வின் நோக்கங்களாகக் கொள்ளப்பட்டன. கருமஞ் செய்வதைப் பிரவிருத்தி மார்க்கமென்றும், கருமத்தைக் கைவிடுவதை நிவிருத்தி மார்க்கமெனவுங் கொண்டனர். ஒன்று கருமத்தைச் செய்யச் சொல்லுகிறது. மற்றது கருமத்தை விடச் சொல்லுகிறது. இந்த இரண்டுக்குமிடையே ஒரு நடுவான வழியைக் காணச் செய்வதே கீதையின் போதனையாகும். இந்த மத்திய வழிதான் கருமயோகம். கருமத்தைத் தியாகஞ் செய்யாமல் கரும பலத்தைத் தியாகஞ் செய்தல்: இதன் பயனாகக் கருமமும் செய்யப்படுகிறது, சந்நியாச நிலையும் தலைக்கூடுகிறது.

எனவே இந்தக் கருமத்தைச் செய்வதால் என்ன லாபம் வரப்போகிறதென்று சிந்தைகலங்கிய அருச்சுனனுக்குச் கடவுள், "லாபத்தைப் பற்றியோ பலனைப் பற்றியோ நீ ஏன் நினைக்கவேண்டும்? அதை விட்டுவிட்டுக் கருமத்தை மாத்திரம் செவ்வனே, மனப்பூர்வமாக, ஆர்வத்துடனும் நேர்மையுடனும் செய்" என்று சொல்லுகிறார். இவ்வாறு எல்லாப் பணிகளையும் செய்துவிட்டால், "மலமாயை தன்னொடு வல்வினையின்றே"; உன்னில் கருமம் ஒட்டிக்கொள்ளாது; "நன்றே செய்வாய், பிழை செய்வாய், நானோ இதற்கு நாயகமே" என்று இருந்துவிடலாம் என்கிறார்.

தருமம் அழிகிறது. அதைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் அருச்சுனனுடைய மனத்திலே மறைகிறது. துயரும் ஐயமும் அவன் மனதை ஆட்கொண்டுவிட்டன. மெய்ப்பொருட்காட்சியை விரும்பு வோரெல்லாரிடமும் இந்தச் சகிக்கமுடியாத சோகம் உண்டாகும். அருச்சுனனுக்கு அகத்தும் புறத்தும் தொந்தரவுகள் உண்டாகின்றன. அகத்தே – "தர்ம சம்மூடசேதா" – தருமம் நீதி என்பவற்றைப்பற்றிய விசாரம்; மயக்கம். புறத்தே சுற்றமித்திரரோடு சண்டையிட வேண்டுமேயென்ற சங்கடம். அதனால் சந்நியாசம் மேல் என நினைக்கிறான். பகவான் சொல்கிறார்: "நிலவுக்கொழித்துப் பரதேசம்

போக முடியாது. சிறுமையும், சந்தேகமும் காட்டில் இருந்தால் நீங்கிவிடா; சமூக வாழ்வில் இருந்து செய்யும் தொண்டுகளை இறை பணியாகச் செய்தாற்றான் நீங்கும். பலனை நினையாது கடமையைச் செய்"

இந்தக் கருத்து உபநிடதங்களிலேயும் சூசகமாகக் காணப்பட்டது. ஈசோபநிடதம் இதைக் கூறுகிறது. ஆனால் கீதை பிரவிருத்தி மார்க்கத்தையும் நிவிருத்தி மார்க்கத்தையும் இணைத்துப் பலன் கருதாது கர்மஞ் செய்வதை வற்புறுத்தியதால், சமயச் சிந்தனை வரலாற்றிலே உயர்ந்த இடத்தை வகிக்கிறது. கருமஞ் செய்வதை எவரும் தட்டிக் கழிக்கமுடியாது".

என்ன விதமான கருமத்தைச் செய்யவேண்டும்? சமூக ஒழுங்கிலே அவனுக்கு என்ன கருமங்கள் விதிக்கப்பட்டுள்ளனவோ அவற்றை அவன் செய்ய வேண்டும். அதுவே அவனுடைய சுயதருமம். அருச்சுனனுக்கு விதிக்கப்பட்டது சத்திரிய தருமம். அவ்வாறே ஒவ்வொருவருக்கும் கடமைகளுண்டு என்பதைக் கீதை குறிப்பாகச் சுட்டிக்காட்டுகிறது.

ஆனால் மனிதன் தனது கடமையைப் பலன் கருதாது செய்தாலும் அதற்கு ஒரு நோக்கம் வேண்டும். அந்த நோக்கம் இரண்டு பயனைத் தரும் எனக் கூறப்படுகிறது; ஒன்று ஆத்ம சுத்தி; மற்றது இறைபணி:

காயேன மனசா புத்யா கேவலைர் இந்த்ரியை ரபி
யோகின: கர்ம குர்வந்தி சங்கம் த்யக்த்வா ஆத்ம சுத்தயே.

(V-II)

"காயத்தினாலும், மனத்தினாலும், விவேகத்தினாலும் இந்திரியங்களினாலும் மாத்திரமே யோகிகள் கருமத்தைச் செய்கிறார்கள். பற்றை ஒழித்து அதைச் செய்கிறார்கள்"

மயி சர் வாணி கர்மாணி சந்யஸ்யாத்யாத்ம சேதசா
நிராசீர் நிர்மமோ பூத்வா யுத்யஸ்வ விகதஜ்வர;

(III-30)

யத்கரோஷி யதஸ் நாதி யஜ்ஜு ஹோஷிததாசியத்
யத்தபஸ் யசி கௌந்தேய தத்குருஷ்வ மதர்பணம்.

(X-27)

"உள்ளத்தை என் பால் நிறுத்தி எல்லாக் கர்மங்களையும் எனக்கே அர்ப்பணஞ் செய்து, அவாவின்றி எனதென்ற செருக்கின்றி வேகங்களற்றவனாய் யுத்தத்தைச் செய்".

"அர்ச்சுனா, நீ எதைச்செய்கிறாயோ, எதை உண்கிறாயோ, எதை வேள்வித் தீயில் ஆகுதி பண்ணுகிறாயோ, எதைத் தானமாக வழங்குகிறாயோ, எதைத் தவமாகச் செய்கிறாயோ, அவை யெல்லாவற்றையும் எனக்கு அர்ப்பணமாகவே செய்துவிடு"

இஃது இறைபணி;

"அவனே தானே யாகிய வந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினையின்றே"

(தென்மொழிச் சிவஞானபோதம்)

சிவேனைக்யம் கதசித்தஸ் ததீனஸ்வ விருத்தி கா
மலமாயாத்ய சம்பிருஷ்டோ பவதி சுவானு பூதிமான்.

(வடமொழிச் சிவஞான போதம்)

"தம்பணியெல்லாம் இறைபணியாய்ச் செய்வதால் வினைப் பயன் ஒருவனை ஒட்டிக் கொள்ளாது; அதன் பயனாகச் சுவானுபூதியை அவன் பெறுவான்" இந்தச் சுவானுபூதியே சிவஞான போதம் கூறும் பயனும், பகவற் கீதை கூறும் பயனுமாகும். இதுவே முத்தி நிலை; இதுவே தவஞ் செய்யும் முறை; இதுவே தன் கருமஞ் செய்யும் முறை என்ற வழியைக் காட்டுகிறது கீதை. ஆத்ம சுத்தியும், சுவானுபூதியும் கீதையின் பற்றற்ற தொண்டின் பயனாகின்றன. இதுவே மெய்ப்பொருட் காட்சியாளரும், உயர்ந்த கவிகளும், விஞ்ஞான மேதைகளும், நாதோபாசனை செய்யும் சங்கீத மேதாவிகளும், மெய்ஞ்ஞானந் தலை நின்ற பத்திமான்களும் காணும் காட்சி. எல்லாக் கலைகளுக்கும் பயனாயுள்ளதும் இந்நிலையே. இதை யோகம் என்கிறார்

கீதாசிரியர்; கருமத்தின் திறமை என்கிறார். **"யோக: கர்மசு கௌசல்யம்"**

இத்தகைய யோகக் காட்சியுடையார்க்கு, அழிவு கிடையாது. "நமேபக்த: ப்ரணஸ்யதி". பயன்கருதாத தொண்டு என்று இடித்துரைக்கப் பட்டதே; ஆன்ம சுத்தியும் சுவானுபூதியும் பயனன்றோ எனின், ஆம், அவைதாம் அலௌகீகமான ஆன்ம லாபம். அந்த லாபம்தான் மேலானது. அதுவே மன்பதையின் முடிவான நோக்கம். அதைவிட்டு வேறு லாபங்களை நினைந்து நீ சிறுமையடையாதே என்பதே அந்தராத்மாவான பகவானின் போதனை. இந்த நோக்கத்தை உணர்ந்துகொண்டால் மற்ற நோக்கங்களெல்லாம் வாழ்விலே அவையவை வகிக்க வேண்டிய இடத்தை வகித்துக் கொள்ளும். சில வாழ்நாள், பல்பிணிச் சிற்றறிவினோர்க்குச் சார்பு நோக்கங்கள் பல இருக்கலாம்; கப்பல் கட்டுவோனுடைய நோக்கம் கப்பலை நல்ல முறையில் கட்டி முடித்தல். அதில் ஏறிப் பிரயாணஞ் செய்வோர் நோக்கம் துறை சேருதல். போகுந்துறையைத் தெரியாதிருந்தால் எல்லா நோக்கங்களும் வியர்த்தமாகிவிடும். கப்பல் கட்டுவோனும் துறை சேரும் நோக்கத்தைக் குறிப்பாக அடிப்படையிற் கொண்டவனாயிருப்பான்.

எனக்கூறியவாற்றான் கீதை நேரான ஒழுக்கத்தை விருத்தி செய்வதை மாத்திரம் கொள்ளவில்லை. ஒழுக்கம் சுவானுபூதிக்கு ஏதுவாயிருக்கவேண்டுமென்பதையே வற்புறுத்துகிறது. "செய்வன திருந்தச்செய்" என்பது, அது செய்வோனை ஆர்வமும் நிறைமதியு முடையவனாக மாற்றும். கருமம் பூரணத்துவமடைவதற்கு நிறைமதி யுடையோனாயிருக்க வேண்டும்; நிறை மதியுடையோனாயிருப்பதற்கு, கருமத்தை ஆன்ம சுத்திக்காக இறைபணியென்ற சங்கற்பத்தோடு செய்ய வேண்டும். எனவே இவை ஒன்றையொன்று அவாவி நிற்கும். அர்ச்சுனன் இந்தப் போதனையைக் கேட்டதும் குழந்தைபோல இறைவனிடம் கேட்கிறான். "கேசவா, நிறைமதியுடையோனாய்ச் சமாதியில் நிலை நிற்போன் எவ்வாறு உரையாடுவான், எவ்வாறு இருப்பான், எவ்வாறு செயல்புரிவான், அவனது இயல்பென்ன?"

இதற்கு கண்ணபிரான் கூறுகிறார்:

ஒருவன் தன் மனத்திலெழும் விருப்பங்கள் அனைத்தையும் துறந்து, தன்னிலே தான் உள் மகிழ்ச்சி பெறுவானாகில், அப்போது அவன் முழுமதியுடையோன் என்று சொல்லப்படுவான்.

தோன்று மவா வெல்லாம் துறந்து மனத்தொருவன்
சான்ற மகிழ்ச்சி தன்னிற் றானடையின் – ஆன்றமைந்த
அன்னோனான் மாவி லறிவு நிலைபெற்ற
தன்னேரில் சீவன் முத் தன். (2–55)

துன்பம் வருங்கால் துளங்கான் மனநிலையும்
இன்பங்களிலாவல் இல்லோனாய்த் – தன்பால் வீண்
அச்சம் சினந்தவிர்ந்த அம்முனிவாய்ந் தானென்ப
நிச்சயமெஞ்ஞான நிலை. (2–56)

நன்று தீதுற்றடைந்த ஞான்ற வற்றி னுள்ளே தான்
ஒன்றினும் வீழ்ச்சி யுறாதானாய்த் – துன்பம்
விருப்புவெறுப் பற்றிருக்கும் மேலோ னறிவு
தரித்திருக்கு மான்மாவிற் சார்ந்து. (2–57)

ஐந்துள் ளடக்குவோர் ஆமை யெனப் புறத்தே
சிந்தும் விடயத்திற் செல்புலன்கள் – ஐந்தும்
இசையாமை யப்பொருளின் ஈர்த்தடர்ப்பான் கட்டே
அசையாமை கொண்ட அறிவு. (2–58)

பகவற்கீதை வெண்பா – புலவர் மணி

ஆமை தன்அவயவங்களை இழுத்துக்கொள்ளுதல் போல, ஒருவன் ஐம்புலன்களையும் இந்திரிய விடயங்களில் நின்றும் மீட்க வல்லவனாயின் அவனே முழுமதியுடையோன்.

நல்லறிவும் நல்ல தவமுயற்சியும் வாய்ந்த மேலோனுடைய மனத்தையும், வரம்பு கடந்து செல்கின்ற இந்திரியங்கள் தாம்போன போக்கில் வாரிச்செல்கின்றன. பொறிகளையும் மனத்தையும் நெறிமுறையே செல்லுமாறடக்கி, என்னையே உயர் பொருளாக

நினைத்துப் புலன்களை வசப்படுத்தியவனது அறிவு ஆன்மாவில் நிலை பெற்றிருக்கும். மனிதன் பொருள்களை உற்று நினைக்கும்போது அவற்றிற் பற்றுதலுண்டாகிறது. பற்றுதலால் ஆசை பிறக்கின்றது. ஆசையைத் தடை செய்தாற் கோபமுண்டாகிறது. சினத்தால் மயக்கமும், மயக்கத்தால் நினைவுத் தடுமாற்றமும், நினைவுத் தடுமாற்றத்தாற் புத்திநாசமும் உண்டாகின்றன. புத்தி நாசத்தால் அழிவு உண்டாகும். ஆனபடியால் விருப்பு வெறுப்பின்றித் தன் வசப்பட்ட புலன்களாற் பொருள்களை அனுபவித்துக்கொண்டு தன்னடக்கம் பெற்றவன் உள்ளத் தெளிவை அடைகிறான். இந்த உள்ளத் தெளிவே எல்லாத் துன்பங்களையும் அழிக்கும். சித்தந் தெளிவு பெற்றபின் புத்தியானது விரைவில் ஒரு நிலைப்படுகிறது - தடுமாற்ற மடைவதில்லை.

அடக்கமில்லாதவனுக்கு விவேகமில்லை; அடக்கமில்லாதவன் தியானஞ் செய்யமாட்டான்; தியானமில்லாதவனுக்குச் சாந்தியில்லை; சாந்தியில்லாதவனுக்குச் சுகமேது?

கடலிலே காற்றானது கப்பலைத் திசைமாறிச் செல்ல வைப்பதுபோல அலையும் புலன்களுக்குப் பின்னால் மனமானது இழுபட்டுச் செல்லுமானால், அறிவைத் திசை மாறிச் செல்ல வைக்கிறது. எவனுடைய புலன்கள் அடக்கம் பெற்றனவோ அவனே முழு மதியடையோன்; திருந்திய காட்சியுடைய முனிவன். மற்றவர்களெல்லாரும் புலன் வாழ்விலிருக்கத் தான் அடங்கியிருப்பான். ஏனையோர்க்குப் பகலாயிருக்கும்போது அவனுக்கு அஃது இரவு; ஏனையோர்க்கு இரவாயிருக்கும்போது அஃது அவன் விழித்திருக்கும் பகலாகும். நீர்த்தொகுதிகள் தன்னுள் வந்து நிறைந்தாலும் கடல் கரையைக் கடவாது. அவ்வாறே ஆசைகள் வந்து தன்னுள்ளே நிறைந்தாலும் சீவன்முத்தன் அசையாதிருப்பான். உலக ஆசைகளில் நாட்டமுள்ளவனுக்குச் சாந்தி கிடையாது. எவன் எல்லா ஆசைகளையும் துறந்து பற்றின்றிக் கருமங்களைச் செய்கிறானோ, எவன் 'நான்' 'எனது' என்ற அகங்கார மமகாரங்களின்றிப் பணிபுரிகிறானோ அவன் அமைதியை அடைகிறான்.

மெய்கண்ட தெய்வ விழுச்சீர் நிலைமீது
கைகண்டோன் பின் மோகங் காணானே–பொய்யுடல் போம்
போது மிதில் நிலைத்தோன் போக்குவர வில்லாத
சோதியுட் புக் கெய்தும் சுகம்.

– பகவற் கீதை வெண்பா – புலவர்மணி

இதுவே பிரமத்துடன் ஒன்றுபட்ட நிலை. இதை அடைந்தால் ஒருவன் மோகத்தில் அழுந்தமாட்டான். கடைசிக் காலத்திலும் இதிலே நிலைத்து நின்று பிரமத்திலே கலந்து போக்குவரவற்ற முத்தி நிலையை அடைகிறான்.

நீட்சேயென்ற மேனாட்டுத் தத்துவஞானி கூறும் அதீத மனிதனே இங்கு விவரிக்கப்படும் முழுமதியுடையோன். அரவிந்தர் தரும் காட்சியும் இதுவே. இவனுக்குக் கீதை கொடுக்கும் பெயர் ஸ்திதப் பிரக்ஞன்: இவனே சீவன் முத்தன். ஆனந்தம், அமைதி, உள்நாட்டத்தினாலுண்டாகும் தைரியம், சுதந்திர உணர்ச்சி, திட சித்தம், நோக்கம் தவறாதிருத்தல், இறை சந்நிதானத்தில் என்றும் உறைதல் – இவையே இவர்களுடைய இலக்கணம். மனித வளர்ச்சிப் படியிலே இவர்களுடைய விருத்தி சில படிக்கிரமமாகும். கூர்தல் தருமம் மனிதனைப் புதியதோர் உயர் மட்டத்துக்கு இட்டுச் செல்கிறது என்பதற்கு இஃது ஓர் அறிகுறி.

ஞானம் முத்திக்குமார்க்கம்; அந்த ஞானத்தைப் பக்தியினாலும் அடையலாம்; பற்றற்ற இறைபணியினாலும் அடையலாம். அவ்வாறு ஞானம் பெற்றோரின் லட்சணமே இங்கு விவரிக்கப்பட்டது. கீதை கூறும் போதத்தின் தெளிவு இந்த ஸ்திதப் பிரக்ஞன் நிலையே. இத்தகையோரை யோகாரூடன், குணாதீதன், பக்தன் என்ற பெயராலும் கீதை வழங்குகிறது.

(கீதை VI, 4-32; X, 9-10; XII, 13-20; XIII, 7-11; Xiv, 21-35;XVI, 1-3; XVIII, 50-60, பார்க்க)

ஆன்ம சுத்தியடைதலினாற் சுவானுபூதியுண்டாகும். இறைபணி செய்வதால் கடவுட்டன்மை (மத் பாவம், VII-5) உண்டாகிறது. சுவானுபூதி பிரம்ம பூயம் எனக் கீதையில் வழங்கப்படுகிறது. பிரம்ம

பூயமென்பது சாயுச்சியம். ஆனால் இந்த நிலைகளிலே ஆன்மாவுக்குத் தனித்தன்மையுண்டா என்பது ஆராய்ச்சிக்குரியது. அதாவது எல்லைக்குட்பட்ட உயிரானது அந்நிலையிலிருந்து கொண்டு நிறைவடையுமா? ஏகான்மவாதிகள் உயிர்க்குத் தனித்தன்மை கிடையாதென்பர். கடவுட் கொள்கையுடையோர் அதை ஆதரிப்பர். ஆனால் இந்த நிலையெல்லாம் சீவனோடிருக்கும் போதே அடையலாமென்று வற்புறுத்துகிறது கீதை.

சித்தம் சமநிலையிற் சேர்ந்தோர்க ளிங்கேயே
பெத்தப் பிறப்பறுக்கும் பேறுற்றார்–இத்தகையோர்
சுத்தப் பரப்பிரமம் தூயசம மாதலால்
நித்தமதில் வாழ்வார் நிலைத்து.

பகவற்கீதை வெண்பா – V -19.

வேட்கை வெகுளி விடுத்துக் கரணங்கள்
ஆட்கொண்டு தம்மை யடக்கியே – காட்சியிலே
தம்மைத்தம் முள்ளே தரிசிப்போர்க் கிம்மையிலும்
அம்மையினும் முத்தியுள தாம்.

பகவற்கீதை வெண்பா – V -26.

கருமயோகம், "எலலா உயிர்களிடத்தும் தன்னைக் காணவும், தன்னிடத்தே எல்லா உயிர்களையும் காணவும் செய்கிறது. இவ்வாறு கர்மயோகம், பக்தியோகத்திலும் ஞானயோகத்திலும் மலர்கிறது. அதன் பயன் மேலே கூறிய சீவன் முத்தர் நிலை. அப்போது நன்மை தீமை என்ற [1]துவந்துவங்கள் தூய்மை பெறுகின்றன இரண்டும் சீவன் முத்தனுக்கு ஒன்றாகவே தோன்றுகின்றன. அஃது இருவினை ஒப்பு. ஜனகன், சிறீபகவான் இருவரும் ஜீவன் முத்தர் நிலையிலிருந்து கருமத்தைச் செய்தவர்கள். கருமம் எந்த நிலையிலும் முக்கிமான தென்பதைக் கீதை ஓயாமல் வற்புறுத்துவதிலிருந்து, வேத காலத்துப் பயன் கருதிய கருமங்களும் உபநிடத காலத்துச் சந்நியாச மார்க்கமும் கீதையில் எவ்வாறு இணைக்கப்பட்டனவென்பது தெரிகிறது.

---

1 "துவந்துவங்கள் தூய்மை செய்து" – மாணிக்கவாசகர்.

– நவாலியூர் சோ. நடராசன் அவர்களின் 'வடமொழி இலக்கிய வரலாற்றில்' இருந்து பெறப்பட்டது.

# தமிழர் - முஸ்லிம் ஐக்கியம்

## - ஜனாப் ஏ.எம். நஹியா -

**த**மிழ்மொழி அரசோச்சும் யாழ்ப்பாண மண்ணில் பிறந்தவர் அஸீஸ். தமிழ் மொழியினால் பிணைப்புண்டு தமிழரும் முஸ்லிம்களும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல, ஒரு பிட்டில் மாவும் தேங்காய்ப் பூவும் போல் ஒன்றிணைந்து வாழ்ந்த கல்முனைப் பிரதேசத்தில், உதவி அரசாங்க அதிபராகவிருந்து அம்மக்களின் சகோதர வாஞ்சையை உணர்ந்தவர் அவர். அண்ணன் தம்பிகள்போல், இருதயத்தின் ஈரிதழ்கள்போல், தமிழரும் முஸ்லிம்களும் இப்பிரதேசத்தில் வாழ்ந்தமை அஸீஸைப் பெரிதும் கவர்ந்தது. நாவலர் வாழ்ந்த வண்ணார் பண்ணைச் சூழலில் பிறந்து, வளர்ந்து, கல்வி கற்று, விபுலானந்த முனிவர் வாழ்ந்த கிழக்கிலங்கையில் பணி செய்த அஸீஸிடம் காணப்பட்ட தமிழர் - முஸ்லிம் ஐக்கிய உணர்வு, தலைநகரில் தன்னிகரற்று ஒரு போது திகழ்ந்த ஸாஹிறாக் கல்லூரியில் அவர் அதிபராகவிருந்தபோது வெளிப்பட்டுத் தோன்றியது. தமிழ் பேசிய சைவரும், கிறீஸ்தவரும், முஸ்லிம்களும் ஒன்றிணைந்து தமிழ் வளர்த்து ஐக்கியம் பேணியவற்றை 1950 களில் அக் கல்லூரியில் தெட்டத்தெளிவாகக் காணமுடிந்தது.

கிழக்கிலங்கையிலுள்ள மருதமுனையூரில் குறித்துச் சொல்லக் கூடிய இரு மகாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. ஒன்று 1956ல் நடைபெற்ற அரசியல் மகாநாடு. மற்றது, 1966ல் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழிலக்கிய மகாநாடு. இந்த அரசியல் மகாநாடு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது. மேற்சபை உறுப்பினராக அப்போது பதவி வகித்த அஸீஸ் இம்மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். அவரின் தமிழுணர்வையும் தமிழர் - முஸ்லிம் ஐக்கியத்தில் அவருக்கிருந்த வாஞ்சையையும் அச் சொற்பொழிவு நன்கு காட்டிற்று.

'கிழக்கிலங்கையிலே தமிழர்களும் இஸ்லாமியர்களும் எந்தச் சக்தியாலும் பிரிக்கமுடியாதபடி இணைந்து வாழ்கின்றார்கள். இந்த இணைப்புச் சாதாரணமான ஒன்றல்ல. தமிழ் மொழியினால் உண்டான இயற்கையான இணைப்பு; உயிர்ப்புள்ளது. துடிப்புள்ளது. இரண்டு இனமும் இந்நாட்டின் பழங்குடிகள். நம் முன்னோர்கள் இங்கே அண்ணன் தம்பிகள் போல் வாழ்ந்திருந்தார்கள். நமது சந்ததியிலும் இந்த ஐக்கியம் நிலைபெறவேண்டும். எதிர்காலச் சந்ததிக்கும் இந்த ஐக்கியமே பாதுகாப்பாக அமையவேண்டும்.'

என்று அஸீஸ் அம்மகாநாட்டில் கூறியபோது, அவரின் வரலாற்றுணர்வை, அரசியல் சுயநலமின்மையை. மொழி அடிப்படையில் இரு இனங்களும் இணைந்து வாழவேண்டியதன் அவசியத்தை நன்கு காட்டுவதாயமைந்தது. அவரின் குரலில் உண்மையையும் நேர்மையையும் காணமுடிந்தது.

அம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றிய இன்னுமொரு முக்கிய பிரமுகர் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள். அவரும் அஸீஸின் அதே வழிநின்று தனது கருத்துரையை நிகழ்த்தினார். தமிழரும் முஸ்லிம்களுமாகிய நாம் மட்டக்களப்பு அன்னையுடைய இருதயத்தின் ஈரிதழ்களையும் போன்றவர்கள். இரு இதழ்களும் ஒத்து இயங்கினால்தான் இருதயத்துடிப்பு நிலை பெறும். ஒத்து இயங்காது போனால் இருதயத் துடிப்பு நின்று போகும். அன்னையின் உயரிய வாழ்வுக்கு இந்து – முஸ்லிம் ஒற்றுமை அவசியம் என்பதை நாம் உணரவேண்டும். பிரிவினைச் சக்திகளுக்கு இடங்கொடுக்காது, அழிவுப்பாதையிலே செல்லாமல், நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வோமாக என்னும் பொருளமைந்த ஒரு பாடலைப் பாடி தனது சொற்பொழிவை ஆரம்பித்தார் அவர். அப்பாடல் இதோ தரப்படுகிறது:

"இருதயத்தின் ஈரிதழ்போல்
  இந்து முசிலீம் யாம்
ஒரு வயிற்றுப் பிள்ளைகள் போல்
  உள்ளோம் – அரசியலில்
பேராசை கொண்டோர்
  பிரித்து நமை வேறாக்கி
ஆராயர் செய்வார் அழிவு"

உண்மை நிலையைப் படம் பிடித்துக் காட்டும் கருத்துள்ள இப்பாடல், அன்று, அந்த மகாநாட்டில் பாடப்பட்டாலும் இன்றைய நிலையிலும், அது பெறுமதி மிக்கதாகவே தெரிகிறது. தமிழரும் முஸ்லிம்களும் இப்பாடலை அடிக்கடி பாடவேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டிருக்கிறது. இப்பாடலின் பொருளை உணர்ந்து செயற்படவேண்டிய காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அறிஞர் அஸீஸும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையும் தமிழர் – முஸ்லிம் உறவு பற்றியும் அதன் அவசியம் பற்றியும் அன்று எழுப்பிய குரல்கள் இன்றும் எமது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. தொன்மை வாய்ந்த இவ்வொற்றுமை நிலைபெற வேண்டும்; அரசியல் சுயநலமிகள் அதைக் கெடுத்துவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும் – என்ற கருத்துக்களில் இருவரும் உடன்பட்டு நின்றனர். அரசியல் மகா நாட்டையே தமிழர் – முஸ்லிம் ஐக்கியத்தை வலியுறுத்தும் மகாநாடாக்கிய இவ்விருவரினதும் தமிழுணர்வு மதிக்கத்தக்கது. என்றும் நினைவு கூரப்படவேண்டியது.

வெறும் வார்த்தையளவில் மட்டும் தமிழர் – முஸ்லிம் இணக்கம் பேசியவரல்லர் அஸீஸ். மருதமுனையில் இதையிட்டுப் பேசுவதற்குப் பல வருடங்களுக்கு முன்பே இந்த ஒற்றுமைக்காகப் பலவற்றைச் செய்தவர் அவர். ஒரு முறை கிழக்கிலங்கையிலுள்ள சம்மாந்துறை முஸ்லிம் கிராமத்துக்கும் அதனருகே அமைந்திருக்கும் தமிழ்க் கிராமமான வீரமுனைக்குமிடையே இனக்கலவரம் மூண்டு இரு இனத்தவரும் வஞ்சம் தீர்க்கக் கங்கணம் கட்டிச் செயற்பட்ட போது அதனை ஆற்ற மாட்டாத அஸீஸ் கொழும்பிலிருந்து உடனே புறப்பட்டு சம்மாந்துறைக்குச் சென்று, அந்த ஊர் ஜும் ஆப் பள்ளிவாசலில், 1954 ஏப்பரல் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ஜும் ஆத் தொழுகையின் பின் நடைபெற்ற சமாதானக் கூட்டத்தில் கலந்துகொண்டார். அன்றைய பாராளுமன்ற உறுப்பினர்களான கெட் மதலியார் எம்.எம். இப்றாஹீம் (பொத்துவில்) ஏ.எம். மிர்ஸா (கல்முனை) ஆகியோரும் இக் கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தனர். அங்கு குழுமியிருந்த பெருந்திரளான முஸ்லிம்கள் மத்தியில் உரையாற்றிய அஸீஸ்:

"கிழக்கு மாகாணத்தில் இத்தகைய மோசமான கலவரம் இதற்கு முன் நிகழ்ந்ததில்லை. மனிதன் மிருக சுவாபம் மேலிடும்போது தவறுகளைச் செய்கிறான். ஆனால் அவற்றை இப்போதே இவ்வளவிலே நிறுத்திவிடவேண்டும்."

எனக் கோரிக்கை விடுத்தார். அத்துடன் நின்றுவிடாது, "இனிமேல் இப்படியான விடயங்கள் ஒருபோதும் நடக்க மாட்டாது" எனவும் தமிழ் மக்கள் சார்பில் உறுதிமொழி கூறினார். கிழக் கிலங்கை மக்களின் அபிமானத்தைப் பெற்றிருந்த அஸிஸ்துரை வழங்கிய அவ்வுறுதி வார்த்தைகள் கலவரத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தது. தமிழர் – முஸ்லிம் ஐக்கியத்துக்குக் குறுக்கே போடப்பட்ட ஒரு தடைக்கல் அன்று தூக்கி வீசப்பட்டத.

இவ்வாறு அஸீஸ் தமிழர் – முஸ்லிம் ஐக்கியத்துக்காகச் செய்தவை அனைந்தம், இந்த ஐக்கியம் நிலைபெறத் தம்மாலான வற்றையெல்லாம் தனது வாழ்நாளில் செய்து அந்த ஐக்கியத்தையும் கண்டு மகிழ்ந்தவர் அவர். அரசியல் சந்தையில் இனவாதம் விலை போகும் இக்காலத்தில் 'அஸீஸின் ஐக்கிய வாதத்தின் விலை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளமை துரதிஷ்டவசமானது.

**ஏ.எம் நஹியா,**
**பி.ஏ. (இலங்கை), டிப்.இன்.எட்.**

# புலவர்மணிக் கோவை

# ஆக்கியோன் உரை

ஒருபோது எனது உயர் வகுப்பு மாணவர்களிடம் அவர்கள் கற்றிராத நூலில் இருந்து ஒரு செய்யுளைக் கொடுத்து அதற்கு ஒரு விளக்கவுரை எழுதும்படி கேட்டேன். அதுவும் அவர்கள் அதை நன்கு ஆராய்ந்து செய்துகொள்ளவும் போதிய அவகாசம் அளித்தேன். இறுதியில் வகுப்பில் இருந்த இருபத்து நான்கு மாணவர்களும் தங்களது ஆக்கத்தைத் தந்தனர். இவர்களின் சராசரி வயது பதினேழு. ஆண்கள் ஒன்பதுபேர் மற்றவர்கள் பெண்கள். அவர்களில் மூவர் மாத்திரம் செய்யுள்களுக்கு உரிய நூலை தேடிப்பிடித்து அதன் கருத்தினைத் தந்திருந்தனர். மற்றவர்கள் தாங்கள் அச்செய்யுளைப் புரிந்துகொண்ட எண்ணத்திற்கு ஏற்ற கருத்தை வெளிப்படுத்தி உரை எழுதியிருந்தனர். அவையாவும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட கருத்துள்ளனவாகவே அமைந்திருந்தன. இதுதான் செய்யுளை கற்போர் நயக்கும்முறை என நான் எண்ணிக்கொண்டேன்.

உரை எழுதுபவர்கள் அதிகமாகத் தமது இலக்கண இலக்கிய வளங்கள், சொல்வளம், கருத்துவளம், கற்பனைவளம், செய்யுளியற்றும் வல்லபம் என்பவற்றைப்பெய்து உரை காண்பதால் மூலத்தை ஆக்கியவரின் கருத்திலிருந்து வேறுபட்டுப் போவதுண்டு. திருக்குறளுக்கு உரை செய்த பதின்மர்களின் உரைகளையோ நன்னூலுக்கு உரை கண்ட ஐவரின் உரைகளையோ நாம் ஒப்புநோக்கினால் இந்த வேறுபாடுகளை அவதானிக்கலாம். ஒரு உரையாசிரியர் தந்துள்ள உரையிலிருந்து அவரையிட்ட விபரங்கள் யாவற்றையும் புரிந்துகொள்ளலாம். உரையிலே, உரையாசிரியரின் அறிவுத் திறன், வாதமிடும் வன்மை, சமயம், மொழியறிவு என்பன நீரில் நெய் மிதப்பதுபோல தெளிவாக மிதந்து மேலெழுந்து கிடக்கும்.

இதனால் நான் செய்த புலவர்மணிக் கோவைக்கு நானே உரை காண்பதால் என் கருத்தை வலியுறுத்தலாம் என எண்ணினேன். இது ஒருவேள்ள கற்போரின் சுவைக்கும், கற்பனைக்கும் ஊறுவிளைக்கலாம் என நான் எண்ணினாலும், எனது கருத்தினை அவர்கள் நன்கு புரிந்து கொள்வதால் மேலும் சுவைத்தலும் கற்பனை செய்தலும் தொழிற்படும் என்பது என்னெண்ணம். அனுபவமுங்கூட. ஆதலால் எனது நூலுக்கு நானே உரையெழுதும் முறையைக் கைக்கொள்கின்றேன். இவ்வாறே முன்பு விபுலாநந்தர் பிள்ளைத் தமிழுக்கு உரை கண்டேன். இப்போது புலவர்மணிக் கோவைக்கு உரைகாண்கின்றேன்.

புலவர் மணி எனது குரு. ஆரம்பகாலத்தில் மானசீகக் குருவாக இருந்துவந்தார். நாளடைவில் எனது நிதர்சனக் குருவாகவே அமைந்துவிட்டார். எனது இலக்கிய இலக்கணச் சந்தேகங்களை அவர் தீர்த்து வைத்தார். கவியெழுதுவதில் கையாள வேண்டிய உத்திகளைக் கற்றுத் தந்தார். அதுமட்டுமல்ல, இலகுவாக இலக்கண நூல்களையும் சங்க இலக்கிய நூல்களையும் ஏனைய நூல்களையும் பெற்றுக் கொள்ள முடியாது இருந்த அக்காலத்திலே, அவற்றைத் தனது இல்ல நூலகத்திலிருந்து கற்பதற்குத் தந்தார். அவற்றின் கருகலான பகுதிகளை இலகுவாகப் புரிந்து கொள்ள விளக்கமளித்தார்.

அவர் எனது இல்லத்திலிருந்து ஏறக்குறைய 350 யாருக்கப்பாலேதான் வசித்துவந்தார். அவருடைய வசிப்பிடத்தையொட்டித்தான் நான் கல்வி கற்ற பாடசாலை அமைந்திருந்தது. எனக்கு உடன்பிறந்த சகோதரர்கள் இல்லாத குறையை அவரது நான்கு புதல்வர்களுமே தீர்த்து வைத்தனர். எனது முதற் கவிதையைப் பார்த்து ஊக்குவித்து அதை மேலுஞ் சிறப்புறச் செய்ய என்ன உத்திகளைக் கையாள வேண்டுமென்பதைச் சொல்லித் தந்தார். அவரை என் குருவாகவும் அவரது தயாளகுணம் நிறைந்த பத்தினியைக் குருபத்தினியாகவும் நினைத்து வாழ்ந்தேன். அரசியல்வாதிகளின் அக்கிரமங்களில் இருந்து விடுபட்டுச் சுயமாக வாழ்வதற்கு என்னையும் என் குடும்பத்தையும் பாதுகாத்தார். இன்றும் அவர்களைமிட்டு நினைக்கும்போது அந்தத் தானங்கள் என்னிடத்தே உயர்வு பெறுவதை உணர்கின்றேன்.

அவரைப்பற்றி அவரது தமிழ்ப்புலமை, பணிகள் என்பன பற்றிக் கிழக்கின் பேரொளி என்ற ஒரு சிறுநூலை வெளியிட்டேன். அதில் அவரது வாழ்க்கை தரப்பட்டுள்ளது. உள்ளதும் நல்லதும் என்ற அவரது சுயசரித்திர நூலில் அவரது வரலாறு மட்டுமல்ல, அவர் வாழ்ந்த காலகட்டத்தின் தமிழ்வரலாறும் தெளிவாகத் தரப்பட்டுள்ளது. மேலும் மட்டக்களப்பு புலவர்மணி நினைவு மன்றத்தினர் வெளியிட்டுள்ள அவரது கவிதை, கட்டுரைத் தொகுப்புகளில் அவரின் தமிழ் எழிலைக் காணலாம். ஈழத்தில் அவர் வாழ்ந்த காலத்தில் வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், மலர்கள், அவரது படைப்பை வேண்டிநின்றன. அவற்றைக் கற்றால் காலத்துக்கேற்ற கருத்துரைக்கும் அவரது தமிழ் நாகரீகப் பண்பைப் புரிந்து கொள்ளலாம். இங்கு விரிக்கிற் பெருகும். எனினும் அவரைப்பற்றித் தமிழுலகம் அறிந்துகொள்ள வேண்டிய முக்கிய குறிப்பினைப் புலவர்மணி வரலாற்று வெண்பா எனப் பத்தொன்பது பாக்கள் கொண்ட பகுதியை இணைத்துள்ளேன்.

விபுலானந்தர் கோவையென ஒன்றைச் செய்யக்கருதி அவரின் உதவிநாடிச் சென்றேன். அப்போது தனது பகவத்கீதை வெண்பாவின் இரண்டாம் பாகத்தினை அச்சேற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். எனது எண்ணத்தைக் கேட்டு விபுலானந்தர் ஒரு தமிழ்த்துறவி, அவரை அகப்பொருட் செய்யுள்களால் பாடுவதிலும் பார்க்க வேறு துறையிற் புகழ்வது நலம். என உரைத்து அதற்கான சில வழிவகைகளையும் உரைத்தார். அதன்பேறாக விபுலானந்தர் கோவை விடுபட விபுலானந்தர் பிள்ளைத் தமிழ் உருவானது. எனினும் அதனை அவரிடம் சமர்ப்பித்து வேண்டிய ஒத்தாசைகளையும், திருத்தங்களையும், ஆலோசனைகளையும் கேட்டுப் பெற்றுக்கொள்ளமுடியாது போயிற்று. அதற்கிடையில் அவர் அமரராகிவிட்டார்.

பின் அவருக்கோர் அகப்பொருட் கோவை செய்வதென்றும் அதன் மூலமாக மாறிவரும் இக்கால மனையறப் பண்புகளைச் சொல்வதென்றும் நினைத்து இக்கோவையைச் செய்து அதற்குப் புலவர்மணிக்கோவையெனப் பெயரிட்டேன். அதன்விளைவே இந்த உரையுடன் கூடிய இந்த நூலாகும். எனது பாயிரத்தில் மேலும் சில சேதிகளையுந் தரவுகளையுந் தந்துள்ளேன்.

அவற்றை இங்கு கூறுவது கூறியது கூறுவதாகும். இதனைப் புலவர்மணி அவர்களதும் அவரது மனைவியார் நல்லம்மா அவர்களினதும் நினைவாக இப்போது படைக்கின்றேன்.

இது, மட்டக்களப்புப் புலவர்மணி நினைவு மன்றத்தார் அவரை நினைவுகொள்ளும் 1991ஆம் ஆண்டில் நடக்கும் விழாவின் வெளியீடாக வெளிவருவதையிட்டு மனமகிழ்கின்றேன். அதற்காக என்னை ஊக்குவித்த அன்புமணி இரா. நாகலிங்கம், மன்றத் தலைவரும் என்னுடன் கலாசாலை மாணவருமாகிய திரு. த. செல்வநாயகம் மற்றும் இந்து மன்றச் செயலாளராகச் சைவப்பணி செய்துவரும் முன்னாள் கல்வியதிகாரி திரு. எம். சிவநேசராசா ஆகியோருக்கு அன்பு கலந்த நன்றிகள்.

வணக்கம்.

இவ்வண்ணம்,
தங்கள் அன்பான,
க.தா. செல்வராசகோபால் (ஈழத்துப் பூராடனார்)
கனடா, 1991

நன்றி: புலவர் மணிக்கோவை.

# நாவலர் காவிய பாடசாலையும் புலவர்மணியும்

– எஸ். சேனாதிராசா B.A. Dip. in Ed., Dip. in Phy. Ed..–
(ஓய்வுபெற்ற யாழ்ற்றன் கல்லூரி அதிபர்)

அகத்தியம், முதல், இடை, கடைச்சங்கத்தாரின் இலக்கண நூலாய் விளங்கியது. இதை இயற்றியவர் அகத்தியர் என்கின்ற குறுமுனிவர். பண்டைத் தமிழகத்தில் இருந்த ஒளி நாட்டின் தலை நகரமாய் விளங்கிய தென் மதுரையில் இருந்த முதற்சங்கத்தின் தலையாய புலவர் அகத்தியர். சிவனிடத்தும் ஆறுமுகனாரிடத்தும் தமிழிலக்கணத்தைக் கற்று முத்தமிழைப் பரப்பினார் என்று திருவிளையாடற்புராணம் கூறுகின்றது.

அகத்தியனாரின் மாணவர்கள் பன்னிருவர். அவர்களுள் முதன்மையானவர் தொல்காப்பியர். இவர் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலின் ஆசிரியர். தொல்காப்பியம் தமிழின் தொன்மைக்கு ஒரு சான்றாக விளங்குகின்றது. அதங்கோட்டாசான். தூராலிங்கனார், செம்பூட்சேய், வையாபிகனார், வாய்ப்பியனார், பனம்பாரனார், அவிநாயனார், காக்கை பாடினியார், நற்றத்தனார், வாமனனார் என்போர் மற்ற மாணவர்கள்.

இவர்கள் இயற்றிய நூல்களை எம்மால் பெற முடியாமல் உள்ளது. எனினும் இந்தப்பன்னிருவரும் இயற்றிய "புறப்பெ்ாருள் பன்னிருப்படலம்" என்ற நூலின் வழி நூலாகிய ஐயனாரிதனார் இயற்றிய புறப்பொருள் வெண்பாமாலை இன்று உள்ளதாக அறிகின்றோம்.

நாங்கள் கற்றுணர்ந்த பெரியோர்களைப் புலவர், பண்டிதர் என அழைக்கிறோம். எமது நாட்டிலே பல கல்விமான்கள் இருந்தார்கள். இப்பொழுதும் இருக்கிறார்கள். குமாரசாமிப்புலவர் 1854 ஆண்டு சுன்னாகத்தில் மயிலிணி என்னும் கிராமத்தில் அம்பலவாணபிள்ளை அவர்களுக்கும் சிதம்பர அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். அவர் ஐந்து வயதில் வித்தியாரம்பம் செய்து வைக்கப்பட்டார். சில காலம் சென்றபின் மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையில் சேர்ந்து சிறிது காலம்

ஆங்கிலமும் கற்றார். அதன் பின்பு சுன்னாகம் பூ. முருகேசு பண்டிதரிடமும், அ. நாகநாத பண்டிதரிடமும் இலக்கண இலக்கிய நூல்களை மிகவும் நுட்பமாய் கற்றார். பன்னிரெண்டாம் வயதில் நமச்சிவாயக் குருக்களிடம் சிவதீட்சைபெற்றார். அதன் பின்னர் நாகநாத பண்டிதரிடம் சமஸ்கிருதமும் கற்று தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் ஆளமான அறிவைப்பெற்றறார்.

ஏழாலை சைவப்பிரசாச வித்தியாசாலையிலும் வண்ணார்ப் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் ஆசிரியராய் விளங்கினார். அக்காலத்தில் புலவர் ஐயாவிடத்தில் அனேகமானவர்கள் தமிழ் இலக்கண. இலக்கியங்களைக் கற்று பண்டிதர்களாகவும் புலவர்களாகவும் விளங்கினர்.

வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையின் அங்கமாக விளங்கியது, காவிய பாடசாலை. குமாரசுவாமிப் புலவர் ஐயா, நாவலர் ஐயாவின் மாணாக்கர் பரம்பரையில் நேரடியாக வராவிட்டாலும் புலவர் ஐயா நாவலர் பரம்பரையின் முக்கியஸ்தர்களுள் ஒருவராகக் கருதப்பட்டவர்.

சைவப்பிரகாச வித்தியாசாலையை நாவலர் ஐயாவுக்குப்பிறகு உயர்ந்த கல்விப்பீடமாய் மாற்றி அமைத்த பெருமைக்குரியவர் குமாரசாமிப்புலவர் அவர். சைவப்பிரகாச வித்தியாசாலையின் அங்கமாய் விளங்கிய, காவிய பாடசாலையின் அதிபர் என்ற பெருமைக்கும் உரியவராய் விளங்கினார். நாவலர் காவிய பாடசாலை தமிழ் மரபுக்கல்வியின் உறைவிடமாய் விளங்கியது. மாணவர்கள் ஆசிரியர்களுடன், உடன் உறைந்து உண்டு மரபு முறையான கல்வியைப் பெற்றனர்.

அகத்தியருக்கு மாணவர்கள் பன்னிருவர் என கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளேன். அதேபோல் 1917ஆம் ஆண்டில் காவிய வகுப்பில் புலவர் ஐயாவிடம் படித்த மாணவர்கள் பன்னிருவர்.

அவர்கள் எல்லோருடைய பெயர்களையும் குறிப்பிட முடியாமல் இருக்கிறது. ஒரு சில மாணவர்களின் பெயர்களை மட்டும் அறிய முடிகின்றது. அவர்களில் மட்டுவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

உடுவில் பண்டிதர் வ. மு. இரத்தினேஸ்வர ஐயர், மீசாலை பெரிய தோட்டம் திரு. க. குமாரசாமி, பண்டிதர் மருதையனார், வட்டுக்கோட்டை குருமூர்த்தி ஐயர் முதலியவர்களை "உள்ளதும் நல்லதும்" என்ற நூலில் 35ஆம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார் புலவர்மணி அவர்கள்.

புலவர் அவர்கள் எந்த யாப்பு முறையிலும் கவிதை இயற்றும் வல்லமை உடையவர் என்பதைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறிந்த விடயமாகும். வட மொழி நூல்களை தமிழில் மொழி பெயர்த்து செய்யுளாகவும், வசனமாகவும் எழுதியுள்ளார். இதோபதேசம், சிசுபாலசரிதம், இரகுவம்சம், சரிதாமிர்தம், மேகத்தூதக்காரிகை முதலியன இவரது மொழிபெயர்ப்புச் செய்யுள் நூல்களாகும்.

தண்டியலங்கார உரை, நீதி நெறிவிளக்கவுரை, அகப்பொருள் விளக்கவுரை, திருவாதவூரடிகள் புராண உரை என்பவற்றுக்கும் உரை எழுதியுள்ளார்.

தமிழ்ப்புலவர் சரிதம், வினைப்பகுபத விளக்கம், இலக்கியச்சொல் அகராதி என்பன இவரால் ஆராய்ச்சி செய்து எழுதப்பட்டன. இவற்றை விட உள்நாட்டிலும், தமிழ் நாட்டிலும் அப்போது வெளிவந்த பத்திரிகைகளில் பல கட்டுரைகளை எழுதினார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையவர். திருமலை த. கனகசுந்தரம் பிள்ளை அவர்களும், புலவரும் நெருங்கிய நண்பர்களாய் இருந்தனர். திரு. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள் கூட்டாக நூல்களை வெளியிடும் ஆர்வம் உடையவராய் விளங்கினார். இதற்கு குமாரசாமிப்புலவர் அவர்கள் ஆதரவு அளித்தார். பல நூல்களை இருவரும் சேர்ந்து வெளியிட்டனர். கம்பராமாயணப் பாலகாண்ட அரும்பத விளக்கவுரையையும், நம்பி அகப்பொருளுரையும் இவர்களது கூட்டு இலக்கிய முயற்சிக்கு உதாரணமாய் விளங்குகின்றன. தமிழ்ப்புலவர் சரித்திரத்தை அகர வரிசையில் எழுதினார். அவர் எழுதிய இலக்கண சந்திரிகை, வினைப்பகுபத விளக்கம் நன்னூல் படிப்பவர்களுக்கு பெரிதும் பயன்படும் என்பது அறிஞர் கருத்தாகும்.

புலவர் ஐயா அவர்களின் மகன் எழுதிய "குமாரசாமிப்புலவர்" என்ற நூலில் மட்டுவில் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி.

கணபதிப்பிள்ளை அவர்களையும். மட்டக்களப்பு புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை அவர்களையும் தமது தந்தையாரின் அன்புக்குப் பாத்திரமான மாணவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். இச்சந்தர்ப்பத்தில் ஒரு முக்கிய சம்பவம் ஒன்றைக்குறிப்பிட வேண்டியுள்ளது. நாவலர் காவிய பாடசாலையில் பெரியதம்பிப் பிள்ளை ஒரு மாணவராகச் சேர்வதற்குக் காரணமாய் விளங்கியவர்கள், மட்டுவில் தம்பிமுத்துப்பிள்ளை, மட்டுவில் நடராசா, பண்டிதர் வே. மகாலிங்கசிவம் முதலியோர் ஆவர். யாழ்ப்பாணத்தில் தமிழ் படிப்பதற்குரிய ஆவலை இளைஞர் பெரியதம்பிப்பிள்ளைக்கு ஏற்படுத்தியவர் தம்பிமுத்து அண்ணன் என்று பண்டிதமணி அவர்களால் அழைக்கப்பட்ட மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட புத்தக வியாபாரியாவர். நாவலர் காவிய பாடசாலை என்ற கலைக்கோயிலை இளைஞர் பெரியதம்பிப் பிள்ளைக்கு காட்டியவர், பண்டிதர் மகாலிங்கசிவத்தின் தம்பி நடராசா அவர்கள். நடராசா அவர்கள் நாவலர் பரம்பரையைச் சேர்ந்தவர். காவிய பாடசாலையின் முகாமையாளராய் விளங்கிய திரு. த. கைலாய பிள்ளை அவர்களுக்கு உறவினர். கைலாயபிள்ளை அவர்கள் பல்கலைக்கழக நூல் நிலையம் போன்றவர். நடமாடும் பல்கலைக்கழகம் போல் விளங்கிய குமாரசாமிப்புலவரையும், பண்டிதர் மயில்வாகனனாரையும் பெரியதம்பிப்பிள்ளைக்கு அறிமுகம் செய்து வைத்தவர் நடராசா. இவற்றிற்கெல்லாம் பின்னணியாக நின்றவர் பண்டிதர் வே. மகாலிங்கம் அவர்கள். நாவலர் காவிய பாடசாலையில் பெரியதம்பிப்பிள்ளைக்கு அனுமதியும் கிடைத்தது. அவருக்கு மட்டுவில் மண்டூராயிற்று. பண்டிதர் மகாலிங்கசிவம் அவர்களின் இல்லத்தில் சிறிது காலம் பெரியதம்பிப்பிள்ளை தங்கினார். நல்லாரைக் காண்பதுவும் நன்றே. நல்லார் சொற் கேட்பதும் நன்றே. என்பது ஔவைப்பிராட்டியார் வாக்கு. பண்டிதர் மகாலிங்கம் சிவம் அவர்களின் வழிநடத்தலில் பெரிதம்பிப்பிள்ளை அவர்கள் பெற்ற அனுபவம் அவரைப் பிற்காலத்தில் ஒரு மாமனிதனாக்கியது. பண்டிதர் மகாலிங்கசிவம் அவர்களின் மறைவு அவரை மிகவும் கவலையில் ஆழ்த்தியது.

மகாலிங்கசிவமலர் என்ற தலைப்பில் பதினைந்து பாடல்களைப் பாடினார். அவற்றில் இப்போது நமக்கு நான்கு பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. அவை பின்வருமாறு:

1 மட்டுவிலாம் பூங்கொடியில் மலர்ந்த மலர்
சாதிமலர், மலர்கள் தாழ
மட்டவிழ்ந்து மணங்கமழ்ந்து வயங்கு மலர்
மாணவராம் வண்டு சூழ்ந்து
தொட்டந்து மினியமலர் மகாலிங்க
சிவமலர்தன் தொடர்பாம் பாசக்
கட்டறுந்து கருணை மலர் சிவபெருமான்
கழல் மலர்க்கீழ்க் கலந்ததன்றே.

2 தண்முகஞ்சேர்ந் தொழுகிவிளை புலம் நிரம்பச்
சமத்துவமாய் சார்வோர் கொள்ள
உண்முகஞ்சேர் அகம்புறமாம் ஒண்பொருளின்
வளம் பெருக்கும் உபகாரத்தால்
மண்முகஞ்சேர் மகாவலிகங் கைக்கிணையாம்
மகாலிங்க சிவனாரின்று
விண்முகஞ்சேர்ந் திடுதுயரம் தமிழுலகம்
தாங்கிடுமோ விதியிதாமோ.

3. பட்டுடையு மிலையாடம் பரநடையு
மில்லை, வெளிப்பகட்டு மில்லை
பொட்டுமிலை புனைவிரலிற் பொன்கணையா
ழியுமில்லை. போலி வேடக்
கட்டுமிலை செருக்குமிலை கலைத்தொண்டே
நிலைத்தொண்டாய் க்கருத்துட் கொண்டாய்
சிட்டர் புகழ் மகாலிங்க சிவமே நின்
சிறப்பியல்பு தெரிவர் யாரே.

4. திறந்த மனம் நிறைந்த குணம் தெளிந்த மொழி
சிறந்த நடை திருந்து நீதான்
இறந்தனையென் றறைந்த உரை இலங்கை முழு
வதும்வெதும்பி இமயம் சார்ந்த
துறந்தமனத் தொழுந்தகையும் சோக முழந்
திடச்சென்று சுட்டதனால்
மறந்தெங்கன் ஆற்றிடுவோம் நின்பிரிவை
மகாலிங்க சிவப்பேர் வள்ளால்

பண்டிதர் மகாலிங்கம் அவர்கள் மட்டுவில் உரை ஆசிரியர் க.வேற்பிள்ளை அவர்களின் மகன். பண்டிதர் மயில்வாகனனார் அவர்களுடனும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையுடனும்

நெருங்கிப்பழகியவர். நாவலர் பரம்பரை; இராமநாதன் கல்லூரி, இருபாலை அரசினர் ஆசிரிய கலாசாலை முதலியவற்றின் ஆசிரியர். ஸைவத்திலும் தமிழிலும் நன்கு ஊறித்திளைத்தவர்.

இவர் 1891இல் மட்டுவிலில் பிறந்தவர். 1941ல் மரணமானார். தமிழ் சைவப்பாரம்பரியத்தில் வந்தவர். தன் வாழ்நாள் முழுவதையும் சைவத்தமிழ்க் கல்விக்காக அர்ப்பணித்தவர். பண்டிதர் மகாலிங்க சிவத்தின் நாம் நீடுழி வாழ்க.

"வண்மைத் தமிழ்க்கு வரம்பு; வடமொழியின்
உண்மைத் தெளிவுக் குரையாணி – கண்மணியென்
சுன்னைக் குமார சுவாமிப் புலவனடி
சென்னிக் கியான்செய் சிறப்பு"

என்று பாடி தனது ஆசிரிய பிரானாகிய குமாரசுவாமிப் புலவர் அவர்கள் மீது உள்ள குரு பத்தியை புலவர்மணி காட்டுகின்றார்.

புலவர் அவர்கள் 09–03–1922ல் இறைவனடி சேர்ந்தார். தமிழ் கூறும் நல்லுலகம் சோகக் கடலில் ஆழ்ந்து கிடந்தது. தனது நல்லாசிரியரின் மரணச் செய்தியை அறிந்த புலவர்மணி அவர்கள் மிகவும் மனம் கலங்கிய நிலையில் பின்வரும் செய்யுளைப்பாடி மன அமைதி பெற்றார். இப்பாடல் தனது ஆசிரியப் பிரானுக்கு புலவர்மணி அவர்கள் செலுத்திய இறுதி அஞ்சலியாகவும் அமைகின்றது எனலாம்.

சுன்னைக் குமாரசுவாமிப்புலவர் பிரான்
இன்னிலம் விட்டேகினா ரென்றுரைத்தார்– என்னே
இனியாரிவனைப்போ
லெவ்விதத்திலேனும் இனிவரமாட்டாரென் செய்வோம்"

நாவலர் காவிய பாடசாலையில் புலவர்மணி அவர்களுக்கு குருவாக விளங்கிய இன்னொரு பெரியாரைப் பற்றியும் குறிப்பிடுவதில் பெருமையும் மனநிறைவும் அடைகின்றேன். அவர்தான் புன்னாலைக் கட்டுவன் வித்துவான் சி.கணேசையர் அவர்கள். இவர் 1878ம் ஆண்டு பிறந்தவர். இளமைக்கல்வியை புன்னாலைக் கட்டுவன் திரு. ச.கதிர்காம ஐயரிடம் பெற்றார். பின்னர் தமிழ், இலக்கண, இலக்கியங்களை சுன்னாகம் முத்துக்குமாரசாமி அவர்களிடமும் பாடம் கேட்டவர்.

ஈழநாட்டுத் தமிழ் புலவர் சரிதம் என்ற நூலை 1939ம் ஆண்டு வெளியிட்டார். குமாரசாமிப் புலவர் சரிதம், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், பொருளதிகாரம் ஆகியவற்றிக்கு நச்சினார்க்கினியர், பேராசிரியர், சேனாவரையர் முதலியோர் எழுதிய உரைகளுக்கு, விளக்கவுரை எழுதிய பெருமைக்குரியவர். பல பிரபந்தங்களின் ஆசிரியர். இப்பிரபந்தங்கள் மருதடிவினாயகர் என்ற பெயரில் நூலாய் வெளிவந்துள்ளது. இவர் ஒரு சிறந்த உரையாசிரியர். இரகுவம்சத்தின் முதற்பகுதிக்கு உரை செய்துள்ளார்.

1952ஆம் ஆண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் 29வது ஆண்டுவிழா யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்றது. சுத்தானந்த பாரதியார் தலைமையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மகாவித்துவான் கணேசையர் அவர்கட்கு வித்துவசிரோமணி என்ற பட்டம் வழங்கப்பட்டது. பண்டிதமணி க.சு. நவநீதகிருஷ்ண பாரதியார், வித்துவான் ந. சுப்பையாபிள்ளை, மட்டக்களப்பு புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை முதலியோரும் விழாவில் கௌரவிக்கப்பட்டனர். பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், அறிஞர் தி. சு. நடேசபிள்ளை முதலிய சான்றோர்கள் விழாவில் கலந்த சிறப்பித்தமை, விழாவை இன்னும் பொலிவுபெறச் செய்தது.

வித்துவசிரோமணி கணேசையர் அவர்களின் 80வது ஆண்டு நிறைவு விழாவில் அவரைப் பாராட்டிப் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பாடி வழங்கிய பாடல்களில் இரண்டு கீழே தரப்படுகின்றது.

1. நூல்நிலையம் குருவாக நூற்பொருளின்
மேற்பரப்பின் நுனியில் நின்றே
கால்மதியும் அறியாமே கலைவளர்க்கும்
குழுமலிந்த காலமீதில்
நூலிது நூற் பொருளீது நுவல்முறையீ
தென அவற்றின் நுண்மை காட்டி
மாலகற்றும் ஆசிரிய பரம்பரையின்
விளக்கமென வயங்கி நின்றோன்.

2. எண்பதுநல் யாண்டு கழிந்திறப்பளவும்
மாணியென இருந்த தூயோன்
உண்பதுவும் தமிழ்ச்சுவையே உயிர்ப்பதுவும்
தமிழுயிர்ப்பே உளஞ்சேரன்பின்
நண்பதுவாய்ந் தான்றவிந்தே அடங்குநல்லோன்
நடைபயின்றே நலஞ்சே ருள்ளப்
பண்பதிலே பழகு மின்பப் பேறு பெற்றோர்
கொடுத்துவைத்த பயன் பெற்றாரே.

வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்களுக்கு பொற்கிழி வழங்கும் வைபவம் 1938இல் நடைபெற்றது. விழாக்குழுவின் இணைச் செயலாளர்களில் ஒருவராய் பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் விளங்கினார். இவ்வைபவத்தில் விபுலானந்த அடிகள், பன்மொழிப்புலவர் சுவாமி ஞானப்பிரகாசர், அறிஞர் க. நடேசபிள்ளை முதலிய சான்றோர்களும், இன்னும் பலரும் கலந்து விழாவைச் சிறப்பித்தனர். கணேசையர் அவர்கள் 1985ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

தினபதி, சிந்தாமணிப் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் திரு. எஸ். டி. சிவநாயகம் அவர்கள் பண்டிதமணி அவர்களின் நினைவு மலருக்கு வழங்கிய பாராட்டு உரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"தெய்வத்தமிழை பிழை இல்லாமல் பேசுவது, எழுதுவது என்பது ஒரு தவம். இந்தத்தவத்திலே சிறந்த விளங்கிய ஒரு சிரேஷ்டர் நல்லை நகர்தந்த ஆறுமுகநாவலர். இலக்கணச் சுத்தமாக அவர் பேசினார். எழுத்துப்பிழை இல்லாமல் அவர் நூல்களை வெளியிட்டார்.

அவருடைய இந்தத் தமிழ்த்துவமரபிலே வந்தவர் சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம் தமிழ் கற்று அறிஞராய் விளங்கியவர் பலர். அவர்களில் மூவர் குறிப்பிடத்தக்கவர்கள். ஒருவர் தொல்காப்பியத்துக்கு உரைகண்டவரான மகாவித்துவான் சி. கணேசையர் அவர்கள். மற்ற இருவரில் ஒருவர், இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் மூன்றாமவர் மட்டக்களப்பிலே தோன்றிய புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்.

இந்த இருவரும் ஒரு கொப்பிலே பூத்த இரு இலக்கிய மலர்கள். இவர்கள் இருவரும் ஒன்றாக ஒரு வகுப்பிலே பயின்றவர்கள். ஒரே சமயத்தில் குமாரசுவாமிப்புலவரிடம் பாடம் கேட்டவர்கள். பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழ்வசன நடையிலே ஈடு இணை அற்றவராக விளங்கினார். புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் கவிதை பாடுவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராகத் திகழ்ந்தார். ஒருவர் வடக்கிலும், மற்றவர் கிழக்கிலும் இருந்து நிறைவான தமிழ்ப்பணி ஆற்றினார்கள். இருவரும் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் விரிவுரையாளர்களாக இருந்து ஆயிரமாயிரம் தமிழ் ஆசிரியர்களை தமிழ் அறிஞர்களாக்கி வெளியேற்றினார்கள். இருவரும் மேடைப் பேச்சில் வல்லவர்களாக இருந்தார்கள். ஒருவர் அழகொழுகப் பேசினார். மற்றவர் ஆழமாகப் பேசினார். இறுதிக்காலம் வரை இந்த இருவரும் எண்ணத்தாலும், சிந்தனையாலும் இணை பிரியா இலக்கிய நண்பர்களாகவே வாழ்ந்தார்கள். ஒருவர் கந்தபுராணம், கம்பராமாயணம் பற்றி நூல்கள் எழுதினார். மற்றவர் பகவத்கீதையை வெண்பாவாகப் பாடினார். நான் மட்டக்களப்பில் இருந்த காலத்தில் சிறிது காலம் புலவர்மணி பெரிதம்பிப்பிள்ளை அவர்களிடம் நேரில் தமிழ் கற்கும் வாய்ப்புப் பெற்றவன். அதனால் புலவர்மணியின் இணை அறிஞரான பண்டிதமணியிடமும் மிகுந்த பற்றும் பாசமும் எனக்கு வளரலாயிற்று.

(நன்றி: **பண்டிதமணி நினைவுமலர் 1989**)

நாவலர் காவிய பாடசாலை ஒரு தனித்துவமான தாபனம். சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் அதன் அதிபராய் விளங்கினார். இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, வித்துவசிரோமணி சி. கணேசையர், மட்டக்களப்பு புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை ஆகியோர் குமாரசுவாமிப்புலவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ்ந்தவர்கள். நன்கு தமிழ் செய்தவர்கள்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்னும் திருமூலர் வாக்கியத்திற்கு இலக்கணமாய் வாழ்ந்த தமிழ்ச்சைவச்சான்றோர் வரிசையைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.

# சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள்

– திரு. ப. சிவபாதசுந்தரம் –

தெய்வத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பணிபுரியும் நோக்கத்துடன் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் 1946ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கல்கி ஆசிரியர் திரு.இரா. கிருஷ்ணமூர்த்தி, திரு.ம. பெரியசாமி தூரன், சென்னை அரசாங்கத்தின் கல்வி அமைச்சராக விளங்கிய திரு.ரி.எஸ். அவிநாசலிங்கம் செட்டியார் முதலியோர், இக்கழகத்தின் முன்னோடிகளாக விளங்கினர். பாரதநாட்டுத் தமிழ் அறிஞர்களுக்கும் ஈழநாட்டுத் தமிழ் அறிஞர்களுக்கும் இடையில் நல்லுறவை வளர்த்தல், தமிழ் விழாக்களை ஏற்பாடு செய்தல், தமிழில் கலைக்களஞ்சியத் தொகுதிகளை வெளியிடுதல் என்பன இக்கழகத்தின் நோக்கங்களாகும்.

இதற்கமைய, சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆண்டு தோறும் தமிழ் நாட்டில் முக்கியமான இடங்களில் தமிழ் விழாக்களைச் சிறப்பான முறையில் நடத்திவந்துள்ளது. இதன் முதலாவது தமிழ் விழா 1948ஆம் ஆண்டில் மதுரையில் நடைபெற்றது. அதன் இரண்டாவது தமிழ்விழா 1949ஆம் ஆண்டில் திருவாதூரில் நடைபெற்றது. மூன்றாவது தமிழ் விழா சேர மண்டலத்தில் உள்ள கோயம்புத்தூரில் 1950ஆம் ஆண்டு நடந்தது. இந்த விழாவிற்கு இலங்கையிலிருந்து பல அறிஞர்கள் சென்றார்கள். உதவிக் கல்வி அமைச்சராய் இருந்த திரு. க. கனகரெத்தினம் அவர்களும் விழாவில் பங்குபற்றினார். இவ்விழாவிற்கு மட்டக்களப்பில் இருந்து புலவர் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பேச்சாளர்களில் ஒருவராக அழைக்கப்பட்டார். திரு.க. கனகரெத்தினம் அவர்களின் முயற்சியால் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் நான்காவது தமிழ் விழாவை இலங்கையில் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

திரு.இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், திரு.ம. பெரியசாமி

துரன் அவர்களும், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் இணைச் செயலாளர்களாக விளங்கினர். இவர்கள் இருவரும் 1950ஆம் ஆண்டு ஆவணி மாதம் இலங்கைக்கு வந்தனர். யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஆவணிமாதம் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை திரு.சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமையில் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நான்காவது தமிழ் விழாவை இலங்கையில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் வரவேற்புக் குழு செயற்குழு, மலர்க்குழு ஆகியன தெரிவு செய்யப்பட்டன. கொழும்பு, மட்டக்களப்பு, திருமலை முதலிய இடங்களில் உபகுழுக்கள் நியமிக்கப்பட்டன.

நான்காவது தமிழ்விழா, 1951ஆம் ஆண்டு சித்திரை மாதம் 29ஆம், 30ஆம் திகதிகளிலும், வைகாசிமாதம் முதலாம் திகதியும், யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் அழகாக அமைக்கப்பட்ட விபுலானந்தர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. திராவிட சிற்ப முறையில் மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. தெய்வத் தமிழ் மொழிக்கு உழைத்த தமிழகப் புலவர்களின் படங்களும், ஈழநாட்டுப் புலவர்களின் படங்களும் விழா மண்டபத்தினை அலங்கரித்தன.

விழாவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிஞர்களும், ஈழநாட்டு அறிஞர்களும் உரையாற்றினர். தமிழ்விழா இலக்கியப்பகுதி, விஞ்ஞானப் பகுதி, வரலாற்றுப் பகுதியென மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

விழாவில், முதல்நாள் நிகழ்ச்சிக்கு சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் ஆர்.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார். இரண்டாம் நாள் நிகழ்ச்சி, புதுடில்லி தேசிய பௌதீக விஞ்ஞான ஆய்வுகூடத்தின் தலைவர் கலாநிதி கே.எஸ். கிருஷ்ணன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் பரமேஸ்வராக்கல்லூரி அதிபர் திரு.சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றன. சென்னை சுதேச மித்திரன் பத்திரிகையின் ஆசிரியர் திரு. சி. ஆர். சிறிநீவாசன் அவர்கள் தமிழ்விழாவின் பொதுத் தலைவராய் இருந்து சிறப்பித்தார்.

வரவேற்புக்குழுத் தலைவர் திரு.சு. நடேசபிள்ளையவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். கலாநிதி கே.எஸ். கிருஷ்ணன் அவர்கள் சம்பிரதாய பூர்வமாய் தமிழ் விழாவினை ஆரம்பித்து வைத்தார்.

தமிழ்விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலைக் காட்சி திருக்கேதீஸ்வர ஆலயத்திருப்பணிச் சபைத் தலைவரும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளருமான சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கலைக்காட்சியைக் கண்டு களித்தனர். நான்காம் தமிழ்விழா சார்பாக விழாமலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. தென்னக அறிஞர்களும், ஈழத்தறிஞர்களும், மலரை அணிசெய்துள்ளனர். திரு.சு. நடேசபிள்ளை, முதலியார் செ. சின்னத்தம்பி, வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் சு. அம்பிகைபாகன் முதலியோர் மலர்க்குழுவில் அங்கத்துவம் வகித்தனர்.

விழாவின் முதல்நாள் அன்று, பேராசிரியர் ஆர்.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமையில் மட்டக்களப்புத் தமிழகத்தைச் சேர்ந்த புலவர் ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் "கம்பன் நாட்டிய தமிழ் நாகரிகம்", என்ற பொருளில் உரையாற்றினார். அவரை அடுத்து வண. பிதா. தனிநாயக அடிகளார் "சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகள்", என்னும் பொருளில் பேசினார். தனிநாயக அடிகளாரை அடுத்து முதுதமிழ் புலவர் திரு. மு.நல்லதம்பி அவர்கள் "கண்ணீர் பெருக்கிய கலித்தொகை", என்னும் தலைப்பில் உரையாற்றினார். இவரை அடுத்து சிலம்புச் செல்வர் திரு.ம.பொ. சிவஞானகிராமணி அவர்கள் "சிலம்பு கூறும் செய்திகள்" என்ற விடயத்தில் தனக்கே உரித்தான பாணியில் பேசி சபையோரை மகிழ்வித்தார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் "காட்சி மூலம் கல்வி என்ற பொருளில் லேடி கொலிங்ரன் கல்லூரியின் பௌதீகவியல் பேராசிரியை திருமதி. இராஜேஸ்வரி அம்மையார் அவர்கள் பேசினார். இவரைத் தொடர்ந்து முன்னாள் பிரதிக்கல்வி வித்தியாதிபதியும், இலங்கைப் பல்கலைக்கழக கல்விப் பகுதி விரிவுரையாளருமாகிய திரு. கே.எஸ். அருள்நந்தி அவர்கள் வாழ்க்கையும், உளத்தத்துவமும்" என்னும் பொருளில் உரைநிகழ்த்தினார். கொழும்பு பல்கலைக்கழகத்தின்

பௌதீகவியல் பேராசிரியர் திரு. ஆறுமுகம் விஸ்வலிங்கம் மயில்வாகனம் அவர்கள் "மக்களும் விஞ்ஞானமும்", என்ற தலைப்பில் பேசினார்.

30.04.51ஆம் திகதி திங்கட்கிழமை மாலை நிகழ்ச்சிகள் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமையில் ஆரம்பமாயின. "தமிழர் பண்பாட்டின் வளர்ச்சி", என்ற பொருளில் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் உரையாற்றினார். இவரைத்தொடர்ந்து "இஸ்லாமியரும் தமிழும்", என்னும் தலைப்பில் கொழும்பு ஷாகிறாக் கல்லூரி ஆசிரியர் ஜனாப். எஸ்.எம். கமால்தீன் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார். தமிழகத்தைச் சேர்ந்த திரு. ராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் "தென்னிந்தியாவும் தமிழும்", என்னும் விடயம் பற்றிப் பேசினார். 1951ஆம் ஆண்டு வைகாசிமாதம் முதலாம் திகதி நடைபெற்ற விழாவில் பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் "தமிழ்நுதலியது களவு, களவியல் நுதலியது தமிழ்" என்னும் பொருளில், அழகொழுகப் பேசி சபையோரை மகிழ்வித்தார்.

பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன் அவர்கள், மேற்படி விழாவில் "திருக்குறள்" பற்றி உரையாற்றினார். இவரை அடுத்து இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் மகேஸ்வரி கந்தையா அவர்கள் "சமய இலக்கியங்கள்" என்னும் விடயத்திலும், யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி தமிழ் பண்டிதர் வித்துவான் க. வேந்தனார் அவர்கள் "வாழும் இலக்கியம்" என்னும் பொருளிலும் பேசினார்கள்.

நான்காம் தமிழ்விழாவில் சிறந்த தமிழ் இலக்கிய நூல்களை எழுதி வெளியிட்டவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு.ரி.எஸ். அவிநாசலிங்கம் செட்டியார் அவர்கள் பரிசில்களை நூலாசிரியர்களுக்கு வழங்கினார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது தமிழ்விழாவின் போது தமிழ் மக்கள் பெருமைப்படக் கூடிய ஒரு நிகழ்ச்சி புன்னாலைக் கட்டுவன் வித்துவ சிரோமணி சி. கணேசையர் அவர்கள் கௌரவிக்கப் பட்டமையாகும். வித்துவான் கணேசையர் அவர்களின் இலக்கண, இலக்கியப் பெருமைகளைப் பாராட்டி பேராசிரியர் ஆர்.பி. சேதுப்பிள்ளை

அவர்கள் பேசினார். கலாநிதி கே.எஸ். கிருஷ்ணன் அவர்களும் திரு.ரி.எஸ். அவிநாசலிங்கம் செட்டியார் அவர்களும், வித்துவ சிரோமணி கணேசையர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்த செயல் தமிழ் மக்களின் உள்ளங்களை எல்லாம் நெகிழச் செய்தது.

இசைக் குயில் எம்.எஸ். சுப்புலெட்சுமி அவர்களின் இசை நிகழ்ச்சி விழாவிற்கு சிகரம் வைத்தாற் போல் விளங்கியது.

"இறவாத தமிழ் நூல்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்பது அமரகவி பாரதியாரின் கூற்றாகும். அவருடைய எண்ணம் நிறைவுபெற சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் தமிழில் சிறந்த நூல்களை எழுதியவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டியதோடு அல்லாமல், பத்துத் தமிழ் கலைக்களஞ்சியத் தொகுதிகளை வெளியிட்டுள்ளது. ஈழத்தமிழ் அறிஞர்கள் பலர் கலைக் களஞ்சியத்திற்குக் கட்டுரைகளை எழுதினார்கள். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் "ஆறுமுகநாவலரைப்" பற்றிக் கட்டுரை எழுதினார். அவருடைய நண்பரும், உடன் கற்றவருமாகிய புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் "விபுலானந்த அடிகளாரைப்" பற்றிக். கட்டுரை எழுதினார். திரு. மா. பீதாம்பரன் அவர்களும் கலைக்களஞ்சியத்திற்குப் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

திரு.ம.ப. பெரியசாமி தூரன் அவர்கள் கலைக்களஞ்சியத்தின் ஆசிரியராய் விளங்கினார். தமிழ்க்கலைக்களஞ்சியத்தை வெளியிடும் பணியை சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் 1948ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டது. இப்பணியில் அயராது உழைத்த திரு. தூரன் அவர்களுக்கும், சென்னைத் தமிழ் வளர்ச்சிக்கழகத்திற்கும் தமிழ் மக்கள் என்றும் கடமைப்பட்டவர்கள்.

வாழ்க அதன் தமிழ்ப்பணி.

# புலவர் பெரியதம்பிப்பிள்ளை

– ஈ. சிவானந்தநாயகம் –

மட்டுநகர் மாதா மாண்புடையாள். அறிஞர்கள் பலரை ஈன்றெடுத்த பெருமை அவளுக்கு. முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் தோன்றிய அதேவேளை பலர் அவருக்குத் துணையாய் நின்று தமிழும், சைவமும், கல்வியும் வளர்க்கத் தோன்றினர். அவர்களுள் முதன்மை பெறுவார் முதுபெரும் அறிஞர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள். அன்னாரின் பிறப்பிடம் மட்டுநகருக்குத் தெற்கே செந்நெல் வளங்கொழிக்கச் செந்தேனும் பாலும் செறிந்து வழிந்தோடச், செந்தமிழ்த் தெய்வம் குமரக் கடவுள் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் பழந்தமிழ்க் கிராமம் மண்டூர். பல்வேறு அறிஞர்கட்குப் பிறப்பிடமாய் அமைந்த திருவுடை ஊர் மண்டூர். அங்கே பண்டிதர்கள் பலர் தோன்றிடினும் பண்டிதர் என்றால் அப்போதும் இப்போதும் ஏன் எப்போதும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களையே குறிக்கும்.

"பண்டிதர்" வந்திருக்கிறார் என்பார்கள். உற்றுக்கவனித்தால் அவருக்கே உரித்தான சிம்மக்குரல் ஒலிக்கும். நெடிதுயர்ந்த தோற்றம். நிறம் கறுப்பானாலும் அவர் கறுப்பில்லை. அகன்ற நெற்றி. துகில் வெள்ளை வேட்டி. அதன்மேல் அழகுக்கு அழகு செய்யும் வாலாமணி. அதுதான் (நஷனல்) தேசிய உடை. தோளில் இருபுறமும் தொங்கி நிற்கும் சால்வை. கால்களில் தோற்செருப்பு. கையில் ஒரு குடை. முகத்தில் அறிவு முதிர்ச்சியினால் ஏற்பட்ட மிடுக்கு. உதட்டில் குமிண் சிரிப்பு. இவ்வாறு க்ண்டோரைக் கவரும் கவின்மிகு தோற்றம். இப்படி அவர் தன் பிறந்தகம் மண்டூரில் வீதிகளில் வரும்போது செந்தமிழும், சைவமும் சேர்ந்திணைந்தே செல்லும். இனசனத்தாரைக் கண்டால் வாஞ்சையோடு குசலம் விசாரிப்பார். அன்பொழுகப் பேசுவார். ஊரவர்கட்குப் "பண்டிதர் விசாரிச்சிற்றுப் போறார்" என்று சொல்வதில் பெருமை. இன்ன பலவாக யாம் எவரிடத்தும் அரிதாகக் காணும் பண்புடை தமிழ்க் குரவர் அவர்.

இப்பெருமகனார் மண்டூர் முருகன் ஆலய வண்ணக்கராகக் கடமையாற்றிய திரு. சோ. ஏகாம்பரபிள்ளை அவர்கட்கும், அவர்தம் அன்புத் துணைவியார் சின்னத்தங்கம் அம்மையாருக்கும் மூத்த புதல்வராக 1899ஆம் ஆண்டு தை மாதம் எட்டாம் திகதி பிறந்தார். இவர் தம் ஆரம்பக் கல்வியை மண்டூரிலேயே மேற்கொண்டார். அவ்வேளை சூடாமணி நிகண்டு, பாரதம், கந்தபுராணம், திருச்செந்தூர் புராணம் என்பனவற்றைக் கற்றுத் தெரிந்துகொண்டார். கல்முனையில் இன்று பழம்பெரும் கல்விக் கூடங்களில் ஒன்றாக விளங்கும் உவெஸ்லி உயர் பாடசாலையென மாறிய லீஸ் பாடசாலையில் ஆங்கிலக் கல்வி கற்றார். இங்கே அவருக்குப் பல ஆங்கில ஆசிரியர்களைக் கவரும் வாய்ப்புக் கிட்டியது. அக்காலத்தில் தனது தோற்றம் – மண்டூரிலிருந்து கல்முனைக்கு அவர்கள் பயணம் – பள்ளிப்படிப்பு என்பனபற்றி அவரே தனது "உள்ளதும் நல்லதும்" எனும் நூலில் அழகு சொட்டக் கூறியிருப்பது கற்போர்க்குக் களிப்பளிக்கும்.

அவரது ஆங்கிலக் கல்வியைத் தொடரமுடியாத அளவிற்கு நோய்வாய்ப்பட்டார். பின்னர் மண்டூருக்கே திரும்பினார். முருகனுறை திருப்பதியானதால் பல்வேறு வகையினரான மக்கள் மண்டூருக்கு வருவர். வருடாந்த உற்சவம் ஆவணி மாதத்தில் நடைபெறும். அவ்வேளை எண்டிசையிலுமிருந்து பக்தர்கள் வருவர்; அறிஞர்கள் வருவர். அவர்கள் வருங்காலை வண்ணக்கர் வீடு, விதானையார் விடு, உடையார் வீடு என்று இப்படித்தான் தங்குவர். 1917ஆம் ஆண்டு அப்படி வந்து தங்கும் யாழ்ப்பாணம் மட்டுவிலைச் சேர்ந்த புத்தக வியாபாரி ஒருவர் பண்டிதர் மகாலிங்கசிவத்திடம் தமிழ் கற்க ஏற்பாடு செய்ய, "பெரியதம்பி" யாழ்ப்பாணம் சென்றார். நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை காவிய பாடசாலையிற் சேர்ந்தார். அங்கே சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரின் மாணாக்கராய் அமர்ந்து கந்தபுராணம், மகாபாரதம் என்பன கற்றுத் தேறினார். இப்பாடசாலையிலேயே தம்மோடு மட்டுவில் பண்டிதமணி கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் கற்றதாகக் கூறுகிறார். இவர் புலவர்மணிக்கு நிகராக யாழ்நகரில் பெரும் புகழோடு வாழ்ந்தவராவார். இக்காலப் பகுதியில் பல அறிஞர்களோடு பழகும் வாய்ப்பு புலவர்மணிக்கு ஏற்பட்டது. அத்தகையோருள் ஒருவரே – பின்னர் சுவாமி விபுலானந்தர்

எனத் துறவு மேற்கொண்ட மட்டுநகர் - காரைதீவைச் சேர்ந்த பண்டிதர் மயில்வாகனன் ஆவார். இருவரும் அங்கு யோகர் சுவாமி எனும் துறவியிடம் தொடர்புகொண்டு திருப்புகழ் திருமுருகாற்றுப்படை என்பவற்றைப் பாடுவர்.

பண்டிதர் மயில்வாகனரின் மேலான நட்பும் அறிவூட்டலும் கவிதையாக்கத்தில் புலவர்மணியை ஈடுபடச் செய்தது. இதன் பயனாக மண்டூர் முருகன் திருமுன்னே "மண்டூர்ப்பதிகம்" உருவாயிற்று.

"மலர்க் கிரண மெறிகோடி சூரியர் மழுங்கவொளி
வளர்திரு முகங்களாறும்
மனமாரப் பாலுண்ட கனிவாயி னோடிந்த
மகிதலம் மருட்டு நகையும்
மலர்க்கடம் பாரமோராட வடமுந்திகழும்
மாமேரு வொத்த மார்பும்
மலைதோறு மாடல்புரி மலர்போலிலங்கிவரு
மாண்புற்ற பாத யுகமும்
கல னெனும் பாடகம் போலெழுமையுந் தொடர்
கன்ம பாவங்கொல் வேலும்
கலனென ஒளிர்துவச மதிலே விளங்கிடு
காற்படைச் சேவலுடனே
வலமருவு நீலமயில் மீதேறி ஏழையென்
மனக்குறைகள் தீர்க்க வருவாய்
மதியேறு பணியேறு நதியேறு வேணியன்
மைந்த மண்டூர்க் கந்தனே"

இப்பதிகத்திற்கு பண்டிதர் மயில்வாகனார் ஒரு சிறப்புப் பாயிரம் எழுதினார். இதனால் புலவர்மணியினது பதிகம் மதிப்புப்பெற்றது.

இவ்வாறான ஊக்கலினாலும் யோகர் சுவாமிகளின் ஆசியினாலும் இவரது கவிதா சக்தி மேலும் வளரலாயிற்று. இக்கட்டத்திலேயே பண்டிதர் மயில்வாகனனார் யோகர் சுவாமிகளது ஆசிப்படியும் எண்ணப்படியும் துறவு மேற்கொள்ள இந்தியா பயணமானார். நமது பண்டிதரும் காவிய பாடசாலையைவிட்டு சாவகச்சேரியில் ஆசிரியப்

பணியை மேற்கொண்டார். யாழ்ப்பாண மக்களைச் சாதி வெறி பிடித்து உலுப்பிக்கொண்டிருந்த காலமது. இயல்பாக சமத்துவவாதியான புலவர்மணிக்கு ஆறுமுகம் என்றொருவர் நண்பர். அவர் பெருங்கலைஞர். இதனைப் புலவர்மணியாரது ஏனைய உயர்சாதி நண்பர்கள் விரும்பவில்லை. பலவாறாகக் கண்டித்தனர். இந்நிகழ்வு தன்வாழ்க்கையில் பெருமாற்றத்தை உண்டுபண்ணியதாக அவரே குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தேற்பட்ட கசப்பான சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட புலவர்மணி கிறிஸ்தவ மதத்தில் விசுவாசங்கொள்ளலானார். இந்துக்களிடையே காணப்பட்ட தீண்டாமை நோயே இதற்குக் காரணமென அவரே கூறியுள்ளார். பின்னர் 1923ஆம் ஆண்டு இந்தியாவில் பசுமலை வேத சாஸ்திரப் பாடசாலைக்குப் போதகர் பயிற்சிக்காக அனுப்பப்பட்டார். அவ்வேளையிற் பல கிறிஸ்தவ பாடல்களை இயற்றியுள்ளார். இவ்வேளையிலேயே காந்தியடிகளின் சுதந்திரப் போராட்டம், உண்ணாவிரதம் என்பனபற்றியறிந்து அதனாற் கவரப்படார். அதன் பயனாகத் தேசிய உணர்வு மேலிட,

"இலங்கை மணித்திரு நாடெங்கள் நாடே – இந்த
இனிய உணர்ச்சி பெற்றால் இன்ப வீடே"

எனும் பாடலை இயற்றித் தமிழ்கூறு நல்லுலகத்திற்கே தன்னை அறிமுகப்படுத்தினார். அக்காலப் பாடநூலான "பாலபோதினி"யில் இப்பாடல் இடம்பெற்றது. பலரும் பாடியின்புற்றனர்.

இந்தியாவிலிருந்த வேளை – மதுரை மங்கம்மாள் சத்திரத்தில் தங்கியிருந்த ஈழத்துத் துறவி – சுவாமி விபுலாநந்தரைக் கண்டு, அவரோடு தொடர்புகொண்டார். அந்நிகழ்வினை அவரே கூறுவார்.

"பரம ஹம்சர் கைப்பட்ட நரேந்திரர்போல் ஆகிவிட்டேன் நான் பரிசதீட்சை கிடைத்துவிட்டது. இனி நான் வேறு மனிதன்."

1925ஆம் ஆண்டு மீண்டும் மண்டூர் வந்தார். திருமண ஏற்பாடுகள் நடைபெற்றன. குருக்கள் மடத்தில் கோயிற் திருப்பணி செய்துவந்த நற்குடும்பப் பெண்ணான ந்ல்லம்மா என்பவரை மனைவியாக ஏற்றுக்கொண்டார். பின்னர் 1926 இல் சுவாமி

விபுலாநந்தரின் அழைப்பினை ஏற்றுத் திருமலை இந்துக் கல்லூரியில் தமிழாசிரியராய் அமர்ந்தார். பகலிலே பண்டிதராகவும், இரவில் மாணவராகவும் - சுவாமிகளிடம் பாடங்கேட்டுவந்தார். அவ்வேளை சுவாமியின் வேண்டுகோளுக்கமைய. "சீவகசிந்தாமணி", "நாமகள் இலம்பகம்" ஆகியவற்றை நாடகமாக எழுதினார். அவை "விவேகாநந்தன்" எனும் பத்திரிகையில் வெளிவந்து பின்னர் நூலுருப் பெற்றன.

திருமலைக்குக் காந்தியடிகள் வந்தபோது, விபுலாநந்தரின் ஆசியுடன் - வரவேற்புப் பாவினை இவரே இயற்றிப் பெருமை பெற்றார். அதில் ஒரு பாடல்

"சாந்தம் பொலிமுகமும் தண்ணளிசேர் கண்ணிணையும்
வாய்ந்த கதராடை வடிவழகும் - சேர்ந்து மகான்
காந்தியென ஓர் வடிவும் கண்முன்னர் நின்றதால்
சாந்தி எமக்கின்றுதான்."

1930 ஆம் ஆண்டு, சுவாமிகளின் சொல்லையும் மீறி மட்டுநகர், அர்ச்-அகுஸ்தீனார் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியேற்று பல புகழ்பெற்ற ஆசிரியர்களை உருவாக்கினார். அங்கிருந்து கொண்டே அர்ச்-சிசிலியாக் கல்லூரியிலும் உயர் வகுப்பினருக்குத் தமிழ் கற்பித்தார். பாடசாலை வேலையோடு வெளியாருக்கும் - கம்பராமாயணம், திருக்குறள் வகுப்புக்களையும் நடாத்தினார். 1935ஆம் ஆண்டில் ஆசிரியத் தொழிலிலிருந்து ஒதுங்கி மண்டூரில் உபதபாலதிபராகப் பணிபுரிந்தார். அதைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக 1947இல் மட்டுநகரில் இன்று பிரபல கல்லூரியாகத் திகழும் இந்துக் கல்லூரியான, அரசினர் கல்லூரியில் ஆசிரியராய் அமர்ந்து இளைப்பாறும் வரை பல நல்மாணாக்கர்களை உருவாக்கினார்.

இக்காலப் பகுதியில் அவரது அறிவு, சேவை என்பனவற்றைப் பாராட்டிப் பல்வேறு சிறப்புப் பட்டங்கள் அவரை வந்தடைந்தன. அவற்றுள் பண்டிதமணி, மதுரகவி, சித்தாந்த ஞானபானு, கவியரசு என்பன சிலவாம். இவற்றுள் தம் உள்ளங் கவர்ந்த நண்பர்களால், 1951ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட "புலவர்மணி"யையே இவர் விரும்பி

அவரது பெயருடன் இணைத்துக்கொண்டார். இதனை அவரே சொல்வார்.

"உள்ளூர்ச் சுமையாதலால் இதை இலேசாகத் தாங்குகின்றேன். புலவர்மணி மக்கள் மத்தியில் வாழ்கின்றது"

இன்றும் அவர் புலவர்மணி எனவே மக்களால் அன்பாக நினைவுகூரப்படுகின்றார்.

ஆசிரியத் தொழில் புரிந்தகாலை, தமிழ் கற்றதனால் தான் பெற்ற இன்பத்தைப் பிறருக்கும் வழங்கவென - பல்வேறு நூல்களை ஆக்கினார். "பகவத்கீதை வெண்பா" - கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்னும் மூன்று பாகங்கள் மிகச் சிறப்புவாய்ந்தவை. அவ்வப்போது சில வைபவங்கள் பற்றியும், சில அறிஞர்கள் பற்றியும் இவர் இயற்றிய பாடல்கள் என்றும் படித்து இரசித்து இன்புறற்பாலன. அவற்றைத் திரட்டி, "புலவர்மணி கவிதைகள்" எனும் தலைப்பில் வெளியிட்டுள்ளார். இப்பாடல்கள் குருபக்தி, இன ஒற்றுமை, நகைச்சுவை என்பனவற்றை வெளிப்படுத்துவனவாம்.

குருபக்தி:-

பண்டித சிரோமணிநற் பாலியசன் யாசிசெஞ்சொற்
கொண்டல்கவி இன்பம் குணக்குன்றம் - மண்டழல்போல்
தூய விபுலாநந்த சோதி மலரடிக்கே
நேயமெலாம் வைத்தேன் என் நெஞ்சு.

இன ஒள்றுமை வேண்டிப் பாடியவை:-

சிங்களமும் செந்தமிழும் சேர்ந்துசம மேயிலங்கை
எங்கும் அரசமொழி யென்னவே - துங்கமுடன்
ஆட்சி புரியவழி யாக்குவதே யெல்லாரும்
மாட்சியுடன் வாழும் வழி.

இருதயத்தின் ஈரிதழ்போல் இங்குதமிழ் முஸ்லீம்

ஒருவயிற்றுப் பாலகர்போ லுள்ளோம் – அரசியலிற்
பேராசை கொண்டோர் பிரித்துநமை வேறாக்கி
ஆராயார் செய்வர் அழிவு.

"ஐயோ, இவர்கள்பாவம்" – என்பது போல் நகைச்சுவை ததும்ப:-

நல்லாய் இலண்டன் நகர்வரையும் சென்றொருவன்
பல்கலைகள் நன்கு பயின்றாலும் – சொல்லுங்கால்
தன்னூர் நிலையறிந்து தானொழுகானாகிவிடின்
என்ன பயனாகு இவர்க்கு.

இப்பாடல்கள் யாவும் வெண்பாவடிவில் அமைந்துள்ளதைக் கவனிக்கலாம்.

வெண்பா இயற்றுவதில் ஒப்பாரும், மிக்காருமின்றித் திகழ்ந்தவர் புலவர்மணி. நம்நாட்டில் "வெண்பாவிற் புகழேந்தி" எனும் வாசகம் போய் – "வெண்பாவிற் பெரியதம்பி" எனும் வாசகம் பரவலாயிற்று. "பகவத் கீதை வெண்பா" இதற்குச் சான்று பகரும். இதனைப் பாராட்டி 1963ஆம் ஆண்டு இவருக்குச் சாகித்திய மண்டலப்பரிசு கிடைத்தது.

காலவோட்டத்தின் சூழலினால் சுவாமி விபுலாநந்தரைப் பிரிந்திருந்த புலவர்மணி – 1944ஆம் ஆண்டு சுவாமிகள் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையிலிருந்த போது, அதனை அறிந்து, "சுவாமிகள் சுகமே மீள்க. அவர் பல்லாண்டு வாழ்க" எனும் பொருள் பொதிந்த "விபுலானந்தர் மீட்சிப் பத்து" இயற்றிச் சுவாமிகட்கு அனுப்பினார். அவை இன்றும் படித்து இன்புறத்தக்கன.

அத்தோடு நில்லாமல் தமது வாழ்க்கை வரலாற்றினைச் சுவைபட, அவருக்கே உரிய நடையில், நம்மோடு நேரிலேயே உரையாடுவதுபோல் – அழகு தமிழில் மிக இனிமையாக "உள்ளதும் நல்லதும்" எனும் தொடர் கட்டுரையாக எழுதினார். பின்னர் அத்தொடர் நூலுருவுக்குக் கொணரப்பட்டது. இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து வாழ்ந்துவந்த ஒரு அறிஞரது அனுபவங்களின் தொகுப்பான அந்நூல் அக்கால வாழ்க்கையைச் சித்தரிக்கும் பெட்டகமாக அமைவதைப் படிப்போர்

காணலாம். இக்கால இளைய தலைமுறையினர் படித்தறியவேண்டிய சுவையான நூல் இது.

இவ்வாறு எழுபந்தைந்தாண்டு இலக்கியப் பணிபுரிந்த புலவர்மணி இறைபதம் எய்தமுன்னர் தமது எண்பதாவது வயது நிறைவினைத் தமது இனசனத்தாரோடு இன்பமாகக் கொண்டாடினார். தொடர்ந்து அவரே கூறியதுபோல் – "19ஆம் நூற்றாண்டுப் பழம்பெட்டி" தளரத் தொடங்கியது. 1978ஆம் ஆண்டு – கார்த்திகை இரண்டாம் நாள் புலவர் மணி அவர்கள் தமிழ் மக்களைக் கண்ணீரில் ஆழ்த்திப் பூதவுடல் நீத்துப் புகழுடம்பெய்தினார்.

அவர் ஒரு சிறந்த நல்லாசிரியர், சிறந்த ஆராய்ச்சியாளர், சிறந்த கவிஞர், சிறந்த மேடைப்பேச்சாளர், சிறந்த சிந்தனையாளர், சிறந்த பக்தர் – எல்லாவற்றிற்கும் மேலாகச் சிறந்த பண்பாளர். வாழ்க "புலவர்மணி"யின் திருநாமம்.

# வித்துவசிரோமணிப் பட்டம்

கணேசையரவர்களின் தமிழ்மொழியறிவின் பெருக்கத்தை நன்கறிந்த தமிழறிஞர்களும், அவர்தம் நண்பர்களும், மாணவர்களும் அவர்களக்குத் தாமாகவே தகுதிநோக்கி அளித்த இயல்பான பட்டம் மகாவித்துவான் என்னும் பட்டமாகும். இதுபற்றியே மகாவித்துவான் என்று யாம் எஞ்ஞான்றும் அழைத்துவந்தோம். இதுவேயுமன்றி, அவர்களுக்கு யாழ்ப்பாணம், ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் அளித்த பட்டமும் ஒன்று உண்டு. சென்ற நந்தன ஆண்டு காத்திகைத் திங்கள் 16ஆம் நாளன்று (1-12-52) யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தார் அச்சங்கத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டுவிழாவுடன் 'விசேட பட்டமளிப்பு விழா' என்று ஒன்றையும் நடாத்தினார்கள். இதுவே அவர்கள் நிகழ்த்திய முதலாவது விசேஷ பட்டமளிப்பு விழாவாகும். இவ்விழாவில் மகாவித்துவான் கணேசையர் அவர்களுக்கு வித்துவசிரோமணி என்னும் பட்டத்தை வழங்கினார்கள். இவர்களே இச்சங்கத்தால் முதன் முதலாக இத்தகைய பட்டம் வழங்கப்பட்டவராவர். அதேகாலை அச்சங்கத்தார் வேறு சில அறிஞர்களுக்குஞ் சில பட்டங்களை வழங்கினர். அவர்களைப்பற்றிக் குறிப்பிடுவதும் ஈண்டைக்குப் பொருத்த முடையதாகலின், அவ்வாறு பட்டம் பெற்ற மற்றை மூவரையும் பற்றி ஒரு சிறிது கூறிவிடுவாம்.

### 1. மறைத்திரு. க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார்

அவர்களுக்கு இச்சங்கத்தாரால் 'புலவர்மணி' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. இவர் சுன்னாகத்திலுள்ள இராமநாதன் கல்லூரியிலும், திருநெல்வேலியிலுள்ள பரமேசுவராக் கல்லூரியிலும், இராமநாதன் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலும் தலைமைத் தமிழாசிரியராகக் கடமையாற்றியவராவர். இவர் இயற்றிய நூல்கள் 'உலகியல் விளக்கம்', 'பறம்புமலைப் பாரி', 'செழுங்கதிர்ச் செல்வம்', 'திருவடிக்கதம்பம்' என்பனவாம். இவர் மணிவாசகப் பெருமான் இயற்றியருளிய திருவாசகத்துக்கும் ஓர் உரை கண்டுள்ளார்.

2. **திரு. ஏ. பெரியதம்பிப்பிள்ளை**யவர்களுக்கு 'பண்டிதமணி' என்னும் பட்டம் வழங்கப்பெற்றது. இவர் சுன்னாகம், அ. குமாரசுவாமிப் புலவரவர்களிடங் கல்வி கற்றவர். விபுலானந்த அடிகளின் தொடர்பு பெரிதும் உடையவர். இயற்கையாகவே நல்ல கவிபாடுந் திறமை வாய்ந்தவர். இவர் இயற்றிய 'பகவத்கீதை வெண்பா' யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் இருபத்தெட்டாவது ஆண்டுவிழாவில் அரங்கேற்றப்பட்டது.

3. **திரு. க. சுப்பையபிள்ளை**யவர்களுக்குப் 'பண்டிதமணி' என்னும் பட்டம் வழங்கப்பெற்றது. இவர் மட்டுவில் உரையாசிரியர் திரு.ம.க. வேற்பிள்ளை அவர்களின் மாணவராவர். சென்னைப் பல்கலைக்கழகத்தாரால் நடாத்தப்படும் வித்துவான் பரீட்சையில் தேறியவர். வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியராகப் பல ஆண்டுகள் கடனாற்றியவர். வடமொழி யறிவும் வாய்க்கப்பெற்றவர். இவர் 'தஞ்சைவாணன் கோவை' சொக்கப்ப நாவலருரைக்கு ஆராய்ச்சிக் குறிப்புக்கள் எழுதியுள்ளார். நன்னூல் விருத்தியுரைக்கும் உரை விளக்கக் குறிப்புக்கள் எழுதியுள்ளார் என்ப. நிற்க.

இவர்களேயன்றி, மகாவித்துவான் கணேசையரவர்களோடு நெருங்கிய தொடர்புள்ள மற்றோர் அறிஞர் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையவர்களாவர். இவர் திருநெல்வேலி சைவாசிரிய கல்ாசாலையில் தமிழ்ப் பேராசிரியராகப் பல்லாண்டுகள் கடனாற்றி இப்போது இளைப்பாறியுள்ளார். இவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் நடாத்தப்படும் பண்டித பரீட்சையில் மிகப் பழங்காலத்திலேயே சித்தியெய்தியவர். சுன்னாகம். அ. குமாரசுவாமிப் புலவரவர்களிடமும் சைவத்திருவாளர் த. கயிலாயபிள்ளையவர்களிடமும் கல்வி கற்றவர். பலருக்குக் கல்வி கற்பித்து அவர்களைப் பண்டிதர்களாக்கியவர். இவர்தம் நண்பர்களும் மாணவர்களும் மற்றைய அறிஞர்களும் இவருக்கு அளித்த பட்டமே 'பண்டிதமணி' என்னும் பட்டமாம். இவர்களுக்கு இவருடைய மாணவரும் பிறரும் நிகழ்த்திய பாராட்டுவிழா சென்ற 29, 30-08-59ஆம் திகதிகளில் மிக்க சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவர்கள் மகாவித்துவான் கணேசைய

ரவர்களுக்கு நெடுங்காலமாக நல்ல உசாத்துணைவராக இருந்து வந்தவர்கள்.

ஏறக்குறைய எட்டு ஆண்டுகளுக்கு முன், 27,-11-50இல் இவ்வுலக வாழ்வை நீத்த மறைத்திரு. யா.தி. சதாசிவஐயரவர்களும் மகாவித்துவான் கணேசையரவர்களோடு நெருங்கிய தொடர்புற்றவர்கள், இவர், தமிழ், வடமொழி. ஆங்கிலம் என்னும் மும்மொழி அறிவும் உடையவர்; கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் எவ்.ஏ. (F.A) பரீட்சையில் முதற்பிரிவில் தேறியவர்; மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையில் தலைமையாசிரியராகவும், கந்தரோடை ஆங்கில வித்தியாசாலையில் ஆசிரியராகவும், 1910ஆம் ஆண்டு தொடக்கம் வித்தியாதரிசியாகவும், 1927ஆம் ஆண்டு தொடக்கம் பகுதி வித்தியாதரிசியாகவும் கடனாற்றியவர். இவர்கள் ஆரம்பித்த இரு பெரிய ஸ்தாபனங்களுள் ஒன்று ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கமாகும். மற்றையது சுன்னாகத்தில், மகாவித்துவான் கணேசையரவர்கள் தலைமையில் நடைபெற்ற பிராசீன பாடசாலை ஆகும். 'தேவி தோத்திர மஞ்சரி', 'இருது சங்கார காவியம்,' 'தேவி மானச பூசை அந்தாதி', 'பெருமாக்கடவைப் பிள்ளையார் இரட்டைமணிமாலை' என்பன இவர் இயற்றிய நூல்களாம்.

சுவாமி விபுலானந்தர் என்னுந் துறவுத் திருநாமத்தையும் பண்டித மயில்வாகனனார் என்னும் பூர்வாச்சிரமப்பெயரையும் உடையவராய் விளங்கிய பெரியாரும் இவர் காலத்திருந்த ஈழத்துப் புலவர் வரிசையிற் குறிப்பிடத்தக்கவராவர். இவர்கள் ஆங்கிலத்தில் இலண்டன் B.Sc. பரீட்சையிலும் தமிழில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் நடாத்தப்படும் பண்டித பரீட்சையிலும் சித்தியெய்தியவர். துறவு பூணுவதற்கு முன் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவும், மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பிரதமாசிரியர்ராகவும் கடனாற்றியவர். பிற்காலத்தில் இவர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே தமிழ்ப் பேராசிரியராகவும் இருந்து அருங்கடனாற்றினார்கள். சிலகாலம் 'பிரபுத்தபாரதம்' என்னும் ஆங்கிலத் திங்கள் இதழுக்கு ஆசிரியராகவும் விளங்கினார்கள். இவர்கள் இயற்றிய 'மதங்கசூளாமணி', 'யாழ்நூல்' என்பன இவர்களுக்கு அழியாப் புகழை ஈட்டித் தந்தன.

### தென்கோவை கந்தையாபிள்ளை அவர்கள்

மகாவித்துவான் கணேசையர் அவர்களோடு நெடுங்காலமாக மிக நெருங்கிய தொடர்பு பூண்டிருந்த மற்றொரு பெரியார் தென்கோவை பண்டிதர் திரு. ச. கந்தையாபிள்ளை அவர்களாவர். இவர் 1880ஆம் ஆண்டு ஆனி மாதம் கோப்பாயில் பரம்பரைப் பாண்டித்தியம் வாய்ந்த உயர்குடியில் திரு. சபாபதிப்பிள்ளைக்கும் காமாட்சியம்மையாருக்கும் புதல்வராகப் பிறந்தவர். சுன்னாகம், திரு. அ. குமாரசுவாமிப் புலவரவர்களிடம் கல்வி கற்றவர். ஆங்கிலங் கற்றவர். பத்து ஆண்டுகளுக்கு மேலாகக் கொழும்பிலுள்ள ஆங்கில ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக இருந்து தமிழாசிரியர்களைப் பயிற்றும் வகுப்புக்களை நடத்திவந்தவர். இதற்குப் பின்னரும் கல்விப்பகுதியிற் பல்லாண்டுகள் மொழிபெயர்ப்பாளராகவும் தமிழ்ப் பரீட்சகராகவும் கடனாற்றி வந்தவர். இவர் 1922ஆம் ஆண்டு தமது உத்தியோகத்தினின்றும் இளைப்பாறி இந்தியா சென்று சில ஆண்டுகள் வசித்தவர். புதுச்சேரியில் ஒரு குருவை அடைந்து அவர் விருப்பப்படி 'வித்தகம்' என்னும் ஒரு சிறந்த வாரப்பத்திரிகையை நடாத்தி வந்தவர். 'திருவாசக உண்மை', 'உண்மை முத்திநிலை ஆராய்ச்சி' என்னும் நூல்களை இயற்றியவர். நல்ல செய்யுள் செய்யும் ஆற்றல் படைத்தவர். மகாவித்துவான் கணேசையர் அவர்களோடு சகபாடியாகவும் நெடுங்கால நண்பராகவும் உசாத்துணைவராகவும் வாழ்ந்த இவர் 18-11-58இல் இவ்வுலக வாழ்வை ஒருவினர்.

இவ்வளவோடு மகாவித்துவான் அவர்கள். காலத்துப் புலவர்களைப் பற்றிக் கூறுவதை நிறுத்திக்கொள்கின்றேன்.

நன்றி: **'கணேசையர் நினைவுமலர்'**

# நாவலர் கல்வி வழியில்
# பண்டிதமணியும், புலவர்மணியும்

– திரு. கு. சோமசுந்தரம் எம். ஏ. –

இந்த நூற்றாண்டில் ஈழத்தில் வாழ்ந்து தமிழ் இலக்கிய வழியையும், தமிழ் மரபுக்கல்வி வழியையும் தொடர வைப்பதில் பெருஞ் சாதனைகளை நிலைநாட்டியவர்கள் பண்டிதமணியும், புலவர்மணியும் ஆவர்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை வடக்கினைத் தாயகமாகவும், புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை கிழக்கினைத் தாயகமாகவும் கொண்டவர்கள். இருவரும் வடக்கையும் கிழக்கையும் ஆத்மீக, தமிழ் பண்பாட்டுக்கல்வி கலாசார அடிப்படையில் இணைத்து ஒன்றாகக் கண்டவர்கள். உலகை ஒன்றாகக் காண்பதே கல்வி என்று கல்விக்கு வரைவிலக்கணம் தந்த தமிழ் மூதாட்டி ஔவையார் வழியின் தோற்றங்கள் அல்லவா இவர்கள்! யாழ்ப்பாணம் நாவலர் காவிய பாடசாலையில் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரிடம் வரன்முறையாகத் தமிழ் மரபுவழிக் கல்வியைக் கற்றுணர்ந்தவர்கள், இருவரும் இறுதிவரை ஆத்ம நண்பர்களாக விளங்கி நட்புக்கோர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தனர்; உண்மைக் கல்வியின் பண்பினையும் உணர்த்துவதாக வாழ்ந்து காட்டினார்கள்.

1978ஆம் ஆண்டில் பண்டிதமணிக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் இலக்கியக் கலாநிதிப் பட்டம் வழங்கியது. இதனால் முதன்முதலாக உண்மைக்கல்விக்கு – மரபுவழித் தமிழ்க் கல்விக்கு பல்கலைக்கழக மட்டத்தில் அங்கீகாரம் கிடைத்தது. இதனைப் பாராட்டிய புலவர்மணி, தமது நல்வாழ்த்துக்களைப் பண்டிதமணிக்குத் தெரிவித்துக்கொண்ட பாங்கினை உண்மைக்கல்வியின் உயர் பண்பாகக் காண்கின்றோம்.

இலக்கியக் கலாநிதி பண்டித மணியும், நானும் ஒரே மரத்தின் இரண்டு கிளையில் ஒருமிக்கப்பழுத்த இரண்டு பழங்கள். அவர் சற்றே இளையவர். அக்கிரபூசை பெறுவதற்கு உரியவர். என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ பண்டிதமணி பெற்ற இக்கௌரவம் தனக்குக் கிடைத்தது போன்ற ஓர் உணர்வினை புலவர்மணி அடைந்தார்கள். இது அவர் கற்ற உண்மைக் கல்வியின் பெறுபேறு அன்றோ.

உண்மைக் கல்விபற்றிப் பண்டிதமணி குறிப்பிடுவதை நோக்குவோம். 'கம்பராமாயணத்திலே தமையன் ஒருவனுடைய முகம் அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது. இந்நிலை எப்பொழுது நிகழ்ந்தது என்பதைச் சிந்திக்க முடியுமானால் அது ஆச்சிரமக்கல்வியின் அருமையை அறிதற்கு உபகாரமாகும்: இராமனின் அன்றலர்ந்த செந்தாமரையினை வென்ற முகத்தின் பூரணப் பொலிவு, அது நிகழ்ந்த அதே சூழ்நிலையில் புலவர்மணியின் முகத்திலும் தென்பட்டது. அன்றைய உண்மைக் கல்விவழி வழிவந்து இன்றும் அதன் அருமையை உணர்த்தி நிற்கின்றது. அகத்தினழகு தான் முகத்தில் பரிணமிக்கிறது. இன்றைய உலகியல் கல்வி இப்படி ஒரு சந்தர்ப்பத்திலே, ஒருவரின் முகத்தில் மலர்ச்சியைத் தோற்றுவிக்குமா? இது சிந்தனைக்குரியதும் சந்தேகத்துக்குரியதுமாகும்.

உண்மைக் கல்வியானது உள்ளத்தைப் பக்குவப்படுத்தி உட்புற அழிவு சிதைவுகளிலிருந்து கற்றவனைப் பாதுகாக்கும் தன்மையது. உலகியல் தொடர்பான கல்வியும் உண்மைக்கல்வி தரும் பண்புகளை மதிக்கும் தன்மையைக் கொண்டிருப்பின் வெளிப்புறச் சீரமைப்புக்கு வழி கோலும்.

இத்தகைய ஒரு கல்வி நெறியினைப் பண்டைய தமிழ் மக்கள் பெற்றிருந்தனர். வையத்துள் உறுதுணையாக மக்களிடம் கல்வி, தறுகண், இசைமை, கொடை என்ற நான்கும் இருக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் கொண்டிருந்தனர். தொல்காப்பியர் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார். இவற்றுள் கல்விக்கே முதலிடம் கொடுத்திருப்பதையும் கவனிக்கற்பாலது.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் அடைதல் தமிழ்க் கல்விநெறியின் நோக்கமாகும். அன்றைய நிலையிலேயே, தமிழ் மக்களின் கல்வி நெறி, அற நோக்கு, பொருள் அல்லது உலகியல் நோக்கு, முருகியல் நோக்கு, ஆத்மீக நோக்கு விடுதலை உணர்வு நோக்கு ஆகியவற்றைக் கொண்டிருந்தது என்பதை அறியும்போது தற்காலக் கல்வியியலாளர்களே வியப்படைகின்றனர். மக்களின் வாழ்க்கை நோக்கங்களே அவர்களின் கல்வி நோக்கங்களாகவும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்க் கல்வி சான்றோர் சமுதாயத்தை உருவாக்கியது. சான்றோர்கள் மனம், மொழி, மெய்யினால் தூய்மையுடையவர்கள். எனவே தமிழ்க் கல்வி, உண்மைக் கல்வியாக மலர்ந்தது.

ஈழத்திலும் தமிழ்க்கல்வி நன்கு வேரூன்றி இருந்து வந்துள்ளது. இங்கும் இக்கல்வி நெறி சைவசமய உணர்வோடும் இலக்கிய வழியோடும் இணைந்தே வளர்ந்து வந்தது. பண்டிதமணி காட்டும் ஈழத்து இலக்கிய வழியும் இக்கல்வி வழியும் ஒன்றே எனலாம். தமிழிலக்கணம், இலக்கியம், அறநூல்கள், சமயம், புராண இதிகாசங்கள் ஆகியவற்றைப் போதிப்பதன் மூலம் மக்கட் சமுதாயத்தில் ஒழுக்கம், பண்பாடு, கட்டுக் கோப்பு, உறுதி நிலை அறப் பண்புகள் பேணப்பட்டன. மனித மேம்பாட்டிற்கும், சமூகச் சீர்நிலைக்கும் இக்கல்வி உதவியது.

நமது நாட்டில் அந்நியப் பண்பாடுகள் புகுத்தப்பட்ட காலங்களிலும், தமிழ்க் கல்வி நெறியும் ஏதோ ஒரு முறையில், தலை மறைவாகவேனும் தொடர்ந்து வந்தமையினாலேயே தமிழர் பண்பாடும், பாரம்பரியமும் பல நூற்றாண்டுகளாகப் பேணப்பட்டு வந்துள்ளன.

தமிழ்க் கல்வி மனிதனின் மனத்தைப் பண்படுத்துவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. 'மனத்துக் கண் மாசிலனாதல்' 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கும் திறன்' ஆகியவற்றைத் தமிழ்க்கல்வி அளிக்கின்றது. மனம், மொழி, மெய் என்பவற்றில் மனமே மற்றைய இரண்டிற்கும் காரணமாகவும் அவற்றின் ஊற்று

நிலையமாகவும் விளங்குவதால், தமிழ் மக்கள் மனத்திற்கு முதன்மையளித்தனர். சொல்லையும், வினையையும் இயங்க வைப்பது மனம்.

'மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு' மனத்தானாம் மாந்தர்க்குணர்ச்சி' என்ற வள்ளுவர் வாக்கும், 'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்' என்னும் இந்நூற்றாண்டுப் பாரதியாரின் கூற்றும் ஒத்து நிற்கின்றன. இதிலிருந்து பண்டுதொட்டு இன்று வரை தமிழ்க் கல்வி நெறி மனத்திற்கும், அதன் தூய்மைக்கும் கொடுத்திருக்கும் முக்கியத்துவம் புலனாகின்றது.

ஈழத்தில் தமிழ்க் கல்வி பதினாறாம் நூற்றாண்டுவரை இடையூறுகள் இன்றி வளர்ந்து வந்தது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்கள் யாழ்ப்பாண வரலாற்றிலே இருண்ட காலங்கள் என்பது பண்டிதமணியின் கருத்து. தமிழர் பண்பாட்டு வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்பட்ட காலம். இதனைப் பண்டிதமணி பின்வருமாறு கூறுகின்றார்.

'கந்த புராணத்தினாலே தமிழும் சைவமும் வளர்ந்து வருகின்ற யாழ்ப்பாணத்துக்கு ஒரு நாள் கண்ணூறு உண்டானது. இவ்வாறே நூற்றைம்பது வருட காலம் கழிந்தது. அதன் மேல் ஒல்லாந்தர் கண் வைத்தார்கள். அவர்களும் நூற்றிமுப்பது வருடம் யாழ்ப்பாணத்தைத் தலைகீழ் செய்தார்கள்.'*

பண்டிதமணி தமது 'இலக்கிய வழி' என்னும் நூலில் . அரச கேசரியிலிருந்து கணேசையர் பரியந்தம் ஓரிலக்கிய வழி தொடர்ந்து வந்திருக்கிறதென்று கூறியுள்ளார். எனினும், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில், அப்பொழுது நிலவிய பாதகமான சூழ்நிலை காரணமாக சைவத்தமிழ்ப் புலவர்களும் ஆசான்களும் வெளிப்படையாகத் தங்கள் பணிகளை ஆற்ற முடியாமலிருந்துள்ளனர். இவர்கள் 'தலைமறைவில்' வாழ்ந்து பணியாற்றவேண்டிய நிலையில் இருந்தனர்.

ஐரோப்பியக் கல்வி முறை புகுத்தப்பட்டதன் காரணமாகத் தமிழ்க் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டது. கிறிஸ்தவ சமயக் குழுவினர் பாடசாலைகளை ஊர்கள் தோறும் நிறுவினர். அரசின் ஆதரவு

முழுமையாக இருந்தது. இங்கு கல்வி கற்றவர்களுக்கு உத்தியோகம், சமூக அந்தஸ்து என்று உலகியல் அனுகூலங்கள் கிடைத்தன.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், கிறிஸ்தவ சமயக் குழுவினரின் கல்வி முயற்சிகளுக்கு மேலும் கூடுதலான உத்வேகம் அளிக்கப்பட்டது. 1832 இல் இலங்கை வந்த கோல் புறுக் – கமரன் குழுவின் சீர் திருத்தங்கள், ஐரோப்பியக் கல்வி முறைக்குப் பெரும் ஆதரவு தந்தது. அரச உத்தியோகங்கள் ஆங்கிலக் கல்வி பெற்றவர்களுக்கே கிடைத்தன. ஆங்கிலக் கல்வியின் விளைவாக உலகியல் சார்ந்த வாழ்க்கை முறை பண்பாடு, கலாசாரம் என்பன நம் மக்கள் மத்தியில் படியத் தொடங்கின மனித விழுமியங்கள், மரபு வழிப் பண்பாடு கலை கலாசாரம் என்பன நம் மக்களிடையே செல்வாக்கினை இழக்கும் அபாயமும் தோன்றியது.

ஆங்கிலக் கல்வியின் நோக்கம், 'உண்டிருந்து எப்படியோ வயிறு வாழ்வதுதான்உடம்பு எடுத்த நோக்கம்' என்பதனைக் கொண்டதாக இருந்தது. இப்படித்தான் வாழவேண்டும் என்ற நிலை அகன்று, எப்படியும் வாழலாம் என்ற நிலை நம் மக்களுக்கு ஏற்பட்டது.

இந்நிலையைப் பண்டிதமணி பின்வருமாறு விளக்குகிறார். 'பறங்கியர், ஒல்லாந்தர் காலத்தில் சைவ சமயத்துக்கு வந்த வருத்தம் சிரங்கு வ்ருத்தம் போன்றது. அதுவெளித் தோல் வருத்தம். உள்ளூறச் சமயம் உயிரைப் பற்றி நின்றது. ஆங்கிலேயர் காலத்தில் சமயத்துக்கு வந்த வருத்தம் கச வருத்தம் போன்றது. உயிரைக் கொல்லுகின்ற வருத்தம் அது. உட் பகையான வருத்தம்; புறப்பகையில் உட்பகை பொல்லாதது'

ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கிலக் கல்வி, அரச மதிப்பு அரசறிய வீற்றிருக்கும் பெரு வாழ்வு, நாகரிகம் என்ற முறையில் மக்கள் பெரிதும் கவர்ந்து ஈர்க்கப்பட்டனர். இவ்வாறு ஈர்க்கப்பட்டவர்கள் 'உயர்குழாம்' எனும் வர்க்கத்தினராகக் கொள்ளப்பட்டனர். ஏனைய மக்களிடமிருந்து அந்நியப்படுத்தப்பட்டனர். இவர்களின் வாழ்க்கை வளத்தைக் கண்ட ஏனைய மக்களின் அபிலாஷைகளும், வாழ்க்கைக் குறிக்கோளும் யாதெனில் எப்படியாவது தமது பிள்ளைகளையும் ஆங்கிலக் கல்வி மூலம் இந்த உயர் நிலைக்குக் கொண்டு வர

வேண்டுமென்பதேயாகும். தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கு ஆண்டுப் பரிசோதனைக்குச் செல்லும் குழுவினர் திறமையும் விவேகமும் நிறைந்த மாணவர்களை இனம் கண்டு கொள்வர். பின்னர் தமது தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி இவர்களைப் பெற்றோர்களிடமிருந்து பிரித்தெடுத்துச் சென்று புகழ்பூத்த கல்லூரிகளில் சேர்த்துவிடுவர். அவர்கள் அங்கு ஆங்கிலம் கற்று, பதவிகள் பெற்று 'உயர் வர்க்கத்'தினருடன் திருமண உறவும் கொண்டு அவர்களுடன் இரண்டறக் கலந்து விடுகின்றனர். பின்னர் தமது கிராமம், உறவினர். தமிழ்ப் பண்பாடு, சைவசமயம் ஆகியவற்றிலிருந்து அந்நியமாகின்றனர். இவ்வாறு திறமைசாலிகளும், விவேகிகளும் பிரித்தெடுக்கப்பட்ட நிலையில் எஞ்சியுள்ளவர்களே சைவத் தமிழ்க்கல்வி, பண்பாடு என்ற குறுகிய எல்லைக்குள் நின்றனர். இவர்கள் மெலியவர்கள், கிளர்ந்து எழுவதற்கு வல்லமையற்றவர்களாகவே இருந்தனர். இத்தகைய ஓர் ஆபத்தான சூழ்நிலையிற்றான் ஆறுமுகநாவலர் கிளர்ந்தெழுந்தார். தனி மனித இயக்கமானார். சைவத்தமிழ் மறு மலர்ச்சிப்பணிகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்தார்.

ஆறுமுக நாவலர் 1822 – 1879 இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தார். அந்நிய ஆதிக்கத்திலிருந்து அரசியல் விடுதலை பெறுவதற்கு முன்னோடியாகத் தமிழ் மக்கள் தமது சமய மொழி பண்பாட்டுக்கலாசார விடுதலை பெறவேண்டும் என்று கருதியவர் நாவலர். ஓர் இனத்தின் மொழி, சமயம், கலை கலாசாரம் பண்பாடு கல்வி, விழுமியங்கள் என்பன சீரழிவுக்குட் படுத்தப்பட்டு நலிந்தொழிந்த பின்னர் பெறும் அரசியல் விடுதலை அர்த்தமற்றது என்று கொண்டார் போலும்.

நாவலர் இளமையிலே சைவத்தமிழ் மரபுக் கல்வியைக் குரு சீட முறையில் கற்றுத் தேர்ந்தவர். அத்துடன் வட மொழியும் கற்றவர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆங்கிலக் கல்வியையும் நன்கு கற்றுணர்ந்தவர். இதனால் இரு வேறு உலகக் கல்விமுறைமைகளையும் தெரிந்திருந்தார்.

கல்வி, மனித மேம்பாட்டிற்கும் அதே வேளை பொருளாதார அபிவிருத்திக்கும் உதவுவதாக அமைய வேண்டும். ஆத்மீகமும், உலகியலும் கல்வி மூலம் ஒன்றிணைய வேண்டும். பழைமையும்

புதுமையும் ஒன்றிக்கவேண்டும். கல்வி எப்பொழுதும் மறுமலர்ச்சியின் ஊற்றாகவும் அமைய வேண்டும். சமுதாயத்தின் பண்டைய பண்பாடுகள், மரபுகள், பாரம்பரியங்கள், வாழ்க்கை முறைகள் என்பனவற்றை ஆராய்ந்து விமர்சித்து, தெளிந்து கழிக்க வேண்டியவற்றைக் கழித்து, அவற்றிலிருந்து எழுகின்ற சிறந்தனவற்றை. வளர்ச்சி பெற்று வருகின்ற சமகாலச் சமுதாயத்தின் தேவைகள், நோக்கங்கள், இலட்சியங்கள், பண்புகள் என்பவற்றிற்கேற்ப உருவாக்கி இணைக்கும் முயற்சிகள் மறுமலர்ச்சிப் பணிகளுக்குள் அடங்குகின்றன எனக்கொள்வர். நாவலரின் பணிகளை நோக்குமிடத்து மேற்கூறிய கருத்துக்களைக் கொண்டிருந்தார் என்பது புலனாகின்றது.

நாவலர், இரண்டு வகையில், தமிழ்க்கல்வி மரபின் மறுமலாச்சி பற்றிச் சிந்தித்துள்ளார். ஒன்று அக்காலத்தில் நடைமுறையிலிருந்த ஆங்கிலப் பாடசாலைக் கல்வி முறைமைக் கூடாக மரபுவழி வந்த தமிழ்க்கல்வி முறைமையையும் புகுத்தி மறுமலார்ச்சி காணலாம் என்பதை ஆராய்ந்து பரிசோதனை நிகழ்த்தியுள்ளார். ஆங்கிலக் கல்லூரி அமைப்பு முறையில் அங்கு கற்பிக்கப்படும் பாடங்களுடன் இணைத்தும்; பின்பற்றப்படும் கலைத்திட்டத்தின் ஊடாகவும்; இணைப்பாடவிதான– பாடவிதானத்திற்குப் புறம்பான செயற்பாடுகளூடாகவும், மரபுவழிச் சைவத்தமிழ்க் கல்வியைப் புகட்டும் அணுகுமுறையாக இது அமைந்திருந்தது. மற்றையது சைவத் தமிழ்க் கல்வியை நேரடியாகக் குருசீட முறையில் வகுப்புகளை நடாத்திக் கற்பிக்கும் அணுகுமுறையாகும். ஆங்கிலக் கல்வி முறைமையையும், மரபு வழித் தமிழ்க்கல்வி முறைமையையும் இணைத்துச் சிந்தித்ததன் பயனாக எழுந்ததே 1848ஆம் ஆண்டில் நாவலரால் நிறுவப்பட்ட வண்ணார்ப்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையாகும். தமிழ் மொழியும், ஆங்கில மொழியும் இருவித முரண்படா நாகரிகப் பண்பினை இணைத்து வளர்க்க முடியும் எனும் தத்துவத்தை எடுத்துக் காட்டியது' என்று இந்நிகழ்வு பற்றிக் கூறும் போது பேராசிரியர் ப. சந்திரசேகரம் குறிப்பிட்டுள்ளார். நாவலரின் புதுமை நிறைந்த இக்கல்விச் சிந்தனை, சைவத் தமிழ்ச் சூழலைக் கொண்ட பல கல்லூரிகளும், பாடசாலைகளும் தோன்றுவதற்குக் கால்கோளாக அமைந்தது எனலாம்.

நாவலரின் மறைவுக்குப் பின் 1888 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சைவபரிபாலன சபை, 1890ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி; இந்துக்கல்லூரிச் சபையினால் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட இந்துக் கல்லூரிகள், சேர். பொன் இராமநாதன் அவர்களால் நிறுவப்பட்ட கல்லூரிகள். மற்றும் சைவப்பெரியார்கள் தனிப்பட்ட முறையில் நிறுவிய கல்லூரிகள் யாவும் நாவலர் பெருமானின் இக்கல்விச் சிந்தனையின் பிரதிபலிப்புக்களேயாகும். காலத்தின் தேவையும், தமிழ்க் கல்வியின் மறுமலர்ச்சித் தேவையும் உணரப்பட்ட நிலையில் இக் கல்லூரிகளின் மூலம் ஒன்றிணைக்கப்பட்டன.

நாவலர் இப்புதிய சிந்தனையை எவ்வாறு பெற்றார். பண்டிதமணியே பதிலளிக்கிறார் பின்வருமாறு – 'பதினான்கு வருடக் கிறிஸ்தவச் சூழலே நாவலரை நமக்குத் தந்தது' நாவலலர் யாழ் மத்திய கல்லூரியுடனும் பார்சிவல் பாதிரியாருடன் தொடர்புற்றிருந்த காலத்தில் நெளிவு சுளிவுகள், பல்வேறு உத்திகள் யாவற்றையும் அறிந்து வைத்திருந்தார். இவை; நாவலரின் சைவசமய, கல்வி, சமூக மறமலர்ச்சிப் பணிகளுக்கும் சிந்தனைகளுக்கும் பெரிதும் உதவின, பண்டிதமணி அப்படிக் குறிப்பிட்டதன் காரணம் இதுவே.

சைவத்- தமிழ்க்கல்வி மறுமலாச்சியில் நேரடி அணுகு முறையும் நாவலர் கையாண்டார். வண்ணார்பண்ணை சைவப்பிரசாச வித்தியாசாலையின் இன்னொரு பகுதியில் காவிய பாடசாலையை அமைத்தார். சைவத்தமிழ் மரபுக் கல்வியை ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில், திட்டமிட்டு மாணாக்கர்களுக்கு நேரடியாக வழங்குவதே இதன் நோக்கம், இதற்கென ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றினையும் வகுத்திருந்தார். இக்கல்வியைப் பெறுவதனால் உடனடியான 'இம்மை' உலகியல் பயன்கள் உத்தியோகவாய்ப்புக்கள் கிடையாது. ஆனால் அதற்கும் நாவலர் திட்டம் வைத்திருந்தார். இங்கு கல்வி இலவசமாகவே வழங்கப்பட்டது. உண்டியும் உறையுளுங் கூட இலவசம். இலவசக்கல்வி, தாய் மொழிக்கல்வி, பெண் கல்வி, வாழ்நாட்கல்வி, வளர்ந்தோர் கல்வி எல்லோருக்கும் கல்வி என்ற முற்போக்குக் கல்விச் சிந்தனைகளின் முன்னோடியாக நாவலர் பெருமான் விளங்கினர்.

நாவலரின் சைவத் தமிழ் மரபுக்கல்வி வழியில் வந்தவர்களே அவரின் ஞானபரம்பரையைச் சேர்ந்தவர்கள். வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளை. த. கைலாசப்பிள்ளை, சுன்னாகம் அ. குமார சுவாமிப் புலவர் ஆகியோர் நாவலர் பணியைத் தொடர்ந்தனர். வண்ணார்ப்பண்ணைக் காவிய பாடசாலையில் தான் 1917ஆம் ஆண்டில் ஒருநாள் சி. கணபதிப்பிள்ளையும், ஏ. பெரியதம்பிப்பிள்ளையும் இறைவன் சித்தப்படியும், தமிழர் தவப்பயனாகவும் ஒன்றிணைந்தார்கள். சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் இவர்களுக்குக் குரு மணியாக விளங்கினார். இந்த நூற்றாண்டில் நாவலர் ஞானபரம்பரை தழைக்க, செழிக்க வழி பிறந்தது.

நாவலர் ஞான பரம்பரையினர் தமிழ் இலக்கண, இலக்கியங்கள் புராண இதிகாசங்கள், சைவ சித்தாந்தம் என்பவற்றில் ஆழ்ந்த புலமையும், பற்றும், பக்தியும் உடையவர்கள்; சைவப் பிரசாரம். கல்விப் பணி ஆகிய இரண்டிலும் ஈடுபாடுள்ளவர்கள். நாவலரையும் அவர் பரம்பரையினரையும் இழிவு அல்லது இருட்டடிப்புச் செய்வோருக்கு எதிராகவும், சைவத்தையும் தமிழையும் நிந்திப்போர்க் கெதிராகவும் ஈழ நாட்டுப் புலவர்களையும் அவர்தம் பணிகளையும் குறைத்தோ திரித்தோ மதிப்பீடு செய்வதைக் காணுமிடத்தும் போர்க்கொடி தூக்கும் பான்மையினர். இதனால் கண்டனக்காரர் என்ற பெயரும் இவர்களுக்கு உண்டு. மாணாக்கர்கள் இவர்களை நாடி வந்தாலே தவிர, அவர்களைத் தேடிப் போகும் வழக்கம் அற்றவர்கள். தமது சிறப்புக்களை ஏனையோர் கண்டு பிடிக்கும் வரை பேசாதிருக்கும் பெற்றியர். தாமாக விளம்பரப்படுத்துதலை அறியாத கூட்டத்தினர். இவர்கள் எவ்வித இயக்கத்தையும் நடத்தவில்லை. இதனால் தமிழ் கூறும் நல்லுலகம் இவர்களைப்பற்றி நன்கு தெரிந்து வைத்துக் கொண்டிருக்கவில்லை.

இலங்கைப் பல்கலைக்கழகம், பண்டித மணியின் எழுபத்தொன்பதாவது வயதிலேயே அவரைக்கண்டுபிடித்து இலக்கியக் கலாநிதிப் பட்டம் வழங்கியது. பல்கலைக்கழக மட்டத்தில் பண்டிதமணியால் முதன் முதலாகக் கவரப்பட்டவர்கள் சைவத்திலும். தமிழிலும் உண்மை உணர்வு பெற்ற பல்கலைக்கழக

விஞ்ஞானத்துறைப் பேராசிரியர்களான ஆ.வி. மயில்வாகனம், அ. சின்னத்தம்பி, பே. கனகசபாபதி என்பது ஈண்டு குறிப்பிடப்பட வேண்டியது அவசியமாகின்றது. தமிழ்த்துறையினர் பண்டிதமணியை ஆய்வுப் பொருளாகக் கொண்டது, அதன் பின்னரேயாகும். 1980ஆம் ஆண்டிலேயே புலவர்மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலக்கிய வித்தகர் விருதை வழங்கிக் கௌரவித்தது.

பண்டிதமணியும் புலவர்மணியும் தமிழின் கருத்தை நன்கு உணர்ந்தே தமிழ் செய்தவர்கள்; தமிழ் காத்தவர்கள். பண்டிதமணி முப்பது ஆண்டுகள் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் நல்லாசிரியர்களை உருவாக்கி நாவலர் பரம்பரையை வளர்த்தார். புலவர்மணி, நாவலர் ஞானபரம்பரையினரால் ஆட்கொள்ளப்பட்டு பின் விபுலானந்த அடிகளின் அனுசரணையில் இராமகிருஷ்ண சங்கத் தத்துவத்தினாலும் கவரப்பட்டவர். இடைநிலைக் கல்லூரிகளிலும், மட்டக்களப்பு புனித அகஸ்தீன் ஆசிரியர் கல்லூரியிலும் கல்விப் பணியாற்றி நன் மாணாக்கர்களை உருவாக்கினார். இவர்கள் இருவரும் தமிழ் கூரும் நல்லுலகினால் என்றும் போற்றப்பட வேண்டியவர்கள் ஆவர்.

**நாவலர் பரம்பரையின் இரு மணிகளான பண்டிதமணி புலவர்மணி இருவரதும் நூல்களின் வெளியீட்டு விழா இன்று 20-05-90) முற்பகல் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெறுகிறது. அதையொட்டி மட்டக்களப்பு மாவட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் அவர்கள் எழுதிய இந் கட்டுரை விசேடமாகப் பிரசுரிக்கப்பட்டது.**

**(தினகரன் 20-05-90)**

# 'தமிழ்க்கடல்'

# கி.வா.ஜகந்நாதன்

## பழகிய காலங்களை நினைவு கூடுகின்றார் அன்புமணி

நவம்பர் மாதக் கலைமகள் இதழ் அட்டையில் நம்மையே பார்ப்பது போன்ற தோற்றத்தில் மறைந்த தமிழ்க் கடல் கி.வா.ஜ அவர்களின் படம் வெளியாகி இருக்கிறது. படத்தைப் பார்த்ததும் நம் கண் கலங்குவது போன்ற உணர்ச்சி. என்ன விந்தை! படத்திலும் கி.வா.ஜ அவர்களின் கண் கலங்குவது போன்றே இருக்கின்றது. கண் படத்தையே பார்த்தபடி இருக்க மனம் அவரோடு தொடர்பான நிகழ்ச்சிகளை அசை போடுகிறது.

1952 மட்டக்களப்பில் நடை பெற்ற மூன்று நாள் தமிழ் விழா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள கி.வா.ஜ வந்திருக்கிறார். ஒரு மணி நேரம் நீடித்த அவரது சொற்பொழிவு ஒரு நிமிடம் போல் தோற்றுகிறது. அது போன்ற பேச்சை மட்டக்களப்பு மக்கள் அதற்கு முன் கேட்டதேயில்லை. சபையில் நிசப்தம்! அவரது பேச்சு முடிந்த பின் சபையில் சலசலப்பு ஏற்படுகிறது. "தமிழ்க்கடல் என்பது சரியாகத்தான் இருக்கிறது" என்ற பேச்சு சப்த அலைகளுக்கு மேல் மிதக்கிறது.

கூட்ட முடிவில் நானும் சில எழுத்தாள நண்பர்களும் அவருடன் அறிமுகமாகிக் கொள்கிறோம்.

சுமார் பத்து வருடங்களுக்குப் பின் அதாவது 1962இல் கி.வா.ஜ, ந.ரா. முருகவேள் ஆகியோர் மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம் ஏற்பாடு செய்த தமிழ் விழா ஒன்றில் கலந்து கொள்கின்றனர். அவ்விழாவில் 'அழகுத் தமிழ்' என்ற தலைப்பில் சிலப்பதிகாரம் பற்றி ந.ரா. முருகவேள் அவர்களும், 'இன்பத் தமிழ்' என்ற தலைப்பில் கி.வா.ஜ அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள். விழாமுடிவில் பார்வையாளர்

குறிப்பேடு வழக்கம்போல் அவர்களிடம் தரப்படுகிறது. அதில் ந.ரா. முருகவேள் பின்வருமாறு எழுதினார்.

"மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கம் சார்பில் நகர மண்டபத்தில் 'அழகுத் தமிழ்' என்ற தலைப்பில் சிலப்பதிகாரம் பற்றிச் சொற்பொழிவாற்றக் கிடைத்த வாய்ப்புக்காக மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். விபுலானந்தரின் அடிச்சுவட்டில் இச் சங்கம் தொண்டாற்றி மென்மேலும் வளர்ந்தோங்க இறையருளை வாழ்த்துகிறேன்"

ந.ரா. முருகவேள்
24.4.62

அதன்பின் குறிப்பேடு கி.வா.ஜ அவர்களிடம் தரப்படுகிறது. படுவேகமாக எழுதுகிறார். வாங்கிப் பார்த்தால் மூன்று கவிதைகள், மூக்கில் விரலை வைத்தோம். 'வரகவி' என்று சிலரைக் குறிப்பிடுவதில் அப்போதுதான் நம்பிக்கை ஏற்பட்டது. மூன்று கவிதைகளில் ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன்.

மட்டக்களப்பில் எழுத்தாளர்
  மன்னர் சங்கத் தினர் அன்பின்
இட்ட பணியை நிறைவேற்ற
  எழிலார் நகர மண்டபத்தை
கிட்டி உள்ளத்தேனென்று
  கிளத்தும் தலைப்பில் ஒரு ரையை
நட்ட நண்பர் தமக்காக
  நவின்றேன் கேட்டே உவந்தார்கள்.

கி.வா.ஜகந்நாதன்
25.4.62

இன்னும் ஒரு இருபது வருடங்களுக்குப் பின் அதாவது 1982இல் தமிழகம் சென்றிருந்த போது மயிலாப்பூரில் உள்ள அவர் இல்லத்தில் அவரைச் சந்திக்கச் செல்கிறேன். வாசலில் ஏறியதும் ஒரு முதிர்ந்த அம்மாள் வெளிப்பட்டு அசிரத்தையோடு பார்த்தார்கள். ஏதாவது சொல்லி நம்மைத் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்ற எண்ணம் அவர் பார்வையிற் பிரதிபலித்தது. அதை முறியடிக்கும் நோக்கத்துடன் "நான் இலங்கையில் மட்டக்களப்பிலிருந்து" வந்திருக்கிறேன். கி.வா. ஜ அவர்களைப் பார்க்கவேண்டும்" என்று கூறினேன். அவர் உள்ளே மறைந்தார். சிறிது நேரத்தில் கி.வா.ஜ அவர்கள் தூக்க கலக்கத்தில் வெளியே வந்தார். பாவம் மதிய போசனத்தின் பின் கணவர் குட்டித் தூக்கம் போடும்போதும் யாரும் அவரைக் குழப்பக் கூடாது என்ற கரிசனை அவரது மனைவியாருக்கு. மட்டக்களப்பிலிருந்து வந்த ஒருவர் ஏமாறக் கூடாதென்ற கரிசனை, கி.வா. ஜவுக்கு; ஒரு மணி நேரம் மிகவும் நெருக்கமான உரையாடல்.

20 வருடங்களுக்கு முன் பார்த்ததை விட அவரது உடல் மிகவும் தளர்ந்திருந்தது. ஆனாலும் உற்சாகம் சிறிதும் குன்றவில்லை. நமது கேள்விகளுக்கெல்லாம் விரிவாகப் பதில் கூறியதுடன் மிகவும் தோழமையுடன் உரையாடினார். உரையாடலின்போது பேரப்பையன் ஒருவன் அவர் மடியில் குதித்து விளையாடிக் கொண்டிருந்தான். அதை அவர் சிறிதும் பொருட்படுத்தவேயில்லை. காப்பி கொண்டு வந்த அவரது மனைவிதான் கணவருக்குத் தொந்தரவாக இருக்குமென்று குழந்தையை தூக்கிக் கொண்டு போனார்.

1966இல் கி.வா.ஜ அவர்களுக்கு அகவை அறுபது பூர்த்தியாகி மணி விழாக் கொண்டாடிய போது அந்த மணிவிழாக் கொண்டாட்டங்களில் தமிழகத்தைவிடவும் அதிகமான உற்சாகத்துடன் பங்களிப்புச் செய்தவர்கள் ஈழத்தவர்கள். சாதாரணமாக ஒரு ஈழத்து அறிஞருக்குக்கூட செய்யாத அளவு கொழும்பு, கண்டி. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் மிகப் பரந்த அளவில் இவ்விழா கொண்டாடப் பட்டதுடன் சிறுகதை கட்டுரை, கவிதைப் போட்டிகளும் இடம் பெற்றன. அத்துடனமையாது கொழும்பிலும் கண்டியிலும் மிகப்பெரிய அளவில் மணிவிழா மலர்களும்

வெளியிடப்பட்டன. இந்த மலர்களைப் புரட்டியபோது கண்டியில் வெளியிடப்பட்ட மலரில் அவரது அறுபதாம் ஆண்டு கல்யாணப்படங்கள் பல கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் இடம் பெற்றிருப்பதைப் பார்த்து உடம்பு புல்லரித்தது!

அச்சமயம் (1966) இலங்கைக்கு வந்திருந்த கி.வா.ஜ தம்பதிகளுக்கு 30.8.66இல் மட்டக்களப்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை வாழ்த்துப் பாடினார். மட்டக்களப்பு மக்கள் சார்பில் கி.வா.ஜ தம்பதிகளுக்கு வாழ்த்துமடல் வெள்ளிப் பேழையில் வைத்து வழங்கப்பட்டது. அப்பேழையை அப்போதைய 'செய்திப் பத்திரிகை நிர்வாக ஆசிரியர் திரு. ரா.மு. நாகலிங்கம் கி.வா.ஜ தம்பதிகளிடம் கையளிக்கும் படமும் இம்மலரில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அம்மலருக்கு கி.வா.ஜ அளித்த ஆசிச் செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'...... அன்பைப் பெருக்கி எல்லோரையும் அன்பராகப் பெறவேண்டும், என்ற பேராசை எளியேனுக்கு இருக்கிறது. ஆனால் சிற்றறிவும் சிறு செயலும் உடைய என்னால் அது முடியுமா? முடிந்த வரையில் பழகுபவர்களை அன்பராக்கிக் கொள்வதும் முன்பே அன்பரானவர்களைப் பின்னும் இறுகிய அன்பராகும்படி ஒழுகுவதும் யாரையும் புண்படுத்தாமல் நடப்பதும் என் குறிக்கோள். இதனை வாழ்க்கையில் செயற்படுத்த அருள் செய்யவேண்டுமென்று முருகனை வேண்டிக் கொள்கிறேன். அன்பைவிட அவன் அருளும் பெருவரம் வேறு எதுவும் இல்லை அல்லவா? யாண்டும் அன்பே நிறைக!

கி.வா. ஜகந்நாதன்
18.8.66

மட்டக்களப்பின் தமிழறிஞர்களான புலவர்மணி ஏ. பெரிய தம்பிப்பிள்ளை, வித்துவான் வீ.சீ. கந்தையா. வித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராஜா முதலியோர் கிவா.ஜ அவர்களுடன் மிகுந்த ஈடுபாட்டுடன்

பழகினர். அதிலும் புலவர்மணி ஏ. பெரிய தம்பிப்பிள்ளை அவருடன் கொண்ட நட்பு இறுதிவரை நீடித்ததும் இங்கு நெகிழ்ச்சியுடன் நினைவுகூரத்தக்கது.

புலவர்மணியவர்கள் செந்தமிழ்ச் செல்வர், வாகீச கலாநிதி ஸ்ரீ.கி.வா. ஜகந்நாதன் அவர்களது அறுபதாண்டு நிறைவிற்கு மட்டக்களப்பு மக்கள் மனங்கனிந்த வாழ்த்து மடலைத் தாமே கலிவெண்பாவினால் பாடிக் கொடுத்தார். வாழ்த்துமடல் நயங்கருதி இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

செந்தமிழ்ச் செல்வர், வாகீச கலாநிதி, ஸ்ரீ.கி.வா. ஜகந்நாதன் அவர்களது அறுபதாண்டு நிறைவினைக் குறித்து மட்டக்களப்புத் தமிழக மக்கள் 30-8-66ல் நகரசபை மண்டபத்தில் அன்னாருக்கு மனங்கனிந்தளித்த

# வாழ்த்து மடல்

கலிவெண்பா

**தெய்வத் திருவளருஞ் செம்மைமனத்துதித்த**
**மெய்வைத்த ஞான விளக்கொளிபோல் - வையத்தே**
**தூயவிபு லாநந்த சோதிதனைப் பெற்றமையால்**
**தேயமெலாம் போற்றுந் திருநாடு - பாயகலை**
**வெண்கதிரோன் நீரின் விளங்காத வெண்மையினைக்**
**கண்கொளவே நன்குவெளிக் காட்டல்போல் - தண்புனலின்**
**மேல்பாற் பரந்து விரிகதிரால் வாவியினைப்**
**பால்போல மாற்றுவதைப் பாராட்டிப் - பால்மதிய**
**மண்டலத்தை வாழ்த்துதல்போல் நீர்க்கீழ் அரமகளிர்**
**பண்டைத் தமிழ்யாழ் இசைபாட - உண்டினிது**
**வெண்தயிர்செந் தேன்செந்நெல் வெண்சோற்றுடனருந்திப்**

பண்தவழும் நன்னாட்டுப் பாட்டமிழ்தம் - பெண்தகையார்
வாயொழுகக் கேட்டு மனநிறைவு கொண்டெவரும்
போயுரைக்க நீண்ட புகழ்நாடு - பாயும்
நதிநீ ரொலிநாட்டுக் கூத்தொலிக்கு மாறாய்
எதிரொலிசெய் தெங்கு மிசைக்கப் - புதிர்காவும்
ஓசையொரு மாதர் உரையசைக்கா வோசைமனை
வாசல்தொறு மொன்றாய் மயங்கியெழ - வீசுவலை
மீனுக்கு மீனுக்கும் வெண்ணெல்லுஞ் செந்நெல்லும்
தான்விலையாள் மாறித் தலைமயங்கச் - சோனகர்தம்
கோலளக்குஞ் சீலைக்குக் கொள்விலையாய் நல்லமரக்
காலளக்கும் நெற்குவியல் காண்பிக்கச் சாலவே
கோயிலிலும் பள்ளி குளங்களிலும் நீர்பெருகிப்
பாயும் நதியில்வயற் பண்ணையிலும் - போயொருங்கோர்
தாய்வயிற்றுப் பிள்ளைகள்போற் சார்ந்தசம மாயெவரும்
நேயமுடன் வாழும் நிறைநாடு - தூயமனச்
சிட்டர் புகழுந் திருநாடு செந்தமிழ்வாழ்
மட்டக் களப்பெனும் மாநாடு - உட்கனிந்து
மங்களஞ்சேர் நல்ல மணிவிழாச் செல்வ! நினைப்
பொங்கு மன்பாற் கண்டுமனம் பூரித்தே -இங்கு
வருக பொலிகவென்றே வாழ்த்தி யினிதாய்
உருகுமுரை கேட்பா யுவந்து; - திருவுடைய
சான்றோர் புகழ்சாமி நாதையர் சூலுளைந்தே,
ஈன்ற தமிழின் வடிவமெனத் - தோன்றி
வருமனது நல்வரவால் வள்ளல் ஜகநாதா
பெருமிதங்கொண் டோம்தமிழர் பேறே - உருவத்தால்
ஓங்கு சமனொளியை யொப்பாய் உரைவளத்தால்
தேங்கமழு மாவலித்தெண் ணீர்ப்பெருக்கை - வாங்குகடற்
கீரிமலை யூற்றைக் கிளர்கன்னி யாயெனும்வெந்
நீர்நிலைக ளேழும் நிகர்வாய்நீ - சேருமதி

ஆழம் அமைதி யடக்கத்தாற் கோணமலை
சூழு மியற்கைத் துறைபோல்வாய் - வாழி
தெளிவால் இனிமையாற் சீர்விபுலாநந்தர்
உளமார் கவிநலனை யொப்பாய் - இளமைவளர்
தென்மொழியைச் செய்ய சிவநெறியை - வேல்முருகன்
தன்வடிவிற் கண்ட தனிநோக்கும் - தொன்மைவளர்
சங்கத் தமிழைச் சமயப் பொருளை மக்கள்
சங்கத்தி லேற்றிவைத்த தண்ணளியும் - எங்கும்
கலைவிளக்கம் போன்ற கலைமகளால் நாட்டின்
நிலைவிளக்கஞ் செய்த நெறியும் - தலையாய
தெய்வத் திருக்குறளுட் செந்தமிழெல் லாங்காட்டிச்
செய்தகலை யாக்கத் திருப்பணியும் - ஐயாநின்
உள்ளழகின் தோற்றமெனவொளிர்ந்தே தெள்ளுதமிழ்
உள்ளளவும் வாழ்விக்கும் உன்புகழை உள்ளத்தே
உள்ளுதொறும் உள்ளுதொறும் உன்னினிமை செய்தமிழ்போல்
அள்ளிக்கொள் வன்ன அழகுடைய - நல்லோய்
சதாபிஷே கங்கண்ட சான்றோ னெனநீ
சதாமங்களந்தழைத்து வாழ்க - சதாநிதமும்
மல்லல் வளஞ்சுரக்கும் மட்டுநன் னாட்டுவயல்
நெல்லினும்பல் லாண்டு நிறைந்து.

மட்டக்களப்பு
இலங்கை

இன்னணம்
மணிவிழாக்குழுவினர்
30-8-1966

**கவிதை:- புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை.**

நன்றி:-வீரகேசரி 08-01-1989

# வாழையடி வாழை

– வித்துவான் க. செபரெத்தினம் –

கவிதை புனையும் ஆற்றலிலும் கணபதிப்பிள்ளையவர்களும் பெரியதம்பிப்பிள்ளையவர்களும் சிறந்த புலவர்களாய் விளங்குகின்றார்கள். சங்கச் சான்றோர் நடையிலும், பிற்சான்றோர் நடையிலும். பாரதியின் புதுமை நடையிலும் செய்யுளாக்கிடும் ஆற்றல் நிறைவாக இவர்களிருவரிடத்திலும் காணப்பட்ட போதிலும், 'சி.க' பிள்ளையவர்கள் இதில் அதிகம் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. தனிச் செய்யுள்களை மட்டுமே அவர் இயற்றியுள்ளார்.

பெரியதம்பிப்பிள்ளையவர்கள், கவிதை புனைவதில் இக்காலத்திலே ஈடு இணையற்றவராக இருந்துவருகிறார். யாழ்ப்பாணத்திலே மாணவராயிருந்த காலத்தில் குமாரசுவாமிப்புலவர், பண்டிதர் மயில்வாகனனார் என்னும் இரு பெரும் புலவர்களிடம் பாடங்கேட்டமையும் அப்பெரியார்களிருவரோடு தொடர்பு கொண்டிருந்தமையுமே, 'ஏ.பெ' பிள்ளையிடம் இயற்கையாகக் குடிகொண்டிருந்த கவி அமைப்பினை வெளிப்படுத்திக் காட்டிட உதவியாயிருந்ததென 'ஏ.பெ' பிள்ளை நன்றியறிதலோடு குறிப்பிடுகிறார்.

யாழ்ப்பாணத்தில் மாணவராயிருந்த காலத்திலே இவர் தனது கன்னி முயற்சியாக. 'மண்டூர்ப்பதிக'த்தைப் பாடியுள்ளார். இப்பதிகமானது,பண்டிதர் மயில்வாகனனார் அவர்களது பாராட்டுதலைப் பெற்றதோடு, அவர்களின் சாற்று கவியையும் கொண்டதாயிருக்கிறது. மண்டூர்ப்பதிகம் 'ஏ.பெ' பிள்ளையின் இளமைப் பிராயத்தில் பாடப்பட்ட போதிலும், அஃது அருமையான படைப்பாகவே அமைந்துள்ளது. அச்செய்யுள்களில் காணப்படும் சொல்லாட்சிக்கும், பொருள் வைப்புமுறைக்கும், பின்வரும் உதாரணத்தைக் காட்டலாம்:

செந்தமிழ்க் கன்பனாய்த் தென்பொதிய மலையுற்ற
தெய்வ முனி யாசிரியன் நீ
தேடிமா லயனிருவர் காணாத வடிமுகத்
தேவனின் ஞானகுரு நீ
பந்தமரு மெல்விரற் கிள்ளைமொழி வள்ளியாம்
பக்குவியை யாள வேடர்
பலரையு மிரட்சித்த பரமகரு ணாநிதிப்
பாலசுப்பிர மண்யன் நீ

சந்துயர்ந் தோங்கோங்க லருணையனு தினமூமுறை
தருமருண கிரிநாத னின்
சந்தமிகு மதுரஞ் செறிந்தபாக் கேட்டகம்
தகுகளிகொள் மிகுபுலவ னீ
வந்தெனது மனவிருளை மாற்றியொளி நல்குவாய்
மன்றலங் கொன்றை யோடு
மதியேறு நதியேறு பணியேறு வேணியன்
மைந்த மண்டூர்க் கந்தனே.

விபுலானந்த அடிகளாரில் இயல்பாகவே ஈடுபாடு கொண்ட குருசீட அடிப்படையில் பிணைக்கப்பட்டவரான ஏ.பெ. பிள்ளையவர்கள், அடிகளாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதில் விருப்புடையவராவர். பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் தமது கன்னிப் படைப்பான 'மண்டூர்ப் பதிகத்தைப் பாடிமுடித்து, அடிகளாரிடம் கொடுத்து அபிப்பிராயம் கேட்டார். ஏ.பெ. பிள்ளையின் பாடல்களில் காணப்பட்ட முதிர்ந்த அனுபவத்தினையும், சிறந்த சொல்லாட்சியினையும் பார்த்த அடிகளார் பெரிதும் மகிழ்ந்தார்கள். ஏ.பெ. பிள்ளையவர்களை வெகுவாகப் பாராட்டினார்கள். பாராட்டியதோடமையாது, மண்டூர்ப் பதிகத்துக்குத் தாமாகவே ஒரு சாற்றுகவியையும் பாடிக்கொடுத்தார்கள். அடிகளார் அளித்த அச்சாற்றுகவியானது பெரியதம்பிப்பிள்ளையவர்களது ஆற்றலைப் பாராட்டிய பாட்டாகவே அமைந்திருக்கிறது. அப்பாடல் பின்வருமாறு:

பண்டுரு முகிற்குலங்கள் எம திறைவர்
மருகர் திருப் பதியி தென்ன
விண்டுர மழைபொழியுஞ் சிறப்பதனால்
வளம் மலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூரில் உறைமுருகன் மலரடிக் கோர்
திருப்பதிகம் மரபிற் சொற்றான்
கண்டுரு மினிய மொழிப் பெரிய தம்பிப்
பிள்ளையெனும் கவி வல்லோனே.

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முதற் தமிழ்ப் பேராசிரியராய்க் கடமையாற்றிக் கொண்டிருந்த விபுலாநந்த அடிகளார் நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு கொழும்பு அரசினர் வைத்தியசாலையிலே வைக்கப்பட்டிருந்தார்கள். இச்செய்தியானது, அப்போது வாத நோயினால் பீடிக்கப்பட்டு படுத்த படுக்கையிலிருந்த பெரியதம்பிப்பிள்ளையவர்களைப் பெரிதும் கலங்கச் செய்தது. அடிகளார் எவ்வித ஆபத்துமின்றிக் குணமடைய வேண்டுமேயெனும் கவலை அடிகளாரின் மாணவரான 'ஏ.பெ.' பிள்ளையினை வருத்தியது. தமது குருவைச் சென்று பார்த்திட முடியாத நிலை் எழுதவும் இயலாதபடி கையும் வாத நோயினால் செயலற்றிருந்தது. தமது மாணவரொருவரை வரவழைத்து, 'மீட்சிப்பத்து' என்னும் தலைப்பில் பத்துப் பாடல்களைத் தாம் பாடியபோது எழுதுவித்து, அதனை வைத்தியசாலையிலிருந்த அடிகளாருக்கு அனுப்பி வைத்தார். அடிகளார் சுகமே மீள்வார்களாக எனக் கூறுமாறு பைங்குயிலை இரக்கும் இப்பாடல்கள், முத்தமிழ் விற்பனரான அடிகளாரைப் பெரிதும் குழைந்துருகச் செய்து விட்டனவாம். அடிகளார் இப்பாடல்களைப் படித்து மன அமைதியும் ஆறுதலு மடைந்ததாக, அவர்கள் 'ஏ.பெ.'பிள்ளைக்கு கடிதமெழுதினார்களாம். பின்வரும் பாடல் மீட்சிப்பத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

காரே றுந்திரு மூதூர்த் தாய்தரு கடவுட் காதல் மகன்
கருவிற் திருவுள கலைஞன் பெற்றோர் கண்ணிறை திரு மயிலோன்
ஏரேறும்படி கீழ்பால் மேல்பா லாக்கிநல் லிசை நட்டோன்

இமயத் தலையிற் தமிழ் முத்திரைவரை ஈழக் கரிகாலன்
சீரே றுந்தமி ழறிவர்க் காங்கில நூற்சுவை யினிதூட்டித்
தெருட்டும் புதுமைக் கபிலன் கலியுக தெய்வ அகத்தியனாம்
பாரேறும்புக ழாளன் மீள்கெனக் கூவாய் பைங்குயிலே
பன்மொழி விபுலா னந்தன் வாழ்கெனக் கூவாய் பைங்குயிலே

இதன் பொருள்: காரைதீவிலே பிறந்த அடிகளார், தெய்வக் காதல்கொண்டவர். தாயின் வயிற்றிலிருக்கும்போதே, கல்லாமற் பாதியறிவு கைவந்தவர். மயில்வாகனமென்னும் பிள்ளைப்பெயர் பெற்றவர். கிழக்கு மாகாணம் மேன்மையடையச் செய்தவர். இமயத்தில் தனது முத்திரையைப் பதித்த கரிகாற் சோழனைப் போன்று, தமிழின் இனிமையை நிலை நாட்டியவர். ஆரிய மன்னனான பிருகத்தனுக்கு தமிழ்மொழியின் சிறப்பினை உணர்த்திய சங்கப் புலவரான கபிலரைப் போன்று ஆங்கில மொழியறிவினைப் பெற்றுக்கொள்ள, வாய்ப்பின்றியிருந்த, அடிகளார் காலத்துத் தமிழ்ப்புலவர்களுக்கு ஆங்கிலக் கவிகளின் சிறப்புகளை விரித்துரைத்தவர். முத்தமிழுக்கு இலக்கணம் செய்த அகத்திய முனிவரைப் போன்று முத்தமிழிலும் வல்லவராயிருந்ததோடு, நூல்களுமியற்றியவர். வடமொழி, ஆங்கிலம், இலத்தின், பிரஞ்சு முதலிய பன்மொழிகளில் பாண்டித்தியம் உடையவர்.

சங்கச் சான்றோர் நடையிலும் பாக்கள் பாடியுள்ள பெரியதம்பிப்பிள்ளையவர்கள். சேரநாட்டின் நாநில மயக்கத்தினை, பொய்கையார் என்னும் புலவர் தாம் பாடிய புறநாநூற்றுச் செய்யுளொன்றிலே,

நாடனென் கோ ஊரனென் கோ
பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்பனென் கோ
யாங்கனம் மொழிமோ ஓங்குவார் கோதையைப்
புனவர் தட்டை புடைப்பின் அயலது
இறங்கு கதிர் அலமரு கழனியும்
பிறங்கு நீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங் கெழுமே.

என்று அழகுபடக் காட்டியமை போன்று, மட்டக்களப்புத் தமிழகத்தின் நாநிலமயக்கினையிட்டு கவிநயம் புலப்படுமாறு சிறப்புட பாடியுள்ளார். அப்பாடல் பின்வருமாறு:

திருவளர் தாமரைத் தெண்ணீர்ப் பொய்கைவாய்
உருவ ஒண்சிறாஅர் மலராய்ந் துழக்கலின்
செழுநீர்ப் பறவைத் தொழுதி ஆர்த் தெழுந்தே
கொழுமடற் தெங்கிற் குயிலோடு பயிலும்
தாட்டுணை ஆடவர் சதங்கைக்கூத்தொலி
சூட்டுமிசை மயிலந் தோகைதுயி லெழுப்பும்
மங்கையர் வள்ளைப் பாட்டிசை யமுதம்
கொம்பிடைக் கிள்ளையும் பூவையும் கூட்டுணும்
பால்மலி எருமைப் பகட்டொடு மயங்கி
மால்மருப் பியானை வனந்தொறுந் திரியும்
குடம்பொழி பசுவினம் கண்துயி லிடந்தொறும்
மடம்பயில் மான்களும் வண்புல் கறிக்கும்
இயற்கை யன்னை இனிது நடம்பயிலும்
நயத்தகு நலம்பொலி மட்டுநன் நாடே.

1943 ஆம் ஆண்டிலே. நோய்வாய்ப்பட்டிருந்த தமது துணைவியாரையும் அழைத்துக்கொண்டு, கொழும்பு அரசினர் வைத்தியசாலைக்குச் சென்ற 'ஏ.பெ.' பிள்ளையவர்கள், மனைவியை வைத்தியசாலையில் சேர்த்தபின், ஒரு மாதம் வரை அங்கு நிற்கவேண்டியவரானார். தமது நண்பரொருவரின் வீட்டிலே நின்று கொண்டு, மனைவியாரைப் பாரத்து வந்தார். இந் நாட்களிலே, நண்பரது வீட்டில் காணப்பட்ட, பகவத்கீதைச் சுலோகங்களடங்கிய சிறிய புத்தகமானது, துணைவியாரின் நோய் நிலையினால் கவலையடைந்திருந்த 'ஏ.பெ' பிள்ளையவர்களுக்கு ஆறுதலையும் சமாதானத்தையும் கொடுத்தது. மன அமைதியையும் ஏற்படுத்திற்று. தாம் இளமையிலிருந்து கடைப்பிடித்துவரும் சமரச, சமத்துவ, சன்மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்ட பகவத்கீதையானது 'ஏ.பெ.' பிள்ளையின் உள்ளத்தைத் தொட்டது. கீதையின் சுலோகங்களை

ஒவ்வொரு வெண்பாவாகப் பாடவேண்டுமென்னும் உணர்ச்சி அன்னாருக்கேற்பட்டது. கொழும்பில் நின்ற ஒரு மாத காலத்தினுள் நாலு அத்தியாயங்களுக்கும் சற்று அதிகமாகப் பாடிமுடித்தார்.

பகவத் கீதை வெண்பாக்களைத் தற்செயலாகக் காணக்கிடைத்த வீரகேசரியின் முன்னாள் ஆசிரியரான கே.பி. ஹரன் அவர்கள் அவ்வெண்பாக்களை 1944 ஆம் ஆண்டிலே வீரகேசரியில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்க ஏற்ற ஒழுங்குகளைச் செய்தார்.

வீரகேசரியில் பகவத் கீதை வெண்பாக்கள் வெளிவரக்கண்ட சுவாமி விபுலாநந்த அடிகளார், 'ஏ.பெ.' பிள்ளையினைப் பாராட்டியதோடு அவரைக் கொழும்புக்கு அழைத்து, வெள்ளவத்தை இராமகிருஷ்ண மடத்திலே, தமது தலைமையில் பகவத் கீதையையிட்டு விரிவுரைகளும் ஆற்றுவித்தார்கள்.

பல்வகைச் சுவைகளும், நிகழ்ச்சிகளும் நிறைந்த நளன் கதையை, வரையறுக்கப்பட்ட இலக்கணத்தையுடைய வெண்பாயாப்பு முறையிலே விரித்துக் கூறுவதில் ஈடுபட்டு, அதனை ஓசைச் சிறப்பும் கற்பனைத் திறமும் வெளிப்படுமாறு சிறப்புடன் பாடி, 'வெண்பாவிற் புகழேந்தி' என்னும் பெருமையினைத் தமதாக்கிக்கொண்ட புகழேந்திப் புலவரைப்போன்று, பக்திச் சுவையும் சமத்துவ உயர்வும், சம்பவ நிறைவும் கொண்ட பகவத் கீதையை, கற்போர் உள்ளத்தைக் கவரும் வண்ணமும், உணர்ச்சி யோட்டமானது உயிர்த்துடிப்போடிருக்கத் தக்கதாயும் பாடிய பெரியதம்பிப்பிள்ளையவர்கள், புலவருலகிலே நிலையான புகழினைப் பெற்றுக்கொண்டார்.

'ஏ.பெ.'பிள்ளையின் பகவத் கீதை வெண்பாக்கள் வெளிவந்து கொண்டிருந்த காலத்திலே, இலங்கை வானொலியினர் நடாத்திவந்த 'புத்திமண்டல'த்திலே இலங்கையில் வெண்பாப்பாடுவதில் 'மிகச் சிறந்தவர் யார்?' என்னும் வினாபற்றி அறிஞர்கள் ஆராய்ந்து ஈற்றிலே 'வெண்பாவிற் பெரியதம்பி' என்னும் ஒருமனதான முடிவினையே அடைந்தனர்.

இவ்வாறான புகழினை 'ஏ.பெ.' பிள்ளையவர்களுக்கு ஈட்டிக்கொடுக்கக் காரணமாயமைந்த, பகவத்கீதை வெண்பாக்கள்,

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட .பாஷாபிவிருத்திச் சங்கத்தின் இருபத்தெட்டாவது ஆண்டு விழாவிலே, கையெழுத்துப் பிரதி ரூபத்தில் அரங்கேசுற்றப்பட்டது. அப்போது பெரியதம்பிப் பிள்ளையவர்களின் உற்ற நண்பரான சி. க. பிள்ளையவர்கள்,

கீதை கவிசெய்து கீர்த்தி மிகப்பெற்றான்
ஏபெரிய தம்பி எனதன்பன் – ஓதக்கேள்
பாட்டுக் கொருபுலவன் பாரதியென் றாரொருவர்
பாட்டுக் கிவனென்பன் யான்..

எனப்பாடி சாற்றுகவி அளித்தனர். தமிழன்னைக்கு 'ஏ.பெ.' பிள்ளையவர்கள் செய்த இத்தொண்டினை விழாவிலே பங்குகொண்ட டாக்டர் இராசமாணிக்கனார், திரு. சு. நடேசபிள்ளை முதலிய அறிஞர்கள் விதந்தேற்றினர். தமிழ்பேசும் மக்களனைவரும் ஒரு முகமாகப் பாராட்டினர்.

பின்வரும் வெண்பாக்கள் பகவத்கீதை வெண்பாக்களிலிருந்து எடுக்கப்பட்டவையாம்:

ஆரியாக்கா காதுகாண் அம்மை வழியடைக்கும்
பாரிற் பெரும்பழியும் பாரிக்கும் – காரியத்தே
கைகலந்த காலைக் கலங்குவை நீ இக்கலக்கம்
எய்தியதுன் பாலெங் கிருந்து.

இல்லை பிறத்த லிறத்தல் பழம்பொருளி
தில்லா திருந்திடையி லெய்தலிலை– தொல்லை
பிறப்பற் றழிவற்ற பேரான்மா தேகம்
இறப்ப வழி யாதுநிற்கு மே.

ஐந்துள் அடக்குமோர் ஆமையெனப் புறத்தே
சிந்தும் விடயத்திற் செல்புலன்கள் – ஐந்தும்

இசையாமை யப்பொருளி னீர்த்தடர்ப்பான் கட்டே
அசையாமை கொண்ட அறிவு.

பெரியதம்பிப்பிள்ளையவர்கள் சிலேடைப் பாக்கள் பாடுவதிலும் புகழ்பெற்றவராயிருக்கிறார்.

பிரபல கல்விமானும், தற்போதைய இலங்கைச் செனட்சபை உறுப்பினருமான ஜனாப் ஏ.எம்.ஏ. அசீஸ் அவர்கள் 1942 ஆம் ஆண்டில் கல்முனையிலே உதவி மாகாண அதிபராகக் கடமையாற்றியபோது, அன்னாரது சிறந்த நிர்வாகத் திறமையினை நேரடியாகக் கண்டறிந்த 'ஏ.பெ.' பிள்ளையவர்கள்,

புலத்துயர்ந்து வண்மைப் புகழ்க்கதிர்கள் வீசி
நிலத்ததிகா ரஞ்சேய்து நின்று –பலத்தினிறை
நல்ல களம் பொழிந்து நாடு புரத்தலால்
நெல்லும் அசீஸ் துரைக்கு நேர்.

என்னும் சிலேடைக்கவி மூலம் சிறந்த முறையிலே போற்றியுள்ளார்.

இதன் சிலேடைப் பொருள்: புலம்: நெல்லுக்கு வயல் அசீஸ் அவர்களுக்கு அறிவு. கதிர்: நெற்கதிர் அசீஸ் அவர்களின் புகழ் ஒளி. அதிகாரம்: நெல் அதிகரித்தல் அசீஸ் அவர்கள் அதிகாரம் செய்தல். களம்: நெற்களம் கற்றோர் அவை. நாடுபுரத்தல்: நெல் மக்களின் உணவாயிருந்து மக்களைக் காப்பாற்றுதல் அசீஸ் அவர்கள் தமது பகுதியினை நிர்வகித்தல்.

பண்டிதர் மகாலிங்க சிவமவர்கள், இயற்கையெய்தியஞான்று, ஏ.பெ. பிள்ளை பாடிய இரங்கற் பாக்களுள் ஒன்று சிலேடையாக அமைந்து, பொருள்நிறைந்து போற்றப்படத்தக்கவகையில் இருக்கிறது. அப்பாடல் பின்வருமாறு:

தண்முகம் சேர்ந் தொழுகிவிளை புலம்நிரப்பச்
சமத்துவமாய்ச் சார்வோர் கொள்ள

உண்முகம்சேர் அகம்புறமாம் ஒண்பொருளின்
வளம் பெருக்கும் உபகாரத்தால்
மண்முகம் சேர் மகாவலிகங் கைக்கிணையாம்
மகாலிங்க சிவனா ரின்று
விண்முகம் சேர்ந் திடுதுயரம் தமிழுலகம்
தாங்கிடுமோ விதியி தாமோ.

இதன் சிலேடைப்பொருள்: தண்முகம்: ஆற்றினது குளிர்ச்சியான மேற்பரப்பு சிவத்தாரது குளிர்ந்த முகம். ஒழுகுதல்: ஆற்றினது ஓட்டம் சிவத்தாரது வாழ்க்கை ஒழுங்கு. விளைநிலம் நிரப்பல்: ஆறானது வயல் நிலத்தை நிரப்புதல் சிவத்தார் மாணவர்களது அறிவினை நிறைவாக்குதல். சமத்துவம்: எல்லாநிலமும் எல்லா மக்களும் சமம் எல்லா மாணவர்களும் சமம். உள்முகம்: ஆற்றினது உள்ளிடம் சிவத்தாரது உள்ளம். அகம்புறமாய்: ஆறானது கீழே உள்ளதை மேலே கொண்டுவருதல் சிவத்தார் அகப் புறப் பொருள்களைக் கற்பித்தல். ஒண்பொருளின் வளம்: பொருளாதாரத்திற்குரிய நிலவளம் அறிவிற்குரிய மனவளம்.

தமிழ்மொழியின் சிறப்பினையும், அம்மொழியினை நாம் பேணிக்காக்கவேண்டிய கடப்பாடுடையோம் என்பதையும்,

மன்னர் வளர்த்தமொழி மாநில மாண்டமொழி
பன்மொழி வாணர்களும் பாலித்துக் காத்த மொழி
உண்ணுமுணவில் நீரில் உயிரில் இனிய மொழி
கண்ணிற் சிறந்திடுநம் கன்னித் தமிழ் மொழியைக் காப்போம்.

என்னும் கவிதைமூலம் பெரியதம்பிப்பிள்ளையவர்கள் காட்டியுள்ளார்.

பணம், பட்டம், பவிசு யாவும் பெற்றிருந்தும், மன அமைதி கிடையாதோராய், இன்பமெங்கே என்று தேடியலைபவர்களைப் பார்த்து 'ஏ.பெ' பிள்ளையவர்கள்,

மாட மாளிகை மாமனை நன்மக்கள்
மாசில் சுற்றம் மனமொத்த நண்பர்கள்
தேடு கல்விசீர் செல்வ மதிகாரம்
தேக நற்சுகம் யாவையும் சேர்த்துமென்
நாடு முற்றும் வறுமை சிறுமையும்
நலியும் தீப்பிணி யுங்குடி கொண்டிடில்
கூடுமோ நமக்கின்பம் நம் சோதரர்
குறைகள் தீர்த்திடில் இன்பம் குலாவுமே:

என்று சமூகப் புரட்சி செய்பவராகப் பாடுகின்றார்.

'ஏ.பெ' பிள்ளையவர்கள் நினைத்த மாத்திரத்தே பாடல்களைப் பாடக்கூடிய ஆசுகவியாகவும் இருக்கிறார். உணர்ச்சி தூண்டப்படும் சந்தர்ப்பங்களில் அழகான கவிதைகள் பல வெளிப்பட்டிருக்கின்றன.

ஒருநாள் பயணம் செய்வதற்காக 'ஏ.பெ' பிள்ளை மட்டக் களப்பு வசுநிலையத்தை அடைந்தார். வண்டியில் இருப்பதற்கு இடமில்லை. முன்னாலிருந்த ஆசனத்தில் மட்டும் இரண்டு பேருக்குரிய இடமிருந்தது. அங்கு சென்றிருக்கலாமெனப் போன பெரியதம்பிப்பிள்ளை அவர்களை, கண்டக்டர் இருக்க விடவில்லை. அந்த இடம் இரண்டு ஐயாமாருக்கென வைக்கப்பட்டிருப்பதாக அவன் கூறினான். காற்சட்டை அணிந்து, ஆங்கிலம் பேசுவதற்காக மட்டும் ஐயாமாரென உயர்த்திக் கூறப்படும் பிரிவினருக்கு சமுதாயம் கொடுக்கும் மதிப்பையும் மரியாதையையும் கண்ட 'ஏ.பெ' பிள்ளை உணர்ச்சியால் உந்தப்பட்டார். அதன் விளைவே பின்வரும் பாட்டாகும்:

முன்னே வழக்கால் முளைத்தநாற் சாதிபோய்ப்
பின்னை யிருசாதி பிறந்ததுகாண் – அன்னியர்தம்
ஆங்கிலத்தால் மேல்சாதி ஆயிற்றே தாய்மொழிகற்
றேங்கிநிற்கும் கீழ்சாதியே.

'ஏ.பெ' பிள்ளையுடன் பிரயாணம் செய்த எனது நண்பரொருவர் மூலம் கிடைத்த இப்பாடலுடன் சேர்த்து 'ஏ.பெ' பிள்ளை பாடிய

பிறிதோர் பாடலான,

இந்து மகா சமுத்திரத்தின் நடுவி லீஙகோர்
இங்கிலாந் தமைந்துகிடந் ததுவே வென்ன
முந்துசீர் நாகரிகம் பழக்கம் வாழ்வு
மொழிப்பயிற்சி கலையுணர்ச்சி முழுதும் மாறிப்
பந்த முறு வெறும் போலிப் பகட்டில் மோகப்
பட்டுப் பாழ்பட்டாவி பதைத்து வீழ்ந்து
சிந்தனையற் றிடுமாலங்கா தேவி யுள்ளம்
தேசிய மயமாகத் திகழ்வ தென்றே.

என்பதையும் 'சி.க' பிள்ளையவர்கள் 'தமிழல்லாத்தமிழ்' என்னும் கட்டுரையின் முடிவிலே எழுதியுள்ள,

இருள் தரும் உலகத்தே இங்கிலி சுருவாகி
மருள்தரு கலிகாலம் மயல்செயு மதனாலே
அருமறை நெறிபோக அறமது புறமாகக்
குருடொரு குருடுக்குக் குழிவழி செயுமன்றே.

என்னும் பாடலையும் சேர்த்துப் படிப்பவர்கள் பெரியார்களிருவரதும் கருத்து ஒருமைப்பாட்டினையும், ஒத்த நோக்கினையும் கண்டு கொள்வர்.

எமது தாய் நாடாம் ஈழநாட்டினைப் பற்றி பெரியதம்பிப் பிள்ளையவர்கள் பாடியுள்ள,

இலங்கை மணித்திருநா டெங்கள் நாடே – இந்த
இனிய உணர்ச்சி பெற்றால் இன்ப வீடே.

என்று தொடங்கும் புகழ்பெற்ற பாடலை பாரதியாரின்,

செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே.

என்னும் பாடலுடன் இணைத்துப் பார்ப்பவர்கள், இரு பெரும் புலவர் பெருமக்களதும், நாட்டுப்பற்றினைக் கண்டு கொள்வதோடு, இருவர்தம் கவித்துவ ஆற்றலையும் அறிந்துகொள்வர். 'ஏ.பெ.' அவர்களது மேற்படி பாடலிற் காணப்படும் தேசிய ஒருமைப்பாடும், சமரச நோக்கும் அப்பாடலை, இலங்கையின் தேசியகீதமாகக் கொள்ளவே செய்கிறது.

மட்டக்களப்பு அரசினர் கல்லூரியிலே குறைந்த வேதனம் பெற்றுக்கொண்டு தமிழாசானாய் இருந்த போது, அக்காலத்தில் வித்தியாதிபதியாகக் கடமை பார்த்த திரு. கே. எஸ். அருள்நந்தி அவர்கள், இக்கல்லூரியினைப் பார்ப்பதற்காக வந்திருந்தார். அப்போது,

தாப்பில லூச லெனத்தடு மாறும் தனித்துயர் யான்
நீப்பியலாது தமிழா சிரிய நிலையி லிங்கே
யாப்பியல் மெய்போல் மதிப்பிலனாகி யிருத்தல் நன்றோ
காப்பியம் வல்ல அருணந்தி செந்தமிழ் காவலனே.

என்று பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பாடிய பாட்டானது அருள்நந்தி அவர்களைப் பெரிதும் கவர்ந்து விட்டதாம்.

சமத்துவ, சமரச நோக்குடையவரான 'ஏ.பெ' பிள்ளை அவர்கள், புத்த பெருமானையிட்டுப் பாடிய பின்வரும் பாடலானது அவரின் மனநிலையை வெளிப்படுத்திக் காட்டுகிறது:

மண்ணுலகிற் பிணிமூப்புச் சாக்காடு
  வருவதன் முன் மக்கள் வாழ்விற்
தண்ணளி சேர்ந் துயிர்க் கொலையும் தீமைகளுந்
  தவிர்த்துமனச் சாந்தி கண்டு
பண்ணுபவ வினைத்துயரம் பற்றாமல்
  அருள் நெறியே பாலித் தாண்டு
புண்ணியமே வடிவான புதுவாழ்விற்
  புகுத்துமகான் புத்தர் கோமான்.

தமிழ் பேசும் மக்களாகிய இந்துக்களினதும் முஸ்லிம்களினதும்

ஒற்றுமையை விழைபவரான ஏ.பெ. பிள்ளை,

இருதயத்தின் ஈரிதழ்போல் இந்துமுசி லீம்கள்
ஒருவயிற்றுப் பாலகர்போ லுள்ளோம் – அரசியலில்
பேராசை கொண்டோர் பிரித்துநமை வேறாக்க
ஆராயார் செய்வர் அழிவு.

என வெகு அழகாக எடுத்தியம்பியுள்ளார். மொழியால் இணைந்துள்ளவர்களைப் பிரிக்க முயல்வதானது அழிவுப்பாதையிற் கொண்டுபோய் விட ஏதுவாயமையுமென்பதே 'ஏ.பெ' பிள்ளை யவர்களது நம்பிக்கையாம்.

உரை நடை இலக்கியத்தில் அதிகமாக ஈடுபட்டு, எவ்வாறு கணபதிப்பிள்ளையவர்கள் தமிழ்ப்பணியாற்றி வருகிறாரோ. அவ்வாறான பணியினைச் செய்யுள் இலக்கியத்தின் மூலம் பெரிய தம்பிப்பிள்ளையவர்கள் செய்து வருகிறார்.

அதற்கு அவர்; இதற்கு இவர்.

# காவிய வகுப்பின் ஆசிரியர்

சி.வை தாமோதரம்பிள்ளையவர்களுக்கும் வேறு பலர்க்கும் ஆசிரியராய்த் திகழ்ந்த, முத்துக்குமார கவிராயரவர்களின் வமிசத்தில் பிறந்த, குமாரசுவாமிப் புலவரவர்களே காவிய வகுப்பின் ஆசிரியராவர். வித்துவ பரம்பரையில் பிறந்தவரான புலவரவர்கள், மல்லாகம் ஆங்கில பாடசாலையிற் படித்ததோடு, பண்டித சிகாமணி முருகேசு பண்டிதரிடம் இலக்கண இலக்கியங்களும், நாகநாத பண்டிதரிடம் சமஸ்கிருதமும் பாடங்கேட்டு முறையான அறிவு வரப் பெற்றவராவர். கவிபாடுவதிலும், கட்டுரை எழுதுவதிலும், சொற்பொழிவாற்றுவதிலும் வல்லுநராய் விளங்கிய புலவரவர்கள், ஆறுமுகநாவலரவர்களிடமும் தமது சந்தேகங்கள் சிலவற்றைக் கேட்டுத் தெளிந்ததோடு அன்னாரது பாராட்டினையும் பெற்றுள்ளார்.

புலவரவர்கள் துணுவைப்பதிகம், மாவைப்பதிகம், அத்தியடிவிநாயகரூஞ்சல், அமராவதி பூதூர்பால விநாயகர்பதிகம், மேகதூதக்காரிகை, முதலிய பல நூல்களை இயற்றியதோடு, திருகோணமலை கனகசுந்தரம் பிள்ளையவர்களுடன் சேர்ந்து, கம்பராமாயணம் பாலகாண்டத்திற்கு ஓர் அரும்பத உரையும், அகப்பொருளுக்குப் புத்துரையொன்றும் எழுதியுள்ளார். தண்டியலங்காரப் புத்துரை, யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை, இலக்கியச் சொல்லகராதி, தமிழ்ப்புலவர் சரித்திரம், இதோபதேசம், சிசுபாலசரிதம் முதலியவையும் புலவரால் இயற்றப்பட்டவையே.

இத்தகைய புகழ்படைத்த புலவர் பெருமானவர்கள், ஞாபகசக்தியும் நுண்மாணுழைபுலமும் வாய்க்கப் பெற்றிருந்ததோடு தாம் கற்றனவற்றையும், அறிந்தனவற்றையும் மற்றவர்களும் அறிந்திடவேண்டுமென்னும் பெருநோக்குடையவராயும் திகழ்ந்தார்.

புலவரவர்கள் காவிய வகுப்பின் ஆசிரியர் பிரானாயமர்ந்ததும், அவர்களுடைய மாணாக்கர்களாக 'சி.க' பிள்ளையும், 'ஏ.பெ' பிள்ளையும் வந்து வாய்க்கப்பெற்றதும் சிறப்புடையதொன்றேயாம். நல்லாசிரியரும்,

நன் மாணாக்கர்களும் வாய்க்கப்பெறின், அதன் பெறுபேறுகளை அளவிடவும் முடியுமோ?

## காவிய வகுப்பின் கல்விமுறை

ஆசிரியருக்கும் மாணவர்களுக்குமுள்ள தொடர்பானது பற்றோடு கூடியதாகவோ, இறுக்கமான அன்புடன் இணைந்ததாகவோ அமைந்திராத தற்காலக் கல்வி முறைக்கு, முற்றிலும் வேறுபட்டவொரு கல்விமுறையே அக்காலத்திலிருந்தது. மாணாக்கரின் தகுதியறிந்து, ஆசிரிய – மாணவ பற்றினை – அன்பினை அடிப்படையாகக் கொண்டு, தூய்மையான சூழலிலே, வெகு நிதானமாகக் கற்பிப்பதே அக்காலக் கல்வி முறையாக இருந்தது. குரு சீடமரபான பரம்பரையிலே அமைந்த இத்தகைய கல்வி முறையில், பரீட்சைக்குத் தோற்றுவதற்கென படிப்பிக்கும் வழக்கமும் படிக்கும் வழக்கமும் இருக்கவில்லை. மொழியினைத் துறைபோகக்கற்று, நிறைவான புலமையினைப்பெற்றுக் கொள்ளுவதையும், பிற்கால வாழ்க்கையைப் பயனுடையதாய் ஆக்கிக்கொள்ளுவதற்கு வேண்டிய பயிற்சியினைப் பெறுவதையுமே நோக்கமாகக் கொண்டு, அதற்கேற்ற கல்வியானது போதிக்கப்பட்டு வந்தது.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என வள்ளுவப் பெருந்தகை வலியுறுத்திக் கூறும் கல்வியின் நோக்கத்தினை இங்கு அவதானிக்க முடிகிறது.

இந்த அடிப்படையிலமைந்த காவிய வகுப்பிலே, மாணவர்களுக்கு நிறைவான அறிவைக் கொடுப்பதற்குரியவகையில் பாடங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டுப் போதிக்கப்பட்டன. நிறைந்த பலனைப்பெற இதனால் மாணவர்களுக்கு வழியேற்பட்டது.

காவிய வகுப்பிலே, தற்போது வழக்கிலுள்ளதைப் போன்ற பரீட்சைகளெதுவும் இல்லாதுவிட்டாலும், மாணாக்கரின் பெறு

பேற்றினை அறிவதற்குமட்டும், அக்காலத்திலே யாழ்ப்பாணத்தில் சேர் பொன்.அருணாசலம் அவர்களைத் தலைவராகக் கொண்டிருந்த, செந்தமிழ்ப் பரிபாலன சங்கமானது, சில பரீட்சைகளைக் காலத்துக்குக் காலம் நடாத்தி வந்தது. பேரறிஞர்கள் பலரை உறுப்பினர்களாகக் கொண்டிருந்த இச்சங்கத்தின் சிறப்புக் கூட்டங்களிலே, பொதுமக்களின் முன்னிலையில் 'கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே' என்னும் முறையில் வாய் முறையாக மாணவர்கள் பரீட்சிக்கப்பட்டனர். திறமைகாட்டும் மாணவர்கள் பாராட்டுதல்களோடு பரிசுகளும் பெற்றுக்கொள்வர்.

மேற்படி சங்கத்தினர், நாவலர் பாடசாலையிலே ஒருநாள் பரீட்சையொன்றினை நடாத்தினார்கள். அப்பரீட்சைக் குழுவுக்கு பெரும் கல்விமானாய் விளங்கிய சேர். கனகசபை அவர்கள் தலைமை தாங்கினார்கள். பரீட்சை மண்டபத்தைப் பேரறிஞர்களும், பண்டித வித்துவான்களும் அலங்கரித்துக் கொண்டிருந்தனர். விபுலாநந்த அடிகளாரும் வீற்றிருந்தார்கள். அறிஞர்கள் வினாவிய வினாக்களுக்கெல்லாம் சிறந்தமுறையில் விடையளித்து, கணபதிப்பிள்ளையவர்கள் முதற்பரிசினையும், பெரியதம்பிப் பிள்ளையவர்கள் இரண்டாம் பரிசினையும் பெற்றுக்கொண்டார்கள், 'சி.க' தாம் பெற்றுக்கொண்ட சீவக சிந்தாமணியையும், 'ஏ.பெ' தாம் பெற்றுக்கொண்ட சிலப்பதிகாரத்தையும், இன்றும் பெருமையுடன் பேணி வைத்துள்ளனர். தமது மாணாக்கர் சிறந்த முறையில் விடையளித்து, பரிசில்கள் பெற்றுக் கொண்டதைக் கண்ட புலவரவர்கள்,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

என்னும் நிலையினரானார்கள். புலவரவர்கள் தங்கள் மாணாக்கர்களனைவரிலும், இவ்விருவர்மாட்டே மிக்க அன்புடையவராயிருந்தார்களென்பதையிட்டு அன்னாரின் புத்திரரான கு. அம்பலவாணபிள்ளையவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'இங்கும் அநேக மாணவர்கள் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும், வெளியூர்களிலுமிருந்து வந்து கல்வி பயின்றனர்.... அவருட் சிலர் இருபாலை மு.வேதாரணிய தேசிகர், உடுவில் வ.மு. இரத்தினேஸ்வர ஐயர்... மட்டுவில் பண்டிதமணி சி.கண பதிப்பிள்ளை, மட்டக்களப்பு ஏ. பெரியதம்பிப்பிள்ளை என்போர். இவர்களில் ஈற்றில் காட்டப்பட்ட இருவரும் மேற்படி வித்தியா சாலையிலன்றித் தந்தையார் வாதநோயாற் பீடிக்கப்பட்டிருந்த காலத்து இல்லத்திலும் வந்து தொடர்ச்சியாகக் கற்றவர்கள் தகப்பனாரின் அன்புக்கும் உரியவராகவிருந்தவர்கள்.' (ஈழகேசரி வெள்ளிவிழா மலர்)

சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர் படம்




# புலவர்மணிக்குப் பண்டிதமணிப்பட்டம்

யாழ்ப்பாணம் ஆரிய திராவிடா பாஷாபிவிருத்திச் சங்கத்தார், தங்கள் சங்கத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டு விழாவினைக்கொண்டாடியபோது, அவ்விழாவோடிணைத்து விசேட பட்டமளிப்பு விழாவொன்றினையும் நடாத்தினர். 1952ஆம் ஆண்டு நடந்தேறிய இப்பட்டமளிப்பு விழாவின்போது பகவத்கீதையை வெண்பாவாகப் பாடிய பெரும்புலவரான புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளையவர்களுக்கு 'பண்டிதமணி' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. புலவர்மணிக்குப் பட்டம் வழங்கப்பட்ட அதே விழாவிலே, மகா வித்துவான் கணேசையா அவர்களுக்கு வித்துவ சிரோமணிப் பட்டமும், பண்டிதமணி நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்களுக்குப் புலவர்மணிப் பட்டமும் வித்துவான் சுப்பையா பிள்ளை அவர்களுக்கு பண்டிதமணிப் பட்டமும் வழங்கப்பட்டன.

அப்பட்டமளிப்பு விழாவினைப் பற்றி எழுதிய கல்கிப் பத்திரிகையானது புலவர்மணியவர்கள் பட்டம் பெற்றமையைப் பற்றிக் குறிப்பிடுமிடத்தில்,

'சுன்னாகம் ஸ்ரீ குமாரசுவாமிப் புலவர், முத்தமிழ்ப் பேராசிரியர் விபுலாந்த அடிகளார் ஆகிய இரு பெரும் புலவர்களிடம் பாடங்கேட்டுப் பண்டிதராய் விளங்கும் திரு. ஏ. பெரியதம்பிப் பிள்ளையவர்கள், மட்டக்களப்புத் தமிழகத்தைத் தாயகமாகக் கொண்டவர்கள். செந்தமிழ்ச் சுவை நனி சொட்டச் சொட்டச் தேனினுமினிய பாடல்களை பொழியுந்திறன் இவருக்கு இயற்கையாகவே உண்டு', என மிக அழகாக எழுதியுள்ளது.

நன்றி: (வாழையடி வாழை எனும் நூலிலிருந்து)



1. 12. 52, யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாசாபிவிருத்திச் சங்கத்தின் 29வது ஆண்டு விழாவில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் புலவர்மணிக்கு பண்டிதமணிப் பட்டம் வழங்கப்பட்ட படம்.
புலவர்மணி, பேராசியர் தெ.போ. மீனாட்சி சுந்தரநாருடன் காணப்படுகின்றார்.

# புலவர்மணி நினைவு விழா

– கே. விஜயன் –

கொழும்புத் தமிழ்ச்சங்கம் ஒரு நிறைகுடம். ஆர்ப்பாட்டமில்லாது தமிழப்பணி புரிந்து வருகிறது. கந்தசாமி மாஸ்டர், புலவர் த. கனகரத்தினம், குமார் வடிவேல் போன்ற சிறந்த தமிழ் மணக்கும் நெஞ்சங்களைத் தூணாகக் கொண்டு அரும் பணிகள் ஆற்றி வருகிறது. எவர் மறந்தாலும் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த தமிழ்ப் பெரியார்களை கனம் பண்ணவும் நினைவு கூரவும் அவர் புகழ் பரப்பவும் இப்பெரியார்கள் மறப்பதில்லை. மேன்மைமிகு இச்செயல் வரிசையில் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் 96ஆவது பிறந்தநாள் விழாவை கொண்டாடியதும், அவர் புகழ் பாடியதும் ஓர் அரும் செயலாகும். இவ்விழாவில் தமிழ் மணந்தது என்றால் அது மிகையல்ல.

8.1.95இல் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் இவ்விழா நடந்தது. 'புலவர்மணியும் தமிழும்' என வித்துவான் க. ஞானரத்தினம் சொற்பொழிவாற்றவும், பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராசன் தலைமையில் புலவர் த. கனகரத்தினம், இரா. மயில்வாகனம், ஏ.ஜே. சரிபுத்தீன், சிறீகுமாரி கதிரித்தம்பி கவிபாடவும் ஏற்பாடாகியிருந்தது. மிகமிக சிக்கன ஏற்பாடுதான். எனினும் விழா முடிந்ததும்தான் அதன் 'கனம்' புரிந்தது. மணித்தியாலக்கணக்கில் ஒரு நூலினைப் படித்து முடித்து பெற்ற தகவல்களை விழா தந்தது.

கூட்டத்திற்கு தலைமை வகித்த சங்கத்தின் உப தலைவரும் இந்து சமய கலாசார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளருமான குமார் வடிவேல் தனது உரையில் புலவர்மணியைப் பற்றியும் அவரது படைப்புகள், அவர் பிறந்தது, வளர்ந்தது, கல்வி கற்றது, தமிழ்ப்பணி புரிந்தது என்ற தகவல்களையும் ஓர் ஒழுங்கான வரிசையில் முன்வைத்தார்.

வித்துவான் க. ஞானரத்தினம் இன்னும் கொஞ்சம் ஆழமாக ஊடுருவி தமிழ்மணியின் வாழ்வில் நிகழ்ந்த பல சம்பவங்களை முன்வைத்தார்.

பத்து வயதிலே செய்யுள் எழுதும் ஆற்றல் பெற்றதும் நிகண்டு போன்ற தமிழ் இலக்கண நூல்களைக் கசடறக் கற்றுத் தேர்ந்ததும் அரிய தகவல்களாகும்.

மக்களை சாதி என்றும் மதம், மொழி என்றும் பிரித்து வைப்பது அரசியலே என்பதை அன்றே புலவர்மணி சுட்டிக் காட்டினார் என்பதற்கு ஆதாரமாக அவர் பாடிய செய்யுள்களை வித்துவான் பாடிக் காட்டினார்.

தமிழ்நாட்டில் 'கல்வி கற்றுக்கொண்டிருந்த நாள்கள் பாரதியுகமாகவிருந்தது. பாரதியின் தேசிய பாடல்கள் எழுச்சி அலைகளை கொந்தளிக்கச் செய்துகொண்டிருந்த காலம் புலவர்மணியும் இவ்வெழுச்சியலையில் சிக்குண்டார்.

'இலங்கைமணித் திருநாடெங்கள் நாடே!' அப்பொழுது பிறந்தது தான்.

சமஸ்கிருதத்திலிருந்த பகவத்கீதையை வெண்பாக்கள் வடிவில் தந்ததும் எளிமையும் சுவையுமிக்க செய்யுள்களை புதுக் கவிதைகள் பாணியில் யாத்ததும் தமிழுக்குச் செய்த பெரும் தொண்டுகளாகும். இத்தகைய சில செய்யுள்களை வித்துவான் பாடிக்காட்டினார். 'உள்ளதும் நல்லதும்' அவரால் எழுதப்பட்ட சிறந்த ஓர் உரைநடை நூலாகும்.

'குதிரைக்கவி' என பல்சுவை வேந்தர் சில்லையூர் செல்வ ராசனை புலவர்மணி ஒருமுறை குறிப்பிட்டாராம். அதுகேட்டு கிண்டலும் கொக்கரிப்பும் அவையில் எழுந்தபொழுது கையமர்த்திய புலவர்மணி "குதிரைக்கு எத்துணை நடை, குதி, மிதி, பாய்ச்சல் இப்படி எத்தனையோ. மொழியில் அத்துணை நடையழகு படைத்தவன் சில்லையூரான். அதைக் குறிப்பிட் டேன்" என்றாராம். கவியரங்கிற்குத் தலைமை வகித்து கவித்துவமுடன் பாடினார் பல்கலைவேந்தர்.

கவிஞர்கள் யாவரும் கவிமழை பொழிந்தார்கள். புலவர்மணியின் புகழ், செயல், அவர் பங்களிப்பு அனைத்தும் செம்மையாக இவற்றுள் அடக்கப்பட்டிருந்தன. புலவர் த. கனகரத்தினம் செழுந்தமிழில் பாயாத்து புலவர்மணி புகழ்பாடி அவர் ஒரு தேசிய கவி என முழங்கினார்.

1980ஆம் ஆண்டிலே புலவர்மணியின் உருவப்படத்தை திரை நீக்கம் செய்து அவரை நினைத்துப் பார்த்தது தமிழ்ச்சங்கம்தான். அதனை புலவர்மணியின் மைந்தன் பெ. விஜயரட்ணம் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

96 ஆண்டுகள் கடந்துவிட்டன. அவரது நூற்றாண்டை நெருங்க இன்னும் சில ஆண்டுகளே உள்ளன. இவ்விழா அவரது நூற்றாண்டு விழாவிற்கான அடித்தளமாக அமையுமானால் அது நம்மொழிக்குச் செய்யும் பெரும் தொண்டாகும். அதற்கான கைங்கரியங்களில் கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் உயிரும் ஜீவனுமான, செல்லமாக 'கந்தசுவாமி மாஸ்டர்' என அழைக்கப்படும் அதன் பொதுச்செயலாளர் க.இ.க. கந்தசுவாமி மற்றும் புலவர் த. கனகரத்தினம், குமார் வடிவேல் போன்ற நெஞ்சங்களும் தமிழ் மணக்கும் அறிஞர்களும் முன்சங்கல்பம் செய்துகொள்வார்கள் எனத் துணிவுடன் கூறலாம்.

நன்றி:- வீரகேசரி 08-11-1995



கொழும்புத் தமிழ் சங்கத்தில் நடைபெற்ற புலவர்மணியின் 96வது நினைவுதின விழாவில், டாக்டர் குமார் வடிவேல் அவர்கள் தலைமையில் திருமதி. வடிவேல் அவர்கள் தமிழ் வாழ்த்துப் பாடுகின்றார்.

# புலவர்மணியும் தமிழும்

– வித்துவான் க. ஞானரெத்தினம் –

**கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் புலவர்மணி ஏ. பெரிய தம்பிப்பிள்ளை அவர்களின் 96வது நினைவு தினத்தில் ஆற்றப்பட்ட சிறப்புச் சொற்பொழிவு**

அறிவுசார் தலைவர் அவர்களே, எனது கலை நண்பரும் பல்கலை வேந்தருமாகிய சில்லையூர் செல்வராஜன் அவர்களே, புலவர் கனகரெட்ணம் அவர்களே, எனது மாணவன் செரிபுதீன் அவர்களே, இங்கிருக்கின்ற தமிழ்ப்பெரியார்களே, உங்கள் யாவர்க்கும் எனது அன்பு வணக்கம்.

முதலில் புலவர்மணி ஐயாவின் இந்த 96வது வயது விழாவிலே பேச அழைத்தமைக்காக பொதுவாக கொழும்பு தமிழ்ச்சங்க செயற்குழுவினருக்கும் சிறப்பாக அவரின் மகனாகிய விஜயரெட்ணம் அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறி பேச்சை ஆரம்பிக்கின்றேன்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே – நலம் மிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே – நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே – அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று"

புலவர்மணி ஐயா ஒரு நல்லவர்: அவரைக் காண்பது நன்று. கண்டிருக்கின்றேன். "நலம் மிக்க நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே"– அவர் கூறிய அறிவுரைகளை, புத்திமதிகளை நான் கேட்டிருக்கின்றேன். இப்பொழுது அவரின் குணங்களை உரைப்பதற்காக உங்கள் முன் வந்திருக்கின்றேன்.

ஒரு நாள் நான் கொழும்புக்குப் புகைவண்டியிலே பயணம் செய்த பொழுது ஐயா அவர்களை நான் கண்டேன். அவர் என்னோடு பிரயாணம் செய்தார். நான் கேட்டேன்; ஐயா எங்கே செல்கிறீர்கள் என்று. அவர் சொன்னார்; 'மதியுரைக் குழுவின் உறுப்பினராக அமைச்சர் இராஜதுரை அவர்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றேன். அதற்குச் செல்கின்றேன்' என்றார்.

'நானும் அதற்குத்தான் செல்கின்றேன்' என்றேன். உங்களோடு நான் சரிசமனாக ஒரு உறுப்பினராக அந்தக் கூட்டத்திலே பங்குபற்றுவதை என் பாக்கியமாகக் கருதுகின்றேன் என்று கூறினேன். அன்று எனக்கு உண்மையாக ஒரு பாக்கியமான நாளாக நான் இன்றும் நினைக்கின்றேன். உடனே கூறினார்; நீங்கள் எவ்விதம் நினைக்கிறீர்களோ தெரியாது. நீங்கள் எனக்கு இனம். எனது சொந்த இனத்தவர் என்றார். அவரது வயதையும் அனுபவத்தையும் பார்க்கும் பொழுது பரம்பரை உறவுமுறைகள் எனக்குத் தெரியாது. இருந்தாலும் கூட அவர் அதை நினைப்பூட்டியதன் காரணமாக என்னை ஊகித்துக்கொண்டு உண்மையிலேயே நான் அவருக்கு இனம் என்பதை அறிந்து கொண்டேன்.

அதுமாத்திரமல்ல, இங்கே தலைவர் அவர்களே கூறியது போல அவருடைய ஆங்கிலக்கல்வி 'லீஸ்' உயர்தர பாடசாலையில் கல்முனையிலே ஆரம்பித்தது. அந்த 'லீஸ்' உயர்தர ஆங்கிலப் பாடசாலையிலே நானும் கல்வி பயின்று அதே பாடசாலையில் உப அதிபராக சுமார் 30, 35 வருடங்கள் கடமையாற்றி ஓய்வு பெற்று இங்கு வந்திருக்கின்றேன். எனவே ஐயா அவர்கள் படித்த பள்ளியிலே நான் படித்தேன், நான் கடமையாற்றினேன், என்று கூறும்போது இன்னும் ஒரு இரட்டிப்பான மகிழ்ச்சியும் எனக்கு ஏற்படுகின்றது.

ஆகவே ஒரு வகையில் நான் ஐயாவைப் பற்றிச் சொல்வதற்கு பொருத்தமுடையவன் எனக் கருதுகின்றேன். அதற்காகத்தானோ என்னவோ என்னைத் தேர்ந்தெடுத்தார்களோ தெரியாது.

புலவர்மணி ஐயா பிறந்த ஊர் மண்டூர். எனக்கு நன்றாகத் தெரிந்த ஊர். என்னுடைய தாயின் தங்கையார் அவர்கள் அங்கு விவாகம் செய்தார். அந்த நாளையிலே கிராமசேவகர் என்றால் உங்களுக்குத் தெரியும். மிகவும் செல்வாக்குடைய ஒரு மனிதர் அந்தக் கிராமத்திலே. இன்றைய ஜனாதிபதியின் அதிகாரம் அத்தனையும் கொண்ட ஒருவர். அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒருவர். அவருக்கு வாழ்க்கைப்பட்டு எனது அம்மாவின் தங்கை அங்கு இருந்ததனால் மண்டூரிலே மிகவும் தொடர்பு இருந்தது.

அந்த மண்டூர் கிராமத்தைப் பற்றி உங்களுக்குக் கூறினால்தான் புலவர்மணி ஐயாவின் இருதயத்தின் அகன்ற மனப்பாங்கு உங்களுக்கு

விளங்கும். ஒரு பரம்பரையான இந்துக் கிராமம். கிறிஸ்தவர்கள் அப்போது அங்கே இல்லை. தற்பொழுது இருக்கிறார்கள். அவ்வளவு ஒரு பக்தி வாய்ந்த ஒரு கிராமம் என்று கூறலாம். மண்டூர் கந்தசுவாமி கோவில் இலங்கையிலே மிகவும் பிரசித்தி வாய்ந்த ஒரு கோவில் அந்தக் கோவிலின் வண்ணக்கராக இருந்த ஏகாம்பரப்பிள்ளை வண்ணக்கருக்கும் சின்னத்தங்கம் அவர்களுக்கும் புத்திரனாகப் பிறந்தவர் எங்கள் புலவர்மணி ஐயா. என்றால் அவருடை சமய பக்தியையிட்டு நீங்கள் இப்பொழுது யோசிக்கலாம். சமய பக்தி எப்பொழுது எங்களுக்கு வருகின்றது. பரம்பரை பரம்பரையாக எங்கள் தாய் தகப்பனின் பரம்பரையிலே வருகின்ற ஒன்றுதான் சமய பக்தி எனலாம். அந்தப் பக்தியிலும் அந்தச் சூழலிலும் வந்தவர்கள் புலவர்மணி ஐயா அவர்கள்.

இப்படி வளர்ந்த இவருக்கு பல பெரியார்களோடு தொடர்பு ஏற்பட்டது. அது ஒரு பெரிய பாக்கியம் மனிதனுக்கு. இப்பொழுது நான் உங்கள் முன்னிலையிலே நிற்கின்றேன். இங்கே நீங்கள் தமிழறிஞர்கள் இருக்கின்றீர்கள். எவ்வளவோ படித்தவர்கள், எவ்வளவோ அறிஞர்கள் இன்று நான் உங்களுடன் கலந்து கொள்கிறேன் என்றால் எனக்கு அது பெருமையாக இருக்கின்றது. அது போலவே புலவர்மணி ஐயா, புலோலி சந்திரசேகரன் உபாத்தியாயருடன் தொடர்பு கொண்டார். அவர் வீட்டிலே வைத்து புலவர்மணிக்குத் தமிழ் படிப்பித்தார். நிகண்டு போன்ற பெரிய சங்ககாலப் புத்தகங்கள் எல்லாவற்றையும் படிப்பித்தார். கல்முனை லீஸ் ஆங்கில பாடசாலையிலே குஞ்சித்தம்பி ஆசிரியர் என்று ஒரு தலைமை ஆசிரியர் இருந்தார். அவர் இவருக்கு ஆங்கிலம் படிப்பித்தார். மட்டுவில் பண்டிதர் மகாலிங்கசிவமும், விபுலானந்த அடிகளாரும் அவருடைய ஆசிரியர்கள். பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவரோடு உடன்கற்றவர்.

இலங்கையில் கடைந்தெடுத்த தமிழ் அறிஞர்கள் யாவரும் அவரின் ஆசிரியர்களாக இருந்திருக்கிறார்கள். அவரோடு தொடர்புகொண்டு இணைந்து இருந்திருக்கிறார்கள். ஆகவேதான் இவரால் சூடாமணி, நிகண்டு, திருச்செந்தூர் புராணம், இராமாயணம், கம்பராமாயணம் எல்லாவற்றையும் தெளிவாக படிக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

ஐயா அவர்கள் கவிஞனாக இருந்தாலும் கூட பல உத்தியோகங்களைப் பார்த்தார்கள். ஆசிரியராக இருந்தார்கள். மண்டூர் உபதபாலதிபராக இருந்தார்கள். உணவுக் கட்டுப்பாட்டு இலாகாவிலே தடுப்பதிகாரியாக இருந்தார்கள். இந்துக் கல்லூரியிலே ஆசிரியராக இருந்தார்கள். இறுதியாக, மட்டுநகர் அரசினர்க் கல்லூரியிலே தமிழ்ப் பண்டிதராக, விரிவுரையாளராக தமிழ்ப்பகுதிக்குப் பொறுப்பாக இருந்து ஒய்வு பெற்றார்.

எனவே நான் முதன்முதலாக ஐயாவின் சமயத்துறையைப் பற்றி உங்களுக்குக் கூற வேண்டும். ஏனென்றால் மண்டூர் என்ற இடத்திலே அந்த சமயச் சூழலிலே பிறந்த ஐயாவினுடைய மன எண்ணம் என்ன, சிந்தனை என்ன என்பதை நான் கட்டாயம் உங்களுக்குக் கூற வேண்டும்.

யாழ்ப்பாணத்திலே ஐயா அவர்கள் ஆசிரியராக உத்தியோகம் பார்த்த பொழுது கிறிஸ்தவ சமயத்தோடு தொடர்பு கொண்டிருந்தார். காரணம்; யாழ்ப்பாணம் இந்து வாலிபர் சங்கத்தில் அவர் இருந்த பொழுது பள்ளர் குலத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவரோடு நட்புக் கொண்டிருந்தார். ஆறுமுகம் இறந்த பின்னர் அவரின் மகன் அப்பாத்துரை என்பவர் சில செய்யுள்கள் பாடித்தரும்படி கேட்டார். அவர் இரங்கற் பாக்கள் பாடினார். இது இந்து வாலிபசங்க நிர்வாகத்திற்குப் பிடிக்கவில்லை. அங்கே சாதிப்பிரச்சினை ஏற்பட்ட பொழுது அவரை இந்து வாலிபர் சங்கத்திலிருந்து அகற்றி விட்டார்கள். சாதி வித்தியாசம் பார்ப்பது அவருக்கு பிடிக்கவில்லை. ஆனால் பிறந்த இடம், சூழல் அப்படிப்பட்டது. இருந்தாலும் அவர் ஒரு வித்தியாசமான மனிதனாக வாழ்க்கையிலே திகழ்ந்தார். இந்த சாதி வித்தியாசம் பிடியாததன் காரணமாக கிறிஸ்தவ சமயத்திலே அந்த வித்தியாசம் இல்லை என்பதை உணர்ந்து அந்த சமயத்திலே நாட்டம் கொண்டு 1922ஆம் ஆண்டு மதுரை சென்று பசுமலைக்குப் போய் வேதசாஸ்திரியர் கல்லூரியிலே 2 ஆண்டுகள் படித்து ஒரு உபதேசியாக வந்தார். ஆனால் சாதி வித்தியாசம் காட்டாத சமயம் என்று வந்தவருக்கு அங்கேயும் சாதி வித்தியாசம் காட்டியதனாலே அங்கும் இருக்காமல் தன்னுடைய சமயத்துக்கே வந்து விட்டார்.

இதிலிருந்து நாம் என்ன அறிகிறோம் என்றால் ஐயா அவர்கள்

சமத்துவமான வாழ்க்கை நடத்த விரும்பியவர்கள். மனதிலே எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல் வாழ்ந்தவர் என நாம் கூறலாம்.

ஒரு காலத்திலே அவர் கிறிஸ்தவ சமயத்திலே இருந்த நேரத்திலே

'பூலோகம் தன்னில் பிறந்தாரே பரனாரே
மேலோகம் தன்னை விட்டு'

என்ற பாடியிருக்கின்றார்.

கிறிஸ்தவமத துயில் உணர்ச்சி என்கின்ற நூலை இயற்றினார். கிறிஸ்தவ சபையிலே செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றிப் பாடினார். இப்படி மதுரையிலே அவர் இருக்கின்ற நேரத்திலே விபுலானந்த சுவாமியின் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது. அதை அவருடைய பெரும் பாக்கியமாகக் கருதுவதாகக் கூறுகின்றார். பகவத்கீதை வெண்பா பாடியதற்கு ஒரு வரலாறு உண்டு.

தன்னுடைய மனைவி மிகவும் கடுமையான சுகவீனமாக இருந்த நேரத்திலே கொழும்புக்கு அவரைக் கொண்டுவர நேர்ந்தது. கொழும்பில் வைத்தியசாலையில் வைத்திருந்த போது புலவர்மணி ஐயா இருந்த வீட்டிலே பாரதியாரின் பகவத்கீதையைக் கண்டார். அதன்பின்பு தன்னுடைய மனைவியின் சுகவீனத்தை யோசித்துத்தான் பகவத்கீதை வெண்பாவை உருவாக்கவேண்டி வந்தது என்று கூறினார். அதன்படி அந்த பகவத்கீதை வெண்பா ஆரம்பமாகியது. அதிலே 3 பகுதிகள் இருக்கின்றன. 689 பாடல்கள் வெண்பாவிலே காணப்படுகின்றன.

அங்கே சமர்ப்பணமாகக் கொடுத்த செய்யுளிலே,

"சங்கத் தமிழ் மதுரைச் சத்திரத்தில் வைத்தெம்மை
அங்கு வசமாக்கி யருள்செய்தே–தங்கியெம் புத்தி புகுந்த
விபுலானந்தர் பொன்னடிக்கண் வைத்திந்நூல்
நெஞ்சே வணங்கு"

என்று கூறி தன் பதிகத்திலே விபுலானந்த அடிகளுக்கு அதை சமர்ப்பிக்கின்றார் என்றால் விபுலானந்த அடிகளுடைய நட்பு எவ்வளவு

தூரம் நெருங்கி இருந்தது என்பதை நாங்கள் அறிய முடிகின்றது.

புலவர்மணி இயற்றிய மண்டூர்ப் பதிகத்திற்கு சுவாமி விபுலானந்தர் வழங்கியிருக்கின்ற சிறப்புப்பாயிரத்திலே,

"பண்டூரும் முகிற்குலங்கள் எமது இறைவர்
மருகர் திருப்பதி மீதென்ன
விண்டூர மழை பொழியும் சிறப்பதனால்
வளம்மலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூரில் உறை முருகன் மலரடிக்கோர்
திருப்பதிகம் மறவிற் சொற்றான்
கண்டூரும் இனிய மொழி பெரியதம்பிப்பிள்ளையெனும்
கலை வல்லோனே"

என்று புகழ்ந்து விபுலானந்தர் பாடியிருக்கின்றார்.

விபுலானந்தர் நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது விபுலானந்தர் மீட்சிப்பத்து என்ற தலைப்பில் பத்துப் பாடல்களை பாடினார். புலவர்மணியவர்கள் தனக்கு இறைவன் தந்த கொடையாகிய கவிதை இயற்றும் சக்தியை எந்தெந்த வழியிலே, எந்தெந்த முறையிலே பாவிக்கலாமோ அந்த வழியிலெல்லாம் பாவித்த ஒரு மகானாக புலவர்மணி ஐயா திகழ்ந்தார். ஏனைய புலவர்களுக்கு வித்தியாசமான முறையிலே அவருடைய வாழ்க்கையிலே திகழ்ந்தார். அவர் பாடிய விபுலானந்தர் மீட்சிப் பத்திலே;

"பாரேறும் புகழான் மீள்க எனக் கூவாய் பைங்குயிலே
பன்மொழி விபுலானந்தன் வாழ்க எனக் கூவாய் பைங்குயிலே"

குயிலை வைத்துக் குயில் மூலம் அவருக்கு மீட்சி கொடுக்க வேண்டும் என்று பாடுவது போன்று அந்த மீட்சிப்பத்து அமைந்திருக்கின்றது.

அடுத்து சாதிப்பிரச்சினையைப் பார்ப்போம். நான் ஏற்கனவே கூறிய ஆறுமுகம் என்பவர் இறந்த பொழுது புலவர்மணி ஐயா பின்வருமாறு ஒரு வெண்பாவைப் பாடினார்.

"ஒழுக்கத்து உயர்குலமாம் ஓங்கு புகழுண்டாம்
இழுக்கத்து இழிகுலமாம்' என்றே – விழுப்பத்து
நூற்குலத்தையெல்லாம் நுணுகி யறிந்தாறுமுகன்
மேற்குலத்தனானான் விரைந்து"

என்று ஆறுமுகத்தாருக்காக அந்தப் பாடலைப் பாடினார். அவன் மேற்குலத்தவனாகி உயர்ந்துவிட்டான் என்பது அதன் கருத்து.

கிழக்கு மாகாணத்திலே முஸ்லிம்கள், தமிழர்கள் ஆகிய இரு சாதியினரும் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்தவர்கள். இந்தப் பரம்பரை ஒற்றுமையை குலைக்கின்ற சில காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வந்திருக்கின்றன என்பது நான் சொல்லி நீங்கள் அறியவேண்டியதில்லை. அதைப்பார்த்து புலவர்மணி ஐயா மிகவும் பரிதாபப்பட்டார். அதற்காக ஒரு அழகான வெண்பா பாடினார்.

இருதயத்தின் ஈர் இதழ்போல்
இங்கு தமிழ் முஸ்லீம் யாம்
ஒரு வயிற்றுப் பாலகர் போல் உள்ளோம்
அரசியலில் பேராசை கொண்டோர்
பிரித்து நமை வேறாக்கி ஆராயார் செய்வார் அழிவு"

என்று அழகாகச் சொல்லியிருக்கின்றார் எப்பவோ. ஆனால் இன்று பத்திரிகையில் வருகின்றது அரசியல்வாதிகள் தான் பிரச்சனையை உண்டாக்கினார்கள் என்று. புலவர் மணி ஐயா அப்பவே சொல்லிவிட்டார். அரசியல் லாபம் கொண்டவர்கள் – பேராசை கொண்டோர் பிரித்து நமை வேறாக்கி ஆராயார் செய்வார் அழிவு என்று. ஆகவே சாதிப்பிரச்சனை இருக்கக்கூடாது என்பது ஐயாவின் கருத்தும் எண்ணமும் ஆகும்.

அது மாத்திரமல்ல அவருக்குக் கொடுத்த மகத்தான பணி என்னவென்றால் 1927ஆம் ஆண்டு மகாத்மா காந்தியவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்த பொழுது திருமலையிலே ஐயா அவர்கள் இருந்தார்கள். திருமலை மக்கள் சார்பில் அநுராதபுரம் புகையிரதநிலையத்தில் அவருக்கு ஒரு வரவேற்புக் கொடுப்பதாக

நிச்சயிக்கப்பட்டிருந்தது. புலவர்மணி ஐயாவைத்தான் பாட்டுப் பாடும்படி கேட்டார்கள். அவர் பாடிய பாடல்களில் மாதிரிக்கு ஒன்று;

சாந்தம் பொலி முகமும்
தன்னளி சேர் கண்ணினையும் –2
வாய்ந்த கதராடை வடிவழகும் –2
சேர்ந்து மகான்
காந்தியென ஓர் வடிவம்
கண்முன்னர் நின்றதால்
சாந்தி எமக்கு இன்றுதான் –2

என்று பாடினார். ஆகவே மண்டூரிலே பிறந்து குருக்கள் மடத்திலே வாழ்ந்த புலவர் மணி ஐயாவுக்கு, மகாத்மா காந்தியவர்களைப் பாடக் கொடுத்த ஒரு சந்தர்ப்பம், உண்மையிலேயே அவர் அறிவுக்கும் தமிழுக்கும் ஒரு பாக்கியமாகும் என்று ஐயாவே கூறுகின்றார்.

நான் தலைப்பைப் பார்த்தேன். "புலவர்மணி ஐயாவும் தமிழும்" என்று இருந்தது. ஆனால் புலவர்மணி ஐயா தான் தமிழ். தமிழ்தான் புலவர்மணி ஐயா. ஆகவே அதிலே வித்தியாசம் இல்லை. தமிழுக்கு அமுது என்று பெயர் என்றான் பாரதிதாசன். இங்கே தமிழுக்கு புலவர்மணி ஐயா என்று பேர். என்றாலும் தமிழ்ப் பற்றைக் கூறுவதற்காக இன்னொரு உதாரணம் கூறுகின்றேன்.

ஒருமுறை பஸ்ஸிலே பிரயாணம் செய்து கொண்டிருந்தாராம். பஸ்ஸிலே பிரயாணம்செய்து கொண்டிருந்த பொழுது; உங்களுக்குத்தெரியும் ஆங்கிலம் படித்தவர்கள் தான் பெரியவர்கள், காற்சட்டை உடுத்தவர்களெல்லாம் பெரியவர்கள் என்ற எண்ணம் எங்கள் மத்தியிலே இருந்தது. மிகவும் சிறியளவிலே இருந்து கொண்டு வருகின்றது. அவர் வாழ்ந்த காலத்திலே மிகவும் மோசமாக இருந்தது. ஆகவே அன்று பஸ்ஸிலே ஒரு வேட்டி சால்வைத் தமிழ் மரபிலே இருந்த ஒருவர் ஆங்கில உடுப்போடு வந்த ஒருவருக்கு இடம் கொடுத்து விட்டு அவர் நிற்கிறார். அப்போது ஐயா அவர்களுக்கு மனத்திலே தமிழ்மொழி செயற்பட்டது. பாட்டொன்று பாடினார்.

"முன்னை வடக்கால் முளைத்த நாற்சாதிபோய்ப்
பின்னை இரு சாதி பிறந்ததுகாண்
அந்நியர்தம் ஆங்கிலத்தால் மேல் சாதியாயிற்றே
தாய்மொழிகற்றேங்கி நிற்கும் கீழ் சாதியே"

என்று பாடினார் ஐயா அவர்கள். ஏனென்றால் எங்கள் நாட்டிலிருக்கும் மொழிக்கு நாங்களே சமத்துவம் கொடுக்காமல் வேறு மொழிக்கு சமத்துவம் கொடுப்பதை அவரால் பொறுக்க முடியவில்லை.

அடுத்து;

"காப்போம் எழுந்திடுவீர்
நம் தாய்மொழியைக்
காப்போம் எழுந்திடுவீர்
தீப்போல் கொதித்தெழுந்து
தியாகம் பல புரிந்து
மீட்போம் என்று ஆணையிட்டு
வீரத் தமிழர் நாங்கள்
காப்போம் எழுந்திடுவீர்"

பாரதிதாசன் பாடியது போல் 'வெள்ளம் போல் தமிழர் கூட்டம் வீரர்கள் கூட்டம் அன்னார்' என்பது போல் பாடுகின்றார் 'காப்போம் எழுந்திடுவீர்' ஆகவே தமிழ்ப்பற்றை நாங்கள் இவ்விதம் அறியலாம்.

அடுத்து நாட்டுப்பற்று;

உண்மையிலேயே நாட்டுப்பற்றுக் கொண்ட ஒருவராக புலவர் ஐயா வாழ்ந்தார்கள். இலங்கை முழுவதற்கும் உணவழிப்போம் என்று ஒரு பாடல் பாடியிருக்கின்றார். இந்தப் பாடலை பார்த்த பொழுது பாரதி பாடிய,

"ஆயுதம் செய்வோம் –நல்ல
காகிதம் செய்வோம்
வீழ்தல் செய்யோம் –தலை
சாய்தல் செய்யோம்"

என்று இந்தியாவைப் பற்றிப் பாடியது போன்று பாடியுள்ளார்.

"தூர்ந்த குளங்கள் பலதிருத்திடுவோம்
தொடுத்து நீர் வாய்க்கால்கள் பொருத்திடுவோம்
பாய்ந்து வரும் நதி நீர் மறித்திடுவோம்
பாங்காய் நெல் இருபோகம் விதைத்திடுவோம்
என்று பாடுகின்றார்.

அடுத்து சமூக ஒற்றுமை;

நான் ஏற்கனவே கூறியதுபோல கிழக்கு மாகாணத்திலே சாதி ஒற்றுமையைப் பாடினார். இங்கே பொதுவாக எமது நாட்டிலே இருக்கின்ற சமூக ஒற்றுமையைப் பற்றிப் பாடினார். அந்தப்பாடலைப் பார்ப்போம்.

"சிங்களமும் செந்தமிழும் சேர்ந்து சமமேயிலங்கை
எங்கும் அரச மொழியெனவே– துங்கமுடன்
ஆட்சி புரிய வழி யாக்குவதே யெல்லாரும்
மாட்சியுடன் வாழும் வழி.

வாழியநற் கல்வி வளர்செல்வம் பண்புடமை
வாழி இலங்கை மதிப்பெங்கும் – வாழியவே
சிங்களமும் செந்தமிழும் சேர்ந்த சமநிலைக்கண்
இங்கரசு செய்தே இனிது"

ஆகவே சமூக ஒற்றுமை, சாதி ஒற்றுமை, மொழி ஒற்றுமை போன்றவற்றை எப்பொழுதும் புலவர்மணி ஐயா அவர்கள் மனதிலே வைத்திருந்தார்கள்.

புலவர்மணி ஐயா மரபுக் கவிதான் பாடுவர் என்று நாங்கள் சொல்வோம். வேறு புதுக்கவிதையிலே அவருக்கு நாட்டம் இல்லை என்று கூறலாம். ஆனால் புதுக்கவிதை போன்ற ரூபத்திலேயும் பல கவிதைகளைப் பாடியிருக்கின்றார். இதுவரை நான் கூறியது மரபுக் கவிதைகள். அவருடைய சில கவிதைகள் புதுக்கவிதையைப் போன்று இருப்பதை பார்க்க முடிகின்றது. அவருடைய மகன் சாந்தலிங்கம்

என்பவர் இறந்துவிட்டார். அந்த நேரத்திலே அவருக்கு மிகவும் துக்கமாக இருந்தது. அப்போது ஓர் புதுக்கவிதையைப் பாடினார். அந்தக் கவிதை விபுலானந்த அடிகள் பாடிய "கங்கையில் விடுத்த ஓலையிலே இன்ப விளையாற்றிடை..." என்பதைப் போல் இருக்கின்றது. இரண்டையும் கூறுகின்றேன். இரண்டும் என்ன அழகாக ஒற்றுமையாக இருக்கின்றது என்பதைப் புலவர்மணி ஐயாவை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

"அன்பு கொண் டொரு றோசா மலர்ச்கொடி
அருமை என்மகன் சாந்தன் வளர்த்தனன்
முன்பு வாசலில் நின்று தளிர்த்தது
முகிழ் அரும்பி நெகிழ்ந்து ஒரு காலையில்
பொன்புனைந்த அவன் முகம் போலொரு
பூ மலர்ந்த தப்பூவின் அழகிலே
இன்புகொண் டதிலீடுபட்டிம்மலர்
எழிலுக்கு எம்மலர்தானி ணையோ" என்றான்.

மாலை வந்தவன் பார்க்கையிலம் மலர்
வாடி முன்பு வயங்கும் அழகு போய்
காலை வண்டு இசை பாடு மலர்க்கொடி
கவலை மூழ்கிக் குழைவதும் கண்டனன்
காலை பூத்துப் பின் மாலையிலே யெழில்
கருகி வாடும் மலரினைப் போலவே
ஞாலமீதில் மனிதர்தம் வாழ்வென
நவிலும் இம்மலர் காணெனச் செப்பினேன்.

கங்கைவிடுத்தோலையிலே விபுலானந்த அடிகள் பாடுகின்றார்.

"இன்ப விளையாற்றினிடை மேலெழுந்து குதிப்பார்
எமக்கு நிகர் ஆரென்பர் இருகணத்தினுளத்தில்
துன்பமற மண்ணில் விழுந்து இரு கண்ணீர் சொரிய
நோர்ந்து அழுது மயக்கம் எனும் சுழல் அலையில் உழல்வார்"

காலையில் வந்து பார்த்த மலர் மாலையில் வாடிக்கிடப்பது போல் மனிதனும் இன்பத்திலே இருந்து விளையாடி துன்பத்திலே உழல்வார்கள் என்று கூறப்படுகின்றது.

இறுதியாக இவர் இயற்றிய நூல்களையிட்டு தலைவர் கூறினார். அந்நூல்களிலே செய்யுள் நூல்களைப் பொறுத்தவரையில் முதலாவது மண்டூர்ப் பதிகம். அடுத்தது எல்லோராலும் போற்றப்படும் பகவத்கீதை. உரைநடையிலே "உள்ளதும் நல்லதும்" என்ற நூல் மிகவும் அருமையான நூலாகக் காணப்படுகின்றது. மட்டக்களப்பு புலவர்மணி மன்றத்தினர் அவருடைய புத்தகங்களை அச்சிட விரும்புகின்றார்கள்.

இவர் வகித்த பதவிகள்; இலங்கையிலே காணப்படுகின்ற அதிகமான இயக்கங்கள், சங்கங்கள் எல்லாவற்றிலும் உறுப்பினராக இருந்திருக்கின்றார். வானொலி, கல்வி பகுதி ஆலோசனைச் சபையிலே உறுப்பினராக இருந்திருக்கின்றார்.

கிழக்கிலங்கை சமாதானக் குழுவிலே உறுப்பினராக இருந்திருக்கின்றார். யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்திலே பரீட்சைக்குழுவின் உறுப்பினராக இருந்திருக்கின்றார். இந்துமாமன்ற உறுப்பினராகவும், சாகித்திய மண்டல மதிப்பிடற் குழுவின் உறுப்பினராகவும் இருந்திருக்கின்றார்கள். ஆகவே இவருடைய படிப்புக்கும் அறிவுக்கும் தகுந்த அந்தஸ்தை மற்றவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். இதுவரை புலவர்மணி ஐயாவை பற்றி நான் கூறியது அவருடைய புத்தகங்களை வாசித்து அறிந்து கொண்டவையே.

இந்தத் தமிழ்ச் சங்கத்திற்கு இறுதியாக ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன். இன்று 96வது விழாவைக் கொண்டாடுகின்ற தமிழ்ச்சங்கம் எதிர்காலத்தில் அவரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு இதனைக் கால்கோளாகக் கொள்ள வேண்டும். ஏனென்றால் நிச்சயமாக நூற்றாண்டுவிழா கொண்டாடப்பட வேண்டிய அறிஞர் புலவர்மணி ஐயா அவர்கள். எனவே இந்த விழா நூற்றாண்டு விழாவுக்கு கால்கோளாக அமைய வேண்டும் என வாழ்த்தி மீண்டும் இங்கு என்னை அழைத்து பேச வைத்ததற்காக நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

## கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற புலவர்மணியின் 96வது பிறந்த நாள் விழா அன்று வழங்கிய பாடல்

**~ பல்கலைவேந்தன் சில்லையூர் செல்வராஜன் ~**

தேனாகப் பொன்நிலவு
திகழ்கின்ற ஓர் இரவில்
தெய்வத்துள் தெய்வம் என் தாயானாள்
எம்மனை முற்ற மணல் திருத்தி
அன்பொடு தன் அருகணைத்து
என் விரலைப்பற்றி

தேனாகப் .... பற்றி -2

'அ' என்ற ஓர் எழுத்தை
அழித்து அழித்து அம்மணல் மீதில்
அன்று எழுதப் பயிற்ற – இன்றோ
பேனாவைப் பிடித்தெழுதும்
உரை எழுத்தும் கவி எழுத்தும்
தலையெழுத்தாய்ப் பிழைப்பாய்க்
கொண்டேன்.

நான் ஆன போதும்
தம் நாளாந்த சோற்றுக்கும்
ஆடைக்கும் நலிவோர்க்காய் பொருக
என் வாழ் ஆனாளே தமிழ்
என்றிங்கன்பரெல்லாம் போற்றுகின்ற ஆச்சி
உனை முதலில் அடிபணிந்தேன் போற்றி.

தம்மைத்தாம் மதிக்காத தமிழ்ப்புலவர் பரம்பரையில் – 2
– தப்பி வந்து

மெய்மைக்கே கவித்திறனை அர்ப்பணமாய் வைக்கின்ற
மேன்மை சான்ற எம்மை - இன்று
புலவர்மணி விழாக்களத்தில் கவியரங்கை - இயக்க வைக்கும்
செம்மைசால் சங்கத்தீர் செழும்கவிகாள்
செந்தமிழைக்கேட்டு உவந்தே - உம்மை
எமக்கு ஒப்படைக்க உளம் கொண்டு வந்திருக்கும்
- உயர்ந்தோரே

அன்று அம்மை தனது உமிழ்நீரைப் பிளிச்சிவிட
வாயேற்றுக் கவி புனைந்தோர்
தன்மை சிறிதேனும் இலாத் தான்தோன்றிக் கவிராயன்
தலை சாய்க்கின்றேன் - உன் மொழிவாய்
தலைமைப்பா மொழிந்து பின்னர்
கவியரங்கை முடுக்கி வைப்பேன்.

தொண்ணூற்றாண்டின் முன்தோன்றி புலவர்மணி
இந்நூற்றாண்டின் முக்கால் எழுந்த முக்கால்
- சகாப்தத்தில்

தன்நேரிலாத தமிழ்க் கவிதை முத்துக்களை
பன்னூறு பன்னூறாய்ப் படைத்து ஈழமண்டலத்தின்
பன்னாறு தமிழ்வளத்தை பார் எங்குமே சொரிந்த
விண்ணாளனாய்த் திகழ்ந்த வித்தகத்தைப் போற்றுகின்றேன்

பன்னாறு தமிழ் வளத்தை பார் எங்குமே சொரிந்த
விண்ணாளனாய்த் திகழ்ந்த வித்தகத்தைப் போற்றுகின்றேன்.

பத்து வயதில் பழம் தமிழின் பா விதிகள்
அத்தனையும் துறை போக ஆழப்பயின்று - 2
- கவி

எத்தனயோ யாத்த ஏ. பெரிய தம்பியென்னும்
உத்தமப் பேராசானை உளம் கனிந்து பூசிப்பேன்.

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம்
பண் ஆளம்தன்னைப் பாடம்கேட்டுப் பயின்று

சூடாமணியும் நிகண்டும் திருச்செந்தூர் ஏடாம்
புராணமும் ஈழக் கலாசாரப் புதையலெனும்
கந்தபுராணமும் பாரதமும் விதை பேரக்கற்று
விளைந்த செறிந்த அறிவால்
மண்டூர்ப் பதிகம் எனும் மீட்சிப் பத்து தொடக்கம்
பண்டு புகழ் சீவக சிந்தாமணியின் – உள்ளடக்க
நாமகள் இலம்பகமாம் நாடக நூல்
சத்து மிகும் தேமதுரப் பாலைக்கலி

பகவத்கீதை வெண்பா வரையாக
காவியங்கள் வரைந்து
பல வேறு உரைநூல்களும் செய்த
உயிராற்றல் படைப்பாளி...

வெண்பாவிற் புகழேந்தி என்ற வியன் மொழியை
தன்பா திறத்தின் தரத்தால் அழித்து எழுதி – 2
புலவர் மணி வெண்பாப் புலி என்ற
புதுப்பட்டம் இலகத் திகழ்ந்து உயர்ந்த
இன்மரபுப் பாட்டாளி பாட்டு ஆளி

வெண்பாவிற் .... பாட்டு ஆளி –2

கீதை வெண்பாவால் முதன்மைக்
கீர்த்தி படைத்த கவி மேதை பெரியதம்பி
மெல்லடிகளைத் தொழுதேன்
எல்லாவற்றிலும் மேலாய் இதயசுத்தி பெரியமனம்
நல்லாரை மட்டுமன்றி அல்லாரையும்
அணைக்கும் ஆன்ம விசாலம் எனும்
அருங்குணங்கள் வாய்ந்த பிற
மேன்மக்கள் யாவரையுமே நான்
கண்டதில்லை உண்மை...
எல்லாவற்றிலும் மேலாய்.... உண்மை –2

நேரே அவரோடே நேசித்து மட்டுமன்றி
போரே இலக்கியத்தில் புரிந்தும் பழகியவன் -2
நான் என்பதால்
சான்றோடு எனக்கு நிகழ்ந்த ஒரு சம்பவத்தை
இங்கே நான்
சாற்ற விழைகின்றேன்

நேரே அவரோடே.... விளைகின்றேன். -2

சர்ச்சை ஒன்றில் அவர் கருத்தைத் தாக்கி எழுதிவிட்டேன்-2
அச்சமயம் எங்கும் அதே பேச்சாய்
ஈழத்தில் வாதங்கள் மூண்டு கலை வட்டத்திலே
கட்சிப் பேதங்கள் ஏற்பட்டு ஓர் பிரிவினையே தோன்றிற்று
அவ்வேளை -2
ஓர் கவியரங்கில் அவர் தலைமை -2
வெவ்வேறாய் 'பா' மொழிய விளைந்தோரில்
நான் ஒருவன் இவர்களைப் போல-2
அவ்வேளை..... -2

அறிமுகம் செய்கையிலே ஐயா
எனை விளித்துக் குறியாகச் சொன்னார் -2
குதிரைக்காரக் கவிஞர் இவர் என்றே,

அறிமுகம் செய்கையிலே.... என்றே-2

துணுக்குற்றேன் மறுநொடியில்
அவையோர்கள் மண்டபமே
அதிரக் கரகோஷம் கொட்டியே
கேலியாய்க் கோஷம் புரிந்தார்கள்.
குதிரைக்காரக் கவிஞர் இவன்
என்றே சொன்னவுடன்
அவையோர்கள் மண்டபமே
அதிரக் கரகோஷம்

கொட்டியே புரிந்தார்கள்.

சட்டென்று நிறுத்துங்கள் சத்தத்தை —2
என்று அடக்கி
செப்பினார் சில வார்த்தை
சிந்திக்க அன்பர்களே
இப்போது கூட என் இதயம் சிலிர்க்கிறது.

சட்டென்று நிறுத்துங்கள் சத்தத்தை ..... சிலிர்க்கிறது —2

குதிரைக்காரக் கவிஞன் இவன் என்றா சொன்னேன்
குதிரைக்கு நடை பழக்கும் சூட்சுமமோ லேசன்று —2
குதி பாய்ச்சல், காவல், அணி வகுத்தல், தடை தாண்டல்
நின்றபடி கால் வலித்தல், நிலை சுழலல், நிமிர் நிற்றல்
என்று பலவாறாம் எழில் நடைகள் குதிரைக்கு

குதிரைக்காரக்.... குதிரைக்கு —2

தமிழுக்கும் நடையழகு தனியழகு — 2
பல்வேறு தமிழ் நடைகள் பழக்கும்
கலை தேர்ந்த பாவலன் இச்சில்லையூர்ச் செல்வன்
என சிந்தையிலே நான் வியந்தே
சொல்ல விழைந்தேன் அவரைக்
குதிரைக்காரக் கவிஞன் என்றேன்
எனப் புகழ்ந்தார்.

தமிழ் நடை பழக்கும் —2
எழுந்தகர ஒலியில் மன்றம் அதிர
மறுபடியும் பூரித்துக் கண் பதித்தேன்
இவ்வாறாம் கண்ணியப் பெருமானை
மண்மேலே இன்றைக்கு மருந்துக்கும்
காண்போமா
இவ்வாறாம் கண்ணியப் பெருமானை

மண்மேலே இன்றைக்கு மருந்துக்கும்
காண்போமா?

பெரியோன் பெரியோன் தான்
பெரிதம்பிப்பிள்ளையென்று தெரியாமலா
பெற்றோர் திருநாமமிட்டார்கள் —2
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பார்கள்
பெற்றேன் அன்றைக்கு அந்தப் பெரியோனை
ஆசானாய்....
பெற்றேன் அன்றைக்கு அந்தப் பெரியோனை
ஆசானாய்...

அன்றுமுதல் நேசர்களாய் ஆனோம் உளம் கலந்தோம்
இன்று புலவர் மணி இருந்தால் என்னாகும்
எனச் சிந்தித்துப் பார்க்கின்றேன். —2
செய்ய கவித்துறையில் செந்தொடை என்கின்ற
சிறு நுட்பச் சுவை கூட அறியாமல்
வெற்று ஆரவாரம் செய்யும் விறுதாக்களை எண்ணி
செந்தொடை என்கின்ற சிறு நுட்பச் சுவை கூட அறியாமல்
வெற்று ஆரவாரம் செய்யும் விறுதாக்களை எண்ணி

விசனக் கவிதைகளை வசனக் கவிதைகளாய்
வந்திப்போர் கூட்டத்தில்
திசை நோக்கிக் கும்பிட்டு — என்
சிறு கூற்றை முடிக்கின்றேன்..

புலவர் மணி சிறப்பை போற்றுதற்கு வந்துள்ள
புலவர் கனகரெத்தினம், சிவநெறியின் செல்வர்
இரா மயில்வாகனம் கவிஞர் செரிபுதீன்
செல்வி ஸ்ரீகுமாரி சீர் கதிரித்தம்பி மகள்
ஆதியாம் பேரில் அழகுதமிழ்க் கவிதைச் சேரிகளை
நீங்கள் செவி மடுக்க விடுகின்றேன்

அந்நாளிலே புலவர் அரசவைகளைச் சார்ந்து
செந்நாக் கவிதைச் சிறப்புகளைக் காட்டிடுவர்

புலவர் த. கனகரெத்தினம் இன்று
புதுவாய்ப் பழகு தமிழோடு பழந்தமிழும் தேறியவர் – 2
மணிப்புலவருக்கு தன் மங்காத செந்தமிழால்
மணி மாலை சூட்ட அழைக்கின்றேன்.



சில்லையூர் செல்வராஜனுக்கு புலவர்மணியின் மகன் பெ. விஜயரெத்தினம் மாலை அணியும் போது எடுத்த படம்.

கவியரங்கு, பொருள்: புலவர்மணி

# புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை
## 96வது பிறந்தநாள் விழா 08-01-1995

– புலவர் த. கனகரத்தினம் –

பல்கலைகள் கைவந்த
பண்பாடும் நல்லறிஞன்
சில்லையூர்ச் செல்வராசன்
சீரரங்கின்நாயகமாக
வல்லகவி நால்வரிங்கே
வீற்றிருக்க வாழ்த்துகிறேன்
வெல்லுவடி வேல்காக்க
நல்வணக்கம் நல்லவைக்கே

பொற்காலம் வருமென்றே
புலவரெல்லாம் புகழ்ந்துபாட
நற்காலக் குறியொன்று
நலமாக மலருமின்று
தற்காலம் தலையெடுக்கத்
தரணியிலே மரபுகாத்துச்
சொற்காத்த புலவரவர்
சுடரான மணியன்றோ.

செந்தமிழழைச் சிந்திக்கும் செம்மையராய் வீற்றிருந்தே
வந்தபெரும் வண்கவிஞர் வாழியரே - சுந்தரமாய்
ஓங்குபுகழ் மண்டூர்ப் புலவர் மணிநினைவாய்ப்
பாங்காய்க் கவிசமைப்போம்

சங்கம் தழைக்கத் தமிழாய்ந்த கூடலென்னப்
பொங்கு நகர்கொழும்பும் போற்றிடவே- இங்கிதமாய்த்
தீந்தமிழ்ப் பாவலர் தீற்றும் கவியமுதை
மாந்துவோம் வாரீர் மகிழ்ந்து.

மீன்பாடும் வாவியெலாம் தேன்பாயு மட்டுநகர்
கான்பாயும் ஆறாய்க் கவிபாடும் -வான்புகழ்
மண்டூர்ப் புலவர் மணிபெரிய தம்பியவர்
தொண்டில் மணக்கும் தமிழ்.

சான்றோன் புலவர் மணிசாற்றும் பாவளத்தால்
ஈன்றநாடும் ஏற்றமிக எய்தியதால் - ஆன்றோரும்
வெண்பாவிற் கோர்பெரிய தம்பியெனப் போற்றினாரே
மண்டூர்க் கவிமுகில் கண்டு.

தெள்ளு தமிழின் சிறந்த புலவரவர்
உள்ளதும் நல்லதும் ஓதினாரே - உள்ளமதில்
ஊன்றும் ஒளியாய் உணர்விற் கலந்தாரெஞ்
ஞான்றும் நினைவோமே நாம்

(வேறு)

உலகமெலா மெடுத்தோதும்
    உயரியநற் தமிழினையே
அலகில்பல அறிஞரெலாம்
    அறிந்துணரத் தலைப்பட்டார்
பலசுவையின் நயமறிந்து
    பலபாடல் புனைந்துநின்றார்
நிலவுபுகழ் பெரியதம்பி
    புலவர்மா மணியானார்

தமிழே உயிரென்றார்
தரணியெலாம் புகழ்ந்துவர
அமிழ்தைக் கடைந்துதரும்
அரும்வெண்பா அமுதுதந்தார்
சிமிழில் படைத்தவாறாய்ப்
பிரான்கண்ணன் பெருங்கீதை
தமிழில் படைத்தாரே
தருமத்தின் நெறிநின்றே.

வடக்கிலொரு மணியென்றால்
வணங்குமெம்பண் டிதமணியே
அடக்கமொடு அவர்புகழ்ந்த
அருமணியை அவனியறியும்
வடக்கினொடு கிழக்குமொன்றி
வளர்த்திடுமே நயந்தநட்பில்
பெரும்புலவர் மணிவாழி.

மற்போரும் மலைந்தபெரும்
விறல்போரும் மறைந்துபோகச்
சொற்போரே தொழிலாகச்
சொல்லுமேரே உழுதுவர
நெற்போரும் நிலத்தினிலே
நிலைத்துநிற்க நிறைவாகக்
கற்போரும் கவியரங்கில்
கவிநயந்து களிப்பரன்றே

இலங்கைமணித் திருநாடு
இனியகீதம் இசைத்திட்ட
துலங்குகவி துயர்களையத்
துரிதகதி பலகாட்டி
விலங்குமனம் விலகிவிட
விடிவுகண்டு அவனியெலாம்
கலங்கரையில் விளக்கதாக

கனவினிலும் கரைகண்டாய்
வற்றாத கவியூற்று
வழுவின்றி பகர்ந்தனையே
முற்றாத இளங்கவிஞர்
முயன்றுநிற்க வழிசொன்னாய்
எற்றேனும் இசைபிழைப்பின்
இயல்பின்று கவிக்கென்றாய்
சற்றேயும் வரம்பழித்துச்
சகதியிலே விழுவீரோ

தேசிய மாகவியாய்த்
தேர்ந்தெடுக்க வேண்டாவோ
ஆசிய நாடுதாமும்
அண்டயயல் நாடுகளும்
பேசிடவே செய்யாமோ?
பேர்புலவர் மாமணியின்
தேசிய நூறகவை
தேசமெலாம் போற்றிடவே.

பாட்டுக் கொருபுலவன்
பாரதியைப் பாரறிய
ஏட்டில் இயம்பியநல்
ஏற்றமிகு நற்புலவன்
கோட்டமில் யாழ்நூலோன்
கோன்விபு லானந்தர்
நாட்ட மிகுசீடனன்றோ
நாமும் நினைவோமே

நந்தா விளக்கனைய நாவலனே நானிலத்தில்
சிந்தா மணியே சிறந்த கவிமணியே
வந்தாய் கிழக்கும் வடக்கும் வணங்கியேத்த
எந்தாய் புலவரேறே என்றும் மறவோமே.

## கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற புலவர்மணியின் 96வது பிறந்த நாள் விழா அன்று வழங்கிய பாடல்

**- செல்வி. ஸ்ரீகுமாரி கதிரித்தம்பி -**

நாயகனாம் அமரர் புலவர் மணி அவர்களுக்கும்,,
விழாத்தலைவருக்கும்,
சங்கத்தின் செயல்மிகு செயலாளருக்கும்..
கவியரங்கத் தலைவருக்கும்,
கவியரங்கு அமைக்க வந்த மூத்த கவிஞர்கட்கும்
சிறப்புச் சொற்பொழிவாளருக்கும் - மற்றும்
அன்புசால் அவையினர்க்கும்
கவியுலகில் தவழும் குழந்தை இவளின் இனிய நல்
வணக்கங்கள்!

அந்த நாளினில் கிழக்கினில் பண்டிதர் என
அன்பாய் நம்மவரால் பகர்ந்திட்ட ஒருவர் உளரேல்
புலவர்மணிதான் அவர் என ஏடுகள் பகருது

யான் கண்டறியேன் அவர்தம் தோற்றம்
யான் கேட்டறியேன் அவர்தம் குரலை - ஆனாலும்
யான் படித்தறிந்தேன் அவர்தம் பாக்களை
அவையே அவர் பெருமை சாற்றிடுது எனக்கு

மட்டுநகர் மைந்தனாம் புலவர்மணி
மக்கள் கவிஞனாம் புலவர்மணி
விண்ணிலே சுடர் போன்று வேர் பிடித்த
மண்போன்று தன் பாட்டுக்குள்
பலகருத்தைப் பதிய வைத்துள்ளார் - அவர்
மக்களுக்காய் பாடிவைத்த மாகவிகள் எத்தனையோ
சிந்தைக்கு விருந்து வைத்த சிறு கவிகள் எத்தனையோ

இலங்கை மணித்திருநாடு எங்கள் நாடு – எனக்
குரல் கொடுத்துக் குதூகலித்தார் குயிலாக
சிலப்பதிகாரத்து சீரிய கருத்துள்ள
கானல் வரிப் பாடலுக்கு
சற்றேனும் தரங்குன்றாப் பாடல் அது
கல்லோயா நங்கை எனப்
போற்றுகின்றார் பண்டிதமணி.

கல்லோயா ஆற்றினது ஓசை ஓய்ந்திடாமல்
ஒலித்திட்டே பாய்வதனை ஒரு வேளை
பாடி மகிழ்ந்தாரோ புலவர் மணி
அடியேனின் எண்ணம் இது.

அவர்தம் பாடல் கன்னியாய் திருவில்
கன்னியாய் குன்றுகள் என்றுமே ஓயாமல்
ஊற்றெடுத்துச் சுரப்பது போல்
ஊடுருவிப் பாயுது அவர்தம் பாநயம்
நம் மனத்தினிலே

இலக்கிய விரும்பிகள் கலக்கியே குடித்திட
இலக்கிய விரும்பிகள் கலக்கியே குடித்திட
இனியதோர் காவியம் பாலைக்கலி தந்துள்ளார்
அவர்தம் சங்கநூற் புலமையை
சாற்றிடுது இந்நூல்.

உலக முவப்புற உரைக்கும்
நூற்பொருள் தெரிவார்
ஒருவர் தமக்கு ஒருவர் – நிதம்
ஒப்புரவு புரிவர்

பலதிசையும் சென்று
முயன்றீட்டு பெரும் பொருளார்
பரமனடித் தொண்டு
புரிந்தேத்து திருவருளார்- என
உச்சிக் கொப்பிலேற்றி
உயர்வாய் பாடிட்டார்
யாழ்ப்பாணத்து மக்களை
ஒற்றுமை மந்திரத்தை
உணர்ச்சியுடன் உச்சரித்த
கற்ற அறிவினை – தாயின்
கடமைக்காய் அர்ப்பணித்த
கருணைவள்ளல் தம் பெருமை
கூறிட முடியாது.

தீ போல் கொதித்தெழுந்து
தியாகப் பணி புரிந்து
மீட்போம் என்று ஆணையிட்டுத்
தமிழ் மொழியை
காப்போம் எனக் கனன்றிட்டார்
புலவர் அவர்.

சிங்களமும் செந்தமிழும் சேர்ந்து சமமேயிலங்கை
எங்கும் அரசமொழியெனவே – துங்கமுடன்
ஆட்சி புரியவழி ஆக்குவதே எல்லோரும்
மாட்சியுடன் வாழும் வழியென வாஞ்சையுடன்
அன்றெமக்கு அஞ்சாமல் கூறிவிட்டார்.

நம் இனிய தமிழ்மொழியை நல்லபல கவிதையினால்
சீரிய நல் வெண்பாவினால் நல்லறிவுக் கட்டுரையால்
புதுமை பல செய்தார் நம்மவர் போற்றிட
தரணியிலே தரம் உயர்த்தி வைத்தார்.

மெய்கண்டார் ஆதீன சபையால்
மதுரகவி விருது பெற்று
மட்டுநகர் மண்ணில்
மலை என உயர்ந்திட்டார்.

பகவற்கீதை தனை வெண்பாவில் படித்திட்ட
அவர்தம் ஆற்றலைப் பகரவா? இல்லை
இராமாயணத்தையும் சிலப்பதிகாரத்தையும்
அழகுதமிழில் தந்திட்ட அறிவினைப் பகரவா?

பகவத் கீதையினை வெண்பாவில்
பாடி எமை பரவசத்தில் ஆழ்த்தியதால்
சாகித்திய மண்டலத்தின் சன்மான
விருது பெற்று சாலவே உயர்ந்திட்டார்.

உயர்தகு வித்தகர் புலவர் மணியின்
உள்ளதும் நல்லதும் என்னும்
'உயரிய உரை நூலுக்கு
இலங்கை அரசு வழங்கியது
இலக்கிய வித்தகர் எனும் விருது.

முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரின்
தத்துப் பிள்ளையாய் உத்தம சீடனாய்
பெருமை பல பெற்றதுடன்
தமிழன்னை மைந்தனாய் தமிழ் செய்தார்
தமிழ் வளர்த்தார் தமிழைப் பேணினார்

பகவத் கீதை வெண்பாவிற்கு செந்தமிழில்
பாங்காக சிறந்த நல்லுரை செய்தார்
சீரிய புகழ் கொண்டார்
புலவனாகி நம் மண்ணில்

நல்லாசிரியனாய் மட்டுமன்றி
மதவுரைகள் பல பொழிந்து
சீறுகவிகள் பல சொரிந்து
சீரிய நற்பணி செய்தார்.

ஏடுகள் சாற்றிடும் அவர் பெருமை - நம்
நாடு சொல்லிடும் அவர் உயர்வை

நான்சொல்ல வேறில்லை இங்கு
அவர்சொல் வண்ணம் நாம் நடந்து
அவர்வழி நின்று தமிழ் காப்போம்.

பல்வண்ணம் 'பா' தந்த
பண்டிதர் புலவர் மணி வழி
தமிழ் வளர்த்திடுதலே நம்
நாட்டறிஞர் செய்யும்
நயமிகு நன்றிக்கடன்.

அன்பினிது பொங்க அறம்பொங்க ஆருயிர்கள்
இன்ப சுகம் பொங்க இனிதாக - தென்பொலியும்
சங்கத் தமிழோசை தரணியெலாம் பொங்க
பொங்குக தைப்பொங்கல், பொலிந்து
என நான் வாழ்த்தவில்லை - எதிர்வரும்
பொங்கலுக்காய் ஏற்கனவே வாழ்த்திட்டார்
நம்மக்களை, நம் புலவர்மணி.

இவ் இனிய நன் நாளில் அவர்வழி
நம் அறிஞர் சென்றிட வேண்டி
நிற்பதுடன் விடைபெறுகின்றேன்
இவ்வரங்கில் நின்று அவர்தம்
தமிழ்த் தொண்டினை வணங்கி.

# புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை
# 96ஆவது பிறந்தநாள் விழா

ஆக்கம்: சிவநெறிச் செல்வன் சைவநன்மணி
ஞானவாரிதி இரா. மயில்வாகனம்

## புலவர்மணி

**வெண்பா:**

1. **செந்தமிழ் நாட்டில் பெரியதம்பி எமைப்பிரிந்தார்**
**பைந்தமிழை விண்ணோர்கள் பயில்வதற்கோ - எந்தைஇவர்**
**சிவனடியே சிந்தித்து சிறப்புகளை மனத்திருத்தி**
**அவனடியை நினைப்போம் ஆய்ந்து.**

2. **மண்டூர்ந்து அன்னமலை சார்ந்து மழைபொழிந்து**
**கண்டூர்ந்து கயல்பாய்ந்து கன்னல்விழை - மண்டூரிலுறை**
**முருகனருள் பேறுபெற்று புலவர்மணி பெரியதம்பி**
**பெருமைதனை பேணலுற்றேன் யான்.**

3. **கண்டனொடு கவுத்தனும் சருகுபில்லி கருதரிய**
**கண்டப்பன் அத்தியாயன் வயித்தியென - மண்டலத்தில்**
**பண்டுமுறை தவறாத பொன்னாச்சி எழுகுடியில்**
**பண்டிதராய்ப் பணிபுரிந்தார் பயனாக.**

4. **தந்தைதாய் முதல்வராவர் வண்ணக்கர் சோமநாதர்**
**எந்தந்தை ஏகாம்பரம் தாய்தந்தை - சிந்தைமிகு**
**சிதம்பரப்பிள் ளைபுத்திரியாம் சின்னத்தங்கம் எனவாங்கு**
**கவுதலை கவுந்தங்குடி என்றறி.**

## அறுசீர் விருத்தம்

1. பவவருடம் இன்றுவரை நான்குகுறை நூறாகும்
வாழ்ந்தகாலம்
பெருவாழ்வு வனுபவித்தாய் பெயரும் பெற்றாய்
புலவர் மணிஎன்று
உரியதாய் பெற்றுநின்றாய் உழைப்பினால் தமிழ்மங்கை
தனைமணந்து வந்தாய்
பெரியதாய் பெரியதம்பி பெயர்வாழ பெரிதும்
உழைத்தாய் உறவாலே.

2. ஈரைந்து ஆண்டுதன்னில் திருச்செந்தூர் புராணம்
பாரதம் இவையாவும்
ஆராய்ந்து அறிவுபெற்று புராணத்தின் பொதிபொருளை
வெளியாக விளக்கி
ஆராதனைக் காலங்களில் அறிவுரைகள் கூறியே
அகலவைத்து இனிதாக
பாரதனில் பண்டிதராய் வருவதற்கு முதற்படியும்
பெற்று வந்தாயே.

3. மந்திரத்தை எந்தநேரம் ஓதும்போதும் மாண்பான
மரகத மடத்தை
சிந்தையில் வைத்து மட்டுவில் மகாலிங்கம்
ஏ.எம்.கே. பேராசியர்
குமாரசுவாமி சந்தைஎன்றால் சாவகச்சேரி பீதாம்பரம்
பரமேஸ் கோணேஸ்
இசையாளர்களும் சிறிய தம்பி மயில்வாகனம்
இவர்களோடு பெரியதம்பியானோமே

4. அருளா தொழியிலெனக் கார்துணை சொல்வாய்
குருவாய் அமர்கோவே
நந்தியைமுன் ஆண்டுகதி நல்குபர ஞானசிவன்
தந்தமுருகா கிருபைதந்து
எந்தவிதமா னாலும் முத லடிமுதலும் மூன்றாமடி
அருள்நந்தி வந்தவகை
தந்துவகை பொங்கிவர வைத்து மகிழ்வு
தந்துதவி செய்தாயே

5. மட்டுவிலாம் பூங்கொடியில் மலர்ந்த மலர்
சாதிமலர் மலர்கள்தாழ
மட்டவிழ்ந்து மணங்கமழ்ந்த விலங்கு மலர்
மணவாளராய் வண்டுசூழ
தொட்டுண்ணும் இனியமலர் மகாலிங்க சிவமலர்
தொடர்பாய் பாசக்
கட்டறுத்துக் கருணைமலர் சிவபெருமான் கழல்மலர்
கீழ் உலகில் வாழ்ந்தாயே.

6. நல்லாய்கேள் நல்லார் செய்யுங் கேண்மை நாடோறும்
நன்மை தரும்
அல்லார் செயும் கேண்மை ஆகாதே ஆதலால்
காய்முற்றித் தீங்கனியாகும்
இளந்தளிர் நாள்போய்முற் றென்னாகும் என்றியம்பிய
சுவாமி வல்லார்
இளந்தமிழ் சிவப்பிர காசர் வாக்குக்கு
இசைவாக வாழ்ந்தாயே

7. நல்லாரைக் காண்பதவும் நன்றேஅவ ரோடுஇணங்கி
இருப்பதுவும் நன்றென்றார்
அல்லாரைக் கண்ட அவதிபெற்று பணிபுரிந்து
பாழ்படாமல் நன்குணர்ந்து
பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதி என்றும்
சோமசுந்தரம் பொன்னம்பலம்
கண்டுஇவர் களோடு சேர்ந்து வாழ்ந்த
புலவர்மணி ஆனாயே.

8. உய்வதற்கு தமிழன்னை உண்டுஎன்று உறுதி
கொண்டு வந்தாய்
செய்கருமம் திருந்தவே செய்துவாழும் தீரம்
திணிவான வேலைவளம்
வையத்து வாழ்தமிழர் மலர்ந்து வாழ்வார்
என்றும் துணிவெண்ணம்
தெய்வத்தின் அருளாய் செல்வத்தின் செல்வப்பெயர்
புலவர்மணி யானாயே

9. சாஸ்திரம் பார்த்து சந்ததியை வழிப்படுத்திய
சகாதேவனும் இங்கில்லை
சூஸ்திரத்தால் பொருள்கூறி தொல்லை நீக்கிய
தொல்காப்பியரு மிங்கில்லை
சும்மாயிருந்த சங்கையூதி சந்ததியைக் கெடுத்த
சாமிநாதரு மிங்கில்லை
அம்மாபிழை என்றறிவுறுத்திய புலவர்மணியுமில்லை
அறிந்ததையே அறைந்தேனே.

34/3, வஞேமண்டால் ஒழுங்கை,
கொட்டாஞ்சேனை
02.12.96

சிவநெறிச் செல்வர் சைவநன்மணி
ஞானவாரிதி இரா. மயில்வாகனம்
அகில இலங்கை சமாதான நீதிபதி.

கொழும்புத் தமிழ்ச்சங்க பொதுச் செயலாளர்

# திரு.க.இ.க. கந்தசாமி அவர்கள்,

புலவர்மணியின் 96வது நினைவு நாள் அன்று வழங்கிய

## நன்றியுரை

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த சங்கத்தின் துணைத்தலைவர் டாக்டர் குமார் வடிவேல் அவர்களுக்கும், இந்த நிகழ்ச்சியிலே சிறப்புச் சொற்பொழிவாற்றிய வித்துவான் ஞானரெத்தினம் அவர்களுக்கும் கவிதை அரங்கில் தலைமை வகித்த தமிழ் அறிஞர் சில்லையூர் செல்வராஜன் அவர்களுக்கும் கவிதையரங்கில் பங்குபற்றிய புலவர்கள் அனைவருக்கும் இந்த விழாவைச் சிறப்பிக்க வந்த பேரறிஞர்களாகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் வணக்கம்;

இலங்கைத் திருநாட்டின் தமிழின் பெருமையை உலகுக்கு உணர்த்தியவர்களுள் ஒருவராக விளங்கும் புலவர்மணியவர்கள், புலவர்மணி என்ற பெயரைத் தமக்கே உரிமையாக்கிக் கொண்ட தமிழ்ப்பேரறிஞர். இந்தச் சங்கம் தொடங்கிய காலத்திலிருந்து சங்கத்தோடு மிக நெருங்கிய தொடர்பு வைத்து, சங்கத்திலே நடந்த பல பெரும் மகாநாடுகளிலே அவர் சிறந்த சொற்பொழிவு ஆற்றியிருக்கிறார்.

சங்கத்தினுடைய பழைய நிகழ்ச்சிகளை நாம் எடுத்துப்பார்த்தால் 1942ஆம் ஆண்டு தொடங்கி 1950ஆம் ஆண்டுக்கிடையில் பல சிறந்த இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்திய பொழுது அப்பொழுதே அவர் இந்த சங்க நிகழ்ச்சிகளில் பங்குபற்றி சொற்பொழிவு நிகழ்த்தியிருக்கிறார்.

அதன்பின்பு 50 க்கும் 60க்கும் இடைப்பட்ட காலத்திலேகூட பலமுறை தமிழ்ச் சங்கத்திலே அவர் பங்குபற்றி தமிழ்ப்பணி செய்து சங்க வளர்ச்சிக்கு உதவி செய்து இருக்கின்றார். ஆகவே புலவர்மணி இலங்கையிலே தமிழை வளம்படுத்திய பேரறிஞர் என்பதற்காக தமிழ்ச்சங்கம் அவருடைய பிறந்த நாளைக் கொண்டாடுவது மட்டுமல்ல. சங்கத்தினுடைய வளர்ச்சிக்கு தொடக்க காலத்திலே பெரும்

பணியாற்றிய ஒரு பெருமகன் என்பதற்காகவும் பிறந்த நாள் விழாவை இன்று நாங்கள் இங்கே நடத்தக்கூடியதாக இருந்தது. இது மட்டுமல்ல, அவர் அமரத்துவம் எய்திய பொழுது அவருக்காக நாங்கள் ஒரு விழா எடுத்து அவருடைய திருவுருவப்படத்தை வைத்திருக் கின்றோம். அவருக்கு ஒரு நினைவு முத்திரை வெளியிட வேண்டும் என்ற கருத்தையும் நாங்கள் தொடக்கத்திலே அரசாங்கத்துக்குத் தெரிவித்திருந்தோம்.

'நாவலர் வளர்த்த தமிழ்' அல்லது 'நாவலர் வளர்த்த சமயம்' என்பது போல் புலவர் மணியவர்கள் வளர்த்த தமிழ் இன்று கிழக்கிலங்கையிலே வளம் படைத்து அவர்களையெல்லாம் சிறந்த தமிழ் அறிஞர்களாகவும், செந்தமிழ் வள்ளல்களாகவும் புரவலர்களாகவும் ஆக்கி வைத்திருக்கின்றது என்பதில் நாங்கள் பெருமைப்படவேண்டும். என்னோடு கிழக்கிலங்கை பெண்மணியொருவர் றோயல் கல்லூரியிலே ஆசிரியராக இருந்தவர், அவர் தான் பண்டிதரிடம் படித்ததாகவும் கிழக்கிலங்கையிலேயுள்ள பலர் அவரிடம் படித்ததாகவும் கூறினார்.

கிழக்கிலங்கையிலே உள்ள தமிழ், இஸ்லாமிய அறிஞர்களில் பலர் இங்கே இருக்கிறார்கள்: சிலர் பாராளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் கூட புலவர்மணியவரிடத்திலே ஒரு பெரிய பற்று இருப்பதை நாம் காண்கிறோம். இத்தகைய ஒரு பேரறிஞருடைய பிறந்த தினத்தை நாம் நினைவுபடுத்துவதன் மூலம் நாங்கள் எங்களுடைய வருங்காலத்தில் உள்ளவர்களை தமிழர்களாகவும் சிறந்த பண்பாடு உள்ளவர்களாகவும் ஆக்குவதற்கு இவை வழிவகை செய்கின்றன. இந்தத் தினத்திலே சிறப்புச் சொற்பொழிவாற்ற வந்த வித்துவான் ஞானரெத்தினம் அவர்கள் மிகச் சிறந்த சொற்பொழிவொன்றை நிகழ்த்தினார். அவர் தமிழ் ஞானத்திலும், கவிதை ஞானத்திலும் இசை ஞானத்திலும் வல்லவர் என்பதை இன்று பார்க்கிற போது நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எங்களுடைய குறுகிய கால அழைப்பை ஏற்று இங்கே வந்து சிறந்த சொற்பொழிவாற்றியமைக்காக அவருக்கு மிகவும் நன்றி. தலைவர் அவர்கள் தற்போது இங்கு இல்லை. அவர் தமிழ்நாடு சென்றதால் துணைத்தலைவரில் ஒருவராகிய டாக்டர் குமார் வடிவேல் அவர்களைக் கேட்டுக் கொண்டோம். இந்து சமய கலாசார திணைக்களத்தினுடைய பல

சிறந்த சேவைகளை தம்முடைய பொறுப்பாக ஏற்று இலங்கை முழுவதும் பெரும்பணியாற்றி வருகிறவர். அவர் இதை விருப்பத்தோடு ஏற்றுக்கொண்டார். புலவர்மணி பிறந்த தமிழகத்திலேயிருந்த ஒருவர் என்பதற்காக அவரே இன்று தலைமை தாங்குவதையிட்டுப் பெருமைப்படுகிறோம். ஆனால் அவர் ஒரு சிறந்த ஆராய்ச்சியுரை நிகழ்த்தினார். அதையிட்டு நான் பெருமைப்படுகிறேன். இப்படியான ஒருவர் சிறந்த தமிழறிவு, ஆராயும் உள்ளத்தை உடையவர் என்பதை அறிகிற போது இன்னும் பல நிகழ்ச்சிகளில் அவருக்கு இப்படியான ஒரு வாய்ப்பைக்கொடுக்க வேண்டும் என்று நாம் நினைக்கின்றோம். அதற்காக அவருக்கு நன்றி.

கவிதை உலகிலே கவிஞர்களுக்குக் கவிஞர்களாக பலருடைய அபிமானத்தைப் பெற்றவர் சில்லையூர் செல்வராஜன் அவர்கள். அவர் ஒரு இயற்கைக் கவிஞர். அவர் புலவர்மணியினுடைய அன்புக்குப் பாத்திரமானவர். அவர் இந்தக் கவியரங்கிற்கு வந்து தலைமை வகித்து இந்த நிகழ்ச்சியை வளம்படுத்தியதற்காக அவருக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

இந்தக் கவிதையரங்கிலே பங்குபற்றியவர்கள், புலவர் கனகரெத்தினம் அவர்கள், சிவநெறிச் செல்வர் இரா. மயில்வாகனம் அவர்கள் கவிஞர் ஏ.ஜெ. செரிபுதீன் அவர்கள், செல்வி ஸ்ரீகுமாரி கதிரித்தம்பியவர்கள் அனைவருக்கும் வணக்கம்.

ஸ்ரீகுமாரி கதிரித்தம்பியவர்கள், புலவர்மணி கவிதா புலமையிலே சிறந்தவர்கள் என்பதை எடுத்துக்காட்டுவது போல சிறந்த கருத்துக்களை எடுத்து இங்கே சொன்னார்கள். புலவர் கனகரெத்தினம் அவர்கள் புலவர்மணி கல்வி கற்ற குமாரசுவாமிப் புலவருடைய மாணவன் கணேசையரிடம் கல்வி கற்றவர். சிவநெறிச் செல்வர் இரா. மயில்வாகனம், கவிஞர் ஏ.ஜெ. செரிபுதீன் இருவரும் மட்டக்களப்புத் தமிழகத்திலே இருந்து புலவர் மணியினுடைய செந்தமிழ் வழியிலே வந்தவர்கள். ஆகையால் இந்தக் கவிதையரங்கிலே பங்குபற்ற வாய்ப்புக் கிடைத்தது. இதிலே இன்னொரு சிறப்பு; நாங்கள் எதிர்பார்க்கவில்லை. டாக்டர் குமார் வடிவேல் அவர்கள் தமது மனைவியாரோடு வந்து சேர்ந்தார். அதேபோல் சிவநெறிச் செல்வரும், கவிஞர் செரிபுதீன் அவர்களும் தங்கள் மனைவிமாரோடு வந்துள்ளார்கள்

இதற்காக அவர்களுக்கு நன்றி சொல்கிறோம்.

கிழக்கிலங்கையிலே அல்லது இலங்கைத் திருநாட்டிலே புலவர்மணிக்கு இருக்கின்ற ஒரு சிறப்பு, அவரிடத்திலே தமிழ் மக்கள் வைத்திருக்கின்ற பேரன்பு இங்கே நீங்கள் வந்திருப்பதைப் பார்க்கும்போது அறியக்கூடியதாக இருக்கின்றது.

அறிஞர் பெருமக்கள், மகளிர் பலர், சிறந்த அறிஞர்கள் இன்று உங்கள் வழமையான கடமைகளை விடுத்து இங்கே பங்குபற்றியதற்காக உங்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி.

இலங்கையின் அரசியல் தலைவர்களிலே சிறந்தவராக விளங்கும் எஸ். டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா அவர்களுடைய நினைவுதினம் இன்று. இதேநாளில் எங்கள் புலவர்மணியும் பிறந்திருக்கிறார். அவர் அரசியலில் கொடி கட்டிப்பறந்தார். இவர் தமிழ் உலகத்திலே கொடி கட்டிப்பறந்திருக்கின்றார்.

புலவர் கனகரெத்தினம் கூறியது போல் எங்கள் எல்லோரையும் பல ஆண்டுகளாக பல கோணங்களிலே இடைப்படுத்திக் கொண்டு இருக்கின்ற ஓர் அமைதியற்ற நிலை இன்று நிலவுகின்றது. இந்நிலையில் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. வருங்காலம் பொற்காலமாக வரவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

புலவர்மணியவர்கள் தேசிய கவிஞர் என்று புலவர் கனகரெட்ணம் கூறினார். கிழக்கிலங்கையிலே விபுலானந்தரும், புலவர்மணியும் தமிழ் மக்களையும் இஸ்லாமிய மக்களையும் ஒன்றாக, ஒருவராகக் கருதியவர்கள். ஆகையால் அந்தத் தொடர்போ என்னவோ தெரியாது எங்கள் செரிபுதீன் அவர்கள் இதிலே பங்குபற்றுவதை இட்டு நான் மிக விசேடமாக நன்றி கூறுகிறேன். ஆனால் அவர் சாதாரண ஆளல்ல. பாரம்பரிய தமிழ்க் குடும்பத்திலே பிறந்த ஒருவர்.

இப்பொழுது அதிகமாக எங்கு பார்த்தாலும் மகளிருடைய அமைப்புக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று பேசுகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சங்ககாலம் முதல் தமிழ்நாட்டுப் பெண்கள் தமிழ் வளர்ச்சியிலும், சமய வளர்ச்சியிலும், சமுதாயத் தொண்டிலும், அரசியலிலும் பெரும் பங்காற்றியிருக்கிறார்கள்.

சங்ககாலத்தை எடுத்துப்பார்த்தால் 30க்கும் மேற்பட்ட பெண்பால் புலவர்கள் இருந்தார்கள். அந்தப் பாரம்பரியம் நெடுக தொடர்ந்து வருகிறது. இன்றைக்கும் கவித்துவம் வல்ல மகளிர் எம்மத்தியில் இருக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிந்து மகிழ்கிறோம். அந்தப் பாரம்பரியத்திலே வந்தவர் ஸ்ரீகுமாரி கதிரித்தம்பியவர்கள். அவர் கொழும்பிலேயுள்ள பல அமைப்புக்களிலே சேர்ந்து பணி செய்கிறவர். இவ்வளவு கவித்துவம் அவரிடத்திலே இயல்பாக இருப்பதையறிந்து நாம் மகிழ்கிறோம். அவருடைய கவித்துவம் இன்னும் வளர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நேரத்திலே ஒரு பெரும் குறையை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். பல ஆண்டுகளாக எடுத்த முயற்சியை விரைவிலே நிறைவேற்றவேண்டும். அதற்காக ஒரு கட்டிடத்தை அமைக்கும் பணியிலே ஈடுபட்டிருக்கிறோம். ஏனென்றால் பலர் எங்களைத் தேடித் தங்களுடைய நிகழ்ச்சிகளுக்கு, பணிகளுக்கு உதவி கேட்டு வருகிறார்கள். ஆனால் அதற்கெல்லாம் கொடுப்பதற்குப் போதிய வாய்ப்பில்லை. அதற்காக இந்தக் கட்டிடப் பணியைத் தொடர்கிறோம். எங்களிடம் நிதியில்லை. பலருடைய உதவியுடன் இதை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது.

இந்த நேரத்திலே புலவர்மணியின் பிறந்த நாளிலே அவருடைய மகன் 2000 ரூபாவை கட்டிடத்திற்காகக் குடும்பத்தின் சார்பில் தந்ததையிட்டு அவருக்கு நன்றி செலுத்துகிறேன். இப்போது இதிலே முன்னுக்கு இருக்கும் 4 மாடிக்கட்டிடத்தை நாங்கள் தொடங்கிய போது 20,000 ரூபாதான் எமது கையிலேயிருந்தது. அப்போது பல இடங்களிலேயிருந்தவர்கள் மிகச் சிறிய தொகைதான் கொடுத்தார்கள். அச்சிறிய தொகையைக் கொண்டு நாம் குறுகிய காலத்திலே இதை நிறைவேற்றினோம். அதேபோல் அடுத்த மாடியும் நடைபெற இருக்கிறது.

இன்று 96வது பிறந்த தின விழா. 96ஒரு சிறந்த தத்துவ எண். அவருடைய மகன் கூறினார்; 100 ஆண்டு நிறைவுக்கு இது ஓர் அடிப்படையாக அமையும் என்று. அவர் கூறியது போல் இங்கே உரையாற்றிய ஞானரெத்தினம் அவர்களும் குறிப்பிட்டார்கள். அதை சிறப்பாக கொண்டாடுவதற்கு அவருடைய மகன் திட்டமிட்டிருக்கிறார்.

அவர் ஒரு சிறப்புமலர் வெளியிட இருக்கிறார். இன்று இங்கே உரையாற்றிய, தலைமை வகித்த தலைவருடைய உரையும். சொற்பொழிவாற்றிய ஞானரெத்தினம் அவர்களுடைய உரையும். இந்தக் கவிஞர்களுடைய கவிதைகளும் அந்த மலரிலே இடம்பெற வேண்டும் என்று விரும்புகிறேன். அவர்கள் பலர் எழுத்துருவிலே வைத்திருப்பார்கள். அதனைப் பயன்படுத்தலாம். இந்தப்பொறுப்பை கிழக்கிலங்கையிலே செய்வதற்கு அவருடைய நினைவுப் பணிமன்றம் இருக்கின்றது. தலைநகரத்திலே பல இனத்தவர்கள், சமூகத்தவர்கள் வாழுகின்ற இந்த நகரத்திலே இந்தப்பணியை தமிழ்ச்சங்கம் செய்ய முடியுமானால் அதை நாங்கள் பெரும் பேறாகக் கருதி அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய ஆயத்தமாக இருக்கிறோம்.

இத்தோடு நாளைய தினம் சேர். பொன் இராமநாதன் அவர்களுடைய நினைவுநாள். பாராளுமன்ற ஜனாதிபதி செயலகத்தில் அவருடைய சிலைக்கு முன்னால் பி.ப. 4 மணிக்கு விழா நிகழவிருக்கின்றது. பல தாபனங்கள் இதிலே பங்குபற்றிக் கொள்ளும். நீங்களும் விரும்பினால் பங்குபற்றிக் கொள்ளலாம்.

தமிழ்ச் சங்கத்தைப் பொறுத்தவரை புலவர்மணியின் புலவர் பாரம்பரியத்தை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் யாழ்ப்பாணத்திலும் பல இடங்களிலும் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக பிரதேச பாலபண்டித வகுப்புக்களைத் தொடங்கவிருக்கிறோம்.

நாங்கள் பெருமைப்படலாம். உண்மையாக ஒருவர் தனது தாய்மொழிலுள்ள ஏதாவது ஒரு நூலையாவது முழுமையாக படித்தால் மட்டுமே அவர் பிறந்த பிறப்பின் பெரும் பயனை எய்தியவராக நாம் கொள்ள வேண்டும். விமர்சனங்களை மட்டும் படித்து அதைப் பெருமையாக கொள்வது பெருமையல்ல. இதேபோல உங்களுக்குப் பகிரங்கமாக கூற விரும்புகிறோம். அமெரிக்க நாட்டிலிருந்து வந்த ஒருவருக்குத் தமிழிலே ஈடுபாடில்லை. இருந்தாலும் நமது நாட்டிலே இருக்கும் ஒருவர் தமிழகத்திலே ஒரு பல்கலைக்கழகத்திலே புலவர் வித்துவான் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தமிழ்ச்சங்கம் உதவி செய்யமுடியுமானால் அதற்கு அவர் போதிய நிதி தருவதாக கூறியிருக்கின்றார். அப்படியான ஒருவரைத் தெரிந்து அனுப்புவதற்கும் நாம் வேண்டிய ஒழுங்குகளைச் செய்து கொண்டிருக்கிறோம்.

அடுத்து வருகிறது பொங்கல் திருநாள். நாம் கடந்த ஆண்டும் செய்தோம். இந்த ஆண்டிலும் ஒரு கவிதையரங்கை வைக்கவுள்ளோம். இங்கே யாராவது விரும்பினால் ஏற்கனவே பெயரைத் தந்தால் கவிதையரங்கிலே பங்குபற்ற முடியும் என்பதையும் கூறி வைக்கிறேன். சேக்கிழார் தம்முடைய சிவனடியார் திருக்கூட்டத்தைக் கூறுகிற பொழுது அவர்களை திருப்பேரவை வெல்கவே என்று போற்றுகிறார். அதேபோல் நல்லதோர் பேரவையை அமைத்து இன்றைய நிகழ்ச்சியைச் சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றி உரியதாகுக.

❀❀❀❀❀❀



புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் 96வது பிறந்த தினத்தில் வித்துவான் கே.ஞானரத்தினம் அவர்கள் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் சிறப்புரை ஆற்றும் போது எடுத்த படம்.

# மட்டுநகர் தந்த மணி

– மூனாக்கானா –

மட்டுநகர் தந்தமணி, மதியோர்க்குள்ளே
மாமேரு போன்றமணி, தமிழாந்தேனை
கொட்டுகின்ற மேகமணி, குழந்தையுள்ளம்
கொண்டதொரு அன்புமணி, உயர்வுதாழ்வை
வெட்டிவிட்ட வீரமணி, பழகுதற்கோ
மேலான பண்புமணி, இவையனைத்தும்
தொட்டுநின்ற புலவர்மணி பெரியதம்பிப்
பிள்ளையெனுந் திருநாமம் வாழ்க! வாழ்க!

புவிபோற்றும் காப்பியங்கள் சங்கநூல்கள்
புராணங்கள் திருமுறைகள் தோறுங்கண்ட
கவிதைகளில் ஊடுருவி உண்மை கண்டோன்
கற்ற இவன் முகம்பார்த்து தமிழ்தாவென்று
தவியாகத் தவித்துவரும் தமிழ்ஏழைக்கு
தாராளமாய்க் கொடுத்தோன் புகழைநாங்கள்
செவியிருந்தும் கேளாது விட்டோமானால்
செவிகளை நாம் பெற்றிருந்தும் செவிடராவோம்.

வெண்பாவில் புகழேந்தி என்றநாமம்
விலக்கிவிட்டு அப்புகழை தனதாய்க்கொள்ள
ஒண்பாவாம் கீதைவெண்பா நமக்குத்தந்தார்
உலகுபுகழ் கவிஞரதை ஏற்றுக்கொண்டார்
எண்ணுவதும் சொல்செயலும் ஒன்றேயான
எங்களது புலவர்மணி கவிதைதன்னை
கண்ணிருந்தும் பார்த்துமனம் மகிழாவிட்டால்
கண்களை நாம் பெற்றிருந்தும் குருடராவோம்.

தாயினது உளங்கொண்டு தமிழ்ப்பாலூட்டி
தமிழறிஞர் பலரையிங்கே வளர்த்துவிட்ட
நாயகனாம் புலவர்மணி இன்று இல்லை
நாட்டிவைத்த விருட்சங்கள் பலவுண்டு
தூயவிபு லாநந்தன் அடிக்கீழ்நின்று
தொண்டுசெய்த பெரியதம்பி சேவைதன்னை
வாயிருந்தும் பேசாது விட்டோமானால்
வாயதைநாம் பெற்றிருந்தும் ஊமையாவோம்.

தையலரும் மீனினமும் கவிதைபாடும்
தகுதிகொண்ட மட்டுநகர் மண்ணின்மீது
துய்யசிவ மணங்கமழும் மண்டூர்தன்னில்
தோன்றியாழ் நகர்சென்றும் புலமைபெற்று
வையகத்தில் தாய்மண்ணை மதிக்கவைத்த
மன்னுபுகழ் பெரியதம்பி வடித்தநூலை
கையினிலே தொட்டெடுத்துப் படிக்காவிட்டால்
கையிருந்தும் சொத்திகளாய் வாழ்வோமன்றோ.

மலைவிளக்காய் புகழ்பூத்து உயர்வுகொண்டோன்
மாணவர்க்குச் சுரபியைப்போல் அறிவுதந்தோன்
நிலையாகத் தொண்டுசெய்யத் துறவுபூண்ட
நிகரற்ற நமதுவிபு லாநந்தர்க்கு
கலையாமல் குயிலே!நீ பாடுஎன்று
கவிசெய்தோன் சிலையேனுங் கண்டுநாங்கள்
தலைசாய்த்து நாம்வணங்கிச் செல்லாவிட்டால்
தலையினைநாம் வைத்திருந்தும் பயனேயில்லை.

சொல்லினிமை கொண்டதொட ருரையின்மூலம்
உள்ளதுவும் நல்லதுவும் உரைத்தோன் அன்று
இல்லையெனில் தமிழ்மரபுக் கவிகளேது
இறைபுகழ்சொற் பொழிவுமிலக் கணமுமேது
எல்லையில்லா இலக்கியத்தின் பொருளுமேது

எமதுமண்ணின் புகழேது இவைகள்தந்த
நல்லவனை இதயமதில் நினையாவிட்டால்
நாமிதயம் வைத்திருந்தும் பயனேதையா.

சேலாடும் பொய்கைகளும் திருஆடும்வயலும்
சிவநெறியும் திருநீறும் தினமாடும்பண்பும்
வேலாடும் முருகனது பதியாம்மண்டூரில்
மிகுமேன்மைக் குடும்பத்தில் வளர்மதிபோல்தோன்றி
நூலாடும் மன்றங்கள் அறிவகங்கள்தோறும்
நுண்கலைகள் தந்தவனின் வீடுபதிநோக்கி
காலாடும் படிநடந்து கண்டுதொழாவிட்டால்
காலிருந்தும் முடவர்களாய் நாம்வாழ்வமன்றோ

பிறந்தவர்கள் உலகினிலே பலநூறுகோடி
பிறந்தறிஞ ராகியவர் ஒருசிலவேலெட்சம்
சிறந்தகவிப் புலவர்சில ஆயிரமேயுண்டு
சிந்தையிலே நின்றோரில் புலவர்மணிஒன்றே
நிறைந்தகுடம் போலமைதித் தமிழ்த்தொண்டுசெய்த
நிகரற்ற பெரியதம்பிப் புலவரதுநாமம்
நறையெனவே செவியினிக்க நாபேசாவிட்டால்
நாவிருந்தும் கொன்னையராய் நாம்வாழ்வமன்றோ!

நித்தியமும் வெள்ளாடை புனையுமொருமேனி
நிறையறிவு காட்டுகின்ற பரந்த தொருநெற்றி
பத்தியொடு திருமுறைகள் ஓதுகின்ற நல்வாய்
பார்த்தவரைக் கவர்ந்திழுக்கும் பார்வையுள்ளகண்கள்
சத்தியஞ்சொல் கவிபுனையும் பேனையுள்ளகையும்
சாமிதலம் வலம்வருகும் தளராதகாலும்
இத்தனையுங் கொண்டவனின் பூதவுடம்பில்லை
இனிமேலும் வாழ்ந்திடுவான் புகழுடம்பினோடு.

(தமிழ்மணி. மு.கணபதிப்பிள்ளை-ஆரையம்பதி)

கல்முனைச் சைவ மகா சபை ஆண்டு விழாவின் போது

## உயர்திரு. புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை

அவர்களின் சேவையைப் பாராட்டி, குறித்த சைவ மகா சபையினர்
அன்னாருக்கு வழங்கிய,

# வரவேற்பு உபசாரப்பா

சீரும் திருவும் திகழ் மண்டூர்ச்
செவ்வேள் அருளின் செழும்பேறே
ஊரும் உலகும் பயனடையும்
ஓங்கு தமிழுக் கொருநிதியே
பேரும் புகழும் நிலவுமுயர்
பெரிய தம்பிப் பிள்ளைஎன
ஆரும் போற்றும் புலவர்மணி
ஐயா வருக! வருகவே!

தேனார் மட்டு வளநாடு
சிறக்குந் திருவே சித்தாந்த
ஞான பானு எனமிளிரும்
நல்லோய் நல்லூர் நாவலவன்
மாணார் புகழ்சேர்மாணவரின்
மரபை விளக்கும் மாமணியே
ஆனா அறிவுக் குறைபதியே
அன்பே வருக! வருகவே!

சுன்னைப் பதிசேர் ஆசானாய்த்
துலங்கு குமார சுவாமிஎன
மன்னு தமிழ்ப்பே ராழியினில்

மகிழ்ந்து படிந்த மாமுகிலே
பின்னைப் புலவர் வெண்பாவில்
பெரிய தம்பி எனப்போற்ற
வன்னத் தமிழிற் கீதையினை
மலர்ந்த மதுர கவிவருக!

தெருளார் உள்ளச் செழுமலரில்
சிவஞா னத்தேன் சுரந்தூட்டி
மருளார் மாயா மலந்துடைக்கும்
மாசில் சைவ மாமணியே,
அருளார் விபுலா நந்தரடி
அகத்தே நிறுத்த அன்பினிலே
பொருளார் மீட்சிப் பத்துரைத்த
புலவர் ஏறே வருகவே!

ஆசில் மண்டூர்ப் பதிகமெனும்
அருநூ லியற்றி அறுமுகவன்
வீசுங் கருணை வெள்ளத்துள்
மேய குருவே விளங்குமுயர்
தேசு மலியு மிலங்கைமணித்
திருநா டென்னுங் கவிமூலம்
தேச ஒருமைப் பாடுரைத்த
திறலோய் வருக! வருகவே!!

எண்ணில் அமையாச் சொற்பொழிவால்
எழுத்தாற் கவிதை இன்பொருளால்
மண்ணில் வாழ வழிகாட்டும்
மாசில் மணியே மகிழ்ந்து நிதம்
நண்ணும் யார்க்குந் தமிழமிழ்தை
நல்கி அறிவுப் பசிதணிக்கும்
தன்னே ரில்லாப் புலவர்பெருந்
தகையே வருக! வருகவே!!

கலையின் பெருக்கே கற்பகமே
கவிதைக் கடலே களித்து நிதம்
பலரும் புகழ்பா வலரேறே
பண்பில் உயர்பண் டிதமணியே
நிலையில் திரியா நெடுவரைமேல்
நிலவுஞ் சுடர்போல் நீடுழி
அலகில் பணிகள் தமிழன்னைக்
காற்ற இறைவன் அருள்கவே.

ஆக்கம்: சைவமாமணி வி. விசுவலிங்கம்



மட்டக்களப்பில் நடைபெற்ற புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் நினைவு தினத்தில் எடுத்த படம்.

# ஒளிவீசும் மணிவிளக்கு


## - ஜீவா ஜீவரத்தினம் -

வெண்கலத்தைத் தட்டிவிட்டால் மேலெழும்பும் ஒலியை
மேவிநிற்கும் காம்பீர்ய மானகுரலாலே
தண்பொதிகை மடியினிலே தவழ்ந்ததமிழ் அள்ளித்
தந்துநின்ற திருவாயும், தாட்சண்ய மனதும்,
கண்களிலே சுடரொளியும், கண்ணாடி அழகும்,
கவர்கின்ற புன்னகையும், கபடமிலா நோக்கும்,
புண்படா துரையாடும் போற்றரிய பண்பும்
புலவர்மணி ஐயாவின் பொன்னணிகள் ஆகும்!

வித்தகராம் சுவாமிவிபு லானந்த ருக்கோர்
மேன்மையுறு மாணவனாய் விளங்கிட்ட மேலோன்,
பெத்தலையில் பிறந்தபிரான் வழிதொடர எண்ணிப்
பிரியமுடன் தமிழ்நாடு சென்று, மனம் மாறிச்
சுத்தமெய்ச் சைவஒளி தொடர்ந்து, வழி மீட்க,
துரிதமாய்த் தன்பதியை வந்தடைந்த பின்னர்
சித்தாந்த, வேதாந்த திருமறைக ளோடு
செந்தமிழில் சிறப்புற்றார் புலவர்மணி ஐயா!

உள்ளதையும் நல்லதையும் ஒளிவுமறை வின்றி
உரைத்ததையும், ஸ்ரீகிருஷ்ண பகவானின் கீதை
வெள்ளத்துள் அடிமூழ்கி உள்ளாய்ந்து கண்ட
மேலான தத்துவத்தை – விழுப்பொருளை அள்ளித்
தெள்ளுதமிழ் வெண்பாவில் சீரியநன் னடையில்
தெரியாரும் புரிவகையில், திரிபுபடா யாப்பில்
அள்ளிவழங் கிட்டதையும் அறியாதார் யாரோ?
அறியாதார் உளராயின் அவரெந்த ஊரோ?

கிழக்கிலங்கை கண்டபெரும் புலவர்மணி; அன்னார்
கீர்த்தியோ தமிழ்கூறும் நல்லுலக மெல்லாம்
நிலைத்துநிற் கின்றதெனில், நிச்சயமாய் அவரின்
நிகரற்ற புலமையினால், நேசமிகு மனத்தால்,
சளைக்காத முயற்சியினால், தனித்துவத்தால், என்றும்
தற்பெருமை யற்றகுண வியல்புகளா லன்றோ?
விளக்கெரியும்! புலவர்மணி விளக்கொளிரும்! இந்த
வியனுலக முள்ளவரை வீசுமொளி நின்றே!



கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் 96வது பிறந்ததின விழாவில் மகன் பெ. விஜயரெத்தினம் புலவர் மணியின் படத்திற்கு மலர்மாலை சூட்டுகிறார்.

# தனிச் சிறப்புப் பெரியதம்பிப்பிள்ளை

கவிராஜயோகி கபிலவாணன்,
சென்னை 21.

கதிர்காமம் போற்சிறந்த முருகன் கோயில்
கவின்செய்யும் மண்டூரில் வாழ்ந்தி ருந்த,
சதி-பதி ஏ காம்பரன் சின்னத் தங்கம்
சர்க்கரைப்பாப் பெரியதம்பி யைப்பெற் றார்கள்!
மதியரசாய் விளங்குதற்கு மைந்தன் வந்தார்!
மகன்தந்தைக் காற்றுநெறி யறிந்து, கோயில்,
ஆலோசகராய்ப் பெரும் பணியும் செய்தார்,
ஆங்கிலத்தும் நாவரச ரான 'பிள்ளை'.

இனிமையுறும் இளமையிலே தமிழைக் கற்றார்;
இலக்கணமும் இலக்கியமும் கண்ணாய்ப் பெற்றார்!
தனியார்வம் சைவத்தில் நாவ லர்போல்;
தன்னெழுத்து வளர்ச்சியினால் உலகத் திற்குக்
கனிந்தசுவை நிறை நூல்கள் யாத்துத் தந்தார்;
கடல்முத்தைக் கோத்தாற்போல் 'கீதை வெண்பா'
தனிச்சிறப்பு வாய்ந்ததெனப் புலவர் போற்ற,
தமிழ்க்கவிதை நூல் தந்தார் பெரியதம்பி.

எண்ணெழுத்தை அறிபுலவர் தனக்குள் தோண்டி
ஈன்ற 'பலாக் கனி''சீவகன் சரிதம்' உண்மை;
மண்மணக்கும் புலவர்மணி கவிதை கள் நம்
மனம்வளர்க்கும் ஊட்டச்சத் துணவாம் கண்டீர்;
தண்டமிழில் 'உள்ளதும் நல் லது'போல் நன்மை,

தருநூலைத் தருவாரிர்யார் இவரை யன்றி?
கண்டுச்சொற் களஞ்சியமாய்க் கட்டு ரைகள்
கணக்கின்றித் தாளிகையில் தொடர்ந்து தந்தார்!

பெரியதம்பிப் புலவர் மேடை யேறிப்
பேசுவதில் கேசரியாய்த் திகழ்ந்த தாலே,
அரியஉரை நிகழ்த்தற்காய் அழைக்கப் பட்டார்
அரசாங்க விருதும்பல கொடுக்கப் பட்டார்!
வரிக்கோடு வேங்கைக்கே இயற்கை; கல்வி
வளந்தொண்டு இவரியற்கை; தெரிந்து கொண்டு
சரியாக 'அஞ்சல்தலை' வெளியிட் டார்கள்
சான்றோரைச் சிறப்பிக்க அரசாங் கத்தார்;

வஞ்சமிலா இயற்கைத்தாய் வளஞ்சு ரக்கும்
வனமன்றோ சீரிலங்கை...? இந்தத் தீவை
நெஞ்சாரப் பாடியவர்; சான்றோ ரோடு
நேயவடம் தொட்டிழுத்த உறவுக் காரர்;
தஞ்சாவூர் தட்டுப்போல், தனிச்சி றப்பும்
தண்ணீர்போல் பிறர்க்குதவும் போக்கும் கொண்டார்;
மஞ்சு உலா வருவானம் வரைக்கும் நீளும்
மரியாதை பெரியதம்பிப் பிள்ளைக் குண்டு.

இல்லறத்தில் உயர்ந்துநின்ற சைவர்; எங்கள்
இரத்தினத்தின் தந்தையவர் சிறந்த மேதை;
சொல்லுக்குள் பெயர்வினைபோல் நூல்க ளுக்குள்
சுட்டுகிற திருக்குறள்போல் கீர்த்தி மிக்கார்;
நல்லவர்கள் மெச்சுதமிழ்த் தொண்டர், என்றோ
நமைப்பிரிந்து போனாலும் செய்த தொண்டால்,
பல்லாண்டு புகழ் வடிவாய் நம்மில் வாழ்வார்
பாவலர்கள் வரிசையிலே என்றும் வாழ்க!

# புலவர்மணி பெரியதம்பி

- பண்டிதர் இணுவையூர் கா.செ. நடராசா

மட்டு நகர்தந்த
மட்டுப்படாத் தமிழனவன்
தொட்ட இடமெல்லாம்
மட்டுச் சுவைதந்தான்
மெட்டுப் பலகண்டே
என்றும் நயந்திடவே.

மட்டுப்படா இன்பம்
சந்தச் சுவையோடு
கொட்டிக் குவிந்திடவே
புலவர்மணி பெரியதம்பி
இட்டுவைத்தான் செந்தமிழில்
நன்று மகிழ்ந்திடவே

புகழ்பூத்த வாழ்வு கொண்டோன்
அழகூட்டும் தமிழ்ப்பாவால்
குலம்கொண்ட் புகழ் ஓங்க
தண்டமிழ் மணியாகி
நலம் கொண்ட உணர்வோடு
செந்தமிழால் நலஞ்செய்தான்

செந்தமிழால் நலஞ்செய்தான்
செந்நெறி வாழ்வு கொண்டான்
விண்டுரைத்த சொல்லெல்லாம்
மட்டின்சுவை தந்ததம்மா
மொண்டு மகிழ்ந்திட்டேன்
வாழ்க அவன்புகழே.

மரபுநெறி தவறாதான்
பெரியதம்பிப் பாவலன்காண்
புதுமையெனப் பேர்சொல்லிப்
பயனறியாச் சொற்புகலான்
கவியென்று சொல்லி நிதம்

கவியாக வாழ்ந்ததில்லை.

புவியெல்லாம் புகழ்மணக்கத்
தணியாத பணி செய்தோன்
கவியாக வாழாத புலவனவன்
சலியாத உழைப்பதனால்
நிலையான வாழ்வுற்றோன்
புலவர் மணிப் பெரியோனே

புலவர்மணிப் பெரியோனைப்
பெரியதம்பிப் பாவலனைத்
தமிழ்உணர்ந்தார் உள்ளத்தால்
உவந்து நிதம் போற்றிடுவார்
தரமறியார் உணர்வதில்லைத்
தண்டமிழின் சுவை அதனை

மட்டுறும் நாட்டகத்து
மட்டார் குழல் குலுங்கச்
சாட்டுறும் தமிழாலே
பாடி மகிழ்ந்தவனே
நூற்றாண்டு பலகாணப்
புகழ்பூத்து வாழ்ந்திடுக.

மரபுநெறி வந்தவனாய்த்
தண்டமிழின் சுவை உணர்ந்து
இணையிலியாய் வாழ்வுற்றோன்
தில்லைக் கூத்தன் இவன்
நடராசன் என்றுரைக்கும்
செந்நாப் புலவன்நான்.

செந்நாப் புலவன்நான்
சொன்னதமிழ் பொய்த்ததில்லை
தன்ஆண்மை கொண்டவனே
தண்டமிழ் உணர்ந்திடுவான்
சங்கத் தமிழறிந்த
மரபுடையார் தாமறிவார்

# தமிழ் உலகின் சுடர் அணைந்தது!

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் பெரும் பிரிவையிட்டுத் தமிழறிஞர்களும் அபிமானிகளும் விடுத்துள்ள அனுதாபச் செய்திகள்.

கல்வி அமைச்சின் தமிழ்ப்பிரிவுப் பணிப்பாளர் திரு. கி. லஷ்மண ஐயர் தமது அனுதாபச் செய்தியில் தெரிவித்ததாவது:-

"புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் காலமாகி விட்டார் என்ற எதிர்பாராத செய்தியை வியாழன் இரவு வானொலியைத் தற்செயலாகத் திருப்பிய பொழுது கேட்டதும் பெரிதும் அதிர்ச்சியடைந்தேன். பழகுவதற்கு எவ்வளவு இனிமையானவர், எவ்வளவு பண்பானவர், சாந்தமே சொரூபமானவர், திடீரென நம்மை விட்டுப் பிரிந்து விட்டாரே என்ற எண்ணமும் வேதனையுந்தான் முதலில் ஏற்பட்டன.

அவர் ஞாயிறு தோறும்,சிந்தாமணியிலே சுவையாக எழுதி வரும் "உள்ளதும், நல்லதும்" என்ற கட்டுரைத் தொடரே அடுத்தாற்போல் நினைவுக்கு வந்தது. தமிழோடு தொடர்புள்ள எத்தனையோ விஷயங்களை எளிமையாகவும், இனிமையாகவும் சொல்லிக் கொண்டிருந்த சமயத்தில் திடீரென அதனை இடையில் நிறுத்தி விட்டுப் பிரிவது போலப் பிரிந்து விட்டாரே என்ற வேதனையும் ஏற்பட்டது.

புலவர்மணி அவர்கள் தமிழுக்குப் பல துறைகளிலும் செய்த பணிகள் ஒன்றன் பின் ஒன்றாக நினைவுக்கு வந்தன. சிறப்பாக, அவருடைய பகவத் கீதை வெண்பாவையும் அதற்கு அரசாங்கம் பரிசளித்துப் பாராட்டியதையும் எண்ணினேன்.

இந்து கலாசார அமைச்சினால் நியமிக்கப்பட்ட இந்து சமய விவகார ஆலோசனைச் சபையிலும் தமிழ் இலக்கிய ஆலோசனைச் சபையிலும் புலவர்மணி அவர்களோடு சேர்ந்து பணியாற்றும் சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தமையினால் அவர்களோடு நெருங்கிப் பழகவும், அவர்களுடைய இனிய சுபாவத்தை நேரில் அறியவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. இனிய சுபாவத்தை மட்டுமன்றி அவர்களின் பண்பாட்டுச் சிறப்பினையும், உயர்ந்த உள்ளத்தையும் நன்கு அறியக் கூடியதாக இருந்தது. கிழக்கிலங்கையிலே தோன்றித் தமிழ் உலகம் முழுவதும் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த ஒளி திடீரென அணைந்து விட்டது. இது தமிழ் உலகம் முழுவதற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்." இப்படி அவர் தெரிவித்தார்.

## வெண்பாவிற்கு ஒரு பெரியதம்பி

ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் தமிழ் நிகழ்ச்சி அதிகாரியான கலாநிதி கே. எஸ். நடராசா தமது அனுதாபச் செய்தியிற் குறிப்பிடுவதாவது:

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் காலமானார் என்ற இலங்கை வானொலி அறிவித்தல், தமிழுக்கு விழுந்த ஒரு பேரிடி போலச் சென்ற வியாழக்கிழமை இரவு காதில் விழுந்தது. அதைக் கேட்டதும் ஒரு கணம் தலை கிறுகிறுத்தது. என் நினைவுகள் இருபத்தைந்து ஆண்டுகள் பின்னோடிச் சென்றன.

நான் இலங்கை வானொலித் தமிழ்ப் பகுதிக்குப் பொறுப்பாயிருக்க ஆரம்பித்த போது, கவியரங்கம் என்ற ஒரு நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தேன். அந்த நிகழ்ச்சியிற் பங்கு பற்றுவதற்குக் கிழக்கு மாகாணத்திலிருந்து புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களை அழைத்திருந்தேன். அவர் பங்கு பற்றிய முதற் கவியரங்கத்திலே யாத்துச் சொன்ன கவிதைகள் என் உள்ளத்தைக் கவர்ந்தன.

அவர் செய்யுள்களிலே உண்மையான புலமையின் வெளிப்பாட்டைக் கண்டேன். அவர் செய்யுள்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது அக்கவியரங்கிற் பங்கு பற்றிய மற்றையோர் செய்யுள்கள் எவ்வளவோ விட்டுக்கொடுத்தன.

அதனால் அவரைக் கவியரங்கிற்கு அழைக்கும் போதெல்லாம் அவரோடு சரி நிகராகக் கவிதையெழுதத் தக்க புலவர்களைச் சேர்த்துப் பிடிப்பது சற்றுக் கடினமாகவேயிருந்தது.

அரசாங்கம் தமிழுக்கென்று அமைக்குங் குழுக்கள் ஒவ்வொன்றிலும், புலவர்மணி அவர்களுக்கும் ஒரு இடம் எப்பொழுதும் இருந்தது.

சாகித்திய மண்டலத் தமிழ் இலக்கிய குழுவில் அவரோடு சேவை செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்பொழுதெல்லாம் அவருடைய ஆழ்ந்த தமிழ் அறிவையும், நேர்மையான போக்கையும் அவதானித்துப் பயன்பெற முடிந்தது.

அவரியற்றிய பகவத்கீதை வெண்பாவை சாகித்திய மண்டலப் பரிசின் பொருட்டுப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது, வெண்பாவிற் புகழேந்தி என்பதை இனிமாற்றி, வெண்பாவிற்கோர் பெரிய தம்பி என்று சொல்ல வேண்டும் போலிருந்தது. அத்துணை சிறப்புடையன அவரது ஓசையும் நயமும் நிறைந்த வெண் பாக்கள்.

புலவர்மணி பெியதம்பிப்பிள்ளை அவர்களோடு, ஈழத்திற் பழந்தமிழ்ப் பெருமை வாய்ந்த புலவர் பரம்பரை ஓய்ந்தது என்றே கூறலாம். சுவாமி விபுலாநந்தர் அவர்களிடம் பெரும் பக்தி கொண்ட புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள், உண்மையில் அவர் தன்னை சுவாமி அவர்களது முதல்மாணாக்கன் என்று கூறிக் கொள்வதிற் பெருமைப்படுவார். புலவர்மணி அவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டிற்காகத் தமிழ் கூறு நல்லுலகம் அவருக்கு என்றும் கடமைப்பட்டதென்றே கூறவேண்டும்.

### சிறந்த பண்பாளர்

வித்தியோதய பல்கலைக்கழக முன்னைநாள் தமிழ்த் துறைத் தலைவரும், நான்காவது அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டின் அமைப்புக் குழுத் தலைவருமான கலாநிதி அல்ஹஜ் 'எம்.எம். உவைஸ் விடுத்திருக்கும் அனுதாபச் செய்தியில், கூறியிருப்பதாவது:-

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களை நான் பலமுறை சந்தித்திருக்கிறேன். மட்டக்களப்பில் நடைபெறும் கூட்டங்களுக்குப் போனால் அவரைச் சந்திக்காமல் இருக்க முடியாது. அவர் பழகுவதற்கு இனியர் அன்பருக்கு அன்பர். அவர் பேசும்போது கேட்பதற்கு இனிமையாக இருக்கும். அவருடைய பேச்சு கருத்தாழம் உள்ளது. எவரையும் கவரும் தன்மை வாய்ந்தது.

கடந்த பல வாரங்களாக 'சிந்தாமணி'யில் "உள்ளதும் – நல்லதும்" என்னும் தலைப்பில் பல கட்டுரைகள் எழுதி வந்தார். அவை படிக்கப் படிக்க சுவை பயப்பனவாக அமைந்திருந்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அவருடைய கட்டுரையைப் படித்தபோது அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் அவர் இறையடி எய்துவார் என்று எவரும் நினைத்திருக்க முடியாது. இன்னும் பல சுவைமிக்க கட்டுரைகளை தந்திருப்பாரென்று நாம் எண்ணிக் கொண்டு இருந்தோம். ஆனால் நாம் நினைத்தபடி எல்லாம் நடக்குமா,? இவை எல்லாம் இறைவனின் திருவிளையாடல்கள். எவரின் மரணம் எப்போது சம்பவிக்கும் என்று எம்மால் கூறமுடியாது அல்லவா? அதனை அறிந்தவன் இறைவன் ஒருவனே!

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் சிறந்த பண்பாளர் என்பதற்கு அவருடைய வாழ்க்கையே இலக்கணமாக அமைந்திருந்த தெனின் அது மிகையாகாது. 22–10–1978இல் ஞாயிறன்று 'சிந்தாமணி'யில் பொப்லி ஐயரைப் பற்றி எழுதிய கட்டுரையில் புலவர்மணி அவர்கள் பொப்லி ஐயரின் பண்புகளைப் பாராட்டி எழுதியிருந்தார்.

'சிந்தாமணி' அக்கருத்தினைக் கோடிட்டுக் காட்டியி ருந்தது. அக்கருத்தே புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் பண்புக்கு சிறந்தவோர் எடுத்துக்காட்டாகும். பண்பு என்னும் சொல்லுக்கு எவ்வளவு பண்பு கற்பிக்க முடியுமோ அந்தப் பண்பின் எல்லையாக இன்றும் என்முன் காட்சியளிக்கின்ற புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு எனது பணிவான அஞ்சலியைச் செலுத்துகிறேன். புலவர்மணியின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறேன்.

## முதுபெரும் புலவர்

தமிழ் ஆராய்ச்சியாளரும் பல நூல்களின் ஆசிரியருமான தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை தெரிவிப்பதாவது.

கிழக்கிலங்கையின் முதுபெரும் புலவரான புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை 2–11–78 (வியாழக்கிழமை காலை) இறைவனடி சேர்ந்தார் என்ற பொல்லாச் செய்தியைக் கேட்டதும் என் சிந்தை மிகக் கலங்கியது. மீன் பாடும் தேனாடாகிய மட்டக்களப்பிலே, நாட்டப்பட்ட நட்புரிமை பூண்டு என்னையும் எனது பணிகளையும் பெரிதும் மதித்துப் பாராட்டி ஊக்கி வந்தவர்களுள்ளே புலவர்மணியும் ஒருவர்.

யான் சிறுவனாயிருந்த காலத்திலேயே விபுலாநந்த அடிகளாகிய பண்டித மயில்வாகனனாருடன் அடிக்கடி எங்கள் இல்லத்துக்கு வந்து 'கந்தபுராணக் கலாசாரம்' கண்டவர் அவர். யான் பிறந்த ஊரிலே தோன்றிய சிவத்திரு ப.பொ. வைத்தியலிங்க தேசிகர் அவர்கள் மட்டக்களப்பிலே தங்கியிருந்த காலத்தில், புலவர்மணி புராணங்களை அவர்களிடம் பயின்றமையாலும் எம்மூருக்கும் அவர் புகழிலே பங்குண்டு. அவர்கள் பிரிவு எம்மை யெல்லாம் வாட்டுகின்றது.

கடந்த 50 ஆண்டுகளாகத் தமிழ் மொழியின் ஆக்கத் துக்காக அவர்கள் ஆற்றி வந்த பணிகள் அளப்பில. யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்புக்கும் ஒரு கலைப்பாலம் அமைப்பதற்காக, முதன்முதலாக அவர்களைக் கொழும்புக்கு அழைத்து 1943ஆம் ஆண்டிலே கொழும்புத் தமிழ்க் கழகத்திலே விரிவுரை யாற்றச் செய்தேன்.

என் தந்தையார் தொடக்கி நடாத்திவந்த "ஈழமணி" இலக்கிய இதழின் வெளியீட்டு விழாவிலும் அவர்கள் பங்கு கொண்டு சிறப்பித்தார்கள். அவர்கள் இயற்றியளித்த 'பகவத்கீதை வெண்பா' இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றபோது அவர்களைப் பாராட்டிக் கொழும்பிலும் கொண்டாட்டம் நடைபெற்றதுண்டு.

இப்போது அமைக்கப்பட்டிருக்கும் சாகித்திய மண்டல இலக்கிய ஆலோசனைக் குழுவிலும் அவர்கள் உறுப்பினராகவிருந்து எம்முடன் பணியாற்றி வந்தார்கள். அண்மையில் நடைபெறவிருக்கும் சாகித்திய விழாவுக்கும், மலராக்கத்துக்கும் வேண்டிய உதவிகள் அளிப்பதாக எமக்கு வாக்களித்தார்கள்.

அவற்றையெல்லாம் நினையாமல், எம்மையும் மறந்து போய், இறைவனடி சார்ந்துவிட்டார்கள். அவர்களை யான் கடைசியாக இரண்டு வாரங்களின் முன் கொழும்பிலே கண்டு உரையாடிக் கொண்டிருந்த போது, "என்னொட்டைப்" பராயத்தினராகக் காட்சியளித்த 'புலவர்மணி' இங்ஙனம் திடுமெனப் பிரிந்துவிடுவார் – பிரிந்தார் – என எண்ணவே முடியாமலிருக்கிறது.

புலவர்மணியவர்களின் பிரிவு ஈடு செய்ய முடியாதது. எமது தவக்குறைவு எனவே கூற வேண்டியிருக்கிறது. பிரிந்த அவர்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

## 50ஆண்டுப்பணி

வித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராஜா தமது இரங்கற் செய்தியில் தெரிவித்ததாவது:–

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை இயற்கை எய்தியது கேட்டு ஈழம் வாழ் தமிழ் மக்கள் பெருங்கவலை அடைகின்றனர். மட்டக் களப்பு மக்கள் அவரின் பேரிழப்பை எண்ணிப் பெரிதும் பிரலா பிக்கின்றனர்.

பல உண்மைகளை தெளிவாக்கிய அவரை நாம் இன்று இழந்து விட்டோம். தமிழ் பேசும் நல்லுலகம் இதனை நன்கு அறியும். அவர்களின் பாட்டிலும் வசனத்திலும் தமிழ் மணம் கமழ்ந்தது.

சென்ற 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்ப் பணியும், சமய, சமூகப் பொதுப்பணியும், சாதி, சமயப் பாகுபாடின்றி ஆற்றியவர். அத்தகையவரை நாம் இன்று இழந்து அவரது இடத்தை நிரப்ப வல்லவர் ஒருவரும் இன்றித் தவிக்கிறோம்" இப்படி அவர் தெரிவித்தர்.

## இலக்கியப் பாலம்

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி அதிபர் வித்துவான் எஸ்.ஈ. கமலநாதன் தமது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டிருப்ப தாவது:–

"பழைமைக்கும் புதுமைக்கும் இலக்கியப் பாலம் அமைத்துக் கவிதை பல படைத்த தலைமகன். இப்பார் அறிந்த பண் இசைக்

கவிக்குயில். இராமாயணத்தில் வாழ்ந்து கொண்டு பாரதத்தில் பாலம் கட்டிய புதுயுக வியாசன். மட்டக்களப்புத் தமிழகத்தின் தவப் புதல்வன் பேராசான் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை.

அவரது மறைவினால் பல நூற்றாண்டுகளுக்கும் நெருங்க முடியாத பாரிய ஓர் இழப்பு, தமிழ் கூறும் நல் உலகில் ஏற்பட்டு விட்டது.

அவர் உள்ளதும் நல்லதும் உணர்ந்தவர். 'உள்ளதும் நல்லதும்' முற்றுப் பெறும் முன்பே உள்ளதும் நல்லதும் அவரை அழைத்துக் கொண்டது என்று நினைத்துக் கொண்டு நாம் நம்மைத் தேற்றிக் கொள்வோம்."

ஈழநாட்டின் திருவிளக்கு

வித்துவான் வி.சி. கந்தையா தமது அனுதாபச் செய்தியில் தெரிவித்ததாவது:-

"பழம்பெரும் தமிழ் அறிஞர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் இயற்கை எய்திவிட்டார்கள் என்ற தகவல் என்னைத் திடுக்கிட வைத்தது. வயது 80ஆகியும் 28 வயது இளைஞனின் துடிப்புடன் தமிழ் சமூகத்திற்குப் பெரும் சேவை ஆற்றியவர் அவர்.

கடந்த வாரம் சிந்தாமணியில் வெளிவந்த "உள்ளதும் நல்தும்" கட்டுரைத் தொடரின் இறுதியில் விபுலாநந்த அடிகளார் தம்மை இறுகத் தழுவி நின்ற சூழலைத் தெரிவிக்கையில், 'அவரும் நானும் ஒன்றாகினோம். இனி அவர் வேறு, நான் வேறு அல்ல' என்று கூறியிருந்தார்.

தாம் கூறியபடியே அந்த ஈழத்து அடிகளார் அவருடன் இரண்டறக் கலந்துவிட்டார்.

மட்டக்களப்பின் மணி விளக்காகிய அவர் ஈழநாட்டின் திரு விளக்காகக் கடந்த அரை நூற்றாண்டு காலமாக வாழ்ந்தவர். அவரை இன்று நம் நாடு இழந்துவிட்டது. அவரது ஆத்ம சாந்திக்கு எமது பிரார்த்தனைகள்" இப்படிக் கூறினார் வித்துவான் வி. சி. கந்தையா.

**நன்றி: சிந்தாமணி 05-11-1978**




கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் புலவர்மணியின் பாலைக்கலி நூல் அறிமுக விழாவும் ஈழத்துப் பூராடனாரின் புலவர்மணிக்கோவை நூல் அறிமுக விழாவும் நடைபெற்ற போது எடுத்த படம்.

# புலவர்மணி சிறந்த சிந்தனையாளர்

– கே.சி. தங்கராசா இரங்கற் செய்தி

புலவர்மணி அவர்கள் எண்பது வயதான போதிலும், நாற்பது வயதுடையவர் போலச் சிறந்த சிந்தனையாளராகவும், பேச்சாளராகவும் திகழ்ந்தார்.

இவ்வாறு புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளையின் நீண்ட கால நண்பரும், கிழக்கிலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரும், சமூக சேவையாளருமான திரு. கே.சி. தங்கராசா விடுத்த இரங்கற் செய்தி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

புலவர்மணி அவர்கள் கொழும்பு வரும்போது திரு. தங்கராசாவுடன் தங்கியிருப்பது வழக்கம். புலவர்மணியைப் பற்றி அவர் மேலும் கூறியிருப்பதாவது:–

1958ஆம் ஆண்டு முதல் நான் அடிக்கடி மட்டக்களப்புக்குச் சென்று வரவேண்டி இருந்தது. அப்போது மூவரின் நட்பு எனக்குக் கிடைத்தது. திரு. கே.வி.சுப்பிரமணியம், திரு. சோமநாதன், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோரே அம் மூவருமாவர்.

அன்று கிடைத்த இந்த நட்பு நீண்டு வளர்ந்து வந்த போதிலும், ஓர் ஆண்டிலேயே இம்மூவரையும் இழக்க வேண்டி ஏற்பட்டது. இதனை எண்ணும்போது உள்ளம் நெகிழ்கின்றது.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் கடந்த சில வருடங்களாகக் கொழும்பிற்கு வரும் போதெல்லாம் என்னுடனேயே தங்கியிருந்து செல்வார்.

அக்காலங்களில் தம் பழைய நினைவுகள் பற்றிப் பேசுவார். எனது தூண்டுதலின் பேரில் தமது பழைய நினைவுகளைக் கட்டுரையாகவும் தொகுத்து வெளியிட்டு வந்தார்.

கடைசியாக, சென்ற மாதத்திற்கு முந்திய மாதம் இங்கு வந்திருந்தபோது, யாழ்ப்பாணத்தில் தாம் கல்வி கற்ற காலத்தை

நினைவுகூர்ந்து, தம்முடன் பயின்ற நண்பர்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

அடுத்த முறை தாம் கொழும்புக்கு வந்து, என்னுடன் யாழ்ப் பாணம் சென்று தம் பழைய நண்பர்களைப் பார்க்க வேண்டு மெனவும், குறிப்பாகப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களிடம் செல்ல வேண்டுமெனவும் மிகுந்த ஆசையுடன் கூறினார்.

எண்பது வயதான போதிலும் நாற்பது வயதுடையவர் போலச் சிறந்த சிந்தனையாளராகவும், பேச்சாளராகவும் திகழ்ந்தார். தளரா உறுதியுடன் நாட்டின் ஏனைய பாகங்களுக்கும் பஸ்ஸிலும், ரயிலிலும் பிரயாணம் செய்வார்.

இது புலவருக்கு அமைந்த இயற்கைச் சக்தியென்றே நினைக்கின்றேன். அவர் என்னுடன் தங்கியிருந்த நாட்களில் எந்நேரமும் ஏதாவது ஒன்றைப் பற்றிப் பேசிக்கொண்டேயிருப்பார்.

அவர் எவ்வளவுதான் பேசினாலும் சலிப்பில்லாமல் கேட்டுக் கொண்டேயிருக்கலாம். பல விஷயங்கட்கு அவர் தக்க ஆதாரங்களுடன் விளக்கமளிப்பது கேட்கச் சுவையாக இருக்கும்.

"வெண்பாவுக்குப் புகழேந்தி" என்ற மொழி மாறி "வெண்பா வுக்குப் பெரியதம்பி" எனக் கவிதை உலகு போற்றப் பகவத் கீதை வெண்பாவை ஆக்கி அளித்த புலவர்மணி எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்!

என் உள்ளம் கவர்ந்த புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் ஆத்மா இறைவனடி சேர்ந்து பேரின்பப் பேறடையப் பிரார்த்திக்கின்றேன்." இப்படி அவர் தமது இரங்கற்செய்தியில் குறிப்பிட்டார்.

## தூய ஒளி அற்றுப்போனது

முன்னைநாள் பரீட்சை உதவியாணையாளர் திரு. வே. சதாசிவம் விடுத்துள்ள இரங்கல் உரை:

இதுவரை நமக்குப் புதிராக இருளில் மறைந்து தேங்கிக்கிடந்த நல்லதும் உள்ளதுமான பல அநுபவச் செய்திகளைப் பலரறியச் செய்த அந்தத் தூயவொளி அற்றுப் போயிற்று.

இருள் நீக்க வரும் ஞாயிற்றை எத்தகைய ஆவலுடன் எதிர் பார்க்கின்றோமோ, அத்தகைய ஆவலுடன் ஞாயிறுதோறும் **உள்ளதும்**

**நல்லது**மாகச் சுடர் விட்டுவரும் சிந்தாமணியை வாசகர்களாகிய நாம் ஆவலுடன் எதிர்பார்ப்பதுண்டு. இருளகற்றிய இச்சூரியன் நம்மை இருளில் தவிக்கவிட்டு அத்தமித்து விட்டது. கதிரவன் போல, உள்ளதை மறைக்காமலும் மறுக்காமலும் சுடச்சுட எடுத்துக் காட்டியும், மதியம் போல சொல்வதை உள்ளங்குளிர உவக்கச் சொல்லியும் வந்த இக்கதிர்மதியம் அற்றுப்போயிற்று.

இலக்கியவானம் இருசுடர்களுமற்ற இருண்டவானமாயிற்று. கதிர் போன்ற சொல்லும் மதியம் போன்ற முகமும் மங்கிற்று. கவினுறு எண்ணங்களின் கனிவான ஊற்று நின்று விட்டது. மறைந்திருந்த விபுலாநந்த அடிகளாரை 29–10–78இல் வெளியான சிந்தாமணிக் கட்டுரையில், மதுரை மங்கம்மாள் சத்திரத்தில், எமது முன்னிறுத்தி அடிகளாரை காந்தமென்வும், தம்மை அதன்பால் ஈர்ப்புண்ட இரும்பெனவும் கற்பனை செய்த இவ்வொளி சாந்தமாகிய அப்பேரொளியுடன் இணைந்து விட்டது.

இலக்கியவானில் உள்ளதை உள்ளவாறு சொல்வதில் கதிரவனாகவும், நல்லதை நன்றாகவும் இனிமையாகவும் குளிரச் சொல்வதில் திங்களாகவும் ஒளிகாலிய புலவர்மணி, பெரியதம்பிப்பிள்ளை ஐயா அவர்களின் மறைவு இருளடைந்த அதிர்ச்சி தரும் ஈடுசெய்ய முடியாப் பேரிழப்பாகும்.

'மட்டக்களப்பில் அதிக வேலைகளைத் தொடங்கிக் கொண்டேன் 'ஆட்கள் தேவை' எனக் கூறிய சூரியகாந்தம் போன்ற விபுலாநந்த முனிவரின் பரிசமும் பேச்சும் உள்ளத் துறுதியினையும் துணிவினையுங் கொடுக்க, 'மறுகணம் திருச்சபையைவிட்டு வெளியேறினேன்' என ஈழநாடு வந்த மதியம் போன்ற புலவர்மணி அவர்கள் மேலும் யாது கூறப்போகிறார்கள் என அறியத் துடித்துக் கொண்டிருந்தோம்.

ஈழத்தில் தமது குருநாதரின் இலக்கியக் கல்வி, சமயத் தொண்டுகளை, ஆயிரத்தித் தொளாயிரத்தி இருபத்தைந்தாம் ஆண்டு தொடக்கம் விரிவாக வரையறுத்து புலவர்மணியவர்கள் எடுத்துக் கூற, நாம் கேட்டின்புறும் பாக்கியம் பெற்றோம் என மன மகிழ்ந்திருந்த எமக்கு யமவேதனையாயிற்று.

ஈழத்து வானிலே கதிரவன் போலக் காலித்துவந்த விபுலாநந்தப் பெருந்தகையின் பகல் போன்ற வாழ்வுக் காலம் அகல, தொடர்ந்து

வந்த இருளைப்போக்க இரவில் உதயமாகி நின்ற திங்கள் போல் அணுகிய புலவர் மணியின் வாழ்வுக் காலமும் இன்று அகன்று விட்டது.

இலக்கிய வானில் ஞாயிறுமில்லை. தொடர்ந்து வந்த திங்களுமில்லை. இன்று ஒரே இருள் மயமாகவிருக்கின்றது. எனினும், இவ்விரண்டு சுடர்களின் வழித்தோன்றல்களாக வளம் பெறத் தோன்றியுள்ள ஆன்றவிந்த சான்றோராக இலக்கியவானில் விடிவெள்ளிகள் போல மின்னுகின்ற பண்டிதர்களும் வித்துவான்களும் அங்கு இருக்கவே இருக்கின்றனர். இவ்விரண்டு சீடர்களும் ஆற்றிய நின்று நிலவும் நற்சேவையைத் தொடர்ந்து செய்வர் என்பதுறுதி.

உள்ளதையும், நல்லதையுங் கூறித் தம்பால் நம் மெல்லோரையும் ஈர்த்த, தம்மை, ஆட்கொண்ட ஈழத்துறவியின் பரிசதீட்சை பெற்றவுடன் வேறு மனிதனாக மாறி மாயமாக மறைந்த புலவர்மணி ஐயா அவர்கள், அறவாழி அந்தணன் தாள் சேர்ந்த தமது குருநாதருடன் கலங்காப் பெருநகரில் கலந்துரை யாடுகிறார் போலும்.

சிந்தாமணி மூலம் பல்லாயிரக்கணக்கானோர் மத்தியில் புகழ் உடம்பினைப்பெற்ற பகவத் கீதை, வெண்பாப் புகழ் புலவர் மணி அவர்களும் தமது குருவும் நம்மத்தியில் துருவ நட்சத்திரங்கள் போன்று எம்மை வழி நடத்துவார்களாக.

இப்படி அவர் தமது இரங்கல் உரையில் தெரிவித்தார்.

நன்றி: சிந்தாமணி 05–11–78

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்மீது – புலவர்மணி பிரிவாற் பெருந்துயர் எய்திய மண்டூர்க் கவிஞன் மு. சோமசுந்தரம்பிள்ளை பாடிய

# இரங்கற் செய்யுள்கள்

தென்றற் பொதிகைக் குறுமுனிவன் தெய்வத் தொல்காப்பியன் முதலோர்
என்றுந் திளைத்த தமிழ்க்கடலின் அமுதக் கவிதை கடைந்தூட்டும்
இன்சொற் புலவர் மாமணியே இமைக்குஞ் சுரங்க்த் தமிழ் ஒளியே
அன்புக் குருவே பெரியதம்பிப் பிள்ளை ஐயா ஐயாவோ!

அம்பொன் தமிழ்த்தாய் நடைகாட்டும் ஆன்றோர் அறிவுக் கொடைமன்னா!
நம்பொன் மட்டக் களப்பன்னை நல்லாள் பண்பின் நிறைகுடமே!
உம்பொன் உடலத் துள்ளுயிராய் உயிர்க்குந் தமிழோ டுறவாடிச்
செம்பொன்னாடர் நாம் அரற்றச் செய்த களவும் வெளியாதோ!

பெற்றாள் மண்டூர்ப் பேரன்னை பெரிய தம்பிப் பிள்ளையெனச்
சொற்றாள் வற்றாத் தமிழூட்டிச் சுடர்வான் புகழாய் உனைவளர்த்தாள்
நற்றா உள்ளம் நனிமகிழ நடந்தாய் நேற்று நீமகிழ்ந்து
உற்றா ரினத்தோ டுறவாடி ஒழித்த மாயம் ஈதென்கொல்!

எண்ப தாண்டு வெள்ளணியில் எளியேன் பாட்டாம் உள்ளணியில்
உண்ணும் அமுதம் உண்டவன்போல் உள்ளன் பினிக்க நீயுரைத்த
பண்ணோ டியைந்த தீந்தமிழைப் பலகாற் பருகிப் பசிதீர்ந்தோம்
பண்பா லுயர்ந்த பண்டிதனைப் படிக்கும் பயிற்சிக் கென்செய்கோம்!

அத்தா னென்று நானழைத்தால் அன்பு முகந்தான் நீமலர்ந்து
முத்தாந் தமிழ்த்தேன் துளிதுளியாய் நித்தம் உகுத்தாய் மூத்தறிஞா!
வித்தைக் குருவே மெய்ஞ்ஞான விளக்கே கிழக்கே ஒளிபூத்த
சொத்துச் சுடரே சூழிருளைத் துரத்தா தோடி எங்கொழித்தாய்

சிந்தா மணியில் நீ எழுதுஞ் செந்த மிழ்த்தேன் மணித்துளிகள்
எந்தாய் அழகு தமிழ்க்குலத்துக்கறிவுப் பசியைத் தணியாதோ
நந்தா விளக்குத் தானணைந்தால் நாளை யிருட்டுக் கொளியுண்டோ
வந்தாரெல்லாம் புலவரென வழிநீ கொடுத்து மறைந்தனையோ

நேற்றென் னோடு நீண்ட கதை இன்றோ நீயும் நீண்டதுயில்
போற்றும் புலவர் மாமணியே பெரிய தம்பிப் பிள்ளை ஐயா
கூற்றுக் கென்ன குறைசெய்தோம் ஆற்றிக் கொள்ள முடியுமெனத்
தேற்றிக் கொள்வார் இனியுன்னைத் தேடிக் காண முடியாதே

கண்முன் சொரிந்த கனிவாய்ச் சொற் கதைகள் செவியிற் கேட்குதையா
மண்டூர் மண்ணைக் கடைசிமுறை மறவா தன்பால் அணைத்தாய் நீ
கொண்டல் வண்ணன் கோபாலன் கொஞ்சும் மதுரக் குயிலே உன்
பெண்டு பிள்ளை மருகற்கென் பேசிப் புரிந்தெங் கொழித்தாயோ

அழகு தமிழ்த்தாய் பண்பினுக்கோர் அமைதி காட்டும் ஐயா நீ
பழகும் போதோ பெருமனிதப் பண்பு பிறந்து சிறந்தொளிரும்
உழவர் குலமா மணிவிளக்கே உறுதி பயக்குங் கீதைமொழி
வழியால் அழியா மாளிகையில் வாழப் பறந்து சென்றனையோ

சுவாமி விபுலா நந்தர் வழி சுவைக்கும் பாண்டித் தமிழ்த் தாயாம்
பவானி அழகுப் பூங்கொடிக்கோர் பாட்டுப் பணிகள் பலபடைத்தாய்
அவாவை ஒழிக்கும் அருளொளியாம் ஆத்மப் பேறு பெற்றாய்நீ
சிவாய நமத்தேன் சிந்தனையாற் சிறக்கும் உலகஞ் சென்றாயோ

பூலோகத்து வாழ்வனைத்தும் பொய்யாம் இதற்கோர் ஐயமில்லை
சாலோ கத்தைச் சார்ந்தவர்க்குச் சஞ்ச லங்கள் தானில்லை
மாலோன் கீதை நெறி படைத்த மதுரத் தமிழ்ச்செஞ் சொற்புலவன்
நூலோ துணையெம் பாலோர்கால் நுகர்ந்துகொள்ள வாராயோ

புலவர் மணிதான் மறைந்தகதை பொய்யோ மெய்யோ நானறியேன்
விலகிச் சற்று மறந்திருக்க விருப்பம் எனினும் முடியவில்லை
சிலநாள் மாய வாழ்க்கையிலே சிக்கிச் சுழன்றுந் தெளியாது
பல நாள் நுகர்ந்த சிற்றின்பம் பழகி அறிந்தால் வெற்றின்பம்

உருளும் பெருந்தேர் அச்சுடைந்தால் ஓடா தங்கே கிடந்துவிடும்
உருவாம் உடம்பும் அஃதொக்கும் உயிர்க்கோ உடம்புத் தேர்பலவாம்
வரத்தும் போக்கும் இயல் பாகும் வாய்க்கும் ஞானம் பலித்ததனால்
திருத்துங் கீதைத் தேரோட்டச் சிறப்பாம் புலவர் மாமணிக்கே.

நன்றி: சிந்தாமணி 05-11-1978

# மாகவிதை மன்னர்!

– எருவில் மூர்த்தி –

மீன்பாடும் வாவியதன் மேலாடுங் கொம்பரெல்லாம்
மீட்டும் யாழாய்த்
தேன்பாடும் வளநிலத்தின் திருமகனே, செந்தமிழைச்
சிவஞானத்தை
வான்பாடும் வகையினிலே வளர்த்திருந்த மாகவிதை
மன்னா, எம்மை
ஏன் வாட விடுத்தின்று இறைவனடி சேர்ந்தனையோ!
இரங்குகின்றோம்!

முத்தமிழும் வளர்ந்தோங்கி முதன்மையுற உழைத்திருந்த
முனிவன், தெய்வ
வித்தகனாம் யாழதனை விளங்கு தமிழ் நூல் வடித்த
விபுலா நந்தன்
உத்தமநற் சீடனுமாய் ஓதினிய தோழனுமாய்
உயர்ந்தே கீதைத்
தத்துவத்தை வெண்பாவாய்த் தந்தவனே நின்பிரிவால்
தவிக்கின் றோம்யாம்!

விருத்தத்திற் கம்பனென்றும் வெண்பாவிற் புகழேந்தி
என்றும் நின்னைப்
பொருத்தி மொழி ஆய்வாளர் புகன்ற புகழ் உரை கேட்டுப்
புளகங் கொண்டு
தருக்கிய எம் உள்ளங்கள் தமிழ் மலையே நீ இன்று
சரிந்தாய் என்ற
வருத்தத்திற் துடிப்பதனை வாய்விட்டுக் கூறுதற்கும்
வார்த்தை உண்டோ

# மட்டுநகர் மாதா பொலிவிழந்தாள்

– வித்துவான் க. த. ஞானப்பிரகாசம் –

மீன்பாடும் மட்டுநகர் மாதா பொலிவிழந்தாள்
தேன்பாடுந் தெய்வத் தமிழன்னை –தான்வதியும்
வெள்ளை மலர்மா ளிகையிழந்தாள் பெரியதம்பிப்
பிள்ளை பிரிந்த பொழுது.

ஓர்ந்தோநீ அந்திமத்தை 'உள்ளதும் நல்லதுமாம்'
தேர்ந்ததொடர்க் கட்டுரையைச் செய்துதந்தாய் – ஆய்ந்த தமிழ்
கூறுமுயர் நல்லுலகம் உள்ளங் குழையவைத்தாய்
ஆறுவது எங்கே அவனி.

சங்கத் தமிழ் மணக்குஞ் சான்ற தமிழ்த்தலைமை
எங்கேநாம் காண்போம் இனி ஐயோ! – துங்கமுறு
ஞானப் பொருள்வழங்கி நண்ணுமென் போல்பவர்க்கே
ஆனகலை தந்த அரசை?

**நன்றி: சிந்தாமணி 05-11-1978**

# வள்ளல் தமிழ் வாரிதியே கிழக்கின் ஒளி விளக்கே!

– மு. சடாட்சரன் –

அன்றொருநாள் வானொலியில் மரண அறிவித்தல்
அரும்புலவர் மணி இறந்தார் என்றுரைக்கக் கேட்டு
சிந்தைமிக நொந்திடவும் செய்வதறியாது
சிலநிமிடம் திணுக்குற்றுச் செயலிழந்து நின்றேன்
செந்தமிழ்ப்பா வல்லவர்கள் செத்திடுவ தில்லை
செகமறிந்த செய்தியென ஆறுதல்நான் கொண்டேன்
என்றாலும் புலவர்மணி இணையற்ற அறிஞர்
எம்மோடிங்கில்லையெனும் ஏக்கம்வரும் நெஞ்சில்!

தள்ளாத வயதினிலும்; பள்ளத்தில் வீழ்ந்து
ததிங்கிணத்தோம் போடுகிற 'பஸ்' ஏறிச் சென்று
தெள்ளமுத உரைசெய்து தேன்வார்ப்பாய் நெஞ்சில்
தேடுகிறோம் உன்போன்றோர் என்றுவரு வாரோ?
வள்ளல்தமிழ் வாரிதியே! கிழக்கினொளி விளக்கே!
வாடுகிறோம் உன்பிரிவால் வளர் தமிழைக் காக்க,
எள்ளளவும் சோராமல் இயங்கியதை எண்ணி
ஏங்குகிறோம் உன்இனிய எண்ணங்கள் வாழும்!

செந்தமிழில் நற்கவிதை செய்தவர்கள் என்றும்
செத்துவிட வில்லையிது செகமறிந்த செய்தி!
முத்தமிழில் சிந்தனையை முடுக்கியவர் எல்லாம்
முப்பொழுதும் சாகாது முன்னெழுந்து நிற்பார்!
என்றுமந்தக் கூற்றுவனுக் கிரையாக மாட்டார்!
எங்கள் புலவர்மணியும் என்றென்றும் வாழ்வார்!

**நன்றி: சிந்தாமணி 05-11-1978**

# ஒளி தந்த புலவர்மணி

– சொக்கன் –

அந்தோ! அருந்தமிழே! ஆளாய் உனக்கன்பு
தந்தே எமக்கொளியைத் தந்தவரைச் – சிந்தையிலே
கொண்டழைத் தின்பக் குலாவலினைக் கொண்டாயோ?
பண்போ எனக்கிலையோ பங்கு?

மூத்து முதிர்ந்து மொழிகனிந்து நற்றமிழால்
சீர்த்த கவிகீதை செய்தளித்தார் – கூர்த்த
மதியமைந்த கட்டுரைகள் மாண்பாக ஈந்தார்
கதிகாணச் சென்றார் கவி.

நன்றி: சிந்தாமணி 05–11–1978

புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் மறைவு குறித்து. அவரது இனிய நண்பர்

**புலவர் அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்கள் பாடிய**

# இரங்கற் பா

ஒப்பிலா வீழத் தமிழின் மணித்தீபம்
இப்புவியிற் சோபை யிழந்ததினம் செப்பும்
பதினாறா மைப்பசியாண்டாங்கால யுத்தி
விதிசார்த் துழக்கும் மனம்.

## ஆசிரியப்பா

வானங் கவன்று மாரி யுகுப்ப
வாடை துயரா வழி திரிந்தசைய
தமிழைத்துய்ப்பார் தயங்கியுடற்றத்
தனையர் விதியோ என்றழுதரற்ற
இமிழ்தாம் கேளிர் ஏங்கித் தவிப்ப
அமிழ்தாம் தமிழுமழுது புலம்பப்
பதியாம் புலவர் மணியெனும் பெரிய
தம்பிப்பிள்ளை தரணிவாழ் வொழித்து
அமரருலகை யடைந்தனனவனே
கன்னித் தமிழிற் காதல் கொண்டு
சுன்னைக் குமாரசுவாமிப் புலவர்
தென்னகத் தறிஞர் தம்மையடைந்து
தொன்மொழி யமுதம் துறைபல தேர்ந்து
வெண்பா விற்கோர் புலவர் மணியென
தன்னேரில்லாத் தகைமை சார்ந்தனன்
முத்தமிழ் வித்தக விபுலானந்த
அத்தனின் நிழலாயன்பனா யமைந்தனன்
மண்டூர்த் திருத்தல மகனாய்ப் பிறந்து
கொண்டதோர் மார்க்கஞ் ச்சைவம் சிறந்து
தீந்தமிழ்ச் சைவம் சேரத்தழைப்ப
ஓதியும் பல்லோ ரோதிட வைத்தும்

ஞான விதையை நாட்டினில் விதைத்தனன்
சகமெலாம் தமிழிற் சைவ முணரப்
பகவற்கீதை பாவிசைத் தளித்தவன்
வித்தக நிறைவால் வித்தகக் காய்ச்சல்
எத்திடா தகற்றி யெல்லார் தாமும்
வித்தக ராக விழைந்தனன் மேலோன்
அடைந்தாரெவரும் அரும்பொரு ளொன்றெனும்
படர்ந்தா ரன்றி வழிவிடா வாசான்
மட்டக்களப்பு தமிழ்ச்சங்கந்தான்
தொட்ட தலைமைப் பீடமமர்ந்தோன்
சாதியும் மதமும் பேசிக் கலாம் விழை
ஏதிலார்க் கடிந்த இனியன் யார்க்கும்
மதுர கவியென வழங்கு சமாதான
நீதி பதியென நிறைமொழித் திறத்தின்
முட்டறுத்துணர்த்தும் முது பெரும் புலவன்
கவிஞர்க ளெல்லாம் புலவர்களாக
அவிரொளி பெறுகென வறைந்தனன் தானும்
புலவர் தமிற் பெரும் புலவனாயமைந்தனன்
உதயத் துதித்த ஞான சூரியன்
ஓடி மறைந்தானெனுமுரை கேட்டு
உள்ள முருகா ருண்டோ வுண்டோ?
அந்தோ என்னே அவலக்கவலை
அன்பே யென்ன அறைந்திடுவோமோ
நண்பா வென்ன நவின்றிடு வோமோ
அன்னா யென்ன அலறிடுவோமோ
சிந்தை கலங்கும் சிறியோர்க்கென்சொல்
தந்தனை சென்றனை தமியேம் புலம்பி
இறைவா விவருன் னினைவில் சாந்தி
பெறவீந் திடுவாய் போற்றி
என விரந் திடுக எய்துக மாதோ.

❋❋❋❋❋❋

மட்டுநகர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின்
நினைவிற்காகக் கொழும்புத் தமிழ்ச்சங்கம் அளித்த

# நினைவஞ்சலிப்பா மலர்

கவிதை: பன்மொழிப் புலவர் த. கனகரத்தினம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

வெண்பா

மீன் பாடும் வாவியெலாம் தேன்பாயு மட்டுநகர்
வான்றோய் புலவர்தம் சாவமன்றோ - தன்கவியாய்
மண்டூர்ப் புலவர் மணிக்கே தமிழ்ச்சங்கம்
கண்டிடும் அஞ்சலிப்பா காண்.

வெண்பாவிற் பெயர்பெற்ற மண்டூர்ப் பெரியதம்பி
ஒன்பாவிற் கீதை ஓதினானே வண்டமிழிற்
பாட்டுக் கொருபுலவன் பாரீர் இவனென்றே
நாட்டுவோம் செய்யுள் நயந்து.

இலங்கை மணித்திரு நாடெனும் கீதம்
துலங்கக் கவிதந்த தூயோய் - இலங்கும்
கலங்கரை நல்விளக்கே காரிருள் சூழக்
கலங்கினோ மாழ்கடலிற் காண்.

நல்லைநகர் ஆறுமுக நாவலரின் வாரிசெனச்
சொல்லு தமிழ்கற்ற சோதியே - எல்லையில்
இன்பக் கவிமழையில்லாப் பயிரானோம்
துன்பக் கடலினிற் றோய்ந்து.

சுன்னைக் குமார சுவாமிப் புலவர்பால்
முன்னைத் தமிழ் முழுதுணர்ந்தே - பின்னையும்

தூயவிபுலானந்தர் சோதி மலரடியில்
நேயமெலாம் வைத்தாயே நெஞ்சு.

பண்டிதமா மணிதன் பிள்ளையுடன் மாணவனாய்
எண்டிசை போற்ற எழுவானில் - அண்டிநிதம்
குன்றின் விளக்காய்க் குருக்கள் மடஞ்சார்ந்து
நின்ற புலவர் நினைவு.

எண்ணரிய ஆசிரிய மாணவ ரேற்றமுறக்
கண்ணிய ஆசானாய்க் கல்வியூட்டி - மண்ணுலகைப்
பாட்டினாற் பாவித்த நற் பாவலனே! உன்நினைவால்
நாட்டினோம் செய்யுள் நயந்து.

முன்னைப் பழமைக்கு மூத்தோனாய்ப் பாவுலகிற்
பின்னைப் புதுமைக்கும் பேர்பெற்றோய் - உன்னைப்போல்
மண்ணிற் புலவர் மணியாரே யென்றேங்கி
எண்ணிச் சுழலுமெம் நெஞ்சு.

பேச்சிற் பெரியதம்பி பேரும் பெரிதாக
மூச்சும் தமிழான மூதறிஞன் - பேச்சடங்கிக்
கார்த்திகை நாளிரண்டிற் காலன்வாய்ப் பட்டானே
சார்த்தினோம் அஞ்சலியே சார்ந்து.

கிழக்கி லெழுந்த கீர்த்திவிடி வெள்ளி
முழக்கி முகிலாய்ப் பொழிந்தால் - துளக்குகவி
தேசம் மறக்குமோ தீந்தமிழர் உள்ளத்தில்
நேசத்தால் நீங்கா நினைவு.

வாழிய செந்தமிழ்
வாழிய நற்றமிழ்ப் புலவர்.

# காலஞ்சென்ற புலவர்மணி பண்டிதமணி ஏகாம்பரபிள்ளை பெரியதம்பிப்பிள்ளை

அறிமுகப்படுத்துபவர்
பேராசிரியர் கா. கைலாசநாத குருக்கள்
(இந்துநாகரிகத்துறைத் தலைவர் அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் நிகழ்த்திய உரை)

**மாண்புமிகு வேந்தர் அவர்களே,**

**இலக்கிய வித்தகர் என்னும் விருதை வழங்கிக் கௌரவிப்பதற்காக ஏகாம்பரபிள்ளை பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் பெயரைச் சமர்ப்பிப்பதில் பெருமையடைகிறேன்.**

**ஈழநாட்டின் கிழக்குப் பகுதியில் வளமிக்க மட்டக்களப்பு என்னும் பெயருடன் இணைந்து அடிக்கடி பேசப்படும் சிறப்பு வாய்ந்தது பெரியதம்பிப்பிள்ளை என்னும் பெயர். இவர் ஈழநாடு பெற்றெடுத்த தமிழறிஞர்களுள் ஒருவர்; தமக்கென உரித்தான மரபினை உடையவர். தமிழில் இவருக்கிருந்த புலமை காரணமாக புலவர்மணி என்னும் பட்டம் இவர் பெயருடன் இனிது இசைந்து ஒலிக்கக் காண்கிறோம். மட்டக்களப்பில் மட்டுமன்றித் தமிழ்பேசும் ஈழம் முழுவதிலும் இவர் பெயர் பரவி இருப்பது அனைவருமறிந்ததே.**

**மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்டூர் என்னும் கிராமத்தில் 1899ம் ஆண்டு பிறந்த புலவர்மணி தம்முடைய தந்தையாரிடம் ஆரம்பக் கல்வி கற்றார். பின்னர், வித்துவான் சந்திரசேகர உபாத்தியாயரிடம் தமிழ்க் கல்வியை அபிவிருத்தி செய்து கொண்டார். தந்தையாருடைய விருப்பம் இவர் ஆங்கிலக்கல்வி கற்கவேண்டும் என்பதே. அதற்கிணங்கிக் கல்முனையிலிருந்த ஆங்கில பாடசாலையில் பயிலத் தொடங்கினார். ஆங்கிலக் கல்வியை நன்கு பயின்றிருந்தால் நல்லதோர் உத்தியோகத்தை**

வகித்து உயர் பதவியையும் புகழையும் ஈட்டியிருந்திருக்கலாம். இவருக்கு இயல்பாகவே தமிழ்க் கல்வியில் இருந்த ஈடுபாடு இவரது கல்விப் பேற்றில் புதியதொரு திருப்பத்தினை தோற்றுவித்தது. இதன் விளைவாக ஆங்கிலக் கல்வியைப் புறக்கணித்தார். தமிழ்க் கல்வியை நாடி யாழ்ப்பாணம் வந்தார். உயர் திரு. கைலாசபிள்ளை அவர்கள் நடத்திய காவிய வகுப்பிற் சேர்ந்து கற்கும் வாய்ப்பு இவருக்குக் கிட்டிற்று. இக்காவிய வகுப்பு மகத்துவம் வாய்ந்தது: பாரம்பரியப் பெருமையுடையது. வித்துவ சிரோமணி பொன்னம்பலப்பிள்ளை அவர்களை மூல புருஷராகக் கொண்ட இப்பாரம்பரியத்தைப் பரப்பும் பணியை மேற்கொண்டவர் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர்; காவிய பாடசாலையின் அதிபர், இவர் தலைமையில் நடந்த காவிய வகுப்பு வடக்கிலே ஒரு பண்டிதமணியையும் கிழக்கிலே ஒரு புலவர்மணியையும் திகழ வைத்தது.

தமிழ்க்கவிதை கட்டுரை ஆகியவற்றில் இவருக்கிருந்த நாட்டம் வளர வளர ஈடுபாடும் மிகுந்து திறமையும் பெருகலாயிற்று. இவர் தமிழ்ப் புலமையிற் பெருமையுற்ற ஈழநாட்டுத் தமிழ்ப் பெருமக்கள் மட்டக்களப்பில் 1951ல் நடைபெற்ற பொதுக் கூட்ட மொன்றில் 'புலவர்மணி' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர்.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் தனது இருபத்தொன்பதாமாண்டு விழாவின் போது இவர் கவிதைத் திறனை விதந்து பாராட்டிப் 'பண்டிதமணி' என்னும் விருதை வழங்கிற்று.

பெரியதம்பிப்பிள்ளை அவர்கள், தம் தமிழ்க் கல்விப் புலமையால் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே ஓர் அறிஞர் குழுவை உருவாக்கினார். மட்டக்களப்பில் மட்டுமன்றி ஈழத்தின் இதரமாவட்டங்களிலும் தம்மைப் புலவர்மணியின் மாணவரெனக் கூறிப் பெருமைப்படும் மாணவர் பலர் உளர்.

'மண்டூர்ப்பதிகம்', 'பகவத்கீதைவெண்பா' முதலியன இவர் ஆக்கங்கள். அவ்வப்பொழுது உதிர்த்த தனிக்கவிதைகள்

பலப்பல. இவற்றில் இவர் கவிதைத் திறனும் தமிழ்ப்புலமையும் மிளிர்கின்றன. இக்காலத்தில் வெண்பா யாப்பதில் ஈடிணையற்றவர் என்ற புகழைப் பகவத்கீதை வெண்பா இவருக்கு ஈட்டித் தந்துள்ளது. மூலநூல் கூறும் கருத்துக்களை மட்டுமே வெண்பா யாப்பு என்னும் எல்லைப் பிணைப்புக்குள் நின்று பெயர்த்துக் கூறி நயம் சொட்டும் கவிதை இயற்றுவது இவருக்கு மட்டும் கைவந்ததோரருங்கலை.

கவிதையியற்றும் திறமையுடனும் இணைந்து விளங்கியது இவரது காவிய இரசனை. இவ்விரசனைச் சிறப்பிற்கு இவர் வாழ்நாளில் இறுதிக் காலத்தில் கவிதை நூல்களுக்கு வழங்கிய நயவுரைகள் சான்று பகரும். வித்துவசிரோமணி அவர்கள் தொடங்கி வைத்த இவ்விரசனை மரபு, குமாரசுவாமிப் புலவ ருடாக, இவருக்கும் இவருடன் கற்றோருக்கும் வழங்கப்பட்டது. இப்பாரம்பரியம் இலங்கையில் பரவியதுடன் மட்டும் நின்றுவிடாது தமிழ் நாட்டுக்கும் வியாபிக்குமளவிற்குச் சிறப்பு வாய்ந்த தென்பதை ஒரு சிலர் மட்டுமே அறிவர்.

மாண்புமிகு வேந்தர் அவர்களே,

இலக்கியப் புலமையும், இலக்கிய இரசனையும் இவற்றின் சிறப்புக்கு அடிப்படையாக வேண்டப்படும் தமிழ்ப்பற்று, சமயப்பற்று ஆகியன ஒருங்கு வாய்க்கப்பெற்று, இலக்கியத் துறையில் அரியதொரு பாரம்பரியத்தைப் பேணிப் புலவர்மணியாகத் திகழ்ந்து நிற்கும் ஏகாம்பரபிள்ளை பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு தேகாந்த கௌரவமாக ‘இலக்கிய வித்தகர்’ என்னும் கௌரவ விருதை வழங்குமாறு தங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

# புலவர்மணி ஏகாம்பரபிள்ளை பெரியதம்பிப்பிள்ளை

**சமர்ப்பிப்பவர்: கலை பண்பாட்டுப் பீடாதிபதி கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நான்காவது பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை.**

**வே**ந்தர் அவர்களே!

இன்று நான் புலவர்மணி ஏகாம்பரபிள்ளை பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் பெயரைத் தேகாந்த நிலையில் இலக்கிய கலாநிதிப் பட்டப்பேற்றுக்காக தங்கள் முன்மரியாதையுடன் எடுத்துரைப்பதை எனக்குக் கிடைத்த கௌரவமாகக் கருதுகிறேன்.

இலங்கையின் தமிழ் இலக்கிய மரபு பிரதான பல அலகுகளைக் கொண்டது, வடக்கு மரபு, கிழக்கு மரபு, தெற்கு மரபு. வடமேற்கு மரபு, மலைநாட்டு மரபு எனப் பல அலகுகளாக இம்மரபை வகுக்கலாம்.

மறைந்த ஏகாம்பரபிள்ளை ரெபியதம்பிப்பிள்ளையவர்களை கிழக்கு மாகாண இலக்கிய மரபின் அண்மைக்காலக் குறியீடாகக் கொள்வதில் யாருக்கும் வேறுபட்ட அபிப்பிராயம் இருக்க முடியாது. இவரது காலம் 1899-1978 வரையாகும். இவர் மக்களால் புலவர்மணி என அன்போடு அழைக்கப்பட்டார். புலவர்களுள் மணியாக அமைந்தவர் புலவர்மணி.

ஈழத்துத் தமிழிலக்கியத்திற்குப் புலவர்மணி ஏகாம்பரபிள்ளை பெரியதம்பிப்பிள்ளையின் பங்களிப்பு யாதெனில் அவரது மிகப்பெரிய ஆக்கமான பகவத்கீதை மொழி பெயர்ப்பாகும். அத்தோடு மட்டக்களப்பின் பிரதான ஆலய தெய்வங்கள் மீது அவர் பாடிய தோத்திரப் பாடல்கள், கலித்தொகையில் அவர் செய்த ஆராய்ச்சி

ஆகியவற்றையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

பகவத் கீதை மொழிபெயர்ப்பை அவர் வெண்பா யாப்பிலே செய்தார். இதனால் வெண்பாவிற் புகழேந்தி என்பதுபோல வெண்பாவிற் புலவர்மணி என்ற பெயரைப் பெற்றார். பகவத்கீதை வெண்பா மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது.

இத்தகைய ஆக்கப் பங்களிப்புகள் ஆராய்ச்சிப் பங்களிப்புடன் ஒரு தமிழறிஞர் குறிப்பிட்ட அப்பகுதி வாழ் சமூகத்தின் பண்பாடு–கல்வி வளர்ச்சிக்கு எத்தகைய தொண்டுகளை ஆற்றினார் என்பதில் அவரது பெருமை தங்கியுள்ளது. புலவர்மணி ஏகாம்பரப்பிள்ளை பெரியதம்பிப்பிள்ளையின் புலவர்மணி எனும் பட்டமே அவரது கலாசாரப் பண்பாட்டுப் பங்களிப்புக்குச் சான்று பகர்வதாயினும் அதற்குமேல் அவர் மிகச்சிறந்த ஆசிரியர்களை உருவாக்கிய ஆசிரியராயும் அமைந்தார்.

இலக்கிய கலாநிதி மகாவித்துவான் எவ்.எக்ஸ்.சி. நடராசா, பண்டிதர் வித்துவான் வி.சீ. கந்தையா, வித்துவான் சா.இ. கமலநாதன், பண்டிதர் தம்பிராஜா, வித்துவான் என். நாகலிங்கம், பத்திரிகையாளரான எஸ்.ரி. சிவநாயகம், கே. சிவப்பிரகாசம், இராஜ அரியரத்தினம், பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சி. மௌனகுரு என்போர் இவரிடம் கல்வி பயின்ற மாணாக்கரிற் சிலர்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை எவ்வாறு யாழ்ப்பாணக் கல்விமரபின் சின்னமாகக் கொள்ளப்படுகிறாரோ அதேபோல இலக்கல்விப் பராம்பரியம் ஒன்றினை உருவாக்கியதன் காரணமாகப் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையும் மட்டக்களப்புக் கல்விப் பாரம்பரியத்தின் சின்னமாகக் கொள்ளப்படுகிறார். ஒருவர் வடக்கின் சின்னம் மற்றவர் கிழக்கின் சின்னம்.

புலவர்மணி ஏகாம்பரபிள்ளை பெரியதம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாண மரபினுடனான உறவுகள் –தொடர்புகள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை. யாழ்ப்பாணக் காவிய பாடசாலை மாணாக்கருள் இவரும் ஒருவர். பண்டிதமணி கணபதிப்பிள்ளையும் இங்குதான்

பயின்றார். அங்கு அவர்கள் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் கீழ்க் கல்வி பயின்றனர். பின்னாளில் இவர் யாழ்ப்பாணத்தின் மிகப்பெரும் இலக்கண அறிஞரான பிரம்மசிறி கணேசையரிடமும் பயின்றுள்ளார்.

புலவர்மணியவர்கள் யாழ்ப்பாணத்தின் நிலவிய இறுக்கமான சாதி அமைப்பினை எதிர்த்தார். இதனால் அவர் சிலகாலம் கிறிஸ்தவ மதம்பால் ஈர்க்கப்பட்டுமிருந்தார்.

புலவர்மணியவர்கள் மட்டக்களப்பு மகனின் ஒரு குறியீடாவர். அதற்குரியவராக அவர் புகழுடன் திகழ்ந்தார்.

1994 இலங்கை அரசு முத்திரை வெளியிட்டு அவரது நினைவைக் கௌரவித்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1980ம் ஆண்டு நடந்த பட்டமளிப்பு விழாவில் மரபுவழி அறிஞர்கட்கு அளிக்கும் அதியுயர் விருதான இலக்கிய வித்தகர் பட்டமளித்து அவரைக் கௌரவித்தது. 1991ம் ஆண்டில் இந்து கலாசார இராஜாங்க அமைச்சு தேகாந்த நிலையில் அவருக்கு இலக்கியச் செம்மல் பட்டம் வழங்கிக் கௌரவித்ததுடன் அவரது உள்ளதும் நல்லதும் என்ற நூலுக்கும் சாகித்திய பரிசினை வழங்கியது.

வேந்தர் அவர்களே கிழக்குப் பல்கலைக்கழக மூதவையினதும் பல்கலைக்கழகப் பேரவையினதும் விதந்துரையின் பேரில் புலவர்மணி ஏகாம்பரபிள்ளை பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் பெயரை தேகாந்த நிலையில் இலக்கிய கலாநிதிப் பட்டத்துக்காக நான் முன்வைப்பதிற் பெருமகிழ்வெய்துகிறேன்.

திருநெல்வேலி, சைவாசிரியர் கலாசாலையின் முன்னாள் தலைமைத்தமிழ்
ஆசானும், இந்நூலாசிரியரின் உடன் மாணாக்கனுமான

# பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

அவர்கள் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் பகவத்கீதை வெண்பா
கருமயோகத்திற்கு அளித்த ஆராய்ச்சி முன்னுரை

ஒருமுறை மகான் ஒருவர் 'ஞானத்துக்குத் தவணையிடலாம்; தருமத்துக்கு அப்படிச் செய்யலாகாது' என்றார். அப்போது என் மனசில் 'அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க' என்ற தொடர் நினைவுக்கு வந்தது.

ஞானம் என்கின்ற விருட்சத்தின் மூலாதாரவேர் தருமம். ஞானம் முளைகொள்ளும் பரிசுத்த நிலம் தருமம் எனினும் அமையும்.

ஒருவன் சுவதருமத்தை விசாரித்துணர்ந்து, கர்மாநுஷ்டானங்களை அநுட்டித்து வருவானாயின், பற்றுக்கள் அடங்கும் முறையில் அடங்கும். 'மனத்துக்கண் மாசு இலன்' ஆவன். அந்தக் கரணங்கள் தூய்மையுறும். அமைதி நிலவும். அந்நிலையில் ஞான சூரியன் உதயம் ஆம்.

வேதம் ஞானகாண்டமும், ஞானகாண்டத்துக்கு நிமித்தமான கரும காண்டமும் என இருவகைத்து. கரும காண்டத்தை ஆராய்ந்து நூல் செய்தவர் சைமினி. அந்நூல் பூர்வமீமாம்சை எனப்படும். ஞானகாண்டம் உபநிடதம். ஞானகாண்டத்தை ஆராய்ந்து நூல் செய்தவர் வியாசர். அந்நூல் உத்தர மீமாம்சை எனப்படும். அதற்குப் பிரமமீமாம்சை வேதாந்த சூத்திரம் என்ற பெயர்களும் வழங்கும். வியாசரின் சீடர் சைமினி.

சைமினி செய்த பூர்வமீமாம்சை 'தருமத்தை அறிய ஆசை' என்று தொடங்குகிறது. கருமம் சுவதரும விசாரத்திலேயே தொடங்குவது. ஆதலினாலேதான் கருமம் பேசவந்த பூர்வ மீமாம்சை 'தருமத்தை அறிய ஆசை' என்று தொடங்கியது.

வியாசர் செய்த உத்தர மீமாம்சையாகிய வேதாந்தம் 'பிரமத்தை அறிய ஆசை' என்று தொடங்குகிறது. பிரமம் என்பது பிரம ஞானம்.

சைமினி சுவதருமத்தில் தொடங்குங் கரும சுத்தியைச் சொல்ல, கரும சுத்தியில் உதயமாகும் ஞானத்தைப் பேசுகின்றார் வியாசர். குருவும் சீடருஞ் செய்த இருமீமாம்சைகளும், ஞானமும் ஞான நிமித்தமும் பேசும் ஒரு முழுநூலேயாம். இரு பகுதியாய இந்நூல் வேத சமுத்திரத்தைக் கடப்பதற்கு வாய்ப்பாயதொரு தெப்பமாம்.

ஞானத்துக்கும் ஞானத்துக்கு நிமித்தமாய கருமத்துக்கும் உள்ள தொடர்பு பெரிதும் விசாரிக்கற்பாலது. கருமம் ஞானம் என்பவற்றின் தொடர்பைத் திருட்டாந்த பூர்வமாக விசாரஞ் செய்து எழுந்ததுதான் பகவத்கீதை. இரு மீமாம்சைகளையும் பக்தி என்கின்ற பசையினாலே இணைத்து அமைத்ததொரு அழகிய சேது பந்தனம் பகவத்கீதை.

பாண்டவர்கள் பன்னிரண்டு வருடம் வனவாசம் செய்தபிறகு, ஒருவருடம் விராடபுரத்தில் அஞ்ஞானவாசம் செய்துவிட்டு, அதன் மேல் உபலாவியம் என்கின்ற நகரத்தில் வெளிப்பட்டிருக்கின்றார்கள். கண்ணபிரானும் அங்கேவந்து அவர்களுடன் இருக்கின்றான். அப்பொழுது துரியோதனாதிகளின் சூழ்ச்சியின் விளைவாய்ச் சஞ்சயர் என்கின்ற குரு அங்கேவந்து, தருமருக்கு வேதாந்த ஞானம் போதிக்கின்றார். 'மித்தை ஆகிய மண்ணாசையைத் தவிர்ந்து, மீண்டுங் காட்டுக்குப் போய்த் தவஞ் செய்து வீடு அடைவதே புண்ணியர்களாகிய உங்களுக்கு மேலான செயல்' என்கின்றார் அவர்.

குருவாகிய சஞ்சயரின் போதனையைத் தருமர் ஒப்புக்கொள்ளவில்லை. குருமீது சிறிதே சீற்றமுந் தருமருக்கு உண்டாய்விட்டது. 'குருவே, எங்கள் மனம் கொதித்துக் கொண்டிருக்கின்றது. துரியோதனாதிகள் செய்த அவமானங்களை மறக்கமுடியவில்லை. அரச தரும நெறியில் போர் தொடுப்பதே இப்போழுது செய்யத்தக்கது. அதன் பிறகுதான் எங்கள் அந்தக்கரணங்கள் அமைதியுறும். அப்பொழுது வேதாந்த ஞானத்தைப் போதித்தால் பயன்செய்யும், என்றார் தருமர்.

"என்னறத்தினில் நின்று தெவ்வரை
இருவிசும்பினில் ஏற்றினால்
பின்னறத்தினில் நினைவு கூரும்
எனக்கனன்றிவை பேசினார்"

என்பது வில்லிபாரதம்.

இந்நிகழ்ச்சியைக் கண்டுகொண்டிருந்த கண்ணன், 'சுவாமீ, அருமந்த வேதாந்த முத்தை இந்த அபக்குவர்கள் முன்னிலையிலா வித்துவது என்று உபசார மொழி பகர்ந்து சஞ்சயரை வழியனுப்புகின்றான்.

இச்சம்பவம் ஞானம் உதயமாதற்குச் சுவதருமத்தில் தொடங்குவதாய கருமத்தின் சுத்தி எத்துணை இன்றியமையாத தென்பதை நன்கு காட்டுகின்றது.

மனிதருக்கு நோக்குவேறு; நிலைக்களம்வேறு. ஒருவன் உயர்ந்த நோக்குடையவனாயிருக்கலாம். ஆனால் அதே சமயம் அவன் நிற்கும் நிலைக்களம் மிகத்தாழ்ந்ததாகலாம்.

'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.'

இது நாவலர் எழுதிய இரண்டாம் பால பாடத்து முதல் வசனம். இவ்வசனம் நாவலரின் உயரிய நோக்கைக் காட்டுவதாயிருக்கின்றது.

'நிலையில்லாத என்சரீரம் உள்ளபொழுதே என்கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என்னுங்கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது. தமிழ்க்கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாக்கத்திற்குக் கருவிகள் முக்கியஸ்தலந்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப்பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம்.'

இந்த வசனம் நாவலர் தம் நிலையை எடுத்துச்சொன்ன வச்னம். இவ்வசனத்தால் நாவலரின் நிலைக்களம் நன்கு விளங்குகின்றது. நிலைக்களம் விடப்படவேண்டியது. அதை விடுகிறமுறையில் விடுவது. பற்றுக்களைப் பெறுகிறமுறையில் பெறும் வகையிலேதான் தங்கியிருக்கிறது.

சைவவிருத்தி, தமிழ்விருத்தி செய்வேண்டும் என்பதும் பற்றே. இப்பற்றைப் பெறுகிற முறையில் பெறும் பொருட்டு, ஒருநாள் சிவபூசை முடிவில், தம் உடையவரை நோக்கி உருகி நின்று, தாம் விரும்பிய விருத்திகள் நிறைவுறும் பொருட்டுப் பொருள் தாராயாயின், உன் முன்னிலையில் 'உயிர்விடுதல் திண்ணம் யான்' என்று ஒருபாட்டுப்பாடி அழுதவர் நாவலர். ஆனால், நாவலரின் ஐம்பதாம் வயசில் அந்நிலை மெல்ல மெல்லத் தளர்ந்து தணிந்துவிட்டது. ஒருநாள் 'அல்லிக்கமலம்' என்ற திருவாசகத்தை ஓதியவாறு, தம் வசம் இழந்து, 'புல்லிப் புணர்வதென்று கொல்லோ என் பொல்லா மணியை' என உருகி நின்றார் நாவலர்.

ஒருநாள் நோக்காயிருந்தது. மற்றொருநாள் நிலைக்களமாய் மாறுவதற்கு அரும்புவதை நாவலரின் சரித்திரத்திற் காணலாம். இது நிலைக்களம் உயர்ந்து, நோக்கும் இடம் நிலைக்களமாய் அமைவதோர் உயர்நிலை.

கீழே நிற்பவர்கள் சில சந்தர்ப்பத்தில் தம் நிலையை மறந்து, தமது உயர்ந்த நோக்கே தம் நிலைக்களமும் என்றெண்ணி மயங்கி விடுவதுமுண்டு. தக்கருரு, புண்ணிய விசேடத்தால் வாய்க்கப்பெற்றவர்கள், மயக்கம்போய்த் தம் நிலைக்களத்தை உணர்ந்து. அதனைச் சுத்திசெய்து முன் நோக்கு ஆகி இருந்தது எதுவோ அது நிலைக்களமாகும் நிலையை அடைந்து உய்வார்கள்.

நமக்கு நூல்வழியாகவும் கேள்விவழியாகவும் உயர்ந்த நோக்கு உண்டாகலாம். நமதுவாய் அந்நோக்குப்பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றலாம். ஆனால், நமது நிலைக்களம் அதுவேதான் என்று சொல்லமுடியாது. நிலைக்களம் மிகமிகக் கீழே நிறைந்த பற்றுக்களின் மத்தியிலே குடியிருப்பதாயிருக்கலாம். அக்குடியிருப்பின் சுத்தியே இன்றியமையாதது. அதனை உபகரிப்பதே பூர்வமீமாம்சை. அஃதாவது கருமசுத்தி.

அருச்சுனனின் ஐம்புலக்குதிரைகளை வழிசெய்பவன் போன்று, பார்த்தசாரதி தேரில் வீற்றிருக்கின்றான்.

'உற்கைதரும் பொற்கை உடையவர்போல் உண்மைப்பின்
நிற்க அருளார் நிலை'

என்பது திருவருட்பயன்.

உண்மையை முன்னிட்டுச் செல்பவன்போன்று, பார்த்தசாரதியை முன்னிட்டுக்கொண்டு, அவனைப் பின்தொடர்ந்து, பூட்டியவில்லுங் குறிவைத்த பாணமுமாய்க் கெம்பீரமாக இருக்கின்றான் பார்த்தன். போர் முனையில் தேர் நிறுத்தப்பட்டது. போர்க்களத்தை எட்டிப்பார்த்தான். பார்த்தது பார்க்கமுன்னமே ஓர் அசோகனாய் விட்டான் பார்த்தன். அவன்பால் இரக்கங் குடிபுகுந்தது. மேலாகிய ஞானம் மேலோங்கியது. பற்றுக்களனைத்தும் பற்றறக் களைந்த பரமஞானி போலாய் விட்டான். அவன் பூட்டியவில்லுங் குறிவைத்தபாணமும் அவனையறியாமலே கீழே வழுவி விழுந்து துயில் கூடுகின்றன. நோக்காயிருந்த உயர்ந்த ஞானம் தனக்கு நிலைக்களமாய்விட்டதென்றே எண்ணிவிட்டான் அவன். அவனுடைய வாய் உயரிய மெய்ஞ்ஞான போதனைகளை விளம்பத் தொடங்கிவிட்டது. எவன்குருவோ அவனுக்கே போதிக்கத் தொடங்கிவிட்டான் சீடன்.

அருச்சுனன் நிலையை அப்படியே எடுத்துக்காட்டுகின்றது வில்லிபாரதம்.

> 'நின்றமர் தொடங்கநினை கிற்பவர் பிதாமகனு
> நீள்கிளை ஞருந்துணைவருங்
> கொன்றிவரை வாகுவலி யிற்கவர்வ தித்தரணி
> கொள்பவனு மென்றுணைவனே
> யென்றபல பேசியதி பாதக மெனக்கருதி
> யான்மலைவு றேனினியெனா
> வன்றுவசு தேவன்மக னோடுரைசெய் தானமரி
> லவனுவ ளோடுரைசெய்வான்.'

அருச்சுனனின் மனக் கொதிப்புக்கள் அபிமானங்கள் அடங்கிவிட்டனவா? வாய்பொழிகின்ற வாசாஞானத்தில் அவனுடைய உட்கரணங்கள் நிலைத்து நிற்குமா? முதனாள் சஞ்சய முனிவருக்குத் தருமர் சொன்னதென்ன? அதனை அடுத்து, 'ஐந்தூர் வேண்டு அவை

மறுத்தால் ஐந்து இல்லமாயினும் வேண்டு' என்று கண்ணனுக்குத் தருமர் தருமங்கரைந்தபோது, அக்கண்ணன் முன்னிலையிலேதானே,

"எக்காலம் பகைமுடித்துத் திரௌபதியுங்
குழன் முடிக்க இருக்கின்றாளே"

"மாண்டார்போ லதுகண்டும் மன்னவையில்
யாம் இருந்தமாசுதீர
வேண்டாவோ"

என்று வெகுண்டு எழுந்தவன், இப்பொழுது போரை வெறுத்து அகிம்சை பேசுகின்ற இந்தப் பரமஞானிதானே. இவனுடைய சுடலை ஞானத்தை நம்பி, இவனுடைய பற்றுக்கள் பற்றறத் தொலைதற்கு வழிசெய்யாமல், பரமகுருவான கண்ணன் தன்சீடனை அருமைத் தோழனைக் கைவிட்டு விடுவானோ!

'அவனும் இவனோடு உரை செய்வான்.'

அவன் கண்ணன். இவன் அருச்சுனன். கண்ணன் போர் முனைக்கு ஓர் அளவு முதுகுகாட்டி, அருச்சுனனை முன்னிலைசெய்து, அவனுக்குக் கீதா போதஞ் செய்வானாயினான்.

'என்னறத்தினில் நின்று தெவ்வரை இருவிசும்பினில் ஏற்றுதலே இப்பொழுது எதிர்நிற்கும் எனது சுவதருமம்' என்று, அன்றொருநாள் சஞ்சயருக்குத் தருமர்கூறிய அதனையே, இன்று போர் முனையில், 'அருச்சுனா உன்தருமம் களை கட்டல்' என்று ஓதினான் கிருஷ்ணபகவான்.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்."

பகைவர்களைக் கொன்றுகுவித்தலே பற்றுக்கள் அறுதற்கு அருச்சுனனுக்குச் சுவதருமமாயமைந்தது. 'கொல்' என்பதே ஈண்டுப் பகவானின் தருமோபதேசம் அதனாலேதான் 'கொல்லச் செப்பும் வார்த்தை' கீதோபதேசம் என்றது சிவஞான சித்தியார். கொலையிற் கொல்லாமையுமுண்டு. கொல்லாமையிற் கொலையுமுண்டு. கொலையிற்

கொல்லாமை கீதை ஈண்டுக் கொலை களைகட்டல்; அது தருமம்.

கருமத்தொடக்கமும் ஞானமூலமுமான சுவதருமம் இரண்டொரு வார்த்தையிற் சொல்லக்கூடியது. அப்படியிருந்தும் அதைப் பற்றிய உபதேசம் பதினெட்டு அத்தியாயங்களாய் விரிந்திருக்கிறது. இந்த விரிவு ஏன் என்பது விசாரிக்கற்பாலது.

ஞானம் பேசும் அருச்சுனனுக்கு உண்டாயிருக்கும் கலக்கம், சுவதருமம் இது என்ற இரண்டொரு வார்த்தையிற் சுட்டிச் சொல்வதனாலே மாத்திரம் நீங்கிவிடாது. குரவர்களைக் கிளைஞர்களை மூத்தோரை நண்பரைக் கொன்று குவிப்பதா என்று அவன் கலங்கிப் போனான். அவனுடைய அபிமானங்களையும் பற்றுகளையும் மறைத்து, அக்கலக்கம் மேற்பட்டு, ஞான வாய்பாட்டில், அது பிரவாகிக்கின்றது. அதனாலேதான் சுவதருமத்தை விரித்து 'ஞானமெங்கே அதன் மூலமெங்கேபார்' என்று விரித்துக் காட்டவேண்டியதாயிற்று.

"இஃது உன்சுவதருமம். இது கருமத்தின் தொடக்கம். கருமமாவது செயல். அது காமியம் நிஷ்காமியம் என இருவகைத்து. காமிய கருமத்தைச் செய்யும்போதுகூடப் பயன்விஷயத்திற் சம புத்திவேண்டும். பயன் கருமத்தைச் செய்வோன் வசத்தில் இல்லை. அது ஊட்டுவோன் வயத்தது. சமபுத்தியின்றேல் கலக்கம் துக்கம் ஆதியன அதிகரிக்கும்.

'இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்.'

நிஷ்காமியம் பயனிற் பற்றின்றியே செய்யாமலிருக்க மாட்டாமையாற் செய்துகொண்டிருப்பது. ஒருதாய் பலன்கருதாமலே தன் குழந்தைக்கு இரங்காமலிருக்க மாட்டாமையால் இரங்கியபடி இருக்கின்றாள்; பால் சுரக்கின்றாள். அருச்சுனா, இந்தக் கரும விரிவுகளை அறிவாயா? இந்த நிஷ்காமியம் ஒருநாளைக்குச் செய்யாமையாய்ப் பரிணமிக்கும். இது கரும சிகரம்; ஞான நிலை.

செயலிற் செயலின்மையும் செயலின்மையிற் செயலும் எனச் செய்யாமை இருவகைத்து. சண்டீசர் தாதையைத் தாளறத் தடிந்தார்.

ஆனால், அவர் தடியவில்லை. இது செயலிற் செயலின்மை. சாக்கிய நாயனார் சுவாமிக்குப் பூசை செய்யாமலே மனசால் வணக்கஞ் செய்தார். ஆனால், கல்லாலெறிந்து பூசையொன்று நடந்து விட்டது. இது செயலின்மையிற் செயல். இந்த இருவகைச் செய்யாமையும் பிறந்தவன் பரமஞானி. அவன் கருவி கரணங்களனைத்தையும் எடுத்துச் சுமப்பானிடம் ஒப்படைத்தவன்; இருள் சேர் இருவினையினீங்கினவன்; பொறுப்பின்றிச் சும்மா இருப்பவன். 'சும்மா இரு' என்பது கந்தரநுபூதி. 'சும்மா இருக்குந்திறம் அரிது' என்பது தாயுமானவர். அருச்சுனா, சுவதர்மம் விரிந்து சும்மா இருப்பதாகிய செய்யாமை என்கின்ற ஞான முதிர்வாதலை அறிவாயா?"

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

என்றிங்ஙனம் வினவி வினவி, அருச்சுனனைத் தட்டி எழுப்பி எழுப்பி விடைபகர்ந்து தெளிவிக்க வேண்டியதாயிற்று. அதனால் கீதை விரிந்தது. மகாபாரதம் பதினெட்டுப் பருவம். கீதை பதினெட்டு அத்தியாயம்.

பதினெட்டாம் அத்தியாயத்தில், சுவதருமத்தில் தொடங்கும் கருமப்பரப்பு, இறுதியிற் செய்யாமையாய் ஞான நிலையாய் முதிர்வதைக் காணுகின்றான் அருச்சுனன். அவனுக்கு நாண்தலைக்கேறுகின்றது. கலக்கம் போய்த் தெளிவு பிறந்து தன் நிலைக்களந் தோன்றுகின்றது. மனக்கொதிப்புக்கள் பற்றுக்கள் படலம் படலமாய் அகத்தினடியில் இருப்பாயிருப்பதை அவன் காணுகின்றான். தலைகுனிந்தது. குனிந்தவன் பூட்டிய வில்லுங் குறிவைத்த பாணமுமாய்த் தலை நிமிர்ந்தான். பார்த்தசாரதி தடைநேர்ந்தவன் போலாகாதே குதிரைகளைத் தூண்டினான்; அவன்மாயன்.

வில்லினை யெடடா! கையில்
வில்லினை யெடடா! அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்திசெய்திடடா! (வில்)

வாடி நில்லாதே; மனம்
வாடி நில்லாதே; வெறும்
பேடியர் ஞானப் பிதற்றல் சொல்லாதே. (வில்)

என்று பாடுகின்றான் சுப்பிரமணிய பாரதி.

ஒருநாள் அருச்சுனன் தந்தையாகிய தேவேந்திரனுக்கு அசுரர்கள் இடை இடையே இடையூறு விளைக்கும் அச்சத்தினால், ஒரு துறவு ஞானம் பிறந்தது. அதனால் இந்திராணியையும் கற்பகதரு வாழ்க்கையையும் அவன் வெறுத்தான். அப்பொழுது குருவாகிய வியாழ பகவான் தோன்றி,

"ஆண்டோர் பேரின்பம் உண்டென்றறைவர்
அதனை ஆரறிவார்."

'கிடைத்ததை எறிந்துவிட்டு எங்கே போகிறாய்' என்று உபதேசந் தொடங்கினார். இந்திரனுக்கு அச்சத்தால் மூடுண்டு கிடந்த தன்நிலைக்களந் தோன்றியது. இரண்டாவது வார்த்தையின்றித் துறவைத் துறந்து இந்திராணியின் வயத்தன் ஆயினான் இந்திரன்.

அவ்வாறே இந்திரகுமாரனான அருச்சுனனுக்கு இனசனப் பற்றுக்களால் மூடுண்டு கிடந்த அவன் நிலைக்களத்தைக் கிருஷ்ண பகவான் தொட்டுக் காட்டினான். காட்டிய அக்கணமே அருச்சுனன் மௌனியாய்ப் போர்தொடங்கினான்.

மனிதன் நாள்தோறும் கணந்தோறும் தன் நிலையை அறியாது தன்தருமத்தை உணராது தடுமாறுகின்றான். அப்படிப்பட்ட மனிதனுக்கு அருச்சுனனில் வைத்து விரித்து ஓதிய கீதை அமிர்த சஞ்சீவி. ஒவ்வொரு சுலோகமும் ஒவ்வொரு மாத்திரை.

இங்கே குறிப்பிட்ட அமிர்த சஞ்சீவி மாத்திரைகள் வடமொழியில் உள்ளவைகள். அவைகளைத் தமிழ் தெரிந்தவர்களுக்குப் பயன் செய்யும் பொருட்டு அறிஞர் சிலர் தமிழில் வசனவடிவிற் பெயர்த்திருக்கின்றார்கள். அருமந்த இந்த அமிர்த சஞ்சீவி மாத்திரைகளை வைத்துப் பேணுதற்கு வசனவடிவு பொருத்தமான செப்பு அன்று. வாக்குண்டாம் 'நல்வழி'

திருக்குறள் எந்தயாப்பில் பொருத்தமுற அமைக்கப்பட்டனவோ அந்தயாப்பில் கீதாமாத்திரையை அமைப்பதே பொருத்தம். ஒவ்வொரு மாத்திரையும் ஒவ்வொருவர் இருதயத்திலும் நாவிலுந் தவழ்ந்து கொண்டிருக்கவேண்டும். உற்றுழி உதவுங்கோல் உதவக்கூடிய இடத்தில் இருக்கவேண்டும். அது போல உற்றுழி உதவுங் கீதாமாத்திரை அதற்குரிய யாப்பில் அமையவேண்டும். இதனைப் **பிறப்பிலேயே செய்யுள் செய்யும் ஆற்றல் படைத்தவரான புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை** அவர்களுடைய மனசில் உணர வைத்தது தெய்வம்.

ஒரு காலத்தில் 'வெண்பாவிற் புகழேந்தி' என்றிருந்தது. இக்காலத்தில் 'வெண்பாவிற் பெரியதம்பி' என்று வழங்குவதைக் கவிதை உலகு அறியும். புலவர்மணியின் குருபரம்பரை வெறும் உடலைப் பொருள் செய்யாது, உயிர்ப்பைத் தொடுவதொரு பரம்பரை. அந்த விசேடத்தினாலே, அரிட்ட தோஷங்கள் நிறைந்த பொருளற்ற கவிதைகள் புனைந்து, பொழுதை நாசஞ் செய்யாது, தமது கவியாற்றலைப் பயன் செய்யும் முறையிற் பயன் செய்து கொண்டார்கள் புலவர்மணி அவர்கள். கீதையிலுள்ள ஒவ்வொரு சுலோகத்தையும் ஒவ்வொரு வெண்பாவாக அமைத்திருக்கின்றார்கள். வெண்பாக்கள் புகழேந்தியின் வெண்பாக்களே போன்று தெளிவும் சொல்லின் செல்வாக்கும் நிறைந்தவைகள். சாத்திரக் கருத்துக்கள் செய்யுள் வடிவு பெறும்போது, தெளிவு பிரதானஅம்சம். அது. அநாயாசமாகவே சொற்கள் எழுந்து குதிகொண்டு நடக்கின்ற செந்நாப்படைத்த செம்புலச் செல்வர்களுக்கே அமைவது; கைவருவது. இதனைப் புலவர்மணியின் வெண்பாக்களில் நன்கு காணலாம்.

"வண்மைத் தமிழ்க்கு வரம்பு; வடமொழியின்
உண்மைத் தெளிவுக் குரையாணி – கண்மணியென்
சுண்ணைக் குமார சுவாமிப் புலவனடி
சென்னிக் கியான்செய் சிறப்பு"

என்பது ஆசிரிய வணக்கத்தில் வருவதொரு வெண்பா. இதனை ஒரு முறை படித்துப் பார்த்தால் புலவர்மணிக்கும் வெண்பாவுக்கும் உள்ள பொருத்தம் புலனாகும்.

"மூச்சுவிடு முன்னே முந்நூறும் நானூறும்
ஆச்சென்றால் ஐந்நூறும் ஆகாதோ"

என்றவகையில், தங்குதடையின்றி. இருடிகர்ப்பம் போன்று, கருத்துக்கள் உருண்டு புரண்டு புலவர்மணியின் வாய்வழியே ஒழுகி வழிவதைக் காணலாம். வெண்பாக்களனைத்தும் மனனஞ்செய்ய வேண்டியவை. சிந்தனையாளர்கள் சிந்தனைக்குரிய வெண்பாக்களைக் குறியீடு செய்து வைத்துக்கொண்டு, மீண்டும் மீண்டும் படித்துச் சிந்தனையைப் பெருக்கலாம்.

கீதைக் கருத்துக்கள் புணர்ந்தாற் புணருந்தொறும் புரியவாய் ஆழ்ந்து நடப்பவைகள்; அதியற்புத விவேகமும் சமஸ்த சாஸ்திரஞானமும் படைத்த சங்கரரையும். மற்றும் மகா புத்திமான்களையும் வசீகரித்தவைகள். மகாத்மாவாகி மகான்களுக்கு அநுபவக் கனிகளாய் அமைந்தவைகள் அக்கருத்துக்கள்.

சமத்துவ புத்தி, பயன் கருதாத பற்றற்ற செயல், நிஷ்காமியம், செய்யாமை என்றின்னோரன்னவைகள். தவம், ஞானம், விவேகம், கல்வி என்னும் இவற்றுக்குத் தக்கவாறு சிந்தித்து அடங்குதற்குரிய அரிய பொக்கிஷங்கள்.

புலவர்மணி அவர்கள் சுலோகக் கருத்துக்களை இனிக்கின்ற வெண்பாக்களில் அமைத்து உதவியதோடமையாது, சிந்தனைக்கு உபகாரமாக, விஷயச் சுருக்கம், பொழிப்பு விளக்கம் என்னும் உரைக்குறிப்புகளும் உதவியிருக்கின்றார்கள். அவைகள், அமிர்த சஞ்சீவி மாத்திரைகளாகிய கீதை வெண்பாக்களுக்கு, ஆசிரியர் உதவிய அநுபானங்கள்.

கீதை கவிசெய்து கீர்த்தி மிகப்பெற்றான்
ஏபெரிய தம்பி எனதன்பன் - ஓதக்கேள்
பாட்டுக்கொருபுலவன் பாரதியென் றாரொருவர்
பாட்டுக் கிவனென்பன் யான்""

**சி. க.**

**கலாசாலை வீதி, திருநெல்வேலி.**
07-11-1962

பரமேஸ்வராக் கல்லூரி முகாமையாளரும், முன்னைநாள் தபால், தந்தி
ஒலிபரப்பு அமைச்சருமாகிய சு. நடேசபிள்ளை அவர்கள்
புலவர்மணியின் பகவத்கீதை கருமயோகத்துக்கு வழங்கிய

# முன்னுரை

உலகப் பிரசித்தம் பெற்ற சமய நூல்களுள் பகவத்கீதை ஒன்றாகும். மகாபாரத யுத்தகளத்தில் அருச்சுனனுக்குக் கண்ணபிரான் அருளிச் செய்த உபதேசமாக அமைந்துள்ள இந்நூல், ஆன்ம ஈடேற்றத்துக்குப் பெரிதும் பயன்படுஞ் சிறப்பு வாய்ந்தது. வேத முடிபைக் கூறும் உபநிடதங்களைப் போல் இது போற்றப்படுகின்றது. இகபர வாழ்வுக்குத் துணையான சாதனங்களை இது விளக்கிக் கூறுகின்றது. இதில் விரிவாகக் கூறப்படும் சாதனங்கள் கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்பனவாகும். நமது வாழ்க்கையில் கர்மம் அடிப்படை யாகவுள்ளது. கர்மத்தினால் நாம் பந்தமுறுகிறோம். கர்மத்துக்குரிய பலனைத் தனதென்று ஆன்மா சுவீகரிப்பதால், பந்தம் உண்டாகின்றது; பிறவித் தொடர்பு ஏற்படுகின்றது. கர்மபலனை இவ்வாறு யாம் சுவீகரிப்பதை விடுத்து, அதை இறைவனுக்கு அர்ப்பணித்துக் கர்மத்தைச் செய்வது, கர்மபந்தத்தைத் தவிர்க்கும் வழியாகும். இது கர்ம யோகம் எனப்படும். ஆன்மா பொய்ச் சார்பாகிய பாசத்தை விடுத்து, இறைவனே தனக்கு உறுதுணையான மெய்ச்சார்பென்று அறிதல் ஞான யோகமாகும். மெய்ச் சார்பாகிய இறைவனையயே இடையறாது பற்றுதல் பக்தியோகம் எனப்படும். பகவத்கீதையின் உபதேசம் வேதாகம சாரமாகக் கொள்வதற்குரியது. சைவசித்தாந்தத்தில் இவ்வுபதேசம் இறைபணி நிற்றல் என்று குறிக்கப்படும்.

வடமொழியிலுள்ள பகவத்கீதை பலரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அம்மொழி பெயர்ப்புகளுள் ஒரு சிலவற்றைத் தவிர்த்து ஏனையவை உரைநடையில் அமைந்தனவாகும். ஒரு மொழியிலுள்ள நூலைப் பிறிதொரு மொழியில் செய்யுள் வடிவில் மொழி பெயர்ப்பது எளிதன்று. பகவத்கீதையைத் தமிழ்ச் செய்யுள்

வடிவில் மொழி பெயர்ப்பதற்கு அந்நூலின் செப்பலோசையோடு இயைந்த வெண்பா யாப்பு மிகவும் பொருத்தமானது. இலங்கையில் ஒரு சிறந்த தமிழ்க் கவிஞராக விளங்கும் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பகவத் கீதையின் ஒரு பகுதியை வெண்பா யாப்பில் மொழி பெயர்த்து, பகவத்கீதை வெண்பா என்ற பெயருடன் அதனை இப்பொழுது வெளியிடுகிறார்கள். இந்நூல் அவர்களது மொழி பெயர்ப்புத் திறனையும், இன்கவி இயற்றுவதில் அவர்களுக்கிருக்கும் ஆற்றலையும் ஒருங்கே புலப்படுத்துகின்றது. அவர்களின் மொழிபெயர்ப்பு மூலசுலோகங்களின் பொருளைச் சிதைக்காமல் அமைத்துக் காட்டுகிறது. அவர்கள் இயற்றியுள்ள வெண்பாக்கள் யாப்பமைதியுடையனவாய், ஓசைநயம் பெற்றனவாய், எளிதிற் பொருள் விளங்கக் கூடியனவாய்ப் பலவகையிலும் பாராட்டத் தக்கனவாயிருக்கின்றன. பகவத்கீதையில் ஆன்மாவின் அழியாத்தன்மையைக் கூறும் சுலோகங்கள் மிகப் பிரசித்தம் பெற்றவை. அவற்றைப் புலவரவர்கள் மொழிபெயர்த்து அமைத்திருக்கும் வெண்பாக்கள் அவர்களது நூலின் சிறப்பைத் தெற்றெனக் காட்டத்தக்கனவாகும். அவற்றுள் இரண்டை ஈண்டுக் குறிப்பிட விரும்புகின்றேன். அவை வருமாறு:

**ஆதலழிவதற்றே ஆன்மா அனாதியாய்**
**ஏதும் விகாரமில தென்றுணர்ந்த - மூதறிவோன்**
**எவ்வண்ணங் கொல்வானெவனை எவனைத்தான்**
**எவ்வண்ணங் கொல்விப்பா னிங்கு.**

**ஆயுதத்தால் அக்கினியால் அப்புவால் வாயுவினால்**
**ஏயும் விகாரமுணா திவ்வுயிர்தான் - நேயகேள்**
**என்றுமுள தெங்குமுள தென்றநிலை பெற்றழித**
**லின்றியசை வற்ற பொரு ளீது.**

பகவத்கீதையின் முதல் ஆறு அத்தியாயங்களின் மொழி பெயர்ப்பு இப்பொழுது வெளியிடப்படுகின்றது. இப்பகுதி கர்மயோகத்தைப் பற்றிக் கூறுவதாகும். ஏனைய பகுதிகளின் மொழி பெயர்ப்பும் விரைவில்

வெளிவருமென்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் இப்பொழுது வெளியிடும் நூலில், ஒவ்வொரு வெண்பாவின் பொருளை விளக்கும் வகையில் ஓர் அரிய விரிவுரையும் எழுதிச் சேர்த்துள்ளார்கள். இது மிகவும் பயன் தரும் வகையில் அமைந்துள்ளது. நுட்பமான குறிப்புகள் இதிற் காணப்படுகின்றன. நூலாசிரியரின் தெளிந்த உரை நடைத்திறனும் இவ்விரிவுரையினின்று நன்கு புலனாகும்.

சு. நடேசபிள்ளை

இராமநாதனகம்,
சுன்னாகம்
23-11-62

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உயர்திரு
சுவாமி நடராஜநந்தா அவர்கள்
புலவர்மணியின் பகவத் கீதை வெண்பா கருமயோகத்திற்கு வழங்கிய

# அணிந்துரை

உலகிலுள்ள பெரிய மதங்களெல்லாம் சில புத்தகங்களைச் சார்ந்திருக்கின்றன. அப்புத்தகங்கள் கடவுள் அல்லது கடவுளின் அருள்பெற்ற மகான்களால் அருளப்பட்டவை என அவ்வம் மதத்தினர் நம்பி வருகின்றனர். அந்நூல்களே அம்மதங்களுக்கு அடிப்படையாக இருந்து வருகின்றன. அவைகளனைத்திலும் மிகப் பழைமையானது இந்துக்களுடைய வேதங்கள் என்பது தற்கால மேல்நாட்டு மேதைகளின் கருத்தும் ஆகும். அத்தகைய பெருமைவாய்ந்த வேதங்களைப்பற்றி நாம் சிறிது அறிந்து கொள்வது அவசியமாகிறது. ஆனால் வேதப் பொருளைப் போதிக்கும் நூல்களோ பல இருக்கின்றன. அவற்றுள் எந்த நூலைப் படித்தால் அவ்வறிவைப் பெறலாம் என்பதில் அறிஞரிடையே கருத்து வேற்றுமை காணப்படுகிறது. ஆயினும், வேத உப நிடதங்களின் சாரமாக விளங்கும் பகவத்கீதை என்னும் நூலானது இந்து மதக்கோட்பாடுகளனைத்தையும் ஒருவாறு விளக்குகின்றது என்பதில் கருத்து வேற்றுமை கிடையாது. ஆகையினாலே, இந்து சமயத்திற் பிறந்த ஒவ்வொருவரும் பகவத் கீதையைப் படிக்கவேண்டியது மிகவும் அவசியமான சமயத் தொண்டாகும்.

இந்தச் சிறந்த நூலானது முதன் முதலாகச் சமஸ்கிருத மொழியிலே எழுதப்பட்டது. ஆங்கில மொழியில் இதன் மொழி பெயர்ப்புண்டு. இப்பொழுது உலகிலுள்ள பிரதானமான பாஷைகளில் இதன் வெளியீடுகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆயினும், தமிழ்ப்பாஷையில் வெளிவந்த மொழிபெயர்ப்புகள் மிகக் குறைவானதென்றே கூறவேண்டியிருக்கின்றது. மட்டக்களப்பு அரசாங்கக் கல்லூரியின் முன்னாள் தமிழ் விரிவுரையாளர் புலவர்மணி

ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் இயற்றிய 'பகவத்கீதை வெண்பா' என்னும் புதிய வெளியீடு நவயுக இலக்கியத்தில் இடம் பெறத்தக்க தொன்று. தமிழிலே கீதையின் சிறந்த மொழிபெயர்ப்பில்லாக் குறையை இந்நூல் நிறைவேற்றுகின்றது. அரிய விஷயங்களை எவரும் எளிதாக விளங்கக் கூடியமுறையில் இனிய வெண்பாக்களில் அமைத்துள்ளார் ஆசிரியர். சிற்சில சந்தர்ப்பங்களில், தற்காலத்து இளைஞர்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க முறையில் விஞ்ஞான ரீதியான விளக்கங்களும் இடம்பெறுகின்றன. மாணாக்கர்கள் ஞானப்பொருளைக் கிரகிக்கக் கூடிய அளவிற்குத் தேவையான குறிப்புகள் மட்டும் கொடுக்கப்பட்டிருப்பது இந்நூலின் சிறந்த அம்சமாகும். கல்விப் பொதுத்தராதரப் பத்திர பரீட்சைக்கு இந்து சமயம் எடுக்கும் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் போன்று அமைந்துள்ளது இந்நூல். இதை வரவேற்றுப் போற்றுதல் இந்துக்கள் அனைவரினதும் கடமையாகும்.

சுவாமி நடராஜாநந்தா

இராமகிருஷ்ண மிஷன்.
மட்டக்களப்பு, 26.8.62

ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்க ஆண்டு விழா

# அறிஞர் இராசமாணிக்கம்பிள்ளை ஆராய்ச்சித் திறன்

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டு விழாவின்போது புலவர் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பகவத் கீதை வெண்பாவை அரங்கேற்றிவைத்த செயல் பெருமைக் குரியதெனச் சென்ற வாரம் இங்கு கூறப்பட்டது. பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் புலவர் பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் ஆற்றலைப் பாராட்டிச் சிறப்புபாயிரம் வழங்கியமையுங் குறிப்பிடத்தக்கது.

கீதை கவிசெய்து
கீர்த்தி மிகப்பெற்றான்
ஏபெரிய தம்பி என தன்பன் – ஓதக்கேள்
பாட்டுக்கொரு புலவன்
பாரதியென்றா ரொருவர்
பாட்டுக் கிவனென்பன் யான்.

எனப் பண்டிதர் அவர்கள் பாடிமுடித்தபோது சபையில் மிகுந்த குதூகலம் ஏற்பட்டது.

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களிடம் தானும் தமது நண்பரும் பாடங்கேட்ட காலத்திற்கூடக் கவிபாடும் வன்மை பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு இருந்ததெனப் பண்டிதர் அவர்கள் கூறினார்கள். தம்முடன் கற்ற நண்பர் பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் நூலினைப் பாராட்ட வேண்டிய நிலையையும், ஆராய்ச்சிப்பேரறிஞர் இராசமாணிக்கம்பிள்ளை அவர்களின் தலைமையிற் பேசவேண்டிய நிலையையும் குறிப்பிட்ட பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்கள், தாம் அன்று கடும் பாலை நிலையில் நிற்பதாகக் கூறினார்.

(முதனாள் புலவர் பெரியதம்பிப்பிள்ளை பாலைக் கலி பற்றிப் பேசியிருந்தார்) பண்டிதர் அவர்கள் சிறப்புப்பாயிரம் வழங்கிய பின்னர் தமிழ்ப்பண்டிதர் வ. மு. இரத்தினேசுவரஐயர் அவர்கள் பகவத்கீதை வெண்பா நூலைப் பாராட்டிப் பின்வரும் பாடலைப் பாடியிருந்தனர்.

"செஞ்சொல்லும் செம்பொருளும் சேர்ந்து மிளிர்வடைய
விஞ்சுமிசை வீறுகொள வெண்பாவலால் – தஞ்சமென
நற்பகவற்கீதை நவின்றிட்டான் ஆரமிர்தாய்
சொற்பெரிய தம்பியெனச் சொல்."

சிறப்பான இவ் வைபவத்தை திரு. நடேசபிள்ளை அவர்கள் மிகப் பொருத்தமான முறையில் பாராட்டிப் பேசினார்கள். தொல்காப்பியனாருடன் பாடங்கேட்டுவந்த பனம்பாரனார் என்பவர் தொல்காப்பியத்துக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியது போலப் பெரியதம்பிப்பிள்ளை அவர்களுடன் பாடங்கேட்டு வந்த பண்டிதர் கணபதிப்பிள்ளையவர்கள் தமது நண்பரின் நூலுக்குச் சிறப்புப்பாயிரங் கூறியமை போற்றற்கரியதெனத் திரு. நடேசபிள்ளையவர்கள் தெரிவித்தார்கள்.

நன்றி: ஈழகேசரி

**கொழும்பு இராமகிருஷ்ண சங்கத் தலைவர் உயர்திரு சுவாமி பிரேமாத்மானந்தா அவர்கள் புலவர்மணியின் பகவத்கீதை வெண்பா பக்தியோகத்திற்கு வழங்கிய**

# அணிந்துரை

## பகவத்கீதை வெண்பா

இந்துமத சாஸ்திரங்களுட் பெரும்பாலானவை தேவபாடையாம் சமஸ்கிருத மொழியிலேயே எழுந்துள்ளமை நாம் அனைவரும் அறிந்ததே. அவற்றுள்ளும் 'இந்துமத சாஸ்திரம்' என விதந்து கூறப்படும் பிரஸ்தானத் திரயத்தில் அடங்கியுள்ள உபநிடதம், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை ஆகிய மூன்று நூல்களும் வடமொழியிலேயே எழுதப்பட்டன. வடமொழி அறிவற்றோர் இவற்றைக் கற்கவேண்டின், கற்றறிந்து தெளிவுற்ற பேரறிவாளர்களாம் மெய்ஞ்ஞானிகள், நம் மொழியில் பெயர்த்துத் தந்துள்ள மொழி பெயர்ப்பு நூல்களின் உதவியையே நாடவேண்டி இருக்கிறது.

இப்பூவுலகமாகிய குருஷேத்திரத்திலே, வாழ்க்கை எனும் போராட்டத்தில் வெற்றிபெற வேண்டுமேல் நம்முள் சாட்சி மாத்திரையாய் நின்று நம்மை இறை நிலைக்கு இட்டுச் செல்லும் இறைவனாம் கண்ணன் பகவத்கீதையிற் காட்டிய நெறியையே கடைப்பிடிக்க வேண்டும். பகவத்கீதையைப் படித்தறியாத ஒருவன் தன்னை இந்து என்று கூறிக்கொள்வதில் வெட்கமடைய வேண்டியவன். இந்நூலுக்கு பல்வேறு மொழியிலும் எழுதப்பட்ட மொழி பெயர்ப்புக்கள் பல உண்டு.

பல சமய சாஸ்திரங்களை பொருட் சிதைவின்றிப் பிற மொழியில் செய்யுள் நடையிலேயே பெயர்த்தல் எளிதான கருமமன்று.

'வெண்பாவிற் பெரியதம்பி' எனப் பாராட்டப்பெறும் தகுதி பெற்ற புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள், தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்புக்களின் துணை கொண்டு கீதா சாஸ்திரம் எனும் நுண் பொருட் புலத்துள் நுழைந்து, அதன் மெய்ஞ்ஞானப் பொருளமுதைப் பருகித் திளைத்து, தான் பெற்ற இன்பம் தமிழ்த் தனையர் அனைவருமே பெறவேண்டும் என்னும் வேட்கையாலும், மதத்திலும் மொழியிலும் கொண்டுள்ள ஆராக் காதலாலும் கீதாசாஸ்த்திரம் கூறும் அரிய கருத்துக்களை சொல்வளமும், பொருட் செறிவும், யாப்பமைவும், இசைநயமும் பொருந்த எளிய நடையில் இனிமையான வெண்பா யாப்பில் யாத்து தமிழன்னைக்கு அழகானதோர் பொன்னாரமிட்டுள்ளார்கள்.

புலவர்மணி அவர்கள், கற்போர் மயக்கமறக் கற்றுத் தெளிவதற்கேற்ற அரிய விளக்கவுரை ஒன்றும் இதற்குத் தந்துள்ளார்கள். 'அட்டாங்க யோகம்' 'பரப்பிரகிருதி அபரப் பிரகிருதியுள் நின்று இயங்குதல்' போன்ற பல தத்துவக் கருத்துக்களை மிகத் தெளிவுபட விளக்கியுள்ளார்கள். கீதா உபதேச உண்மைகள் பலவற்றை தேவாரம், திருவாசகம், திருக்குறள், கந்த புராணம், திருவிளையாடற் புராணம், வில்லிபாரதம், கம்பராமாயணம், தாயுமானவர் பாடல் முதலிய பல நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் காட்டி, ஒப்பிட்டு ஆராய்ந்து, விளக்கியுள்ள திறன் பாராட்டற்குரியது. இது அவரது பன்னூற் புலமையை மட்டுமன்றி கற்போர் உள்ளம் கற்றறிந்து, தெளிவுற்று அடங்க வேண்டும் என்ற அவரது பெருநோக்கையும் எடுத்துக் காட்டுகின்றது.

முதல் ஆறு அதிகாரங்களும் 'கருமயோகம்' என்ற பெயருடன் வெண்பா உருவில் விளக்கக் குறிப்புக்களுடன் முன்னரேயே

வெளிவந்துள்ளது. இப்போது அடுத்த ஆறு அதிகாரங்களும் 'பக்தியோகம்' என்ற பெயருடன் இரண்டாம் பாகமாக வெளிவருகிறது. நமது தமிழ் உலகம் இதனைத் தக்கவாறு பயன்படுத்தி உய்திபெற வேண்டும் என்பதே எமது அவா. அடுத்து மூன்றாம் பகுதியையும் புலவர்மணி அவர்கள் யாத்து நமக்களிப்பதற்கேற்ற எல்லா வாய்ப்புக்களையும் பெற்று, நற்சுகமும், நீண்ட ஆயுளும் உடையராய்த் தமிழுக்கும் மதத்துக்கும் பெரும் பணியாற்றும் பாக்கியம் பெற வேண்டுமெனக் கண்ணன் கழலடி இறைஞ்கி நிற்கின்றோம்.

இராமகிருஷ்ண மிஷன்
கொழும்புக் கிளை (ஸ்ரீ லங்கா)

சுவாமி பிரேமாத்மானந்தா
தலைவர்

அரசியலமைப்பு நீதிமன்ற நீதியரசர்

வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள்

புலவர்மணியின் "பக்தியோகம்" நூலுக்கு வழங்கிய

# ஆசியுரை

உலகத்துச் சமயங்களில் தொன்மையானது இந்து சமயமே என்பர் ஆராய்ச்சியாளர். இந்து சமயத்தின் அச்சாணியாக வேதங்கள் விளங்குகின்றன. வேத உபநிஷதங்களின் கருத்தையடக்கி, இந்து சமயக் கோட்பாடுகளை விளக்கி பகவான் உபதேசித்த சுலோகங்களே பகவத் கீதை.

பகவானின் திருமொழியாகிய பகவத்கீதை மனக்கவலை தீர்க்கும் மாமருந்து் துன்பக் கடலிலிருந்து கரை சேர்க்கும் பேரின்பத் தோணி. அறியாமை இருளை ஓட்டவல்ல பேரொளி. வாழ்க்கையின் பிரச்சனைகளால் திக்குத் தெரியாமல் தட்டுத் தடுமாறும் மக்களுக்கு தெளிவான திசை காட்டும் வழிகாட்டி. இவ்வுலக வாழ்வுக்கு மட்டுமல்ல, மறு உலகத்திலும் ஆனந்தம் தரவல்ல அற்புதத் தத்துவமாகப் பகவத்கீதை விளங்குகின்றது.

சமஸ்கிருத மொழியில், அறுநூற்றித் தொண்ணூற்றெட்டு சுலோகங்களைக் 'கொண்டு, பதினெட்டு அத்தியாயங்களில் அமைந்த பகவத்கீதை இன்று உலகில் பல மொழிகளில் வெளி வந்திருக்கின்றது. சாதி, சமய, கால, தேசங்கடந்த கருத்துக் கருவூலமாகத் திகழ்ந்து, உலகத்துப் பொது நிதியாக இன்று போற்றப்படுவது பகவத்கீதை.

இத்துணைச் சிறப்புக் கொண்ட பகவத்கீதை எம் தமிழ் மொழியிலும் ஏற்கனவே மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. எனினும், பக்தியும், இனிமையும் சுரக்க, வெண்பா உருவில் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பகவத்கீதையை

யாத்திருப்பது இந்துக்களும் தமிழர்களும் நன்றி செலுத்திப் போற்ற வேண்டிய நற்பணியாகும்.

புலவர்மணி அவர்கள் பழைய தமிழ் இலக்கண இலக்கி யங்களை முறையாகக் கற்றவர். தமிழ்க் கடல். சுவாமி விபுலானந்தர் அவர்களின் தொடர்பால் அறிவை வளப்படுத்திக் கொண்டவர். பல நூல்களின் ஆசிரியர். சிறந்த இலக்கியப் பேச்சாளர். செந்தமிழ் வளர்க்கும் சீரிய எழுத்தாளர். "வெண்பாவுக்கொரு பெரியதம்பி" எனச் சிறப்புப் பெற்ற பெரும் புலவர். இத்தகையவர், பகவத்கீதையை வெண்பா உருவில் யாக்க முன்வந்திருப்பது தமிழ் மக்கள் செய்த நல்லதிர்ஷ்டமேயாகும்.

புலவர்மணி அவர்கள், பகவத்கீதையின் முதல் ஆறு அத்தியாயங்களை (கருமயோகப் பகுதியை) வெண்பாவாகப் பாடி 1951இல் அரங்கேற்றினார்கள். அது 1962இல் நூலாக வெளிவந்தபொழுது அறிவுலகத்தின் ஒருமனதான பாராட்டைப் பெற்றது. இப்போது புலவர் அவர்கள் பகவத்கீதையின் பக்தி யோகப் பகுதியை வெண்பா உருவில் நூலாக்கி, தமிழ்த் தாயை மேலும் அணி செய்கின்றார்கள். இந்துசமயத்தின்மீதும் தமிழ்மொழிமீதும் புலவர் அவர்களுக்குள்ள தணியாத ஆர்வம் மிகப் பாராட்டப்பட வேண்டியதுடன், அவரது பணி மேலும் பல்கிப் பெருக ஆதரவு அளிக்கவேண்டியது எல்லோரினதும் கடமை யாகும். பகவத்கீதையின் இறுதிப் பகுதியாகிய ஞானயோகமும் வெண்பாவாக விரையில் வெளிவந்து தமிழ்மொழியை அணி செய்து, பக்தியைப் பரப்பும் பணியில் முன்னிற்கும் என எதிர்பார்க்கிறோம்.

புலவர்மணி அவர்கள் தொடர்ந்து பக்தித் தமிழ்ப் பணி புரிய எல்லா நலமும் அருளும்படி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழத்துகின்றேன்.

**வீ. சிவசுப்பிரமணியம்**
அரசியல் அமைப்பு நீதிமன்ற நீதியரசர்

கொழும்பு
24-12-74

உலகப் பிரசித்தி பெற்ற இந்து சமயப் பெரியார், அனுபூதிச் செல்வர், இல்லற ஞானி
உயர்திரு. க. இராமச்சந்திரா அவர்கள்
புலவர்மணியின் பகவத்கீதை ஞானயோகத்திற்கு வழங்கிய

# ஆராய்ச்சி முன்னுரை

அமரகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் தாம் இயற்றிய "பாஞ்சாலி சபதம்" என்னும் நூலின் முதற் பாகத்தை 1912ஆம் ஆண்டிற் பிரசுரித்தபோது, அதன் முகவுரையைப் பின்வருமாறு முடித்துள்ளார்:-

தமிழ்ச் சாதிக்குப் புதிய வாழ்வு தரவேண்டுமென்று கங்கணங்கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத் தொழிலிலே தூண்டுகின்றாளாதலின், இதன் நடை நம்மவர்க்குப் பிரியந் தருவதாகும் என்றே நம்புகிறேன். ஓம் வந்தேமாதரம்."

இதே வித நம்பிக்கையுடன் கண்ண பரமாத்மாவின் திருவருட் சித்தப்படி தோன்றியதே புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் இயற்றிய 'பகவத்கீதை வெண்பா'. அதுமாத்திரமல்ல பாரதியார் தமது நூலைச் சமர்ப்பணஞ் செய்யும்போது, "தமிழ்மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் இயலுமாறு காவியங்கள் செய்யப்போகிற வரகவிகளுக்கு இந்நூலைப் பாத காணிக்கையாகச் செலுத்துகிறேன்" எனவும் குறிப்பிடும் நேரத்தில் அந்தத் தமிழ்ப் பெருமகனாரின் ஆழ்ந்த உள்ளுணர்வில் (INTUITION) எங்கள் புலவர்மணி அவர்களின் கவித்துவமும், கவியோகி சுத்தானந்த பாரதியார் செய்யப்போகும் தமிழ்ப் பணியும் ஐயமறத் தோன்றியிருக்குமெனத் தயங்காமற் கூறலாம்.

1942ஆம் ஆண்டில் சுத்தானந்தர் பகவத்கீதையை மூன்று பாகமாகப் பிரித்துக் 'கீதாயோகம்' என்னும் பேர் புனைந்து பிரசுரித்தார். அவரது நோக்கம், உலக மக்கள் சகலரும் பின்பற்றக் கூடிய, பாரதநாட்டின், இந்த இணையற்ற வேதமணியை வடமொழி மூலத்துடன் தமிழரும் பாராயணம் பண்ண வழி செய்யவேண்டும்

என்பதாம். எனவே, ஒவ்வொரு சுலோகத்தையும் தமிழெழுத்தில் எழுதித் தமிழில் உரத்த ஓசைகள் இல்லாத க,ச,ட,த முதலிய வடமொழி எழுத்துகளுக்கு உச்சாரண பேதம் காட்டப் புள்ளியும் கோடும் இட்டு விளக்கமும் கொடுத்தனர். இந்த உதவிகொண்டு, வடமொழி தெரியாத தமிழர்களும் அம்மொழியில் கீதையைப் பாராயணஞ் செய்யும் வாய்ப்பைப் பெற்றனர்.

சுத்தானந்தர் விரும்பியபடி 'கீதாயோகம்' இரண்டாம் மூன்றாம் பாகம் உருவாகும் முன்னரே புலவர்மணி பெரியதம் பிப்பிள்ளை அவர்களுக்கு, 1943ஆம் ஆண்டில் பகவத் கீதையைத் தமிழில் வெண்பா யாப்பில் இயற்ற வேண்டுமென்னும் ஆர்வம் தற்செயலாகப் பிறந்தது. முதல் ஆறு அத்தியாயங்களையும் 'கருமயோகம்' என்னும் நாமம் சூட்டி, ஒவ்வொரு வெண்பாவுக்கும் விளக்கக் குறிப்புடன் ஆரம்பித்தனர்.

இந்தத் தொண்டு தோன்றிய அற்புத வரலாறு அம்முதலாம் பாகத்தின் முகவுரையில் அழகாக அமைந்துள்ளது. அதுவும் இரண்டாம் பாகமான 'பக்தியோக'த்துக்கு வரையப்பட்ட முகவுரையும் தனித்தனியே குறுஞ்சுவடியாக அச்சேறி நாடெங்கும் பரவவேண்டிய தகுதியுடையன. மூன்றாம் பாகம் மேலும் சிறப்புற்றுள்ளது. இவ்விதம் மூன்று பகுதிகளும் ஒன்றைவிட ஒன்று உயர்ந்த நடையில் அமைந்திருப்பது ஆக்கியோனின் சாதனா முதிர்ச்சியை நமக்கு விளக்குகின்றது.

உலகிலே பல மொழிகளில் வெளிவந்துள்ள சமய சாத்திரங்கள், தோத்திரங்கள், தத்துவ விளக்கங்கள், நீதி நூல்கள் கணக்கில. அவற்றுள் மிகச் சிலவே, தாம் தோன்றிய காலம் எவ்வளவு முற்பட்டதாயினும், அதை விட்டு விலகித் தம்மைக் கற்போரின் காலத்துக்குப் பொருந்தத்கூடிய கருத்துக்களை விளக்கி நல்வாழ்வுக்கு வழிகாட்டிகளாக அமைந்துள்ளன. இவற்றுள் உலகமக்கள் யாவர்க்கும் எக்காலத்தும், எந்நிலையிலும் பயன்படும் முறையில் தலைசிறந்து விளங்குவன இரண்டு. ஒன்று தமிழ்த்தாய் அருளிய திருக்குறள் மற்றது ஆரியத் தந்தை அருளிய பகவத்கீதை.

பாரத நாட்டின் பழம் பெருமை அன்று போல் இன்றும் உலக ளாவி நிற்பதற்கு முக்கிய காரணம் இவ்விரண்டு நூல்களேயாம். இக்கூற்று இந்துக்கள் தாமே சொல்லும் தற்புகழ்ச்சியல்ல் மேல்நாட்டு அறிஞர்கள், மேதாவிகள், இருபதாம் நூற்றண்டில், இரண்டு அகோர உலக யுத்தங்களின் நாச வேலைகளின் பின் வற்புறுத்தும் பேருண்மையாகும்.

எவ்விதத்தில் திருவள்ளுவ நாயனாரால் ஈரடியால் இயற்றப் பெற்ற திருக்குறளானது தமிழ் நாகரிகத்தின் உரைகல்லாகித் தமிழர்களின் அகப்புற வாழ்வின் விளக்கமாய், இம்மையிலேயே மறுமைப் பயனைத் தந்துதவும் இன்ப ஊற்றாயமைந்து, தமிழின் முதுமைக்கும் இளமைக்கும் ஒப்பற்ற சான்றாய் விளங்குகின்றதோ அதேவிதத்தில் ஈரடியால் அமைந்துள்ள பகவத்கீதையும் வேத உபநிடதங்களின் சாரமாய், மண்ணுலக வாழ்வை விண்ணுலக வாழ்வுடன் பிணைக்கும் பெற்றிதாய் உள்ளது. உலகின் பரிணாம நிலைக்கும், மாந்தரின் மனப்பக்குவத்துக்கும், சமயங்கள் போதிக்கும் பக்தி, சேவை, தியானம், ஞானம் ஆகிய மார்க்கங்களின் தொகுப்பாயும், அவைகளுக்கு அருளூற்றாயும் அமைந்திருப்பது கீதை.

சென்ற கால்நூற்றாண்டு எல்லைக்குள், உலக மொழியாகிய ஆங்கிலத்தில் ஐம்பதுக்கு மேற்பட்ட விரிவுரைகள் அதற்கு வரையப்பட்டிருக்கும் உண்மையொன்றே போதும். உலகம் அதன் தனிப்பெருஞ் சிறப்பை ஏற்றுக் கொண்டுவிட்டதென்பதை நாம் உணர்ந்து உளம் பூரிக்க.

அது மனித சமுதாயம் முழுவதுக்குமே உரித்தான சமரச யோக சாத்திரக் களஞ்சியம் என்பதை வலியுறுத்தப்போலும் அதில் அடங்கியுள்ள எழுநூற்றொரு சுலோகங்களில் ஒன்றிலாவது 'இந்து' 'சைவம்' 'வைணவம்' 'சாத்தம்' ஆகிய பதங்களில் எதுவாவது உபயோகிக்கப்படவில்லை.

'பகவத்கீதை வெண்பா'வைப் பற்றிய விபரமான ஆராய்ச்சியை ஆரம்பிக்குமுன், கீதையைத் தனது இருதயமாகக் கொண்டுள்ள மகாபாரதத்தைப் பற்றிச் சிறிது கூறவேண்டியது அவசியமாகும். முதல்

முதலாக இந்நூலைக் கையிலெடுக்கும் நவீன இளைஞர் உலகுக்கு, 'தருமம் தலைகாக்கும்' நீதி நிலை நிற்கும்' 'சத்தியம் வெல்லும்' என்ற அரிய படிப்பினைகளை நமது மூதாதையர்க்குப் புகட்டியது 'மகாபாரதமே' என்ற உண்மையை நினைவூட்டுதல் நமது முக்கிய கடமையன்றோ?

வியாசரால் இயற்றப்பெற்ற வடமொழி மகாபாரதத்தின் தமிழ் மொழிபெயர்ப்புகளுள் வில்லிபுத்தூரார் பாரதமே சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது. இந்த இதிகாசத்தில் இல்லாத நீதியையோ, புத்திமதியையோ, இன்றைய மக்களை வாட்டும் பிரச்சினை களைத் திருப்திகரமாகத் தீர்க்கக்கூடிய உபாயங்களையோ, வேறு எந்த நூலிலும் காணமுடியாது. அது காலத்தை வென்றுநிற்கும் தனிச்சிறப்பை ராஜாஜி தமிழ் மக்களுக்கு உவந்தளித்த 'வியாசர் விருந்தில்' கீழ்வரும் ஒரு வசனமூலம் விளக்கியுள்ளார்:-

> "ஒருவர் தோள்மேல் ஒருவர் கைவைத்து ஊன்றிக் கொண்டு அந்த மூன்று விருத்தர்களும் (திருதராஷ்டிரன், காந்தாரி, குந்தி) வனம்போன இந்தச் சித்திரம் நேற்று நம் வீட்டில் நடந்த ஒரு சோக நிகழ்ச்சிபோல் இருக்கிறது."

மகாபாரதத்தின் சிறப்பையும், அதன் இருதயம் போல அமைந்த பகவத்கீதையின் மகிமையையும் பிணைத்துக் கூறும் அழகான வடமொழிச் சுலோகம் ஒன்றுண்டு. அதன் சாரம் பின்வருமாறு:

> "வியாசர் அருளிய நூல்களின் தொகுதி ஒரு தடாகம் போன்றது. அதில் பாரதம் ஒரு தாமரை போல் மலர்ந்துள்ளது. அது கலியின் பாவங்களைப் போக்கி நமக்கு அளவற்ற நன்மையைப் பயப்பதாகும். உலகில் நல்லோராகிய வண்டுகள் அதன் தேனை அருந்துகின்றன. இத்தகைய தாமரைக்குக் கீதார்த்தமே நறுமணமாகும்."

மாணாக்கனாக இலக்கண இலக்கியங்களைப் பயிலும் போது அந்தத் தாமரைப் பூவின் தேனைப் பருகிய பழக்கமுடைய புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு அதனுள் அடங்கியிருந்த நறுமணத்தையும் நுகரும் பேறு எப்படிக் கிடைத்த தென்பதை முதலாம் பாகத்து முகவுரையில் விபரமாக விளக்கி யுள்ளார். அது

ஓர் அற்புத வரலாறு என்று யாமும் மேலே குறிப் பிட்டுள்ளோம். எனினும், அதைக் கட்டாயமாகப் படிக்கும்படி வாசகர்களின் கவனத்தைத் தூண்டும் பொருட்டு அதைப் பற்றிய ஒரு சிறு குறிப்பை இங்கே சேர்க்க விரும்புகின்றோம்.

புலவர்மணிக்கு நாற்பத்து நான்காம் வயது நடக்கும் போது அவரது மனைவியாருக்குக் கடுமையான நோயுண்டாயிற்று, மூன்று மாசகாலம் கையாண்ட சுதேச வைத்தியமும் ஆங்கில வைத்தியமும் பயனளிக்கவில்லை. இரு வைத்திய நிபுணர்களின் ஆலோசனைப்படி கொழும்பு பெரிய வைத்தியசாலைக்குப் பெரிய சத்திர சிகிச்சைக்காக நோயாளி எடுத்துச் செல்லப்பட்டார். மனைவியார் வைத்தியசாலையில், புலவர்மணி அவரின் அன்பர் திரு. க. ஞானசெல்வம் வீட்டில். அங்கு மனச்சாந்திக்காகப் படிப்பதற்கு ஒரு புத்தகத்தைத் தேடினார் புலவர்மணி. அப்போது அவர் கைக்கு எட்டியது அமரகவி பாரதியாரின் பகவத்கீதைத் தமிழ் மொழிபெயர்ப்பு. அந்த நேரத்தில் அவர் உள்ளத்தை வாட்டிய துன்பத்தை அந்த மெய்ஞ்ஞானச் செல்வம் இன்பமாக மாற்றிவிட்டது. மனைவியாரின் உடலை வருத்திய பிணியும் திடீரெனக் குணமாகிவிட்டது. சத்திர வைத்தியம் தேவைப்பட வில்லை.

எனினும், சில நாள் வைத்தியசாலையிலே தங்கியிருந்து அவதானித்துப் பார்த்தல் உசிதமென வைத்திய நிபுணர்கள் கூறினர். இதனால் இருபத்தெட்டு நாள் இருவரும் கொழும்பில் இருக்க நேர்ந்தது. இருபத்தெட்டு நாளும் புலவர்மணிக்குக் கீதாயோக சாதனையிற் கழிந்தன. கீதா சுலோகங்கள் ஒவ் வொன்றையும் தமிழில் ஒவ்வொரு வெண்பாவாகப் பாடிப் படித்தால் உள்ளத்தில் நன்கு பதிந்துவிடுமேயென்ற எண்ணம் புலவர்மணிக்கு உதித்தது. செய்யுள்கள், ஆறு மடைதிறந்தாற் போல் வரலாயின. உடனுக்குடன் அவற்றை எழுதிக்கொண்டார். குறித்த நான்கு வார எல்லைக்குள் கீதையின் முதல் ஆறு அத்தியாயங்களும் வெண்பா உருப்பெற்றன. கீதையை அவர் படித்ததும் தமது சொந்த அமைதிக்காக் வெண்பாவாகப் பாடியதும் சொந்த அமைதிக்காகவே. அவை அச்சுவாகனமேறி நூல்வடிவில் ஊர்வலம் வருமென அவர் கருதவுமில்லை விரும்பவுமில்லை.

"அவனன்றி ஓரணுவும் அசையாது" என்ற ஆப்தர் மொழிக்கு இது ஓர் இணையற்ற உதாரணமாகும். தெய்வத் திருவருள் என்பது ஒரு சாதகன் எந்தப் பக்குவ நிலையில் இருக்கின்றானோ, அந்த நிலைக்குப் பொருந்த வந்து அமைவதாகும். துன்பப் போர்வையில் வந்து இன்பமளிப்பது அருள், ஓர் ஆசானிடமிருந்து சுடுமொழியாக வந்து பொல்லாக் குணங்களைப் பொடிபடுத்துவது அருள், தனிமோனத் தவத்திலிருக்கத் தூண்டிச் சித்த விருத்திகளை அடக்கச் செய்வது அருள் நனவு நிலையில் நீடித்த காலம் வாழ்ந்து அனுபவித்துக் கழிக்க வேண்டிய கரும பலனை ஐந்து நிமிடம் கனவில் கஷ்டப்பட்டுத் தீர்க்கச் செய்வதும் திருவருளே. புலவர்மணி அடைந்த இன்ப அனுபவம் துன்பப் போர்வையில் வந்தது.

உலகின் நல்ல தீய பல்வேறு நிகழ்ச்சிகளைத் தங்கள் புத்திக் கூர்மை மாத்திரம் கொண்டு நிர்ணயஞ் செய்யத் துணியும் பகுத்தறிவாளர்கள் என்போர் இந்தக் கொள்கையை மறுக்கலாம். இவர்களுக்கு வேண்டிய உபதேசத்தை இரண்டு நூற்றாண்டு களுக்கு முன் தாயுமான சுவாமிகள் அருமையாக அருளிப் போயுள்ளார்.

"அருளால் எவையும் பார் என்றான் – அத்தை
அறியாதே சுட்டியென் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லால் – கண்ட
என்னையும் கண்டிலேன் என்னேடி தோழீ
சங்கர சங்கர சம்பு"

புலவர்மணியின் மனைவியாரின் உடல்நிலை சத்திர சிகிச்சையின்றி எப்படி இயல்பாகவே சமநிலை அடைந்ததோ, அதேபோல் அவர் இயல்பாகவே பாரதியார் நூலைக் கண்டெடுத்து, இயல்பாகப் படித்து, இயல்பாகப் பாடிய கீதை வெண்பாக்களால் அவரது மனமும் இயல்பாகவே சாந்தியடைந்து விட்டது. அதன்மேல் 'பகவத்கீதை' அவருக்குச் சாதனா நூலாய்விட்டது.

ஆறு அத்தியாயங்களை இயல்பாகவே பாடிமுடித்த புலவர்க்கு ஏனைய அத்தியாயங்களையும் பாடவேண்டுமென்ற அவசரம் உண்டாகவில்லை. பக்தி ஞான சாதனை மேலும் வேண்டுமென

உணர்ந்தார். இதுவும் திருவருட் கட்டளையாகும். திருவருள் இன்னுமோர் விளையாட்டும் செய்தது. 'வீரகேசரிப்' பத்திரிகைக்கு ஆசிரியராக ஒரு பக்தனைச் சென்னையிலிருந்து கொழும்புக்குக் கொண்டுவந்து சேர்த்தது. அவர் பெயர் கே. பி. ஹரன். அந்த அன்பர் ஞாயிற்றுக்கிழமை 'வீரகேசரி'யில் சமய சமரச ஞான விடயங்களை எழுதக்கூடியவர்களைத் தேடிப்பிடித்தார். இந்தச் சந்தர்ப்பத்திலேதான் புலவர்மணியின் கீதை வெண்பாக்கள் அவரது கவனத்துக்கு வந்தன. 1944ஆம் ஆண்டிலேயே ஞாயிறு தோறும் 'வீரகேசரி'யில் அந்த வெண்பாக்கள் சிறப்பிடம் பெற்றன. அதே காலத்தில் அறிஞர் ஹரன் அவர்களின் அன்புக் கட்டளையை மறுக்க முடியாமல் சமய சம்பந்தமான எமது கட்டுரைகளும் ஞாயிறு 'வீரகேசரி'யில் ஒழுங்காக வந்து கொண்டிருந் தமையால், அந்த வெண்பாக்களைத் தவறாமற் படிக்கும் இன்ப பாக்கியம் எமக்குக் கிடைத்தது. எம்மைப் போலவே கீதை அபிமானிகள் வேறு பலரும் படித்தனர். அவர்களுள் முக்கியஸ்தர் தவத்திரு விபுலாநந்த அடிகளார். அன்னாரின் அழைப்புக் கிணங்கி நூலாசிரியர் கொழும்பு வந்து அடிகளார் தலைமை யிலேயே கீதை வெண்பாக்களை விரித்துரைத்தனர். இது நடந்தது ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத் திருமடத்தில்.

பின்னர், அடிகளார் சிவபதமடைந்து நான்கு ஆண்டுகள் கழிந்ததும், மட்டக்களப்பிலே பெரும்பாக வித்தியாதரிசியாக இருந்தவரும், புலவர்மணியின் நண்பருமாகிய மல்லாகம் திரு. அ. சரவணமுத்து அவர்களின் நன்முயற்சியால், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவுடன் சைவப் பெரியார் திரு. சு. நடேசபிள்ளை அவர்களின் தலைமையிலே வண்ணார்பண்ணை வைத்தீசுவர வித்தியாலய மண்டபத்தில் கீதை வெண்பாவின் முதற்பகுதியான 'கருமயோகம்' அரங்கேற்றப்பெற்றது. அரங்கேற்றுவிழாவில் நூலாசிரியரைப் பாராட்டிப் பேசியவர்களுள் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களையும், பண்டிதர் வ. மு. இரத்தினேசுவர ஐயர் அவர்களையும் இங்கே குறிப்பிட வேண்டும். முந்தியவர் தமது பாராட்டில் 'ஒரு காலத்தில் வெண்பாவிற் புகழேந்தி என்றிருந்தது. இக்காலத்தில் வெண்பாவிற் பெரியதம்பி என்று

வழங்குவதைக் கவிதையுலகம் நன்கு அறியும்' எனக் கூறியுள்ளார். இதில் அடங்கியுள்ள உண்மையைத் தமிழ் பேசும் நல்லுலகு அவரது இரண்டாம் மூன்றாம் பாகங்களாகிய 'பக்தி யோகம்', 'ஞானயோகம்' இரண்டையும் படித்ததும் பூரணமாய் ஏற்றுக்கொள்ளுமென்பது திண்ணம். முதலாம் பாகம் அச்சேறியது 1962இல் இரண்டாம் பாகம் 1974இல் மூன்றாம் பாகமான இந்நூல் இப்போதுதான் அச்சேறுகின்றது.

கவிதையென்றாலும் சரி வசனமென்றாலும் சரி எங்கே எளிமையும் இனிமையும் இயைகின்றனவோ, அங்கே தெளிவும் வலியவந்து சேர்ந்துவிடும். இந்தத் தனிச் சிறப்பைப் புலவர் மணியின் கவிதையிற் காண்கின்றோம். அதுமாத்திரமல்ல அவர் ஒவ்வொரு வெண்பாவிற்கும் வரைந்துள்ள விளக்கவுரையின் அருஞ்சிறப்பு எம்மால் எடுத்து விளக்கும் தரத்ததல்ல. சங்க காலத்திலிருந்து இருபதாம் நூற்றண்டின் மத்தியகாலம் வரையில் தமிழ்மொழியிலே தோன்றியுள்ள நூல்கள் அனந்தம். அவை ஒரு பெருஞ் சமுத்திரம். அவற்றுள் அமிழ்ந்து கிடக்கும் முத்துக்கள் பலவற்றைத் தேர்ந்தெடுத்து வாசகர் முன் சமர்ப்பிக்கின்ற அருஞ்செயல் பெரும்பயன் தருவதாகும்.

முக்குணப் போர்க்களமாகிய இந்த மண்ணுலகில் மக்கள் செய்யும் வேள்வி, தானம், தவமெல்லாம் சாத்துவிகம், இராசதம், தாமதம் ஆகிய தன்மையுடையனவாய் நன்மையும் தீமையும் பயக்கின்றன என்பதை 17ஆம், 18ஆம் அத்தியாயங்களில் ஆசிரியர் விளக்கியுள்ள விதம், யாம் இதுவரையில் கண்டும் கேட்டுமிராத அற்புத முறையிலாகும். இப் பகுதியில் ஆசிரியர் மேற்கோளாக எடுத்தாண்டிருப்பது நாவலர் காலத்தில் வாழ்ந்து போன நீதிபதியும் புலவருமான வேதநாயகம்பிள்ளை பாடலில் வரும் கீழ்க்கண்ட வரிகள்:-

"புண்ணியம்போற் பாவம் – மனமே புரிந்தாய் நீ தினமே
திண்ணமாகக் குளிக்கப் – போயுந்தன் மேலே
சேற்றைப் பூசிக்கொண்டு திரும்புதல் போலே
புண்ணியம்"

இது தவத்தைப் பற்றிய விளக்கத்தில் வருவது. அடுத்த வெண்பா தானத்தைப் பற்றியது. அதற்குத் தாம் கொடுக்கும்

விளக்கத்துக்குச் சாட்சியாக வள்ளுவரையும், கம்பரையும், விபுலாநந்தரையும் நம்முன் அழைத்துப் பேசச் செய்கின்றார் ஆசிரியர்.

கந்தபுராணத்தில் வரும்,

"அவனியி லறமெல்லாம் அடிதலை தடுமாறிப்
பவவினை யறமென்றே பற்பல ருஞ்செய்ய"

என்னும் அருள் வாக்கில் கீதை 18ஆம் அத்தியாயத்தின் 32ஆம் சுலோகக் கருத்தின் எதிரொலியைக் கேட்கின்றோம். எங்கள் புலவர்மணி அதே சுலோகத்தைத் தமிழில் வெண் பாவாகத் தரும் அழகையும், அருமையையும் பாருங்கள்:

"அறியாமை யாமிருளில் ஆழ்ந்ததர்மம் தன்னைக்
குறியாமே தர்மமெனக் கொண்டு – நெறிமாறி
எல்லாம் தலைகீழ் எதிர்மாறாக் காணுமே
பொல்லாத தாமதப்புத் தி."

இப்படி உதாரணங்கள் எடுத்தாளப் போனால் இம் முன்னு ரையே ஒரு நூலாக உருவெடுத்துவிடும். ஆகையால், புலவர் மணியின் கவிதைகள் கற்போர் உள்ளங்களைக் கவர்ந்து, பக்திமூலம் பரவசப்படுத்தி, இறுதியில் ஞானத்தைக் கூட்டி வைக்கும் தன்மையன என்று கூறி மேற்செல்வோம்.

கீதை ஒரு போர்நூல் அதைத் தீண்டுவதே பாவம் வைணவ மதச் சார்புடைய அதைப்படிப்பது சிவத்துரோகம் என்னும் கொள்கையுடையோரும் தப்பித் தவறி நம்முள்ளே இருக்கின்றார்கள். இவர்கள் சமய ஞானத்திற் பாலகர்கள். வீண் பாவம் தேடும் இவர்கள் விசாலபுத்தி பெறவேண்டும். கீதை போர்நூலாக இருப்பின் அது 2ஆம் அத்தியாயம் 37ஆம் சுலோகத்தின்மேல் வளர்ந்திராது. ஈழநாட்டுச் சைவப்பெரியார் இராமநாத வள்ளலார் அதற்கு மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் செய்து வெளியிட்டிருக்கமாட்டார். கண்ணன்

அடிக்கடி 'தருமம்', 'கருமம்' என்ற இரு பதங்களையும் ஒரே கரத்தில் அருச்சுனனுக்கு வற்புறுத்திப் பேச வேண்டிய தேவையும் ஏற்பட்டிராது.

இன்றைய உலக அறிஞர்கள் ஏனைய சமய சாத்திரங்களிலிருந்து பிரித்தெடுத்து, அதற்குத் தனிப்பெருமையளித்துப் புத்தம் புதிய நூல்களை ஆங்கிலத்திலும், தமிழிலும், பிற மொழிகளிலும் வரைவதற்குக் காரணம் அதில் அடங்கியுள்ள சர்வ சமய சமரச ஞானமேயாகும். 4ஆம் அத்தியாயம் 11ஆம் சுலோகமானது இந்த உண்மையை நமக்கு அருமையாக விளக்குகின்றது. அக்கருத்தைப் புலவர்மணியின் வெண்பாவிலே கீழே தருகின்றோம்:-

"யார்யார் எனையெங்கெங் கெவ்வாறு வேண்டுவரோ
சேர்வே னவர்க்கருளைச் செய்தங்கே – ஓர்வாய்நீ
என்னெறிநிற் பாரேயிங் கெல்லோரும் ஆங்கவரை
நன்னெறியிற் சேர்ப்போனும் யான்."

ஓர் அபூர்வ மேதை பௌதிக சாத்திர விற்பன்னர் விஞ்ஞானக் கலாநிதி தத்துவ சாத்திர கலாநிதி. இவர் தத்துவா தீதமான நிலைகுறித்துப் பல நூல்கள் வரைந்துள்ளார். அவற்றுள் இவருக்கு உலகப் பிரசித்தியைத் தேடிக்கொடுத்தது IMPRISONED SPLENDOUR என்னும் நூல். அதனைச் 'சிறையிடப்பட்டுள்ள பிரபை' எனலாம். இந்த ஆண்டில் வெளிவந்த இவரது கடைசி நூலில் கீதைக்கு இரு அத்தியாயங்கள் கொடுத்துள்ளார். உலகிலே தோன்றியுள்ள வெவ்வேறு மார்க்கங்கள் எவ்விதம் பிரிக்கமுடியாத முறையில் கீதையிற் பிணைக்கப்பட்டுள்ளன என்ற உண்மையை விளக்கி, அது இறுதியில் வற்புறுத்தும் சரணாகதிக்குச் சென்ற நூற்றாண்டில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச தேவர் ஓர் ஒப்பற்ற உதாரணமாக வாழ்ந்தார் என்று கூறியுள்ளார். அத்தோடு அவரின் அமிர்த மொழிகள் சிலவற்றையும் சேர்த்துள்ளார். இந்த மேதையின் பெயர் Raynsor C. Johnson – றேய்னர் ஜோண்சன். இடம் இலண்டன் நகர்.

தமது இன்பமயமான இல்லற வாழ்வின் பொன்விழா மலராக இக்கடைசி நூலை வரைந்து இதனைத் தமது வாழ்வு சிறக்கச் செய்த அருந் துணைவியார்க்கே சமர்ப்பணஞ் செய்துள்ளார் இப்பெருந்தகை. எனவே இப்பெரியார் நவீன ஐரோப்பா கண்ட ஓர் இணையற்ற இல்லற ஞானியுமாவார்.

கலாநிதி ஜோண்சனைப் போலவே உபநிடத சாத்திரங் களிலும்,கீதாயோக சாரத்திலும் தோய்ந்த உள்ளம்படைத்த பிறிதோர் ஐரோப்பிய மேதை ஒரே காலத்தில் வாழ்ந்து இற்றைக்குப் பதினான்கு ஆண்டுகளுக்கு முன் பரமபதம் அடைந்தனர். அவர் பெயர் கலாநிதி கார்ள் ஜீயுங் (Dr. Carl G. Jung). உலகப் பிரசித்திபெற்ற உளநூல் நிபுணரும், வைத்திய கலாநிதியுமான இப்பேரறிஞர் கருமத்தை உயிராகவும், பக்தியை இருதயமாகவும் கொண்டுள்ள பகவத்கீதைக்குச் சிரசாக விளங்குவதும், நவீன விஞ்ஞான உலகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய, ஏற்றுக்கொள்ளவேண்டிய உண்மைகளை அடக்கியதும் ஞானயோகமே என்பதை நன்குணர்ந்து அதை ஜேர்மன் மொழியில் விளக்கியுள்ளார். இந்த ஞானத்தின் பூரண சொரூபமாக இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்தவர் பகவான் ஸ்ரீரமண மகரிஷிகள் என்பது அவர் வாக்கு.

பரமஹம்ச தேவர் கீதைக்குத் 'தியாகம்' என்று சொல்லில் உரையருளியிருப்பதை எல்லோரும் நன்கு அறிவர். இன்னுமோர் அனுபூதிச் செல்வர் கருமம், பக்தி, ஞானம் ஆகிய மூன்றின் தொகுதியான கீதை 'தத்வமஸி' என்னும் மகாவாக்கியத்தின் மந்திர வடிவம் என விளக்கம் தந்துள்ளார்.

தத் = அது + த்வம் = நீ + அஸி = இருக்கிறாய் என்பதாம்."அது" கருமயோகத்தால் வழிபடும் கடவுளைக் குறிக்கிறது. "நீ" எல்லாம் நீயேயென்னும் பக்தியோகத்தை விளக்குகிறது. "அஸி = இருக்கிறாய்" உயிர்களெல்லாம் அதுவேயாக இருக்கின்றன என்னும் ஞானத்தைக் குறிக்கிறது.

இவ்விதம் ஒரு சொல்லிலும், மூன்று சொல்லிலும் உரை விளக்கக்கூடிய கீதைக்கு ஏன் நூற்றுக்கணக்கான விரிவுரைகள்?

ஆயிரக்கணக்கான சுலோகங்கள்? பாடல்கள்? என்று வினவு வாரும் உளர். இவ் வினாக்கள் குறுகிய புத்தியில் நின்றுந் தோன்றியவை.

இன்றைய அபாயகரமான நிலையிலிருந்து மனிதகுலம் காப்பாற்றப்படவேண்டின் கீதை காட்டும் பாதையில் மனித சமுதாயம் செல்லவேண்டும். இன்றைய சூழ்நிலையை மாற்றிய மைக்கும் முறையில் கீதா சாதகர்கள் வழிவகுக்க வேண்டும். புலவர்மணி கீதையைக் கையாண்டு காலத்துக்கேற்ற ஒரு புது வழியை வகுத்திருக்கின்றார். இந்தக் கீதை வெண்பாப் போன்ற நூல்கள் ஒவ்வொரு வீட்டிலும், பள்ளிக்கூடத்திலும், வாசிக சாலைகளிலும் இடம்பெற வேண்டும்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை காலதேவி வேண்டி நிற்கும் ஓர் அரும் பணியைச் சிறந்த முறையிற் செய்து முடிக்கக் கண்ணனின் கருவியாக வந்துள்ளார் என்பதே எமது அசையாத நம்பிக்கை. அவர் பிறக்கும்போதே கவித்துவமும் அவருடன் பிறந்ததெனக் கூறுதல் மிகையாகாது. அத்தோடு அவர் அன்பையும், அமைதியையும், அடக்கத்தையும், பணிவையும், பண்பையும் ஆபரணமாகப் பூண்டுள்ளார்.

அவர் இயற்றியுள்ள மூன்று நூல்களையும் தமிழ்ப் பேசும் சமுதாயம் இன்று ஆர்வத்துடன் ஏற்றுப் போற்றத் தவறினாலும், இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் பல பதிப்புகளை வெளியிட்டுப் பரவச் செய்யப்போவது நிச்சயம். அந்தக் காட்சியைக் காண்பதற்கு இந்த உடல் இல்லாது மறைந்த போதிலும், எமது பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் அவர்களது சந்ததியைச் சேர்ந்தவர்களும் அதைக் காணும் பாக்கியம் பெறுவார்களென்ற பூரண நம்பிக்கையுடன் இந்த முன்னுரையை முடிக்கின்றோம்.

பயன்கருதாப் பணியாகும் கரும யோகம்
பயில்பயனால் பல்லுயிரில் தனையே பார்த்து
வியன்பெற்ற பக்திநெறி பன்னீ ராண்டு
விவேகமுடன் சாதித்து முதிர்ச்சி பெற்று

உயர்வுற்ற ஞானமதை அனுப வத்தால்
 உணர்புலவர் மணிபெரிய தம்பிப் பிள்ளை
அயராத முயற்சியினால் கீதா யோகம்
 அருளினான் அவன்நாமம் என்றும் வாழ்க.

**க. இராமச்சந்திரா**

**தலங்கம,**

**22-12-75**

இலங்கைப் பல்கலைக் கழகத்துப் பேராதனை வளாகத்தின் தமிழ்த்துறைத் தலைவர்
பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தன், M.A., Ph.D அவர்கள்
பகவத்கீதை வெண்பா "ஞானயோகம்" நூலுக்கு வழங்கிய

# மதிப்புரை

"நின்னை நம்பி நிலத்திடை என்றுமே
மன்னு பாரத மாண்குலம் யாவிற்கும்
உன்னுங் காலை உயர்துணை யாகவே
சொன்ன சொல்."

இது கண்ணனை விளித்து, அவனருளிய பகவத் கீதையினைப் பற்றி மகாகவி பாரதி கூறியதாகும். பகவத்கீதை பாரத மாண்குலத்துக்குக் கூறப்பட்டதாயினும், கருமத்துக்கும் ஞானத்துக்கும் இடையிலான இணைப்பாகவும், வேத உபநிட தங்களின் சாரமாகவும், போர்க்களத்திற் பிறந்த கருத்தாழம் மிகுந்ததாகவும், கால தேச வர்த்தமானங்களைக் கடந்து பூமியெங்கணும் புகழ்பரப்பி நிற்கின்றது.

மனிதனின் இயல்புகளையும் தேவைகளையும் உணர்ந்து கொண்டு அவற்றை நிறைவாக்க விழைந்த அக்கருவூலம், சான்றோர் உள்ளங்களைத் தொட்டமையினால், அது உலகில் பல்வேறு மொழிகளிற் பெயர்க்கப்பட்டுள்ளது. இந்திய விடுதலைப் பேரியக்கத்தை வழிநடத்திய மகாத்மா காந்தி தமக்கு ஆத்மீக உணவளிக்கும் தாயாகவே அதனைக் கருதியமையும், அதன் சுலோகங்களை நாளும் படித்துப் பலம்பெற்றமையும் உலகறிந் தவையே.

பாரதப் போர்க்களத்திலே கண்ணனிடம் கீதோபதேசம் கேட்ட அருச்சுனனைத் தம் அண்ணனாகவே வரித்துக்கொண்ட மகா கவி பாரதியார் கீதையைத் தமிழிலே தந்தார். பாரதியின் அம் மொழிபெயர்ப்பே புலவர்மணியின் உள்ளத்தை முதன் முதல் தொட்டது. அதன் விளைவாக 1943இல் கீதையைத் தமிழ் வெண்பாவிற் புலவர்மணி

இயற்ற விழைந்தபோது, பாரதி புகழைத் தக்க வகையிலே தமிழுலகிற் பரப்பிய விபுலாநந்த அடிகளாரின் ஆசீர்வாதம் வாய்த்தது. விபுலாநந்த அடிகள் புலவர்மணியின் ஆசிரியருமாவார். இத்தகையதோர் அன்புத் தொடர்பு அமைந் தமையினாற் போலும் புலவர்மணியின் தமிழ்ப் பகவத்கீதை வெண்பா ஒளிபெற்று விளங்குகின்றது. 1962இல் கருமயோகமும், 1974இல் பக்தியோகமும் வெளிவந்துள்ளன. 1976இல் ஞான யோகமும் வெளிவருகிறது.

தமிழை முறையாகக் கற்றவரும், கவியாற்றலும், பேச்சாற் றலும், கட்டுரையாற்றலும் மிக்கவருமான புலவர்மணியை 'வெண்பாவிற் புலவர்மணி' எனப் பாராட்டுதல் பொருத்தமானதே என்பதற்குச் சான்றாக விளங்குகின்றது அவரது 'பகவத்கீதை வெண்பா'. வடமொழிப் புலமையின்றியே கீதையின் ஆழ்ந்த பொருளை வெண்பாவில் இனிதாயும், எளிதாயும், தெளிவாயும் வசப்படுத்திய அவரது அறிவாற்றலின் சிறப்பு மெச்சப்படத் தக்கதேயாம். கீதா சுலோகக் கருத்துக்களை உணர்ந்து வெண்பாக்களிலே தந்ததோடமையாது, எல்லோரும் எளிதில் விளங்கிக் கொள்வதற்கேதுவாக விளக்கக் குறிப்புக்களையும் தந்துள்ளார். சமயத்தையும் சமூகத்தையும் இணைத்துவைக்கும் நோக்கமைந்த இவ்விளக்கக் குறிப்புக்கள் இன்றைய காலச் சூழ்நிலையை மனத்திற்கொண்டு எழுதப்பட்டுள்ளன. சமுதாய விழிப்புணர்ச்சியும், மறுமலர்ச்சியும் ஏற்படுவதற்கு ஏற்ற விளக்கங்கள்.

பகவத்கீதையைச் சேர் சாள்ஸ் வில்கின்ஸ் என்பார் (Sir Charles Wilkins) ஆங்கிலத்தில் முதன்முதலாக மொழிபெயர்த்த போது அது குறித்து வாரன் ஹேஸ்ரிங்ஸ் (Warren Hastings) மேல்வருமாறு கூறினார்: "பிரிட்டிஷ் சாம்ராச்சியம் இருளில் இழக்கப்படும்போது, அதன் செல்வத்துக்கும் செழிப்புக்குமான மூலங்கள் நினைவு கூரப்படாதபோது, இந்நூலும் அது கொண்டுள்ள பாடங்களும் கோடிக்கணக்கான இவ்வுலக மக்களின் உள்ளங்களைத் தொடர்ந்து தூண்டிக் கொண்டிருக்கும்."

புலவர்மணி அரிதில் முயன்று முடித்துள்ள இந்நூலும் கோடிக்கணக்கான தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களைத் தொடர்ந்து

தூண்டிக்கொண்டிருக்கும் என்று நம்புகிறோம். கீதாச்சாரியனான கண்ணனின் உபதேசத்தால் அருச்சுனன் உண்மை ஒளியோடு மனவுறுதி பெற்றுத் தன் கடமையை நடு நின்று முடித்து இழந்த உரிமையைப் பெற்றான். தமிழ்மக்களும் சமநிலைநின்று தம் கருமங்களை உறுதியோடு நிறைவேற்றி இருக்கும் உரிமையையும் காத்து, இழந்த உரிமையையும் பெற்று இனிது வாழ இந்நூல் உறுதுணையாவதாக.

சு.வித்தியானந்தன்

22/1, பழைய கலகா வீதி,
பல்கலைக்கழகப் பூங்கா.
பேராதனை, 18 – 05 – 76.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
அவர்கள் புலவர்மணியின் கவிதை நூலுக்கு வழங்கிய

# அணிந்துரை

"வெள்ளை நிற மல்லிகையோ"
என்ற சுவாமிகளின் பாடல்,

"இலங்கை மணித் திருநாடெங்கள் நாடே"
என்ற புலவர்மணியின் பாடல் இரண்டும்
கற்றோரும் மற்றோரும் இனிப்பவை.
சாவா மூவாப் பாடல்கள் அவை.

அண்மையில் வானொலியில் புலவர்மணியின் குரலில் அவர் பாடலைக் கேட்டபோது, அவர் பக்கலில் இருப்பதொரு மகிழ்ச்சி பொங்கியது.

'ஈழ நன்னாடே வாழி' என்றது தொடக்கம் 'நலனே இலங்கை' பரியந்தம் உள்ள பாடல்கள் முதற் பாடலின் விரிவுரை போன்றவை அருமையானவை; சுதந்திர கீதம் இந்த வருக்கத்தைச் சேர்ந்தது. 'கன்னியாய்த்திரு' என்ற தலையங்கத்தைக் கண்டபோது திடீரென்று ஒரு ஏக்கம் உண்டானது.

"காதலனைப் பிரிந்தவளின் மனம் போல ஒன்று
கவி பாடிப் பரிசு பெறான் மனம் போல ஒன்று
தீதுபழி கேட்டவன்றன் மனம் போல ஒன்று
செய்தபிழைக் கழுங்குமவன் மனம் போல ஒன்று
நீதிபெறா வேழைதுயர் மனம் போல ஒன்று
நிறைபழித்த கற்புடையாள் மனம் போல ஒன்று
காதுமழுக் காறுடையான் மனம் போல ஒன்று
கனலேறு மெழுநீர்களுண்டு கன்னியாயில்"

என்ற பாடலில் வரும் 'கனலேறு மெழுநீர்கள்' மனசிற் குடிகொண்டு கொதித்துக் கொண்டிருந்தமையால் புலவர் மணியின்

கன்னியாய், புலவரின் கன்னியாயோடு எடைவிடாது நின்று பிடிக்குமா என்பதே ஏக்கம்.

கல்லோயா நங்கை சற்றே எட்ட நின்று, என் ஏக்கத்தை நோக்கிக் 'களுக்' கென்று சிரித்தாள். உடனே,

"திருந்து மினியமனச்சான்றோர்
சினம் போல் வெம்மை செய்தேநீர்
சுரந்து வருவ தென்னேநீ
சொல்லாய் கன்னியாய்த் திருவே.
சுரந்து வெம்மை தருவதெல்லாம்
தொட்டேயென்னை அணைவார்க்கு
மருந்தாய்ப் பாவம் பிணிதீர்க்கும்
வகையென் றுணர்வீர் மாந்தர்களே."

என்ற பாடலையும், அதனைத் தொடர்ந்து வரும் பாடல்களையும், கல்லோயா நங்கையில் வரும்,

"காடும் நாடாய்ச் செழித்தோங்கக்
கழனிச் செல்வம் பொலிந்தோங்க
நாடும் வாழ்விற் றிகழ்ந்தோங்க
நடந்தாய் வாழி கல்ஓயா
நாடும் வாழ்விற் றிகழ்ந்தோங்க
நடந்த தெல்லாம் நின்தலைவன்
பாடும் புகழ்சேர் இனியநடைப்
பாங்கே வாழி கல்ஓயா"

என்ற பாடலையும், அதனைத் தொடர்ந்து வரும் பாடல்களையும் படித்தேன்.

படிக்கும் போது,

"திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்

புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி”

என்ற சிலப்பதிகாரத்துக் கானல் வரிப் பாடல் ஞாபகத்துக்கு வந்தது. அந்தக் கணமே,

'கானல் வரிப்பாடலுக்குச் சற்றும் எடை குறையாதவை புலவர்மணியின் பாடல்கள்' என்றொரு குரல் வந்தது.

அந்தக் குரல் திரு. சோமசுந்தரப் புலவர் அவர்களின் ஆத்மீகக் குரல் ஆகலாம். அக் குரலுக்கு வணக்கஞ் செய்து விட்டு, அப்பால் தலையங்கங்களை மாத்திரம் படித்துக் கொண்டு சென்றபோது, 'விபுலானந்தர் மீட்சிப் பத்து' இமாலயம் போல் நிமிர்ந்து நின்றது.

“காரே றுந்திரு மூதூர்த் தாய்தரு கடவுட் காதல்மகன்
கருவிற் திருவுள கலைஞன் பெற்றோர் கண்ணிறை திருமயிலோன்
ஏரே றம்படி கீழ்பால் மேல்பா லாக்கிநல் லிசைநட்டோன்
இமயத் தலையிற் தமிழ்முத் திரைவரை ஈழக் கரிகாலன்
சீரே றுந்தமி ழறிவர்க் காங்கில நூற்சுவை யினிதூட்டித்
தெருட்டும் புதுமைக் கபிலன் கலியுக தெய்வ அகத்தியனாம்
பாரே றும்புக ழாளன் மீள்கெனக் கூவாய் பைங்குயிலே
பன்மொழி விபுலா நந்தன் வாழ்கெனக் கூவாய் பைங்குயிலே”

என்ற பாடல் தொடக்கம் பத்துப் பாடல்களைக் கொண்டது மீட்சிப் பத்து. இது புலவர்மணியின் புலமை உணர்ச்சியின் உருக்கப் பிழிவு.

இந்த மீட்சிப் பத்து, தனித்தெடுத்து விமர்சன உலகு விமர்சிக்கற் பாலது.

இவ்வளவில் விடைபெற்றுக் கொள்கின்றேன்.

கல்முனையில் 1943ல் நடைபெற்ற விளைவுவிழாக் காட்சியின் போது பாடப்பட்டது.

# புதுமைக் கமக்காரன்

பண்டிதர் ஏ. பெரியதம்பி அவர்களால் இயற்றப்பட்டது.

பல்லவி

பூமி திருத்திப்பயி ரேற்றிடுவோம் நெற்
பொலிகள் பொலிகவென வாழ்த்திடுவோம் —பூமி

கண்ணிகள்

1. நாமினிப் பஞ்சமொரு சிறிது – மஞ்சோம்
நாழியரிசிக்குப் போய்ப் பிறரைக் கெஞ்சோம்
சேம முடனே வாழுந் திறங்கள் கண்டோம்
செல்வங்கள் பூமிதேவி யருளக் கொண்டோம்.

2. உலகுக் குயிரே எங்கள் உழவு தொழில்
ஓங்கும் புது முறையில் அதை வளர்ப்போம்
நிலவுக் குவியல் போன்ற நெற் பொலிகள்
நீண்ட மலைகளெனக் குவித்திடுவோம்.

3. தூர்ந்த பெருங் குளங்கள் திருத்திடுவோம்
தொடுத்துநீர் வாய்க்கால்கள் பொருத்திடுவோம்
பாய்ந்து வரும் நதிநீர் மறித்திடுவோம்
பாங்காய் நெல் இருபோகம் விதைத்திடுவோம்.

4. காடு கெடுத்து நாடு புதுக்கிடுவோம்
காணியிற் குடியேறி வசித்திடுவோம்
பாடு படுத்தும் சோற்றுப் பஞ்சமெல்லாம்
பறந்த தென்றே வெற்றி பாடிடுவோம்.

5. திருந்த வயல் நிலங்கள் சமன்படுப்போம்
சீராய் வரம்புயர்த்திச் செப்பனிடுவோம்.
பொருந்து புதுமுறையிற் கலப்பை கொள்வோம்
புல்லை அறவுழுது புழுதி செய்வோம்.

6. கூட்டுப் பயளை இலை குழைப்பயளை
கொள்ளும் செயற்கை யெனும் உரப்பயளை
மாட்டுப் பயளை ஒட்டுத் தாட்பயளை
வயலுக்குச் சொரிந்துநாம் வளமிடுவோம்.

7. குலத்திற் சிறக்கும் ஏக கோத்திர நெல்
கோடி பலன்தரும் எம்மாத்திரம் சொல்
நிலத்திற் பயிரிடுவோம் இந்த நெல்லை
கலப்பு நெல்லால் இலாபம் கதிப்பதில்லை

8. பல்லுக் கலப்பை கொண்டு பயிருழுவோம்
பதஞ்செய்து கிண்டிமண்ணை நெகிழ்த்திடுவோம்
புல்லைக் களைந்து பூச்சி புழுத்தொலைப்போம்
பொலிந்கொன்று கோடிவிளை புதுமை செய்வோம்

9. தந்தைபோல் வயலைநாம் காத்திடுவோம்
தாய்போலப் பயிரைநாம் வளர்த்திடுவோம்
மைந்தர்போற் பயிருக்குத் தொண்டுபுரிவோம்
வளர்ந்து விளையத் தெய்வம் வணங்கிடுவோம்.

10. வானந் தொடுமலைபோற் சூடுகள்வைப்போம்
வண்ணப் படங்கில் தள்ளிப் பாடித் துவைப்போம்
தானந் தருமஞ் செய்தே உண்டு களிப்போம்
தங்கநெல் பட்டடையிற் கொண்டு சேமிப்போம்.

11. மாற்றுப் பயிர்கள் செய்யும் வகைதெரிவோம்
வளத்தைப் பெருக்கும்புது முறைபுரிவோம்
சோற்றுக்குப் பிறநாட்டை யிரந்து நில்லோம்
சோம்புக்கும் வறுமைக்கும் அடிமையல்லோம்.

12. வயல்களைத் துண்டுசெய்யும் வழக்கெறிவோம்
வளர்செலவைக் குறைக்கும் மார்க்கமறிவோம்
அயலவர் உயர்ச்சியில் அகம் மகிழ்வோம்
ஐக்கிய வாழ்வுதனில் நிதம் திகழ்வோம்.

13. அரசினர் மாதிரிப் பண்ணைகள் கண்டோம்,
அங்கே புதுமுறையின் உண்மைகள் கண்டோம்
கரமதிற் பேனைக்கொண்டு பிறரை மண்டோம்.
கல்விக்கும் கலப்பைக்கும் தொடர்பு கண்டோம்.

14. இலங்கை முழுவதுக்கும் உணவளிப்போம்
ஏற்றி அயல்நாட்டவர் பசிதணிப்போம்
இலங்கு தங்கக் குவியல் கொண்டுவருவோம்
எங்கள் பழைய நிலை இன்று காண்போம்.

15. செந்நெல் விளைக தேசம் மலிந்திடுக
திங்கள் மும்மாரி பொங்கிப் பொழிந்திடுக
பொன்னும் பொலிக மக்கள் நீடுவாழ்க
புதுமைக் கமக்காரற்கு ஜே!ஜே!!ஜே!!!

# சுதந்திர கீதம்

(வாழ்க தமிழ்மொழி" என்ற பாரதி மெட்டு 4.2.1948 இலங்கை சுதந்திரம் பெற்றபோது பாடப்பட்ட சுதந்திர கீதம்)

1. வாழ்க இலங்கை மணித்திரு நாடு
வாழிய வாழியவே
வாழ்க சுதந்திரம் வாழிய அன்னை
மணிக்கொடி வாழியவே.

2. வாழ்க சுதந்திர நாடுகளோ டன்னை
சமமே வாழியவே
வாழ்க சகோதர ஆசிய நாடுகள்
தோழமை வாழியவே

3. பன்னூ றாண்டு மறைந்த சுதந்திர
பானு உதித்ததிங்கே
அன்னை சுயாட்சி ஒளியில் விளங்கும்
அழகில் மகிழ்ந்திடுவோம்.

4. தெங்கொடு பனைநறுந் தேமா தோடை
செந்நெல் வாழைபலா
பொன்பொலி தேயிலை றப்பர் செழிக்கும்
பொன்னா டெம்நாடே.

5. தென்றற் பூம்பொழில் செந்தமி ழருவி
திருமலை மணிமுத்தம்
குன்றொத் தனஉயர் கொம்பன் யானைக்
குலமுடையா ளெங்கள்தாய்.

6. பொங்கும் போர்த்துக் கேயர் ஒல்லாந்தர்
புல்லடிமைத் தொழில்போய்
ஆங்கில ராட்சியில் இங்கினி தடைந்தாள்
அன்னை சுதந்திரமே.

7. செயராம நாதன், அருணா சலம்ஜேம்ஸ்
பீரிஸ், தம்பிமுத்தன்
சேனநா யகமுதற் புதல்வோர் ஈந்திடு
சுதந்திரம் வாழியவே.

8. சமூக பொருளா தார சமத்துவம்
தந்தென்றும் வாழியவே
சாதி மதப்பெரும் பூசல் தணிந்தன்னை
சாந்தியில் வாழியவே.

9. சிங்களர் தமிழர் முஸ்லிம் ஆதிய
செல்வநன் மக்களொன்றாய்
மங்கள அன்னை மணிக்கொடி தாங்கி
வாழ்த்தி வணங்கிடுவோம்

10. மணமலி ஈழ மணித்திரு மாதே
மக்கள் நமஸ்காரம்
குணதிசை அழகு ராணியெம் தாயே
கோடி நமஸ்காரம்.

11. அன்பறி வாண்மை பொன்புகழ் ஈகை
அருளோடு வாழியவே
இன்ப சமாதானம் உலகெங்கு மோங்க
இனிதன்னை வாழியவே.

# இலங்கை மணித் திருநாடு

இலங்கை மணித்திருநா டெங்கள்நாடே - இந்த
இனிய உணர்ச்சி பெற்றால் இன்பவீடே. (இலங்)

மகாவலி கங்கைஎங்கள் வளநதியே - அருள்
மன்னு சிவனொளிபாதம் எங்கள் மலையே
பூவலஞ் செய்கதிரை எங்கள்தலமே - இதைப்
போற்றிப் புகழ்ந்தால் வரும் பெருநலமே. (இலங்)

முத்துக் குளிக்க நல்ல துறைகளுண்டு - ஒளி
முதிர்ந்த மணிகள்தரச் சுரங்கமுண்டு
தித்திக்கும் நறுங்கனிச் சோலைகளுண்டு - எங்கள்
தேசத்தில் பொன் விளையும் பூமியுமுண்டு.
(இலங்)

அமுத மனைய நன்னீர்ப் பெருக்குமுண்டு - திளைத்
தாட வினியவெந்நீர்ச் சுரப்புமுண்டு
தமிழின் இனியசுவை யூற்றுமுண்டு - மெள்ளத்
தண்றென் றுலவு தென்றற் காற்றுமுண்டு. (இலங்)

தேமல் முதிரைகருங் காலிகளுண்டு - வளர்
தேக்குண்டு வனந்தனில் தேனுமுண்டு
பால்மலி பசுவுண்டு மேதிகளுண்டு - தமிழ்ப்
பாட்டுக்கு நல்ல யானைப் பரிசுமுண்டு. (இலங்)

கோமான் பராக்கிரம வாகுமன்னன் - குளக்
கோட்டன் முதலோர்கட்டு குளங்களுண்டு
நாமாண் புறச்செழித்த வயல்களுண்டு - முன்னோர்
நாட்டிய சித்தி ரக்கண் காட்சிகளுண்டு. (இலங்)

சிங்க மெனும்விஜயன் கண்டநாடு - கீர்த்தி
சிங்க னிருந்துரிமை கொண்டநாடு
பொங்கு மிசைபொருந்து ராவணேசன் - தமிழ்ப்
பூபதிஎல் லாள னிருந் தாண்டநாடு. இலங்)

சிங்களர் செந்தமிழர் முகமதியர் - என்னும்
செல்வப் புதல்வர்க்கொரு தாய்நாடு
மங்கள மாகஅன்று வாழ்ந்தநாடு - இன்றும்
மங்காப் புகழ் பெருக்கி வாழும்நாடு. (இலங்)

(புலவர்மணி அவர்கள் இயற்றியது)

நன்றி: பாலபோதினி 5ம் வகுப்பு

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நான்காவது பட்டமளிப்பு விழாவில் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளைக்கு இலக்கிய கலாநிதி என்ற கௌரவ பட்டம் வழங்கப்படுவதையொட்டி **செங்கதிரோன்** அவர்கள் வழங்கிய கட்டுரை.

# புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளைக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம்

அமரரின் சேவைக்கு கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் வழங்கும் கௌரவம்

மட்டக்களப்புத் தமிழ் மாநில வரலாற்றில் மண்டூர் ஒரு முக்கியமான இடத்தை வகித்து வருகின்றது. புலவர்மணி, ஏ. பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதர் வித்துவான் வீ.சி. கந்தையா, சைவமாமணி வி. விஸ்வலிங்கம், கவிஞர் மு. சோமசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் ப. சந்திரசேகரம், கல்வி நெறியாளர் சோ. கோணேசபிள்ளை, முன்னாள் பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான சி.மு. இராசமாணிக்கம், மட்டக்களப்பு மாநகரபிதா செழியன் பேரின்பநாயகம் ஆகியோரது பிறப்பிடமாகவும் மண்டூர் விளங்குகின்றது.

முருக வழிபாடு மட்டக்களப்புப் பிரதேசத்தில் தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. மண்டூரில் உள்ள முருகன் ஆலயத்தில் பூசை முறை கதிர்காமத்தில் நடைபெறும் பூசை முறையைப்போன்றது.

இவ்வாலயம் மண்டூர், குருமண்வெளி, கோட்டைக் கல்லாறு, கல்லூறு, துறைநீலாவணை முதலிய ஐந்து ஊர்களின் கூட்டான பரிபாலனத்தின் கீழ் இனிதாக நடைபெற்று வருகிறது. இற்றைக்கு ஏறக்குறைய எழுபது வருடங்களுக்கு முன்பு இவ்வாலயத்தின் பரிபாலன சபையின் தலைவராயும். விவாக இறப்புப் பிறப்பு பதிவுகாரராயும் விளங்கியவர் கோமநாதர் ஏகாம்பரம்பிள்ளை அவர்கள். இவருக்கும், சின்னத்தங்கம் அம்மையாருக்கும் மூத்த மகனாக 1899ம் ஆண்டு தை மாதம் 8ம் திகதி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பிறந்தார். இளமைக் கல்வியை மண்டூரில் உள்ள ஆரம்பப் பாடசாலையில் பெற்றார். இவரது பத்தாவது வயதில் பாரதம், திருந்செந்தூர்ப் புராணம்,

சூடாமணி நிகண்டு முதலியவற்றைச் சந்திர சேகர உபாத்தியாரிடம் வீட்டில் இருந்து கற்றார். அவரது அன்னையாரின் எதிர்பாராத மரணத்தால் இளைஞர் பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் தமிழ் கல்வி தடைப்பட்டது.

இதனால் ஆங்கிலம் படிக்க ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. கல்முனை லீஸ் ஆங்கிலப் பாடசாலையில் சேர்ந்து எட்டாம் வகுப்புவரை ஆங்கிலம் கற்றார். இக்காலத்தில் வண. ஆர் என். சேதுகாவலர் எம். ஏ. அவர்கள் இளைஞர் பெரியதம்பிப்பிள்ளையின் அதிபராகவும். ஆங்கில ஆசிரியராவும் விளங்கினார். விபுலானந்த அடிகளாரின் ஆசிரியராக விளங்கிய குஞ்சித் தம்பி ஆசிரியர் அவர்களும், புலவர்மணிக்கு ஆசிரியராக இருந்தார். இக்காலத்தில் நோய் காரணமாக இவரது ஆங்கிலக் கல்விக்குத் தடை ஏற்பட்டது. வீட்டில் இருந்து கொண்டு பழந்தமிழ் நூல்களை படிப்பதில் நேரத்தைச் செலவிட்டார். இது அவருடைய வாழ்க்கையில் ஒரு இருள் சூழ்ந்த காலமாகும்.

அவருக்கு இருளின் மத்தியில் ஒரு ஒளி பிறந்தது. தடைப்பட்ட தமிழ்க் கல்வியைத் தொடர மீண்டும் வழிபிறந்தது. யாழ்ப்பாணம் நாவலர் காவிய பாடசாலையில் சேர்ந்து தமிழ் படிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்குக் காரணமாக விளங்கியவர், மட்டுவில்லைச் சேர்ந்த தப்பிமுத்துப்பிள்ளை என்னும் புத்தகவியாபாரி ஆவார். அடைக்கப்பட்ட தமிழ் கதவு மீண்டும் திறக்கப்பட்டது. 1917ம் ஆண்டு நாவலர் காவிய பாடசாலையில் மட்டக்களப்புப் பெரியதம்பிப்பிள்ளையும் மட்டுவில் கணபதிப்பிள்ளையும் (பண்டிதமனி கணபதிப்பிள்ளை) ஒன்றாக இணைந்தனர்.

காவிய பாடசாலையில் இவருடன் கற்ற மாணவர்கள் பண்ணிருவர். இவர்கள் குமாரசாமிப்புலவர் ஐயாவிடம் இலக்கண இலக்கியங்களை ஐயந்திரபறக் கற்றனர். புலவர் ஐயாவுக்கு வாதநோய் ஏற்பட்டதால் ஒழுங்காகக் காவிய பாடசாலையில் முன்னர் போல் வகுப்புகளை நடத்தமுடியவில்லை. காவிய பாடசாலைக்குப் புலவர் ஐயா வருவதை நிறுத்திக் கொண்டார். மாணவர்கள், புலவர்ஐயாவின் வீட்டிற்குச் சென்று பாடம் கேட்டு வந்தனர். அவருக்கு நோய் தணியவில்லை. மாணவர்கள் ஒருவர் பின் ஒருவராய் காவிய

வகுப்பைவிட்டு நீங்கினர். ஈற்றில் கணபதிப்பிள்ளையும், பெரியதம்பிப்பிள்ளையும் புலவர் ஐயாவிடம் தொடர்ந்து பாடம் கேட்டு வந்தனர். கடைசிவரையும் புலவர் ஐயா அவர்களிடம் கணபதிப்பிள்ளை அவர்கள் மட்டுமே பாடம் கேட்டுவந்தார்.

பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் தமிழ்பண்டிதராய் பணியாற்றினார். பின்னர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆசிரியரானார். அக்காலத்தில் இளைஞர் பெரியதம்பிக்கு நண்பர்கள் அதிகம். அவர்களில் ஆறுமுகன் என்பாரும் ஒருவர். அவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர். நல்ல சங்கீத ஞானம் உள்ளவர். நல்ல ஒழுக்க சீலராகவும், சமய உணர்வுடையவராகவும் விளங்கினார். பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் ஒரு சமத்துவ வாதியாக விளங்கினார். அவர் ஆறுமுகத்தோடு மிகவும் அன்பாகப்பழகினார். பெரியதம்பிப்பிள்ளை அவர்கள், இந்து வாலிபர் சங்கத்தில் தங்கியிருந்த காலத்தில் ஆறுமுகம் அவரைச் சந்திப்பதற்கு அடிக்கடி செல்வது வழக்கம். இந்து வாலிப சங்க நிருவாகிகளுக்கு இது பிடிக்கவில்லை. இச்சங்கத்தின் தலைவர் பெரியதம்பிப்பிள்ளையின் போக்கினை வன்மையாக கண்டித்து வந்தார்.

ஆறுமுகம் சிறிது காலத்தின் பின் மரணமானார். அமைதியாக நடந்த அவரது மரணச் சடங்கில் பெரியதம்பிப்பிள்ளை கலந்துகொண்டு அன்னாருக்குத் தனது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார். அவருடைய மகன் அப்பாத்துரையின் விருப்பப்படி, பெரிதம்பிப்பிள்ளை ஆறுமுகத்தின் நினைவாகச் சில பாடல்களைப் பாடிக் கொடுத்தார். அப்பாத்துரையின் மன அமைதிக்காகப் பாடிய அப்பாடல்கள், பெரியதம்பிப்பிள்ளையின் வாழ்க்கையில் ஒரு பெரிய புயலை ஏற்படுத்தி விட்டன. சாவகச்சேரியில் இருந்து தமிழ்நாடு பசுமலைக்குச் செல்ல இப்புயல் அவரைத் தூண்டியது.

*'ஒழுக்கத் துயர்குலமாம் ஓங்குபுக ழுண்டாம்,*
*இழுக்கத் திழிகுலமா மென்றே- விழுப்பத்து,*
*நூற்குலத்தை யெல்லாம் நுணுகியறிந் தாறுமுகன்*
*மேற்குலத்னானான் விரைந்து!*

என்ற இப்பாடல், அவரது வாழ்க்கையில் மறக்கமுடியாத தொன்றாகும்.

இந்து வாலிபர் சங்க நிருவாகிகள், பெரியதம்பிக்பிள்ளை அவர்களை இந்துவாலிபர் சங்கத்தில் இருந்தும் சாவகக்சேரி இந்துக் கல்லூரியில் இருந்தும் நீக்கிவிட்டனர். இந்நிகழ்ச்சி, அஞ்சா நெஞ்சம் படைத்த இளைஞர் பெரியத்தம்பிப்பிள்ளையை, தாய்நாட்டை விட்டுத் தமிழ்நாட்டில் உள்ள பசுமலை வேத சாத்திரக் கல்லூரிவரை செல்ல வைத்தது. அங்கு கிறீஸ்த மதத் தத்துவங்களை துறைபோகக் கற்றார். ஆனால் குருப்பட்டம் பெறவில்லை. மன அமைதியற்ற நிலையில் இருந்தார்.

பசுமலையில் இருந்த காலத்தில் பல பெரியார்களைச் சந்திக்கும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தில் நாவலர் என்றால் அது நல்லை நகர் ஆறுமுக நாவலர் அவர்களைக் குறிக்கும். அதுபோல பசுமலையில் நாவலர் என்றால் அது சோமசுந்தரப் பாரதியாரையே குறிக்கும் இவர் விபுலானந்த அடிகாளருக்குப்பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராய் அமர்ந்தவர். இளைஞர் பெரியதம்பிப்பிள்ளைக்கு நாவலர் சோமசுந்தரப் பாரதியாரின் தொடர்பு கிடைத்தது. இதன்பயனாக இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார். இக்காலத்தில் தான் "இலங்கை மணித்திருநாடு எங்கள் நாடே" என்ற பாடலைப் பாடினார். இப்பாடல் அவருக்கு பெரிய புகழைத் தேடிக் கொடுத்தது. இந்நாட்டு மக்கள் இதை ஒரு தேசிய கீதமாக கருதுகின்றனர்.

பசுமலை மதுரைக்கும் திருப்பரங்குன்றத்திற்கும் இடையில் உள்ள ஒரு சிறிய நகரம். மதுரை என்றால் நம்மனக்கண்முன் வருவது மதுரை மீனாட்சி அம்மனின் தோற்றமாகும். திருப்பரங்குன்றம் முருகப் பெருமானின் சந்நிதி. பசுமலை அமெரிக்க மிசனின் கோட்டையாக விளங்கியது.

பெரிய தம்பிப்பிள்ளை பசுமலையில் இருக்கும்போது அவரது குருநாதர் ஆகிய விபுலானந்த அடிகளாரை மதுரை மங்கம்மாள் சத்திரத்தில் சந்திக்கிறார். இராமகிருஷ்ணர் கையில் பட்ட நரேந்திரன்போல் ஆனார் பெரியதம்பிப்பிள்ளை. வேதசாத்திரக் கல்லூரியை விட்டு வெளியேறினார். தாய் நாட்டுக்கு திரும்பி வந்தார்.

திருகோணமலை இந்துக் கல்லூரியில் விபுலானந்த அடிகளாருக்குக் கீழ் ஆசிரியரானார். கிழக்கிலங்கையில் இராமகிருஷ்ண சங்கப் பாடசாலைகளை அமைப்பதற்கு சுவாமிகளுக்கு, பெரியதம்பிப்பிள்ளையும், மா. பீதாம்பரன் அவர்களும் உறுதுணையாக நின்றார்கள் என்று முன்னாள் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. சு. அம்பிகைபாகன் தமிழ் ஆசிரியர் சங்க வெள்ளிவிழா மலருக்கு எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இவர் புளியந்தீவு அர்ச். அகுத்தினார் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, புனிதவளனார்மடம், மட்டுநகர், மட்டக்களப்பு அரசினர் கல்லூரி ஆகியவற்றில் விரிவுரையாளராகவும், ஆசிரியராகவும் பணியாற்றினார்.

1959ம் ஆண்டு ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். இவர் பல உயர்தரக் கல்லூரிகளிலும், இடைநிலைப் பாடசாலைகளிலும் பணிபுரிந்த காரணத்தால், கிழக்கிலங்கையைச் சேர்ந்த பலர் இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கும் சட்டக் கல்லூரிக்கும் தெரிவுசெய்யப்பட்டனர். இவரிடம் கற்ற மாணவர்கள் பலர், வைத்தியக் கலாநிதிகளாகவும் பொறியியலாளர்களாகவும், கணக்காளர்களாகவும் ஆசிரியர்களாகவும், எழுது வினைஞர்களாகவும், தமிழ் பண்டிதர்களாகவும், புலவர்களாகவும் விளங்குகின்றனர்.

இவர் பல நூல்களின் ஆசிரியர். ஏராளமான கவிதைகளை இயற்றியவர். பலநூற்றுக்கணக்கான கட்டுரைகளை பத்திரிகைகளுக்கும், சஞ்சிகைகளுக்கும் எழுதியுள்ளார். இலங்கை வானொலியில் பல உரைகளை ஆற்றியுள்ளார். கவிதை அரங்குகள் பலவற்றில் பங்குபற்றி சிறப்பித்த பெருமையும் உடையவர்.

பகவத்கீதை வெண்பா–கருமயோகம், பகவத்கீதை வெண்பா–பக்தியோகம், பகவத்கீதை வெண்பா–ஞானயோகம், புலவர்மணி கவிதைகள், உள்ளதும் நல்லதும்(வாழ்க்கை வரலாறு), பாலைக்கலி (கலித்தொகை), விபுலானந்தர் மீட்சிப்பத்து, மண்டூர்ப் பதிகம், நாமகள் இலம்பகம் (நாடக நூல்–சீவக சிந்தாமணி), சித்தாண்டிப் பதிகம், மாமங்கப் பதிகம் முதலிய நூல்களை எழுதிப் பெருமை பெற்றார். இவற்றுள் பகவத்கீதை வெண்பா கருமயோகமும், உள்ளதும்

நல்லதும் ஆகியன சாகித்ய மண்டலப் பரிசுபெற்ற நூல்களாகும்.

இவர் பல தேசிய ஆலோசனைச் சபைகளில் உறுப்பினராக இருந்து சேவையாற்றியுள்ளார். அரச கருமமொழிகள் ஆலோசனை சபை, இந்து சமய அபிவிருத்தி ஆலோசனை சபை, இலங்கை வானொலி கல்வி ஆலோசனைச் சபை, பாடநூல் இலங்கைக் கலைக்கழகம், ஆரிய திராவிட பாசாபிவிருத்திச் சங்கம் என்பன இவற்றுற் சிலவாகும்.

இவர் பல்வேறு துறைகளில் சுடர்விட்டுப் பிரகாசித்த ஒரு அறிஞர். மட்டக்களப்புத் தமிழ் கலை மன்றம் 1952ம் ஆண்டு புலவர் மணி என்னும் பட்டத்தை வழங்கியது. ஆரிய திராவிட மகாவிருத்திச் சங்க வெள்ளிவிழாவின் போது கவியோகி சுத்தானந்த பாரதியாரால் பண்டிதமணிப் பட்டம் வழங்கப்பட்டது. 1978ல் இலங்கை அரசு அளித்த சமாதான நீதிபதிப்பட்டமும், 1980ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இலக்கிய வித்தகர் என்ற விருதும் இன்னும் பல்வேறு பட்டங்களும் இவருக்கு வழங்கப்பட்டன.

இலங்கை அரசு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் சேவைக்கு நன்றிபாராட்டி 1994ம் ஆண்டு மே மாதம் 22ம் திகிதி, தேசிய வீரர் தினத்தன்று அவரது உருவம் தாங்கிய தபால் முத்திரை ஒன்றும் வெளியிட்டுப் பெருமைப்படுத்தியது. இவருக்கு இத்தினத்தன்று தேசிய வீரர் என்ற பட்டமும் சூட்டப்பட்டது.

இலங்கையில் உள்ள பல்வேறு தாபனங்கள் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்க வேண்டுமென்று யாழ் பல்கலைக் கழகத்திற்கும், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்திற்கும் வேண்டுகோள் விடுத்தன. கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு அதன் நான்காவது பட்டமளிப்பு விழாவில் இலக்கிய கலாநிதி என்ற கௌரவப்பட்டத்தை வழங்கத் தீர்மானித்துள்ளது. இது தமிழ் பேசும் மக்களுக்கு கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் வழங்கிய கௌரவம் எனக் கருதப்படுகின்றது.

இவர் இலங்கையின் உத்தம புத்திரர்களில் ஒருவர். இன, மத,

மொழிப் பேதங்களுக்கு அப்பாற்பட்டு நின்று தொண்டாற்றிப், பிறந்த பொன்னாட்டிற்குப் பெருமை தேடிக்கொடுத்த ஒரு பெரியார். இவர் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம்திகதி சிவபதம் அடைந்தார்.

அன்னாருடைய நூற்றாண்டு விழாவினை 1999ம் ஆண்டு தைமாதம் 8ம் திகதி கொண்டாடுவதற்கு தமிழ் பேசும் இனம் ஆவலோடு இருக்கின்றது.

வாழ்க புலவர்மணியின் தமிழ் தொண்டு.

நன்றி: தினகரன் (23-04-1997)

## "மட்டுநகர் தந்த மணி" (ஒருபா ஒருபஃது)

-பொன். சிவானந்தன்.

1. இலங்கை மணித்திருநா டென்றோர் இலக்கு
வலம்வந்த ஞாயிற்றின் தோளில்– கலைமகளின்
பூவாடை கொண்ட புனிதவுத்த ரீயத்தின்
நாவாடை கொண்டமைக்குஞ் சீர்.

2. சீர் தளைகள் சோராத செஞ்சொற் குழையலால்
ஏரோட்டிக் கீதைமலர் புஷ்பித்தோன்– தேரோட்டிப்
பாமனத்தால் ஞானப் பளிங்கு படியவிட்ட
"நாமமணி" கொண்டே புகல்.

3. புகலவே பூத்தான் புகழேந்தி இன்று
அகலவே நின்றானே எங்கோ– 'சகலன்'
புலவர்மணி வெண்பா புதுக்கியே நிற்கக்
கலக்கமுற்றுப் போனான் கறுத்து

4. கறுத்துநின்ற முன்னிருட்டாய்க் கால்வழுகுஞ் சேறாய்
வெறுத்து நின்றார் யாப்பை விளங்கார்– அறுத்தெறியப்
பேனாவை மின்குமிழாய்ப் பற்றியொளி பாய்ச்சியுள்ளார்
நானென் செருக்கறுத்த நார்

5. நார்போய் மலரை நலமே யடைந்தாற் போல்
வேரோடி நீரை விரும்புதல் போல்– ஆராரோ
தேடி யலுத்தபின்பு தெய்வீகக் கீதையிவர்
நாடியினைத் தொட்டதனை நம்பு.

6. நம்பிக்கை மெய்விலக்கல் நல்லொழுங்கு சீர்சிறப்பு
செம்மை பழைமை நெடுவாழ்வு– நிம்மதியின்
செப்பல் நடையொழுங்கு சீர்நேர் இணைதலால்
யாப்புப் புலவர்மணி யாம்.

7. ஆமென்றால் ஆயிரம்வெண் பாக்கள் தெறித்துவந்து
ஓமென்னும் மந்திரத்தை ஓதுமே – பாமன்னன்
கண்டபுலக் காட்சியெலாங் காலைக் கதிரொளியைக்
கொண்டுவரும் பாட்டழகிற் கோத்து

8. கோக்காத முத்துக்களும் கோத்த இரத்தினமும்
வாக்கின் வளத்தில் வலம்வருமே – நோக்காத
கற்றோர் உளரோ கலைத்தேர் புலவர்மணி
சொற்பாய்ந்த வான்மதியைச் சொத்து

9. சொத்தாக மட்டுநகர் தந்த புலவர்மணி
வித்தாணர் நெஞ்ச வயல்களுக்கு– சத்தாய்
உறிஞ்சும் மனிதப் பயிரெலாம் உய்ந்து
பொறிவாயி லைந்தவிக்கும் பேறு

10. பேறுபெற்று வாழப் பிறந்த அடையாளச்
சாறாம் புலவர்மணி மட்டுநகர்– மெத்தையிலே
நித்தியமாய் என்றும் நிலைத்துயவைத் தந்தமணி
வித்துவத்தைக் கொள்வோம் விளம்பு

**பொன். சிவானந்தன்.**

# நல்வாழ்த்து

புலவர்மணி ஐயா யாத்த பகவத்கீதை வெண்பா (பக்தியோகம் உரையுடன்) என்னும் நூலை, நாவலப்பிட்டி ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினாரால் அச்சிட்டும் செழுமை கவனித்தும் வெளியிடும் பொறுப்பை ஏற்று, அன்பர் பலரின் ஆதரவோடு இத்தரும கைங்கரியத்தில் வெற்றி பெற்றுள்ளோம். எல்லாம் வல்ல பரம் பொருள் புலவர்மணி ஐயா அவர்களுக்கும் இப்பணிக்குத் துணையாயிருந்த சகலருக்கும் நல்லருளும் நல்லாசியும் பொழிவாராக.

## வாழ்த்துப்பாக்கள்

திருவிளங்கும் தெய்வீகக் கீதையினைத் செந்தமிழால் வெண்பாச் செய்தே
அருளுருவ மாயதற்கு அரிய உரைதானளித்தார் அவனிமீது
குருவடிவாய் நம் முன்வரும் பெரியதம்பிப் பிள்ளை எனும் புலவர் கோமான்
தருபக்தி யோகமது தாரணிக்கு நல்விருந்தாய்த் தழைக்க மாதோ (1)

புலவர்மணி செய்த உயர் பொன்னூலை அழகுற அச்சேற் றிவைத்தும்
பலகாலும் முயற்சி செய்து பண்பாட்டை உலகினிலே காக்கும் சான்றோர்
அலகில் தெய்வ நெறியாகும் ஆத்மஜோதித் திறனைப் பரப்பும் மேலோர்
நலமேவ இப்பணியை நாட்டி வைத்தார் வையமெலாம் நயந்து போற்ற (2)

அன்பர் மனமுவந்தளித்த அரியபணி அகில மதை வளர்த் தேவைக்கும்
துன்பமற வாழ்வதற்கு வழிகாட்டு கீதைஎனும் தூயநூலை
இன்பமுறக் கற்பதற்கு, புலவர்மணி எடுத்தாண்ட எழில் மேலோங்க
அன்புமலர் சாத்திடுவோம் அன்பரடி போற்றிடுவோம் அவனிவாழ்க (3)

இந்து கலாசார நெறிவளர்க்கு மெங்கள் இனியபணிக் கின்பமூட்ட
முந்து தமிழ்க் கலைவல்லார் பேரறிஞர் முதுபுலவர் முதன்மை காட்ட
தந்திமுகப் பெருமானும் சண்முகனும், கலைமகளும் தலைமை மேவ
உந்திகமலப் பிரமன் உதயமணி எனும் பெருமான் கீதைவாழ்க.

**குருக்கள் மடம்,**
**1-10-74**

**இந்து சமய விருத்திச் சபை,**
**குருக்கள் மடம்.**

Typesetting & Printing by **WINNERS (Pvt),**
30, Nihal Silva Mawatha, Kirulapane, Colombo -06.